தொல்காப்பிய ஆய்வின் வரலாறு

கோ. கிருட்டிணமூர்த்தி

சென்னைப் பல்கலைக் கழகம்

தொல்காப்பிய ஆய்வின் வரலாறு

கோ. கிருட்டிணமூர்த்தி

தொல்காப்பிய ஆய்வின் வரலாறு

சென்னைப் பல்கலைக்கழகம்

1990

முதற் பதிப்பு : 1990

© சென்னைப் பல்கலைக்கழகம், 1990

விலை ரூ. 65/-

அச்சிட்டோர் :
அவ்வை அச்சுக்கூடம், 17. பி.வி. கோயில் தெரு, சென்னை-600 013.

நன்றியுரை

இந்நூல் 1981ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டத்துக்காகச் செய்யப்பட்ட ஆய்வின் பயனாய் உருவான ஆய்வேடு ஆகும்.

'தொல்காப்பிய ஆய்வின் வரலாறு' என்னும் தலைப்பினைப் பரிந்துரை செய்து, இந்த ஆய்வுக்கு மேற்பார்வையாளராக இருந்து நெறிப்படுத்தி உதவிய பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி.

இந்த ஆய்வுக்குப் பல்வேறு நிலைகளில் உதவியவர்கள்: பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், புலவர்மணி மு. சண்முகம் பிள்ளை, டாக்டர் பொன். கோதண்டராமன், டாக்டர் அ. அ. மணவாளன், டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, டாக்டர் மா. சு. திருமலை, டாக்டர் மோ. இசுரயேல், டாக்டர் கு. மோகனராசு, டாக்டர் ஆ. இராமநாதன், டாக்டர் பெ. மாதையன், டாக்டர் பா. வீரப்பன், திரு ஆ. சிவலிங்கனார், டாக்டர் செ. இராமசாமி, திரு. க. இராமசாமி, திரு. அரங்க. இராமானுசம், டாக்டர் அரங்க. இராமலிங்கம், திரு சின். கோதில்மொழியன், டாக்டர் பா. உதயகுமார், டாக்டர் சிவ. மாதவன், டாக்டர் மு. பொன்னுசாமி. திருமதி வனிதா, ஆகியோர் ஆவர். இவர்கள் அனைவர்க்கும் எனது நன்றி உரியது.

இந்த ஆய்வுக்குச் சென்னைப் பல்கலைக்கழக நூலகம், மறைமலையடிகள் நூலகம், கன்னிமரா நூலகம், உ. வே. சாமிநாதையர் நூலகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக நூலகம் ஆகியன பயன்படுத்தப்பட்டன. இந்த நூலகங்களின் பொறுப்பாளர்களுக்கு நான் நன்றியுடையேன்.

இந்த ஆய்வேடு நூலாக வெளிவரச் சென்னைப் பல்கலைக் கழகத்தின்வழி நிதி வழங்கிய பல்கலைக்கழக நிதி நல்கலைக் குழுவுக்கும், இந்நூலை வெளியிட்ட சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறைக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் நான் நன்றியுடையேன்.

இந்த நூலை அழகிய முறையிலும் விரைவாகவும் அச்சிட்ட அவ்வை அச்சுக்கூடத்தினருக்கும் என் நன்றி உரியது.

இந்நூல் வெளிவருவதில் ஆர்வம் காட்டித் தூண்டு கோலாய் நின்றவர், சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணா பொதுவாழ்வியல் மையத்தின் தலைவர் டாக்டர் இரா. தாண்டவன்.

என்னுடைய நன்முயற்சிகள் அனைத்துக்கும் தூண்டு கோலாகித் துணைநிற்பவர் சென்னைப் பல்கலைக்கழகப் பதிப்புத் துறை இயக்குநர் டாக்டர் வ. ஜெயதேவன்.

கோ. கிருட்டிணமூர்த்தி

குறுக்க விளக்கம்

அகம்.	...	அகநானூறு
அகத்.	...	பேரகத்தியத்திரட்டு
ஆ. கோ.	...	ஆய்வுக்கோவை
இ.கொ.	...	இலக்கணக் கொத்து
இ. வி. நூ.	...	இலக்கண விளக்கம், நூற்பா
எ.டு.	...	எடுத்துக்காட்டு
கலி.	...	கலித்தொகை
குறுந்.	...	குறுந்தொகை
சிலப்.	...	சிலப்பதிகாரம்
திவ். திருவாய்.	...	திவ்வியப் பிரபந்தம்: திருவாய்மொழி
தொல்.	...	தொல்காப்பியம்
நன்.	...	நன்னூல்
பதி.	...	பதிப்பாளர்
பதிற்.	...	பதிற்றுப்பத்து
ப., ப-ம்	...	பக்கம்
பரி.	...	பரிபாடல்
ப-ள்.	...	பக்கங்கள்
பி.வி.சந்.	...	பிரயோக விவேகம், சந்திப்படலம்
புறம்.	...	புறநானூறு
மு.கட்டுரை	...	முன்னர்க் குறித்த கட்டுரை
மு.நூ.	...	முன்னர்க் குறித்த நூல்
மொ. பெ.	...	மொழிப்பெயர்ப்பாளர்
யாப்.விருத்தி.	...	யாப்பருங்கல விருத்தி

Ed.	...	Editor
Eds.	...	Editors
e.g.	...	example given
IATR.	...	International Association of Tamil Research
Ibid.	...	Ibidem, in the same book
IITS.	...	International Institute of Tamil Studies
IJDL.	...	International Journal of Dravidian Linguistics
IL.	...	Indian Linguistics
JOTS.	...	Journal of Tamil Studies
P.	...	Page
pp.	...	pages
QJMS.	...	Quarterly Journal of Mythic Society
TC.	...	Tamil Culture
Vol.	...	Volume

உள்ளுறை

இயல்		பக்கம்
	முன்னுரை ...	1
1.	தொல்காப்பியப் பதிப்புகள் ...	13
2.	எழுத்ததிகார ஆய்வு ...	73
3.	சொல்லதிகார ஆய்வு ...	180
	முடிவுரை ...	311
	ஆய்வுத்துணை நூல்கள்/கட்டுரைகள் ...	315
	இணைப்புகள் ...	364

முன்னுரை

தமிழியல் ஆய்வு

தமிழியல் (Tamilology) தொடர்பான ஆய்வுகள் பண்டைக் காலத்திலிருந்து இன்றுவரை காலந்தோறும் பல நிலைகளில் நடந்து வந்துள்ளன. இந்த ஆய்வுகளை இலக்கண இலக்கியப் புலவர்கள், உரையாசிரியர்கள், ஆய்வாளர்கள் ஆகியோர் செய்து வந்துள்ளனர். இன்று நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களில் மிகத் தொன்மையான தாகக் கருதப்படும் தொல்காப்பியம் இலக்கண நூலாக மட்டும் அன்றி, மொழி, இலக்கியம், மக்கள் வாழ்க்கை ஆகியன பற்றிய ஓர் ஆய்வு நூலாகவும் அமைந்துள்ளது.

தமிழியல் ஆய்வு — வரலாறு

தமிழியல் பற்றிய ஆய்வு பெருமளவில் நடந்துள்ள போதிலும் அந்த ஆய்வுக்குக் காலந்தோறும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பொருள்கள், அவற்றை இலக்கண, இலக்கியப் புலவர்கள், உரை யாளர்கள் போன்றோர் ஆராய்ந்ததன் நோக்கம், அவர்களுடைய ஆய்வுமுறைகள் போன்றவற்றை அறிந்துகொள்ளும் வகையில் தமிழியல் ஆய்வு வரலாறு விரிந்த அளவிலும், முழுமையாகவும் இது காறும் எழுதப்படவில்லை. இத்தகைய வரலாறு முன்னோரின் இலக்கிய, இலக்கணக் கொள்கைகளையும் ஆய்வுமுறைகளையும் தெரிவிப்பதோடு தமிழியல் ஆய்வு பற்றிய ஒரு முழுமையான கண் ணோட்டத்தினையும் நல்கும். மேலும், ஆராயப்பட்ட பொருள் களையே மீண்டும் மீண்டும் அதே கோணத்திலேயே ஆராயும் நிலை யினைத் தவிர்த்துப் புதிய பொருள்கள் மேலும் புதிய கோணங் களிலும் ஆய்வுகளை மேற்கொள்ள உதவும். அன்றியும் பழைய ஆய்வு முறைகளில் காணப்படும் குறை நிறைகளைக் கண்டறிந்து குறைகளைத் தவிர்க்கவும், நிறைகளை ஏற்று அவற்றை ஆய்வில் பயன்படுத்திக் கொள்ளவும் இயலும்.

தமிழ் ஆய்வு வரலாற்றுத் துறையின் முன்னோடி நூலாக ஏ. வி. சுப்பிரமணிய அய்யரின் 'தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி' (1959) விளங்குகிறது. இந்நூலில் பண்டைக் காலத்திலும் இடைக் காலத்திலும் நிகழ்ந்த தமிழ் ஆராய்ச்சியின் பொருள், ஆய்வுமுறை, நோக்கம் ஆகியன ஆராயப் பட்டுள்ளன.[1] 1976–77ஆம் கல்வி ஆண்டில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் எம்.பில்.

வகுப்புக்குத் 'தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு' என்னும் துறை பாடத் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பயனாக, இந்த ஆய்வாளர் பா. வீரப்பனுடன் இணைந்து 'தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு' (1977) என்னும் நூலை உருவாக்கினார். இதனுள் தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், உரைகள், புதினம், சிறுகதை ஆகியவற்றின் ஆராய்ச்சி வரலாற்றினை உணர்த்தும் நோக்கில் ஆய்வுக் கட்டுரைகள் அமைந்துள்ளன.[2] 'இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சி வளர்ச்சி' என்னும் பொருள் பற்றிய தி. சு. சத்தியத்தின் பிஎச்.டி. பட்ட ஆய்வேடு (சென்னைப் பல்கலைக் கழகம், 1979) இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் பற்றி வெளியான 374 தமிழ் நூல்களின் அடிப்படையில் திருக்குறள் ஆய்வைப் புல நோக்கில் பகுத்து ஆராய்ந்துள்ளது.[3]

தமிழியல் ஆய்வின் வரலாற்றினை விளக்கும் நோக்கில் எழுந்துள்ள ஆய்வுகள் மேலே கூறப்பட்டன. ஆனால் தமிழியல் ஆய்வு இலக்கியம் பற்றிய ஆய்வு மட்டும் அன்று. இலக்கணம், அரசியல், சமூகம், பண்பாடு போன்ற பல துறைகளை உள்ளடக்கியது. தமிழியல் தொடர்பான ஆய்வுகளுக்கு ஆதாரமாக அமையவல்ல நூல்களுள் தொன்மையானது தொல்காப்பியம் ஆகும். இருபதாம் நூற்றாண்டு மொழியியலாரும் வியக்கும்வண்ணம் தமது மொழி பற்றிய புலமையைப் பயன்படுத்தி அதனை ஒரு முதல் தரமான நூலாகத் தொல்காப்பியர் எழுதியுள்ளார்.[4]

தொல்காப்பியம்

தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகிய மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களைக் கொண்டவை. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, உவமை ஆகிய இலக்கணங்கள் கூறப்படுகின்றன. இக்கால மொழியியலின்படி தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ள இலக்கணங்களைப் பின்வருமாறு பகுத்துக் கூறலாம். எழுத்ததிகாரத்தில் ஒலியியல் (Phonetics), ஒலியனியல் (Phonology), உருபொலியனியல் அல்லது புணரியல் (Morpho-phonemics) ஆகியன பற்றிய செய்திகள் பேசப்படுகின்றன. சொல்லதிகாரத்தில் உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax), மொழிப்பொருளியல் (Semantics) ஆகியன பற்றிக் கூறப்படுகின்றன. பொருளதிகாரத்தில் செய்யுளியல் (Poetics) பற்றியும் அணியியல் (Rhetorics) பற்றியும் உணர்த்தப் பட்டுள்ளன. மேலும் பொருளதிகாரத்தில் இலக்கியத்தின் முதல், கரு, உரிப்பொருள்களை விளக்கும் நோக்கில் கூறப்படும் அகப் பொருள், புறப்பொருள் இலக்கணங்களில் மக்களின் வாழ்க்கை பற்றிய பல செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

தொல்காப்பிய ஆய்வு

உரைகள்

தொல்காப்பியருக்குப் பின் மொழிவளர்ச்சியால் நிகழ்ந்த மாற்றங்கள், இலக்கண வளர்ச்சி போன்றவை பிற்காலத்தவருக்குத் தொல்காப்பிய நூற்பாக்களுக்குப் பொருள் அறிவதில் இடர்ப் பாட்டை உண்டாக்கின. இந்த இடர்ப்பாட்டினைக் களையும் வகையில் தொல்காப்பிய நூற்பாக்களின் பொருளைத் தெளிவுபடுத் தும் முறையிலும், அதனுள் கூறப்படும் இலக்கணக் கூறுகளை இலக்கிய, வழக்கு மேற்கோளைக் கொண்டு விளக்கும் நோக்கிலும் உரைகள் எழுந்தன.

இவ்வகையில் தொல்காப்பியத்துக்கு உரை எழுதியோர் உரை யாசிரியர்களாக மட்டும் அல்லாமல் திறனாய்வாளர்களாகவும், ஆய்வாளர்களாகவும் நின்று தொல்காப்பிய ஆய்வினை வளர்த்து வந்துள்ளனர்.

உரையாசிரியர்களது தொல்காப்பியத் திறனாய்வினை உரை முறைகள், ஆய்வு முறைகள் எனப் பகுத்துக் காணலாம். அதி காரங்கள் நுதலும் பொருள், அதிகார இயைபு, இயல்கள் நுதலும் பொருள், இயல்களுக்கு இடையே உள்ள இயைபு, நூற்பாக்களுக்கு உரை, நூற்பாவில் உள்ள அருஞ்சொற்களுக்கு விளக்கம், நூற்பாக் களுக்கு இயைபு, மேற்கோள்கள் போன்றவற்றைக் கூறி உரை எழுதும் முறைகளை உரையாசிரியர்களிடத்தில் காண முடிகிறது. உரையாசிரியர்களின் உரைகூறும் நெறியைப் பெரிதும் விளக்க முறைத் திறனாய்வின் (Descriptive Criticism) கீழ் அடக்கலாம் என்பர் இ. சுந்தரமூர்த்தி.[5]

நூலின் மூலபாடம் பற்றிய ஆய்வு, நூற்பாப் பொருளில் பிறர் கருத்தினைக் கூறல், அதனை உடன்படுதல், உரிய காரணங் களுடன் மறுத்தல், உவமை கூறி விளக்குதல், பிற இலக்கணங் களுடன் ஒப்பிட்டு ஒற்றுமை வேற்றுமைகளை எடுத்துக் காட்டுதல், வடமொழி இலக்கணங்களுடன் ஒப்பிடுதல், வழக்கிறந்தனவற்றை யும் தம் கால வளர்ச்சி நிலைகளையும் எடுத்துக்காட்டுதல் போன்ற ஆய்வு முறைகளையும் உரையாசிரியர்களிடத்தில் காண முடிகிறது.

தொல்காப்பியர் காலமொழி அமைப்பு, இலக்கணநிலை போன்றவற்றுக்கும் உரையாசிரியர்கள் கால மொழி அமைப்பு, இலக்கண அமைப்பு போன்றவற்றுக்கும் வேறுபாடுகள் பல. காலப் போக்கில் மொழி வளர்ச்சியால் நிகழ்ந்த மாற்றங்களை உரையாசிரி யர்கள் உணராமல் இல்லை. இருப்பினும் முதல் நூல் ஆசிரியர் குற்றமற்றவர் ஆதலின் நூலில் குற்றம் காணக்கூடாது என்னும் கொள்கையுடன் தம்கால மொழி வளர்ச்சியையும் தொல்காப்பியத் துள் அடக்கிக்காட்ட விதப்புக் கிளவிகளையும், உரை உத்திகளை யும் பயன்படுத்திக் கொண்டனர். இந்த வகையில் உரைகள் தொல்

காப்பியத்தைப் புரிந்து கொள்ளப் பயன்படுவதோடு அல்லாமல் உரையாசிரியர்கள் கால மொழி அமைப்பினை விளக்கும் இலக்கணமாகவும் மொழி வரலாற்றினை அறியத் துணை புரிவனவாகவும் விளங்குகின்றன.

தொல்காப்பிய உரையாசிரியர்களின் உரைநெறிகள், ஆய்வு முறைகள், இலக்கணக் கொள்கைகள், இலக்கியக் கொள்கைகள் போல்வன தனி ஆய்வுக்குரியன. இவற்றை விளக்கும் வகையிலும் ஆய்வு நூல்கள் சில வெளிவந்துள்ளன.[6]

தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய இலக்கணங்கள்

தொல்காப்பியத்துக்குப் பின்னர் பல இலக்கணநூல்கள் தோன்றின. இவற்றுள் சில எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக்கணங்களையும் கூறுவன (வீரசோழியம், இலக்கண விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம், தொன்னூல் விளக்கம்). சில எழுத்திலக்கணத்தையும் சொல்லிலக்கணத்தையும் கூறுவன (நேமிநாதம், நன்னூல்). அகப்பொருள், புறப்பொருள், யாப்பிலக்கணம், உவமை என்னும் அணியிலக்கணம் ஆகியன பற்றித் தொல்காப்பியம் பொருளதிகாரம் என ஒரே அதிகாரத்தில் கூறியது. ஆனால் பிற்காலத்தில் இப்பொருள்கள் ஒவ்வொன்றினைப் பற்றியும் தனித்தனி இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. அகப்பொருள் பற்றி இறையனார் அகப்பொருள், தமிழ் நெறி விளக்கம், அகப்பொருள் விளக்கம், களவியற் காரிகை, மாறன் அகப்பொருள் போன்ற நூல்கள் தோன்றியுள்ளன. புறப்பொருளை விவரிக்கும் முறையில் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் எழுந்துள்ளது. யாப்பு பற்றி விரித்துக் கூறும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை, பாப்பாவினம், சிதம்பரச் செய்யுட்கோவை போன்ற நூல்களும் அணியிலக்கணம் பற்றித் தண்டியலங்காரம், மாறனலங்காரம், சந்திராலோகம், குவலயாநந்தம் ஆகிய நூல்களும் தோன்றியுள்ளன. இவை தொல்காப்பியத்தைத் தழுவியும், தம் கால மொழி வளர்ச்சியை ஏற்றும், தேவையான இடங்களில் மாற்றங்களை மேற்கொண்டும் அமைந்துள்ளன. சில இலக்கண நூல்கள் வடமொழி இலக்கணங்களைச் சார்ந்து அமைந்தன (வீரசோழியம், பிரயோக விவேகம்) வாகவும் காணப்படுகின்றன. இந்த இலக்கண நூல்களின் வரலாற்றினைச் சோம. இளவரசு ஆராய்ந்துள்ளார்.[7] இந்த இலக்கண நூல்களிலும், அவற்றின் உரைகளிலும் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுக் கருத்துக்களைக் காணலாம். இவ்வகையில் அமைந்த இலக்கணக் கொள்கை (எழுத்து, சொல்)களின் வரலாற்றினை வடமொழி இலக்கண நூல்களோடு ஒப்பிட்டுப் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி ஆராய்ந்துள்ளார்.[8] எழுத்திலக்கணம் பற்றிப் பேசும் இலக்கண நூல்களிலிருந்து எழுத்திலக்கணக் கோட்பாடுகளைப் புலப்படுத்தும் வகையில் மொழியியல் நோக்கில் செ. வை. சண்முகம் ஆராய்ந்துள்ளார்.[9]

பத்தொன்பதாம் நூற்றாண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து தொல்காப்பிய ஆய்வு பல நிலைகளில் வளரத் தொடங்கியது. ஓலைச்சுவடிகள் மூலம் தொல்காப்பியம் கற்கப்பட்டு வந்த நிலைமாறி, அச்சாகி வெளிவந்ததனால் பலரும் கற்கும் நிலையினை அடைந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தொல்காப்பியம் முழுதும் அச்சாகி விட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இதே கால கட்டத்தில் மேலை நாட்டில் ஒப்பிலக்கண வரலாற்று நோக்கில் மொழிகளை ஆராயும் முறை தோன்றி வளர்ந்தது. இந்த முறையில் திராவிட மொழிகளை ஆராய்ந்த இராபர்ட் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலினை எழுதித் தமிழுக்கு ஒப்பிலக்கண ஆய்வுமுறையினை அறிமுகப்படுத்தினார்.[10] இதனையடுத்துத் தொல்காப்பியத்தை நன்னூலுடன் ஒப்பிட்டு அவற்றை ஆங்கில இலக்கணத்தின் துணையுடன் விளக்கும் வகையில் அமைந்த சாமுவேல் பிள்ளையின் 'தொல்காப்பிய நன்னூல்' என்னும் பதிப்பும் வெளிவந்தது.[11]

இருபதாம் நூற்றாண்டு

இருபதாம் நூற்றாண்டில் தொல்காப்பிய ஆய்வு தொல்காப்பியப் பதிப்புகள் வழியாகவும், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வு நூல்கள் வடிவிலும் வெளியாகியுள்ளது. இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதல் இன்று வரை தொல்காப்பியத்தைப் பல நோக்கில் பயில்வதற்கு உதவும்வண்ணம் பலவகைப் பதிப்புகள் வெளிவந்துள்ளன (காண்க இயல் 1). தொல்காப்பியத்தை ஆராய்ந்தோர் மரபிலக்கணவழி நின்றும், சமகால மொழியியல் வளர்ச்சியின் துணையுடன் மொழியியல் கோட்பாடுகளைப் பயன்படுத்தியும் ஆராய்ந்துள்ளனர்.

மொழியியல் வளர்ச்சியும் தொல்காப்பிய ஆய்வில் அதன் தாக்குரவும்

தொல்காப்பிய ஆய்வில் காலந்தோறும் சமகால மொழியியல் வளர்ச்சியின் தாக்கங்களைக் காண முடிகிறது. இந்த வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி வளர்ந்த ஒப்பிலக்கண வரலாற்று மொழியியலின் தாக்கத்தையும் தொல்காப்பிய ஆய்வில் காணலாம். தமிழ் இலக்கணக் கொள்கைகளின் வரலாற்றினை ஆராய்ந்த பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி அவற்றை வடமொழி இலக்கண நூல்களோடு ஒப்பிட்டு நோக்கியுள்ளார்.[12] வே. வேங்கடராசுலு ரெட்டியார் தமது தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சியில் தெலுங்கு, கன்னடம் போன்ற மொழிகளை ஒப்பாய்வுக்குத் துணைகொண்டுள்ளார்.[13] தமிழ் இலக்கணங்களை வடமொழி, ஆங்கில இலக்கணங்களுடன் ஒப்பிட்டுத் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் ஆராய்ந்துள்ளார்.[14] மொழியியல் நோக்கிலும் பிறமொழி இலக்கணங்களோடு ஒப்பிட்டும் ஆராயும் இந்த முறையினைப் புற ஒப்புமை முறை என்பர்.[15]

தொல்காப்பிய ஆய்வில் பிறிதோர் ஒப்புமை முறையும் காணப் படுகிறது. அது ஒரு தமிழ் இலக்கண நூலைத் தமிழில் உள்ள பிற இலக்கண நூல்களுடன் ஒப்பிட்டுக் காணும் முறையாகும். இதனை அக ஒப்புமை முறை என்பர்.[16] இந்த முறையில் தொல்காப்பியத்தை நன்னூலோடு ஒப்பிட்டு ஆராயும் நூல்கள் வெளி வந்துள்ளன.[17] தமிழ் இலக்கணங்களை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டு ஆய்வதற்குக் கருவி நூல்களாக 'இலக்கணத்தொகை — எழுத்து', 'இலக்கணத் தொகை — சொல்', 'இலக்கணத்தொகை — யாப்பு, பாட்டியல்' ஆகிய நூல்களைச் ச. வே. சுப்பிரமணியன் வெளியிட்டுள்ளார்.[18]

1930-40 ஆண்டுகளில் அமைப்பு முறை மொழியியல் (Structural Linguistics) அல்லது வருணனை மொழியியல் (Descriptive Linguistics) என்னும் முறை தோன்றி வளர்ந்தது. இது தமிழகத்தில் 1950-60 ஆண்டுகளில் பரவியது. வருணணை மொழியியல் நோக்கில் இலக்கணங்கள் ஆராய்ந்து விளக்கப்பட்டன. நச்சினார்க்கினியரின் ஒலியனியல் கருத்துக்களை இந்த நோக்கில் செ. வை. சண்முகம் ஆராய்ந்துள்ளார்.[19] நன்னூலைப் பிற இலக்கண நூல்களுடன் ஒப்பிட்டுக் கோ. விஜயவேணுகோபால் விளக்கியுள்ளார்.[20] தி. முருக ரத்தினம் தமிழ் எழுத்தியலின் வரலாற்றை வருணனை மொழியியல் நோக்கில் ஆராய்ந்து வெளியிட்டுள்ளார்.[21] மேலும் எழுத்தியல் பற்றி சூ. இன்னாசி,[22] தே. ஆண்டியப்பன்,[23] சோ. ந. கந்தசாமி[24] ஆகியோரது நூல்களும் வருணனை மொழியியலின் துணைகொண்டு தொல்காப்பியத்தினையும் பிற இலக்கணங்களையும் விளக்கும் முறையில் அமைந்துள்ளன. தொல்காப்பியர் சொல்லியலை விளக்கி யுள்ள முறையினை இந்த நோக்கில் மோ. இசுரயேல் ஆராய்ந்து விளக்கியுள்ளார்.[25] இந்த ஆய்வின் அடிப்படையில் அவர் தொல் காப்பியரைப் பழங்காலத் தமிழகத்தின் சிறந்த வருணனை மொழி யியலாளர் என்பர்.[26] பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றை அவர் இந்த நோக்கில் விளக்கியுள்ளார். இதற்குத் தொல்காப்பியத்தையும் நன்னூலையும் அடிப்படையாகக் கொண்டுள்ளார். இவ்விரண்டு நூல்கள் கூறும் இலக்கணக் கூறு களை ஒப்பிட்டும் நோக்கியுள்ளார்.[27]

மொழியியல் வரலாற்றில் அடுத்த வளர்ச்சி நிலை மாற்றிலக்கண மொழியியல் (Transformational Generative Grammar) ஆகும். இது 1957க்குப் பின் தோன்றி வளர்ந்தது. இதனைத் தொடர்ந்து தொல் காப்பியமும் மாற்றிலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராயப்பெற்றது. தொல்காப்பியரின் ஒலியனியல் கோட்பாடு மாற்றிலக்கணக் கோட்பாட்டு முறைகளை ஒத்துக் காணப்படுகிறது என்பதைக் க. பாலசுப்பிரமணியன் எடுத்துக்காட்டியுள்ளார்.[28] சொல்லதிகாரத்திலும் மாற்றிலக்கணக் கோட்பாட்டினை ஒத்த முறைகள் காணப்படுவதைச் ச. அகத்தியலிங்கம்,[29] செ. வை. சண்முகம்,[30] இராம. சுந்தரம்[31] ஆகியோர் கண்டறிந்து விளக்கி யுள்ளனர். வளர்ந்து செல்லும் மொழியியல் துறையில் புதிய கோட்

பாடு ஒன்று உருவாகுமானால் அதுவும் தொல்காப்பியத்துள் காணப் படுகிறது என்று ஒருவர் கூறினாலும் வியப்படைவதற்கில்லை[32] என்னும் அளவுக்கு ஆழமான நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது.

இவ்வாறு தொல்காப்பிய ஆய்வு காலந்தோறும் வளர்ந்து வந்துள்ளது. இந்த ஆய்வின் வரலாற்றினை உணர்த்தும் நோக்கில் விரிவான ஆய்வு இதுகாறும் மேற்கொள்ளப்படவில்லை. தொல்காப்பியம் — சொல்லதிகாரம் கல்லாடர் உரைப் பதிப்பின் முன்னுரையில் 'தொல்காப்பிய ஆராய்ச்சி வரலாறு' என்னும் குறுந்தலைப்பில் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் தொல்காப்பிய உரைகள், பதிப்புகள் போன்றவை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[33] பா. வீரப்பனுடன் இந்த ஆய்வாளர் சேர்ந்து எழுதிய 'தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு' என்னும் நூலில் தொல்காப்பியம் பற்றிய ஒரு கட்டுரை அமைந்துள்ளது.[34] இவையன்றித் தொல்காப்பிய ஆய்வின் வரலாற்றினை விரிவாக ஆராயும் முயற்சி இதுகாறும் மேற்கொள்ளப்படவில்லை. இத்தகைய வரலாறு இன்றுவரை நிகழ்ந்துள்ள தொல்காப்பிய ஆய்வினைப் பற்றி ஒரு முழுமையான பார்வையை நல்குவதோடு காலந்தோறும் நிகழ்ந்த தொல்காப்பிய ஆய்வின் வளர்ச்சி நிலைகளைக் கண்டறியவும் உதவும். மேலும் இதன்மூலம், ஆராய்ந்து தெளிவு காணப்படாத பொருள்கள் எவை என்பதும், இன்னும் ஆராயப்படாத, ஆராய்ந்தும் தெளிவு காணப்படாத சிக்கல்கள் எவை என்பதும் புலப்படும். இதனால் அந்தப் பொருள்கள் தொடர்பாக ஆய்வு நிகழ்வதற்கும் இந்த ஆய்வு தூண்டுகோலாக அமையும். இந்த நோக்கங்களை உட்கொண்டு 'தொல்காப்பிய ஆய்வின் வரலாறு' என்னும் இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது.

வரையறை

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியன கூறும் பொருள்கள் குறித்து இதுகாறும் அச்சாகி வெளிவந்துள்ள நூல்களும் கட்டுரைகளும் இந்த ஆய்வுக்குப் பொருளாகக் கொள்ளப் பட்டுள்ளன. எழுத்து, சொல் அதிகாரங்கள் போலன்றி, பொருளதிகாரத்தில் கூறப்படும் இலக்கணங்கள் அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, உவமை என விரிந்து வளர்ந்து செல்வதால் பொருளதிகாரம் குறித்து நிகழ்ந்த ஆய்வுகள் விரிவஞ்சி இந்த ஆராய்ச்சியில் சேர்க்கப் படவில்லை. மேலும் தொல்காப்பியரது காலம், சமயம், பிறப்பிடம், தொல்காப்பியப் பாயிரம் ஆகியன பற்றி நிகழ்ந்த ஆய்வுகளும் விரிவஞ்சி விடுக்கப்பட்டன. தொல்காப்பியப் பதிப்புகளைப் பொறுத்தவரை மூலப்பதிப்புகள், ஒப்பியல் பதிப்புகள் போன்றவை மூன்று அதிகாரங்களையும் கொண்டுள்ளதால், இன்றுவரை வெளிவந்துள்ள அனைத்துப் பதிப்புகளும் (பொருளதிகாரப் பதிப்புகளும்) ஆராயப்பட்டுள்ளன.

ஆய்வுமுறை

இந்த ஆய்வில் ஒவ்வொரு இலக்கணக்கூற்றின் ஆய்வு வரலாற்றினை விளக்குவதற்கு, தொல்காப்பியம் கூறுவது, உரை

யாசிரியர்களின் உரை, உரையாசிரியர்கள் மாறுபடும் இடங்களில் அவர்களது கருத்துக்கள், ஆய்வாளர்களின் விளக்கங்கள், அவற்றால் ஏற்பட்ட தெளிவு அல்லது புலப்படுத்தப்பட்டுள்ள புதிய கருத்து என்னும் அடிப்படை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஆய்வாளர்களின் கருத்தின் பொருத்தம் அல்லது பொருத்தமின்மையைச் சுட்டும் போக்கும் ஏற்ற இடங்களில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இலக்கணக் கூறு பற்றிய ஆய்வில் வளர்ச்சி காணப்படின் அதனைச் சுட்டிக்காட்டும் போக்கும், தெளிவு ஏற்பட்ட பொருள்களைக் கண்டறிந்து அதனை எடுத்துக்காட்டும் முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒவ்வோர் இயலின் இறுதியிலும் அவ்வியலின் பொருள் பற்றி நிகழ்ந்த ஆய்வின் பயனாகப் பெறப் படுவன தொகுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆய்வேட்டின் அமைப்பு

இந்த ஆய்வேடு முன்னுரை, முடிவுரை நீங்கலாக

1. தொல்காப்பியப் பதிப்புகள்
2. எழுத்ததிகார ஆய்வு
3. சொல்லதிகார ஆய்வு

என்னும் மூன்று இயல்களாக அமைக்கப்பட்டுள்ளது.

தொல்காப்பியப் பதிப்புகள் என்னும் முதல் இயலில் இன்றுவரை தொல்காப்பியத்துக்கு வந்துள்ள பதிப்புகள் 1. மூலப்பதிப்பு, 2. உரைப்பதிப்பு, 3. புத்துரைப் பதிப்பு, 4. பாயிரப் பதிப்பு, 5. ஒப்பியல் பதிப்பு, 6. மொழிபெயர்ப்புப் பதிப்பு என ஆறுவகையாகப் பகுத்து ஆராயப்பட்டுள்ளன. காலந்தோறும் பதிப்புகளில் காணப்படும் வளர்ச்சி எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தொல்காப்பியப் பதிப்புகள் பல்கிப் பெருகியதன் காரணங்கள் ஆராயப் பட்டுள்ளன. பதிப்புகள் வழியாக நிகழ்ந்த தொல்காப்பிய ஆய்வினையும், தொல்காப்பியப் பதிப்புகள் பற்றி நிகழ்ந்துள்ள ஆய்வினையும் எடுத்துக் கூறும் முயற்சியும் இவ்வியலில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தொல்காப்பியப் பதிப்புகளுக்கு அவற்றின் வகைப் பாட்டு அடிப்படையில் ஒன்று, பதிப்பாசிரியர் பெயர் அகர வரிசையில் ஒன்று, ஆண்டு வரிசையில் ஒன்று ஆக மூன்று அட்டவணைகள் இணைப்பு 1இல் அமைக்கப்பட்டுள்ளன.

'எழுத்ததிகார ஆய்வு' என்னும் இரண்டாம் இயலில் எழுத்ததிகாரம் கூறும் இலக்கணக் கூறுகள் பற்றிய ஆய்வுகள் 1. எழுத்தியல் (Phonemics) 2. பிறப்பியல் (Phonetics), 3. புணரியல் (Morphophonemics) என்று மூன்று வகையாகப் பகுத்து ஆராயப்பட்டுள்ளன.

'எழுத்தியல்' என்னும் பகுதியில் எழுத்தின் பெயர்க்காரணம், உயிர், மெய், உயிர்மெய் ஆகிய எழுத்துக்கள், தமிழ் நெடுங்கணக்கு

முறை, எழுத்துக்களின் முறைவைப்பு, 'நூன்மரபு' இயலின் பெயர்ப் பொருத்தம், முதல், சார்பு பாகுபாடு, தொல்காப்பியர் கூறிய சார் பெழுத்துகள், தொல்காப்பியரின் எழுத்துபற்றிய கோட்பாடு, ஓரெழுத் தொரு மொழி முதலிய பாகுபாடுகள், மெய்ம்மயக்கம், மொழி முதல், மொழி இறுதி எழுத்துக்கள் போன்றவை பற்றிய ஆய்வுக் கருத்துக் களின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

'பிறப்பியல்' என்னும் பகுதியில் தொல்காப்பியர் கூறும் பேச் சுறுப்புகள், உயிரொலி, மெய்யொலி ஆகியவற்றின் பிறப்பு, பாகு பாடுகள் ஆகியன பற்றிய ஆராய்ச்சியின் வரலாறு ஆராயப் பட்டுள்ளது.

புணரியல் என்னும் பகுதியில் புணர்ச்சி பற்றிய பொதுச் செய்திகள், புணர்ச்சியும் மயக்கமும், புணர்ச்சியும் சந்தியும், சந்தி, புணர்ச்சியுடன் தொடர்புடைய இலக்கணக் கூறுகள், நிறுத்த சொல், குறித்து வரு கிளவி, சாரியையின் தன்மைகள், எண்ணுப் பெயர்ப் புணர்ச்சியில் உள்ள சிக்கல்கள் போன்றன பற்றிய ஆய்வின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

'சொல்லதிகார ஆய்வு' என்னும் மூன்றாம் இயலில் சொல்லதி காரத்தில் கூறப்படும் இலக்கணப் பொருள் பற்றிய ஆராய்ச்சிக் கருத்துகள் 1. சொல்லியல், 2. தொடரியல் என இருவகையாகப் பகுத்து ஆராயப்பட்டுள்ளன.

'சொல்லியல்' என்னும் பகுதியில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல், ஆகிய சொற்களின் இலக்கணம், அமைப்பு, வகைப்பாடு, பயன்பாடு ஆகியன பற்றி நிகழ்ந்துள்ள ஆய்வுகளின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

'தொடரியல்' என்னும் பகுதியில் தொல்காப்பியத்தில் தொடரியல் பற்றிய செய்திகள் இடம்பெறும் இடங்கள், கிளவி யாக்கமும் தொடரியலும், வழுவமைதி, வேற்றுமை பற்றிய செய்திகள், ஆகுபெயர் அன்மொழித்தொகை வேறுபாடு, வினைத் தொகை ஆகியன பற்றிய ஆய்வின் வரலாறு ஆராயப்பட்டுள்ளது.

'முடிவுரை'யில் இந்த ஆய்வின் பயன் பற்றியும், இந்த ஆய்வு தொடர்பாக மேற்கொண்டு செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் சுருக்கமாக உரைக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் குறித்து நிகழ்ந்த ஆய்வுகளே இந்த ஆய்வுக்குக் கருப்பொருள். ஆதலின் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதி காரம் பற்றி 1980 வரை வெளிவந்துள்ள ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் இயன்ற வரை தொகுக்கப்பட்டன. அந்தக் கட்டுரை களும் நூல்களும் பற்றிய குறிப்புகள் ஆசிரியர் பெயர் அகரவரிசை யில் தரப்பட்டுள்ளன.

குறிப்புகள்

1. ஏ. வி. சுப்பிரமணிய அய்யர், தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி, (சென்னை, 1959).

2. பா. வீரப்பன் & கோ. கிருட்டிணமூர்த்தி, தமிழ் ஆராய்ச்சியின் வரலாறு, (சென்னை, 1977).

3. தி. சு. சத்தியம், இருபதாம் நூற்றாண்டில் திருக்குறள் ஆராய்ச்சி வளர்ச்சி, (சென்னைப் பல்கலைக்கழகம், பிஎச்.டி. பட்ட ஆய்வேடு, 1979).

4. S. Agesthialingom, "Keynote Address", Heritage of the Tamil, Language and Grammar" (Ed.) S. V. Subramanian and K. M. Irulappan (Madras, 1980), p. 2.

5. இ. சுந்தரமூர்த்தி, பரிமேலழகரின் திருக்குறள் உரைத்திறன் ஓர் ஆய்வு, பிஎச்.டி. பட்ட ஆய்வேடு, (சென்னைப் பல்கலைக்கழகம், 1977), ப. 169.

6. ஆ. சிவலிங்கனார், இளம்பூரணர் எழுத்துரை.

   மு. அண்ணாமலை, நச்சினார்க்கினியர் (சிதம்பரம், 1956).

   S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of Phonology, (Annamalainagar, 1967).

   மு. வை. அரவிந்தன், உரையாசிரியர்கள் (சிதம்பரம், 1968).

   K. Arumugham, A Critical Study of Naccinarkkiniyar, (Madras, 1981).

7. சோம. இளவரசு, இலக்கண வரலாறு (சிதம்பரம், 1963).

8. P. S. Subramanya Sastri, History of Grammatical theories in Tamil and their relation to Grammatical Literature in Sanskrit, (Madras, 1934).

9. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, (அண்ணாமலைநகர், 1980).

10. Robert Caldwell, A Comparative Grammar of the Dravidian or the South Indian Family of Languages (London, 1856).

11. Samuel Pillai, Tholcapya Nannool, (Madras, 1851).

12. P. S. Subramanya Sastri, op.cit.

13. வே. வேங்கடராசுலு ரெட்டியார், தொல்காப்பிய எழுத்ததிகாரவாராய்ச்சி, (சென்னை, 1944).

14. T. P. Meenakshisundaram, Foreign Models in Tamil Grammar.

15. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப. 25.

16. அதே நூல், ப. 24.

17. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம்-நன்னூல்: எழுத்ததிகாரம் (அண்ணாமலைநகர், 1962).

க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம்-நன்னூல்: சொல்லதிகாரம் (சிதம்பரம், 1971).

ரா. சீனிவாசன், தொல்காப்பியமும் நன்னூலும் (சென்னை).

18. ச. வே. சுப்பிரமணியன், இலக்கணத்தொகை: எழுத்து (சென்னை, 1967); இலக்கணத்தொகை: சொல் (நாகர் கோவில், 1961); இலக்கணத் தொகை: யாப்பு, பாட்டியல் (சென்னை, 1978).

19. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of Phonology (Annamalainagar, 1967).

20. G. Vijaya Venugopal, A Modern Evaluation of Nannul (Annamalainagar, 1968).

21. தி. முருகரத்னம், தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும் (மதுரை, 1973).

22. சூ. இன்னாசி, எழுத்தியல் (நாகர்கோவில், 1975).

23. தே. ஆண்டியப்பன், காப்பியர் நெறி: எழுத்தியல் (மதுரை, 1976), காப்பியர் நெறி: சொல்லியல் (மதுரை, 1977).

24. சோ. ந. கந்தசாமி, தொல்காப்பியத் தெளிவு (அண்ணாமலைநகர், 1977).

25. M. Israel, The Treatment of Morphology in Tolkoppiyam (Madurai, 1973).

26. Ibid, p. 3.

27. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு: பெயர்ச்சொல் (மதுரை, 1976); இலக்கண ஆய்வு: வினைச்சொல், (மதுரை 1986); இடையும் உரியும், (மதுரை, 1977).

28. க. பாலசுப்பிரமணியன், "தொல்காப்பியரின் ஒலியனியல் கொள்கை", தொல்காப்பிய மொழியியல் (பதி.), ச. அகத்தியலிங்கம் & க. முருகையன் (அண்ணாமலைநகர், 1972), ப-ள், 51-82.

29. S. Agesthialingom, Tolkappiyar's Treatment of Syntax Araicci-1, (1969), pp. 238-248.

30. செ. வை. சண்முகம், "வேற்றுமை பற்றித் தொல்காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப-ள் 267-308.

31. இராம. சுந்தரம், "கிளவியாக்கம் பற்றித் தொல்காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப-ள். 143-154.

32. ... if some new theory is put forth in linguistic field, it, is no wonder that some will come forward with proposition that the new theory is also found in the ancient grammar (Tolkappiyam).

— S. V. Shanmugham, Theory of Morphology in Tolkappiyam, Studies in Early Dravidian Grammars (Ed.) S. Agesthialingom & N. Kumarasamy Raja (Annamalainagar 1978), pp. 64-65.

33. தெ. பொ. மீனாட்சிசுந்தரன் (பதி.), சொல்லதிகாரம்: கல்லாடர் உரை: (சென்னை, 1971), முன்னுரை.

34. பா. வீரப்பன் & கோ. கிருட்டிணமூர்த்தி, மு.நூல், ப-ள் 9-24.

இயல் ஒன்று

தொல்காப்பியப் பதிப்புகள்

பதிப்பாய்வின் இன்றியமையாமை

தொல்காப்பிய ஆய்வு காலந்தோறும் பல்வேறு வகைகளில் வளர்ந்து வருகிறது. இத்தொல்காப்பிய ஆய்வின் வரலாற்றையும் வளர்ச்சியையும் கண்டறிய 'தொல்காப்பியப் பதிப்புகள்' பற்றிய ஆய்வும் இன்றியமையாதது ஆகும். இன்றுவரை தொல்காப்பியத் துக்கு வெளிவந்துள்ள அனைத்துப் பதிப்புகளையும் தொகுத்து வகைப்படுத்தி ஆராயின் இப்பதிப்புகள் வழியாக நிகழ்ந்துள்ள ஆய்வு, இப்பதிப்புகள் ஆய்வுக்கு உதவும் பாங்கு ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

பதிப்பிக்கப்படும் முன் தொல்காப்பியக் கல்வியின் நிலை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பாதி வரை தொல்காப்பியம் அச்சாகவில்லை. ஓலைச்சுவடிகளையும் கையெழுத்துப் படிகளை யும் கொண்டே இந்நூல் பயிலப்பட்டு வந்தது. இந்தியர் அச்சகம் வைத்துக் கொள்வதற்குத் தடையாக இருந்த அச்சகக் கட்டுப் பாட்டுச் சட்டம் கி. பி. 1835இல் நீக்கப்பட்ட[1] போது பல அச்ச கங்கள் தமிழராலும் ஏற்படுத்தப்பட்டு, பல பழந்தமிழ் நூல்கள் அச்சேறின. தொல்காப்பியம் அச்சாகும் முன்னர் தொல்காப்பியக் கல்வி இருந்த நிலைமை பற்றிய சி. வை. தாமோதரம்பிள்ளை கூற்று இங்குக் கருதத்தக்கது.

> சென்னப்பட்டிணத்தில் இன்றைக்குச் சுமார் ஐம்பதறுபது வருஷத்தின் முன்னிருந்த வரதப்ப முதலியாரின் பின் எழுத்துஞ் சொல்லுமேயன்றித் தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பாடங்கேட்டவர்கள் மிக அருமை. முற்றாய் இல்லையென்றே சொல்லலாம். வரதப்ப முதலியார் காலத்திலுந் தொல்காப்பியங் கற்றவர்கள் அருமையென்பது அவர் தந்தையார் அதனைப் பாடங்கேட்கும் விருப்பமுடையரானபோது பிரையூரில் திரு வாரூர் வடுகநாத தேசிகர் ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கின்றாரென்று கேள்வியுற்றுத் தமது ஊரைவிட்டு அதிக திரவியச் செலவோடு அவ்விடம் போய் இரண்டு வருஷமிருந்து பாடங்கேட்டு வந்தமையானும் வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்டறிந்தவரென்பதானும் அதன் காரணமாக அவருக்குத் தொல்காப்பியம் வரதப்ப முதலியாரென்று பெயர் வந்தமையானும் பின்பு அவர் காலத்தி லிருந்த வித்துவான்கள் தமக்கு யாதாயிலும் சமுசயம் நிகழ்ந்துழி

அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையாலும் நிச்சயிக்கலாம்.[2]

பல பழந்தமிழ் நூல்களைப் போலவே பின்னர் தொல்காப்பியமும் அச்சாகி வெளிவந்து பலரும் கற்கும் நிலையினை அடைந்தது. இன்றுவரை அது மூலத்தோடும், உரை, குறிப்புரை, விளக்கவுரைகளோடும், பிற இலக்கணங்களோடு ஒப்பிட்டு நோக்கும் வகையிலும், புத்துரைகளுடனும், பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டும் பல்வேறு பதிப்புகளாக வெளிவந்துள்ளது.

பதிப்புகளின் வகைப்பாடு

இன்றுவரை தொல்காப்பியத்துக்கு வெளிவந்துள்ள பதிப்புகளை அவற்றின் தன்மையைக் கொண்டு ஆறு வகையாகப் பகுக்கலாம்.

1. மூலப் பதிப்புகள்

உரையில்லாமல் தொல்காப்பிய நூற்பாக்கள் மட்டும் அமைந்தவை.

2. உரைப் பதிப்புகள்

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், பேராசிரியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகிய உரையாசிரியர்களின் உரைகளும் தொல்காப்பிய நூற்பாக்களும் அமைந்தவை.

3. புத்துரைப் பதிப்புகள்

பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, ச. சோமசுந்தர பாரதியார், வே. வேங்கடராசுலு ரெட்டியார், புலவர் குழந்தை, அ. கு. ஆதித்தர் போன்றோரது புத்துரையுடன் தொல்காப்பிய மூலமும் அமைந்தவை.

4. பாயிரப் பதிப்புகள்

தொல்காப்பியத்தின் பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம், இவற்றின் உரை ஆகியன அடங்கியவை.

5. ஒப்பியல் பதிப்புகள்

நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்களுடன் தொல்காப்பியத்தை ஒப்பிட்டுக் காணும் வகையில் அமைந்த இலக்கண ஒப்பு; தொல்காப்பியத்துக்கு உள்ள உரைகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுக் காணும் வகையில் அமைந்த உரை ஒப்பு ஆகியவை.

6. மொழிபெயர்ப்புப் பதிப்புகள்

ஆங்கிலம், மலையாளம், கன்னடம் ஆகிய பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளவை.

இந்த ஆறு வகையிலும் வெளிவந்துள்ள பதிப்புகளை ஒவ்வொரு வகையையும் கால வரிசையில் அமைத்து இவ்வியல் ஆராய்கிறது.

மூலப்பதிப்புகள்

தொல்காப்பியத்துக்கு உரைப்பதிப்புகளே முதலில் வெளி வந்தன. மூலப்பதிப்புகள் பின்னரே வந்தன. தொல்காப்பியத்துக்கு முன்னர் திருக்குறளுக்கு மூலப்பதிப்பும் உரைப்பதிப்பும் வெளி வந்துள்ளன.[3] திருக்குறள் மூலப்பதிப்பினைக் கண்டு அதுபோன்று தொல்காப்பியத்துக்கும் மூலப்பதிப்பு இருப்பின் பயனுடையதாக இருக்கும் என்ற எண்ணம் மூலப்பதிப்புகளை வெளியிடத் தூண்டியது. 1922–இல் பி. என். சிதம்பர புன்னைவனநாத முதலி யாரும், கா. நமச்சிவாய முதலியாரும் மூலப்பதிப்புகளை வெளி யிட்டனர்.

1922–இல் சி. புன்னைவனநாத முதலியார் தொல்காப்பி யத்தின் மூன்று அதிகாரங்களையும் கொண்ட மூலப்பதிப்பினை வெளியிட்டார்.

> தொல்காப்பிய மூலம் ஒன்று சுத்தமாகவும் திருத்தமாகவும் பதிப் பிக்கப்பெறின் யாவரும் தமிழ்த் தொல்லிலக்கணச் சூத்திரங் களின் தன்மைகளையாவது கண்ணுற்றுக் களிப்படைவார்கள் என்று தமிழவைதோறும் முழங்கி வந்த பா. வே. மாணிக்கநாயக் கரின் கருத்தைத் தழுவி இதனை வெளியிட்டதாகப் பதிப் பாசிரியர் கூறுகிறார்.[4]

இப்பதிப்பிற்கு அணிந்துரை வழங்கிய டி. எஸ். சீனிவாச அய்யங் சார் இதற்கு முன் வந்த சில தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிய செய்திகளைக் குறித்துள்ளார். சிறப்புரை வழங்கிய நாராயணை யங்கார் அதுவரை மூலபாடப் பதிப்பு இல்லாமையைச் சுட்டிக்காட்டி இப்பதிப்பு மூலபாடத்தை மனப்பாடம் செய்வோர்க்கும், பின்னர் மறக்காமல் இருக்கச் சிந்திப்பவர்க்கும் பெரிதும் பயன்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதுவே தொல்காப்பிய மூலத்தை மட்டும் முழுமையாகவும் தனித்தும் தாங்கிவந்த முதல் மூலப்பதிப்பு ஆகும்.

இதனுள் பதிப்பு விவரங்களடங்கிய முகப்புப் பக்கத்தை அடுத்து டி.எஸ். சீனிவாசய்யங்காரின் அணிந்துரை ஆங்கிலத்திலும் தமிழிலும் அமைந்துள்ளது. இதனையடுத்து, பதிப்புரை, தொல்காப்பியரின் வரலாறு, பொது, சிறப்புப் பாயிரங்கள், எழுத்து, சொல், பொருளதி கார மூலபாடம் ஆகியவை அமைந்துள்ளன. நூற்பாக்களின் பொருளுக்கேற்ற தலைப்புகளும் தரப்பட்டுள்ளன. நூற்பா முதற் குறிப்பகராதி முதலில் அமைந்துள்ளது. உரையாசிரியர்கள் கொள்ளும் வேறுபட்ட பாடங்கள் அவரவர் பெயருடன் அடிக்குறிப் பாகக் காட்டப்படுவதுடன் அதற்கு உதவிய முந்தைய பதிப்புகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. உரையாசிரியர்கள் கருத்து வேறு பாட்டால் ஒரு நூற்பாவின் இறுதியடியையோ முதலடியையோ தனி நூற்பாவாகக் கொண்டதால் நூற்பாக்களின் எண்ணிக் கையில் வேறுபாடு தோன்றியது. இது ஒவ்வோர் அதி காரத்தின் நூற்பாத் தொகைகூறும் பழம்பாடல்களின் கருத்து

களோடு முரண்படுவது கண்டு அதனை ஆராய்ந்து எழுத்து—483, சொல் — 462. பொருள் — 665 ஆக மொத்த நூற்பாக்களின் எண்ணிக்கை 1610 எனப் பதிப்பாசிரியர் முடிவு செய்கிறார். இந்த வேறுபாடுகளை ஆராய்ந்து தாம் மேற்கொண்ட நூற்பா எண்ணிக்கை பற்றி இவர் பின்வருமாறு கூறுகிறார்.

> பிள்ளையவர்களால் (சி. வை. தாமோதரம் பிள்ளை) பதிப்பிக்கப் பட்டிருக்கும் சொல்லதிகாரம் சேனாவரையம் நச்சினார்க்கினியம் இரண்டையும் வைத்து தனித்தனி ஒப்பு நோக்கிய காலத்து கிளவியாக்கம், வேற்றுமை மயங்கியல், உரியியல் இவைகளின் சூத்திரத்தொகை கூடியும் குறைந்துமிருக்கக் கண்டனன். இவ் வேற்றுமை உரையாசிரியர் கருத்து மாறுபாட்டான் ஒரு சூத்திரத் தின் முதலடியையோ ஈற்றடியையோ தனிச் சூத்திரமாக்கி உரை யெழுதிப் போந்தமையாலாயது என்பது விளங்கிற்று. கிளவி யாக்கம் 54 (537) சூத்திரத்தின் முதலடியாகிய 'ஒன்றுவினை மருங் கின் ஒன்றித் தோன்றும்' என்பதை நச்சினார்க்கினியர் தனிச் சூத்திரமாக்கியிருப்பதையும் வேற்றுமை மயங்கியல் 33 (599) சூத்திரத்தைச் சேனாவரையர் 598-ன் இறுதியடியாகச் சேர்த் திருப்பதையும் கண்டு இவற்றுள் 539ஆம் சூத்திரத்தைச் சேனா வரையர் உரைக்கிணங்க ஒரு சூத்திரமாகவும் 598ன் ஈற்றடியாகிய 'வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்' என்பதை நச்சினார்க் கினியர் உரைக்கியைய தனிச் சூத்திரமாகவும் பதிப்பிக்க முற் பட்டனன். உரியியலில் 787ஆம் சூத்திரத்தில் மாலை இயல்பே என்பதையும் சேனாவரையத்தைப் பிரதி செய்தவரின் கரவழு வாய் பிரித்தெழுதப்பட்டிருக்குமென்றெண்ணி நச்சினார்க்கினி யரின் உரைக்கிணங்கவே 787, 795ஆம் சூத்திரத்துள் சேர்த்துப் பதிப்பிக்கலாயினன். இவ்விதம் பொருந்தாதவிடத்து சொல்லதி காரச் சூத்திரங்கள் மொத்தத்தில் 463 ஆகக் காணப்படுமன்றி இயல்களின் சூத்திரத் தொகையும் வரையறுக்கப்படாது. தொல்காப்பியம் முழுமைக்குமுள்ள சூத்திரத் தொகையும் 1611 என ஏட்டுப்பாட்டுக்கு மாறாகக் கணிக்கப்பட வேண்டுவதாம். இவ்விடர்ப்பாடில்லாதிருக்குமாறு கிளவியாக்கச் சூத்திரங்கள் 61 என்றும் வேற்றுமை மயங்கில் சூத்திரங்கள் 35 என்றும் உரியியல் சூத்திரங்கள் 98 என்றும் வரையறுத்துச் சொல்லதிகாரச் சூத்திரங்கள் 462 ஆகுமாறு செய்தனன். இவ்வியைபுக்கியைய எழுத்து — 483 சொல் — 462 பொருள் — 665 என்று வரையறுக் கப்பட்டு தொல்காப்பிய மொத்தச் சூத்திரங்கள் 1610 என முடிவு செய்யப்பட்டது.[5]

இதிலிருந்து பதிப்பாசிரியர்கள் ஏட்டில் இருந்ததை அப்படியே அச்சிட வேண்டும் என்று எண்ணாமல் முரண்பாடுகள் தோன்றிய விடத்து அதற்கான காரணங்களை ஆராய்ந்து அந்தச் சிக்கலை விடுவிக்க முனைந்துள்ளனர் என அறியலாம்.

தொல்காப்பிய மூலத்தினைக் கா. நமச்சிவாய முதலியார் (1876-1931) இரண்டு தொகுதிகளாக வெளியிட்டார். எழுத்ததிகாரம்,

சொல்லதிகாரம் ஆகிய இரண்டும் அடங்கிய முதல் தொகுதி 1922-இலும் பொருளதிகாரமாகிய இரண்டாம் தொகுதி 1924-இலும் வெளியிடப்பட்டன.

இப்பதிப்புகளில் முதல் பக்கத்தில் நூற்பெயர், பதிப்பாசிரியர், அச்சகம் போன்ற பதிப்புச் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. பொருளடக்கமும் எழுத்து, சொல் அதிகாரங்களின் மூல பாடமும் அவற்றைத் தொடர்ந்து அமைந்துள்ளன. பொருளதிகாரமும் இதே அமைப்பைக் கொண்டுள்ளது. நூற்பாக்களில் கடினமான சந்தி பிரிக்கப்பட்டு நூற்பா நுவலும் பொருளுக்கேற்ற தலைப்புகள் கொடுக்கப் பட்டுள்ளன. இந்தத் தலைப்புகள் பதிப்பாசிரியரின் புதிய சேர்க்கை என்பதை உணர்த்தும் வகையில் அவை பகர அடைப்புகளுக்குள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வோர் அதிகாரத்தின் நூற்பாத் தொகையினைக் குறிக்கும் பழம்பாடல்களும் நூற்பா முதற்குறிப்பு அகராதியும் அவ்வவ்வதிகாரத்தின் இறுதியிலேயே கொடுக்கப்பட்டுள்ளன. பாடவேறுபாடுகள் அடிக்குறிப்பில் காட்டப் பட்டுள்ளன. நூற்பாவின் தொடக்கத்தில் அதிகாரத் தொடர் எண்ணும் இறுதியில் இயலின் வரிசை எண்ணும் தமிழ் எண் முறையில் கொடுக்கப்பட்டுள்ளன.

1953-இல் தி. சு. பாலசுந்தரம் பிள்ளை அவர்களது விளக்கக் குறிப்புகள் கொண்ட கையடக்கமான தொல்காப்பிய மூலப்பதிப்பினைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. இதன் மறுபதிப்புகள் 1954, 1967 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

பதிப்புரையும் பொருளடக்கமும் நூல் தொடக்கத்திலும், நூற்பா முதற்குறிப்பகராதி இறுதியிலும் தரப்பட்டுள்ளது. பதிப்புரையில் தொல்காப்பிய நூலின் சிறப்பு, தொல்காப்பியரைப் பற்றிய செய்திகள், அவரது காலம், தொல்காப்பியத்தின் அமைப்பு, பதிப்பு முறை முதலியவை அடங்கியுள்ளன. இயல்களின் தலைப்புகளுக்கு விளக்கம், அவற்றுக்கு உட்பிரிவுகள், ஒவ்வோர் நூற்பாவுக்கும் தனித் தலைப்புகள் ஆகியன இப்பதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. நூற்பாக்களைப் படித்துக்கொண்டு போகும்போதே பொருளுணர்ச்சிக்குத் தடையிலா வகையில் நூல் முழுவதற்கும் அவ்வப் பக்கங்களின் அடியில் உரைக்குறிப்பும் அமைந்துள்ளது. பாட வேறுபாடுகளும் அருஞ்சொற்பொருளும் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன.

மர்ரே எஸ். ராஜம் 1960-இல் தொல்காப்பிய மூலப்பதிப்பினைப் பதிப்பாசிரியர் குழு ஒன்றைக் கொண்டு பல ஓலைச் சுவடிகளினின்றும் ஆராய்ந்து வெளியிட்டார். இதன் மறுபதிப்பு 1978இல் வெளிவந்தது.

இந்நூலின் பதிப்புரையில் தொல்காப்பியத்தின் பழைமை, பெருமை, அமைப்புமுறை, காலம், உரைகளின் சிறப்பு போன்ற செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. சில முந்தைய மூலப்பதிப்புகள்

நூற்பாத்தொகை கொள்வதில் காணும் முறைகளும், உரைப்பதிப்புகளில் கணேசையர் பதிப்பின் சிறப்புப் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பதிப்பில் எழுத்து, பொருள் அதிகார நூற்பாத்தொகை இளம்பூரணர் உரைப்படியும், சொல்லதிகார நூற்பாத்தொகை நச்சினார்க்கினியர் உரைப்படியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூற்பாக்கள் சந்தி பிரிக்கப்பட்டுத் தகுந்த நிறுத்தக் குறிகள் இடப்பட்டுள்ளன. உரையாசிரியர்களுள் யார் கொண்ட மூல பாடம் பொருளின் தெளிவுக்குச் சிறப்பாக உள்ளது எனக் கண்டறிந்து அந்த உரையாசிரியரின் மூலபாடத்தை இந்நூல் கொண்டுள்ளது.

அதிகாரங்களின் இயல் பகுப்பும் நூற்பா அளவும் கூறும் பழம் பாடல்கள், இளம்பூரணர் போன்ற உரையாசிரியர்கள் ஒவ்வோர் இயலிலும் கொண்ட நூற்பா அளவு, இயல்களில் நூற்பாத்தொகை வேறுபாட்டின் விளக்கம், அதிகார வரிசையில் பாட வேறுபாடுகள், பொருளடைவு, நூற்பா முதற்குறிப்பகராதி போன்ற ஆராய்ச்சிக்குத் துணைபுரியும் பட்டியல்கள் நூலின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

(1969-இல் இராமலிங்கனார் (வடலூரனார்) தொல்காப்பியத்தின் மூலப்பதிப்பினைத் 'தொல்காப்பிய வளம்' என்னும் பெயரில் வெளியிட்டார், இதனுள் தொல்காப்பிய மூலமும் வடலூரனாரின் சில புதுமையான விளக்கங்களும் இடம் பெற்றுள்ளன.)

இவரது பதிப்பில் பாயிரத்தை 'வாழ்த்தியல்' என்றும் அதிகாரத்தைப் 'படலம்' என்றும் குறித்துள்ளார். ''பொருள் மரபு கொண்டே நூல் தொகைதரும்; அதனால் அடி எண்ணியே தெளிவுரை தரல் சிறப்பு''[3] என்பது இவர் கொள்கை. அதனால் நூற்பாக்களை அடி எண்ணிக்கை முறையில் தந்துள்ளார். ஒவ்வோர் இயலின் தொடக்கத்திலும் செய்தி, நூல், அடி என்னும் முறையில் பட்டியல் அமைத்துள்ளார். இயல்களின் இறுதியில் 'நூல் விளக்கம்' என்னும் பகுதியில் பல கருத்துக்களைக் கூறியுள்ளார். இயல் தொடக்கத்தில் முகம், தெளிவு, குறிப்பு என்னும் பகுதியில் அவ்வியலின் செய்திகள் தொகை வகை செய்து தரப்பட்டுள்ளன. நூலின் இறுதிப்பகுதியில் 'தொல்காப்பிய வளம்' என்னும் தலைப்பில் பல்வேறு உள்தலைப்புகள் அமைந்த விளக்கக் கட்டுரை அமைந்துள்ளது. ஆங்கிலத்திலும் பாவடிவில் அமைந்த திணைவிளக்கம் பற்றிய கருத்துக்களடங்கிய பகுதி உள்ளது. 'புலவர் தேர்வுக்குரியது' என்று இப்பதிப்புப் பற்றிப் பதிப்பாளர் குறித்துள்ளார். இவரது விளக்கங்கள் யாவும் புதுமையாகவும் புரிந்து கொள்வதற்கு அரிதாகவும் உள்ளன.

உரைப் பதிப்புகள்

தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோர் எழுதிய உரைகள்

உள்ளன. இளம்பூரணர் உரை, நூல் முழுமைக்கும் உள்ளது. சேனாவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோரது உரைகள் சொல்லதிகாரத்துக்கு மட்டுமே உள்ளன. நச்சினார்க்கினியர் உரை எழுத்து, சொல் அதிகாரங்களுக்கும் பொருளதிகாரத்தில் முன் ஐந்தியல்களான அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள் ஆகிய இயல்களுக்கும், செய்யுளியலுக்கும் உள்ளது. பேராசிரியரது உரை பொருளதிகாரத்தின் பின் நான்கியல்களாகிய மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய இயல்களுக்கு மட்டுமே உள்ளது. இவ்வுரைகளுள் காலத்தால் முந்தியது இளம்பூரணர் உரை; பிந்தியது நச்சினார்க்கினியர் உரை. ஆனால் இவை அச்சில் வெளிவந்த முறையில் முன்பின்னாக வெளிவந்துள்ளன. எழுத்து, சொல், பொருள் அதிகாரங்களுக்கு இதுவரை வந்துள்ள உரைப்பதிப்புகளை முறையே கால வரிசையில் தொகுத்து அவற்றின் அமைப்பையும் வளர்ச்சியையும் காணலாம்.

எழுத்ததிகாரம் உரைப்பதிப்புகள்

இளம்பூரணம்

1868-இல் எழுத்ததிகாரத்தை இளம்பூரணர் உரையுடன் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் பல சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து வெளியிட்டார். இது பூவிருந்தவல்லி கன்னியப்ப முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது. இதுவே **எழுத்ததிகார இளம்பூரணர் உரையின் முதல் பதிப்பாகும்**. இந்நூலுக்குத் திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தியாகராசச் செட்டியார், திரிசிரபுரம் பெரியண்ணப் புலவர் ஆகியோர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர்.

இந்நூலில் பதிப்புரை, முன்னுரை எதுவும் பதிப்பாளரால் எழுதப் படவில்லை. நூற்பா தொடர்ச்சியாக பத்தி போல் அச்சிடப் பட்டுள்ளது. நூற்பாவின் அடிகளுக்கிடையே சிறிய கோடு (—) அமைத்துப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. உரை, நூற்பாவினும் சிறிய எழுத்தில் தனிப்பத்தியாக அமைக்கப்பட்டுள்ளது. நூற்பாக்கள் சந்தி பிரிப்பின்றி அமைந்துள்ளன. ஆசிரியரின் குறிப்புரை விளக்கவுரை முதலியன இல்லை. அடிக்குறிப்பில் சில பாடவேறுபாடுகளும் ஒரிரு அருஞ்சொற்பொருள்களும் அமைந்துள்ளன. நூற்பா முதற்குறிப்பு அகராதியும் இயலகராதியும் இறுதியில் அமைந்துள்ளன. பிழை திருத்தமும் கொடுக்கப்பட்டுள்ளது.

1928-இல் இளம்பூரணர் உரையை வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பதிப்பித்தார். இது இப்பதிப்பிற்கு 60 ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாரின் பதிப்பையும் ஏட்டுச்சுவடிகளையும் ஒப்பு நோக்கிப் பரிசோதிக்கப்பட்டது. இதன் மறுபதிப்புகள் 1936, 1941 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

இந்நூலின் பதிப்புரையில் முந்தைய பதிப்புகள் சிலவற்றைப் பற்றியும், தொல்காப்பிய உரைகள் பற்றியும் பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளார். நூற்பா முதற்குறிப்பு அகராதியும், இயலகராதியும் நூலின் தொடக்கத்தில் தந்துள்ளார். நூற்பாவில் பொருள் விளங்குமாறு சந்தி பிரிக்கப்பட்டுத் தகுந்த நிறுத்தக் குறிகள் அமைக்கப் பட்டுள்ளன. மூலத்திலும் உரையிலும் காணப்படும் பாட வேறுபாடு களைக் காட்டித் தம் சேர்க்கைகள் எவை என்பது விளங்குமாறு அவற்றை அடைப்புகளுக்குள் பதிப்பாளர் தந்துள்ளார்.

1955-இல் கழகம் தேவநேயப் பாவாணரின் உரைக் குறிப்புகளுடன் இவ்வுரையினை வெளியிட்டது. பின்னர் வந்த பதிப்புகளில் கழகப்புலவர் ப. இராமநாதப்பிள்ளை எழுதிய முன்னுரை அடங்கியுள்ளது. இதன் பதிப்புரையில் முந்தைய பதிப்புகள் பற்றிய குறிப்பு உள்ளது. இதனுள் தொல்காப்பியத்தின் சிறப்பு, காலம், நூலமைப்பு போன்ற செய்திகள் உள்ளன. பாட வேறுபாடுகள் அடிக்குறிப்பாகவும், நூற்பா முதற்குறிப்பு அகர வரிசை, அருஞ்சொற்பொருள் அகரவரிசை ஆகியன இறுதியிலும் தரப்பட்டுள்ளன. இதன் மறுபதிப்புகள் 1958, 1964, 1969, 1972 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

1969-இல் அடிகளாசிரியர் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடத்து இளம்பூரணர் உரையேடுகளுடன் முந்தைய பதிப்பு களை ஒப்பிட்டு ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். இராஜபாளையம் பூ. கு. குப்புசாமி ராஜா செய்யுளியல் நூற்பா இரண்டின் விளக்கத்திற்காக அறிவித்திருந்த போட்டியில் வென்று பெற்ற பரிசுத்தொகையைக் கொண்டு இது வெளியிடப் பெற்றது.[7]

தொல்காப்பியர், இளம்பூரணர் ஆகியோரின் வரலாறு பற்றியும் எழுத்ததிகாரப் பொருள் பற்றியும் ஆய்வுக்கட்டுரைகள் நூலின் முதற் பகுதியில் அமைந்துள்ளன. நூற்பாவும், அதனையடுத்து உரையும், தொடர்ந்து நூற்பாக் குறிப்பு என்னும் தலைப்பில் பதிப்பாசிரியரின் விளக்கவுரையும் அமைந்துள்ளன. இடையிடையே மூலத்திலும் உரையிலும் காணப்படும் பாடவேறுபாடுகளைச் சிறிய எழுத்து களில் எளிதில் வேறுபடுத்தி அறியும் வண்ணம் தந்துள்ளார். 'நூற் பாக் குறிப்பு' என்னும் விளக்கவுரைப் பகுதியில் பதிப்பாசிரியர் பிற உரைகள் பிற்கால இலக்கணங்கள் அவற்றின் உரைகள் ஆகியவற்றி லிருந்து ஒப்புடைய பகுதிகளை எடுத்துக்காட்டுகிறார். நூற்பா அகர வரிசை, எடுத்துக்காட்டு அகரவரிசை, உரைப்பொருள் அகரவரிசை என்ற மூன்று அகரவரிசைகளைத் தந்துள்ளார். மிகுந்த பாடவேறு பாடுகள், பலவகை ஒப்புநோக்குக் குறிப்புகள், அகராதிகள் இவற்றைக் கொண்டு நல்ல ஆராய்ச்சிப் பதிப்பாக விளங்குவதுடன் இதுவரை வெளிவந்த எழுத்ததிகார இளம்பூரணர் உரைப் பதிப்பு களுள் சிறந்ததாகவும் அமைந்துள்ளது.

கு. சுந்தரமூர்த்தியின் எழுத்ததிகார இளம்பூரணருரைப் பதிப்பும் 1969-இல் வெளிவந்துள்ளது. இதன் பதிப்புரையில்

முந்தைய பதிப்புகள், தம் பதிப்பின் செம்மை ஆகியன பற்றிக் குறிப்பிட்டுள்ளார். ஆராய்ச்சி முன்னுரையில் எழுத்ததிகாரம், இளம் பூரணர் உரை ஆகியன பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். இளம் பூரணரும் நச்சினார்க்கினியரும் மாறுபடும் இடங்கள் அவற்றுள் பொருந்துவன பொருந்தாதன, தொல்காப்பியக் கருத்துடன் நன்னூல், வீரசோழியம், நேமிநாதம் இலக்கண விளக்கம் ஆகிய நூல்களுடன் ஒப்பீடு ஆகியன அவ்வந்நூற்பாவின் பின்னுள்ள விளக்கவுரையில் அமைந்துள்ளன. 'பொருள் அமைப்பு' என்னும் பெயரில் இயல் நுதல்பொருள் இயல்களின் தொடக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. நூற்பா முதற்குறிப்பு இறுதியில் அமைந் துள்ளது. இந்நூலின் மறுபதிப்பினை 1979-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

ஐந்து பதிப்புகளைப் பெற்ற இளம்பூரணத்துக்கு ஏழு மறுபதிப்புகள் வந்துள்ளன. முதல் இரு பதிப்புகளுக்கும் இடை வெளி அறுபது ஆண்டுகள். நச்சினார்க்கினியம் இதனை நோக்க மிகுதியான பதிப்புகளைப் பெற்றுள்ளது.

நச்சினார்க்கினியம்

1848-இல் மழைவை மகாலிங்கையர் எழுத்ததிகார நச்சினார்க் கினியர் உரையைப் பல ஏடுகளைக் கொண்டு ஆராய்ந்து கல்விக்கடல் அச்சுக்கூடத்தில் அச்சிட்டு வெளியிட்டார். (இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில் தலைமைத் தமிழ்ப் புலவராக விளங்கினார்.) **இவர் வெளியிட்ட எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பே தொல்காப்பியத்துக்கு முதன்முதல் வந்த பதிப் பாகும்.**

தொல்காப்பியத்துக்கு வந்த முதல் பதிப்பினைப் பற்றி ஆராயும் இவ்விடத்தில் அதன் தொடர்பாக மூன்று செய்திகள் குறிப்பிடத் தக்கன.

1. எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையினை முதன்முதலில் பதிப்பித்தவர் சி. வை. தாமோதரம் பிள்ளையே என்று கலைக் களஞ்சியம்[8] குறிப்பிடுகிறது. இது தவறான செய்தி என்பதற்குச் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் பதிப்புரையே சான்று பகரும். மழைவை மகாலிங்கையர் பதிப்புப் பற்றி சி. வை. தாமோதரம் பிள்ளை தமது எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பின் (1891) பதிப்புரையில் குறிப்பிடுகிறார்.

2. மழைவை மகாலிங்கையர் பதிப்பில் சாலிவாகன ஆண்டே (1770) குறிக்கப்பட்டிருப்பதால் அதற்கு ஈடான கிறித்து ஆண்டாக 1847, 1848, 1849 ஆகிய ஆண்டுகள் குறிக்கப்படுகின்றன. பதிப்பில் குறிப்பிடப்படும் ஆண்டு "சாலிவாஹனஞ — (1770) பிலவங்க ஆவணி" என்பதாம். இது சாலிவாகன ஆண்டு 1775[9] எனக் கூடக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதற்குச் சரியான ஆண்டு கி. பி. 1848 என்பதே ஆகும் 1847, 1849 ஆகியன சரியல்ல.[10]

3. க. ப. அறவாணன், தாயம்மாள் அறவாணன் இவர்களது தொல்காப்பியக் களஞ்சியம் என்னும் நூல் 1835–ல் தாண்டவராய முதலியாரால் ஒரு தொல்காப்பியப் பதிப்பு வந்ததாகக் குறிப்பிடுகிறது; (''தாண்டவராய முதலியார் தொல்காப்பியம் அகத்திணையியல் புறத்திணையியல் வெளியிட்டதைச் சாமுவேல் பிள்ளை தன் பதிப்பில் காட்டுகிறார்'') என்னும் குறிப்பும் காணப்படுகிறது. சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல் பதிப்பில் 35, 36, 37 பக்கங்களில் ''Thandaveroya Moodeliyar's edition'' என மேற்கோள் காட்டப்படுவது உண்மைதான். 35, 36, 37 ஆகிய பக்கங்களில் ''see வெட்சிப் படலம்,'' ''see கரந்தைப்படலம்'', என்னும் முறையில் வெண்பா மாலையின் படலங்கள் ஒப்புநோக்குக் குறிப்புகளாகத் தரப் பட்டுள்ளன. ஆனால் அவர் மேற்கோள் காட்டுவது தொல்காப்பியப் பதிப்பு என்பதற்கு எவ்விதக் குறிப்பும் அவரது மேற்கோள்களில் காணப்படவில்லை. மேலும் தாண்டவராய முதலியார் தொல் காப்பியத்தினைப் பதிப்பித்ததாக இதுவரை யாரும் குறிப்பிட்ட தாகவும் தெரியவில்லை. மேலும் அவர் குறிப்பிடும் ஆண்டில் (1835) தாண்டவராய முதலியார் பதிப்பித்தது ''இலக்கணப் பஞ்சகங் களில் நன்னூல் மூலமும் அகப்பொருண்மூலமும் புறப்பொருட் கிலக்கியத்தோடு வெண்பாமாலை மூலமும்'' என்பதே. இப்பதிப்பின் ஆண்டு பற்றி ஐயத்துக்கிடமில்லை. ஏனெனில் பதிப்பிலேயே 'சாலிவாகன ஆண்டு 1756, கிறிஸ்து ஆண்டு 1835' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆகவே தாண்டவராய முதலியாரால் தொல்காப்பியப் பதிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என்பதும் சாமுவேல் பிள்ளை மேற்கோள் காட்டுமிடங்களும் தாண்டவராய முதலியாரின் நன்னூல், நம்பி அகப்பொருள், வெண்பாமாலைப் பதிப்பினையே என்பதும் தெளியலாம். இதனை மேலும் ஒரு சான்றும் தெளிவு படுத்துகிறது. சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல் பதிப்பில் 37ஆம் பக்கத்தில் வாகைத்திணை நூற்பாவுக்கு ஒத்த பகுதி களை எடுத்துக்காட்டும் வகையில் see வாகைப்படலம் 85th page Thandaveroya Moodeliyar's edition'' என்னும் குறிப்பு காணப்படு கிறது. 1835–ஆம் ஆண்டு தாண்டவராய முதலியாரின் நன்னூல், அகப்பொருள் வெண்பாமாலைப் பதிப்பில் பக்கம் 85–இல் 'வாகைப் படல'மும் தொடர்ந்து அதன் நூற்பாக்களும் அமைந்துள்ளன. இம்மூன்று செய்திகளாலும் கீழ்க்காணும் முடிவுகளைக் கொள்ளலாம்

1. முதல் தொல்காப்பியப் பதிப்பு எழுத்ததிகார, நச்சினார்க் கினியர் உரையே.

2. அந்த எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையை முதன் முதல் பதிப்பித்தவர் மழைவை மகாலிங்கய்யர். சி. வை. தாமோதரம் பிள்ளை அல்லர்.

3. மழைவை மகாலிங்கய்யரின் எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பின் ஆண்டு கி. பி. 1848–தான். கி. பி. 1847 என்பதோ கி. பி. 1849 என்பதோ சரியல்ல.

4. தாண்டவராய முதலியார் தொல்காப்பியத்தை ஒருபோதும் பதிப்பிக்கவில்லை.
5. தொல்காப்பியக் களஞ்சியத்தில் சுட்டப்படும் 1835-ஆம் ஆண்டு தாண்டவராய முதலியார் பதிப்பு நன்னூல், அகப்பொருள் வெண்பாமாலைப் பதிப்புத்தான்; தொல்காப்பியம் அன்று.

திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தாண்டவராய சுவாமிகள் இதற்குச் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார். இந்நூலில் பதிப்புரை முன்னுரை ஏதும் இல்லை. பதிப்புச் செய்திகள் அனைத்தும் முகப்புப் பக்கத்தில் உள்ளன. நூற்பாவும் உரையும் ஒரே வடிவமான எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. நூற்பா அடிகள் பாடல் முறையில் இல்லாது பத்தி பத்தியாக அச்சிடப்பட்டுள்ளன. உரையில் தகுந்த நிறுத்தக் குறியீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. நூற்பாவும் உரையும் சந்தி பிரிப்பு இல்லாமலேயே அச்சிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு நூற்பாவின் உரை முடிவிலும் நூற்பா எண்களும், இயல் முடிவில் நூற்பாத்தொகை இவ்வளவு என்னும் எண்ணிக்கையும் தரப்பட்டுள்ளன. பக்க எண்கள் உட்பட எண்கள் யாவும் தமிழ் எண்களே. அதிகார இறுதியில்,

> ஆக இயல் *9*-க்குச் சூத்திரம் *483* தொல்காப்பிய வெழுத்ததிகார மூலமும் மதுரை ஆசிரியர் பரத்துவாசி நச்சினார்க்கினியரியற்றிய காண்டிகையுரையு முற்றிற்று

என்னும் குறிப்புக் காணப்படுகிறது. எழுத்ததிகாரத்தின் இயல், நூற்பாத்தொகை கூறும் வெண்பாக்கள் இரண்டும் இறுதியில் அமைந்துள்ளன. இவற்றை நோக்க இது ஏடெழுதப்பட்ட முறையிலே அச்சிடப்பட்டிருக்க வேண்டும் என்று கூறலாம். நூற்பா முதற் குறிப்பு அகராதியும் இயலடைவும் நூலின்முதற்பகுதியில் அமைந்துள்ளன. பின்வரும் மூன்று பாடவேறுபாடுகள் மட்டுமே காட்டப்பட்டுள்ளன.

ப-ம். *3* — 'இருந்து' என்பதன் பின் 'ஏடவிழென வவிழ்த்து' எனப் பாடமும் உண்டு.

ப-ம். *153* — 'வெயிலிதழ்ப் பசுங்குடை' என்றும் பாடம்

ப-ம். *197* — 'கிளையெழுத்' தென்றும் பாடம்.

1891-இல் (கர-வைகாசி), அதாவது முதன் முதலில் தொல்காப்பியப் பதிப்பு (எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரை) வெளிவந்த 43 ஆண்டுகளுக்குப் பின் சி. வை. தாமோதரம் பிள்ளை (*1832-1901*) அவ்வுரையினை அச்சிட்டு வெளியிட்டார். மழைவை மகாலிங்கையரின் பதிப்பு சென்னையில் கிடைத்த ஏடுகளைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டது எனக் கண்டு அதனைத் தமிழகத்துத் தென்பகுதியில் கிடைத்த ஏடுகளுடன் ஒப்புநோக்கிப் பதிப்பித்ததாக அதன் பதிப்புரையில் பதிப்பாசிரியர் கூறுகின்றார்.

நூற்பா பெரிய எழுத்திலும் உரை சிறிய எழுத்திலும் அமைந்துள்ளன. உரையின் விளக்கம், உதாரணம் போன்றவை தனிப் பத்திகளாக அமைக்கப் பட்டுள்ளன. நூற்பாக்களின் சந்தி, சீர் பிரித்து அச்சிடப்பட்டுள்ளது. நூற்பா முதற்குறிப்பு அகராதியும் இயலடைவும் தரப்பட்டுள்ளன. இவரது பதிப்புகளின் பதிப்புரைகள் சிறப்புடையன. ஏடுகளைக் கொண்டு இது பதிப்பிக்கப்பட்டதால் இதனையும் முதற்பதிப்பு எனல் தகும்.

1923-இல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையைத் திருகோணமலை த. கனகசுந்தரம் பிள்ளை (1852–1901) பல ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு செய்த திருத்தங்களுடன் வெளியிட்டது. இப்பதிப்புக்குக் கா. சுப்பிரமணிய பிள்ளை ஆங்கிலத்திலும் தமிழிலும் முகவுரை எழுதியுள்ளார். முந்தைய பதிப்புகளில் விடுபட்டவையும் மேற்கோள்களுக்கு விளக்கங்களும் இப்பதிப்பில் புதியதாகச் சேர்க்கப் பட்டுள்ளன எனப் பதிப்புரை கூறுகிறது. 1944-இல் வெளிவந்த கழகப் பதிப்பில் தேவநேயப் பாவாணர் அவர்களின் விளக்கக் குறிப்புகள் அடிக்குறிப்பாக அமைக்கப்பட்டுள்ளன. எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையின் மறுபதிப்புகள் 1933, 1950, 1955, 1961, 1966 ஆகிய ஆண்டுகளில் கழகத்தின் மூலம் வெளிவந்துள்ளன.

இலங்கையைச் சார்ந்த சி. கணேசையர் (1877–1958) எழுதிய உரைவிளக்கக் குறிப்புகளுடன் நா. பொன்னையா என்பவர் 1937-இல் எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையைப் பதிப்பித்தார்.

இந்நூலின் பதிப்புரையில் முந்தைய தொல்காப்பியப் பதிப்புகள் சிலவற்றைப் பற்றிய குறிப்புகள் அடங்கியுள்ளன. சி. கணேசையர் எழுதிய உரை விளக்கக் குறிப்பின் முன்னுரையும் தொல்காப்பியர் வரலாறு, நச்சினார்க்கினியர் வரலாறு ஆகிய கட்டுரைகளும் முதற் பகுதியில் அமைந்துள்ளன. உரையின் முடிவில் முந்தைய பதிப்பு களில் விளக்கப்படாத மேற்கோள்களுக்கு விளக்கம் தரப் பட்டுள்ளது. அவற்றுக்குத் தனி அட்டவணையும் தரப்பட்டுள்ளது. சி. கணேசய்யரின் ஆராய்ச்சியின் பயனாக எழுந்த உரைவிளக் கங்கள் மிகுந்த பயன் தருவன. நூற்பா முதற்குறிப்பு அகராதி, உதாரண அகராதி (உரையில் தரப்படும் உதாரணங்கள் அகர வரிசையில், உரிய நூற்பா எண்களுடன்), அரும்பத விளக்கம் (உரிய பக்க எண்களுடன்), விஷய அகராதி (பொருளடைவு) ஆகிய அகராதிகள் ஆராய்ச்சிக்குப் பயன்படும் நோக்கில் அமைக்கப் பட்டுள்ளன. கணேசையர் எழுதி வெளியிட்ட 'அளபெடை' (செந்தமிழ் 26: 7). "போலி எழுத்து" (செந்தமிழ் 22: 3) ஆகிய இரு கட்டுரைகளும் பின் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன. எழுத் ததிகார இயல் நூற்பாத் தொகை கூறும் வெண்பாக்கள் தரப் பட்டுள்ளன. இஃது எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பின் வளர்ச்சி நிலையில் குறிப்பிடத்தக்க பதிப்பாகும். இதன் இரண்டாம் பதிப்பு 1952-இல் வெளிவந்துள்ளது.

1965-இல் கு. சுந்தரமூர்த்தி (1930-) முந்தையபதிப்புகளில் சில திருத்தங்கள் செய்து எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையை வெளியிட்டார். பின்னர் அவர் 1967-இல் வெளியிட்ட இந் நூலின் மறுபதிப்பு மேலும் சில திருத்தங்களுடனும் மாற்றங்களுடனும் வெளிவந்தது.

இந்நூலுக்கு அ. சிதம்பரநாதன் அணிந்துரை எழுதியுள்ளார். பதிப்பாசிரியர் முந்தைய பதிப்புகளைப் பற்றிய செய்திகளையும் அப்பதிப்புகளில் பல திருத்தங்கள் செய்து தாம் பதிப்பித்ததையும் பதிப்புரையில் கூறுகிறார். தொல்காப்பியரது சமயம், காலம், நூலின் அமைப்பும் அழகும், உரையாசிரியர்கள், நச்சினார்க்கினியர் உரைத் திறன் ஆகிய செய்திகள் அடங்கிய ஆராய்ச்சி முன்னுரையும், 'எழுத் ததிகார விளக்கக் கட்டுரைகள்' என்னும் தலைப்பில் ஒவ்வோர் இயலிலும் கூறப்படும் கருத்துக்களை நச்சினார்க்கினியர் உரைவழி நின்று விளக்கியும் எழுதியுள்ளார். நூற்பா முதற்குறிப்பு அகராதியும், புலவர் தேர்வு வினாக்களும் பிற்பகுதியில் தரப்பட்டுள்ளன. 1965-ஆம் ஆண்டுப் பதிப்பில் நூலின் பிற்பகுதியில் அமைந்த உரைவிளக்கக் குறிப்புகள் 1967-ஆம் பதிப்பில் அவ்வந்நூற்பாக்களையடுத்தே தரப்பட்டுள்ளன.

தஞ்சை சரசுவதி மகாலில் உள்ள எழுத்ததிகார நச்சினார்க் கினியர் உரையேடுகளை ஆராய்ந்து இராம. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பட்ட நூல் 1967-இல் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடாக வந்தது.

இதன் பதிப்புரையில் முந்தைய எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்புகள் குறிப்பிடப்படுகின்றன. மழைவை மகாலிங் கையர், சி. வை. தாமோதரம் பிள்ளை, கழகம், சி. கணேசையர் ஆகியோர் பதிப்புகளில் காணப்படாத பல பாடவேறுபாடுகளும் விளக்கப் பகுதிகளும் இவ்வேடுகளில் காணப்பட்டதால் அவை முந்தைய பதிப்புகளோடும் ஒப்புநோக்கிப் பதிப்பிக்கப்பட்டதாகப் பதிப்பாளர் பதிப்புரையில் குறித்துள்ளார். முகவுரை, தொல்காப்பியர் வரலாறு, பிற்கால இலக்கண நூல்கள், உரைச்சிறப்பு இவற்றைக் கூறும் வகையில் பதிப்புரை அமைந்துள்ளது. பின்னிணைப்பில் பாயிர உரைச்சொற்றொடர்களுக்கு விளக்கமும் கணேசையர் வெளியிட்ட "அளபெடை" (செந்தமிழ் 26: 7) "போலி எழுத்து" (செந்தமிழ் 22: 3) ஆகிய இரு கட்டுரைகளும் தரப்பட்டுள்ளன. நூற்பா முதற்குறிப்பு அகராதி, எடுத்துக்காட்டு அகராதி, அருஞ் சொற்பொருள் அகராதி, நூற்பா நுவலும் பொருள் அகராதி ஆகிய அகராதிகள் அமைக்கப்பட்டுள்ளன. மொழிமுதல், ஈற்று எழுத்து களுக்கு உதாரணங்களும் நூலின் இறுதிப் பக்கத்தில் கொடுக்கப் பட்டுள்ளன.

நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பில் முதற் பதிப்புக்கும் அடுத்த பதிப்புக்கும் இடைவெளி 43 ஆண்டுகள் ஆகும். இக்

கால இடைவெளி இளம்பூரணர் உரையை நோக்கக் குறைவே. அறுவர் இவ்வுரையினைப் பதிப்பித்துள்ளனர். ஆறு மறுபதிப்பு களும் வெளிவந்துள்ளன. இளம்பூரணர் உரையினும் நச்சினார்க் கினியர் உரை மிகுதியான பதிப்புகளைக் கண்டுள்ளது. எழுத்ததி காரத்துக்கு இளம்பூரணர் உரையினும் நச்சினார்க்கினியர் உரையே மிகுதியாகப் பயிலப்படுவதும், கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்படுவதும் இதற்குக் காரணங்கள் ஆகும். தொல் காப்பியத்தின் முதல் பதிப்பாக வெளிவந்த எழுத்ததிகார நச்சினார்க் கினியர் உரைப்பதிப்பு பல நிலைகளில் வளர்ச்சி அடைந்துள்ளது. பதிப்புரை, முன்னுரை ஏதுமில்லாமலும், பத்தி பத்தியாகவும், சந்தி பிரிப்பின்றியும், நூற்பாவும் உரையும் அமைக்கப்பட்ட மகா லிங்கையர் பதிப்பினின்றும் பதிப்புரை, நூற்பா, உரைகளுக்கிடையில் எழுத்து வடிவ வேறுபாடு, சந்தி, சீர், பத்தி பிரிப்பு, ஆராய்ச்சி முன்னுரை, இயல்களுக்கு விளக்கக் கட்டுரைகள், உரை விளக் கங்கள், உரை ஒப்பு நோக்குப் பகுதிகள், பாட வேறுபாடுகள், ஆராய்ச்சிக்குப் பயன்படும் பல்வகை அகராதிகள் ஆகிய நிலை களில் பதிப்புகளின் வளர்ச்சி காணப்படுகிறது.

சொல்லதிகாரம் — உரைப்பதிப்புகள்

இளம்பூரணம்

1927-இல் கா. நமச்சிவாய முதலியார் சொல்லதிகார இளம் பூரணர் உரையை சே. சிவஞானம் பிள்ளை வழங்கிய ஏட்டுச்சுவடி கொண்டு பதிப்பித்து வெளியிட்டார். இதுவே சொல்லதிகார இளம் பூரணர் உரையின் முதற்பதிப்பு ஆகும். இளம்பூரணரின் உரைத் திறன், சேனாவரையர் உரையாசிரியரை மறுத்துக் கூறுமிடங்கள் ஆகியவற்றை முற்பகுதியில் தந்துள்ளார். நூற்பா முதற்குறிப்பு அகராதியும் முற்பகுதியிலேயே அமைத்துள்ளார். சூத்திரம் நுதலிய பொருள் (பொருளடைவு), வரலாற்றுக் கட்டுரைச் சொற்றொடர் (உரை அகராதி), வரலாற்றுச் செய்யுள் மேற்கோள் (உதாரணச் செய்யுள் அகராதி) ஆகிய அகராதிகளைப் பின்னிணைப்பாகத் தந்துள்ளார்.

சொல்லதிகார இளம்பூரணருரையின் முதல் பதிப்பு வெளி வந்த 36 ஆண்டுகளுக்குப் பின், 1963 இல் கு. சுந்தரமூர்த்தி எழுதிய விளக்கவுரைக் குறிப்புகளுடன் இவ்வுரையினைச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் அச்சிட்டு வெளியிட்டது. சுந்தரமூர்த்தியின் ஆராய்ச்சி முன்னுரையில் இளம்பூரணரின் காலம், சமயம், உரைத்திறம் ஆகிய செய்திகள் அடங்கியுள்ளன. சேனாவரையர் உரையாசிரியரது கூற்றைத் தழுவி அதனை எடுத்துக் கூறுமிடங்கள். மறுத்துக் கூறுமிடங்கள், நச்சினார்க்கினியர் உரை யாசிரியரைத் தழுவி அதனை எடுத்துக் கூறுமிடங்கள், மறுத்துக் கூறும் இடங்கள் ஆகியன தொகுத்துத் தரப்பட்டுள்ளன. விளக்க வுரை நூலின் பிற்பகுதியில் அமைந்துள்ளது. அந்தந்த நூற்பாவின் உரையைத் தொடர்ந்து அமைந்திருந்தால் கற்போர்க்கு எளிமையும்

பயனும் உடையதாய் அமையும். இதன் மறுபதிப்பு 1973-இல் வெளி வந்துள்ளது.

சொல்லதிகார இளம்பூரணருரை இருவராலேயே பதிப்பிக்கப் பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் முதற்பகுதியில்தான் (*1923*) முதல் முதல் வெளிவந்துள்ளது. இந்நூற்றாண்டிலும் கூட *36* ஆண்டுகள் கால இடைவெளியிலேயே அடுத்த பதிப்பு (*1963*, கழகம்) வந்து, அதன் ஒரே ஒரு மறுபதிப்பும் *10* ஆண்டு இடையீட்டுக்குப் பின் வெளிவந்துள்ளதை நோக்கச் சொல்லதிகாரத்துக்கு இளம்பூரணர் உரை மிகுதியும் பயிலப்படாதது தெரிகிறது. இவ்வதிகாரத்துக்கு ஏனைய அதிகாரங்களினும் அதிக உரை உள்ளதும் அவற்றுள் சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் போன்றோர் உரைகள் இளம்பூரணர் உரையினும் சிறப்பாகக் கருதப் படுவதும் இதற்குக் காரணங்கள் எனலாம்.

சேனாவரையம்

1868-இல் (விபவ — புரட்டாசி) ஆறுமுக நாவலர் (*1822–1879*) பல ஏடுகளைக் கொண்டு ஆராய்ந்த சொல்லதிகாரச் சேனாவரையருரையைச் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் பதிப்பித்து வெளியிட்டார். இதுவே சொல்லதிகாரச் சேனாவரையருரைக்கு முதன்முதலில் வந்த பதிப்பு.

இந்நூலில் பதிப்புரை, முன்னுரை ஆகியன இல்லை. நூற்பா பெரிய எழுத்திலும், உரை சிறிய எழுத்திலும் எளிதில் வேறு பிரித்தறியுமாறு அச்சிடப்பட்டுள்ளது. நூற்பா சந்தி பிரிப்பின்றி அமைக்கப் பட்டுள்ளது. ஆனால் சீருக்குச் சீர் இடைவெளி விடப்பட்டுள்ளது. பதவுரை முன்னும் தெளிவுரை பின்னும் பத்தி பிரித்து அமைக்கப் பட்டுள்ளன. நூற்பாத் தொடக்கத்தில் அதிகாரத் தொடர் எண்ணும் உரை முடிவில் இயலின் வரிசை எண்ணும் இடப்பட்டுள்ளன. இடையியல், உரியியல் ஆகியவற்றின் பெயர்கள் இடைச் சொல்லியல், உரிச் சொல்லியல் என உள்ளன. அடிக்குறிப்பில் சிவஞான முனிவர் உரை, நன்னூல் விருத்தியுரை, நச்சினார்க்கினியர் உரை ஆகியவற்றின் பகுதிகள் சில ஒப்புடைய இடங்களில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளன. நூற்பா முதற்குறிப்பு அகராதியும், இயலடைவும் நூலின் இறுதியில் அமைந்துள்ளன. *1886*–ஆம் ஆண்டு வெளிவந்த இதன் மறுபதிப்பில் நூற்பாக்கள் பாடல் முறையிலும், உரை பொருண்மை கருதிப் பத்தி பத்தியாகப் பிரிக்கப்பட்டும் பதிப்பிக்கப் பட்டன. இதன் மறுபதிப்பு *1934*–ஆம் ஆண்டில் வெளிவந்தது.

சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் சேனாவரையப் பதிப்பு வெளியான அதே ஆண்டில் (*1868*) இரண்டு மாதங்களுக்குப் பின் (விபவ — கார்த்திகை) கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளையால் ஆராயப்பட்டுப் பூ. கந்தசாமி முதலியாரால் சேனாவரையம் பதிப்பிக்கப்பட்டது. இதுவும் சேனாவரையருரைப் பதிப்பின் முதற் பதிப்பு எனக் கொள்ளத் தக்கது.

இப்பதிப்பிலும் முன்னுரை, பதிப்புரை ஆகியன இல்லை. நூற்பாவும் உரையும் வேறுபட்ட அச்சில் அமைந்துள்ளன. நூற்பா, அடி வேறுபாடின்றி ஒரே பத்தியாக அச்சிடப்பட்டுள்ளது. உரையும் பத்தியாக அமைந்துள்ளது. நூற்பாத் தொடக்கத்தில் அதிகாரத் தொடர் எண்ணும் உரை முடிவில் இயலின் தொடர் எண்ணும் தரப்பட்டுள்ளன. கிளவியாக்கத்தில் மட்டும் இயலின் தொடர் எண் இல்லை.

ஒரே ஆண்டில் வெளிவந்த சேனாவரையருரைப் பதிப்பில் நூற்பாத் தொகையில் வேறுபாடு காணப்படுகிறது (தாமோதரம் பிள்ளை பதிப்பில் 463, இராசகோபாலப்பிள்ளை பதிப்பில் 429). சேனாவரையர் உரை எழுதியுள்ள முறையில் சூத்திர அமைப்பை இராசகோபாலப் பிள்ளை பின்பற்றியுள்ளார். சொல்லதிகாரத்தில் 463 நூற்பாக் கொண்டவர் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியரின் அமைப்பை ஒட்டியே சி. வை. தாமோதரம் பிள்ளை தம் பதிப்பில் சூத்திரப் பாகுபாடு கொண்டு, உரைப்பகுதியைச் சேனாவரையர் முறையில் அமைத்துள்ளார். பின்வந்த சேனாவரையருரைப் பதிப்பாளர்களும் சி. வை. தாமோதரம் பிள்ளை கொண்டுள்ள வகையிலேயே சூத்திரமும் உரையும் அமைத்துக் கொண்டனர் எனலாம்.[11]

சேனாவரையருரைப் பதிப்புகள் பற்றிய இன்னொரு செய்தியும் இங்குக் குறிப்பிட வேண்டுவது இன்றியமையாதது. ஒரே ஆண்டில் இரண்டு மாத இடைவெளியில் இப்பதிப்புகள் வெளிவந்ததால் சில குழப்பங்கள் நேர்ந்தன. இராசகோபாலப் பிள்ளை சேனாவரையத்தைப் பதிப்பிக்கவே இல்லை என்றும், அப்படி இருப்பினும் அது தாமோதரம் பிள்ளையின் பதிப்பில் சில தாள்கள் மட்டும் வேறுபட்டுத் தோன்றும் புதிய பதிப்பாகலாம் என்றும் சி. கணபதிபிள்ளை எழுதினார்.[12] அக்கருத்தினை மறுத்து இரண்டும் வெவ்வேறு பதிப்புகளே என்று இதுவரை யாரும் எழுதியதாகத் தெரியவில்லை. இரண்டு பதிப்புகளையும் உடன் வைத்து ஒப்பிட்டபோது இரண்டும் இருவேறு பதிப்புகளே என்பது உணரப்பட்டது. மேலும் இருவரும் நூற்பா அமைப்பில் கொண்டுள்ள வேறுபாடுகளே இரண்டும் வெவ்வேறு பதிப்புகள் என்னும் உண்மையை உணர்த்துவதற்குப் போதிய சான்றுகளாகும்.

1923-இல் கந்தசாமியார் அவர்களது குறிப்புரையுடன் சேனாவரையருரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. பின் வெளிவந்த பதிப்பில் தேவநேயப் பாவாணர் செய்த திருத்தங்களும் குறிப்புரையும் சேர்த்து வெளியிடப்பட்டது. அடுத்து வந்துள்ள பதிப்புகளில் ஆ. பூவராகப் பிள்ளை எழுதிய விளக்கவுரை பிற்பகுதியில் சேர்க்கப்பட்டது. சொல்லதிகாரச் சேனாவரையர் உரை கழகத்தின் வாயிலாக 1946, 1952, 1956, 1959, 1962, 1966, 1970, 1974 ஆகிய ஆண்டுகளில் மறுபதிப்புகளாக வெளிவந்துள்ளது.

1938-இல் சி. கணேசையர் எழுதிய உரை விளக்கக் குறிப்புகளுடன் சேனாவரையருரையை நா. பொன்னையா வெளியிட்டார்.

இப்பதிப்பில் நூற்பா அகராதி, உதாரண அகராதி, விஷய அகராதி (பொருளடைவு) அரும்பத விளக்கம் ஆகிய அகராதிகள் அமைக்கப் பட்டுள்ளன. கணேசையர் எழுதிச் செந்தமிழில் வெளியான ஐந்து இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் பின்னிணைப்பாகத் தரப் பட்டுள்ளன.[13] இதன் இரண்டாம் பதிப்பு 1955-இல் வெளி வந்துள்ளது. இப்பதிப்பில் 'பொருட்புடைபெயர்ச்சி' என்னும் கட்டுரை சேர்க்கப்பட்டது.[13]அ

1966-இல் கு. சுந்தரமூர்த்தி சேனாவரையர் உரையை வெளி யிட்டுள்ளார். இப்பதிப்புக்கு விரிவான பதிப்புரை எழுதியுள்ளார். பதிப்புரையில் தாம் எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையினை வெளியிட்டது பற்றியும், முன்னர் வந்த சொல்லதிகாரச் சேனாவரை யர் உரைப்பதிப்புகள் (இராசகோபாலப்பிள்ளை — *1868*, சி. வை. தாமோதரம் பிள்ளை — *1886*, கழகம் — *1923*, சி. கணேசையர் — *1938*) பற்றியும் குறிப்பிடுகிறார். சி. வை. தாமோதரம் பிள்ளையின் சேனாவரையர் உரைப்பதிப்பில் இவர் இரண்டாவது பதிப்பினையே குறிப்பிடுகிறார். முதல் பதிப்பு (*1868*) இவருக்குக் கிடைக்கவில்லை என்று தெரிகிறது. அதனால் இராசகோபாலப் பிள்ளையின் பதிப்பே முதலில் ஏட்டிலிருந்து அச்சுக்கு வந்தது என்று கருதி எழுதியுள்ளார்.

மேலே கூறிய முந்தைய பதிப்புகளை ஒப்புநோக்கித் திருத் தங்கள் செய்து வெளியிட்டமை பற்றியும் பதிப்புரையில் குறிப்பிடு கிறார். முந்தைய பதிப்புகளிலிருந்து தம் பதிப்பு எவ்வாறு செம்மை யுற அமைந்தது என்பது பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

> சில இடங்களில் பொருள் விளக்கத்தோடு எடுத்துக் காட்டும் சேர்ந்திருந்தன. சில இடங்களில் பொருள் விளக்கங்கள் முன் பின்னாக மாறிக் கிடந்தன. இன்னும் சில இடங்களில் பொரு ளுணர்ச்சி கருதாது பாராக்கள் பிரிக்கப்பட்டும், பாரா பிரிக்கப் பட வேண்டிய இடங்கள் சேர்க்கப்பட்டும் இருந்தன. இன்னும் சில இடங்களில் சில தொடர்கள், சொற்கள் விடுபட்டும் சேர்க் கப்பட்டும் இருந்தன. இவ்வயனைத்தும் இப்பதிப்பில் திருத்தம் பெற்றுள்ளன.

பதிப்புரையை அடுத்து ஆராய்ச்சி முன்னுரை அமைந்துள்ளது. இதனுள் தொல்காப்பியத்தின் சிறப்பும் பகுப்பும், சேனாவரையரின் உரைத்திறன் ஆகியவை ஆராயப்படுகின்றன. அடுத்துச் சொல்லதி காரத்தின் ஒவ்வோர் இயல்களுக்கும் விளக்கக் கட்டுரைகள் அமைந் துள்ளன. நூற்பா, உரை ஆகியவற்றில் காணப்படும் பாட வேறு பாடுகளும், சில சொற்களுக்குப் பொருளும் அடிக்குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. சேனாவரையர் உரையைப் பிறர் உரை களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து விளக்கவுரையும் எழுதியுள்ளார். இது நூலின் பிற்பகுதியில் நூற்பா முதற்குறிப்பு அகராதியைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. நூலின் இறுதியில் சென்னை, அண்ணா மலைப் பல்கலைக்கழக வினாக்கள் மாணவர்கள் பயனுறும்

வண்ணம் கொடுக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர்க்கும் மாணவர்க்கும் பயன்படத்தக்க வகையில் அமைந்துள்ளது இப்பதிப்பு. இதன் மறு பதிப்பு 1969, 1972 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளது.

1970-இல் கு. மா. திருநாவுக்கரசு சேனாவரையருரைக்குத் 'தொல் காப்பிய வழிகாட்டி' என்னும் ஒரு நூலினை வெளியிட்டார். இதனுள் சொல்லதிகார மூலமும் சேனாவரையர் உரையும் பதிப் பாசிரியரின் விளக்கத்துடனும் அமைந்துள்ளது. இந்நூலுக்கு க. ஆறுமுகனார் மதிப்புரையும், சி. இலக்குவனார் அணிந்துரை யும் வழங்கியுள்ளனர். தொல்காப்பியத்தின் பழைமை, பெருமை, நூலமைப்பின் சிறப்பு, சேனாவரையரின் வரலாறு, உரைத்திறன் ஆகிய பொருள் பற்றிய கட்டுரைகள் நூலின் முற்பகுதியில் உள்ளன. உரை விளக்கம் பல குறுந்தலைப்புகளுடன் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. பின்னிணைப் பாகப் பல்கலைக்கழக வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ''தாமே பயின்று தமிழ்ப் புலவராக விழைவோர்க்கு இந்நூல் தக்க துணை யாகும்'' என இதன் பதிப்பாசிரியர் கூறுவது பொருத்தமே.

சேனாவரையர் உரை பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே இரு வரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. அந்த நூற்றாண்டிலேயே (1886) அடுத்த பதிப்பும் வெளிவந்து விட்டது. இன்றுவரை ஆறு பதிப் பாளர்கள் பதிப்பித்துள்ளனர். ஒரு பதிப்புக்கும் அடுத்த பதிப்புக்கும் இடையேயுள்ள கால இடைவெளியும் குறுகியதே (1868, 1886, 1923. 1934 ...). இவ்வுரைக்கு 13 மறுபதிப்புகள் வெளிவந்துள்ளன. இவற்றை நோக்கும்போது சேனாவரையருரைப் பதிப்பு வழக்கில் அதிகமாக உள்ளது தெரிய வருகிறது.

நச்சினார்க்கினியம்

1892-இல் சொல்லதிகார நச்சினார்க்கினியருரையைச் சி. வை. தாமோதரம் பிள்ளை வெளியிட்டார். இதுவே சொல்லதிகார நச்சி னார்க்கினியருரையின் முதல் பதிப்பு. ''படிப்பாரும் எழுதுவாரும் இன்றிப் பாணவாய்ப்பட்டும் தேடுவாரும் தொடுவாரும் இன்றிச் செல்லுக்கு இரையாகியும் காலாந்திரத்தில் ஒன்றொன்றாய் அழிந்து போம் பழைய தமிழ் நூல்களை இயன்ற மட்டும் அச்சிட்டு நிறுத்தத் தொடங்கிய''[14] தாக இவர்தம் பதிப்புரையில் கூறியுள்ள கூற்று முழு வதும் ஏற்கத்தக்கது. அவராலேயே தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் நச்சினார்க்கினியர் உரைகள் அழிந்துபோகாது கிடைத்தன. இப்பதிப்பும் இவரது எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பின் அமைப்பிலேயே பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்து ஐம்பதாண்டுகளுக்குப் பின் 1941-இல் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (1896 —) அவர்கள் பல ஏட்டுச்சுவடிகளைக் கொண்டு ஆராய்ந்து பவானந்தர் கழகத்தின்வழி சேனாவரையருரையினை வெளியிட்டார்.

முந்தைய பதிப்பில் கண்ட பிழைகளைக் களைந்து உரையில் வரும் மேற்கோள்களுக்குரிய ஆதாரங்களையும் பாட வேறுபாடு களையும் கொடுத்துள்ளார் பதிப்பாசிரியர். நூற்பாவின் கடின சந்தி களைப் பிரித்தமைத்து ஏற்ற நிறுத்தக் குறிகளையும் கொடுத் துள்ளார். நூற்பா முதற்குறிப்பு அகராதியுடன், அரும்பதம் முதலிய வற்றின் அகராதியும், விஷய அகராதியும், மேற்கோள் அகராதியும் பின்பகுதியில் தரப்பட்டுள்ளன.

1952-இல் கு. சுந்தரமூர்த்தி எழுதிய விளக்கவுரையுடன் சொல் லதிகார நச்சினார்க்கினியத்தைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டது. முற்பகுதியில் நச்சினார்க்கினியர் உரைத் திறன் என்னும் ஆய்வுக் கட்டுரையும் நச்சினார்க்கினியருரைக்கு எழுதிய விளக்கவுரை நூலின் இறுதியிலும் அமைந்துள்ளன. இவ் விளக்கவுரை அவ்வந்நூற்பாவின் பின் கொடுக்கப்பட்டிருப்பின் கற் போர்க்கு எளிமையும் பயனும் நல்கும். இதன் மறுபதிப்பு 1974-இல் வெளி வந்துள்ளது.

1962-இல் தஞ்சைச் சரசுவதி மகாலின் ஏட்டுச்சுவடிகளுடன் பல ஏட்டுச்சுவடிகளைக் கொண்டு பரிசோதித்து இராம. கோவிந்தசாமிப் பிள்ளை எழுதிய குறிப்புகளுடன் நச்சினார்க்கினியருரை சரசுவதி மகால் வெளியீடாக வெளிவந்தது. இதுவரை வந்த அச்சுப்பதிப்பு களில் காணப்படாத பாடவேறுபாடுகளும் உரைப்பகுதிகளும் இதன்கண் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். நூற்பா முதற்குறிப்பகராதி, பொருளகராதி, அருஞ்சொல் முதலிய வற்றின் அகராதி, மேற்கோள் அகராதி, மேற்கோள் நூல்களின் முதற் குறிப்பகராதி ஆகிய அகராதிகள் நூலினிறுதியில் கொடுக்கப் பட்டுள்ளன.

சொல்லதிகார நச்சினார்க்கினியர் உரையை நால்வர் பதிப்பித் துள்ளனர். 2 மறுபதிப்புகள் வெளிவந்துள்ளன. சேனாவரையர் உரையிலும் குறைவாகவும் இளம்பூரணர் உரையிலும் அதிகமாகவும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

கல்லாடர் உரை

சொல்லதிகாரத்தின் கல்லாடர் உரையும், ஆசிரியர் பெயர் தெரி யாத பழைய உரையும் கு. சுந்தரமூர்த்தியின் விளக்கவுரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் 1964-இல் வெளியிடப் பட்டது. கல்லாடர் உரை இடையியலின் 10-வது நூற்பா வரை 260 நூற்பாக்களுக்கே உள்ளது. பழைய உரை வேற்றுமை மயங்கியல் 33-ஆவது நூற்பா வரை 117 நூற்பாக்களுக்கு மட்டுமே உள்ளது. இவ்விரு உரைகளும் முதன்முதலில் வி. ஐ. சுப்பிரமணியம், ஆபிரகாம் அருளப்பன் ஆகியோரால் 1963-இல் வெளியிடப்பட்ட சொல்லதிகார உரைக் கோவையில் அச்சாயின. ஆயினும் அது விளிமரபு வரை நான்கு இயல்களுக்கே அமைந்த முதற்பகுதியாகும். இரண்டாவது பகுதி வெளிவரவில்லை.

பதிப்பாசிரியர் ஆராய்ச்சி முன்னுரையில் கல்லாடர் வரலாறு, உரைத்திறன் ஆகியவற்றைப் பற்றிய செய்திகளைத் தந்துள்ளார். பதிப்பாசிரியரின் உரை விளக்கம் பின்பகுதியில் அமைந்துள்ளது. இவ்விளக்கங்கள் அந்தந்த நூற்பாக்களின் உரையைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டிருப்பின் மிகுந்த பயனுடையதாக விளங்கும். கல்லாடர் உரையும் பழைய உரையும் தனித்தனிப் பகுதியாக அமைக்கப்பட்டு அவ்வப்பகுதியின் பின்னும் நூற்பா முதற்குறிப்பு அகராதி தரப்பட்டுள்ளன. பின்னர்க் கிடைத்த ஏடுகளினால் எய்திய திருத்தங்கள் பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன.

தெ. பொ மீனாட்சிசுந்தரனார் பதிப்பித்த கல்லாடர் உரையும் பழைய உரையும் சென்னை கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தால் 1971-இல் வெளியிடப்பட்டது. கழகப் பதிப்பில் பழைய உரை எனப்படுவது இப்பதிப்பில் வேறு உரை என வழங்கப்படுகிறது. இப்பதிப்பைக் கழகப் பதிப்புக்கு முன்னரே அச்சிடத் தொடங்கியதால் இதுவும் கல்லாடர் உரையின் முதற்பதிப்பு என்று கொள்ளத்தக்கது. சென்னை அரசினர் சுவடி நூலகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மதுரைத் தமிழ்ச்சங்கம், உ. வே. சாமிநாதையர் நூலகம் ஆகிய இடங்களிலிருந்து பெற்ற சுவடிகளும் கா. நமச்சிவாய முதலியாரின் சுவடியைக் கொண்டு வே. வேங்கடராஜுலு ரெட்டியார் எழுதிய கையெழுத்துப் படியும் ஒப்பு நோக்கப்பட்டு இப்பதிப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. பதிப்பாசிரியரின் விரிவான ஆராய்ச்சி முன்னுரை, தொல்காப்பிய ஆராய்ச்சி வரலாறு, பாடவேறுபாடு கொண்ட முறை, கல்லாடர் காலம், உரையொப்புமைப் பகுதிகள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகிறது. நூற்பா முதற்குறிப்பகராதி, நூற்பா எண்ணிக்கையில் உரையாசிரியர்கள் வேறுபாடு, சொல்லகராதி, அருஞ்சொல் அகரவரிசை ஆகிய உறுப்புகளும் அடங்கியுள்ளன. பதிப்பாசிரியர் பாடவேறுபாடு கொண்ட முறை பற்றி முன்னுரையில் தரும் செய்திகள் மூல பாட ஆய்வில் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த நெறிமுறைகளாகும்.

கல்லாடர் உரையும் பழைய உரையும் இருவர் பதிப்புகளையே கண்டது. வி. ஐ. சுப்பிரமணியம், ஆபிரகாம் அருளப்பன் ஆகியோர் வெளியிட்ட உரைக்கோவையில் ஒரு பகுதி வெளிவந்தது. இருப்பினும் சிறந்த பதிப்பாசிரியரால் பதிப்பிக்கப்பட்டதால் கல்லாடர் உரைப்பதிப்புகள் நல்ல பதிப்புகளாக உள்ளன.

தெய்வச்சிலையார் உரை

தெய்வச்சிலையார் உரை ஆர். வேங்கடாசலம் பிள்ளையால் (1888-1963) ஆராய்ந்து பதிப்பிக்கப்பட்டுக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தால் 1929-இல் வெளியிடப்பட்டது. இதுவே தெய்வச்சிலையார் உரையின் முதல் பதிப்பு. ஏட்டுச்சுவடியில் காணப்பட்ட 'ஆத்திரேய கோத்' என்னும் தொடரைக் கொண்டு இது பேராசிரியர் உரை எனப் பிறழ உணரப்பட்டு அச்சிடப்பட்டது.[16] பின்னர் உ. வே. சாமி

நாதையர் தந்த ஏட்டுச்சுவடியைக் கொண்டே தெய்வச்சிலையார் உரை என்னும் உண்மை தெரியவந்தது. ஆனால் இதன் பதிப்புரையில் "முதலில் இந்நூலிற்குப் பேராசிரியர் உரை எனும் பெயர் தந்திடப் பெற்றது. அங்ஙனமே நூலைப்பற்றிய விளம்பரங்களும் செய்யப்பட்டன" என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் உரை என அச்சிடப் பெற்று வெளிவந்து விட்டது என்னும் செய்தி பதிப்பாசிரியராலேயே தமிழ்ப்பொழிலில் எழுதப்பட்ட கட்டுரையின்மூலம் தெரிகிறது. இச்செய்தியைத் "தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரும் தெய்வச்சிலையாரும்" என்னும் தலைப்பில் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை எழுதிய கட்டுரையும் மெய்ப்பிக்கிறது.[17] ஆகவே அச்சிட்டு வெளியிடப்பட்டபின் தலைப்புப் பக்கம், பிற்பகுதியில் காணப்படும் திருத்தங்கள் ஆகியன இணைக்கப்பட்டிருக்க வேண்டும் எனலாம். சரசுவதி மகால் நூலகத்திலிருந்தும் வா. கோபாலரகுநாத ராசாளியாரிடமிருந்தும் ஏடு பெற்றதையும் அதனை மாற்றம் சேர்க்கை ஏதுமின்றித்தான் வெளியிட்டதையும் பதிப்புரையில் குறித்துள்ளார். இரண்டாவது ஏட்டினால் எய்திய திருத்தங்கள், இரண்டாவது ஏட்டிற்கண்ட பாட வேறுபாடுகள், அச்சுப்பதிப்பின் மேற்கோள் விளக்கங்கள், பிழை திருத்தம் ஆகியன பிற்சேர்க்கையாகத் தரப்பட்டுள்ளன.

தெய்வச்சிலையார் உரையினைக் கு. சுந்தரமூர்த்தியின் ஆராய்ச்சி முன்னுரை, விளக்கவுரை ஆகியவற்றுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1963-இல் வெளியிட்டுள்ளது. தெய்வச்சிலையாரின் இலக்கியப் புலமை, வடமொழிப் புலமை, உரை நலம், நூற்பா வைப்பு முறையில் வேறுபாடு ஆகிய செய்திகளைக் கொண்டதாக ஆராய்ச்சி முன்னுரை விளங்குகிறது. நூற்பாக்களின் பொருளுக்கேற்ற தலைப்புகள் இடப்பட்டுள்ளன. பாட வேறுபாடு, இலக்கிய மேற்கோள்களின் இடம் ஆகியன அடிக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளன. ஒப்பு நோக்க வேறு ஏட்டுச்சுவடிகள் இல்லாமையால் கரந்தைத் தமிழ்ச்சங்கப் பதிப்பே மூலமாகக் கொள்ளப்பட்டுள்ளது. கரந்தைத் தமிழ்ச்சங்கப் பதிப்பில் பிற்சேர்க்கையாகக் கொடுக்கப்பட்டவை (இரண்டாவது ஏட்டால் கிடைத்த திருத்தங்கள், பாட வேறுபாடுகள், மேற்கோள் விளக்கம்) உரையில் ஆங்காங்கு சேர்க்கப்பட்டுள்ளன. ஏனைய உரையாசிரியர்களின் உரைகளோடு ஒப்புநோக்கி விளக்கவுரையும் பதிப்பாசிரியரால் எழுதப்பட்டுள்ளது.

தெய்வச்சிலையார் உரை முதற்பதிப்பு கரந்தைத் தமிழ்ச்சங்க வெளியீடாக வந்தபின் 43 ஆண்டுகள் கழித்தே இப்பதிப்பு வெளிவந்துள்ளது. தொடரியலுக்கு முக்கியத்துவம் தரும் தெய்வச்சிலையாரின் உரைச் சிறப்பு மொழியியல் ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. இதனால் இனி தெய்வச்சிலையார் உரைப் பதிப்புகள் அதிகமாக வெளிவரக் கூடும்.

பொருளதிகாரம் — உரைப்பதிப்புகள்

இளம்பூரணம்

அகத்திணையியல், புறத்திணையியல்

1920-ஆம் ஆண்டு அகத்திணையியல், புறத்திணையியல்களை இளம்பூரணர் உரையுடன் கா. நமச்சிவாய முதலியார் தி. த. கனக சுந்தரம் பிள்ளை உதவியுடன் வெளியிட்டார். கா. நமச்சிவாய முதலியார் அநவரத விநாயகம் பிள்ளையிடமிருந்தும், சே. சிவஞானம் பிள்ளையிடமிருந்தும் ஏடுகளைப் பெற்றார். கனகசுந்தரம் பிள்ளையின் ஏடு அநவரத விநாயகம் பிள்ளை தந்தது. சிவஞானம் பிள்ளை தந்தது சொர்ணம் பிள்ளையின் ஏடு. சொர்ணம் பிள்ளை வையாபுரிப் பிள்ளை (1891 — 1966) யிடமிருந்து பெற்ற ஏடு கனகசுந்தரம் பிள்ளையினுடையது. ஆக பொருளதிகார ஏட்டுப்படி ஒன்றே என்பது பின்னர் விளக்கப் பெறும்.[18]

இப்பதிப்பில் நூற்பா, உரை, மேற்கோள் செய்யுட்கள் ஆகியன வேறுபடுத்தி அறியத்தக்க வகையில் வேறுவேறு வடிவ அச்சில் அமைந்துள்ளன. பாட வேறுபாடு அடிக்குறிப்பாகத் தரப் பட்டுள்ளது. நூற்பா முதற்குறிப்பு அகராதி முதலிலும் மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு அகராதி இறுதியிலும் அமைந்துள்ளன.

1921-இல் பொருளதிகாரத்தின் அகத்திணையியல், புறத்திணை யியல் இரண்டினையும் இளம்பூரணருரையுடன் வ. உ. சிதம்பரம் பிள்ளை அச்சிட்டு வெளிப்படுத்தினார். பின்னர் ஏனைய இயல் களை எஸ். வையாபுரிப் பிள்ளையின் உதவியுடன் ஆராய்ந்து 1933-இல் களவியல், கற்பியல், பொருளியல் எனும் மூன்றினையும் ஒரு தொகுதியாகவும், 1936-இல் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கினையும் ஒரு தொகுதியாகவும் வெளியிட்டார்.

தொல்காப்பியத்தின் பழைய உரைகள் கடின நடையினவா யிருத்தல் கண்டு அதற்கு எளிமையாக ஒருரை எழுத வ. உ. சிதம்பரம் பிள்ளை முயன்றார். பின்னரே இளம்பூரணருரையிருப்பதை அறிந்து அதன் எளிமையை உணர்ந்து அச்சில் பதிக்கும் முயற்சியை மேற் கொண்டார். பொருளதிகார இளம்பூரணர் உரையேடுகளை எஸ். வையாபுரிப் பிள்ளை, தி. நா. சுப்பிரமணிய ஐயர், த. மு. சொர்ணம் பிள்ளை ஆகியோரிடமிருந்து பெற்றார். தமிழகம் முழுவதிற்கும் பொருளதிகார இளம்பூரணருரையேடு ஒன்றேயாகும். இது திருக் கோணமலை த. கனகசுந்தரம் பிள்ளையினுடையது. அதனைப் பார்த்து எழுதிய கையெழுத்துப் பிரதி எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களுடையது. வையாபுரிப் பிள்ளையிடமிருந்து இரவலாகப் பெற்ற த. மு. சொர்ணம் பிள்ளை அதனைப் படி எடுக்கும்போது கூட்டியும், குறைத்தும், சிதைத்தும் தம் மனம்போனபடி மாற்றங்

களைச் செய்தார். இவை யாவும் பின்னர் வையாபுரிப்பிள்ளை அவர்களால் ஆராய்ந்து செப்பம் செய்யப்பட்டன. வ. உ. சி. அவர்களின் பதிப்புரையிலிருந்து அறியலாகும் செய்திகள் இவை. இளம்பூரணருரை சில நூற்பாக்களுக்குக் கிட்டவில்லை. அந்நூற்பாக்களுக்கு நச்சினார்க்கினியர் உரையைத் தழுவி உரையெழுதிச் சேர்த்துள்ளார். அதனை வேறுபடுத்தி அறியப் பகர அடைப்புகளுக்குள் தந்துள்ளார். பின்னர் வெளியிட்ட பதிப்பாளர்கள் இவற்றை நீக்கி விட்டனர். நூற்பா பெரிய எழுத்திலும், உரை சிறிய எழுத்திலும் அமைந்துள்ளன. அடிக்குறிப்பில் பாடவேறுபாடுகளும் அமைந்துள்ளன. நூற்பா முதற்குறிப்பகராதி முதலிலும், மேற்கோள் அகராதியும் பிழை திருத்தமும் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

வ. உ. சிதம்பரம் பிள்ளை 1939-இல் பொருளதிகாரம் முழுதும் அடங்கிய தொகுதியை வெளியிட்டார். இறுதி ஏழு இயல்களுக்கும் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களின் உதவியை நன்றியுடன் குறிப்பிட்டுள்ளார்.[19] அகத்திணையியல் புறத்திணையியல் இளம்பூரணர் உரையின் மறுபதிப்பு 1954-இல் வெளிவந்துள்ளது.

இளம்பூரணம் முழுவதும்

பொருளதிகாரம் முழுவதையும் இளம்பூரணர் உரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1953-இல் வெளியிட்டது. கழகப் புலவர் செ. ரெ. இராமசாமி எழுதிய முன்னுரையும் இறுதியில் நூற்பா முதற்குறிப்பு, மேற்கோள் செய்யுள் முதற்குறிப்பு ஆகிய அகராதிகளும் அடங்கியுள்ளன. இதன் மறுபதிப்பு 1956, 1969 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளது.

நச்சினார்க்கினியம்

1868-இல் தொல்காப்பியப் பதிப்புமுயற்சியைத் தொடங்கிய சி. வை. தாமோதரம் பிள்ளை 1885-இல் பொருளதிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையுடன் அச்சிட்டு வெளிப்படுத்தினார். அது முழுவதும் நச்சினார்க்கினியர் உரை என்றே சி. வை. தாமோதரம் பிள்ளை நம்பினார். இதன் மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் உரைகள் நச்சினார்க்கினியருடையதல்ல; பேராசிரியருடையது என்னும் உண்மையினை ஆராய்ந்து ரா. ராகவையங்கார் 'செந்தமிழ்' இதழில் எழுதிய கட்டுரைகளின் மூலம் உணர்த்தினார்.[20]

இப்பதிப்பில் நூற்பா சீர் பிரிப்புடன் பெரிய எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளது. உரை அதனினும் சிறிய எழுத்தில் பதவுரை, கருத்துரை, தெளிவுரை என விளங்குமாறு தனித்தனிப் பத்தியாக அமைக்கப்பட்டுள்ளது. நூற்பா முதலில் அதிகாரத்தின் தொடர்வரிசை எண்ணும், உரை முடியுமிடத்து இயல்முறை வரிசை எண்ணும் இடப்பட்டுள்ளன. மேற்கோள் செய்யுட்கள் பாடல் நெறியில் இல்லாது பத்தியாக அச்சிடப்பட்டுள்ளன. அடி முடியுமிடத்துச் சிறு

கோடிட்டுக் (—) காட்டப்பட்டுள்ளது. இடச்சுருக்கம் கருதி இவ்வாறு அமைத்தார் எனலாம். நூற்பா முதற்குறிப்பு அகராதி நூலின் முதற்பகுதியில் அமைந்துள்ளது. நூலின் இறுதியில்,

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியனடி
பல்காற் பரவுது மெழுத்தொடு
சொல்கா மருபொருட் டொகைதிகழ் பொருட்டே

என்னும் பழம்பாடல் அமைந்துள்ளது.

சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்புகளின் சிறப்பியல்புகள் அவரது பதிப்புரைகளாகும். அவரது பதிப்புரையில் அவர் தொல் காப்பியக் கல்வி அருகிப் பிற்கால இலக்கணப் பயிற்சி மிகுந்தமை, தொல்காப்பியங்கற்க விரும்புவோருக்கும் அது கிட்டாமை, தொல் காப்பியரைப் பற்றிய பழமரபுக்கதை, காலம், வரலாறு, தொல் காப்பிய உரைகள், தாம் பதிப்பிக்கக் கொண்ட முயற்சி, அதில் ஏற் பட்ட துன்பங்கள் ஆகியன பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சி. வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்புரைகள் 'தாமோதரம்' என்னும் பெயரில் தனிநூலாக வெளிவந்துள்ளது.[21]

1916–இல் பவானந்தம் பிள்ளை அகத்திணையியல் புறத்திணை யியல் இரண்டினையும் ஒரு தொகுதியாகவும், களவியல், கற்பியல், பொருளியல் மூன்றினையும் ஒரு தொகுதியாகவும் வெளியிட்டார். இதன் இரண்டாம் தொகுதி மீண்டும் *1917*–இலும் வெளிவந்துள்ளது.

முந்தைய பதிப்பினும் பவானந்தம் பிள்ளையின் பதிப்புகள் திருத்தங்கள் பெற்றன. நூற்பாவும் உரையும் வேறுவேறு அச்சுகளில் அமைந்துள்ளன. உரை பத்தி பிரித்து அமைக்கப்பட்டுள்ளது. நூற் பாத் தொடக்கத்தில் அதிகாரத் தொடர் எண்ணும், உரைமுடிவில் இயல் வரிசை எண்ணும் உள்ளன. மேற்கோள் செய்யுட்கள் பாடல் முறையில் அச்சிடப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய இலக்கியங்களைக் கண்டறிந்து எண்ணுடன் தரப்பட்டுள்ளன. அடிக்குறிப்பில் பாட வேறுபாடுகளும் உரைவிளக்கக் குறிப்பும் தரப்பட்டுள்ளன.

இவர் சொல்லதிகாரச் சேனாவரையர் உரையை அச்சிட முயன்று வந்தார். சேனாவரையரினின்றும் பிற உரையாசிரியர்கள் மாறுபடுமிடங்கள், சிவஞான முனிவரின் மறுப்புரை, எல்லா உரை களையும் ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சிக் குறிப்புகள் ஆகியன அடங்கிய நூலாக இதனை ஆக்கத் திட்டமிட்டிருந்தார்.[22] எனினும், இந்நூல் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

1934–ஆம் ஆண்டில் பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையை எஸ். கனகசபாபதிப் பிள்ளை வெளியிட்டார். இப்பதிப்பு பல ஏடு களைக் கொண்டு எஸ். வையாபுரிப் பிள்ளையால் ஆராய்ந்து அமைக்கப்பட்டது. இதில் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை எழுதிய ஆராய்ச்சிக் குறிப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. முந்தைய இருபதிப்பு

களிலும் விளக்கப்படாத மேற்கோள் விளக்கங்களும் திருத்தங்களும் இதில் அமைந்துள்ளதாகப் பதிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

1947-இல் அகத்திணையியல், புறத்திணையியல்களை ஒரு தொகுதியாகவும், 1950-இல் களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய இயல்களை ஒரு தொகுதியாகவும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது.

1948-இல் யாழ்ப்பாணம் சி. கணேசையரின் உரை விளக்கக் குறிப்புடன் கூடிய பதிப்பினை ஈழகேசரி அதிபர் நா. பொன்னையா வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு பரமேஸ்வரக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் நவநீதகிருஷ்ண பாரதி (1889-1952) அணிந்துரை எழுதியுள்ளார். முந்தைய தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிய செய்திகளும் கணேசையரின் தொல்காப்பியப் பதிப்புகள் பற்றியும் இவர் குறிப்பிட்டுள்ளது தொல்காப்பியப் பதிப்புகளின் வரலாற்றை அறியத் துணைசெய்கிறது. இப்பதிப்புக்காகக் கணேசையர் ஏடுகள் பலவற்றை ஆராய்ந்ததோடு தமிழகத்துக்குத் தனது மாணவர் க. கி. நடராசனை அனுப்பி மதுரைத் தமிழ்ச் சங்கத்து ஏடுகளோடு ஒப்பு நோக்கித் திருத்தங்கள் செய்து வரச் செய்தார்.

உதாரணச் செய்யுட் குறிப்புரை என்னும் அகராதியில் மேற்கோள் செய்யுள்களில் பயிலும் அருஞ்சொற்களுக்குப் பொருள், அச்சொல் பயின்றுவரும் பாடல், அப்பாடல் மேற்கோள் காட்டப்பெறும் நூற்பா எண் ஆகியவை தரப்பட்டுள்ளன. இதனால் உதாரணச் செய்யுளைப் படிப்போர் அகராதியின் துணையின்றி நூலைப் படிக்கும்போதே பொருளுணர முடியும். மேலும் நூற்பா முதற் குறிப்பு அகராதி, உதாரணச் செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பதம் முதலியவற்றின் அகராதி ஆகியவையும் உள்ளன. 'சிறுபொழுதாராய்ச்சி' என்னும் தலைப்பில் கணேசையர் 'செந்தமி'ழில் (29.2 ப. 75-106) எழுதிய கட்டுரை பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது. பொருளதிகார நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பின் வளர்ச்சி நிலையில் இது குறிப்பிடத்தக்க பதிப்பு.

செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையினைக் கு. சுந்தரமூர்த்தியின் விளக்கக் குறிப்புகளுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 1965-இல் வெளியிட்டுள்ளது.

1917இல் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையை ரா. ராகவையங்கார் வெளியிட்டார். இந்நூலில் நச்சினார்க்கினியர் உரை இளம்பூரணர் உரையுடன் ஒப்பிட்டுக் காணத்தக்க வகையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் எல்லா நூற்பாக்களுக்கும் இளம்பூரணர் உரை தரப்படவில்லை

பேராசிரியம்

மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கும் பேராசிரியர் உரை உள்ளது. இது 1885-இல்

சி. வை. தாமோதரம் பிள்ளையால் நச்சினார்க்கினியர் உரையென வெளியிடப்பட்டுப் பின்னர் ரா. ராகவையங்காரால் அது பேராசிரியர் உரையென உணர்த்தப்பட்டது என்று முன்னரே கூறப்பட்டது.

1917-இல் ச. பவானந்தம் பிள்ளை பேராசிரியர் உரையினை இரு தொகுதிகளாக வெளியிட்டார். முதல் தொகுதி செய்யுளியலின் 99-ஆம் நூற்பாவுடன் முடிகிறது. இரண்டாம் தொகுதியில் அதன் தொடர்ச்சி பொருளதிகார இறுதி வரையிலும் உள்ளது. இறுதியில் பொருளதிகாரம் முழுவதற்கும் நூற்பா முதற்குறிப்பகராதி உள்ளது. பொருளதிகாரத்தின் இயல், நூற்பாத் தொகை குறித்த பழம் பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. பொருளதிகாரம் முழுமைக்கும் பிழை திருத்தம், ஆராய்ச்சிக் குறிப்புகள், நூற்பாமுதற்குறிப்புப் போன்ற அகராதிகளுடன் தனிநூல் வெளியிடப் பவானந்தம் பிள்ளை முயன்றார்.[23] ஆயினும் இது வெளிவந்ததாகத் தெரியவில்லை.

ஏடுகளோடு முந்தைய பதிப்புகளை ஒப்பிட்டு வே. துரைசாமி ஐயரால் ஆராய்ந்து திருத்தப்பட்டும் ம. நா. சோமசுந்தரம் பிள்ளையால் ஆராய்ச்சிக் குறிப்புகள் எழுதப்பட்டும் பேராசிரியர் உரை 1935-இல் எஸ். கனகசபாபதிப் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது.

முந்தைய இரு பதிப்புகளிலும் இது திருத்தங்களுடன் வெளிவந்தது. பேராசிரியர் வரலாறும், நூற்பா முதற்குறிப்பகராதியும் முதலில் உள்ளன. இறுதியில் தொல்காப்பிய நூற்பாத் தொகை, பொருளதிகார இயல் வைப்பு முறை, பொருளதிகார நூற்பாத். தொகை இவற்றைக் குறிக்கும் பழம்பாடல்கள் தரப்பட்டுள்ளன.

1943-இல் பல ஏட்டுப் பிரதிகளுடன் முந்தைய பதிப்புகளையும் ஒப்பிட்டுக் கணேசையர் எழுதிய உரைவிளக்கக் குறிப்புகளுடனமைந்த பேராசிரியர் உரையினை நா. பொன்னையா பதிப்பித்துள்ளார். இப்பதிப்புகாகக் கணேசையர் தமிழகத்துக்கு வந்து உ. வே. சாமிநாதையர், டி. கே. இராமானுசய்யங்கார் ஆகியோரிடம் ஏடுகள் பெற்று ஒப்புநோக்கித் திருத்தங்கள் செய்து கொண்டு சென்றார்.

பேராசிரியரின் வரலாறு, மெய்ப்பாட்டியல், உவமவியல் ஆகியவற்றுக்குப் பொருட்சுருக்கம் ஆகிய கட்டுரைகள் இதில் உள்ளன. கணேசையரின் பிற பதிப்புகளைப் போன்றே இதிலும் நூற்பா முதற்குறிப்பு அகராதி, உதாரண அகராதி, அரும்பதம் முதலியவற்றின் அகராதி ஆகியவை அடங்கியுள்ளன.

பதிப்புகளின் வளர்ச்சி நிலையில் கணேசையரின் பதிப்புகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன. மூலபாடங்களைக் கவனமாகத் தேர்ந்தெடுப்பதிலும் உரைப் பகுதிகளைச் செவ்விய முறையில் அமைப்பதிலும் மேற்கோள் செய்யுள், நூற்பகுதி, பாட்டு, எண் முதலிய விளக்கங்களுடன் குறிப்பதிலும் செய்யுளியலிலுள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் எழுவதிலும் உரையாசிரியர்கள்

வேறுபடும் இடங்களைச் சுட்டுவதிலும் உரை ஏற்கத் தக்கதன்று என மதிப்புரை எழுதுவதிலும் இவர் பதிப்பு சிறப்புடன் விளங்குகிறது. இதனால் இவர்தம் பதிப்பினைப் பாட நுண்பதிப்பு எனலாம் என்று ச. மெய்யப்பன் பாராட்டியுள்ளார்.[24]

1951-இல் பேராசிரியர் உரையினைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது. இதன் மறுபதிப்புகள் 1959, 1966, 1969 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்துள்ளன.

புத்துரைப் பதிப்புகள்

வடமொழி, ஆங்கிலம் போன்ற பிறமொழி பயின்றோர் தமிழ் இலக்கணத்தை அம்மொழி இலக்கணத்துடன் ஒப்பிட்டு நோக்க முனைந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த மொழியியல் வளர்ச்சியான ஒப்பிலக்கணம் இவர்களுக்கு அப்பார்வையைத் தந்தது. பிறமொழி இலக்கணத்துடன் ஒப்பு நோக்கி புத்துரை எழுதினர். தொல்காப்பியத்தின் பழைய உரைகள் புரிந்து கொள்வதற்கு அருமையாயிருத்தல் கண்டு எளிய முறையில் தெளிவுரை எழுதும் போக்கையும் காண முடிகிறது.

எழுத்ததிகாரம்

வடமொழியிலுள்ள பிராதிசாக்கியம், யாஸ்கரது நிருக்தம், பிற இலக்கண நூல்கள் ஆகியவற்றோடு தொல்காப்பிய இலக்கணக் கருத்துகளை ஒப்பிட்டுப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி 1937-இல் ஆராய்ந்துள்ளார். இவரது பதிப்பில் முன்னர் வந்த தொல்காப்பியப் பதிப்புகளிலுள்ள பாடவேறுபாடுகள் அப்பதிப்புகளுடன் குறிப்பிடப்பட்டுப் பொருந்தும் பாடம் எதுவென ஆராயப்படுகிறது. ஏனையோர் பதிப்புகளினும் இவர் பதிப்புகளில் மூலபாட ஆய்வு மிகுதியாகக் காணப்படுகிறது. இளம்பூரணர் உரையுடன் நச்சினார்க்கினியர் மாறுபடும் இடங்கள் எடுத்துக்காட்டப்பட்டுப் பொருந்தும் உரை எது என்பதும் ஆராய்ந்து கூறப்படுகிறது. உதாரணங்கள் இயன்றவரை தொல்காப்பியத்திலிருந்தும் சங்க இலக்கியங்களிலிருந்துமே எடுத்துக்காட்டப்படுகின்றன. சொல்லதிகாரத்துக்கே முதலில் 1930-இல் குறிப்புரை எழுதப்பட்டது.

எழுத்ததிகார ஆராய்ச்சி

வே. வேங்கடராசுலு ரெட்டியார் எழுத்ததிகாரத்தை ஆராய்ந்து முதல் 206 நூற்பாக்களுக்கு உரை எழுதியுள்ளார். இது 1944-இல் சென்னைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்தது. எஞ்சிய எழுத்ததிகார நூற்பாக்களின் மூலம் மட்டும் தரப்பட்டுள்ளன. பழைய உரைகளில் காணப்படும் முரண்பாடுகளையும் ஐயங்களையும் தெளிவுறுத்தும் முயற்சி இந்நூலில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுக்குத் துணையாக மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய திராவிட மொழிகள் ஒப்புநோக்கப்படுகின்றன.

சொல்லதிகாரம்

1930-இல் சொல்லதிகாரத்தின் குறிப்புரையினை பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி வெளியிட்டார்.

> தொல்காப்பியர் தமிழ் வடமொழி இரண்டினையும் நன்கு ஆராய்ந்து முன்னிருந்த இலக்கணங்களிலும் சிறந்த இலக்கணம் எழுதியுள்ளார். இரண்டு மொழிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிந்து வடமொழி முறைகளைத் தமிழின் அழகு குன்றாது எங்கு ஆள வேண்டுமோ அங்கு ஆண்டும், மொழிபெயர்த்தும் மாறுபடுமிடங்களை உரிய இடங்களில் எடுத்துக்காட்டியும் நூலமைப்பு முறை கெடாது அமைத்துள்ளார்.[35]

என்பது இவருடைய கருத்து. இக்கருத்து பின்னர் பலராலும் மறுக்கப் பட்டது. இந்தப் பதிப்பும் இவரது எழுத்ததிகாரப் பதிப்பினைப் போன்று அமைந்துள்ளது.

சொல்லதிகாரம் — ஆதித்தியம்

ஏனைய அதிகாரங்களைவிட சொல்லதிகாரத்துக்கே பழைய உரைகள் மிகுதி. அவ்வுரைகளுக்கு விளக்கங்களை உரைக்குறிப் பாகப் பல பதிப்பாளர்களும் தமது பதிப்புகளில் குறிப்பிட்டனர். எளிய நடையில் புது உரை ஒன்றினை அ. கு. ஆதித்தர் எழுதியுள் ளார். இதனை 1977-இல் கிறிஸ்துவ இலக்கியச் சங்கம் வெளி யிட்டுள்ளது.

அ. கு. ஆதித்தர் தனது உரையினைப் பொழிப்பு, அரும்பத விளக்கம், காட்டு, மறுப்பு, ஆய்வு, குறிப்பு என்னும் ஆறு சிறு தலைப்புகளுடைய பகுப்புகளாக அமைத்து விளக்கம் கண்டுள்ளார். பின் மூன்று பகுப்புகளிலும் ஆய்வுக் கருத்துகளும் பிற இலக்கண நூல்களின் கருத்துகளோடு ஒப்புமையும் காணப்படுகிறது.

பொருளதிகாரம்

தொல்காப்பியத்துக்கு அடிப்படை வடமொழி எனக் கற்பிக்க முயற்சி எழுந்ததைத் தொடர்ந்து அக்கருத்தினை மறுத்துத் தொல் காப்பியரின் இலக்கணம் வடமொழியைப் பின்பற்றியதன்று; தமிழுக்கே உரிய சிறப்பிலக்கணம்; தமிழ்ப் பண்பாட்டினைப் பேசுவதே பொருளதிகாரம் என்னும் கொள்கையுடையோர் பொருளதி காரத்துக்குப் புத்துரை கண்டனர்.

இன்பவொழுக்கம் அல்லது தொல்காப்பியம் அகத்திணையியல் விளக்கம்

அகத்திணையியலுக்குரிய விளக்கங்களையும் அதனால் அறியக் கூடிய தமிழகத்துப் பண்பாடுகளையும் விளக்கும் முறையில் அமைந்தது இப்பதிப்பு. அகத்திணையியல் நூற்பாக்கள் நச்சினார்க்

கினியர் உரைமுறையிலும் உரைநடையில் கருத்துக்களும் தரப் பட்டுள்ளன. 'இன்பமும் மாந்தர் பகுத்துணர்வும்', 'உயர்ந்த இன்ப வாழ்க்கை', 'அகத்திணையியலால் அறியப்படுகின்ற தமிழ்நாட்டுக் குறிப்புகளிற்சில' ஆகிய தலைப்புகளில் விளக்கக் கட்டுரைகள் உள்ளன. 'அகத்திணையியல் அகராதி' என்னும் தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள சொல்லகராதியில் (நூற்பா எண்ணுடன்) சொற் களுக்குப் பொருள் பழைய உரையாசிரியரின் சொற்களாலேயே கொடுக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகள் இலக்கணத்தைப் பயின்றும் பயிற்றுவித்தும் ஏற்பட்ட ஆராய்ச்சி அறிவினால் நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய இயல்களுக்குப் புத்துரை எழுதியுள்ளார். பின்னர் மூன்றியல்களின் உரைகளும் தனித்தனி நூல்களாக 1942–இல் வெளிவந்துள்ளன. இவற்றின் மறுபதிப்புகளும் வந்துள்ளன. இளம்பூரணர், நச்சினார்க் கினியர் உரைப் பகுதிகளில் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொருந் தாதவை என ஆசிரியர் கருதியவற்றை மறுத்துப் புது விளக்கங்கள் தந்துள்ளார்.

புலவர் குழந்தையுரை

புலவர் குழந்தை பொருளதிகாரத்திற்குப் புத்துரை எழுதி யுள்ளார். அதன் முதற்பகுதி 1968–இல் வெளிவந்துள்ளது. பழைய உரைகள் இக்காலத் தமிழ் மக்கள் எளிதிற் புரிந்து கொள்ள முடி யாத நிலையில் உள்ளதால் இக்காலத்துக்கேற்ற முறையில் உரை எழுதியுள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

பொருளதிகார நூற்பாக்களின் வைப்பு முறை எளிதில் இயைபு படுத்திக் கற்றறிய முடியாத நிலையில் உள்ளது எனக்கூறி அதன் நூற்பா, இயல் வைப்பு முறைகளை மாற்றி அமைத்துள்ளார். மேலும் சில துறைகளுக்கு எடுத்துக்காட்டுச் செய்யுட்களையும் இயற்றிச் சேர்த்துள்ளார். அவரது அமைப்பாவது, 1. அகத்திணையியல் 2. பொதுவியல் 3. களவியல் 4. கற்பியல் 5. மெய்ப்பாட்டியல் 6. புறத்திணையியல் என்ற வரிசையில் உள்ளது. உவமவியல், பொருளியல், மரபியல் ஆகியவற்றைக் கொண்ட இரண்டாம் பகுதி வெளிவரவில்லை.

தொல்காப்பியம் செய்யுளியல் விளக்கம்

மு. இராமலிங்கனார் எழுதிய உரையுடன் கூடிய செய்யுளியல் 1974–இல் வெளிவந்தது. இவர் ஒவ்வொரு நூற்பாவுக்கும் தனியே உரை எழுதாமல் செய்யுளியலின் முதல் நூற்பா கூறும் மாத்திரை, எழுத்தியல், அசைவகை என்னும் செய்யுளுறுப்புகளின் முறையில் நூற்பாக்களுக்குத் தலைப்புகளமைத்து ஒவ்வொரு உறுப்புக்கு மாகச் சேர்த்து உரை எழுதியுள்ளார். இவரது 'தொல்காப்பிய வளம்' என்னும் நூலில் காணப்படும் முறையே இது.

புலியூர்க்கேசிகன் தெளிவுரை

தொல்காப்பிய நூற்பாக்களை எளிமையாகப் புரிந்துகொள்ளும் வண்ணம் தெளிவான நடையில் மூன்றதிகாரத்துக்கும் புலியூர்க் கேசிகன் தெளிவுரை எழுதியுள்ளார். இது ஒரே தொகுதியாக 1961–இல் வெளிவந்தது. இது பின்னர் பல மறுபதிப்புகளாக வெளி வந்துள்ளது.

குறிப்புரை

ச. சாம்பசிவம் எழுத்ததிகாரம், பொருளதிகாரம் இரண்டுக்கும் இளம்பூரணர் உரையைப் பின்பற்றிக் குறிப்புரை எழுதியுள்ளார். எழுத்ததிகாரக் குறிப்புரை 1978–இல் வெளிவந்தது. பொருளதிகாரக் குறிப்புரையின் முதல் தொகுதி 1980–இலும் இரண்டாம் தொகுதி 1978–இலும் வெளிவந்தன.

பாயிரப் பதிப்புகள்

தொல்காப்பியரின் ஒரு சாலை மாணாக்கராகக் கருதப்படும் பனம்பாரனார் தொல்காப்பியத்துக்குப் பாயிரம் எழுதியுள்ளார். ஆத்திரேயன் பேராசிரியன் என்பார் எழுதிய 'வலம்புரி முத்திற் குலம் புரி பிறப்பும்' எனத் தொடங்கும் பாயிரம் ஒன்றும் உண்டு. பனம் பாரனாரின் பாயிரம் சிறப்புப் பாயிரம் எனவும் ஆத்திரேயன் பேரா சிரியனின் பாயிரம் பொதுப்பாயிரம் எனவும் பேராசிரியர்[26] காலம் முதலாகவே வழங்கப்பட்டு வருகிறது. பனம்பாரனார் பாயிரத்துக்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் உரையெழுதியுள்ளனர். சிவ ஞான முனிவர் பாயிரவிருத்தி என்னும் ஆராய்ச்சியுரை எழுதி யுள்ளார். இதனுள் பாயிர உரை மட்டுமன்றிப் பல இலக்கணப் பொருள் பற்றிய ஆராய்ச்சியும் அடங்கியுள்ளன. இருபதாம் நூற் றாண்டின் முதற்பகுதியில் வாழ்ந்த சோழவந்தான் அரசஞ்சண் முகனார் இவ்விரண்டு பாயிரங்களுக்கும் பாயிர விருத்தியுரை எழுதி யுள்ளார்.

அரசஞ்சண்முகனாரின் பாயிரவிருத்தி உரை சண்முகவிருத்தி என்னும் பெயரில் 1905இல் வெளிவந்துள்ளது.

கா. நமச்சிவாய முதலியார் தொல்காப்பியப் பாயிரங்கள் என்ற ஒரு நூல் வெளியிட்டுள்ளதாகத் தெரிகிறது. "இதில் ஆத்திரையன் பேராசிரியன் செய்த பொதுப்பாயிரமும் அதன் உரையும். பனம் பாரனார் செய்த சிறப்புப் பாயிரமும் அதற்கு இளம்பூரணர் நச்சி னார்க்கினியர் செய்த வுரைகளும், சிவஞான முனிவர் செய்த பாயிர விருத்தியும் அடங்கியுள்ளன"[27] என்ற குறிப்பு இவரது தொல்காப்பிய மூலப்பதிப்பில் காணப்படுகிறது. இந்நூல் கிட்டவில்லை.

தொல்காப்பியப் பொதுப்பாயிரம் மூலமும் உரையும்

மணக்கால் தமிழாசிரியர் செ. முத்துரத்தின முதலியார் வழங்கிய ஏட்டினைக் கொண்டு சதாசிவப் பண்டாரத்தார் எழுதிய குறிப்பு

களுடன் கூடிய இந்நூலைச் சொ. சிவாநந்தம் பிள்ளை பதிப்பித்துள்ளார். இதனுள் பண்டாரத்தார், பேராசிரியரைப் பற்றி அறியப்படும் செய்திகளுடன் இவ்வுரை எழுதியோரும் பேராசிரியரே எனவும் குறித்துள்ளார்.

சிவஞான முனிவரின் தொல்காப்பியச் சூத்திரவிருத்தி ஆறுமுக நாவலரால் முதலில் வெளியிடப்பட்டது.

1968–இல் சிவஞான முனிவரின் தொல்காப்பியச் சூத்திர விருத்தி ச. தண்டபாணி தேசிகரின் குறிப்புரையுடன் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வெளிவந்துள்ளது.

சிவஞான முனிவரின் பாயிரவிருத்தியையும் சூத்திர விருத்தியையும் கா. ர. கோவிந்தராச முதலியார் (*1874–1949*) எழுதிய குறிப்புரையுடன் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ளது.

தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம் (உரைவளம்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் முதல் வெளியீடாகத் தொல்காப்பியத்தின் சிறப்புப் பாயிரம் வெளியிடப்பட்டுள்ளது. சிறப்புப் பாயிர ஆசிரியர் பனம்பாரனாரின் வரலாறு, பாயிரம், தொல்காப்பியம் — தொல்காப்பியன் இவற்றிற்கான பெயர்க்காரணம், பாயிரச் செய்திகள் பற்றிய ஆய்வு, பாயிரத்திற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சிவஞானமுனிவர், அரசஞ்சண்முகனார் ஆகியோரின் உரைகள், ஆத்திரேயன் பேராசிரியன் இயற்றிய பொதுப் பாயிரம் ஆகியவற்றை இந்நூல் கொண்டுள்ளது. இந்நூலின் பதிப்பாசிரியராகிய ஆ. சிவலிங்கனார் பாயிரச் செய்திகள் பற்றி அறிஞர்களின் ஆய்வுக் கருத்துக்களைத் தொகுத்துத் தந்துள்ளார். மேலும் அக்கருத்துகளைக் கொள்ளத் தக்கன, தகாதன, மேலாய்வுக்குரியன ஆகிய நிலைகளில் ஆராய்ந்து கூறியுள்ளார். சிறப்புப் பாயிரத்தின் பாடவேறுபாட்டுக்காக ஒப்பு நோக்கப்பட்ட நூல்களும் ஓலைச் சுவடிகளும் பற்றிய குறிப்பும் தரப்பட்டுள்ளன. பாயிரத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு சி. இலக்குவனாரின் நூலிலிருந்து தரப்பட்டுள்ளது. ஏனைய ஆங்கில மொழிபெயர்ப்புகள்[28] ஏன் விடப்பட்டன என்பதற்கான காரணம் ஏதும் குறிப்பிடப்படவில்லை. துணைசெய்த நூல், கட்டுரை, நூலகங்களின் பட்டியலும் கொடுக்கப்பட்டுள்ளன. இளம்பூரணர் நச்சினார்க்கினியர் உரைகளில் சில சொற்றொடர்களின் விளக்கம், பெயர் அகராதி, மேற்கோள் அகராதி ஆகிய மூன்று அகர நிரல்களைப் பதிப்பாசிரியர் அமைத்துள்ளார்.

ஒப்பியல் பதிப்புகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலக்கண நூல்களுள் நன்னூலே பெரும்பான்மையும் பயிலப்பட்டு வந்தது. நன்னூல் உரையாசிரியர்களாகிய மயிலைநாதர், சங்கர நமச்சிவாயர், சிவஞான முனிவர் ஆகியோர் தமது உரைகளில் தொல்காப்பியத்தையும் நன்னூலையும்

ஒப்புநோக்கி ஒற்றுமை வேற்றுமைகளை ஆங்காங்கே சுட்டிச் சென்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் தொல் காப்பியம் அச்சில் வெளிவந்தவுடன் தொல்காப்பியத்தையும் நன் னூலையும் ஒப்பிட்டுக் காணும் பார்வை வளர்ந்தது. இவ்விரு இலக் கணங்களையும் ஒப்பு உறழ்வு நெறியில் ஆராய்வதற்குப் பயன்படும் வகையில் தொல்காப்பிய — நன்னூல் ஒப்பியல் பதிப்புகள் வெளி வந்தன. இருபதாம் நூற்றாண்டில் தோன்றி வளர்ச்சியுற்ற மொழி யியலின் தாக்குரவினால் ஒப்பிலக்கண வரலாற்றுப் பார்வை தோன்றியது. இதனால் தொல்காப்பியத்தைப் பிற்கால இலக்கணங் களுடன் ஒப்புநோக்கி இலக்கண வரலாற்றையும் மொழிவரலாற்றை யும் ஆராயும் ஆர்வம் தோன்றியது. பிற்கால இலக்கணங்களைத் தொல்காப்பியத்துடன் ஒப்பு நோக்கிப் பயிலும் வண்ணமும் இருப தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் அதனைத் தாம் புரிந்து கொண்டவாறும், தம் காலத்து மொழிவளர்ச்சியை நோக்கியும் தொல் காப்பியத்துக்கு உரை கண்டனர். அதனால் தொல்காப்பிய நூற் பாவுக்கு உரைகாண்பதில் அவர்களுக்குள் வேறுபட்ட கருத்துக்கள் தோன்றின. உரைகாரர்கள் பல்வேறு காலத்தைச் சேர்ந்தவர் களாதலால் உரைகளும் பல திறத்தனவாக அமைந்தன. இவ்வுரை களை ஒப்பிட்டுக் காண்பதாலும் அவ்வக்கால இலக்கண, மொழி வளர்ச்சியை அறிய முடியும். அவ்வகையில் உரையொப்புப் பதிப்பு களும் தோன்றியுள்ளன.

இலக்கண ஒப்பு

தொல்காப்பிய நன்னூல்

1858-இல் தொல்காப்பிய நூற்பாக்களை நன்னூல் நூற்பாக் களோடு ஒப்பிட்டுக் காணப் பயன்படும் 'தொல்காப்பிய நன்னூல்' என்னும் ஒப்பியல் பதிப்பினைச் சாமுவேல் பிள்ளை வால்டர் ஜாய்ஸ் உதவியுடன் வெளியிட்டார். இந்நூலுக்குப் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் சிறப்புப் பாயிரமும் புதுவைத் தமிழ்ப்புலவர் பொன்னுசாமியும் தரங்காபுரம் சண்முகக்கவிராயரும் சாத்துக் கவிகளும் பாடி அளித்துள்ளனர்.

• தமிழ்மொழியின் தோற்றம், வரலாறு, தொல்காப்பியர்-அகத்தியர் பற்றி வழங்கும் கதை ஆகியன முற்பகுதியில் பேசப்பட்டுள்ளன. அடுத்துத் 'தொல்காப்பியம் நன்னூல் ஒப்புமைத் தகுதிகள்' (comparative merits of Tholcapyam and Nannooal) என்னும் தலைப்பில் ஆங்கிலத்தில் ஒப்புமைக் கருத்துகள்[29] தரப்பட்டுள்ளன. இந்தக் கருத்துகள் எத்துணை அளவு பொருந்தக் கூடியன என்பது ஆராயத் தக்கது. தொல்காப்பியம் நன்னூல் இவற்றின் சிறப்புப் பாயிரங்களை அடுத்துத் தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாக்கள் இயல் வரிசை யிலும், தொடர்ந்து நன்னூல் எழுத்தியலின் நூற்பாக்கள், தொல் காப்பியச் சொல்லதிகார நூற்பாக்கள், நன்னூல் சொல்லியல் நூற்

பாக்கள் என்னும் முறையிலும் தரப்பட்டுள்ளன. நூற்பாக்களைத் தொடர்ந்து அவ்விலக்கணப் பொருள் பற்றிய ஆங்கில இலக்கணக் கலைச்சொற்களும் விளக்கமும் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ளன. பொருளதிகார நூற்பாக்களுக்கு ஒப்புடைய நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவை அடிக்குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளன.

நன்னூல் உரையாசிரியர்களால் தொல்காப்பியம் நன்னூலுடன் ஒப்பிட்டுக் காணப்பட்டுள்ளது. சிவஞான முனிவர் தமது விருத்தி யுரையுள் தொல்காப்பியத்தை நன்னூலுடன் ஒப்பிட்டு 12 வேறுபாடு களை எடுத்துக்காட்டியுள்ளார்.[30] தொல்காப்பியப் பதிப்பு வெளி வந்தபின் இதனுடன் நன்னூலையும் பிற இலக்கண நூல்களையும் ஒப்பிட்டு நோக்கும் ஆய்வு எழுந்தது. அவ்வகையில் தோன்றிய முதல் இலக்கண ஒப்பியல் நூல் இதுவே ஆகும். அதோடு தொல் காப்பியத்துக்கு முதன்முதல் வந்த மூலப்பதிப்பு இதுவே. இப்பதிப்பு அச்சிலும் பதிப்பிலும் சிறந்து விளங்குகிறது.[31] இப்பதிப்பிலேயே தொல்காப்பியத்தின் எழுத்து, சொல், பொருள் அதிகாரங்களின் நூற்பாக்கள் முழுதும் முதன்முதல் அச்சேறின. இதற்கு முன் தொல் காப்பியத்துக்கு வந்த பதிப்பு மழவை மகாலிங்கையரின் எழுத்ததி கார நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பு (1848) ஒன்றே.

தொல்காப்பியம் — நன்னூல்: எழுத்ததிகாரம்

க. வெள்ளைவாரணரின் தொல்காப்பியம் நன்னூல் எழுத்ததிகார ஒப்பியல் பதிப்பினை 1962-இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. தொல்காப்பிய நூற்பா, இதற்கிணையான நன்னூல் நூற்பா என்னும் முறையில் நூல் அமைக்கப்பட்டுள்ளது. உரைகளும் ஆராயப்பெற்று அவற்றுள் பொருந்துவன, பொருந் தாதன எவையென எடுத்துக்காட்டப்படுகின்றன. தொல்காப்பிய நன்னூல் ஒப்பீட்டு ஆய்வும் இதன்கண் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நூற்பா முதற்குறிப்பு அகராதிகள் தனித்தனியே தரப்பட்டுள்ளன.

தொல்காப்பியம் — நன்னூல்: சொல்லதிகாரம்

தொல்காப்பியம் — நன்னூல் சொல்லதிகாரத்தினைக் க. வெள்ளைவாரணம் 1971-இல் வெளியிட்டார். இந்நூலில் தொல் காப்பியச் சொல்லதிகாரம் பற்றிய முன்னுரையும், தொல்காப்பியமும் நன்னூலும் சொல்லிலக்கணத்தை விளக்கும் அமைப்பு பற்றிய விளக்கமும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு நூற்பா அமைக்கப் பட்டுள்ளது. இப்பதிப்பில், முதலில் தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பா தமிழ் எண்ணிலும், அதனைத் தொடர்ந்து பதிப்பாசிரியரின் உரையும், இதனை அடுத்துத் தொடர்புடைய நன்னூல் நூற்பா அரபு எண்ணுடனும் பின்னர் அதனுரையும் அமைக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் பழைய உரையாசிரியர்களின் உரையும் ஆராயப் படுகிறது. நூற்பா முதற்குறிப்பு அகராதிகள், இரண்டு (தொல்

காப்பியம் — நன்னூல்) சொல்லதிகாரங்களுக்கும், தனித்தனியே தரப்பட்டுள்ளன.

இலக்கணத்தொகை (எழுத்து)

தொல்காப்பிய எழுத்ததிகாரத்துடன் பிற்கால இலக்கணங்களான வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கணவிளக்கம். தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய இலக்கண நூல்கள் கூறும் எழுத்திலக்கண நூற்பாக்களை ஒப்பிட்டுக் காணும் வகையில் அமைந்த இவ்வொப்பியல் பதிப்பினை ச. வே. சுப்பிரமணியன் 1967-இல் வெளியிட்டுள்ளார். இந்நூலுக்குத் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஆசியுரையும் மு. வரதராசனார் அணிந்துரையும் வழங்கியுள்ளனர்.

இந்நூலில் தொல்காப்பிய நூற்பாக்களை அடிப்படையாகக் கொண்டு பிற நூல்களின் ஒப்புடைய நூற்பாக்கள் உடன் அமைக்கப்பட்டுள்ளன. பொருள் அடிப்படையாக நூற்பாக்களுக்குத் தலைப்புகள் அமைத்து அப்பொருள் பற்றிய விளக்க முன்னுரையும் தரப்பட்டுள்ளது. பொருளுக்குத் தக்க இலக்கியச் சான்றுகளும், இலக்கியச் சான்றுகள் கிட்டாத இடத்தில் உரையாசிரியர்கள் தந்த சான்றுகளும் தரப்பட்டுள்ளன. எழுத்திலக்கணம் குறிக்கும் இயல்களும் நூற்பாத் தொகையும், எழுத்துக்களின் பிறப்பிடம், மாத்திரை, மொழிமுதல் எழுத்துக்கள், அல்வழிப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி ஆகியவை பற்றி இலக்கண நூல்களின் கருத்துக்களும் அட்டவணைப்படுத்தப்பட்டு உரிய இடத்தில் ஆங்காங்கே தரப்பட்டுள்ளன. அவ்வவ் இலக்கணக் கூறுகள் பற்றிய கட்டுரைகள், நூல்கள் பற்றிய குறிப்பு, ஆசிரியர் பெயர் போன்றவை ஆங்காங்கே அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளன. பொருளடக்கம் இயலடிப்படையில் அமையாது பொருளடிப்படையில் சிறுதலைப்புகளின்கீழ்க் கொடுக்கப் பட்டுள்ளது. நூற்பா முதற்குறிப்பு அகர வரிசை எல்லா நூல்களையும் கொண்டதாக அமைந்துள்ளது.

இலக்கணத்தொகை (சொல்)

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தை வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், பிரயோக விவேகம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய பிற்கால இலக்கண நூல்களோடு ஒப்பிட்டுக் காணத்தக்க பதிப்பை 1971-இல் ச. வே. சுப்பிரமணியன் வெளியிட்டார்.

இந்நூலின் முகவுரையில் இந்த இலக்கண நூல்களின் இயல் பகுப்பும் தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் ஒன்பது இயல்களின் அடிப்படையில் பிற இலக்கணங்கள் கூறும் செய்திகளும் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன. இலக்கணப் பொருள் பற்றிய முன்னுரையுடன் நூற்பாக்கள் பொருளுக்கேற்ற தலைப்புகளிட்டு அமைக்கப் பட்டுள்ளன. 'இலக்கணத்தொகை–எழுத்து' போலவே இந்நூலிலும்

பல அட்டவணைகளும் ஆய்வுக்கட்டுரை பற்றிய குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. நூற்பா முதற்குறிப்பு அகரவரிசை மேற்குறித்த எல்லா இலக்கணங்களையும் உள்ளடக்கியதாகும்.

இலக்கணத்தொகை (யாப்பு, பாட்டியல்)

1978-இல் இலக்கணத்தொகை யாப்பு — பாட்டியல் என்ற நூலை ச. வே. சுப்பிரமணியன் வெளியிட்டுள்ளார். இதனுள் தொல் காப்பியச் செய்யுளியலும், யாப்பு பாட்டியல் இலக்கண நூல்கள் இருபத்து நான்கும், யாப்பிலக்கண நூல்கள் மூன்றும் ஆக இருபத் தேழு . நூல்கள்[52] தொகுக்கப்பட்டுள்ளன. இவை வரலாற்றடிப் படையில் அமைக்கப்பட்டு காலத்தால் ஏற்பட்ட மாறுபாடுகளும் சுட்டப்பட்டுள்ளன. முன்னுரையில் யாப்பிலக்கண வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், பாட்டியல் இலக்கண வரலாற்றில் ஏற் பட்டுள்ள வளர்ச்சிகள், தமிழ் இலக்கியத்தில் இன்றுவரை உள்ள யாப்பமைதி ஆகியவை ஆராயப்படுகின்றன.

இந்நூலுக்கு மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார். பேரரசிரியர் உரைப்படி தொல் காப்பியச் செய்யுளியல் நூற்பாக்கள் தரப்பட்டுள்ளன. யாப்பிலக் கணப் பொருள் பற்றிய கட்டுரைகள் ஆசிரியர் பெயர் முதலிய குறிப்புகளுடன் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளன. யாப் பிலக்கணச் சொற்களும் அவை பயின்றுவரும் நூற்பா எண்களும் கொண்ட சொல்லகராதி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியிலிருந்து தொகுக்கப்பட்ட யாப்புக்கலைச் சொற்களின் அகராதி ஆகியவை நூலினிறுதியில் அமைக்கப்பட்டுள்ளன.

தொல்காப்பிய ஒப்பியல்

1975-இல் வெளியான க. ப. அறவாணனின் (*1941* —) ஒப்பியல் பதிப்பில் அவிநயம், இலக்கண விளக்கம், இலக்கணக் கொத்து, இறையனார் களவியல், களவியல் காரிகை, தண்டியலங்காரம், தமிழ் நெறிவிளக்கம், தொன்னூல் விளக்கம், நம்பியகப்பொருள், நன்னூல் நேமிநாதம், பாட்டியல் நூல்கள், பிரயோக விவேகம், புறப்பொருள் வெண்பாமாலை, மாறன் அகப் பொருள், முத்துவீரியம், யாப்பருங் கலம், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம் ஆகிய பத்தொன்பது இலக்கண நூல்கள் தொல்காப்பியத்துடன் ஒப்பிடப்பட்டுள்ளன. இளம்பூரணர் உரைப்படி தொல்காப்பிய நூற்பாக்களை அமைத்துத் தொடர்புடைய பிற இலக்கண நூற்பாக்களின் எண்கள் உடன் தரப்பட்டுள்ளன. இயன்ற இடங்களில் ஒப்புடைய வடமொழி இலக்கண நூற்சான்றுகளும் கொடுக்கப் பட்டுள்ளன. தொல் காப்பியப் பாடவேறுபாடுகள், உரையாசிரியர் ஒவ்வோர் இயலிலும் கொண்ட நூற்பா அளவு ஆகியவை பற்றிய அட்டவணைகளும் நூற்பா முதற்குறிப்பகராதியும் உள்ளன, எழுத்து, சொல்லதிகாரங் களில் தொல்காப்பியரும் பிறரும் எங்கே வேறுபடுகின்றனர் என்பது சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது. இப்பதிப்பு மர்ரே எஸ். ராஜம்

வெளியீடான தொல்காப்பிய மூலம், ச. வே. சுப்பிரமணியனின் இலக்கணத்தொகை (எழுத்து), வ. உ. சிதம்பரம் பிள்ளையின் தொல் காப்பியப் பதிப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது.

தொல்காப்பியக் களஞ்சியம்

1975-இல் க. ப. அறவாணனும், தாயம்மாள் அறவாணனும் (1944 —) தொல்காப்பியக் களஞ்சியம் என்னும் நூலினை வெளி யிட்டனர். இந்நூலுள் தொல்காப்பிய மூலம் பிற இலக்கண நூல் களுடன் ஒப்பு நோக்கும் வகையில் அவ்வவ் இலக்கணங்களின் நூற்பா எண்களுடன் தரப்பட்டுள்ளது. மேலும் தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகளுக்குக் கருவி நூலாக விளங்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் பல பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

1, தொல்காப்பியப் பொருளடைவு, 2. தொல்காப்பிய ஆய்வடைவு (தொல்காப்பியப் பதிப்புகள்,[33] தொல்காப்பியம் குறித்த தமிழ், ஆங்கில நூல்கள், கட்டுரைகள் ஆய்வேடுகள் ஆகியவற்றின் அடைவு), 3. தொல்காப்பிய மூலம், 4. தொல்காப்பியப் பாடவேறு பாடுகள். 5. உரையாசிரியர்கள் ஒவ்வோர் இயலிலும் கொண்ட நூற்பா அளவுகள், 6. நூற்பா முதற்குறிப்பு அகராதி.

உரை ஒப்பு

தொல்காப்பியத்துக்கு இளம்பூரணர் காலந்தொட்டு இன்றுவரை பல உரைகள் தோன்றியுள்ளன. அவைகளை ஒப்பிட்டு நோக்கு வதால் உரைகளின் வளர்ச்சி நிலையை அறிய முடிவதுடன் உரை யாசிரியர்களது இலக்கணக் கொள்கைகளையும் கணிக்க முடியும். இவ்வகையில் உரைகளைத் தொகுத்துப் பதிப்பிக்கும் முறை முதலில் திருக்குறளுக்கே தோன்றியது. தொல்காப்பியத்துக்கு நான்கு உரை ஒப்புப் பதிப்புகள் வெளிவந்துள்ளன.

1917-இல் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையினை இளம் பூரணர் உரையுடன் ரா. ராகவையங்கார் அவர்கள் வெளியிட்டார். முன்னர் வந்த பதிப்புகளில் ஆங்காங்கே பிற உரையாசிரியர் உரைகள் சில இடங்களில் அடிக்குறிப்பாகத் தரப்பட்டிருப்பினும் முதல் உரையொப்புப் பதிப்பாக வெளிவந்தது இதுவே.

இந்நூலின் முகவுரையில் சி. வை. தாமோதரம் பிள்ளை 1885-ஆம் ஆண்டு வெளிட்ட பொருளதிகாரப் பதிப்பில் கண்ட இறுதி நான்கியல்களின் உரை நச்சினார்க்கினியருடையதல்ல; பேராசிரிய ருடையது என்று தாம் ஆராய்ந்து கண்டதைக் குறிப்பிடுகிறார். தமக்கு நச்சினார்க்கினியரின் செய்யுளியல் உரையேடு கிடைத்த இடங்களையும் குறிப்பிடுகிறார். இப்பதிப்பு "நச்சினார்க்கினியர் உரை, உரையாசிரியருரையுடன்" என்று தலைப்பிடப்பட்டுள்ள போதிலும் எல்லா நூற்பாக்களுக்கும் இளம்பூரணருரை தரப்பட

வில்லை: உரை வேறுபடுமிடங்களில் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளது. மேலும் அடிக்குறிப்பில் ஆங்காங்கே பேராசிரியர் உரையும் பாடவேறுபாடும் சுட்டப்பட்டுள்ளன. இப்பதிப்பு பின்வந்த சொல்லதிகார உரைக்கோவைப் பதிப்புக்கு முன் மாதிரியாக விளங்கியது.[34]

தொல்காப்பியம் — சொல்லதிகாரம் உரைக்கோவை (முதற் பாகம்)

சொல்லதிகாரத்துக்கு உள்ள பழைய உரைகளான இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் தெய்வச்சிலையார், கல்லாடர், ஆசிரியர் பெயர் அறியப்படாத பழைய உரை ஆகியன அமைந்த சொல்லதிகார உரைக்கோவையின் முதற்பகுதியின் (1963-இல்) வி.ஐ. சுப்பிரமணியமும் ஆபிரகாம் அருளப்பனும் வெளியிட்டுள்ளனர். கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு. ஆகிய நான்கியல்களின் உரைகள் இதனுள் அடங்கியுள்ளன. இவ்வுரைக் கோவையில் இளம்பூரணர் உரையை அடுத்துத் தெய்வச் சிலையார் உரை தரப்பட்டுள்ளது. இதன் காரணம் இருவர் உரைக்கும் உள்ள வேறுபாட்டினை நன்கு தெளிவுறுத்தவே என்பர் பதிப்பாளர். கல்லாடர் உரையும், ஆசிரியர் பெயர் தெரியாத பழைய உரையும் முதன்முதலில் இவ்வுரைக் கோவையிலேயே அச்சேறின. இதன் இரண்டாம் பகுதி பின்னர் வெளிவரவில்லை. இவ்வுரைகளை ஒப்பு நோக்கும்போது உரையாசிரியர்கள் ஒருவரை ஒருவர் தழுவிச் செல்வதும் ஒருவர் கருத்தை ஒருவர் விளக்குவதும், மறுப்பதும், தம் காலத்து நிலவிய கொள்கைகளை நூற்பா விளக்கத்துக்குப் பயன்படுத்துவதும் புலப்படுகின்றன என்று ஒப்பாய்வின் பயனைப் பதிப்பாளர்கள் குறித்துள்ளனர்.

தொல்காப்பியம் — பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம்

மு. அருணாசலம் பிள்ளை அகத்திணையியல், புறத்திணையியல்களுக்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சோமசுந்தர பாரதியார் ஆகியோர் உரைகளை ஒப்பிட்டு ஆய்வுரை எழுதியுளார். இவற்றுள் அகத்திணையியலின் ஆய்வுரை முத்துச் சண்முகன், தா. வே. வீராசாமி ஆகியோரால் பதிப்பிக்கப்பட்டு மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடாக 1975-இல் வெளிவந்துள்ளது.

இந்நூலின் முன்னுரையில் 1975 வரை வந்த தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்புகளின் அட்டவணை தரப்பட்டுள்ளது. இது மு. அருணாசலம் அவர்களின் (தமிழ் இலக்கிய வரலாறு 11-ஆம் நூற்றாண்டு) நூலிலிருந்து எடுக்கப்பட்டது. இளம்பூரணம், நச்சினார்க்கினியம், சோமசுந்தர பாரதியார் உரை என்ற முறையில் அமைக்கப்பட்டு அவ்வுரையின் பின்னர் மு. அருணாசலம் பிள்ளையின் விளக்கவுரை தரப்பட்டுள்ளது. அதன் இறுதியில் ஒவ்வொரு நூற்பாவுக்கும் ஆய்வுரை என்னும் தலைப்பில் மு. அருணாசலம்

பிள்ளையின் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. நூற்பா முதற்குறிப்பு அகராதி முதலிலும் உரை மேற்கோள் அகராதி இறுதியிலும் அமைக் கப்பட்டுள்ளன.

திருக்குறளின் உரைகளைத் தொகுத்து நோக்கும் ஆய்வு எழுந்ததையொட்டி உரைவளமும், உரைக்கொத்தும், ஆராய்ச்சிப் பதிப்பும், அதனை ஆதாரமாகக் கொண்டு பலவகை ஆய்வுகளும் நிகழ்ந்தன.[35] உரையொப்புப் பதிப்புகள், உரையும் மூலமும் திருத்தம் பெற உதவ முடியும். தொல்காப்பியத்துக்கு வந்துள்ள உரைப் பதிப்புகள் பலவற்றில் பிற உரையாசிரியர் உரைப்பகுதிகளும், கருத்துக்களும் அடிக்குறிப்பாகவும், பதிப்பாசிரியர்களின் விளக்கக் குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. இவ்வுரைகள், உரை விளக்கங்கள் யாவும் கால நிரலில் தொகுக்கப்பட்டு எழுத்து, சொல், பொருள் அதிகாரங்களுக்கு உரையொப்புப் பதிப்புகள் வெளிவரின் தொல் காப்பிய ஆய்வு வளர்ச்சிக்கு உறுதுணையாகும்.

தொல்காப்பியம் நூன் மரபு (உரைவளம்)

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொல்காப்பிய நூல் உரைவள வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் இரண்டாவது வெளியீடாக ஆ. சிவலிங்கனாரைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தொல்காப்பிய நூன்மரபினை வெளியிட்டுள்ளது. இதன் முன்னுரையிலோ நூலமைப்பும் நன்றியும் கூறும் பதிப்புரையிலோ இதற்கு முன் தொல் காப்பியத்துக்கு வந்த உரைவளப் பதிப்புகள் பற்றிக் குறிப்பிடப்பட வில்லை. சிறப்புப் பாயிரத்துக்கும், நூன்மரபு நூற்பாக்களுக்கும் சி. இலக்குவனார், கமில் சுவலபில் ஆகிய இருவரின் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளன. நூற்பாக்கள் பொருட்பொருத்த முடைய தலைப்புகளுடன் கொடுக்கப்பட்டு உரைகள் தொடர்ந்து தரப்பட்டுள்ளன. இளம்பூரணரின் உரை பதவுரையாகவும் நச்சினார்க்கினியர் உரை பொழிப்புரையாகவும் அமைக்கப் பட்டுள்ளன. சிவஞான முனிவரின் முதற்சூத்திர விருத்தியின் முதற் பகுதியாகிய சூத்திரப் பொருள் நிலை மட்டும் சேர்க்கப்பட்டுள்ளது. வே. வேங்கடராஜுலு ரெட்டியார், பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, க. வெள்ளைவாரணன் ஆகியோரது உரைப் பகுதிகளும் கருத்து வேறு பாடு உள்ள இடங்களில் மட்டும் தரப்படுகின்றன. இத்தகைய இடங் களில் பதிப்பாசிரியரின் ஆய்வுக் கருத்துக்களும் உடன் தரப் பட்டுள்ளன. பிற்பகுதியில் அமைந்துள்ள உரைச் சொற்றொடர் விளக்கம், நூன்மரபு நூற்பாக்களுடன் பிற இலக்கண நூல்களில் காணப்படும் ஒற்றுமைப் பகுதிகள் ஆகியன ஆய்வுக்குப் பயன் படுவன. உரைவளத்துக்குப் பயன்பட்ட நூல்களும், ஒப்பு நோக்கப் பட்ட பதிப்புகளும், நூன்மரபு தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற கட்டுரைகளும் பற்றிய குறிப்பும் தரப்பட்டுள்ளது. நூன்மரபு தொடர் பாக வெளிவந்துள்ள எல்லாக் கட்டுரைகளும் இதில் இடம் பெற வில்லை. சொல்லகராதி, பக்க எண்ணுடன் இறுதியில் அமைக்கப் பட்டுள்ளது.

மொழிபெயர்ப்புகள்

தொல்காப்பியத்தின் இலக்கணக் கருத்துக்களையும் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பினையும் தமிழறியாத வேற்றுமொழியினரும் அறிய வேண்டும் என்னும் ஆர்வம் அதனைப் பிற மொழிகளில் பெயர்க்கத் தூண்டிற்று. அதனால் ஆங்கிலத்திலும், கன்னடம் மலையாளம் போன்ற திராவிட மொழிகளிலும் தொல்காப்பியம் மொழிபெயர்க்கப்பட்டது.

ஆங்கிலம்

எழுத்ததிகாரம்

சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழைக்கலை ஆய்விதழில் (Journal of Oriental Research) *பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி* தொடர்ந்து எழுதி வந்த எழுத்ததிகார ஆங்கில மொழிபெயர்ப்பு 1930-இல் நூலாக வெளிவந்துள்ளது. இதனுள் நூற்பாக்கள் உரோமன் எழுத்துப் பெயர்ப்புடனும் ஆங்கிலத்தில் விளக்கக் குறிப்புகளுடனும் அமைந்துள்ளன. பிற்பகுதியில் நூற்பா அகராதியும், சொல்லகராதியும் அமைக்கப்பட்டுள்ளன,

கமில் சுவலபிலின் எழுத்ததிகார மொழிபெயர்ப்பு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 'தமிழியல்' (Journal of Tamil Studies) இதழில் தொடர்ந்து வெளியிடப்பட்டது.[56] இதற்குமுன் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்புகள் வடமொழிப்பற்று, வடமொழி வெறுப்பு இவற்றின் காரணமாக எழுந்ததால் தமது மொழிபெயர்ப்பு உண்மையான மொழிபெயர்ப்பாக இருக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் எழுதப்பட்டது என்று இம்மொழிபெயர்ப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.[57] இதனுள் மொழிபெயர்ப்புடன் ஆங்கிலத்தில் விளக்கங்களும் எழுதப்பட்டுள்ளன.

சொல்லதிகாரம்

பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியின் சொல்லதிகார ஆங்கில மொழிபெயர்ப்பினை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1945-இல் வெளியிட்டது.

பொருளதிகாரம்

ஆர். வாசுதேவ சர்மா பொருளதிகாரத்தின் அகத்திணையியலை மொழிபெயர்த்துள்ளார். இது 1933-இல் வெளியிட்டது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த இ. எஸ். வரதராஜ அய்யர் பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள் ஆகிய இயல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இது 1948-இல் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

முழுதும்

சி. இலக்குவனார் டாக்டர் பட்ட ஆய்வுக்காக சென்னைப் பல்கலைக்கழகத்தில் அளித்த ஆய்வேட்டில் தொல்காப்பியத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு அமைந்துள்ளது. இந்த ஆய்வேடு 1963-இல் நூலாக வெளிவந்தது. இதில் தொல்காப்பியம் முழுமையும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

கன்னடம், மலையாளம்

கன்னடத்தில் எம். மாரியப்ப பட்டும் மலையாளத்தில் எழுத்தச்சனும் தொல்காப்பியத்தினை மொழிபெயர்த்துள்ளனர். இவை சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழைக்கலை ஆய்விதழில் (Annals of Oriental Research) வெளிவந்துள்ளன.[38] மா. இளைய பெருமாள் சுப்பிரமணியபிள்ளை ஆகிய இருவரும் மலையாளத்தில் தொல்காப்பியத்தை மொழிபெயர்த்துள்ளனர்.

காலந்தோறும் தொல்காப்பியப் பதிப்புகள்

ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்துப் படிகளையும் கொண்டே கற்கப்பட்டு வந்த நிலையிலிருந்த தொல்காப்பியம் அச்சாகி நூல் வடிவில் வந்தபோது அந்த அச்சுப்பதிப்பு பல வளர்ச்சி நிலைகளைக் கண்டது. தொடக்க காலத்தில் அச்சிட்டவர்களிடம் அதனை அழிந்து போகாது காக்க வேண்டும் என்னும் எண்ணமே மேலோங்கி இருந்தது, எனவே ஏட்டில் இருந்தபடியே முதலில் அச்சிட்டனர். பின்னர் வந்த பதிப்புகளில் பதிப்புரை, முன்னுரை எழுதுதல், நூற்பா முதற்குறிப்பகராதி தருதல் முதலிய வளர்ச்சி நிலைகளைக் காணமுடிகிறது.

பதிப்புரை, முன்னுரை

1848 முதல் 1868 வரை தொல்காப்பியத்துக்கு ஐந்து பதிப்புகள் வெளிவந்தன. அவையாவன: எழுத்து: இளம்பூரணம், எழுத்து: நச்சினார்க்கினியம், சொல்: சேனாவரையம் — இருவேறு பதிப்புகள், 'தொல்காப்பிய நன்னூல்', ஒப்பியல் புதிப்பு

சாமுவேல் பிள்ளையின் தொல்காப்பிய நன்னூல் ஒப்பியல் பதிப்பு தவிர ஏனைய நான்கு பதிப்பிலும் பதிப்புரை, முன்னுரை, ஆகியன இல்லை. சாமுவேல் பிள்ளையின் பதிப்பில் தமிழின் தோற்றம், வரலாறு, தொல்காப்பியர் அகத்தியரின் மாணவர் என வழங்கும் கதை, தொல்காப்பிய நன்னூல் ஒப்புமைத் தகுதிகள் போன்ற செய்திகள் முன்னுரைப் பகுதியில் அமைந்துள்ளன. பிற் பகுதியில் பதிப்பாளரின் ஆசிரியர், நண்பர் முதலியோரால் எழுதப் பட்ட சிறப்புப் பாயிரங்கள் இருந்தாலும் அவை பதிப்பாளரின் புலமை, குண நலன்கள் இவற்றைக் கூறுவனவே அன்றி அப்பதிப்புத் தொடர்பான செய்திகளைக் கூறவில்லை.

1885-இல் சி. வை. தாமோதரம் பிள்ளை வெளியிட்ட தொல்காப்பியப் பொருளதிகாரப் பதிப்பில் விரிவான பதிப்புரை எழுதினார்.

அதனுள் தொல்காப்பியம் தொடர்பான பல செய்திகளை ஆராய்ந்துள்ளார். பின்னர் வந்த பதிப்புகளில் பதிப்புரையின் இன்றியமையாமை உணரப்பட்டு அவற்றில் அவ்வப்பதிப்புத் தொடர்பான செய்திகள் இடம் பெற்றன.

நூல் நுவலும் பொருள், ஆசிரியர் காலம், வரலாறு, உரைகள், உரையாசிரியர்களின் உரைநலம், பதிப்பிக்க உதவிய ஏடுகள், பதிப்புமுறை, முந்தைய பதிப்புகள் போன்ற செய்திகள் பதிப்புரையில் குறிப்பிடப்பட வேண்டிய செய்திகள் ஆகும். 1868-க்குப் பின்னர் வந்த பதிப்பாளர்கள் இவ்வெல்லாச் செய்திகளையும் கொண்டதாகப் பதிப்புரையை அமைக்காவிட்டாலும் இவற்றுள் சில செய்திகளையேனும் கொண்டு பதிப்புரையை ஓர் இன்றியமையாக் கூறு எனக் கருதி அமைத்தனர்.

நூற்பா — உரை அமைப்பு

முதல் தொல்காப்பியப் பதிப்பான மழைவை மகாலிங்கையரின் எழுத்ததிகார நச்சினார்க்கினியருரைப் பதிப்பில் நூற்பா, பாடல் முறையில் அச்சிடப்பட வில்லை. தொடர்ந்து பத்தியாக அமைக்கப் பட்டு அடிகளின் முடிவில் காற்புள்ளியும், நூற்பா முடிவில் முற்றுப் புள்ளியும் இடப்பட்டன. 1868-இல் வெளிவந்த இராசகோபாலப் பிள்ளையின் சேனாவரையப் பதிப்பும் சுப்பராயச் செட்டியாரின் எழுத்து இளம்பூரணப் பதிப்பும் இம்முறையிலேயே அமைந்தன. ஆனால் 1868-இல் வெளியான சி. வை. தாமோதரம் பிள்ளையின் சேனாவரையப் பதிப்பில் நூற்பா உரையினின்றும் வேறு பிரித் தறியத்தக்க வகையில் பெரிய எழுத்திலும் பாடல் முறையிலும் அச்சிடப்பட்டது. பதவுரை, தெளிவுரை எனப் பத்தி பிரித்து உரை அமைக்கப்பட்டது. இப்பதிப்புகள் யாவற்றிலும் நூற்பாக்களுக்குத் தமிழ் எண்களே கொடுக்கப்பட்டுள்ளன.

பின்னர் வந்த பதிப்புகள் யாவும் நூற்பாவினைப் பாடல் முறையில் அச்சிடல், உரையினும் நூற்பாவைப் பெரிய எழுத்தில் அமைத்தல், உரையினைப் பத்தி பிரித்துப் பதிவுரை, தெளிவுரை, விளக்கவுரை என உணருமாறு அமைத்தல், நூற்பாத் தொடக்கத்தில் அதிகார வரிசை எண்ணும் உரை முடிவில் இயல் வரிசை எண்ணும் இடல் ஆகிய முறைகளைப் பின்பற்றின.

அடிக்குறிப்புகள்

பதிப்புகளில் அடிக்குறிப்புகள் பதிப்பாளர் தெரிவிக்க விரும்பும் பலவகைச் செய்திகளை எடுத்துக்காட்டப்பயன்பட்டன. தொடக்க காலப் பதிப்புகளில் பாடவேறுபாடுகள் மட்டும் அடிக்குறிப்பில் எடுத்துக்காட்டப்பட்டன. பின்னர் உரை ஒப்புப் பகுதிகள் பிற இலக்கணங்களின் ஒப்புடைய பகுதிகள் உரையில் முதற்குறிப்பு மட்டும் கூறப்படும் இலக்கிய மேற்கோள்களின் முழுப் பாடலும் உரிய எண்ணும், மூலத்திலும் உரையிலும் வரும் 'முன்னர்க் கூறுப்' என்பன போன்ற குறிப்புகள் வருமிடங்களில் அவை பற்றிய

விவரங்கள் குறிப்புரை, விளக்கவுரை, போன்ற செய்திகளைத் தருவதற்கும் அடிக்குறிப்புகள் பயன்பட்டன.

அகராதிகள்

முதலில் நூற்பா முதற்குறிப்பு அகராதி மட்டுமே பதிப்புகளில் தரப்பட்டன. பின்னர் வெளிவந்த பதிப்புகளில் சில நூற்பா முதற் குறிப்பகராதிகளுடன் பொருளடைவு, பாடவேறுபாடு, அருஞ்சொற் பொருள், எடுத்துக்காட்டு, உரைப் பொருள், மேற்கோள் நூற்பா நுவலும் பொருள் ஆகியவற்றுக்கும் அகராதிகள் அமைக்கப் பட்டுள்ளன. சி. கணேசையர், இராம. கோவிந்தசாமிப் பிள்ளை, எஸ். ராஜம், அடிகளாசிரியர் ஆகியோரது பதிப்புகள் பல்வகை அகராதி அமைத்துள்ளதில் குறிப்பிடத்தக்க பதிப்புகளாகும். பெரும் பாலான பதிப்புகளில் நூற்பா முதற்குறிப்பு அகராதி மட்டுமே உள்ளது.

பதிப்பு வகைகள்

உரைப் பதிப்புகளே முதலில் வெளிவந்தன. பின்னர் மூலப் பதிப்பின் தேவை உணரப்பட்டது. திருக்குறள் மூலம் போலத் தொல் காப்பிய மூலம் தேவை என்று கருதி மூல பாடம் மட்டும் கா. நமச்சிவாய முதலியார் வெளியிட்டார். அவரைத் தொடர்ந்து பு. சி. புன்னைவனநாத முதலியார், மர்ரே எஸ். ராஜம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் ஆகியோரால் மூல பாடப் பதிப்புகள் வெளியிடப்பட்டன. தொல்காப்பியத்தைப் பிற இலக்கணங்களோடும் அதன் உரைகளை ஒன்றோடு ஒன்றும், ஒத்தும் உறழ்ந்தும் ஆயும் ஆர்வம் பல ஒப்பியல் பதிப்புகளைத் தோற்றுவித்தது. சாமுவேல் பிள்ளை, வி. ஐ. சுப்பிரமணியன் & ஆபிரகாம் அருளப்பன், க. வெள்ளைவாரணன், க. ப. அறவாணன், மு. அருணாசலம் பிள்ளை, ஆ. சிவலிங்கனார் முதலியோர் ஒப்பியல் பதிப்புகளை வெளியிட்டனர். வடமொழி இலக்கணக் கருத்து களோடு ஒப்பிட்டுத் தொல்காப்பியத்துக்கு வடமொழி மூலம் கற்பிக்கும் ஆசையும், தமிழர் பண்பாடு தனிச்சிறப்பு வாய்ந்தது என்று உலகுக்கு உணர்த்த வேண்டும் என்னும் ஆர்வமும், எளிய நடையில் உரை எழுத வேண்டும் என்னும் நோக்கும் பல புத்துரைப் பதிப்புகளைத் தோற்றுவித்தன. பாயிரத்துக்குச் சிவஞான முனிவர், அரசஞ் சண்முகனார் ஆகியோர் எழுதிய உரைகளும் பல பதிப்புகள் வெளிவரக் காரணமாக அமைந்தன. மொழிபெயர்ப்புப் பதிப்பு களும் வந்துள்ளன. இதனால் தொல்காப்பியப் பதிப்புகள் பல வகையினவாயின.

பதிப்புகள் பல்கக் காரணம்

தொல்காப்பியத்துக்கு இன்றுவரை (1980) 94 பதிப்புகள் வெளி வந்துள்ளன. இது மறுபதிப்புகளைச் சேர்க்காத கணக்கீடு ஆகும். இவை ஒவ்வொன்றிலும் தொல்காப்பியம் முழுதும் இடம் பெற வில்லை. எனினும் இது தொல்காப்பியக் கல்வியின் வளர்ச்சி

நிலையைக் காட்டுவதாகக் கொள்ளலாம். இவ்வாறு பதிப்புகள் பல்கக் காரணமாகப் பின்வருவனவற்றைக் கூறலாம்.

1. தொல்காப்பியம் மூன்று அகராதிகளைக் கொண்டு ஒவ்வொன்றும் 450க்கு மேற்பட்ட நூற்பாக்களைக் கொண்டு அளவில் பெரியதாக அமைந்தது. உரைகளோடு அச்சிடின் தனித்தனியே ஒவ்வோர் அதிகாரத்துக்கும் ஒரு நூல் என வெளியிட வேண்டியுள்ளது.

2. ஒவ்வொரு அதிகாரத்துக்கும் அமைந்த ஒன்றுக்கு மேற்பட்ட பழைய உரைகள்[11] ஒவ்வொரு அதிகாரத்துக்கும் பல பதிப்புகளைத் தோற்றுவித்தன.

3. பொருளதிகாரம் அளவில் பெரியதாகவும், அதன் நச்சினார்க்கினியர் உரை, பேராசிரியர் உரை சில பகுதிகளுக்கு மட்டும் அமைந்த நிலை பொருளதிகாரத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதிப்புகளை வெளியிட வைத்தது.

4. பொது, சிறப்புப் பாயிரங்களும் அவற்றிற்கமைந்த சிவஞான முனிவர், அரசஞ்சண்முகனாரின் உரைகளும் பாயிரத்தினை உரையோடு தனியே பதிப்பிக்கும் நிலையைத் தோற்றுவித்தது.

5. மூலம் மட்டும் கொண்ட மூல பாடப்பதிப்பு பல மூலப் பதிப்புகளைத் தோற்றுவித்தது.

6. புத்துரைகள் எழுதும் ஆர்வத்தினால் பல புத்துரைப் பதிப்புகள் தோன்றின.

7. பிற இலக்கணங்கள், உரைகள் ஆகியவற்றுடன் ஒப்பிட்டு ஆராய உதவும் வகையில் பதிப்பிக்க எண்ணிய எண்ணம் பல இலக்கண ஒப்பு, உரை ஒப்புப் பதிப்புகளைத் தோற்றுவித்தது.

8. தொல்காப்பியத்தின் சிறப்பினைப் பிற மொழியினருக்கும் உணர்த்த வேண்டும் என்னும் நோக்கம் பல மொழிபெயர்ப்புப் பதிப்புகளைத் தோற்றுவித்தது.

9. கல்லூரி, பல்கலைக்கழகம் இவற்றில் புலவர், இளங்கலை முதுகலை வகுப்புகளுக்கு உரைகளும் ஒப்பீடுகளும் பாடமாக வைக்கப்பட்டதால் பதிப்புகள் பல்கின.

திருத்தப் பதிப்பு

பதிப்பாளர்களுள் பலர் மூலபாடத்தையும் உரையையும் நன்கு ஆராய்ந்த பின்னரே பதிப்பித்தனர். பாடவேறுபாடு உள்ள இடங்களில் அவற்றைக் குறித்தே சென்றுள்ளனர். சி. கணேசையர், மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, கு. சுந்தரமூர்த்தி, தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்றோர் தாம் பதிப்பித்ததில் மேற்கொண்ட

முறைகளையும் சுட்டிச் சென்றுள்ளனர். பதிப்பித்தோரில் பலர், நிறைந்த புலமையும் பதிப்புத்துறையில் அனுபவமும் உடையோர் ஆவர். இருப்பினும் வளர்ந்துள்ள மூலபாடத் திறனாய்வுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பதிப்பிக்கப் பட்ட திருத்தப் பதிப்பாகத் தொல்காப்பியத்துக்கு இதுகாறும் ஒரு பதிப்பும் வெளிவரவில்லை.[40] ஆகவே கிடைக்கும் ஓலைச்சுவடிகள் அனைத்தையும் பழம் பதிப்பினையும் கொண்டு மூலபாடத் திற னாய்வுக் கொள்கையின் அடிப்படை நெறி நின்று ஆராய்ந்த தொல் காப்பிய மூலமும் உரையும் திருத்தப் பதிப்பாக வெளிவரல் இன்றைய தேவையாகும்.

இனி வரவேண்டிய பதிப்புகள்

1. திருத்தப் பதிப்பு

(அ) மூலம் மட்டும்	இவை மூல பாடத் திறனாய்வுக் கொள்கையின் அடிப்படையில் அமைய வேண்டும்.
(ஆ) மூலமும், உரையும்; ஒவ்வோர் அதிகாரத் துக்கும் எல்லா உரை யாசிரியர்களின் உரை யும் தனித்தனியே	

2. ஆராய்ச்சிப் பதிப்பு

இதனுள் (1) தொல்காப்பியம் பற்றிய பொது முன்னுரை, (2) தொல்காப்பியம் —தொல்காப்பியர் பெயர்க்காரணம், (3) தொல் காப்பியரின் காலம், (4) தொல்காப்பிய நூலமைப்பு முறை, (5) உரை (6) உரையாசிரியர்களின் காலம், (7) தொல்காப்பியம் கூறும் இலக்கண இலக்கியப் பொருள் பற்றிய ஆய்வுகள். (8) தொல் காப்பியரின் இலக்கண, இலக்கியக் கோட்பாடுகள், (9) தொல் காப்பியம் காட்டும் சமுதாயம், (10) தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை நெறி, (11) தொல்காப்பியர் கால இறைக் கோட்பாடு முதலிய ஆய்வுக் கருத்துகள் இடம் பெறல் வேண்டும்.

இப்பதிப்புக்கு கி. வா. ஜகந்நாதனின் திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பினை[41] முன்மாதிரியாகக் கொள்ளல் தக்கது.

3. உரைவளப் பதிப்பு

தொல்காப்பியத்தின் பொது, சிறப்புப் பாயிரங்கள். மூன்றதி காரங்களின் 27 இயல்கள் ஆகியவற்றுக்குத் தனித்தனியே எல்லா உரைகளையும் தொகுத்துக் காணும் வகையில் அமைய வேண்டும். (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொல்காப்பியம் சிறப்புப்பாயிரத் துக்கும், நூன்மரபுக்கும் இது போன்ற நூல்களை வெளியிட்டுள்ளது).

4. தொல்காப்பியச் சொல்லடைவு

தொல்காப்பிய மூலமும், சொற்களின் அடைவும் கொண்டதாக இப்பதிப்பு அமைதல் வேண்டும். (இத்தகைய அடைவினை

சென்னைப் பல்கலைக்கழக எம். லிட். பட்டத்துக்கு ஆய்வேடாக ஆர். சீதாபாய் அளித்திருக்கிறார். இது இன்னும் அச்சாகவில்லை. கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையும் தொல்காப்பியச் சொல்லடைவு தயாரித்துள்ளதாகத் தெரிகிறது. க. பாலசுப்பிர மணியன் தனது தொல்காப்பிய மொழியமைப்பு என்னும் டாக்டர் பட்ட ஆய்வேட்டின் துணைப்பயனாகத் தொல்காப்பியச் சொல்லடைவு தயாரித்துள்ளார்.

5. தொல்காப்பியச் சொற்பொருள் விளக்க அகராதி

இதனுள் தொல்காப்பிய மூலமும் தொல்காப்பியச் சொற் களுக்குப் பொருள் விளக்கமும் இருத்தல் வேண்டும்.

6. தொல்காப்பியப் பொருளடைவு

இதனுள் தொல்காப்பிய மூலமும் தொல்காப்பியம் கூறும் பொரு ளும் அடைவு செய்யப்பட்டு உரிய நூற்பா எண்களுடன் தரப்படல் வேண்டும்.

7. தொல்காப்பியக் கருத்து அகராதி

இதனுள் தொல்காப்பியத்தில் கூறப்படும் அனைத்துக் கருத்துக் களும் அகரநிரலில் உரிய நூற்பா எண்களுடன் அமைதல் வேண்டும்.

8. தொல்காப்பிய மேற்கோள் விளக்க அகராதி

(அ) தொல்காப்பிய மூலத்திலும் உரையிலும் மேற்கோளாகக் காட்டப்படும் சொற்கள், தொடர்கள், பாடல்கள் ஆகியவை அடைவு செய்யப்பட்டு உரிய நூற்பா எண், இலக்கிய எண் ஆகியவற்றுடன் அமைதல் வேண்டும். (இது போன்ற அமைப்பில் ம. ஆ. நாகமணி பொருளதிகாரத்துக்கு மட்டும் மேற்கோள் விளக்க அகராதி தயாரித்து வெளியிட்டுள்ளார்).

(ஆ) தொல்காப்பியம் மேற்கோளாக ஆளப்படும் நூல்களும், உரைகளும். (ஆட்சிப் பதிப்பு என்று இதனை வ. சுப. மாணிக்கம் குறிப்பிடுகிறார்).[12] மேற்கோளாக ஆளும் நூல் அல்லது உரை எண்ணுடன், மேற்கோளாக ஆளப்படும் தொல்காப்பிய நூற்பாவும் எண்ணும், ஆகியன இதனுள் இடம் பெறல் வேண்டும்.

9. தொல்காப்பிய ஒப்பியல் பதிப்பு

(அ) வடமொழி இலக்கணக் கருத்துகளோடு ஒப்பு நோக்கும் வகையிலும்

(ஆ) மொழியியல் கருத்துக்களோடு ஒப்புநோக்கும் வகை யிலும் அமைதல் வேண்டும்.

10. தொல்காப்பியம் விளக்கவியல் இலக்கணம் (Descriptive grammar of Tholkappiyam)

இது தொல்காப்பிய மூலமும், தொல்காப்பிய மொழியமைப்பை ஆராய்ந்து எழுதப்பட்ட விளக்கவியல் இலக்கணமும் கொண்டதாக அமைதல் தக்கது. இத்தகைய பதிப்புகள் வெளிவரின் தொல்காப்பியக் கல்வியும் ஆராய்ச்சியும் மேலும் பல வளர்ச்சி நிலைகளை எய்தும்.

பதிப்புகளும் ஆய்வும்

ஏட்டுச் சுவடிகளைத் தேடிப் பெறுதல், அவைகளை ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுச் சரியான மூலபாடத்தையும் உரையையும் தேர்தல், அவற்றைப் படி எடுத்தல், விளக்கக் குறிப்புகள் எழுதுதல், நூற்பா, உரை இவற்றுக்கு அகராதி அமைத்தல், நூலாசிரியர் உரையாசிரியர் தொடர்பான வரலாற்றுச் செய்திகள், புலமை ஆகியவற்றை ஆராய்ந்து எழுதுதல் இவைபோன்ற செயல்களைக் கொண்ட பதிப்புக்கலை அரியதோர் ஆய்வுத்துறையாகும். இத்தகைய ஆய்வுகளைச் செய்து பதிப்பித்த பதிப்பாளர்களின் தொண்டு போற்றத்தக்கதாகும்.

ஏட்டுச் சுவடிகளைத் தேடிப்பெறுதல் அன்றும் இன்றும் அரியதொரு செயலாகவே உள்ளது. சுவடிகளைப் பெற்றிருப்பவர்களும் அவற்றைப் பதிப்பிப்போருக்குக் கொடுக்கத் தயங்குகின்றனர்; அல்லது தாமே பதிப்பிக்க முன்வருவதும் இல்லை. இந்த நிலைமையில் பல இன்னல்களைக் கடந்து ஏடுகளைப் பெற்று அவற்றை ஆராய்ந்து படித்துப் படி எடுத்தல் எளிய செயலன்று. அந்நாளில் இத்தகைய நூல்களை வாங்கிப் படிப்போரின் தொகையும் மிகக் குறைவு. ஆனால் அச்சிடுவதில் பொருட்செலவு மிகுதி. பெரும்பாலும் நன்கொடையாகவோ அல்லது முன்பணமாகவோ பெற்ற பொருளைக் கொண்டே அச்சிடப்பட்டிருக்கும். அதனால் சில பதிப்புகளில் முதல் பக்கத்திலேயே பதிப்பாசிரியர் பெயருடன் அதற்குப் பொருளுதவி செய்தோர் பெயரும் இடம் பெற்றிருக்கும். இந்த நிலையிலும் பிழையின்றி நூல்களை அச்சிட வேண்டும் என்ற நேர்மையுணர்வு பதிப்பாளர்களிடத்து இருந்து வந்தது. சி. வை. தாமோதரம் பிள்ளை தமக்கு ஐயங்கள் தோன்றிய போதெல்லாம் அதனைத் தெளிவிக்க வேண்டி அறிஞர்களுக்குக் கடிதம் எழுதுதல் வழக்கம். தமது நூலில் 50 பிழைகளைச் சுட்டிக் காட்டுவோருக்கு ஒரு நூல் இலவசமாக அளிப்பதாகவும் அறிவித்தார். இது போன்ற பல தடைகளையும் கடந்து தொல்காப்பியத்தினைப் பதிப்பித்து அஃது அழிந்து போகாது காத்த பதிப்பாளர்களின் உழைப்பும், தொண்டும் என்றும் நினைவு கூறத்தக்கது.

இன்றுவரை தொல்காப்பியத்துக்கு வந்துள்ள பதிப்புகளின் வழியாகத் தொல்காப்பிய ஆய்வும் நிகழ்ந்துள்ளது. பதிப்புரை, முன்னுரை, அணிந்துரை இவற்றால் தொல்காப்பியரது காலம், சமயம், பிறப்

பிடம், உரையாசிரியர்களின் காலம், உரைத்திறன் போன்றவற்றைப் பற்றி ஆராய்ந்து எழுதியுள்ளனர். பதிப்புரையில் முந்தைய பதிப்புகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இது பதிப்புகளின் வரலாற்றினை அறியத்துணை செய்கிறது. பதிப்பாசிரியர்கள் குறிப்புரை, விளக்கவுரை போன்றவற்றை எழுதி உரைகளுக்கு விளக்கம் தந்தும், பொருந்துவன பொருந்தாதனவற்றை எடுத்துக்காட்டியும், ஒப்புமைப் பகுதிகளைத் தந்தும் உள்ளனர். நூற்பா, உரை, மேற்கோள் போன்றவற்றுக்கு அகராதிகளை அமைத்துள்ளனர். இவற்றைத் தொல்காப்பியப் பதிப்பு வரலாற்றில் பதிப்பாளர்களின் குறிப்பிடத்தக்க ஆய்வுப் பங்காகக் கருதலாம்.

பதிப்பாளர்கள் சிறந்த உரையாளர்களாகவும் விளங்கியுள்ளனர். சி. கணேசையர், அடிகளாசிரியர், கு. சுந்தரமூர்த்தி, தேவநேயப் பாவணர் போன்றோர் சிறந்த முறையில் குறிப்புரை, விளக்கவுரைகளை எழுதியுள்ளனர். பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, ச. சோமசுந்தர பாரதியார், வெள்ளைவாரணன், அ. கு. ஆதித்தர் போன்றோர் புத்துரைகளை எழுதியுள்ளனர். ஒப்பியல் பதிப்புகளை வெளியிட்ட பதிப்பாளர் தொல்காப்பியத்தைப் பல நோக்குகளில் ஆராய்தற்குக் கருவி நூல்களாக அவற்றை ஆக்கினர். இவ்வகையில் சாமுவேல் பிள்ளை, க. வெள்ளைவாரணன், ச. வே. சுப்பிரமணியன், க. ப. அறவாணன் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இங்ஙனம் தொல்காப்பியப் பதிப்புகள், ஆய்வுக்குக் கருவி நூல்களாக விளங்கும் தன்மையைப் பெற்றிருக்கின்றன.

பதிப்புப் பற்றிய ஆய்வுகள்

பதிப்பு விவரம் தரும் மூலங்கள்

பதிப்புகளின் வரலாற்றை அறியத் துணைபுரியும் மூலங்களாகச் சில பதிப்புகளும், பதிப்புகளில் வெளிவந்துள்ள அட்டவணைகளும், அடைவுகளும், பதிப்புகளைப் பற்றிய கட்டுரைகளும் பயன்படுகின்றன.

1922-இல் சி. புன்னைவன நாத முதலியார் வெளியிட்ட மூலப் பதிப்பிலும், சி. கணேசையர் 1937-இல் வெளியிட்ட எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பிலும் முந்தைய பதிப்புகள் பற்றிய குறிப்புகள் அடங்கியுள்ளன. வ. சுப்பையா பிள்ளை 'செந்தமிழ்ச் செல்வி'யில் (தொகுதி — 45, ப-ம். 495-503, 545-556, 596-605) எழுதிய 'பதிப்புத்துறையில் பட்டறிவு' என்ற கட்டுரையில் சில குறிப்புகள் காணப்படுகின்றன. மு. அருணாசலம் அவர்களின் தமிழ் இலக்கிய வரலாறு 11-ஆம் நூற்றாண்டு என்னும் நூலில் இளம்பூரணப் பதிப்பு வரலாறும், தொல்காப்பிய உரைப் பதிப்புகளின் கால முறை அட்டவணையும் கொடுக்கப்பட்டுள்ளன. 'தமிழாய்வு' தொகுதி-1-இல் வெளிவந்த க. த. திருநாவுக்கரசு அவர்களின் 'தொல்காப்பிய நூலடைவு' பல பதிப்புகள் பற்றிய குறிப்புகளைத் தருகிறது. 1977-இல் க. ப. அறவாணன் வெளியிட்ட 'தொல்காப்பியக் களஞ்சியம்' 1974 வரை 68 பதிப்புகள் வந்துள்ளதாகக்

காலமுறையில் தொகுத்துக் கொடுத்துள்ளது. 'தமிழாய்வு' தொகுதி 5-இல் பொன். கோதண்டராமன் தந்த 'தமிழ் இலக்கண அகரவரிசை தொல்காப்பியப் பதிப்புகள் பலவற்றைப் பற்றிய குறிப்புகளைத் தந்துள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஆசிரியர்களது 'தொல்காப்பியச் சிந்தனைகளி'ல் ச. மெய்யப்பன் எழுதிய கட்டுரை 1976 வரை 55 பதிப்புகள் வெளிவந்துள்ளதாகக் கூறுகிறது. 'தமிழாய்வு' தொகுதி 8-இல் மு. சண்முகம் பிள்ளை எழுதிய 'தொல்காப்பியப் பதிப்புகள்' என்னும் கட்டுரையில் பதிப்புகள் பறறிய அட்டவணைகளைத் தந்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட பதிப்பு விவரம் தரும் மூலங்களில் உள்ள பதிப்புப் பற்றிய விவரங்கள் யாவும் சரியானவை என்று கொள்ள முடியாது. சில தவறுகளும் உள்ளன.[43] இருப்பினும் தொல்காப் பியப் பதிப்புகளின் வரலாற்றை அறிய இவை பெருந்துணை புரிவன.

பதிப்பு ஆய்வுகள்

ஏடுகளில் இருந்ததை அழிந்து போகாமல் அச்சுக்குக் கொணர்ந்து பாதுகாத்த பதிப்பாளர்கள் அதனைப் பிழையின்றி அச்சிட வேண்டும் என்னும் உணர்வினைக் கொண்டிருந்தனர்.[44] ஏட்டிலிருந்து அச்சிடும்போது எந்தவிதத் திருத்தமும் செய்து விடலா காது என்ற எச்சரிக்கைப் பண்பும்,[45] உண்மையை உணர்த்தும் நேர்மையும்[46] அவர்களிடத்துக் காணப்பட்டது.

1885–இல் பொருளதிகார நச்சினார்க்கினியர் உரையைச். சி. வை. தாமோதரம் பிள்ளை வெளியிட்டபோது அதன் இறுதி நான்கியல் களில் உள்ள உரை நச்சினார்க்கினியருடையதல்ல; பேராசிரியர் உரை என்று ஆராய்ந்து ரா. ராகவையங்கார் தெளிவுபடுத்தினார். (அடிக்குறிப்பு 20 காண்க)

1868–இல் வெளிவந்த சேனாவரையப் பதிப்புகளில் பல திருத் தங்களைக் கூறி 'சேனாவரையவாராய்ச்சி'[47] என்னும் கட்டுரையைச் 'செந்தமிழ்'ல் அ. கோபாலையர் எழுதினார். 'சேனாவரையருரைப் பதிப்பும் பிழை திருத்தமும்' என்னும் தலைப்பில் சி. கணேசையர்,[48] ஐ. ராஜு முதலியார்[49] ஆகியோர் கட்டுரைகளை எழுதினர்.

சொல்லதிகாரத்துக்குத் தெய்வச்சிலையார் உரை இருப்பது கண்டு அச்சிட்டபோது அது பேராசிரியர் உரை எனப் பிறழ உணரப் பட்டது.[50] பின்னர் உ. வே. சாமிநாதையரிடமிருந்த ஏட்டினைக் கொண்டே அது தெய்வச்சிலையார் உரை என்று தெளிவு பிறந்தது. அப்போது அது பேராசிரியர் உரையன்று என்பதைப் பல காரணங்கள் காட்டித் "தொல்காப்பியச் சொல்லதிகார உரை யாசிரியரும் தெய்வச்சிலையாரும்" என்னும் கட்டுரை மூலம் ம. நா. சோமசுந்தரம் பிள்ளை தெளிவுபடுத்தினார்.[51]

வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பதிப்புகளை ஆராய்ந்து மு. சண்முகம் பிள்ளை,[52] க. ப. அறவாணன்,[53] க. சுப்பிரமணியன்,[54] ஆகியோர் கட்டுரைகள் எழுதியுள்ளனர்.

தொல்காப்பியப் பதிப்புகளைப் பற்றிய ஆய்வுக்கட்டுரையினை மு. சண்முகம் பிள்ளை எழுதியுள்ளார். அது 'தமிழாய்வு' 8–ஆம் தொகுதியில் வெளிவந்துள்ளது. (அடிக்குறிப்பு 11 காண்க).

இவை இதுவரை பதிப்புகளைப் பற்றி வெளியான செய்திகள் ஆகும்.

தொகுப்புரை

தொல்காப்பியப் பதிப்புகள் குறித்த இந்த இயலில் ஆராயப் பட்ட செய்திகளை இங்கே தொகுத்துக் காணலாம்.

1. தொடக்க காலத்தில் தொல்காப்பியத்தை ஓலைச்சுவடிகளையும் ஏடுகளையும் கொண்டே பயின்று வந்தனர். தொல்காப் பியத்தில் புலமை பெற்றோரும், மிகச் சிலராக இருந்ததால் தொல் காப்பியக் கல்வி அருகியே இருந்தது. அச்சாகி வெளிவந்த பின் இது பலரும் கற்கும் நிலையினை அடைந்தது.

2. தொல்காப்பியத்துக்கு இன்றுவரை வந்துள்ள பதிப்புகளை ஆறு வகையாகப் பகுக்கலாம். அவை வருமாறு:

1. மூலப் பதிப்புகள்
2. உரைப் பதிப்புகள்
3. புத்துரைப் பதிப்புகள்
4. பாயிரப் பதிப்புகள்
5. ஒப்பியல் பதிப்புகள்
6. மொழிபெயர்ப்புப் பதிப்புகள்

3. இவ் ஒவ்வொரு வகையிலும் வந்துள்ள முதல் பதிப்புகள் வருமாறு.

1. மூலப் பதிப்பு (தொல்காப்பிய மூலம் மட்டும் கொண்டது)
சி. புன்னைவன நாத முதலியார் — *1922*
கா. நமச்சிவாய முதலியார் — *1922*
(எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்)

2. உரைப் பதிப்புகள்

1. எழுத்து: இளம்பூரணம்
சோடசாவதானம் சுப்பராயச் செட்டியார் — *1868*

2. எழுத்து: நச்சினார்க்கினியம்
(தொல்காப்பியத்துக்கு முதன்முதலில் வந்த பதிப்பு இதுவே).
மழைவை மகாலிங்கையர் — *1848*

3. சொல்: இளம்பூரணம்
கா. நமச்சிவாய முதலியார் — *1927*

4. சொல்: சேனாவரையம்
சி. வை. தாமோதரம் பிள்ளை — *1868* (விபவ — புரட்டாசி)
கோமளபுரம் ராசகோபாலப்பிள்ளை — *1868* (விபவ — கார்த்திகை)

5. சொல்: நச்சினார்க்கினியம்
சி. வை. தாமோதரம் பிள்ளை — 1892
6. சொல்: கல்லாடர் உரை & பழைய உரை
கு. சுந்தரமூர்த்தி — 1964
7. சொல்: தெய்வச்சிலையார் உரை
ஆர். வேங்கடாசலம் பிள்ளை — 1929
8. பொருள்: இளம்பூரணம்
அகத்திணையியல், புறத்திணையியல்
கா. நமச்சிவாய முதலியார் — 1920
9. பொருள்: இளம்பூரணம்
களவியல், கற்பியல், பொருளியல்
வ. உ. சிதம்பரம் பிள்ளை — 1933
10. பொருள்: இளம்பூரணம்
மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல்
வ. உ. சிதம்பரம் பிள்ளை — 1936
11. பொருள்: நச்சினார்க்கினியம்
முன் ஐந்து இயல்கள்
சி. வை. தாமோதரம் பிள்ளை — 1885
12. பொருள்: பேராசிரியம்
இறுதி நான்கு இயல்கள்
சி. வை. தாமோதரம் பிள்ளை — 1885
13. பொருள்: நச்சினார்க்கினியம்
செய்யுளியல்
ரா. ராகவையங்கார் — 1917

3. புத்துரைப் பதிப்புகள்
1. எழுத்து — பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி — 1937
2. சொல் — பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி — 1930
3. பொருள்: அகத்திணையியல்
தி. சு. பாலசுந்தரம் பிள்ளை — 1938
4. பொருட்படலம்: புத்துரைகள்
ச. சோமசுந்தர பாரதியார்
(அ) அகத்திணையியல் — 1942
(ஆ) புறத்திணையியல் — 1942
(இ) மெய்ப்பாட்டியல் — 1942

4. பாயிரப் பதிப்புகள்
கா. நமச்சிவாய முதலியார் — 1922

5. ஒப்பியல் பதிப்புகள்

1. இலக்கண ஒப்பு
தொல்காப்பிய நன்னூல்
சாமுவேல் பிள்ளை — 1858

2. உரை ஒப்பு
செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையும் உரை யாசிரியர் உரையும், ரா. ராகவையங்கார் — 1917

6. மொழிபெயர்ப்புப் பதிப்புகள்

1. எழுத்து
பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி — 1930

2. சொல்
பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி — 1945

3. பொருள்
அகத்திணையியல்
ஆர். வாசுதேவ சர்மா — 1933

4. பொருள் முதல் ஐந்து இயல்கள்
இ. எஸ். வரதராஜ அய்யர் — 1948

5. தொல்காப்பியம் முழுவதும்
சி. இலக்குவனார் — 1963

இந்த ஒவ்வொருவகைப் பதிப்புகளும் காலமுறையில் வரிசைப் படுத்தப்பட்டு அவற்றின் அமைப்பு ஆராயப்பட்டது. உரைப் பதிப்புகளில் சில மிகுதியாகவும், சில குறைவாகவும் வெளிவந்ததற் கான காரணங்கள் சுட்டிக் காட்டப்பட்டன.

4. முதன்முதலில் எழுத்ததிகார நச்சினார்க்கினியர் உரையை வெளியிட்டவர் மழைவை மகாலிங்கையர்; சி. வை. தாமோதரம் பிள்ளை அல்லர்.

5. தாண்டவராய முதலியார் தொல்காப்பியத்தைப் பதிப்பித் தார் என்னும் கருத்து ஏற்புடையதன்று.

6. கோமளபுரம் ராசகோபாலப் பிள்ளை சேனாவரையர் உரைப் பதிப்பினை வெளியிடவில்லை என்ற சி. கணபதிப் பிள்ளை யின் கூற்று ஆதாரமற்றது.

7. பதிப்புகளில் தொடக்ககாலப் பதிப்புகளினின்றும் அடுத்த கால கட்டத்தில் வந்த பதிப்புகள் அச்சு வடிவ வேறுபாடு, பத்தி பிரிப்பு, அதிகார, இயல் எண்கள் தனித்தனியே அமைத்தல் போன்ற திருத்தங்களைக் கொண்டு அமைந்தன.

8. காலந்தோறும் பதிப்புகளில் காணப்படும் பொதுவான வளர்ச்சிமுறை, பதிப்புரை — முன்னுரை, நூற்பா உரை அமைப்பு,

அடிக்குறிப்புகள், அகராதிகள் ஆகிய குறுந்தலைப்புகளில் ஆராயப் பட்டன.

9, தொல்காப்பியப் பதிப்புகள் ஆறுவகையானதற்கும் எண்ணிக்கையில் பல்கிப் பெருகியதற்கும் காரணங்கள் எடுத்துக் காட்டப்பட்டன.

10. 1980 வரை தொல்காப்பியத்திற்கு 94 பதிப்புகள் வந்திருந்தும் திருத்தப்பதிப்பு ஒன்று வெளிவராமை சுட்டிக் காட்டப் பட்டது.

11. தொல்காப்பியத்துக்கு இனிவரும் பதிப்புகள் எந்த முறையில் அமையலாம் என்பதும் விளக்கப்பட்டது

12. 'பதிப்புகளும் ஆய்வும்' என்னும் குறுந்தலைப்பில் பதிப்பு ஓர் அரிய ஆய்வுத்துறை என்பதும், தொல்காப்பியப் பதிப்பாளர் களுக்கு நேர்ந்த சிக்கல்களும் சுட்டிக் காட்டப்பட்டன. இப் பதிப்பாளர்கள் பதிப்பாளர்களாக மட்டும் அல்லாமல் ஆய்வாளர் களாகவும் விளங்கினர் என்பதும், பதிப்புகள்வழி நிகழ்ந்த ஆய்வும் ஆராயப்பட்டன.

13. 'பதிப்பு பற்றிய ஆய்வுகள்' என்னும் தலைப்பில் பதிப்பு விவரம் தரும் மூலங்கள், அட்டவணைகள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகிய வடிவங்களில் பதிப்பாய்வு நிகழ்ந்துள்ளது என்று எடுத்துக் காட்டப்பட்டது.

இந்த ஆய்வின் வரையறை

1980 வரை வந்துள்ள தொல்காப்பியப் பதிப்புகளைத் தொகுத்து, பகுத்து, அவற்றைக் காலநிரலில் வரிசைப்படுத்தி, அவற்றின் அமைப்பு முறை, சில வகைகளில் மிகுதி அல்லது குறைவுக்குக் காரணம், பொதுவான வளர்ச்சி நிலை ஆகிய முறைகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பதிப்புகள் வகைகளில் மிகுந்த தற்கும் எண்ணிக்கையில் பல்கியதற்கும் காரணங்களும் ஆராயப் பட்டன. பதிப்புகள் வழியாக நிகழ்ந்த ஆய்வும் பதிப்புகளைப் பற்றி எழுந்த ஆய்வும் எடுத்துக்காட்டப்பட்டன.

ஒவ்வொரு வகையிலும் முதல் பதிப்புக்கும் அடுத்தடுத்த பதிப்புகளுக்கும் உள்ள வளர்ச்சி நிலை, பதிப்பாளர்கள் கொண்ட பதிப்பாய்வு முறைகள், மூலம் உரை இவற்றில் எந்தப் பதிப்பு சிறந்தது முதலிய செய்திகளைக் கண்டறியும் நோக்கில் தொல் காப்பியப் பதிப்புகளை மேலாய்வு செய்யும் வாய்ப்பு உள்ளது.

குறிப்புகள்

1. **மா. சு. சம்பந்தன், அச்சும் பதிப்பும்** (சென்னை, 1980), ப-ம். 470.

2. சி. வை. தாமோதரம் பிள்ளை (பதி.), **தொல்காப்பியம் — பொருளதிகாரம் நச்சினார்க்கினியம்** (சென்னை, 1885), பதிப்புரை.

3. அம்பலவாணக் கவிராயர் (பதி.), திருக்குறள் மூலம் (திருச்சி, 1811), மு. இரா. இராமாநுசக் கவிராயர் (பதி.), திருக்குறள் பரிமேலழகர் உரை அமெரிக்க மிசியேன் அச்சுக்கூடம், சென்னை, 1840 ஆகிய இரு பதிப்புகள் திருக்குறளுக்கு வெளிவந்துள்ளன.

4. பி. சிதம்பர புன்னைவனநாத முதலியார் (பதி.). **தொல் காப்பிய மூலம்** (சென்னை, 1922), பதிப்புரை, ப-ம். xxxi.

5. புன்னைவனநாத முதலியார் முந்தைய பதிப்புகளில் நூற்பாத்தொகை வேறுபடக் காரணம் என்ன என்பதை அப்பதிப்புகளையும் நூற்பாத்தொகை கூறும் பழம்பாடல் களையும் ஒப்பிட்டுத் தாம் ஆராய்ந்த முறை பற்றி விரிவாகப் பதிப்புரையில் எழுதியுள்ளார்.

6. மு. இராமலிங்கனார், **தொல்காப்பிய வளம்** (திருச்சி, 1969), ப-ம். 9.

7. இராசபாளையம் மணிமேகலை மன்றத்தினரின் வழியாக பூ. கு. குப்புசாமி ராஜா செய்யுளியலின் இரு சூத்திரங் களுக்குத் தகுந்த விளக்கக் கட்டுரை எழுதும் போட்டி ஒன்றுக்கு பரிசு ரூ. 1000 என அறிவித்திருந்தார். அதில் முதற்பரிசாக திரு அடிகளாசிரியர் ரூ. 500-உம் பிற ஐவர் தலைக்கு ரூ. 100-உம் பெற்றனர்.

8. **கலைக்களஞ்சியம்**, தொகுதி — 5 (சென்னை, 1958), ப-ம். 578.

9. (அ) ஆ. சிவலிங்கனார் (பதி.), **தொல்காப்பியம் எழுத் ததிகாரம்: உரைவளம்: நூன்மரபு** (சென்னை, 1980), ப-ம், 170.

(ஆ) ஆ. சிவலிங்கனார் (பதி.), **தொல்காப்பியம் சிறப்புப் பாயிரம்: உரைவளம்** (சென்னை, 1980), ப-ம். 222.

10. 1847 என்று குறிப்பிடுவோர்

(அ) பொன். கோதண்டராமன், "தமிழிலக்கண அகரவரிசை", **தமிழாய்வு**, தொகுதி — 5 (சென்னை, 1977), ப-ம். 10.

(ஆ) மா. சு. சம்பந்தன், **அச்சும் பதிப்பும்**, ப-ம். 450.

இவரே இந்நூலின் 208-ஆம் பக்கத்தில் 1848 எனக் குறிப்பிட்டுள்ளார்.

(இ) வ. சுப்பையா பிள்ளை, "பதிப்புத்துறையில் பட்டறிவு", **செந்தமிழ்ச் செல்வி** — 45, ப-ம். 545-552.

1849 என்று குறிப்பிடுவோர்

(அ) க. ப. அறவாணன் & தாயம்மாள் அறவாணன், **தொல் காப்பியக் களஞ்சியம்** (சென்னை, 1975), ப-ம். 119.

(ஆ) மு. அருணாசலம், **தமிழிலக்கிய வரலாறு. 11 ஆம் நூற்றாண்டு** (மாயூரம், 1971), ப-ம். 409.

11. மு. சண்முகம் பிள்ளை, "தொல்காப்பியப் பதிப்புகள்", **தமிழாய்வு-8** (சென்னை, 1978), ப-ம். 24.

12. சி. கணபதிப் பிள்ளை, "தொல்காப்பியப் பதிப்பு: தமிழ் தந்த தாமோதரம் பிள்ளையின் பரோபகாரம்", **ஈழகேசரி**, 17. 9. 1950.

13. 1. வேற்றுமைப் பொருளை ... **செந்தமிழ்**- 27: 7, 9.
 2. பிறிது பிறிதேற்றல் ,, 27: 1.
 3. ஆறனுருபு பிறிது பிறிதேற்றல் ,, 25: 9.
 4. இருபெயரொட்டாகு பெயரும் அன்மொழித்தொகையும் ,, 28: 12.
 5. தொகைநிலை ,, 26: 1.

13அ. பொருட்புடை பெயர்ச்சி ,, 43: 6.

14. சி. வை. தாமோதரம் பிள்ளை (பதி.), **தொல்காப்பியம் சொல்லதிகாரம் நச்சினார்க்கினியம்** (சென்னை, 1892), 'நன்றிகூறல்'.

15. மு. சண்முகம் பிள்ளை, 'தொல்காப்பியப் பதிப்புகள்", **தமிழாய்வு-8**, (சென்னை, 1978), ப-ம். 36.

16. (அ) ஆர். வேங்கடாசலம், **தொல்காப்பியம் சொல் லதிகாரம் பேராசிரியருரை**, '**தமிழ்ப்பொழில்-1**: 4 (1921), ப-ள். 123-130.

(ஆ) ஆர். வேங்கடாசலம், பேராசிரியர் உரைக்குறிப்பு", **தமிழ்ப்பொழில்-1**: 5 (1921), ப-ள். 162-169.

17. ம. நா. சோமசுந்தரம் பிள்ளை, தொல்காப்பியச் சொல் லதிகார உரையாசிரியரும் தெய்வச்சிலையாரும்", **செந் தமிழ்-28**: 11 (1930), ப-ள், 457-484.

18. "இதனை வெளியிடுவதற்குக் கிடைத்த கடிதப் பிரதிகளுள் ஒன்று த. மு. சொர்ணம்பிள்ளை அவர்களுடையதாகும். அவர்கள் பிரதி செய்யும்பொழுது உரையில் இல்லாத பல சொற்றொடர்களை இடையிடையே பெய்திருக்கிறார்கள் என்பது பல காரணங்களால் ஊகிக்கக் கூடியதாயிருக்கிறது. பிறிதொரு பிரதி ஸ்ரீமான் தி. நா. சுப்பிரமணிய ஐயரிட மிருந்து கிடைத்தது. இது சொர்ணம் பிள்ளையவரது பிரதியைப் பார்த்து எழுதிய கடிதப் பிரதியின் பிரதியென்று தெரிய வருகிறது. இதிலும் பலவித இடைச்செருகல்கள் உள்ளன. மூன்றாவது பிரதி ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்

பிள்ளையவர்களுக்குரியது. இது 1912-இல் ஸ்ரீமான் தி. த கனகசுந்தரம் பிள்ளையவர்கள் ஏட்டுப்பிரதியைப் பார்த்து எழுதிய கைப்பிரதியாகும். இதுவே இடைச்செருகல்களைத் தெரிந்து கொள்வதற்கும் மூலத்தின் சுத்த பாடத்தை நிச்சயிப்பதற்கும் பெரிதும் பயன்பட்டது. இதனையே த. மு. சொர்ணம் பிள்ளையவர்கள் இரவலாகப் பெற்றுத் தமக்குத் தோன்றியவாறு பலவிடங்களில் மாற்றியுங் கூட்டியும் பிரதி செய்து கொண்டார்கள்''.

— வ. உ. சிதம்பரம் பிள்ளை பதி.). **தொல்காப்பியம் இளம் பூரணம்: களவியல், கற்பியல், பொருளியல்**, (சென்னை, 1930), பதிப்பாசிரியர் குறிப்பு.

19. ''இவ்வேழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியன் யான். உண்மையிற் பதிப்பாசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உன்னற்பாலது''.

— வ. உ. சிதம்பரம் பிள்ளை, **தொல்காப்பியம்: பொருளதிகாரம். இளம்பூரணம்: மெய்ப்பாட்டியல், உவமையியல்,** செய்யுளியல், மரபியல் (சென்னை, 1935), பதிப்புரை.

20. ரா. ராகவையங்கார், ''அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரைகாரர் பேராசியரென்பது'', **செந்தமிழ்**-1:1 (1903), ப-ள். 42–45; ரா. ராகவையங்கார், ''அச்சிட்ட தொல் காப்பியச் செய்யுளியலுரை'' **செந்தமிழ்**: 2:11. இக்கட்டுரை களின் வாயிலாகச் சீவகசிந்தாமணி, பெரும்பாணாற்றுப் படை, கலித்தொகை, பொருளதிகாரத்தின் அகத்திணை, புறத்திணை, பொருள் இயல்களின் நச்சினார்க்கினியரின் உரைகளோடு இவ்வுரை முரண்படுவதாலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் உள்ள ஏடுகள் இரண்டிலும் இவ்வுரை பேராசிரியர் உரை என்னும் குறிப்பு உள்ளதாலும் இது நச்சினார்க்கினியர் உரையன்று; பேராசிரியர் உரையே என்று தெளிவுபடுத்துகிறார்.

21. **தாமோதரம்** (சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்பித்த நூல்களுக்கு எழுதிய பதிப்புரைகளின் தொகுப்பு) (யாழ்ப் பாணம், 1971).

இந்நூலில் சி. வை. தாமோதரம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு, அவர் எழுதிய பதிப்புரைகள், 1868-இல் சி. வை. தாமோதரம் பிள்ளை பதிப்புக்கு இரண்டு மாதங்கள் கழித்து வந்த இராசகோபாலப் பிள்ளையின் சேனாவரையப் பதிப்பு பற்றி 1950-இல் **ஈழ கேசரியில்** சி. கணபதிப்பிள்ளை எழுதிய கட்டுரையின் பகுதி ஆகியன அடங்கியுள்ளன.

22. ச. பவானந்தம் பிள்ளை (பதி.). **தொல்காப்பியப் பொருளதிகாரம்: நச்சினார்க்கினியம்: அகத்திணையியல், புறத்திணையியல்** (சென்னை, 1916).

இந்நூலின் பின்பக்க அட்டையில் காணப்படும் விளம்பரத்தில் இந்நூல் அச்சில் உள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

23. "உதாரணச் செய்யுள்களுக்கு முதற்குறிப்பகராதி, பிழை திருத்தங்கள், ஆராய்ச்சிக் குறிப்புகள் முதலியன தனிப் புத்தகமாக வெளியிடப்படும்" என்னும் குறிப்பு **தொல் காப்பியம் பொருளதிகாரம்; பேராசிரியம்; செய்யுளியல், மரபியல்** (சென்னை, 1917) என்னும் நூலின் இறுதிப் பக்கத்தில் காணப்படுகிறது.

24. ச. மெய்யப்பன், 'தொல்காப்பியப் பதிப்புகள்". **தொல் காப்பியச் சிந்தனைகள்** (அண்ணாமலை நகர், 1978), ப-ம் 46.

25. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, **தொல்காப்பியச் சொல்லதி காரக் குறிப்பு** (திருச்சி, 1930), முகவுரை, ப-ம் xvi.

26. பேராசிரியர் உரை, தொல். 1598.

27. கா. நமச்சிவாய முதலியார் (பதி.), **தொல்காப்பியம் எழுத் ததிகாரம் சொல்லதிகாரம்** (சென்னை, 1922).

இந்நூலின் இறுதிப் பக்க அட்டையில் இது பற்றிய குறிப்பு காணப்படுகிறது.

28. சிறப்புப் பாயிரத்தினைக் கமில் சுவலபில் மொழிபெயர்த் துள்ளார். இது தமிழியல் (Journal of Tamil Studies, Vol. 1 September 1972, p. 42) இதழில் வெளிவந்துள்ளது.

29. "The Tholcapyam and the Nunnool are in other words no other than the Eyndrum and Paninium in principle. The former is treated more upon the Inductive method. The Nunnool lays down general rules and divides it's subjects orderly into general classes and species and particulars; The Tholcapyam gives a few general rules only and that too in no regular order. It is for the most part one continued string of particulars and individuals, and the reader has the labour either to commit sutras to memory or to compare them with others before he can arrive at a definite conclusion".

—Samuel Pillai, ,'Comparative merits of the Tholcapyam and the Nunnool "*Tolcapya Nunnool*" (Madras, 1858).

30. சிவஞான முனிவர் காட்டிய பன்னிரண்டு வேறுபாடுகளை மு. வை. அரவிந்தன் எடுத்துக்காட்டியுள்ளார். மு. வை. அரவிந்தன், **உரையாசிரியர்கள்** (சென்னை, 1977), ப-ள். 602-603.

31. மா. சு. சம்பந்தன், **அச்சும் பதிப்பும்**' ப-ம், 500.

32. இலக்கணத் தொகை — யாப்பு — பாட்டியலில் அடங்கியுள்ள நூல்கள்

தொல்காப்பியம் — செய்யுளியல்	வீரசோழியம் — யாப்பதிகாரம்
அவிநயம்	இலக்கண விளக்கம் — செய்யுளியல்
காக்கை பாடினியம்	தொன்னூல் விளக்கம்— யாப்பதிகாரம்
அமுத சாகரம்	முத்துவீரியம் — யாப்பதிகாரம்
யாப்பருங்கலம்	சுவாமிநாதம்—யாப்பதிகாரம்
யாப்பருங்கலக்காரிகை	விருத்தப்பாவியல்
சான்றிலக்கியம்	
பாப்பாவினம்	
சிதம்பரச் செய்யுட்கோவை	
திருவலங்கற்றிரட்டு — பல் சந்தப்பரிமளம்	
பாட்டிலக்கியம்	
இந்திரகாளியம்	பிரபந்த மரபியல்
பன்னிரு பாட்டியல்	சிதம்பரப் பாட்டியல்
வெண்பாப் பாட்டியல்	இலக்கண விளக்கம் — பாட்டியல்
வரையறுத்த பாட்டியல்	பிரபந்த தீபிகை

ச. வே. சுப்பிரமணியன், இலக்கணத்தொகை: யாப்பு, பாட்டியல் (சென்னை, 1978).

33. மு. சண்முகம் பிள்ளை, "தொல்காப்பியப் பதிப்புகள்", தமிழாய்வு-8 (சென்னை, 1978). இக்கட்டுரையின் பிற்சேர்க்கை-1 'தொல்காப்பியக் களஞ்சியம் தரும் பதிப்பு விவரம்' என்னும் பகுதியில் பல திருத்தங்கள் கூறப்பட்டுள்ளன.

34. மு. சண்முகம் பிள்ளை, "தொல்காப்பியப் பதிப்புகள்", தமிழாய்வு-8 (சென்னை, 1978), ப-ம். 36.

35. முத்துச் சண்முகன் & தா. வே. வீராசாமி (பதி.), தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியல் உரைவளம் — மு. அருணாசலம் பிள்ளை ஆய்வுரை (மதுரை, 1975), முன்னுரை.

36. *Journal of Tamil Studies*, Madras.

Vol. 1 Sep. 1972 pp. 42-60
Vol. 2 Dec. 1972 pp. 13-29
Vol. 3 Sep. 1973 pp. 17-27
Vol. 4 Dec. 1973 pp. 13-23
Vol. 5 Sep. 1974 pp. 33-36
Vol. 7 June 1975 pp. 62-66
Vol. 8 Dec. 1975 pp. 8-11

37. "The Tolkappiyam has been translated partly or fully into English before with a strong pro-Sanskritic and an equally anti-Sanskritic bias... I would call-begging the pardon of the readers the translation which presented here, a no-non-sense translation."

—Kamil Zvelebil, "Tolkappiyam" Journal of Tamil Studies, Vol. 1 (Sept. 1972), p. 42.

38. M. Mariappa Bhat, "Tolkappiyam in Kannada", *Annals of Oriental* Research (1963), Vol. xvii, Part 1-2. Ezhuthachan, "Tolkappiyam Eluttatikaram" (Malayalam Translation), *Annals of Oriental Research* (1960), Vol. xvi part 1; (1961) Vol. xvii part 1; (1962) Vol. xviii part 1; (1964) Vol. xix part 1; (1966) Vol. xxi part 1.

39. "தொல்காப்பியப் பதிப்பு ஒரு தனி நூல் நிலைய அளவுக்குப் பெருகும் வண்ணம் செய்தவர்கள் உரையாசிரியர்கள்".

— வ. சுப. மாணிக்கம், **சிந்தனைக்களங்கள்** (சிதம்பரம், 1975). ப-ம். 8.

40. "இன்றளவும் தமிழகத்தில் வெளிவந்துள்ள தமிழ் நூல்களில் எந்தப் பதிப்புமே திருத்தப் பதிப்புக்குரிய தகுதிகளைக் கொண்டதல்லவெனலாம். காரணம் இவைகளில் எதுவும் மூலபாடக் கோட்பாடுகளின் அடிப்படையில் (Textual Criticism) பதிப்பிக்கப் பெறவில்லை. பதிப்புக்கலையின் நுட்பங்கள் முறையாகப் பின்பற்றப்படவுமில்லை. மேலும் இப்பதிப்புகளில் திருத்தமுற வேண்டிய பகுதிகள் மிகுதியாக உள்ளன".

— அ. தாமோதரன், "திருத்தப்பதிப்பு", **ஆய்வுக்கோவை-5** (அண்ணாமலைநகர், 1973), ப-ம். 701.

41. கி. வா. ஜகந்நாதன் (பதி.), **திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு**, ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம், (பெரியநாயக்கன் பாளையம், 1963).

42. வ. சுப. மாணிக்கம், "தொல்காப்பிய நயம்" **தொல்காப்பியச் சிந்தனைகள்,** (அண்ணாமலைநகர், 1975), ப-ம். 57.

43. சரியான விவரங்கள் பதிப்பு அட்டவணையில் கொடுக்கப் பட்டுள்ளன. (இணைப்பு — 1 காண்க).

44. "இலக்கிய இலக்கணங்களில் வல்ல பெரியோர் இப்பதிப்பிலுள்ள குறைகளை அடியேனுக்குத் தெரிவிக்கும்படி பல முறையும் பிரார்த்திக்கின்றேன். அன்னோர் அறிவிக்கும் திருத்தங்களைத் திரட்டி, இன்ன இன்ன வழு இன்ன வித்துவான்களால் உணர்த்தப்பட்டனவென்று குறிப்பிட்டுத் தொல்காப்பியப் பதிப்புத் திருத்தமொன்று உடனே அச்சிட்டு வெளியிடக் காத்திருக்கிறேன். ஐம்பது புதுத் திருத்தங்களுக்கு ஒரு பிரதி என் நன்றியறிவிற்கோர் அடையாளமாக அனுப்புவேன். இந்நூல் பிழையற வழங்கச் செய்தல் ஓர் பெரும் லோகோபகாரமென்று உணர்வாராக".

— சி. வை. தாமோதரம் பிள்ளை (பதி.), **தொல்காப்பியப் பொருளதிகாரம்: நச்சினார்க்கினியம்** (சென்னை 1885), பதிப்புரை, ப-ம். கக.

45. "இதன்கண் பல்வகையான பிழைகளும் மலிந்திருத்தல் கூடுமென யான் உணரேனல்லேன்; உணர்ந்தஞ்சேனல்லேன்; அஞ்சி அஞ்சியும் அச்சிட்டது ஒன்றே ஒன்றைக் கருதியேயாகும். அஃதாவது இதில் என் மனமாரச் செய்த ஆக்கல், அழித்தல், திருத்தல் முதலாய செய்கைகள் இலவாகலின் நாளும் நாளும் பழுதுபட்டொழிந்து வரும் இவ்வேட்டின் ஒரு நேர்பிரதியாக இது நின்று பிற்காலத்து அச்சிடும் பெரியவர்கட்கு ஒருவாறு உதவிசெய்யும் என்று எண்ணியதொன்றேயாகும்".

— ஆர். வேங்கடாசலம் (பதி.), **தொல்காப்பியம், சொல்லதிகாரம்: தெய்வச்சிலையார் உரை** (கரந்தைத் தமிழ்ச் சங்கம், 1929), பதிப்புரை.

46. "இங்ஙனம் பதிப்பிக்கப் பெற்ற இவ்வுரை இளம்பூரணருடையதேயென்பதற்குத் தக்க சான்றுகள் இருந்த போதிலும், என் வசமிருந்த ஏட்டுப் பிரதியிலேனும் ஸ்ரீ ரா. ராகவையங்கார் உதவிய ஏட்டுப்பிரதிகளிலேனும் (செய்யுளியல் மரபியல் அடங்கியன) இன்னாரியற்றிய உரையென்பது எழுதப்பெற வேண்டிய இறுதியிதழ் காணப்படவில்லை. இதனைத் தமிழுலகிற்குத் தெரிவிக்குங்கடப்பாடுடையேன்".

— வ. உ. சிதம்பரம் பிள்ளை, **தொல்காப்பியம் பொருளதிகாரம்: இளம்பூரணம்: மெய்ப்பாட்டியல், உவமையியல் செய்யுளியல், மரபியல்** (சென்னை, 1936), பதிப்புரை.

47. அ. கோபாலையர், "சேனாவரையவாராய்ச்சி", **செந்தமிழ்** 4:12 (1906), பக். 653-660.

48. சி. கணேசையர், "சேனாவரையருரைப் பதிப்பும் பிழை திருத்தமும்", **செந்தமிழ்** 30:7 (1932), பக். 167-172.

49. ஐ. ராஜுமுதலியார், "சேனாவரையருரைப் பதிப்பும் பிழை திருத்தமும்", **செந்தமிழ்** 30:10 (1932), பக். 241-245.

50. ஆர். வேங்கடாசலம், "தொல்காப்பியம் சொல்லதிகாரம் பேராசிரியருரை" **தமிழ்ப்பொழில்**-1:4 (1921), பக். 123-130.

தெய்வச்சிலையார் உரையைப் பேராசிரியர் உரையெனத் தாம் தவறாக உணர்ந்து அச்சிட்டு வெளியிட்டபின் எழுதிய கட்டுரை இது.

51. ம. நா. சோமசுந்தரம் பிள்ளை, "தொல்காப்பியச் சொல்லதிகார உரையாசிரியரும் தெய்வச்சிலையாரும்", **செந்தமிழ்** — 28: 11 (1930) பக். 457-484; ம. நா. சோமசுந்தரம் பிள்ளை, "தொல்காப்பியச் சொல்லதிகாரம் தெய்வச்சிலையார் உரை", **தமிழ்ப்பொழில்**-8 (1929), பக். 201-231.

52. மு. சண்முகம் பிள்ளை, "வ. உ. சிதம்பரனாரின் தொல்காப்பியப் பதிப்பு" **நூலகம்** (டிசம்பர், 1972), பக். 17-22.

53. க. ப. அறவாணன். "வ. உ. சி. யின் இலக்கணப் பதிப்புப் பணி", **செந்தமிழ்ச்செல்வி** — 47: 1 (1972), பக், 15-26.

54. க. சுப்பிரமணியன், "பதிப்பாசிரியர் வ. உ. சி.", **தமிழ்ப்பொழில்**-46 (1973), பக். 341-354.

இயல் இரண்டு

எழுத்ததிகார ஆய்வு

தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

தொல்காப்பியர் நூன்மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் ஒன்பதுஇயல்களாகப் பகுத்து எழுத்திலக்கணத்தை உணர்த்தியுள்ளார். எழுத்துக்களின் பெயர், தொகை, மொழியில் அது பயன்படும் முறை, பிறப்பு, புணர்ச்சி பற்றிய பொதுக்கருத்துக்கள், எழுத்துக்கள் முதலாகவும் ஈறாகவும் நின்று புணரும் முறை ஆகிய செய்திகள் எழுத்ததிகாரத்தில் பேசப் படுகின்றன.

பாகுபாடு

எழுத்துக்களின் தொகை, பெயர், பயனிலை வகையான பாகுபாடு ஆகியன பற்றி நூன்மரபிலும், அந்த எழுத்துக்கள் மொழி[1]யின் முதல் ஈறு, இடையில் வரும் தன்மை, அம்மொழிகளின் எழுத்து அடிப்படையிலான பாகுபாடு ஆகியன பற்றி மொழி மரபிலும் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். இவ்விரண்டு இயல் களும் தனி எழுத்தின் இலக்கணமும் மொழியில் நிற்கும் எழுத்தின் இலக்கணமும் பற்றிப் பேசுகின்றன. இந்த இரண்டையும் குறிக்கும் வகையில் எழுத்தியல் என்ற பெயரால் இவற்றை அழைக்கலாம். இது இக்கால மொழியியலின் ஒலியனியலை (Phonemics) ஒத்தது. எழுத்துக்களின் உச்சரிப்பு முறைகளை விளக்கும் வகையில் பொதுவான பிறப்பு முறையும் எழுத்துக்களுக்குத் தனித்தனியே பிறப்பும் பிறப்பியலில் கூறப்படுகிறது. பிறப்பியல் மொழியியலின் ஒலியியல் (Phonetics) போன்றது. தனிமொழிகள் இரண்டு தொடரும் போது தோன்றும் எழுத்துக்கள், சாரியைகள், உருபுகள், புணர்ச்சி மாற்றங்கள் ஆகியவற்றை எழுத்ததிகாரத்தின் இறுதி ஆறு இயல்கள் கூறுகின்றன. இந்த ஆறு இயல்களும் புணர்ச்சியைப் பற்றிய செய்திகளையே கூறுவதால் இவற்றைப் புணரியல் எனலாம். இது உருபொலியனியல் அல்லது சந்தி (Morphophonemics) என்று மொழி யியலில் அழைக்கப்படும். இவ்வாறாகத் தொல்காப்பிய எழுத் ததிகாரத்தில் பேசப்படும் செய்திகளை

1. எழுத்தியல்
2. பிறப்பியல்
3. புணரியல்

என மூவகைப்படுத்தலாம்.[2]

தொல்காப்பியர் எழுத்திலக்கணத்தை ஆராய்ந்து கூறிய முறை உரையாசிரியர்கள் அதனை விளக்கிய வகை, இன்றுவரை எழுத்ததிகாரப் பொருள் பற்றி ஆய்வாளர்கள் ஆராய்ந்து கூறிய கருத்துக்கள், விளக்கங்கள் ஆகியவை தொகுத்தும் பகுத்தும் இந்த மூன்று தலைப்புகளின் கீழ் இங்கு ஆராயப்படுகின்றன.

எழுத்தியல்

எழுத்து

எழுத்து என்ற சொல் எழுத்தொலியையும் எழுத்தின் வரி வடிவையும் குறிக்கிறது. தொல்காப்பியர் எழுத்து என்ற சொல்லை ஒலியெழுத்தினைக் (Phoneme) குறிக்கவும், வடிவெழுத்தினைக் (Grapheme) குறிக்கவும் பயன்படுத்தியுள்ளார். அவர் எழுத்தினைக் குறிக்கக் கிளவி என்ற சொல்லையும் கையாண்டுள்ளார். எழுத்து என்பதற்குப் பொருளாக நச்சினார்க்கினியர் தந்துள்ள விளக்கம் ஈண்டு ஒப்புநோக்கத் தக்கது.

> எழுத்து என்றது யாதனை எனின் கட்புலனாகா உருவும் கட்புலனாகிய வடிவும் உடைத்தாக வேறு வேறு வகுத்துக் கொண்டு தன்னையே உணர்த்தியும் சொற்கு இயைந்து நிற்கும் ஓசையையாம்.

நச்சினார்க்கினியர் எழுத்து என்னும் சொல் ஒலியெழுத்தினையும் வடிவெழுத்தினையும் குறிப்பதாக எண்ணுகிறார். எழுத்து என்பது ஒலியை மட்டுமே குறிக்கும் என்றும் சிலர் கருதுகின்றனர்.[3]

எழுத்து — பெயர்க்காரணம்

எழுப்பப்படுவது எழுத்து. எழுப்புதல் என்பது ஒலித்தல் என்று பொருள்படும். இஃது ஒலியெழுத்தினைக் குறிக்கும். 'எழுஉதல்' என்று தொல்காப்பியம் (தொல். 5) இதனைக் குறிப்பிடுகிறது. எழுதப்படுவதால் எழுத்து எனப்பட்டது என்றும் ஒரு கருத்து உள்ளது. "எழுதப்படுதலின் எழுத்தே" என்னும் நூற்பா யாப்பருங்கல விருத்தி (நூற்பா. 1)யில் மேற்கோளாகக் காட்டப்படுகிறது. முதலில் ஒலியெழுத்தினைக் குறிக்கும் சொல்லாகிய 'எழு' என்னும் சொல்லடியாக எழுத்து தோன்றியது. அந்த ஒலி வரிவடிவில் வரைந்து காட்டப்பட்டபோது அந்த வரைவினைக் குறிக்கும் சொல்லாகவும் 'எழுது' 'எழுத்து' என்னும் சொற்கள் கையாளப் பட்டன. ஆகவே எழுத்து என்ற பெயர் முதலில் எழுப்பப்படுவதால் வந்த காரணப்பெயராகவும், பின்னர் எழுதப்படுவதால் வந்த காரணப்பெயராகவும் ஆயிற்று.[4] எழுப்பப்படுவது ஒலியெழுத்து; எழுதப்படுவது வரி எழுத்து என்றும் கூறுவர்.[5] பேரகத்தியத் திரட்டின் முதல் நூற்பா எழுத்து என்பது ஒலியையும் வரிவடிவையும் குறிக்கும் எனக் கூறுகிறது. முத்துவீரியமும் (நூற்பா. 3) இதனை உடன்படுகிறது.

உயிரும் மெய்யும்

அகரம் முதல் ஒளகாரம் ஈறாக அமைந்துள்ள பன்னிரண்டு எழுத்துக்களும் உயிர் எனப்படும். ககரம் முதல் னகரம் ஈறாக உள்ள பதினெட்டு எழுத்துக்களும் மெய் எனப்படும். மெய் எழுத்துக்களுக்குப் புள்ளி, ஒற்று, உடம்பு என்னும் பெயர்களும் உண்டு. உயிரெழுத்து உயிர் போலத் தனித்தியங்கவல்லது. மெய்யெழுத்து உடல் போன்றது; உயிர் இன்றித் தனித்தியங்கும் ஆற்றல் அற்றது; இதனால் இப்பெயர்கள் காரணப்பெயர்கள் என்று நச்சினார்க்கினியர் (தொல். 8, 9) குறிப்பிட்டுள்ளார். உயிரெழுத்து, மெய்யெழுத்து இவற்றின் தனித்தியங்கும் ஆற்றல் உடைமையையும், இன்மையையும் நோக்கி உவம ஆகுபெயர்களாக இப்பெயர்கள் இடப்பட்டன. இந்த உயிர், மெய், உயிர்மெய் என்ற பெயர்களைக் கால்டுவெல் வியந்து பாராட்டியுள்ளார்.[6]

உயிருக்கும் மெய்க்கும் உவமையாகு பெயராய் அப்பெயர்களை இட்டது தமிழர்களின் ஒலிநூலறிவைப் புலப்படுத்துவது என்றும் இது வேறுமொழியின் எழுத்துப்பெயர்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு என்றும் ஆய்வாளர் கருதுகின்றனர். எடுத்துக் காட்டாகக் க. வெள்ளைவாரணன் கூறுவதனைக் கொள்ளலாம்.

> அகரம் முதல் ஒளகாரம் ஈறாம் பன்னிரண்டெழுத்துக்களும் உலகத்து உடலையியக்கும் உயிர்போல ஏனைப்பதினெட்டு எழுத்துக்களையும் இயக்கித் தாம் அவையின்றியும் இயங்கும் ஆற்றலுடைமை கண்டு அவை பன்னிரண்டையும் உவம ஆகு பெயரான் உயிர் எனக் குறியிட்டும், உயிரின்றியங்கா உலகத்து ஏனையுடல்கள் போல இவையின்றி யியங்காக் ககர முதல் னகரம் இறுவாய்ப் பதினெட்டெழுத்துக்களையும் அவ்வாகுபெயரான் மெய்யெனக் குறியிட்டும் வழங்கிய பண்டைத் தமிழ் இலக்கண நூலாசிரியரின் ஒலிநூலறிவு இவ்வுலகத்து எம்மொழியினும் காணப்படாத தனிச்சிறப்பு டையது எனப் பேராசிரியர் பலர்கூறுப[7]

உயிர் தனித்து நின்று மொழியாகும் தன்மை உடையது; தனியே ஒலித்துக் காட்டக் கூடியது. மெய் உயிரோடு சேர்க்காமல் தனித்து ஒலித்துக் காட்ட இயலாதது; அதே போன்று உயிரோடு கூடியே மொழியாகும் தன்மையினைப் பெறுவது. இந்த அடிப்படையிலேயே இலக்கண ஆசிரியர்களும் உரையாசிரியர்களும் உயிர், மெய் இவை களின் தனித்தியங்கும் ஆற்றல் உடைமையையும், அஃது இன்மை யையும் விளக்கினர்.

உயிர், மெய் எனும் பெயர்கள் ஆன்மாவையும், உடலையும் குறிக்கும் பெயர்களாகவும் அமைந்ததால் அவற்றுக்குத் தத்துவ விளக்கங்களும் தரப்பட்டன. இத்தகைய தத்துவ விளக்கங்களுக்கு நச்சினார்க்கினியர் கால்கோள் அமைத்தார். இவரைப் பின்பற்றி

இக்காலம் வரையிலும் பலரும் தத்துவ விளக்கங்களைத் தந்துள்ளனர்.

நச்சினார்க்கினியர் அகரத்தின் தன்மையை உணர்த்த இரண்டு நூற்பாக்களின் (தொல். 8, 46) உரைகளில் கூறிய உவமைகள் அகரத்தை இறைவனோடு ஒப்பிடுகின்றன. அவர் முதற்குறளின் (அகரமுதல) கருத்தையும் கீதையில் வரும் கண்ணனின் கூற்றையும் ("எழுத்துக்களில் அகரம் ஆகின்றேன் யான்") அடியொற்றி இந்த உவமைகளைப் படைத்துள்ளார். அவரது உரைப்பகுதி பின்வருமாறு:

> இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மையும் பல்லுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்குந் தன்மையும் போல அது 'அ' என்ற வழியும் 'அகரமுதல்' என்ற வழியும் ஊர! என விளியேற்ற வழியும் மூவினங்களில் ஏறினவழியும் ஓசை வேறுபட்டவாற்றான் உணர்க. இங்ஙனம் இசைத்துழியும் மாத்திரை ஒன்றேயாம். இஃது ஏனை உயிர்கட்கும் ஒக்கும் (தொல். 8) இறைவன் இயங்குதிணைக் கண்ணும் நிலைத்திணைக் கண்ணும் பிறவற்றின் கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல்லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல அகரமும் உயிர்க்கண்ணும் தனிமெய்க் கண்ணும் கலந்து அவற்றின் தன்மையாலே நிற்குமென்றது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. அகரமுதல என்னுங் குறளான் அகரமாகிய முதலையுடைய எழுத்துக்களெல்லாம், அதுபோல இறைவனாகிய முதலையுடைத்து உலகமென வள்ளுவனார் உவமை கூறியவாற்றானும், கண்ணன் எழுத்துக்களில் அகரமாகின்றேன் யானே எனக் கூறியவாற்றானும், பிற நூல்களானும் உணர்க (தொல். 46).

உயிர்கள் தனித்து நிற்பினும், மொழியில் மெய்களுடன் சேர்ந்து நிற்பினும் அவற்றின் தன்மை, மாத்திரை போன்றன மாறவில்லை என்பதை 8-ஆம் நூற்பா உரையினும், அகரம் எல்லா உயிர்களிடத்தும் மெய்களிடத்தும் கலந்து நிற்கிறது என்பதை 46-ஆம் நூற்பா உரையினும் நச்சினார்க்கினியர் கூறியுள்ளார். இந்தத் தன்மைகளை இறைவன் தானேயாய் நிற்கும் தனித்தன்மை, எல்லா உயிர்களிடத்தும் கலந்து அவையாய் நிற்கும் தன்மை ஆகியவற்றோடு உவமித்துக் கூறியுள்ளார்.

நச்சினார்க்கினியரைப் பின்பற்றித் தத்துவ விளக்கம் தரும் மொ. அ. துரைஅரங்கனார் மெய்யெழுத்தின் இனங்களுக்கும் தத்துவப் பொருள் கூறியுள்ளார். மக்களின் உயிர்களுக்கு வன்மை, மென்மை, இடைமையான தொடர்பு ஏற்படுவதால் உண்டாகும் மாற்றங்கள் எல்லையற்றன என்பதையே வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற பகுப்புக்கள் புலப்படுத்துகின்றன என்பர் அவர்.[8] இதுபோன்ற விளக்கங்களுக்குத் தத்துவ இயலும் சான்று தருவதாகவை. இரத்தினசபாபதி எடுத்துக் காட்டியுள்ளார். நாதம், விந்து

என்ற இரு தத்துவங்களைக் கொண்டு ஒலிமுறைகள் பிறக்கின்றன. நாதம் பரந்து இயங்கும் ஒலிமுறை, விந்து உட்பெறு புள்ளியுருவம். இந்த அடிப்படையிலேயே புள்ளி, உயிர் என்னும் பெயர்கள் இடப் பட்டன.[9] மேலும் எழுத்துக்களின் பெயர்களுக்கு இதுபோன்ற தத்துவ விளக்கங்களைப் பிறரும் கூறியுள்ளனர்.[10]

பா.வே. மாணிக்க நாயக்கர் தமிழ் எழுத்துக்கள் அனைத்துக்கும் இத்தகைய தத்துவ விளக்கங்களைத் தந்துள்ளார். உதாரணமாக வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகியவற்றை முறையே பிரிதிவி, அப்பு, தேயு என்பர் அவர். அவரது நூல் முழுதும் இது போன்ற விளக்கங்கள் காணப்படுகின்றன.[11]

உயிர்மெய்

மெய்யும் உயிரும் சேர்ந்து ஒலிக்கும்போது அது உயிர்மெய் எனப்படுகிறது. உயிர்மெய்க்குத் தனி வரிவடிவு தமிழில் உள்ளது. உயிர்மெய்யின் வரிவடிவினைத் தொல்காப்பியர் நூன்மரபில் ''புள்ளி யில்லா எல்லா மெய்யும்'' (தொல். 17) என்ற நூற்பாவில் கூறி யுள்ளார். பிற்கால இலக்கண நூல்களில் உயிர்மெய்யும் எழுத்தாகக் கருதப்பட்டுச் சார்பெழுத்து எனக் கொள்ளப்பட்டது.

உயிர்மெய்யைச் சார்பெழுத்து எனல் பொருந்தாது என்று நிறுவுங்கால் அது தனியே ஓர் ஒலி அன்று எனச் சிவஞான முனிவர் விளக்கியுள்ளார்.

1. ஆல் என்புழி உயிர்முன்னும் மெய்பின்னும் நின்று மயங்கினாற் போல வா என்புழியும் மெய்முன்னும் உயிர் பின்னும் மயங்கினவே அல்லது உயிரும் மெய்யுமாகிய தம் தன்மை திரிந்து வேறாகாமைக்கு ''மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா'' (தொல். 10) என்ற சூத்திரமே சான்றாக லானும்,

2. துணங்கை என்பது மெய்ம்முதல், உயிரீறு, மெய்ம்மயக்கம் எனவும், வரகு என்பது உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனவும் கொள்வதன்றி, உயிர்மெய்ம்முதல், உயிர் மெய் யீறு, உயிர் மெய்ம்மயக்கம், உயிர்மெய்த் தொடர்மொழிக் குற்றியலுகரம் எனக் கொள்ளாமையின் ஒற்றுமை நயம் பற்றி ஒன்று என்பதால் ஒரு பயன் இன்மையானும்,

3. உயிரொடு கூடிய இடத்து வரிவடிவு வேறுபடுதலின் அது பற்றிப் ''புள்ளியில்லா எல்லா மெய்யும்'' (தொல். 17) என மெய் மேல் வைத்துச் சூத்திரம் செய்து வடிவெழுத் திலக்கணம் கூறினாரன்றி ஒலியெழுத்திலக்கணம் வேறு படக் கூறாமையானும்[12]

உயிர்மெய் சார்பெழுத்து எனல் பொருந்தாது என்பர். இதனுள் சிவ ஞான முனிவர் 1. உயிர்மெய்யாகி மொழியில் நிற்கும்போதும்

மெய்யோ உயிரோ தம்மியல்பில் திரியவில்லை; அதனால் ஓர் எழுத்து ஆகாது. 2. மயக்கத்தின் போதும் புணர்ச்சியிலும் உயிர்மெய் முதல் ஈறு, இடை ஆகிய இடங்களில் வரும் போது அவை உயிர், மெய் எனப் பிரிக்கப்பட்டே உயிர்முதல், மெய்முதல், உயிரீறு, மெய்யீறு, மெய்ம்மயக்கம் என்று கூறப்படுகின்றன. உயிர்மெய் எனச் சேர்த்தல் வழக்கில் இல்லை. இங்கும் அது எழுத்தாகக் கருதப்பட வில்லை. 3. உயிர்மெய் வரிவடிவே; உயிர்மெய் எனத் தனிஒலி இல்லை என்று விளக்கி உயிர்மெய் என்பது ஒலி அல்ல; வரிவடிவே என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

சிவஞான முனிவரது கொள்கைகளைப் பின்பற்றி வே. வேங்கட ராசுலு ரெட்டியார் புணர்ச்சிக்குப் பயன்படுவன உயிரும் மெய்யுமே ஆதலால் உயிர்மெய் எழுத்து சிறப்பில்லாதது என்பர்.[13] உயிர்மெய் என்பது ஒலியெழுத்து அன்று; அது வரிவடிவே. ஆகவே உயிர் மெய்யை எழுத்து என எண்ண வைத்தது ஒலியெழுத்தினையும் வரி வடிவினையும் வேறுபடுத்திப் பாராதலால் நேர்ந்த விளைவு என ஊகிக்கலாம்.

உயிர்மெய்யாகக் கருதும்போது மெய் தன் மாத்திரையினை இழந்து விடுகிறது (மெய் $\frac{1}{2}$+உயிர் $1 = 1\frac{1}{2}$). ஒன்றரை மாத்திரை ஒலிக்க வேண்டிய உயிர்மெய் ஒரு மாத்திரையே ஒலிக்கிறது என்று பிற்கால இலக்கண ஆசிரியர்கள் கருதினர். இக்கருத்தினை ஒலியிய லார் நன்கு ஆராய்தல் வேண்டும். அந்த ஆய்வின் முடிவினை, ஒட்டியே உயிர்மெய்க்கு எழுத்தியலில் இடம் கிடைக்கும் என வருணனை மொழியியல் நோக்கில் ஆராய்ந்த ஆய்வாளர்கள் குறிப் பிட்டுள்ளனர்.[14] தொல்காப்பியர் உயிர்மெய்யின் வரிவடிவினையே உணர்த்தியுள்ளார். ஒலிநிலையில் தனி எழுத்தாகப் புணரியலில் கொள்ளவில்லை. தனி ஒலியாகப் பிறப்பியலிலும் பிறப்பு கூறப்பட வில்லை. எனவே சார்பெழுத்திலும் ஒன்றாக வைத்து எண்ண வில்லை. ஆகவே தொல்காப்பியரைப் பொறுத்தவரை உயிர்மெய்யை வரிவடிவாகவே கொள்கிறார் என்பது பொருத்தமானது. சிவஞான முனிவரது விளக்கமும் இந்தக் கருத்தினையே வலியுறுத்துகிறது.

நெடுங்கணக்கு முறை (Alphabet system)

தமிழ் நெடுங்கணக்கு முறையினைப் பொதுவாக "அகர முதல் னகர இறுவாய்" (தொல். 1) என்ற நூற்பாவில் தொல்காப்பியர் கூறி யுள்ளார். இது உயிரெழுத்துக்களின் தொடக்கத்தை முதலாகவும் மெய்யெழுத்துக்களின் முடிவை இறுதியாகவும் கொண்டு உயிர், மெய் ஆகிய முப்பது எழுத்துக்களுக்கும் பொதுமைப் படுத்திக் கூறிய கூற்று. பின்னர் உயிரெழுத்துக்கள் இவை எனக் குறிப்பிடும் இடத்தில் "ஔகார இறுவாய்" என்று கூறுவதால் உயிரெழுத்துக் களின் இறுதி ஔகாரம் என்பது பெறப்படுகிறது. உயிர் மயங்கியலில் உயிரீறுகளுக்குப் புணர்ச்சி விதி கூறுங்கால் உயிரீறுகளை வரிசைப் படுத்திக் கூறும் முறையினைக் கொண்டு உயிரெழுத்துக்களின் வரிசைமுறையினை (அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ)

அறிய முடிகிறது. மெய்யெழுத்துக்களின் இறுதி னகரம் என்பதை மட்டுமே தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். தொடக்கம் பற்றிச் சுட்டவில்லை. மெய்யெழுத்துக்களில் ஈறாகாதனவும் உள்ளன ஆகையால் புள்ளி மயங்கியலில் உயிர் மயங்கியல் போன்ற வரிசை முறை பின்பற்றப்படவில்லை. மெய்யெழுத்துக்களின் வரிசை முறை யினைச் சரியாகப் புலப்படுத்தும் சான்றுகள் தொல்காப்பியத்தில் வெளிப்படையாகக் காணப்படாததால் தொல்காப்பியர் கால வரிசை முறை, இன்று உள்ள முறையிலேயே இருந்ததா என்ற ஐயமும் எழுந்தது. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் இன்று உள்ள முறை போன்ற வரிசையினையே எடுத்துக் காட்டியுள்ளனர்.

தொல்காப்பியர் காலத்தில் மெய்யெழுத்துக்களின் வரிசைமுறை இன்று உள்ள முறையினை ஒத்தது அன்று; கசடதபற, ஙஞண நமன, யரலவழள, என்பதே தொல்காப்பியர் கால வரிசை முறை என்று ஏ. சுப்பையா கருதுகிறார். அவர் தமது கருத்துக்குச் சான் றாகத் தொல்காப்பியச் செய்யுளியல் இயைபு பற்றிக் கூறும் நூற்பா வினை எடுத்துக்காட்டுகிறார்.

ஞகாரை முதலா[15] ளகாரை ஈற்றுப்
புள்ளி இறுதி இயைபுஎனப் படுமே

இன்று உள்ள வரிசை முறைப்படி தொல்காப்பியர் காலத்திலும் இருந்தது என்று எண்ணி இந்நூற்பாவுக்குப் பொருள்கொண்டால்,

ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள

ஆகிய எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் வரும் என்று பொரு ளாகிறது. மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள் என்று தொல்காப்பியம் வரையறுத்துள்ள விதி (தொல். 78) யோடு இந்நூற்பாவின் பொருள் முரண்படுகிறது. கசடதபற ஙஞண நமன யரலவழள என்ற வரிசை முறைப்படி கொண்டு பார்த்தால் இந்நூற்பாவின் பொருள் ஈறாகும் மெய்யெழுத்துக்களைக் கூறும் நூற்பாவின் பொருளோடு ஒத்து,

ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள

ஆகிய மெய்களே ஈறாகும் என்று பொருள்பட்டு, முரண் தவிர்க்கப் படுகிறது. ஆகவே இந்த வரிசை முறையே தொல்காப்பியர் கால முறை என்பதை அறியலாம். இந்தக் கருத்து "னகர இறுவாய்" என்ற முதல் நூற்பாவின் கருத்துக்கு மாறாக உள்ளதே என்ற கேள்வியை எழுப்பி, அந்தக் கேள்விக்குப் பதிலைப் பின்வருமாறு கூறியுள்ளார். வடமொழி நெடுங்கணக்கு முறையை ஒட்டித் தமிழ் நெடுங்கணக்கு முறையை (பொது எழுத்துக்கள் முதலிலும் சிறப்பு எழுத்து பின் னரும்) அமைக்க விரும்பிய வடமொழிப் பற்றாளர் ஒருவரால் முதல் நூற்பா 'ளகர இறுவாய்'' என்பதிலிருந்து னகர இறுவாய் எனத் திருத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் செய்யுளியல் நூற்பா (தொல். 1488) அவரது பார்வைக்குத் தப்பித் தொல்காப்பியர் கொண்ட முறையினை நாம் கண்டுபிடிக்க உதவுகிறது.[16] அவரது

கருத்துப்படி கொண்டால் ளகரம் மெய்யெழுத்துக்களின் இறுதி என்பது பெறப்படுகிறதே தவிர, ககரம் மெய்யெழுத்துக்களின் முதல் என்பது பெறப்படவில்லை. மேலும் இது மொழிக்கு ஈறாகும் மெய் யெழுத்துக்களின் வரிசையில் முதலையும் ஈற்றையும் உணர்த்து கிறதே தவிர, மெய்யெழுத்துக்களின் மொத்த வரிசைமுறையினையும் உணர்த்தவில்லை.

தொல்காப்பியரின் வரிசைமுறை யரல வழள கங சஞ டண தந பம றன என்று இருக்கலாம் என்ற கருத்தினைக் க. ப. அறவாணன் தெரிவித்துள்ளார். அவர் பிறப்பியலில் மெய்யெழுத்துக்களின் பிறப்பு கூறப்படும் வரிசை முறையினை ஒட்டி இவ்வாறு இருக்கலாம் என்று கருதுகிறார். மெய்யெழுத்துக்களுள் கங, சஞ, டண, தந, பம ஆகிய மெய்களுக்குச் சேர்த்தே பிறப்பு கூறப்படுகிறது. உயிரினம், அதனை யடுத்து, இடையினம் (இடையினம் என்பது உயிருக்கும் மெல்லின மெய்க்கும் இடைப்பட்ட இனம்; வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் இடைப்பட்டது அன்று) அதனைச் தொடர்ந்து வல்லினமெய், அதன் இனமான மெல்லினமெய் என்ற முறையிலேயே தொல் காப்பியர் கால வரிசை முறை அமைந்திருந்தது என்கிறார்.[17] இக் கருத்துக்கான தெளிவான ஆதாரம் தொல்காப்பியத்துள் இல்லை.

வைப்புமுறை ஆய்வு

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் முதல் நூற்பாவின் உரையில் எழுத்துக்களின் வைப்புமுறையைக் கூறி, அந்த வைப்பு முறைக்கான காரணங்களை ஆராய்ந்துள்ளனர். இளம்பூரணர் "அகரமுதல் னகர இறுவாய்" என்ற தொடரை விளக்கும் வகையில் அகரத்தை முதலில் வைத்ததற்கும் னகரத்தை இறுதியில் வைத்த தற்கும் மட்டுமே காரணங்களைக் கூறியுள்ளார். அகரம் தானும் இயங்கித் தனிமெய்களையும் இயக்குவதால் முதலில் வைக்கப் பட்டது. னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்தும் சிறப்பால் பின்வைக்கப்பட்டது என்பது இளம்பூரணரது கருத்தினை அப்படியே ஏற்றுக்கொண்ட நச்சினார்க்கினியர் பின்னர் வரிசை முறையின் காரணங்களை ஆராய்ந்து கூறியுள்ளார்.[18]

எழுத்துக்களின் வைப்புமுறைக்குக் காரணங்களாக அவர் கூறியுள்ளவை வருமாறு: 1. பிறப்பு, 2. வடிவு, 3. மொழியாகுந் தன்மை, 4. பொருள், 5. புணர்ச்சி, 6. சந்தம், 7. சிறப்பெழுத்து ஆகியன. எழுத்துக்களின் வைப்புமுறை காரணம் கருதியது என்று நினைத்ததும், அதனை ஆராய்ந்து விளக்கியதும் பாராட்டப்பட வேண்டியன. ஆனால் அவர் கூறிய இந்தக் காரணங்கள் அனைத்தும் ஏற்புடையவையா என்பது மேலும் ஆராயத்தக்கது. றகாரத்தையும் னகாரத்தையும் இறுதியில் வைத்ததற்குக் கூறிய காரணம் பின்வருமாறு:

> பிறப்பு ஒப்புமையானும் னகாரம் றகாரமாய்த்திரிதலானும் றகாரமும் னகாரமும் சேரவைத்தார். இவை தமிழெழுத் தென்பது அறிவித்தற்குப் பின்வைத்தார் (தொல். 1)

ற, ன ஆகிய இரண்டும் வடமொழியில் இல்லாத எழுத்துக்கள். தமிழுக்குச் சிறப்பெழுத்துக்கள் ஆதலின் இறுதியில் வைக்கப் பட்டன என்பது நச்சினார்க்கினியரின் கருத்து. சிவஞான முனிவரும் இக்கருத்தினை உடையவரே; ஆனால், அவர் சிறப்பெழுத்தாக ழகரத்தையும் சேர்த்துக் கொள்கிறார்.

> ழகர றகர னகரங்கள் மூன்றும் தமிழ் எழுத்து என்பது அறிவித் தற்கு இறுதிக்கண் வைக்கப்பட்டன.[19]

ழகரத்தையும் சிறப்பு எழுத்தாகச் சேர்த்து எண்ணும் சிவஞான முனிவர் அது ளகரத்துக்கு முன்னர் உள்ளதை உணர்ந்திருந்தும் இறுதியில் வைக்கப்பட்டது எனக் கூறுவது என்ன காரணம் கருதி என்பது விளங்கவில்லை.

நெடுங்கணக்கு முறை: தழுவலா?

தமிழுக்குச் சிறப்பாக உள்ள எழுத்துக்கள் இறுதியில் வைக்கப் பட்டிருத்தலால் தமிழ் நெடுங்கணக்கு முறை வடமொழி முறையை ஒட்டியது, வடமொழி நெடுங்கணக்கு முறை தமிழில் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டுத் தமிழ்ச் சிறப்பெழுத்துக்கள் இறுதியில் அமைத்துக்கொள்ளப்பட்டன என்பர் தெ.பொ. மீனாட்சி சுந்தரன்.[20] கால்டுவெல்லும் தமிழ் நெடுங்கணக்கு முறை வடமொழி முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.[21] இதற்கு எதிர்வாதமாகச் சிறப்பெழுத்துக்களைப் பின் அமைத்தமையைக் கொண்டு நெடுங்கணக்கு முறையினைத் தழுவல் என்று கூற முடியாது; உயிரெழுத்துக்களுள் சிறப்பெழுத்துக்களான எகர ஒகரங்கள் இறுதியில் வைக்கப்படவில்லை; தமிழ் நெடுங்கணக்கு முறையைப் பார்த்தும் சிந்துவெளியின் எழுத்துக்களைப் பார்த்தும் வடமொழி முறை அமைக்கப் பட்டிருக்கக்கூடும் என்றும் கருத்து எழுந்துள்ளது.[22] தமிழ் நெடுங்கணக்கு முறை தழுவலா, அன்றா என்பது மேலும் ஆராயத்தக்கதாகும்.

எழுத்திலக்கணம் உணர்த்திய முறை: உரையாசிரியர்கள் பார்வையில்

எழுத்ததிகாரத்தின் முதல் நூற்பா உரையில் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியர் எழுத்திலக்கணம் உணர்த்திய முறை பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இளம்பூரணர், எட்டு வகையாலும் எட்டிறந்த பலவகையாலும் எழுத்திலக்கணத்தைத் தொல்காப்பியர் உணர்த்தியுள்ளார் என்று கூறியுள்ளார். நச்சினார்க் கினியரும் இவ்வகைகளைக் கூறுவதோடு இந்த வகைகளில் எங்ஙனம் எழுத்திலக்கணம் உணர்த்தப்படுகிறது என்பதைப் பொருத்தியும் காட்டியுள்ளார். சொல்லதிகாரத்திலும் இம்முறையில் இலக்கணம் கூறப்பட்டுள்ளதாக இளம்பூரணரும் நச்சினார்க் கினியரும் கூறியுள்ளனர். எண்ணிக்கை அடிப்படையில் இலக்கணத்தை விளக்கும் முயற்சி பிற்கால இலக்கண நூல்களில்

காணப்படும் ஒரு முறையாகும். அவிநயம் ஏழு வகையாகவும்[24] நன்னூல் பன்னிரண்டு வகையாகவும்[25] பிரித்து எழுத்திலக்கணத்தைக் கூறுகின்றன. ஆனால் இந்த எட்டுவகை, எட்டிறந்த பலவகை என உரையாசிரியர்கள் கூறும் முறையில் தொல்காப்பியர் எழுத்திலக்கணத்தைப் பகுத்து உணர்த்தியுள்ளார் என்று எண்ணுதற்குத் தக்க சான்றுகள் தொல்காப்பியத்தில் இல்லை. இது பிற்கால முறையைத் தொல்காப்பியத்துக்குப் பொருத்திப் பார்க்கும் முயற்சியாகும். இவ்வாறு எண்ணிக்கை அடிப்படையில் ஒரு பொருளைப் பகுத்துக் காண்பது இந்தியத் தத்துவத்தின் ஒருபொதுப் பண்பாகக் கருதப்பட வேண்டும் என்பர்.[26]

மேலும் எழுத்ததிகாரத்தில் கூறப்பட்ட இலக்கணம் கருவி, செய்கை என இருவகைப்படும் என வேறொரு வகைப் பகுப்பையும் உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். புறப்புறம், புறம், அகப்புறம், அகம் எனக் கருவியும் செய்கையும் நந்நான்கு வகைப்படும். இந்த முறையிலான பாகுபாட்டினையும் எழுத்ததிகாரத்துள் பொருத்திக் காட்டியுள்ளனர். உரையாசிரியர்கள் கருவி என்று கூறுவதை எழுத்தியல் என்றும், செய்கை என்பதைப் புணரியல் என்றும் கொள்ளலாம். புணரியலே முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் இப்பாகுபாடு உணர்த்துகிறது. இந்தப் பாகுபாடு மாற்றிலக்கணமுறையில் (Transformational approach) எழுத்திலக்கணத்தை ஆராயும் ஆய்வாளர்களால் ஒத்துக் கொள்ளப் படுகிறது என்று செ. வை. சண்முகம் எடுத்துக் காட்டியுள்ளார்.[27]

நூன்மரபு: இயலின் பெயர்ப்பொருத்தம்

நூன்மரபு என்ற இயலின் பெயர்ப்பொருத்தம் இன்றுவரை தீராத சிக்கலாகவே இருந்து வருகிறது. இளம்பூரணர் முதல் இக்கால ஆய்வாளர்கள் வரை பலரும் இந்த இயலின் பெயர்க்காரணம் பற்றி ஆராய்ந்துள்ளனர். எழுத்ததிகாரத்தில் சொல்லப்படும் இலக்கணங்களை ஒருவகையில் 'நூன்மரபு' தொகுத்து உணர்த்துகிறது. அதனால் நூன்மரபு எனப்பட்டது என்று இளம்பூரணர் கூறியுள்ளார் (தொல். 1.). ஏனைய அதிகாரங்கள் பற்றிய குறிப்புகள் நூன்மரபில் இல்லையே; அதனால் எப்படி இதனை நூன்மரபு என்பது என்று சிவஞான முனிவர் இளம்பூரணரைப் பின்வருமாறு மறுத்துள்ளார்.

> இவ்வதிகாரத்துட் கூறும் எழுத்திலக்கணத்தைத் தொகுத்து உணர்த்தலாற் பெற்ற பெயராயின் எழுத்ததிகார மரபு எனப்படுவதன்றி நூன்மரபு எனப்படாமையானும் ...[28]

நச்சினார்க்கினியர் நூல் என்பது மூன்றதிகாரங்களையும் குறிக்கும் என்றே கொண்டு அவற்றுக்கு மரபான இலக்கணங்களை நூன்மரபு உணர்த்துகிறது என்ற கருத்தில்,

> இத்தொல்காப்பியம் என்னும் நூற்கு மரபாந்துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தின்மையின் நூன்மரபு என்னும் பெயர்த்து (தொல். 1)

என்று கூறி நூன்மரபு எங்ஙனம் மூன்று அதிகாரங்களுக்கும் மரபான இலக்கணங்களை உரைக்கிறது என்பதை விளக்கமாகவும் கூறியுள்ளார்.[29] நச்சினார்க்கினியரது கருத்தினையும் சிவஞான முனிவர் மறுத்துள்ளார்.

> இவ்வோத்துட் கூறப்பட்டன செய்கையோத்திற்கும் பொருளதிகாரத்திற் செய்யுளியல் ஒன்றற்குமே கருவி ஆவது அன்றி மூன்றதிகாரத்துக்கும் பொதுவாகாமையானும் ...[30]

சிவஞான முனிவரது இந்தக் கூற்றிலிருந்து நச்சினார்க்கினியர் சொல்லதிகாரத்துக்கும் நூன்மரபில் இலக்கணம் கூறப்பட்டுள்ளது என்று கூறும் கருத்தினை ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிகிறது. நச்சினார்க்கினியர் மெய்ம்மயக்கம் கூறும் நூற்பாக்களில் சொல்லிலக்கணமும் கூறப்படுகிறது என்பதை

> அம்மூவாறும் (தொல். 22) என்னுஞ் சூத்திரம் முதலியவாற்றான் எழுத்துக்கள் கூடிச் சொல்லாமாறு கூறுகின்றமையின் சொல்லதிகாரத்துக்கும் இலக்கணம் ஈண்டுக் கூறினாராயிற்று (தொல். 1)

என்று கூறியுள்ளார். சிவஞான முனிவருக்கு மெய்ம்மயக்கம் எழுத்துக்கள் கூடிச் சொல்லாவதை உணர்த்துவது என்ற கொள்கை உடன்பாடானது அன்று. அவர் மெய்ம்மயக்கம் தனிஎழுத்தின் இலக்கணம் கூறுவது என்ற கருத்தினர் என்பது பின்னர் கூறப்படும்.

நூன்மரபு என்னும் பெயருக்கான விளக்கத்தினைப் பின்வருமாறு சிவஞான முனிவர் கூறியுள்ளார்.

> நூலினது மரபு பற்றிய பெயர்கூறுவது, எனவே இவ்வோத்துட் கூறும் சூத்திரங்கட்கெல்லாம் அதிகாரம் என்பது பெறப்பட்டது. மலை, கடல், யாறு என்றல் தொடக்கத்து உலக மரபு பற்றிய பெயர்போலாது ஈண்டுக் கூறப்படும் எழுத்து குறில், நெடில், உயிர்,மெய் என்றல் தொடக்கத்துப் பெயர் நூலின்கண் ஆளுதற் பொருட்டு ஆசிரியனால் செய்து கொள்ளப்பட்டமையின் அவை நூன்மரபு பற்றிய பெயராயின என்று அறிக[31]

இவ்வாறு கொள்ளுதல் ஒருவகையில் பொருந்தும் எனினும் நூலுக்கு இன்றியமையாத அனைத்தையும் எடுத்துக் கூறாமல் தனி எழுத்து இலக்கணம் பற்றி மட்டுமே கூறப்படுவதால் அது குன்றக் கூறல் ஆகும் என்று வே. வேங்கடராசுலு ரெட்டியார் மறுத்துள்ளார். மொழியின் இயல்பு உணர்த்திய இயல் மொழிமரபு எனப்பட்டது போல எழுத்தின் இயல்பு உணர்த்திய இயல் நூன்மரபு எனப்பட்டது என்று அவர் விளக்கம் தந்தார். இருப்பினும் தமது கருத்தினை உறுதிப்படுத்தும் வண்ணம் நூல் என்பதற்கு எழுத்து என்னும் பொருள் உண்டு என்று கூறத்தகுந்த சான்று இல்லாததால் இக் கருத்து மேலும் ஆராயத்தக்கதே என்று அவர் குறிப்பிட்டார்.[32]

இப்பெயர்க்காரணத்தின் தொடர் ஆய்வில் பலவாறு கருத்துக்கள் வெளிப்பட்டுள்ளன. செ. வை. சண்முகம் கூறும் கருத்து

இங்கு ஒப்புநோக்கத் தக்கது. தொல்காப்பியர் முதலில் எழுத்ததிகாரத்தை மட்டும் எழுத எண்ணியிருக்கலாம். அதனால் நூல் என்ற சொல்லால் எழுத்ததிகாரத்தைக் குறித்திருக்கலாம். அப்படியெனில் சொல்லதிகாரமும் பொருளதிகாரமும் அவர் மனத்தில் பின் தோன்றியவையாகலாம் என்று கூறுகிறார்.[33] தெ. பொ. மீனாட்சி சுந்தரன் தொல்காப்பியர் எழுதியது எழுத்ததிகாரம் ஒன்றே; அதனால் நூல் என்பது எழுத்ததிகாரத்தைக் குறிக்கும்; நூன்மரபு என்பது எழுத்ததிகார மரபு என்பர்.[34]

மேலே எடுத்துக்காட்டப்பட்ட விவாதங்கள் யாவும் ஒரு வகையில் ஊகங்களாகவும் பிறிதொரு வகையில் வலிந்து பொருத்தம் கூறும் முயற்சியாகவும் தோன்றுகின்றன எனலாம். நூன்மரபு என்ற பெயருக்கும் அவ்வியலில் கூறப்படும் செய்திகளுக்கும் பொருத்தமில்லை. இதனால் இப்பெயர் எவ்வாறு அந்த இயலுக்குப் பொருந்தும் என்பது இனி ஆராய்ந்து காணப்பட வேண்டிய ஒன்றாகும்.

முதலும் சார்பும்

தொல்காப்பிய முதல் நூற்பாவில் "சார்ந்து வரல் மரபின் மூன்றலங்கடையே" எனவும், பிறப்பியலில் "சார்ந்துவரின் அல்லது தமக்கியல்பிலவெனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்" (தொல். 101) எனவும் தொல்காப்பியர் கூறிய தொடர்கள் பிற்காலத்து இலக்கணங்களின் முதலெழுத்து, சார்பெழுத்து பகுப்புக்கும், கோட்பாடுகளுக்கும் வித்திட்டன. தொல்காப்பியர் முதலெழுத்து, சார்பெழுத்து என்ற சொற்களைக் கையாளவில்லை எனினும் அவருக்கும் இப்பாகுபாடு உடன்பாடே எனக் கொள்ள அவர் கூறும் கருத்துக்கள் இடம் தருகின்றன. முதலெழுத்து, சார்பெழுத்து என எவற்றைக் கொள்வது என்பதிலும் முதலெழுத்து சார்பெழுத்து எண்ணிக்கையிலும் அதன் விரியிலும் அவ்விலக்கணங்கள் தம்முள் ஒன்றோடொன்று மாறுபட்டன.[35] எனினும் இப்பாகுபாட்டைச் செம்மையாகவும் முழுமையாகவும் நன்னூலார் குறிப்பிட்டுள்ளார். நன்னூலின் செல்வாக்கால் இந்தப் பாகுபாடு தமிழ் இலக்கண நூல்களின் பொதுப்பண்பாகக் கருதப்படுகிறது. ஆனால், எல்லா இலக்கண நூல்களும் நன்னூலின் கோட்பாட்டினை ஒத்துக் கொள்ள வில்லை.[36]

சார்பெழுத்து இலக்கணம்

ஒன்றனைச் சார்ந்து வருவது; தனக்கெனத் தனி இயல்பு இல்லாதது சார்பெழுத்து என்ற வகையில் சார்பெழுத்துக்கு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. "ஒருமொழியைச் சார்ந்து வரும் இயல்பின்றித் தனித்து இயங்கும் இயல்பு தனக்கு இல என்றலின் அவை தம்மையே எடுத்து ஓதிக் காட்டாமையின்..."[37] என்று சார்பெழுத்துக்குச் சிவஞான முனிவர் விளக்கம் கூறியுள்ளார். இக்கருத்தினை மேலும் விளக்கமாக "இவற்றியல்பு தனித்து வர

இயலாது. ஒன்றனைச் சார்ந்து வருதலே என்பது புலனாம். எனவே தன்னியல்பில் நிற்றல் ஆற்றாதனவாய் மொழியைச் சார்ந்து வரும் இயல்பெழுத்துக்களே சார்பெழுத்துக்களாதல் தொல்லாசிரியர் துணி பென்பது தேற்றம்'' என்று க. வெள்ளைவாரணனும்[38] ''முதலெழுத் துக்களைத் தனியே ஒலித்துக்காட்ட முடியும்; ஆனால் சார்பெழுத் துக்களை யாதானும் ஒரு சொல்லில் வைத்துத்தான் ஒலித்துக் காட்ட முடியும்'' என்று சோ. ந. கந்தசாமியும் கூறினர்.[39]

ஒலிநூலார் சார்பெழுத்துக்களைத் தனியே ஒலித்துக்காட்ட முடியாது என்பதை ஒத்துக்கொள்வதில்லை. ''குற்றியலிகரம், குற்றியலுகரம் இரண்டும் உயிரொலி விடுப்பு ஆகும். அவற்றைத் தனியே ஒலித்துக்காட்ட முடியும். ஆய்தத்தைத் தனியே ஒலித்துக் காட்ட முடியாதுதான். ஏன் என்றால் அது ஒலியன் நிலை விளக்கம். ஒலிநிலையில் உரசொலி என்று கொண்டதைத் தனியே ஒலித்துக் காட்ட முடியும். அதாவது ''ஆய்தமும் வல்லினமும் சேர்ந்து உர சொலியைக்குறிக்கும் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பதால் தனியே உச்சரிக்க முடியவில்லையே தவிர அது சார்பெழுத்து என்பதால் அல்ல''[40] என்று செ. வை. சண்முகம் விளக்கியுள்ளார். சார்பெழுத்தின் பண்பு குறித்து மொழியியல் அடிப்படையில் தி. முருகரத்தனம் கொடுத்துள்ள விளக்கம் குறிப்பிடத்தக்கது. ''தொல் காப்பியர் கருத்துப்படி, சார்ந்து வழங்குதலும் அதாவது ஒரு சில சூழல்களிலேயே வழங்குதலும், சார்ந்து வழங்கும் எழுத்துக்களின் பிறப்பியல்பையே பெற்று, அப்பிறப்பியல்பு ஒன்றல்லது சார்புக் கேற்பப் பலவாகி வழங்குதலும், ஆகிய இரண்டுமே சார்பெழுத்தின் இலக்கணமாகும்''.[41] ஒலிநிலையிலும் ஒலியன் நிலையிலும் அமைந்த இவ்விளக்கம் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது.

வரலாறு

முதலெழுத்து, சார்பெழுத்து என்ற பாகுபாடு தொல்காப்பியத்தில் இல்லை. தொல்காப்பியருக்குப் பின்னரே இத்தகைய பாகுபாடு அமைந்தது. சார்பெழுத்தின் வரலாறறைப் பின்வருமாறு கூறுகிறார் சோ. ந. கந்தசாமி. ''தொல்காப்பியருக்குப் பின் மாத்திரைக் குறுக்கங் களையும் மாத்திரைப் பெருக்கங்களையும் சார்பெழுத்தாகக் கருதும் மனநிலை எழுந்தது''.[41அ] இதற்குக் காரணம் தொல்காப்பியர் இகர உகரங்களினின்று குறுகி ஒலிக்கும் குற்றியலிகரம், குற்றியலுகரம் இரண்டையும் ''சார்ந்துவரல் மரபின'' என்று குறிப்பிட்டதுதான். இருப்பினும் ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம், ஆய்தக் குறுக்கம் ஆகிய குறுக்கங்களையும் மாத்திரை மிக்கு ஒலிக்கும் அளபெடை யையும் கூறியிருந்தும் அவற்றை அவர் சார்பெழுத்து என்னும் பொருளில் ''சார்ந்து வரல் மரபின'' என்று கூறவில்லை. இவற்றைச் சார்பெழுத்தாகக் கொள்ளும் மாற்றம் ஏற்பட்ட காலத்தைக் குறிக்கும் வகையில் ஆ. சிவலிங்கனார் விளக்கம் தந்துள்ளார் :

> **முதல்உயிர் மெய்ஆய்தம் முப்பான் மூன்றே (அகத். 7)**
>
> **உயிர்மெய் அளபெடை**
> **இரண்டும் ஆய்தம் அறுகுறுக்கம் சார்பாம் (அகத். 38)**

என மறைந்துபோன இலக்கண நூலாகக் கருதப்படும் பேரகத்தியம் என்னும் நூலிலிருந்து உரையாசிரியர்களால் மேற்கோளாகக் காட்டப்படும் இந்த இரண்டு நூற்பாக்களையும் எடுத்துக்காட்டி, முதல், சார்பு வரையறை பவணந்தியார் காலத்துக்குச் சற்று முன்னர் அமைந்ததாகும் என்று கூறியுள்ளார்.[42]

குற்றியலுகரம்

ஒலிநிலை

குற்றியலிகரம், குற்றியலுகரம் என்பன முற்றிகர முற்றுகரங்களின் குறுக்கமா, அல்லவா என்பதும், அவை எழுத்தாக எண்ணப் பட்டமையும் ஆராய்ச்சிக்கு உரியன. இளம்பூரணர் அவை முற்றிகர முற்றுகரங்களின் குறுக்கமே என்பதைச் 'சந்தனக் கோல்' உவமை மூலமும், புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறுபாடும் உடையன வாதலால் தனி எழுத்தாக எண்ணப்பட்டன (தொல். 2) என்று எழுத் தாகக் கொண்டதன் காரணத்தையும் கூறியுள்ளார். ஆனால் இகர உகரங்களின் குறுக்கமே அவை என்பது பின் வந்த பலரால் மறுக்கப்பட்டுள்ளது. "ஒரு மாத்திரை நின்ற குற்றெழுத்துக்களே செயற்கையான் அரை மாத்திரை பெற்றுக் குறுகி நின்றனவோ என மயங்காமைப் பொருட்டு இவை இங்ஙனம் ஆதல் இயல்பு என்பார் குற்றிகரம் குற்றுகரம் என்று கூறாது குற்றியலிகரம் குற்றியலுகரம் என்றார்" எனவும், "குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் போல ஓரெழுத்தாவனவேயன்றி ஒரு மாத்திரையாய் நின்ற இகர உகரங் களே ஒரு காரணம் பற்றி அரை மாத்திரையாய் நின்றன அல்ல"[43] எனவும் சிவஞான முனிவர் கூறியுள்ளார். குற்றியலிகரம், குற்றிய லுகரம் இவற்றிலுள்ள இயல் என்ற சொல்லும் அவை ஆய்தத்தோடு சேர்த்து எண்ணப்பட்டதும் இவரது வாதங்களுக்குக் காரணங்களாக அமைந்தன. இதனோடு ஒத்த கருத்தினை ஆ. சிவலிங்கனார்[44] தா. ஏ. ஞானமூர்த்தி,[45] தி. முருக ரத்தனம்[46] ஆகியோரும் குறிப் பிட்டுள்ளனர்.

சிவஞான முனிவரின் கருத்து வருணனை மொழியியலார் ஒலியனை நிர்ணயிக்கும் முறையை ஒத்துக் காணப்படுகிறது என்று செ. வை. சண்முகம் சுட்டிக் காட்டியுள்ளார். குற்றியலிகரமும் குற்றியலுகரமும் வேறு ஒலியோடு தொடர்பில்லாத தனி ஒலிகள் என்று கூறுவதன் மூலம் அவை தனி எழுத்தாகக் கொள்ளப்பட்ட வேண்டும் எனச் சிவஞான முனிவர் கூறியுள்ளார். வருணனை மொழி யியலார், ஒற்றுமை ஒலிகள் வருமிடத்தை (வேற்றுநிலை வழக்கு, துணைநிலை வழக்கு) ஒட்டி, ஒலியின் தன்மையை (அது ஒலியனா இல்லையா என்பதை) நிர்ணயிப்பர். ஒற்றுமை உடையதாக இல்லாதவற்றை ஐயத்துக்கு இடமில்லாத ஒலிகள் (Non-suspicious segments) என்று கொண்டு அவற்றையெல்லாம் தனி ஒலியனாகக் கொள்வர்.[47] சிவஞான முனிவரின் கருத்தும் இதுவேயாகிறது. இளம் பூரணரின், 'இகர உகரங்களின் குறுக்கமே குற்றிய லிகரமும் குற்றியலுகரமும்' என்னும் கருத்தினை நன்னூலார்

அப்படியே ஏற்றுக்கொண்டார். இதனையொட்டி, க. வெள்ளை வாரணன் முதலெழுத்தாகிய இகர வுகரங்களே மொழியின் சார்பும் பற்றுக்கோடும் பற்றி அரை மாத்திரையாய்க் குறுகி ஒலித்தலின் சார்பிற் றோற்றத்து ஒலிகளாய் வேறு எண்ணப்பட்டன எனக் கொள்ளுதல் பொருந்தும் என்பர்.[48] மொழியியல் நோக்கில் தொல்காப்பியத்தை ஆராய்ந்த ஆய்வாளரும் இக்கருத்தினைக் குறிப்பிட்டுள்ளனர். க. பாலசுப்பிரமணியன் இகர உகரங்களின் குறுக்கங்களே அவை என்பதற்குத் தொல்காப்பிய நூற்பாக்களே சான்று பகருவதை [... குறுகலும் உரித்தே (தொல். 35), யகரம் வரும்வழி இகரம் குறுகும் (தொல். 410), இடைப்படிற் குறுகும் இடனும் ... (தொல். 37) ... ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன் (தொல். 406] எடுத்துக் காட்டியுள்ளார்.[49]

ஒலியன் நிலை

புணர்ச்சியில் குற்றியலுகரம் முற்றியலுகரத்தினின்றும் வேறுபடுகின்றது. புணர்ச்சியில் வேறுபாடு உடைய "குற்றியலுகரத்தை உகரத்தின் மாற்றொலியாகக் கருதி உகரமாகவே எழுதினால் குற்றியலுகரம் வேறுபட்ட புணர்ச்சி மாற்றங்களைக் காட்டுமிடங்களில் புதிய விதிகள் கூற வேண்டியிருக்கும். நெடிற்றொடர், உயிர்த்தொடர், வன்றொடர், இடைத்தொடர், ஆய்தத் தொடர், என்ற அறுவகைத் தொடர் உகரங்களையும் மீண்டும் மீண்டும் கூற வேண்டியிருக்கும். ஆயின் அவற்றை ஒன்றாக்கிக் குற்றியலுகரம் என்ற ஒரு குறியீடு கொடுத்தமையின் விதிகளின் எண்ணிக்கை குறைகிறது"[50] என்று க. பாலசுப்பிரமணியன் குற்றியலுகரம் தனி எழுத்தாகக் கொள்ளப்பட்டதன் காரணத்தைக் கூறியுள்ளார். இது மொழியியல் பார்வையால் கிடைத்த தெளிவான விளக்கமாகவும் தொல்காப்பியரின் மொழியாராய்ச்சி நுட்பத்தைப் புலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

குற்றியலுகரம் முற்றியலுகரத்தினின்றும் பொருள் வேற்றுமையும் உடையது என்பர் உரையாசிரியர்கள். நச்சினார்க்கினியர் காது, கட்டு, முருக்கு, தெருட்டு ஆகிய சொற்களைப் பொருள் வேறுபாடு உடையன (தொல். 68) என்று எடுத்துக் காட்டியுள்ளார். இவை இதழ் குவித்துக் கூறியவிடத்து ஏவல் வினையாகவும் இதழ் குவியாமல் குற்றியலுகரமாகக் கூறியவிடத்துத் தொழிற்பெயராகவும் பொருள்படும் என்றும் அவர் கூறியுள்ளார் இவ்வுதாரணங்கள் தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபட்டு இருப்பதோடு ஒலிநிலையிலும் ஐயத்துக்கு உரியனவாதலால் அவை பிற்காலத்து உதாரணங்களாக இருக்க வேண்டும் என்பர் செ. வை. சண்முகம். நச்சினார்க்கினியர் காட்டும் உதாரணங்கள் குற்றியலுகரம் முற்றியலுகரம் ஆகியவை வரையறுக்கப்பட்ட ஒலிச்சூழல்களில் வருவன என்னும் கருத்தினைத் தருவதால் அவை சார்பெழுத்தாம் தன்மைக்கு மாறுபட்டன. மேலும் இச்சொற்களை உச்சரிக்குங்கால் உள்ள ஒலி அழுத்த வேறுபாட்டையே நச்சினார்க்கினியர் உயிரொலி வேறுபாடாகக் கருதியிருக்கலாம் என அவர் விளக்கியுள்ளார்,[51] எனவே குற்றியலுகரமும்

முற்றியலுகரமும் பொருள் வேற்றுமை உடையதா என்பது ஐயத்திற்கிடமாக உள்ளது. இருப்பினும் அது புணர்ச்சி வேறுபாடுடையது: ஆகையால் தனி எழுத்தாகக் கொள்ளப்பட்டது என்பதே சரி எனத் தோன்றுகிறது. எனவே ஒலிநிலையில் முற்றியலுகரமும் குற்றியலுகரமும் ஒரு ஒலியனின் மாற்றொலிகள் ஆகும். இளம்பூரணர் புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறுபாடும் உடையன எனக் கூறினாலும் அவற்றிற்கான உதாரணங்கள் எதுவும் தரவில்லை. நச்சினார்க்கினியர் தான் பொருள் வேறுபாட்டைக் காட்டும் உதாரணங்களைக் கூறுகிறார். இதனை நச்சினார்க்கினியர் காலத்து மொழியியல்பைக் காட்டுவதாகக் கொள்ளலாம். தொல்காப்பியருள்ளிட்ட மற்றெந்த இலக்கண ஆசிரியரோ, உரையாசிரியரோ இக்கருத்தினைக் கூறவில்லை. மேலும் அவரது கருத்து தொல்காப்பியத்திலும் எங்கும் காணப்படவில்லை. குற்றியலுகரமுடைய சொற்கள் ஏவல் வினையாகக் கூறப்படுங்கால் குற்றியலுகரம் நீண்டு ஒலிக்கும், இந்த ஓசையழுத்த வேறுபாட்டை நச்சினார்க்கினியர் கருதியிருக்கலாம்.[52] அவை அவர்காலத்து மொழி வளர்ச்சியைக் காட்டுவனவா அல்லது ஒலியழுத்த வேறுபாடா என்பது தீர்மானிக்க இயலாததாகிறது. இருப்பினும் தொல்காப்பியர் அதனை எழுத்தாகக் கொண்டது புணர்ச்சி வேறுபாடு உடைமையால்; அதாவது புணர்ச்சியில் அடிப்படை வடிவத்தில் வருவதனாலேயே ஆகும் என்றும் இது மாற்றிலக்கண ஒலியியல் கோட்பாட்டுக்கு ஒத்த முறை என்றும் கூறுவர்.[53]

குற்றியலிகரம்

தனிமொழியில் மியா என்ற உரையசைச் சொல்லிலும் புணர் மொழியில் குற்றியலுகர நிலைமொழியின் முன்னர் வருமொழி யகர முதன் மொழியாகும்போது அவ்விடத்திலும் வரும். இதனை இகர உயிரின் குறுக்கம் என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கொண்டனர் என்பதும் இயல்பாய்க் குறுகிய இகரம் எனச் சிவஞான முனிவர் கொண்ட கருத்து பொருந்தாது என்பதைத் தொல்காப்பிய நூற்பாக்களைக் கொண்டே உணர்த்தப்பட்டதும் முன்னரே கூறப் பட்டது. குற்றியலிகரமும் புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறு பாடும் உடையதாக உரையாசிரியர்கள் கொண்டுள்ளனர்.

வல்லின மெய்கள் அல்லாத ர, ன, ண, ள போன்ற பிற மெய் களை அடுத்துத் தோன்றும் இகரமும் குற்றியலிகரமாகவே இருக்க லாம். இவற்றைக் குற்றியலிகரம் எனக் கூறாதது அதனைக் குற்றிய லுகரத்தோடு தொடர்பு படுத்தி அதன் திரிபே குற்றியலிகரம் என்று கருதியதே காரணம் என்பர்.[54]

ஒலிநிலை

குற்றியலிகரத்தை இகரத்தின் குறுக்கம் என்றும், அன்று என்றும் நிலவிய கருத்துக்கள் முன்னர்க் கூறப்பட்டன. குற்றியலுகர மாகிய உயிரொலி விடுப்புடன் தொடர்புடைய இடச்சார்பான

ஊசலாட்ட ஒலி (Positional variant) யாக அமைந்துள்ளது இது என்பர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.[55] குற்றியலிகரம் எப்போதும் யகரத்துடன் இணைந்தே வழங்குகின்ற காரணத்தால் இரண்டையும் சேர்த்து iy என்ற ஓரொலியாக வழங்கலாம் என்று டி. பரோ கூறியுள்ளார். குற்றியலிகரம் உயிரொலி விடுப்பு என்னும் கருத்து பொதுவாக மொழியியலாரால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.[56]

ஒலியன் நிலை

குற்றியலிகரமும் குற்றியலுகரம் போலப் புணர்ச்சி வேறுபாடும் பொருள் வேறுபாடும் உடையதாகையால் தனி எழுத்தாக எண்ணப் பட்டது என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறியுள்ளனர். இது முற்றியலிகரத்திலிருந்து எங்ஙனம் அவ்வாறு வேறுபடுகின்றது என்பதற்கான காரணங்களை அவர்கள் எடுத்துக்காட்டவில்லை. இலக்கண விளக்கப் பதிப்பாளர் சி. வே. கோபாலையர் உரை விளக்கக் குறிப்பில்,

1. காட்டு + யாத்தான் → காட்டியாத்தான் காட்டின்கண் யாத்தான்
   காட்டி + யாத்தான் → காட்டி யாத்தான் காண்பித்து யாத்தான்[57]
2. குன்றியாது என்பது முற்றியலிகரமாயின் நிலைமொழி குன்றிமணியையும் குற்றியலிகரமாயின் குன்றினையும் (அதாவது குன்று + யாது) குறிக்கும் பொருள் வேறுபாடும் காண்க[58]

என்று எடுத்துக்காட்டுகள் தந்துள்ளார். இவ்வெடுத்துக்காட்டுகளை ஆராய்ந்து பொருள் வேறுபாட்டுக்குத் தந்த முதல் உதாரணத்தில் உண்மையில் பொருள் மாறுபடுவதற்குக் காரணம் குற்றியலிகரமும் முற்றியலிகரமுமே என்றும், இரண்டாவது உதாரணமே சரியானது என்றும் செ. வை. சண்முகம் விளக்கம் தந்துள்ளார். பொருள் வேறுபாடு இருப்பினும் புணர்ச்சி வேறுபாடு இல்லாததாலும் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் அது வராததாலும் மாற்றிலக்கண மொழியியலின்படி அது ஒலியனாகக் கொள்ளத் தக்கது அன்று என்றும் அவர் கூறியுள்ளார்.[59]

தனிமொழியில் குற்றியலிகரம் வரும் மியா என்ற சொல்லைப் பகுபதமாகக் கொண்டே இலக்கண ஆய்வாளர்கள் விளக்கியுள்ளனர்.

> கேண்மியா என்பதன் உண்மை நிலையை ஆராயும் இடத்து கேண்ம் என்ற சொல்லோடு யா என்னும் அசைச்சொல் சேர இகரந் தோன்றப்பெற்று கேண்மியா என்றாகியுள்ளது எனத் தெரிகிறது[60]
>
> கேண்ம் + யா, சென்ம் + யா என்பன விட்டிசையின்றி ஒலிக்க இகரம் பெற்றன. ஈண்டும் யாவின் உந்துதலாற்றான் இகரம் தோன்றுகிறது.[61]

மேலே கூறப்பட்ட விளக்கங்களும் புணர்ச்சியால் இகரம் குறுகி ஒலிப்பதையே காட்டுகின்றன. புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் அது வரவில்லை என்பதையே உணர்த்துகின்றன. இருந்த போதிலும் தொல்காப்பியர் அதனை எழுத்தாக எண்ணியதற்கான காரணம் என்னவென்று ஆராய்ந்து செ. வை. சண்முகம் கூறுவது இங்கு எடுத்துக்காட்டத் தக்கது.

> தொல்காப்பியர் தமிழ்மொழியின் தனி எழுத்து அமைப்பையும் எழுத்துத் தொடர்ச்சியின் அமைப்பையும் நன்கு உணர்ந்தவர் .. தமிழில் உள்ள தனிச்சொற்களின் எழுத்துத் தொடர்ச்சியைப் பார்த்தால் இய — என்ற தொடர் (இயம், இயல், புயன், வியம், வியன்) உள்ளதே தவிர இயா என்ற தொடர் சங்க இலக்கியத்தைப் தொறுத்தவரை கிடையாது. கலித்தொகையில் இயல் என்று விளிவேற்றுமையாக (மெல்லியல் — மெல்லியால் (கலி. 113: 16. மெல்லியான்) கலி. 70: 20) வந்துள்ளது. இதனால் மியா என்ற சொல் ஒலிநிலையில் குற்றியலிகரமாக இருந்தும் அதை முற்றியலிகரத்தின் மாற்றொலியாகக் கருதினால் எழுத்துத் தொடர்ச்சியில் உள்ள அமைப்புக்குறை (structural gap) ஓரிடத்தில் மட்டும் நிரப்பப்பட்டு அமைப்பு அழகு குறைந்து விடுகிறது. எனவே அமைப்புக் குறையைப் பாதுகாக்கும் வண்ணம் குற்றியலிகரத்தைத் தனி எழுத்தாகக் கொண்டு புணர்ச்சியின் அடிப்படை வடிவத்திலும் வருவதாகக் கருதியதால் அவர் கொள்கைப்படி 'எழுத்து' ஆக அமைந்து விட்டது. சுருங்கச் சொன்னால் அமைப்புக் குறையைப் பாதுகாக்கும் பொருட்டு துணைநிலை வழக்கில் இருக்கும் குற்றியலிகரத்தைத் தனி 'எழுத்து' ஆகத் தொல்காப்பியர் கருதிவிட்டார்.[62]

தொல்காப்பியரின் 'எழுத்து' பற்றிய கோட்பாட்டை மொழியியல் நோக்கில் ஆராய்ந்ததன் பயனாய்க் கிடைத்த நுட்பமான விளக்கமாக இது அமைந்துள்ளது.

வரலாறு

குற்றியலிகரம் மூலத்திராவிட மொழிகளில் உகரத்தோடு பெரும்பாலும் ஒத்து உடம்படுமெய்யாக வழங்கியிருக்க வேண்டும் என்றும் அது இடையண்ண அரையுயிரொலியான யகரத்தால் குறிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி கூறியுள்ளார்.[63] குற்றியலிகரத்தின் இன்றைய நிலையினை ஆராய்ந்து தி. முருகரத்தனம், "இன்று குற்றியலிகரம் தோன்றியதற்குக் காரணமான யகர முதற் சொற்களெல்லாம் திரிந்துவிட்டன; அல்லது வழக்கிழந்து விட்டன; பேச்சு மொழியில் மொழியீற்று மெய்கள் கெட்டோ அல்லது உகரச் சாரியை பெற்றோ வழங்குகின்றன. ஆதலின் இன்றைய தமிழில் குற்றியலிகரத்துக்குச் சிறிதும் இடமில்லை" என்று கூறுவதும்[64] கருதத்தக்கது.

ஆய்தம்

ஆய்தத்தின் தோற்றம், ஒலிநிலை, ஒலியன்நிலை, வரிவடிவம், வரலாறு ஆகிய யாவுமே ஆய்வுக்குரிய சிக்கல்களாக அமைந்து விட்டன. ஆகவேதான் அதன் பல்வேறு தன்மைகள் பற்றியும் மரபிலக்கணவழி ஆய்வாளர்களும், மொழியியல் நோக்கு ஆய்வாளர்களும் ஆராய்ந்துள்ளனர். அந்த ஆய்வுக் கருத்துகளைச் சொல் வரலாறு, ஒலிநிலை, ஒலியன்நிலை, வரலாறு என்று நான்கு பிரிவுகளாகப் பகுத்துக் காணலாம்.

சொல் வரலாறு

ஆய்தம் என்று தொல்காப்பியர் காலத்தில் வழங்கிய சொல் பிற்காலத்தில் அஃகேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று என வேறு பெயர்களையும் பெற்றது. யாப்பருங்கல நூற்பா இதன் வேறுபெயர்களைக் கூறுகிறது.

> அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி
> ஒற்று இப்பால் ஐந்தும் இதற்கே (யாப். விருத்தி. 2)

ஆய்தம் என்ற சொல் ஆயதம் அல்லது ஆஸ்ரதம் என்ற வடசொல்லின் திரிபாகும் என்பது மு. இராகவையங்காரின் கருத்து.[65] அது ஆய்தல் என்ற தமிழ்ச் சொல்லடியாகப் பிறந்ததே என்றும், நுணுகிய ஒலி என்று பொருள்படும் எனவும் ''ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய், ஆயிவண் நான்கும் உள்ளதன் நுணுக்கம்'' என்ற தொல்காப்பிய நூற்பாவைச் (தொல். 813) சான்று காட்டிக் க. வெள்ளைவாரணன் விளக்கியுள்ளார்.[66] ஆய்தல் என்ற சொல் நுணுகிய தன்மையைக் குறிப்பதாலும் ஆய்தத்தின் ஒலித் தன்மையைக் குறிக்கும் வகையில் அது அமைந்துள்ளதாலும் ஆய்தல் என்ற தமிழ்ச் சொல்லடியாக 'ஆய்தம்' பிறந்தது என்னும் கூற்று பொருத்தமானதாகத் தோன்றுகிறது.

ஒலிநிலை

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஆய்தத்தை மெய் என்று கருதியுள்ளனர். தொல்காப்பியர் ஆய்தத்தைப் புள்ளி என்று குறிப்பிட்டது (தொல். 38) அவர்கள் கருத்துக்கு ஆதாரமாய் அமைந்தது.

எஃகு, அஃகி போன்ற சொற்களில் ஆய்தம் அடிநா அடி அண்ண உரசொலியாக இருப்பதால் அது ஹகரம் போன்ற, வடமொழியின் விசர்க்கத்தை ஒத்த ஓர் ஒலி எனவும், இலக்கண ஆசிரியர்களின் புலமையான கண்டுபிடிப்பு என்றும் கால்டுவெல் குறித்துள்ளார்.[67] கால்டுவெல்லின் கருத்தினைத் தழுவிப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியும்,[68] கூய்ப்பரும்,[69] அதன் ஒலியை வடமொழி விசர்க்கத்தோடு தொடர்புடையதாகவே கூறியுள்ளனர். அது சேர்ந்து வரும் வல்லினத்தோடு தொடர்புடைய அறுவகைப்பட்ட

ஒலி என்றும் அவர்கள் சுட்டியுள்ளனர். கூய்ப்பர் ஆய்தமும் வல்லெழுத்தும் சேர்ந்த இரட்டை வல்லெழுத்தின் மாற்று உச்சரிப்பு என்று கூறியுள்ளார். தெ. பொ. மீனாட்சிசுந்தரன் ஆய்தத்தை அடுத்து வரும் வல்லொலிக்கு இணையான இரட்டை உரசொலி (அறுவகையாக ஒலிக்கும் உரசொலி) என்று குறிப்பிட்டுள்ளார்.[70] பின்னர் அவரே ஆய்தம் குறித்த தனது கருத்துக்கள் மாற்றியமைக்க வேண்டியதும் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டியதும் ஆகும் என்று கூறியுள்ளார்.[71] முஃடீது, முட்டீது; கஃறீது, கற்றீது போன்ற உறழ்நிலை வழக்குகளைக் கொண்டு ஆய்தம் இரட்டித்த வல்லொலியன்களின் மாற்றொலி என்று வருணனை மொழியியல் நோக்கில் ஆய்ந்த கூய்ப்பர், தெ. பொ. மீனாட்சிசுந்தரன் போன்றோர் கருத வி. ஐ. சுப்பிரமணியம் ல, ள, வ ஆகியவற்றின் மாற்றொலி என்று குறித்துள்ளார்.

ஆய்தத்தின் ஒலித்தன்மை உரசொலியாக்கம் என்பதும், அது தொடர்ந்து வரும் ஆறு வல்லெழுத்துக்களின் காரணமாக ஆறு வகையாக ஒலிக்கும் என்பதும் பெரும்பான்மையான மொழியியலாரால் ஒத்துக்கொள்ளப்படும் கருத்து ஆகும். வருணனை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்தத்தினை ஆராய்ந்த பலரும் அது மாற்றொலி என்றே கருதியுள்ளனர்.

ஒலியன் நிலை

ஆய்தம் ஒரு குறியீடே எனவும், அது ஓர் எழுத்து எனவும் இரு வேறு கருத்துக்கள் இருந்து வந்தன. "ஆய்தம் ஓர் எழுத்து அன்று; ஒலிக்குறைவைக் குறிப்பிடும் ஒரு குறியீடே; சார்ந்து வரும் வல்லெழுத்துக்களின் இயல்பே அதன் இயல்பு; அவ்வெல்லொலிகளின் குறைவை அல்லது திரிபைக் காட்டும் பொருட்டு அவ்வல்லெழுத்துக்களின் மேல் இடப்படும் குறியீடே ஆய்தம்" என்னும் கருத்தினைக் கு. கோதண்டபாணிப் பிள்ளை,

> உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
> மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா

என்ற நூற்பாவினைச் சான்றுகாட்டி விளக்கியுள்ளார்.[72] இதனோடு ஒத்த கருத்தினை மொழியியல் நோக்கு ஆய்வாளரும் குறித்துள்ளனர்.[73] யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாகக் காட்டப்படும் பெயர் அறியப்படாத ஆசிரியர் ஒருவர், தொல்காப்பியர் கருத்தைக் கூறுகையில் ஆய்தம் ஓர் எழுத்து அன்று; வெறும் குறியீடே எனப் பிற்காலத்தவர் கொள்வது போலக் குறிப்பிட்டுள்ளார். இந்தச் செய்தியை எடுத்துக்காட்டி இதனோடு 'உருவினும் இசையினும்' என்ற தொல்காப்பிய நூற்பா ஒத்த கருத்துடையதாதலால் அந்தக் கருத்தினைத் தொல்காப்பியர் கூறும் பிற செய்திகளோடு ஒப்பிட்டுக் காணும்போது முரண்பாடு தோன்றுகிறது. இதனால் இந்த நூற்பாவின் பொருள் புரியாத புதிராகவே உள்ளது என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரன் குறிப்பிட்டுள்ளார்.[74] இளம்

பூரணர் கஃறு என்ற நிறத்தினைக் குறிக்கும் குறிப்புமொழியினையும் சுஃறு என்ற ஒலியினைக் குறிக்கும் குறிப்புமொழியினையும் எடுத்துக் காட்டி அந்த நிறம், ஒலி ஆகியவற்றின் மிகுதியைக் குறிக்க நீண்ட காலத்து அந்த நீட்சி ஆய்த எழுத்தால் இட்டு எழுதப் படாது என்று இந்நூற்பாவிற்குப் பொருள் உரைத்துள்ளார். நச்சினார்க்கினியர் இந்தக் குறிப்பு மொழி உதாரணங்களையே எடுத்துக்காட்டி, ஆய்தம் ஒற்றுப் போல அளபெடுத்துத் தன் அரை மாத்திரையினின்றும் மிக்கு ஒரு மாத்திரையாய் ஒலித்துச் சீர்நிலை எய்தும்; அப்போது ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படும் என இளம்பூரணரினின்றும் மாறுபட்டு உரைத்துள்ளார். 'இயலா' என்பதைச் செய்யும் என்னும் வாய்பாட்டு வினையெச்சமாகக் கொண்டு நச்சினார்க்கினியர் இவ்வாறு பொருள் கூறியுள்ளார். இதனால் இந்நூற்பாவுக்குச் சரியான பொருள் விளக்கம் தேவைப்படுகிறது.

வருணனை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆய்தம் மாற்றொலி எனக் கருதப்பட்டது. ஆனால் ஆய்தமும் இரட்டித்த வல்லொலியன்களும் வேற்று நிலை வழக்கில் வேறு ஒலியன்களாவதைச் சங்க இலக்கியத் தொடர்களிலிருந்தும் தொல்காப்பிய நூற்பாத் தொடர்களிலிருந்தும் உதாரணங்களை எடுத்துக்காட்டி அது வருணனை மொழியியல் நோக்கிலும் மாற்றொலியாகாது ஒலியனே என்று க. பாலசுப்ரமணியன் நிறுவியுள்ளார்.[75] பேச்சில் மெய்க்கும் உயிருக்கும் இடையே நிகழும் சூனியத்தை ஒத்த, கணக்கு அடிப்படையில் மட்டும் கணக்கிட்டு அறியக் கூடிய கால வேறுபாட்டைக் கூறுவது ஆல்பா ஒலியன் (alpha phoneme) எனப் படும். சி. ஆர். சங்கரன் ஆய்தத்தை இக்கொள்கையுடன் ஒப்பிட்டு ஆல்பா ஒலியன் கொள்கையின் ஒரு வடிவம் ஆய்தம். தொல் காப்பியரின் "பிறப்பின் ஆக்கம்" (தொல். 83) என்ற தொடரும், அவர் ஆய்தத்தை மெய்க்கும் உயிருக்கும் இடையில் வைத்ததும் இதனை மெய்ப்பிக்கின்றன என்றும் கூறியுள்ளார்.[76] "ஆனால் திரு சங்கரனுடைய .ஆல்பா ஒலியன் கொள்கையுடன் ஆய்தக் கொள்கையை ஒற்றுமைப்படுத்திப் பார்ப்பதற்குரிய எவ்விதச் சான்றும் தொல்காப்பியத்தில் இன்மையால் அவருடைய கருத்து பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை" என்று க. பாலசுப்பிர மணியன் தெரிவித்துள்ளார். மேலும் அவர் மாற்றிலக்கணக் காரர்களின் ஆர்க்கி ஒலியன் (Archi segment) அல்லது அடிப்படை ஒலியனை ஒத்தது ஆய்தம் என்றும் கூறியுள்ளார். ஆர்க்கி ஒலியன் களின் ஒலிக்கூறுகள் முழுமையாக வரையறுக்கப்படாமல் ஒரு பொதுக் கூற்றின் அடிப்படையில் அமைக்கப்படும். முன்னோ, பின்னோ அடுத்து வரும் ஒலியன்களின் ஒலிக்கூறுகளின் அடிப் படையில் இவற்றின் முழு ஒலிக்கூறுகளும் அறியப்படும். இத்தகைய இயல்புடைய ஆய்தமும் அடுத்துவரும் ஆறு வல்லெழுத்துக்களின் அடிப்படையில் ஆறுவகையாக ஒலிக்கப்படும் ஆர்க்கி ஒலியனாகும் என்று அவர் விளக்கியுள்ளார்.[77] இது புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வருவதால் தொல்காப்பியரால் எழுத்தாகக்கொள்ளப் பட்டுள்ளது.

வரிவடிவம்

ஆய்தத்தின் ஒலித்தன்மையும், ஒலியன் தன்மையும் போன்று வரிவடிவமும் சிக்கலான ஒன்றாக அமைந்து விட்டது. இதற்குக் காரணமாக அமைந்தது தொல்காப்பிய நூற்பாவே.

> அவைதாம்
> குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
> ஆய்தம் என்ற
> முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன (தொல். 2)

'முப்பாற் புள்ளி' என்ற தொடர் ஆய்தத்தை மட்டும் குறிப்பதா அல்லது குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற மூன்றையும் குறிப்பதா என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாதவாறு இந்த நூற்பா அமைந்துள்ளது. எனவே முப்பாற்புள்ளி என்பது மூன்றையும் குறிக்கும் எனவும், ஆய்தம் ஒன்றையே குறிக்கும் எனவும் இரு வேறுபட்ட கருத்துகள் தோன்றின. மேலும் பிற்காலத்தில் வரி வடிவத்தில் நிகழ்ந்த மாறுதல்களும் இந்தச் சிக்கலுக்கு உறுதுணை யாயின. ஆய்தத்தின் வரிவடிவு பற்றிய சிக்கலில் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் சேர்ந்துள்ளதால் அவையும் சேர்த்தே இங்கு ஆராயப்படுகின்றன.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் 'முப்பாற்புள்ளி' என்ற தொடர் ஆய்தத்தைக் குறிப்பது என்னும் கருத்தினர். ஆகவே இவர்கள் கருத்துப்படி ஆய்தம் மூன்று புள்ளி வடிவத்தினையுடையது என்பது புலனாகிறது. பேராசிரியரது உரையால் அவர் முப்பாற் புள்ளி என்பது குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றையும் குறிக்கும் என்று கொண்டுள்ளார் எனத் தெரிகிறது. ''வாராததனால் வந்தது முடித்தல்'' (தொல். 1610) என்னும் உத்திக்கு அவர் எழுதிய உரைப்பகுதி இங்கு எடுத்துக்காட்டத் தக்கது.

> ஒரு பொருண்மைக்கு வேண்டும் இலக்கணம் நிரம்ப வராததோர் சூத்திரத்தானே, அங்ஙனம் வந்த பொருண்மைக்கு வேண்டும் முடிபு கொள்ளச் செய்தல். ... இனி, புள்ளியென மேல் ஆள வராததனைப் புள்ளியென்று ஆள்வனவற்றோடு மயக்கங் கூறுதலென்பது,
>
> அவைதாம்
>
> ... ... எழுத்தோரன்ன (தொல். 2)
>
> என்புழி குற்றியலிகரம் புள்ளியென்று யாண்டும் ஆளவரா மையானும், அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும், ஆளவரும் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும் உடன்கூறுதலாயிற்று. இங்ஙனம் உடன் கூறாக்கால் புள்ளியும் குற்றிகரமுமெனச் சூத்திரம் பெறுதல் வேண்டுவதாவான் செல்லுமென்பது.

சிவஞான முனிவரும் முப்பாற்புள்ளி மூன்றுக்கும் உரியது என்னும் கருத்தினையே கொண்டுள்ளார்.[78] வ. சுப. மாணிக்கம் குற்றியலிகரம்,

குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்றுமே புள்ளி பெறுவன என்று கூறியுள்ளார். 'முப்பாற் புள்ளி'யைத் தவறாகப் புரிந்து கொண்டதனாலேயே ஆய்தம் மூன்று புள்ளி வடிவினது என்று ஆய்வாளர்கள் கூறினர் என்று கருதும் அவர் தமது கொள்கைக்குச் சான்றாகக்

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே (தொல். 38)

என்ற நூற்பாவைக் காட்டியுள்ளார். இந்த நூற்பாவில் "ஆய்தப் புள்ளி" என்னும் எழுவாயின் வினைமுடிபாக 'மிசைத்தே' என்ற ஒருமையைக் குறிக்கும் வினைமுற்றையே தொல்காப்பியர் கையாண்டிருக்கிறார். ஆகையால் ஆய்தப்புள்ளி என்பது ஒரு புள்ளியே. மூன்று புள்ளிகள் என்றால் 'மிசையே' என்று பன்மையைக் குறிக்குமாறு வினைமுடிபு அமைத்திருப்பார் என்று விளக்கியுள்ளார்.[79] இவரது கருத்துப்படி குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளி பெறுவன.

இளம்பூரணர் காலம் வரை குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகியன புள்ளி இல்லாமலே வழங்கின என்பது அவரது உரைப் பகுதியிலிருந்து தெரிகிறது. மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல் (தொல். 105) என்ற நூற்பாவின் உரையில், மெய்யீறு புள்ளியொடு நிற்கும்; உயிரேற இடங்கொடுக்கும் என்று உரைத்து, அடுத்த நூற்பாவாகிய "குற்றியலுகரமும் அற்றென மொழிப" (தொல். 106) என்பதன் உரையில் இளம்பூரணர்,

ஈற்றிற் குற்றியலுகரமும் புள்ளியீறு போல உயிரேற
இடங்கொடுக்கும் அத்தன்மைத்து என்று சொல்லுவர்
இம்மாட்டேறு ஒருபுடைச் சேறலென உணர்க

என்று எழுதியுள்ளார். புள்ளி பெறுதலை விலக்கி, உயிரேற இடங் கொடுத்தலை மட்டுமே மாட்டேற்றினால் தொல்காப்பியர் குறிப்பிட்டார் என்பது இளம்பூரணர் கருத்தாகும். இக்கருத்தினையே நச்சினார்க்கினியரும், "இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல்; புள்ளி பெறுதலை விலக்கினமையின்" என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று வாயிலாக நச்சினார்க்கினியர் காலத்தும் குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளி பெறுதல் இல்லை எனத் தெரிகிறது.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளிபெறும் என்னும் கருத்து முதன் முதலில் யாப்பருங்கல விருத்தியில்தான் காணப்படுகிறது.

குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளிபெறும்.
என்னை?

"குற்றிய லிகரமும் குற்றிய லுகரமும்
மற்றவை தாமே புள்ளி பெறுமே"
என்பது சங்கயாப்பாகலின்

என்பர் யாப்பருங்கல விருத்தி ஆசிரியர். இவரது கருத்தினைப் பின்பற்றிப் பேராசிரியரும் சிவஞான முனிவரும், பிற்காலத்தார் சிலரும் உரைத்துள்ளனர். ''மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்'' (தொல். 15); ''எகர ஒகரத் தியற்கையும் அற்றே'' (தொல். 16) என்னும் நூற்பாக்கள் மாத்திரையிற் குறையும் எழுத்துக்கள் புள்ளி பெறுதலை உணர்த்துதல் கண்ட பிற்கால இலக்கண ஆசிரியர்கள் அதேபோன்று மாத்திரையிற் குறுகி ஒலிக்கும் குற்றிய லிகரமும் குற்றியலுகரமும் புள்ளி பெறும் என்று புதுவிதியினை ஏற் படுத்திக் கொண்டனர் என்று க. வெள்ளைவாரணன் குறிப் பிட்டுள்ளார்.[80] குற்றியலிகரமும் குற்றியலுகரமும் புள்ளிபெறுதல் இடைக்கால வழக்கெனினும் ஆய்தம் மூன்றுபுள்ளி வடிவினதாகவே வழங்கி வந்தது என்பது இளம்பூரணர் நச்சினார்க்கினியர் கூற்றுக் களால் தெளிவாகிறது.

வரலாறு

ஆய்தம் ஆறு வல்லொலிகளின் மாற்றொலி. அந்த வல்லொலி களிலிருந்தே அது தோன்றியது என்று மு. வரதராசன் கருதுகிறார்.[81] ஆய்தத்தினை அடுத்து வரும் வல்லொலி ஆய்தத்தின் தன்மையால் உரசொலியாக மாற்றப் பட்டுச் சில இடங்களில் ஒலியாகவும் சில இடங்களில் ஒலிப்பிலா ஒலியாகவும் வழங்கத் தொடங்கியதால் அது வடமொழியின் ஆய்தத்தோடு ஒத்தது எனத் தவறாகக் கருத வாய்ப் பளித்து விட்டது என்பதைத் தெ. பொ. மீனாட்சி சுந்தரன் சுட்டிக் காட்டியுள்ளார்.[82] ஆய்தம் மூக்கொலிகளிலிருந்து தோன்றியது என்று ஆர். இராதாகிருட்டிணன் குறிப்பிடுகிறார். தொதுவமொழியில் மருங்கொலிகள் (laterals) அலையொலிகளாகவும் நிலையொலி களாகவும் ஒலிக்கப் பெறுகின்றன. அதனால் ஆய்தத்தின் தன்மை தமிழ்-தொதுவ மூலமொழியிலிருந்து வந்ததாகக் கொள்ளலாம் என்று ஆய்தத்தின் வரலாறு பற்றி ஆராய்ந்து இரா. கோதண்டராமன் கூறி யுள்ளார்.[83]

இடைக்காலத்தில் ஆய்தம் வரிவடிவத்தில் மாற்றம் அடைந் துள்ளது. ''இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப'' (தொல். 2) என்று நச்சினார்க்கினியர் கூறுவது இதனைத் தெளிவுபடுத்துகிறது. பல்லவர்களின் கல்வெட்டில் அது வெ̊கா என நடுவில் வளைந்த கோட்டுடன் எழுதப்பட்டது. இத்தகைய வடிவினை நச்சினார்க் கினியர் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். ''நடுவு வாங்கியிட் டெழுதுதல் என்பது உள்ளே புள்ளியாக எழுதாது ஃ என எழுதுத லேயாம்'' என்று கு. சுந்தரமூர்த்தி உரைவிளக்கக் குறிப்பில் குறிப் பிட்டுள்ளார்.[84] வாங்கி என்பதற்கு வளைந்தது என்பது பொருளா தலால் இவர் எந்தச் சான்றினைக் கொண்டு இங்ஙனம் குறிப்பிடு கிறார் எனத் தெரியவில்லை. எப்படியிருப்பினும் ஆய்தம் மூன்று புள்ளி வடிவினதாகத் தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்து நச்சினார்க்கினியர் காலம் வரை வழங்கியுள்ளது என்பது தெளிவு. இன்றும் அதே வடிவில் வழங்குகிறது. இடையில் வளைந்த

கோட்டுடன் எழுதப்பட்ட மாற்றம் மீண்டும் முப்புள்ளி வடிவானது எப்போது என்பது ஆராய்ந்து நிறுவப்பட வேண்டிய ஒன்று ஆகும். இடைக்காலத்தில் ஒற்றளபெடை போன்று ஆய்த அளபெடையும் கொள்ளப்பட்டது. அவிநயமும் நன்னூலும் ஆய்த அளபெடையைக் குறிப்பிட்டுள்ளன.

> ஆய்தம் மறைந்ததோடு மட்டும் அல்லாது ஆய்தம் வழங்கிய சொற்கள் பலவும் வழக்கிறந்தன. இக்காலத் தமிழில் ஆய்தம் இல்லை என்னும் நிலை அமைந்தது. இடைக்காலத் தமிழில் அது செயற்கையாகப் புலவர்நடையில் வழங்கி வந்தது. கல்வெட்டு மொழியில் அது ஏறத்தாழக் கி. பி. 1000 வரை காணப் படுகிறது. பின்னர் அங்கும் இடம்பெறவில்லை. மற்ற திராவிட மொழிகளில் இது போன்ற ஓரெழுத்துக் காணப்படவில்லை. இவ்வகையில் இதனைத் தமிழுக்கே உரிய சிறப்பெழுத்து எனலாம்.

அளபெடை

தொல்காப்பியர் காலத்தில் அளபெடை நெடிலும் குறிலும் சேர்ந்த கூட்டு உயிர்களாகவே இருந்திருக்க வேண்டும் என்பர் செ. வை. சண்முகம்.[86] அசைநிலையில் அளபெடையை இரண்டு அசையாகவும் ஓரசையாகவும் கொள்ளும் நிலைமை தொல்காப்பியத் தில் காணப்படுகிறது. இதனுள் ஈரசையாகக் கொள்ளும் நிலைமை பழைமையானது என்பர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.[87] ஈரசை யாகவும் ஓரசையாகவும் கொள்ளும் நிலைமையினைப் பின்வருமாறு பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

> அளபெடை மேற்கூறிய சீர்நிலையேயன்றி ஓரசையாய் நிற்றலும்
> உரித்து. உம்மையால் சீர்நிலை எய்துதலே வலியுடைத்து
> (தொல். 1274)

பிற்கால இலக்கண நூல்கள் வீரசோழியம், நேமிநாதம், நன்னூல் ஆகியன உயிரளபெடைக்கு மூன்று மாத்திரை என்று கூறி அதனை ஓர் எழுத்தாகக் கருதின. இதனால் அளபெடை வடமொழி புலுதத் தோடு தொடர்புடையதாகக் கருதப்பட்டது.

ஒலியன் நிலை

அளபெடையை எழுத்தாகவோ, சார்ந்து வரல் மரபினதாகவோ தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. இளம்பூரணர் அதனை ஓர் எழுத்தாகக் கொண்டுள்ளார். மேலும் அதனைச் சார்பெழுத்து என்றல் பொருந்தாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

> ஈண்டு மொழியென்றது அவ்வளபெடையெழுத்து ஒரு பொருள் உணர்த்தி நிற்கும் நிலைமையினை.

> இவையும் மொழிமேற் காணப்படுதலின் சார்பிற்றோற்றத்து எழுத்தெனப் படுமால் எனின் பெரும்பான்மையும் அம்மொழி தானே அவ்வெழுத்தாய் வருதலானும் அம்மொழி நிலைமை ஒழிய வேறெழுத்தாகவும் சொல்லப்படுதலாலும் அவ்வாறு ஆகாதென்பது. (தொல். 41)

நச்சினார்க்கினியரும் அளபெடையை எழுத்து எனக் கொண்டுள்ளார். நெட்டெழுத்துக்களே அளபெடுப்பதாலும், நெட்டெழுத்துக்கள் ஏழும் ஓரெழுத்தொரு மொழிகள் ஆதலாலும் அளபெடை சொல்லாகும் தன்மையைப் பெறுகிறது. அளபெடை அசை நிலை ஆவதால் எழுத்தாகும் தன்மையும் பெறுகிறது. ஆகவே அளபெடை எழுத்து ஏழு. மூன்று தலையிட்ட முப்பது எழுத்துக்களுடன் சேர்த்து, எழுத்துக்கள் நாற்பது என்பது நச்சினார்க்கினியரின் கருத்து (தொல். 6). பொருள் தராது இசைநிறைத்தலை மாத்திரமே செய்தலால் அதனை எழுத்தாகக் கருதலாகாது என்பதைச் சிவஞான முனிவர்,

> அளபெடை அந்நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பது ஒன்றாயினும் மொழிக்காரணமாய் வேறு பொருள் தராது இசைநிறைத்தல் மாத்திரைப் பயத்ததாய் நிற்றலின் வேறு எழுத்தென வைத்து எண்ணப்படாததாயிற்று என்பது நுண்ணுணர்வான் உணர்ந்து கொள்க.

என்று விளக்கியுள்ளார்.[88] ஆனால் அளபெடை வெறும் இசை நிறைத்தலை மட்டுமே செய்கிறது என்பது ஒப்பக் கூடியது அல்ல. பொருள் தரும் தன்மையும் அளபெடைக்கு உண்டு. 'நசை' என்ற பெயர்ச்சொல் 'நசைஇ' என அளபெடுத்து வினையெச்சமாக மாறியது சொல்லிசை அளபெடை எனக் கொள்ளப்பட்டது. இக் கருத்தினை மறுத்து 'நசை' என்பது வினைச்சொல்லே; அது 'இ' என்ற இறந்தகால விகுதிபெற்று வினையெச்சமாக மாறிற்று என்று சுப. திண்ணப்பன் விளக்கியுள்ளார்.[89] ஆகவே நெட்டெழுத்தினின்றும் வேறுபட்ட எழுத்தாக நின்று அளபெடை பொருள் வேறுபாட்டை உணர்த்துகின்றது என்பது தெரிகிறது. இருந்த போதிலும் தொல்காப்பியர் அதனை ஏன் எழுத்தாக்க் கொள்ளவில்லை என்று ஆராய்ந்து செ. வை. சண்முகம் கூறியுள்ளார். இவர், புணர்ச்சியின் நிலைமொழி வருமொழி ஆகிய அடிப்படை வடிவங்களில் வராததால் அது விதிமுறை ஒலியன் (systematic phoneme) அன்று என்றும், தொல்காப்பியரின் எழுத்தியல் கோட்பாடு மாற்றிலக்கணக்காரரின் விதிமுறை ஒலியனியல் கோட்பாட்டினை ஒத்ததாகையால் அவர் அளபெடையை எழுத்தாகக் கொள்ளவில்லை என்றும் விளக்கியுள்ளார்.[90]

ஒற்றளபெடை

ஒற்றளபெடையினை "ஒற்றிசை நீடல்" (தொல். 33) என நூன்மரபினும் "ஒற்றளபெடுப்பினும்" (தொல். 1275) எனச்

செய்யுளியலிலும் தொல்காப்பியர் கூறியுள்ளார். அது செய்யுளில் சீர்நிலை பெற்றும் (அசையாகவும்) சீர்நிலை பெறாமலும் (அசையாக அல்லாமல்) வரும் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஒலிநிலையில் ஒற்றளபெடை என்பது இரண்டு ஒற்று சேர்ந்து வருவதாக அல்லது ஒற்றின் நெடிலாகக் கொள்ளப்பட வேண்டும். மெல்லினம் ஆறு, இடையினம் நான்கு, ஆய்தம் ஒன்று ஆகப் பதினொன்று ஒற்றளபெடை.[91] ஒற்றளபெடை பொருளை வேறுபடுத்துவது இல்லை; புணர்ச்சியின் நிலைமொழி வருமொழிகளிலும் வராததால் அது தொல்காப்பியரால் எழுத்தாகக் கருதப்படவில்லை.

ஐகாரக்குறுக்கம்

ஐகாரம்

தொல்காப்பியர் ஐகாரத்தை உயிர்நெடிலாகக் கொண்டிருந்தாலும், அகரமும் இகரமும் சேர்ந்த கூட்டொலியாகவும் (தொல். 54), அகரமும் யகரமெய்யும் சேர்ந்த கூட்டொலியாகவும் (தொல். 56) கருதியுள்ளார். "இது எழுத்துப் போலி; இதனைக் கொள்ளற்க" (தொல். 54) என்று நச்சினார்க்கினியர் உரைத்துள்ளார். இதனால் நச்சினார்க்கினியர் காலத்தில் எழுத்துப்போலியை எழுத்தெனக் கொள்ளாது மறுக்கும் போக்கு இருந்தது எனத் தெரிகிறது. நன்னூல், ஐகாரத்தையும் ஔகாரத்தையும் வடமொழியின் சந்தி எழுத்தோடு (Dipthong) தொடர்புபடுத்தி சந்தியக்கரம் என எடுத்துக் கூறியுள்ளது. இவ்வெழுத்துக்கள் வடமொழி நெடுங்கணக்கைப் பின்பற்றி அமைத்துக் கொள்ளப்பட்டவை என்பது தெ. பொ. மீனாட்சி சுந்தரனின் துணிபு.[92]

ஐகாரத்தைத் தனி ஒலியனாகக் கொள்ளலாமா அல்லது கூட்டொலியாகக் கருதலாமா என்பது பற்றி வருணனை மொழியியல் நோக்கில் பலர் ஆராய்ந்துள்ளனர். அகர உயிரும் யகர மெய்யும் சேர்ந்த கூட்டொலியாகக் கருதலாம் எனத் தெ. பொ. மீனாட்சி சுந்தரன்,[93] பொன். கோதண்டராமன்,[94] செ. வை. சண்முகம்[95] ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். அகரமும் இகரமும் சேர்ந்த கூட்டொலியாகக் கருதலாம் என்று ச. வே. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.[96] இரண்டு வகையாகவும் கொள்ளலாம் என்பதற்குத் தொல்காப்பிய நூற்பாக்களே (தொல். 54, 56) சான்று கூறுவதால் தொல்காப்பியருக்கு ஐகாரத்தைக் கூட்டொலியாகக் கொள்வது உடன்பாடே என்பதை அறியலாம்.

ஐகாரம் கூட்டொலியாக இருந்தும் ஏன் தனி எழுத்தாகத் தொல்காப்பியர் கொண்டுள்ளார் என்பது பற்றிச் செ. வை. சண்முகம் ஆராய்ந்துள்ளார். அதனைத் தனி எழுத்தாகக் கொண்டதால் புதிய மெய்ம்மயக்கங்களை அங்கீகரிக்க வேண்டிய அவசியம் இல்லாமலும், புதிய புணர்ச்சி விதிகளை அமைக்க வேண்டிய தேவை இல்லாமலும் ஆகிவிட்டது என்பதை அவர் விளக்கிக் காட்டியுள்ளார்.[97]

குறுக்கம்

ஐகாரம் குறுகுவதைத் தொல்காப்பியர் மொழிமரபில் (தொல். 57) கூறியுள்ளார். அது தனக்குரிய இரண்டு மாத்திரையினின்றும் குறுகி ஒரு மாத்திரையாக ஒலிக்கும். இளம்பூரணர் மொழியின் இடையிலும் கடையிலும் குறுகும் என்று உதாரணங்கள் காட்டி அதுவும் சிறு பான்மை என்று கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் மொழியின் முதல், இடை, கடை ஆகிய மூன்று இடங்களிலும் குறுகும் என்று கூறி யுள்ளார்: சிவஞான முனிவர் மொழி முதலில் குறுகாது என்னும் கருத்தினர். குறுகினால் குறிலாகக் கொள்ளப்பட்டு இரண்டு குறில்கள் இணைந்து வருவது போன்றாகி சீர், தளை கெடும் என்பர்.

> இடையன், மடையன், தினை, பனை என்புழிக் குறுகுதல் போல 'வைகல் வரக் கண்டும்' என்புழி ஐகாரம் முதற்கண் குறுகாமை செவிகருவியாக உணரப்படுதலானும் அன்றியும் வைகலும் என்பதனைக் குறில்இணை ஒற்று என்று அசைத்தல் வேண்டும்; வேண்டவே வெண்டளை அசைத்தலானும்[98]

என்று கூறியுள்ளார். இது செய்யுளியலை நோக்கிய விளக்கம். ஐகாரம் குறுகும் இடம் குறித்து ஒருமித்த கருத்து காணப்படவில்லை. இது அந்த உரையாசிரியர்கள் கால உச்சரிப்பு நிலையைக் குறிக் கலாமோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஐகாரக் குறுக்கம் பொருள் வேறுபாடோ புணர்ச்சி வேறுபாடோ இல்லாததாகையால் தொல்காப்பியர் இதனைச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாகக் கொள்ள வில்லை.

ஔகாரக் குறுக்கம்

ஔகாரம்

ஔகாரத்தினைத் தொல்காப்பியர் அகரமும் உகரமும் சேர்ந்த கூட்டுயிராகக் குறிப்பிட்டுள்ளார் (தொல். 55). ஆனால் அகரமும் வகர மெய்யும் சேர்ந்த கூட்டொலியாகக் குறிப்பிடவில்லை, 'அவ்' என்ற எழுத்துத் தொடர் சுட்டுச்சொல்லாக உள்ளதால் தொல்காப் பியர் ஔகாரத்தினை 'அவ்' என்ற கூட்டொலியாகக் குறிப்பிட வில்லை. "பிராமித் தமிழ்க் கல்வெட்டுக்களில் ஔகாரம் தனி எழுத்தாகக் கொள்ளப்படவில்லை. ஔகாரம் உள்ள சொற்கள் பழந்தமிழில் மிகவும் குறைவு. பிற்காலத்தில் வடமொழியிலிருந்து கடன்வாங்கிய சொற்களால் ஔகாரச் சொற்கள் அதிகமாயின. அதனால் ஔகாரம் வடமொழியைத் தழுவி அமைக்கப்பட்டது" என்று கால்டுவெல்,[99] தெ. பொ. மீனாட்சிசுந்தரன்[100] போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். இவர்களது கருத்துகளை மறுத்து ஔகாரம் தமிழ்மொழி அமைப்பை ஒட்டிக் கொள்ளப் பட்டதே தவிர வட மொழியிலிருந்து கொள்ளப்பட்டது அன்று என்பதனைச் செ. வை. சண்முகம் விளக்கியுள்ளார். ஔகாரம் வியப்பினைக் குறிக்கும் இடைச் சொல்லாக வழங்கும் என்பதைத் தொல்காப்பியர் உரியி யலில் (தொல். 766) குறிப்பிட்டுள்ளார். ஔ–வியப்பு இடைச்சொல்,

அவ்-சுட்டுப்பெயர் எனப் பொருள் வேறுபாடு உடையதாக வேற்று நிலை வழக்கில் வருகின்றன. ஆகவே தொல்காப்பியர் தமிழின் அமைப்பை ஒட்டியே ஒளகாரத்தை தனி எழுத்தாகக் கருதினார் என்பதே அவரது விளக்கம்.[101]

குறுக்கம்

ஒளகாரக் குறுக்கம் பற்றித் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை ஒளகாரம் அவர் காலத்தில் குறுகி ஒலித்திருக்காது; எனவே அவர் இது பற்றிக் குறிப்பிடவில்லை என்று கருதப்பட்டது. குறுக்கம் பற்றிய கோட்பாடு காரணமாகவே அவர் ஒளகாரக் குறுக்கத்தினைக் குறிப்பிடவில்லை. ஒளகாரக் குறுக்கம் என ஒன்று ஒலிநிலையில் இல்லை. இதனைச் சிவஞான முனிவர்,

ஒளகாரக் குறுக்கம் என ஒன்று இன்மை உணர்க[102]

என்று கூறியுள்ளார். சிவஞான முனிவரது கருத்தினை மேற்கோள் காட்டி, தொல்காப்பியரும் ஒளகாரம் குறுகி ஒலிக்காத காரணத்தால் ஒளகாரக் குறுக்கம் பற்றிச் சொல்லவில்லை; பிற்காலத்திலும் கூட உண்மையான ஒளகாரக் குறுக்கம் வரவில்லை என்று செ. வை. சண்முகம் கூறியுள்ளார்.[103]

மகரக்குறுக்கம்

மகரம் மொழியில் அரையளபாகக் குறுகி ஒலிக்கும் (தொல். 13) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இந்த நூற்பா உரையில் மகரக்குறுக்கத்திற்குக் கால்மாத்திரை என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளனர். இந்த நூற்பாவின் "இசையிடன் அருகும் தெரியும் காலை" என்ற அடிக்கு உரையாக "வேறோர் எழுத்தொலியின்கண் குறுகி ஒலிக்கும்" என்று கூறிப் 'போன்ம்', 'வரும் வண்ணக்கன்' என்ற உதாரணங்களை இளம்பூரணர் காட்டியுள்ளார். இதன்படி னகர மெய்யைத் தொடர்ந்து வரும் மகரமும், வருமொழி வகரம் வருங்கால் நிலைமொழி ஈற்றிலுள்ள மகரமும் குறுகி ஒலிக்கும் என்று தெரிகிறது. இவை, னகரமும் மகரமும் ஈரொற்றாக மொழியில் வழங்கும் எனக் கூறும் மொழிமரபு நூற்பாக்களையும் (தொல். 51, 52) வருமொழி வகரம் வருங்கால் நிலைமொழி ஈற்று மகரம் குறுகும் என்று கூறும் புள்ளி மயங்கியல் நூற்பாவையும் (தொல். 330) ஒட்டிய விளக்கங்கள்.

போன்ம் என்ற சொல்லில் உள்ள னகரம் உச்சரித்த பிறகு விடுப்பு இல்லாமல் மூச்சுக்காற்றின் துணைகொண்டே உச்சரிக்கப் படுவதால் முழுமையான அளவு காற்று அழுத்தத்தோடு உச்சரிக்கப்படுவதில்லை. எனவே தான் மகரம் குறுகி ஒலிப்பதாகக் கருதப்படுகிறது என்று உச்சரிப்பு ஒலியியலை ஒட்டி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. மகர ஈற்றுச்சொல் முன் வகர முதன்மொழி வரும்போதும் மகரம் முழுமையாக உச்சரிக்கப்படாததால் அங்கும்

மகரம் குறுகியதாகக் கருதப்பட்டது. தனிமொழியில் வரும் மகரக் குறுக்கமும் தொடர்மொழியில் வரும் மகரக் குறுக்கமும் ஒலித்தன்மையில் வேறுபாடு உடையதெனினும் முழுமையாக உச்சரிக்கப்படாத தன்மையை நோக்கி மகரக்குறுக்கம் என ஒரே பெயரால் தொல்காப்பியரால் குறிக்கப்பட்டுள்ளது.[104]

மகரக் குறுக்கம் மொழியிடை நின்ற எழுத்தின் இலக்கணம் பற்றிக் கூறுவதால் தனி எழுத்தின் இலக்கணம் பற்றிப் பேசும் நூன்மரபில் வந்தது பொருந்தாது; அதனால் மகரக்குறுக்கம் பற்றிக் கூறும் நூற்பா (தொல். 13) இடைச்செருகலாக இருக்க வேண்டும் என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரன் கூறியுள்ளார். இவர், தமது கருத்துக்கு ஆதரவாக, மகரக்குறுக்கத்திற்கு முன்னோர் நூலை எடுத்துக்காட்டும் மயிலைநாதர் தொல்காப்பிய நூற்பாவை எடுத்துக் காட்டாமல் பிற இலக்கணங்களையே மேற்கோள் காட்டுவதைக் கொண்டுள்ளார். பிற்காலத் தொல்காப்பியரின் நூற்பாவாக இருக்கலாமோ என்றும் இவர் ஐயம் கொண்டுள்ளார் (தொல்காப்பியர் இருவர் என்பது தெ. பொ. மீனாட்சிசுந்தரன் கருத்து).[105] மகரக் குறுக்கம் புணர்ச்சி வேறுபாடோ பொருள் வேறுபாடோ இல்லாததால் தொல்காப்பியர் இதனை எழுத்தாகக் கொள்ளவில்லை.

தொல்காப்பியரின் 'எழுத்து' — பாகுபாடு

பிற்கால இலக்கண நூல்கள் எழுத்துக்களை முதலெழுத்து, சார்பெழுத்து எனப் பாகுபாடு செய்தன. ஆனால் தொல்காப்பியம் அத்தகைய பாகுபாட்டைக் கொள்ளவில்லை. உயிரும் மெய்யுமாகிய முப்பது எழுத்துக்களையும் எழுத்தெனப்படுப என்றும் சார்ந்து வரல் மரபினவாகிய குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற மூன்றினையும் எழுத்தோரன்ன என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளார். 'எழுத்தோரன்ன'வாகிய மூன்றினையும் சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பில' எனத் தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்று' என்றும் அழைத்துள்ளதால், இம்மூன்றினையும் சார்பெழுத்து எனக் கொள்ளல் தொல்காப்பியருக்கு உடன்பாடு என்று கொள்ளலாம். பிற்கால இலக்கண நூலாகிய நன்னூல் கூறும் சார்பெழுத்துக்களுள் உயிர்மெய், உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், மகரக்குறுக்கம் ஆகியவற்றைத் தொல்காப்பியர் பேசியுள்ளார். ஆனால் இவற்றை இவர் சார்பெழுத்துக்களாகக் குறிப்பிடவில்லை.

வருணனை மொழியியலார் ஓர் ஒலி புறநிலையில் (Surface structure) வேற்றுநிலை வழக்கில் வந்தால் அதனை ஒலியன் எனக் குறிப்பிடுவர். ஆனால் மாற்றிலக்கணக்காரர்கள் புறநிலையில் வேற்றுநிலை வழக்கில் வருவதை மட்டும் கொண்டு ஒலியனை நிர்ணயிப்பது இல்லை. புணர்ச்சிக்குரிய நிலைமொழி வருமொழிகளில் வருவதையும் (அதாவது புணர்ச்சியில் அடிப்படை வடிவத்தில் வருவது) ஒட்டியே ஒலியன் (அல்லது மாற்றிலக்கணத்தின்படி விதி

முறை ஒலியன் (sytematic phoneme) வரையறுக்கப்படுகிறது. தொல்காப்பியர் எழுத்துக்களை வரையறுத்திருப்பது இந்தக் கோட்பாட்டினை ஒத்தது ஆகையால் உயிரளபெடை, ஒற்றளபெடை, ஐகாரக் குறுக்கம், மகரக் குறுக்கம் ஆகியவற்றைச் சார்பெழுத்தாகவும் கொள்ளவில்லை. நச்சினார்க்கினியர் இவற்றை (உயிரளபெடை தவிர, உயிரளபெடையினை அவர் எழுத்து என்பர்) 'எழுத்தியல் தழா ஓசைகள்' என்று கூறியுள்ளார். அவர் இவற்றை 'எழுத்தோரன்ன'விலிருந்து வேறு பிரித்து அறிகிறார் என்பது அவரது விளக்கத்தால் தெரிகிறது. அது வருமாறு,

> எழுத்தியல் தழா ஓசைகள் போலக் கொள்ளினும் கொள்ளற்க
> என்பதற்கு எழுத்தோரன்ன என்றார் (தொல். 2)

இவற்றை 'அல் எழுத்துக்கள்' என்ற பெயரால் செ. வை. சண்முகம் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியரின் எழுத்து பற்றிய கோட்பாட்டினை ஆராய்ந்து 1. எழுதது, 2. எழுத்தோரன்ன, 3. அல் எழுத்து என மூவகைப் பாகுபாட்டினை அவர் கொண்டுள்ளார் என்று செ. வை. சண்முகம் புலப்படுத்தியுள்ளார்.

'எழுத்து' பொருளிலும் புணர்ச்சியிலும் வேறுபாடு உடையது; புணர்ச்சியின் அடிப்படை வடிவத்திலும் வருவது. அது வருகின்ற சூழலை வரையறுக்க இயலாது. இதனால் இவை 'எழுத்தெனப்படுப' என்று விதந்து கூறப்பட்டன.

'எழுத்தோரன்ன' புணர்ச்சி வேறுபாடு, பொருள் வேறுபாடு ஆகியவற்றைக் கொண்டிருப்பினும் அவை 'சார்ந்துவரல் மரபின; அதாவது வரையறுக்கப்பட்ட சூழல்களில் மட்டுமே வருவன. ஆதலால் அவை ஒலியனாக (எழுத்து) இருந்தும் 'எழுத்தோரன்ன' (எழுத்தோடு ஒத்த தன்மை உடையன) எனப்பட்டன.

அல் எழுத்துக்களின் சூழல் வரையறுக்கப்பட்டதாக (குறிப்பிட்ட சூழல்களில் மட்டுமே வருவதாக) இருப்பதோடு அவை பொருள் வேறுபாடு செய்வதோ, புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் வருவதோ இல்லை. எனவே இவை எழுத்தாகக் கொள்ளப்படவில்லை. அல் எழுத்தாக எண்ணப்பட்டன என்று செ. வை. சண்முகம் விளக்கியுள்ளார்.[106]

வரிவடிவு

தொல்காப்பியர் நூன்மரபு 14, 15, 16, 17 ஆகிய நூற்பாக்களில் வரிவடிவம் பற்றிக் கூறியுள்ளார். மெய்யெழுத்துக்களும் எகர ஒகரங்களும் புள்ளி பெற்று நிற்கும் (தொல். 15, 16). உயிர் மெய்யாவதற்குப் புள்ளியை இழந்த எல்லா மெய்களும் தன் உருவே உருவாக அகரத்தோடும் ஏனை உயிர்களோடு உருவு திரிந்தும் வழங்கும் (தொல். 17).

உயிர்மெய் ஆவதற்குத் தம் மெய் வடிவத்தில் இருந்த புள்ளியை இழந்த எல்லா மெய்களும் அங்ஙனம் உயிர்மெய் ஆகும்போது

எய்தும் மாற்றங்களை 'உருவுருவாகி உயிர்த்தல்' 'உருவு திரிந்துயிர்த்தல்' என்னும் இரண்டு தொடர்களால் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

> உருவுருவாகி உயிர்த்தல் கங எனக் கண்டு கொள்க. உருவு திரிந்துயிர்த்தல் கா, ஙா, சா, ஞா, கி, சி, ஙி சி, கி, எனக் கண்டு கொள்க. ...... உருவு திரிந்துயிர்த்தல் மேலுங்கீழும் விலங்கு பெற்றுயிர்த்தலும், கோடு பெறுவன கோடு பெற்றுயிர்த்தலும், புள்ளியுங் கோடும் உடன்பெறுவன உடன்பெற்றுயிர்த்தலும் எனக் கொள்க.

என்று இளம்பூரணரும்,

> புள்ளியில்லா மெய் எனவே முன்பெற்று நின்ற புள்ளியை உயிரேற்றுதற்குப் போக்கினமை பெறுதும். 'உருவுருவாகி' எனவே புள்ளி பெறுதற்காக இயல்பாகிய அகரம் நீங்கிய வடிவே பின்னர் அகரம் பெறுதற்கு வடிவாம் என்பது கூறினார். எ-டு. க, ங, ய என வரும் உருவுதிரிந்துயிர்த்தலாவது மேலும் கீழும் விலங்கு பெற்றும், கோடு பெற்றும், புள்ளி பெற்றும், புள்ளியுங் கோடும் உடன் பெற்றும் உயிர்த்தலாம்.
>
> கி கீ முதலியன மேல் விலங்கு பெற்றன. கு கூ முதலியன கீழ் விலங்கு பெற்றன. கெ கே முதலியன கோடு பெற்றன. கா ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக் காலத்தார் காலாக எழுதினார். கொ கோ ஙொ ஙோ முதலியன புள்ளியுங் கோடும் உடன்பெற்றன.

என்று நச்சினார்க்கினியரும் உயிர் மெய்யின் வரிவடிவத்தினை விளக்கியுள்ளார்.

மெய் உயிர்மெய் ஆவதற்கு அதன் வரிவடிவில் நிகழும் மாற்றங்களாகப் புள்ளியை இழத்தல், புள்ளிபெறுதல் (மேல், கீழ், அருகில்), விலங்கு பெறுதல் (மேல், கீழ்), கோடு பெறுதல், புள்ளியும் கோடும் உடன்பெறுதல் ஆகிய மாற்றங்களை எய்தின. கா, ஙா முதலியவற்றில் அருகே இருந்த புள்ளி நச்சினார்க்கினியர் காலத்தில் காலாக எழுதும் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

'உயிர்த்தல்' என்பதற்கு ஒலிக்கும் முறைமை என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் பொருள் கொண்டுள்ளனார். இச் சொல்லுக்கு வெளிப் படுதல் என்ற பொருளைக் கொள்ளலாம் எனப் பொறையுயிர்த்தல் என்ற சொல்லின் பொருளோடு ஒப்புநோக்கி வே. வேங்கடராகலு ரெட்டியார் தமது உரைக்குறிப்பில் (தொல், 17) கூறுவது கொள்ளத்தக்கது.

மகரக் குறுக்கம் கூறும் நூற்பாவினை (தொல். 13) அடுத்து "உட்பெறு புள்ளி உருவாகும்மே" (தொல். 14) என்ற நூற்பா

அமைந்துள்ளது. இந்த நூற்பா கூறும் வரிவடிவு மகரத்திற்கா அல்லது மகரக் குறுக்கத்திற்கா என்பதில் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் அது மகரத்தின் வரிவடிவு கூறுவது எனக் கொண்டுள்ளனர். ஆனால் உரையாசிரியர்களின் கருத்தினை மறுத்து அது மகரக் குறுக்கத்தின் வரிவடிவினைக் கூறுகிறது என்று வே. வேங்கடராசுலு ரெட்டியார் தமது உரைக் குறிப்பில் (தொல். 14) குறிப்பிட்டுள்ளார். ஒரு மெய் பிறிதொரு மெய்யாக மாறுதற்குப் புள்ளிபெறும் வழக்குஇல்லை; ஆனால் மாத்திரைக் குறைவிற்குப் புள்ளியிடுதல் இயல்பு என்று கூறித் தம் கருத்துக்குச் சான்றாக 'வருமொழி முதல் னகரம் வந்து புணர்ந்தால் நிலைமொழி மகரமானது குறுகிக் கால் மாத்திரையாய் உட்பெறு புள்ளி பெறும்' (வீரசோழியம், சந்திப்படலம், 19) என்னும் உரையினை எடுத்துக்காட்டியுள்ளார். க. வெள்ளைவாரணனும் இக் கருத்தினரே.

1. மாத்திரை குறுகும் எல்லா எழுத்துக்களும் புள்ளிபெறுதல் இல்லை. ஏகார ஓகாரங்களை நோக்க எகர ஒகரங்கள் குறுகியன, அதனால் புள்ளி பெற்றன என்றலும் பொருந்தாது. பிற குறில்கள் அங்ஙனம் புள்ளி பெறுதல் இல்லை. 2. மேலும் முதல் நூற்பாவின் எழுவாய் மகரம்தான்; மகரக் குறுக்கம் அன்று, போன்ற காரணங்களைக் கூறி உரையாசிரியர்களின் கருத்தில் குறை காண்பதற்குச் சரியான ஆதாரம் இல்லாததாலும், தமிழ் எழுத்துக்களின் வரிவடிவு காலப்போக்கில் பல மாற்றங்களை எய்தியுள்ளதாலும், உரையாசிரியர்களின் கருத்தே கொள்ளத்தக்கது என்று சூ. இன்னாசி கூறியுள்ளார்.[107] ஆகவே மகரக் குறுக்கத்தின் வரிவடிவம் உட்பெறுபுள்ளி என்று கருதியது வீரசோழிய உரையினை ஒட்டி எழுந்த கருத்து எனலாம். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் காலம்வரை பகரத்தின் உட்பெறுபுள்ளியே மகரத்தின் வரிவடிவாக வழங்கி வந்தது என ஊகிக்கலாம். "மகரம் உட்பெறு புள்ளியை இக்காலத்தார் வளைத்தெழுதினார்" எனத் தம்காலத்தில் மகரத்தின் வரிவடிவில் நிகழ்ந்த மாற்றத்தினை நச்சினார்க்கினியர் கூறுவதும் இதற்குச் சான்றாக அமைகிறது.

மெய்ம்மயக்கம்

தொல்காப்பியர் மெய்ம்மயக்கம் பற்றி நூன்மரபிலும் மொழி மரபிலும் ஆராய்ந்துள்ளார். இரண்டு மெய்கள் சேர்ந்துவருவதனை நூன்மரபிலும் மூன்று மெய்கள் சேர்ந்து வருவதனை மொழிமரபிலும் கூறியுள்ளார்.

நூன்மரபில் 22 முதல் 30 வரையுள்ள ஒன்பது நூற்பாக்களில் மெய்ம்மயக்கம் கூறப்படுகிறது. நூன்பரபில் தனி எழுத்தின் இலக்கணமே பேசப்படுகிறது என்பது இளம்பூரணரின் கருத்து (தொல். 1). ஆயினும் மெய்ம்மயக்கம் ஒருமொழிக்கும் புணர் மொழிக்கும் பொது (தொல். 23) என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். ஒருமொழி புணர்மொழியில் வரும் எழுத்தின் இலக்கணம் எவ்வாறு

தனி எழுத்தின் இலக்கணம் ஆகும் என்பதை அவர் விளக்கவில்லை.

> மேல் 'தெரியுங்காலை' (தொல். 22) என்றதனால் இம்மெய்ம் மயக்கங் கூறுகின்ற சூத்திரமெல்லாம் பலபடியான் மயக்கங் கொள்ளச் சொல்நோக்கு உடையன எனினும் வழக்கினோடு பொருந்த ஒன்றனோடு ஒன்றன்றி மயங்காது எனக் கொள்க.
>
> இம்மயக்கம் ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் பொதுவாகலின் மேற்கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாம் தலையாய அறிவினோரை நோக்க ஒருவாற்றாற் கூறியவாறு ஆயிற்று (தொல். 23).

அவர் மெய்ம்மயக்கத்தினை உணர்த்தும் நூற்பாக்கள் பலவாறு பொருள் கொள்ளும் வகையில் அமைந்துள்ளன என்று கருதியதால் இதனை ஆராயாது விட்டார் எனலாம்.

நச்சினார்க்கினியர், தனிமொழி இலக்கணம் நூன்மரபில் கூறப்படுகிறது ("ஆசிரியர் ஒருமொழி ஆமாறு ஈண்டுக் கூறி," தொல். 27) என நினைத்ததால் அவரும் மெய்ம்மயக்கம் எப்படித் தனி எழுத்தின் இலக்கணம் ஆகும் என்பதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

சிவஞான முனிவர் இதுபற்றிச் சிந்தித்து இதன் காரணத்தை விளக்கியுள்ளார்.

> இவ்வெழுத்துக்கு இவ்வெழுத்து நட்பு; அல்லன பகை என்னும் துணையானே கருவி செய்தலின் இவை ஈண்டே (நூன்மரபில்) வைக்கப்பட்டன.[108]

எழுத்துக்கள் எல்லாம் ஒன்றோடு ஒன்று சேர்ந்து வருவது இல்லை. சில எழுத்துக்கள் குறிப்பிட்ட வேறு எழுத்துக்களோடு சேர்ந்து வருவது இயல்பு. இது ஒலிப்பண்பை ஒட்டியது. ஆகவே மெய்ம் மயக்கத்தைத் தனி மெய்களின் ஒலிப்பண்பை ஒட்டி அமைவதாகச் சிவஞான முனிவர் தந்துள்ள விளக்கம் ஏற்றுக் கொள்ளத் தக்கதே என்று செ. வை. சண்முகம் குறிப்பிட்டுள்ளார்.[109]

மொழியியலார் இரண்டு மெய்களின் மயக்கத்தை 'அபெட்டிங் (abutting) என்றும், ஈரொற்று உடனிலையை மயக்கம் (clustering) என்றும் அழைக்கிறார்கள். மொழியியலார் அசைநிலையை ஒட்டி இரு மெய்களின் மயக்கத்தை உண்மையான மெய்ம்மயக்கமாகக் கருதுவது இல்லை. தொல்காப்பியரும் இரு மெய்களின் மயக்கத்தை நூன்மரபில் கூறியுள்ளதைக் கொண்டு அவருக்கும் இக்கருத்து உடன்பாடாக இருக்க வேண்டும் எனலாம். ஒலிகள் அசையாக அமையும் முறையை ஒட்டி நூன்மரபில் மெய்ம்மயக்கத்தைக் கூறியது பொருத்தமே என்று க. முருகையன் விளக்கியுள்ளார்.[110]

மெய்ம்மயக்கம் பற்றிய இன்னொரு சிக்கல் அது தனிமொழிக்கு உரியதா அல்லது புணர்மொழி (தொடர்மொழி)க்கு உரியதா என்பது. இளம்பூரணர் இருமொழிக்கும் பொது என்று கொண்டுள்ளார். நச்சினார்க்கினியர் மெய்ம்மயக்கம் தனிமொழிக்கு உரியது என்னும் கொள்கையை உடையவர். அதனால் இளம்பூரணர் காட்டிய இருமொழிப் புணர்ச்சி உதாரணங்களை நச்சினார்க்கினியர் மறுத்துள்ளார்.

> ஆசிரியர் ஒருமொழி ஆமாறு ஈண்டுக்கூறி இருமொழி புணர்த்தற்குப் புணரியல் என்று ஓர் இயலும் கூறி அதன்கண் 'மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியும்' (தொல். 107) என்று கூறினார். கூறியவழிப் பின்னும் 'உகரமொடு புணரும் புள்ளியிறுதி' (தொல். 162) என்றும் பிறாண்டும் ஈறுகள் தோறும் எடுத்தோதிப் புணர்ப்பர் ஆதலின் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டிற் கூறியது கூறல் என்னும் குற்றமாம். அதனால் அவை காட்டுதல் பொருந்தாமை உணர்க (தொல். 27)

தனிமொழிக்கு உரியதே மெய்ம்மயக்கம் என்று நச்சினார்க்கினியர் கொண்டாலும் தொல்காப்பியர் கூறிய எல்லா மெய்ம்மயக்கங்களுக்கும் அவர் உதாரணம் காட்டவில்லை. உதாரணம் கிடைக்காதவற்றுக்கு அவர் வினைத்தொகை, பண்புத்தொகை ஆகிய தொகைநிலைத் தொடர்களைச் சான்று காட்டி அவை 'மருவின் பாத்திய'; புணர்மொழி அல்ல; தனிமொழியே என்று சாதித்துள்ளார். இருப்பினும் ஒருமொழிக்கண் உதாரணம் காட்ட இயலாதது ஏன் என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு தனிமொழிக்கண்ணே உதாரணங்கள் தொல்காப்பியர் நூல் செய்கின்ற காலத்து (தொல்காப்பியர் இடைச்சங்க காலத்தவர். சங்க இலக்கியம் கடைச்சங்க காலத்தது என்பது நச்சினார்க்கினியரின் கருத்து) இருந்தன; அவற்றைக் கண்டு இலக்கணங் கூறினார்; அவை இக்காலத்து இறந்தன என்று கூறிவிட்டார்.

நச்சினார்க்கினியரது கருத்து பின்னர் வந்த உரையாசிரியர்களாலும் ஆராய்ச்சியாளர்களாலும் மறுப்புக்கும் கேள்விக்கும் இலக்கானது. தொல்காப்பியம் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியது என்னும் கருத்தினரான பிரயோக விவேக நூலாசிரியர் நச்சினார்க்கினியரைக் குறை கூறியுள்ளார்.

> வடநூலார் சையோகம் (மயக்கம்) ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் கொள்வர். அது பற்றித்தொல்காப்பியர் சூத்திரம் செய்தபடி இளம்பூரணரும் நன்னூலாரும் அவ்வாறு கொள்வர். அக்கருத்து அறியாத நச்சினார்க்கினியர் இருமொழியிற் கொள்ளாது உதாரணம் இறந்தது என்பர் (பி.வி.சந். 5)

நச்சினார்க்கினியர் வினைத்தொகை பண்புத்தொகை ஆகியவற்றை ஒருமொழியாக உதாரணங்காட்டியதைச் சங்கர நமச்சிவாயர் கேலி செய்துள்ளார்.

வினைத்தொகை பண்புத்தொகை அன்மொழித்தொகை என்னும் அவ்வழிப் புணர்ச்சியவாகிய தொகைநிலைத் தொடர் மொழிகளை ஒருமொழி என்பாரும் உளர். அவர் கூற்றுத் தாய் மலடி என்றார் போலும்

என்று நச்சினார்க்கினியரின் பெயரைக் குறிப்பிடாது எழுதியுள்ளார். பிற்கால ஆராய்ச்சியாளர்களும் நச்சினார்க்கினியரது கருத்தினை மறுத்து இளம்பூரணர் கொள்கையே சிறந்தது என்று கூறியுள்ளனர். ஒருமொழிக்கண் தொல்காப்பியர் கூறிய மெய்ம்மயக்கங்களுக்குத் தொல்காப்பியர் காலத்தில் உதாரணங்கள் இருந்தன என்பதை வே. வேங்கடராசுலு ரெட்டியார் ஒத்துக்கொள்ளவில்லை.

1. நூலுள் (தொல்காப்பியத்துள்) யாண்டேனும் ஒரு சொல் லாதல் அவ்வாறு வந்திலது ஆதாலானும்

2. தொன்மையவாகிய வழக்குகள் பயின்று காணும் பழங் கன்னடத்திலும் இம்முறையின் அமைந்த சொற்கள் காணப்படாமையானும் அங்ஙனம் கோடற்கு இடனின்று. மெய்ம்மயக்கத்தை ஒருமொழிக்கண்ணே கொள்ளுதல் வேண்டும் என்று கருதியதானே நச்சினார்க்கினியர்க்கு இவ்வாறு கூறல் வேண்டுவதாயிற்று[111]

என்பது அவரது வாதம். எனினும் நச்சினார்க்கினியர் காட்டிய தனி மொழிக்குரிய தொகைச்சொல் உதாரணங்கள் தனிமொழி அல்ல என்று கேலிசெய்த சங்கர நமச்சிவாயரை அவர் வன்மையாகக் கண்டித்துள்ளார். தொகைகள் எல்லாம் ஒருசொல் நீர்மைய (தொல். 903) என்று தொல்காப்பியரே கூறியிருப்பதையும் 'ஒட்டி ஒரு சொல் லாதல் தொகை இலக்கணமாய் முடிதலின் இவ்வாசிரியர்க்கு இதுவே துணிவு எனப்படும் என்பது' (தொல். 895) என்ற சேனாவரையர் கூற்றினையும் ஆதாரமாகக் கொண்டு உரையாசிரியர் முதலியோர் கொள்கை அமைவுடையது; அதனைச் சங்கர நமச்சிவாயர் இழித்தும் பழித்தும் கூறியது தக்கது அல்ல என்று கூறியுள்ளார்.[112] பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி,[113] தி. முருகரத்தனம்[114] ஆகியோரும் இளம்பூரணரின் கருத்தே பொருத்தமானது என்று கூறியுள்ளனர்.

இந்தச் சிக்கல் பற்றி மொழியியல் நோக்கில் ஆராய்ந்த செ. வை. சண்முகம் சிக்கலை விடுவித்துச் சரியான விளக்கம் தந்துள்ளார். மேலும் அவர் நச்சினார்க்கினியர், வேங்கடராசுலு ரெட்டியார் ஆகியோர் கொண்ட முடிபுகளுக்கான காரணங்களையும் புலப் படுத்தியுள்ளார். நச்சினார்க்கினியர், மொழியில் மாற்றம் இயல் பானது என்று மொழிவரலாற்று நோக்கில் பார்த்து, சங்க இலக்கியச் சான்றுகள் இல்லாததால் தொல்காப்பியர் காலத்து ஒருமொழிக்கண் அம்மெய்ம்மயக்கங்கள் இருந்தன; பின்னர் வழக்கிறந்தன என்று கூறியுள்ளார். வேங்கடராசுலு ரெட்டியார், ஒப்பிலக்கண முறையில் நோக்கி, தொல்காப்பியத்திலோ பழைய வழக்குகள் பயின்று வரும்

பழங் கன்னடத்திலோ வராததால் அக்கொள்கை தவறு என்று கூறியுள்ளார். தொல்காப்பியர் கூறிய மெய்ம்மயக்கங்கள் எல்லாவற்றுக்கும் உதாரணம் கிட்டவில்லை. அதன் காரணத்தைப் பின்வருமாறு செ. வை. சண்முகம் விளக்கியுள்ளார்.

> இலக்கண ஆசிரியனின் வேலை உண்மையாக வரும் மெய்ம் மயக்கங்களைப் பட்டியல் போட்டுக் காண்பிப்பது அல்ல. மொழியின் அமைப்பில் புதைந்து கிடக்கும் பொதுமையைப் புலப்படுத்தி இலக்கணத்தை எளிமையாக விவரிப்பதுதான். அதற்காகத் தான் எடுத்துக்கொண்ட தரவில் வராத எழுத்துத் தொடர்ச்சியைக்கூடச் சேர்த்துப் பொதுமைப்படுத்தி வருணிக் கலாம். இதையே சாம்ஸ்கி, இலக்கணத்தில் வருணனை நிறைவு (Descriptive adequacy) என்று குறிப்பிடுவர்.[115]

எனவே தொல்காப்பியர் எளிமைக்காகவும் பொதுமைக்காகவும் சிலவற்றைச் சேர்த்திருக்கலாம். ஆகவே நச்சினார்க்கினியர் கொள்கையை ஏற்றுக் கொள்ளலாம் என்று செ. வை. சண்முகம் கூறியுள்ளார்.

தொல்காப்பியர் கூறிய மெய்ம்மயக்கங்கள் சில பிற்கால மொழியிலும் வந்து வழங்காதது பற்றியும் செ. வை. சண்முகம் ஆராய்ந்துள்ளார். அதன் காரணங்களாக இரண்டினைக் குறிப் பிட்டுள்ளார். ஒன்று, தமிழில் புதிய சொற்கள் தனிச்சொற்களாக ஆக்கப்படுவது இல்லை. தொகைச் சொற்களே ஆக்கப்படுகின்றன. மற்றொன்று. பிறமொழிச் சொற்களைக் கடனாண்ட போதிலும் தொல்காப்பியர் குறிப்பிட்ட பல மெய்ம்மயக்கங்களை ஏற்றுக் கொள்ளாமல் இடையே ஒரு உயிரைச் சேர்த்து மெய்ம்மயக்கத்தை நீக்கிவிட்டார்கள். இந்தப்பணியை (மெய்ம்மயக்கத்தை நீக்குவது) இலக்கிய ஆசிரியர்கள் மேற்கொண்டிருக்க வேண்டும். ஏன் இவ்வாறு தொல்காப்பிய விதி புறக்கணிக்கப்பட்டது என்பதை அறிய இடைக்கால மொழி உணர்வு ஆராயப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[116]

மெய்ம்மயக்கம் எப்படித் தனி எழுத்தின் இலக்கணம் ஆகும் என்ற சிக்கல் சிவஞான முனிவர் விளக்கத்தால் தெளிவடைந்தது. தனிமொழிக்கும் புணர்மொழிக்கும் மெய்ம்மயக்கம் பொது என்று கூறிய இளம்பூரணரை மறுத்த நச்சினரர்க்கினியரின் கொள்கை பின்வந்த பலராலும் புறக்கணிக்கப்பட்டது. ஆனால் இக்கால அறிவு வளர்ச்சியான மொழியியல் துணைகொண்டு நச்சினார்க்கினியரது கொள்கையின் பொருத்தம் உணரப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது. மேலும் தொல்காப்பியர் கூறிய மெய்ம்மயக்கங்கள் பிற்காலத்தில் வராததன் காரணமும் ஆராயப்பட்டு அது இடைக்கால மொழி உணர்வு பற்றிய ஆய்வினை அவாவி நிற்பது சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. இங்ஙனம் மெய்ம்மயக்கம் பற்றிய ஆய்வில் இலக்கண ஆராய்ச்சியின் வளர்ச்சி நிலைகளைக் காண முடிகிறது.

சுட்டும் வினாவும்

நூன்மரபில் (தொல். 31, 32) சுட்டுப்பெயராகவும் வினாப் பெயராகவும் வரும் எழுத்துக்களைப் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவை தனி எழுத்துக்களைப் பற்றியது எனினும் இவற்றின் சொல்லாகும் தன்மை பற்றிய இலக்கணம் கூறுவது ஆகும். இந்த முரண்பாட்டினை உணர்ந்த இளம்பூரணர் அதற்குச் சமா தானமும் கூறி இருக்கிறார்.

> இக்குறிகளை முன் குறிலென்றும் நெடிலென்றும் கூறிய வழியே கூறுகவெனின், இவை சொன்னிலைமையிற் பெரும் குறி ஆகலின் ஆண்டு வையாது மொழிமரபினைச் சார வைத்தார் என்க. இக்குறி மொழி நிலைமைக்கேல் எழுத்தின் மேல் வைத்துக் கூறியது என்னையெனின் இவ்வதிகாரத்துப் பெயர் வினை அல்லவற்றுக்குக் கருவி செய்யாமையின் என்க (தொல் 33)

'மொழிமரபினைச் சாரவைத்தார்' என்று கூறுவதன் மூலம் அது மொழி மரபினைச் சேர்ந்தது என்பதும், அவை புணர்ச்சியில் இடம் பெறுவதால் அதன் கருவியாக இங்கு பேசப்படுகிறது என்பதும் இளம்பூரணரின் விளக்கம். பிற தனி எழுத்துக்கள் சொல்லாக வருவன உளவெனினும் பெயர்க்கும் வினைக்கும் மட்டுமே இங்குக் கருவி இலக்கணம் கூறப்படுகிறது என்று இவர் சமாதானம் கூறியுள்ளார்.

எழுத்துக்களைச் சுட்டு, வினா என்று பாகுபாடு செய்வது சொல்லியலை ஒட்டியது. எழுத்துக்கள் சொல்லில் எப்படிப் பயன் படுகிறது என்பதே நூன்மரபில் மேற்கொள்ள வேண்டிய பாகுபாடு. அவ்வகையில் நோக்கும் போது சுட்டுப்பெயர்கள் புணர்ச்சியில் சில பொதுப்பண்புகளைப் (வல்லெழுத்துக்கும் மெல்லெழுத்துக்கும் முன் அந்த மெய் இரட்டித்து வருதல்) பெற்றிருக்கின்றன. வினா எழுத்துக்கள் அப்படி இல்லை. இதனால் வினாப்பெயர்களை நூன் மரபில் (எழுத்ததிகாரத்தில்) கூறியது பொருந்தாது என்று செ. வை. சண்முகம் சுட்டியுள்ளார்.[117] சுட்டு, வினா பற்றிக் கூறும் நூற் பாக்கள் நூன்மரபில் இடம் பெற்றதன் பொருத்தமின்மையைத் தெ. பொ. மீனாட்சி சுந்தரனும் எடுத்துக் காட்டியுள்ளார்.[118] இக் கருத்து ஏற்புடையது எனலாம்.

மொழிமரபும் சார்பெழுத்துக்களும்

மொழிகளுக்கு எழுத்தால் வரும் மரபு உணர்த்தப் பெறுவதால் மொழி மரபு என அவ்வியல் குறிக்கப் பெற்றது. இந்த இயலுள் மொழியிடை எழுத்துக்கு இலக்கணம் கூறப்பட்டது என இளம் பூரணர் குறித்துள்ளார் (தொல். 34). எழுத்துக்கள் 'தம்முள் தொடரு மாறும் உணர்த்தி அவ்வெழுத்தால் ஆகும் மொழியின் மரபு உணர்த்துதலால் மொழிமரபு காரணப் பெயராகும்' என்பது நச்சினார்க்கினியரின் விளக்கம்.

உரையாசிரியர்கள் இருவரும் மொழிமரபு, மொழியிடை வரும் எழுத்துக்களின் இலக்கணம் கூறுவது என்று ஒப்புக் கொண்டுள்ளனர். எனினும் சார்பெழுத்துக்களைப் பற்றிக் கூறும் ஏழு நூற்பாக்களையும் (தொல். 34-40), அளபெடை பற்றிக் கூறும் இரண்டு நூற்பாக்களையும் (தொல். 41, 42) சேர்த்து அவை ஒன்பதும் 'நூன்மரபின் ஒழிபு' என்று குறித்துள்ளனர் (தொல். 42). மொழி மரபின் தொடக்கத்தில் அமைந்துள்ள இந்த ஒன்பது நூற்பாக்கள் தனி எழுத்துக்களின் இலக்கணம் பேசுகின்றன என்று அவர்கள் கருதி விட்டார்கள். ஆனால் இந்நூற்பாக்களில் வரும் சார்பெழுத்துக்கள் எங்கெங்கு வரும் என்பதே உணர்த்தப்படுகின்றன. உடம்பொடு புணர்த்தல் என்னும் உத்தியால் புணர்மொழியிலும் வரும்; அது பற்றிப் புணரியலில் பேசப்படும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். சார்பெழுத்து பற்றிய நூற்பாக்கள், அவை சொல்லில் எங்கு வருகின்றன என்று காட்டுவதன் மூலம் சொல்லின் எழுத்து அமைப்பினுடைய தொடர்நிலை உறவுநிலையைப் புலப்படுத்துகின்றன. அதனால் தான் வருணனை மொழியியலார் விளக்கும் முறையில் இந்த ஒலி இந்த இடத்தில் வரும் என்று சொல்லாமல் சொல்லை எடுத்துக்கொண்டு அதில் எங்கு வரும் என்று தொடர்நிலை முறையில் தொல்காப்பியர் பேசியுள்ளார்.[119] ஆய்தம் பற்றிக் குறிப்பிடும் போதும் சொல்லின் முதற்பகுதியும், இறுதிப்பகுதியும் (குறிய தன் முன்னர், வல்லாறன் மிசை) பேசப்படுகிறது. அளபெடையும் அவ்வாறு மொழிக்கண் வைத்தே (குன்றிசை மொழிவயின்) பேசப்படுகிறது என்ற விளக்கத்தைச் செ. வை. சண்முகம் கூறியுள்ளார். இதனாலேயே மொழிமரபில் சார்பெழுத்துக்கள் பேசப்படுகின்றன. ஆனால் இதற்கு முன், சார்பெழுத்துக்கள் 'மொழியிடை அன்றித் தனித்து வாரா'; அதனால் மொழிமரபில் கூறியது பொருத்தம் என்று சிவஞான முனிவர் போன்றோரால் விளக்கம் தரப்பட்டன. சார்பெழுத்துக்கள் தனித்து வாரா என்பது இக்கால மொழியியல் ஆய்வில் ஒத்துக் கொள்ளப்படாததால், மொழியில் எழுத்துக்கள் தொடரும் நிலை பற்றிப் பேசும் மொழிமரபில் சார்பெழுத்துக்கள் தொடரும் நிலை பற்றிப் பேசப்படுவது பொருத்தம் என்று கொள்ளலே வலிவுடையது.

சார்பெழுத்துக்கள் வருமிடமும் சூழலும் வரையறுக்கப்பட்ட வரன்முறை உடையன ஆதலால் அவை முதலில் பேசப்படுகின்றன. அடுத்து, கட்டுப்பாடற்ற சூழலுடைய உயிர், மெய் ஆகிய எழுத்துக்கள் பேசப்படுகின்றன.[120]

தொல்காப்பியரும் 'மொழி'யும்

மொழியில் எழுத்துக்கள் எப்படி அமைகின்றன என்ற அடிப்படையிலேயே மொழிமரபில் இலக்கணம் கூறப்படுகிறது. எழுத்துக்கள் எப்படிச் சேர்ந்து மொழி (சொல்) ஆகின்றன என்ற முறையில் தொல்காப்பியர் கூறவில்லை. ஆகவே, எழுத்துக்கும் சொல்லுக்கும் எந்தவகை உறவு இருப்பதாகத் தொல்காப்பியர் கொண்டார் என்பது ஆராயப்பட்டுள்ளது.

மொழியியலார் சொல்லுக்கும் எழுத்துக்கும் இரண்டு வகை உறவுகள் இருப்பதாகக் கொண்டு அவைகளில் ஒன்றே சிறந்தது எனக் கூறுவர். ஒன்று, சொற்கள் எழுத்துக்களால் ஆக்கப்பட்டது என்று கருதுவது; பிறிதொன்று சொற்கள் இத்தனை எழுத்துக்கள் உடையன அல்லது இத்தனை எழுத்துக்களைக் கொண்டிருக்கின்றன என்பது. இரண்டாவது கொள்கையினருக்குச் சொல்லே முக்கியமான அடிப்படை உறுப்பு. எழுத்து சொல்லின் உறுப்பாக வருகின்ற பெருமை உடையதே தவிர, தனிப்பெருமை உடையது அல்ல (சொல் இயல்பாக இருப்பது; ஆராய்ச்சியால் நிறுவப்பட வேண்டிய ஒன்று அல்ல). தொல்காப்பியரின் ஓரெழுத்தொருமொழி முதலிய பாகுபாடுகளால் அவர் இந்தக் கோட்பாட்டினைக் கொண்டுள்ளார் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆகவே அவர் பகுபத ஆய்வில் அக்கறை காட்டவில்லை என்று செ. வை. சண்முகம் தொல்காப்பியரின் கோட்பாட்டினை ஆராய்ந்து கூறியுள்ளார்.[121]

மூவகை மொழிகள்

மொழியினை அது கொண்டுள்ள எழுத்துக்களின் அடிப்படையில் மூன்றுவகையாகத் தொல்காப்பியர் பகுத்துள்ளார். 1. ஓரெழுத்தொரு மொழி, 2. ஈரெழுத்தொரு மொழி, 3. இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களை உடைய தொடர்மொழி என்பன அவை. அவற்றில் ஏழு நெட்டெழுத்துக்களும் ஓரெழுத் தொருமொழியாக வரும்; குற்றெழுத்துக்கள் ஐந்தும் மொழியாகா ஆகிய கருத்துக்களை 33, 34, 35 ஆகிய நூற்பாக்களில் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

மூவகை மொழிகள் பற்றிய இலக்கணத்தில் 1. எழுத்தாக எதனைக் கொள்வது என்பதும், 2. மொழிகள் ஏன் மூன்று வகையாகப் பகுக்கப்பட்டன என்பதும் ஆராய்ச்சிக்குரிய சிக்கல்களாக அமைந்தன. இந்தச் சிக்கல்கள் பற்றி உரையாசிரியர்கள் முதல் இன்றுவரை பல ஆராய்ச்சியாளர்களும் விளக்கம் தர முனைந்துள்ளனர்.

இளம்பூரணர் 'நெட்டெழுத்தேழே ஓரெழுத்து ஒருமொழி' (தொல். 43) என்ற நூற்பாவின் உரையில் நெட்டெழுத்து உயிரையும் உயிர் மெய்யையும் குறிக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் இளம்பூரணர் எழுத்து என்பது தனி ஒலியைக் குறிக்கும் எனக் கொள்ளாது, அதற்கு மேற்பட்ட அலகினைக் (வரிவடிவு) குறிக்கும் என்று எண்ணியுள்ளார் என்பது தெளிவாகிறது. "குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபிலவே" (தொல். 44) என்பதன் உரையில் அ, இ, உ, எ என்ற சுட்டு, வினாச் சொற்களை மொழி எனக் கொள்ளவில்லை. இதனால் மொழி என்பது வெறும் உருபனைக் (Morpheme) குறிக்காது கிளவியாக வரும் சொல்லையே குறிக்கும் என அவர் கொள்கிறார் எனலாம். இதனை மொழியியலார் ஓர் உருபன் உடைய சொல் (Mono-morphemic word) என்பர்.

இளம்பூரணர் உயிரையும் உயிர்மெய்யையும் ஓர் எழுத்து என்பதால் அவர் வரிவடிவினை எழுத்து எனக் கொள்கிறார் என்பது தெரி

கிறது. இவர் மெய்யையும் எழுத்தாகக் கொண்டுள்ளார். கொற்றன் என்ற சொல்லை இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழிக்கு உதாரணமாகக் காட்டியுள்ளதிலிருந்து இதனை அறியலாம். ஆகவே இளம்பூரணர் எழுத்து என்றால் வரிவடிவையே கொள்கிறார் என்று கூறலாம்.

'குற்றெழுத்து ஐந்தும் மொழிநிறைபு இலவே' (தொல். 44) என்ற நூற்பாவின் உரையில் 'ஐந்தும்' என்பதில் உள்ள உம்மையை எச்ச உம்மையாகக் கொண்டு சில குற்றெழுத்துக்கள் மொழியாக வரும் என இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளனர்; நொ, து என்னும் இரண்டு எழுத்துக்களும் மொழியாகும் தன்மை வாய்ந்தன என உதாரணமும் காட்டியுள்ளனர், நெட்டெழுத்து, குற்றெழுத்து இரண்டுக்கும் உயிர் மட்டுமே அன்றி, உயிர் மெய்யையும் கொள்ளலாம் என்று அவர்கள் கருதியதால் உயிர்மெய் உதாரணங்களையும் நெடிலுக்கும் குறிலுக்கும் காட்டியுள்ளனர்.

'ஐந்தும்' என்பதில் உள்ள உம்மையைப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி முற்றும்மையாகக் கொண்டார். இவர் 'ஐந்தும்' மொழியாகாது என்று பொருள் கொண்டதால், உரையாசிரியர்கள் காட்டிய உதாரணங்கள் (நொ, து என்பன) குறில் அல்ல என்று மறுத்துள்ளார்.[122]

செ. வை. சண்முகம் நொ, து என்பனவற்றைக் குறில் அல்ல என்று மறுப்பது சரி அன்று; அவற்றின் அடிப்படை வடிவம் வேறு என்று கொள்ள வேண்டும். நொய், துய் என்பனவே அவற்றின் அடிப்படை வடிவங்கள்; ஆதலால் அவற்றைக் குற்றெழுத்துக்கள் மொழிநிறைத்ததாகக் கொள்ள முடியாது. எனவே ஐந்தும் என்பதை முற்றும்மையாகக் கொண்டு குற்றெழுத்துக்கள் மொழியாக வருதல் இல்லை எனக் கொள்ளுதலே பொருந்தும் என்று விளக்கம் தந்துள்ளார்.[123]

நச்சினார்க்கினியரும் எழுத்தும்

உயிரையும் உயிர்மெய்யையும் எழுத்து எனக் கொள்ளலாம் என்பதில் நச்சினார்க்கினியரும் உடன்படுகிறார். ஆனால் மெய்யையும் குற்றியலுகரத்தையும் எழுத்தாகக் கொள்ளக்கூடாது என்று கூறி, அதற்கான காரணங்களையும் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியர், எழுத்து என்பது அசை (syllable) எனக் கருதுவதாகத் தோன்றுகிறது.[124] அவர் ஒற்றையும் குற்றியலுகரத்தையும் எழுத்தல்ல என்று மறுப்பதற்குக் கூறும் காரணங்களால் இது புலப்படுகிறது. அவர் காட்டியுள்ள காரணங்கள் வருமாறு:

1. ஒற்றும் குற்றுகரமும் எழுத்தாக எண்ணவும் அலகிடவும் படாது ('உயிரில் எழுத்தும் எண்ணப்படா' (தொல். 1301). 'குறிலே நெடிலே குறிலிணை' ... (தொல். 1261) என்று தொல்காப்பியர் கூறுகிறார் ஆதலால் ஈண்டு ஒற்றையும்

குற்றுகரத்தையும் எழுத்தாக எண்ணி ஈரெழுத்தொருமொழி மூவெழுத்தொருமொழி எனக் கொள்ளின் மாறுகொளக் கூறல் என்னும் குற்றமாகும்.

2. நெட்டெழுத்து (தொல். 43), குற்றெழுத்து (தொல். 44) என்று கூறுவது உயிர்க்கும் உயிர்மெய்க்குமே; மெய்க்குக் குறுமையும் நெடுமையும் இல்லை. அவற்றையே இங்கு (தொல். 45) ஓரெழுத்தொருமொழி என்று கூறி, ஈரெழுத்தை யும் இரண்டிறந்ததனையும் மொழி என்று கொள்கிறார். அதனால் ஒற்றினை எழுத்தாகக் கொள்ளல் தொல் காப்பியர் கருத்து அன்று.

3. முதல் நூற்பாவில் ('அகர முதல் னகர இறுவாய்...') மெய்யையும் எழுத்தாக எண்ணியது எழுத்தின் தன்மை கூறுவதற்கு; இங்கு மொழியாகுந் தன்மை கூறப்படுகிறது.

நச்சினார்க்கினியரின் மெய்ம்மயக்கம் பற்றிய கொள்கையைப் போலவே இந்தக் கொள்கையும் பின்வந்த அறிஞர்களால் மறுக்கப் பட்டுள்ளது. இலக்கண விளக்க நூலுரையாசிரியர் (கி. பி. 17ஆம் நூற்றாண்டு) நச்சினார்க்கினியர் கூறிய முதல் காரணத்தினைப் பொருந்தாது என எடுத்துக் காட்டியுள்ளார். ஒற்றும் குற்றுகரமும் செய்யுளில் இசைபற்றி எழுத்தாக எண்ணப்படாது. மொழியாக்கத் தில், பொருள் பற்றி எண்ணப்படும் (இ. வி. நூ. 32 உரை) என்று இவர் விளக்கியது பொருந்தக் கூடியதே.

நச்சினார்க்கினியரே தாம் கூறிய இரண்டாவது காரணத்துடன் முரண்படுமாறு யாடு என்பதை ஈரெழுத்தொரு மொழி (தொல். 411) எனவும், வரகு என்பதைத் தொடர்மொழி என்றும் (தொல். 406) உதாரணம் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியரின் இந்த முரண் பாட்டினைப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, வே. வேங்கடராசுலு ரெட்டியார், க. வெள்ளை வாரணன் போன்றோரும் எடுத்துக்காட்டி யுள்ளனர். மேலும் தொல்காப்பியரே குற்றியலுகர ஈற்றில் முடியும் சொற்களைக் கூறுங்கால் குற்றுகரத்தினை எழுத்தாகக் கொண் டுள்ளார் என்பதை 'ஈரெழுத்தொருமொழி' (தொல். 406) என்ற நூற்பா வினால் அறியலாம் என்பதையும் வே. வேங்கடராசுலு ரெட்டியார் எடுத்துக் காட்டியுள்ளார்.[125]

கோ. விசய வேணுகோபாலன் நச்சினார்க்கினியர் உரையில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளார். தொல்காப்பியர் கருத்துப்படி மூவெழுத்தொருமொழி நாலெழுத்தொருமொழி முதலிய பாகுபாடுகள் பொருந்தா. தொல்காப்பியத்தினுள் அசைபற்றிய கருத்து இல்லை; நச்சினார்க்கினியர் செய்யுளியலின் அசைக்கும் (Poetic syllable) சொல்லின் அசைக்கும் வேறுபாடு அறியவில்லை; இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக் குழப்புதல் தேவையற்றது என்பது அவருடைய வாதங்கள்.[126]

தொல்காப்பியர் எங்கும் மூவெழுத்தொரு மொழி பற்றிக் குறிப்பிடவில்லை. இரண்டிறந்திசைப்பனவற்றைத் தொடர்மொழி என்றே குறிப்பிடுகிறார். வேறு எந்த இலக்கணமும் இத்தகைய பாகு பாட்டினைக் குறிப்பிடவில்லை. ஆதலால் கோ. விசய வேணு கோபாலின் மூவெழுததொரு மொழி பற்றிய மறுப்பு ஏற்கத் தக்கதே. இதனைச் செ. வை. சண்முகம் உடன்பட்டுள்ளார்.[127]

நச்சினார்க்கினியரின் அசைபற்றிய குழப்பம் தேவையற்றது என்று கூறிய கோ. விசயவேணுகோபால், இளம்பூரணர் எழுத்து என்பதற்கு அசை என்ற பொருள் கொண்டிருக்கக் கூடும் என்று எழுதியுள்ளார். இளம்பூரணர் மெய்யினை எழுத்தாகக் கொள்ள வில்லை என்று அவர் எண்ணியதால், அதன் அடிப்படையில் கொள்ளப்பட்ட முடிவு இது. அதனால் "எழுத்து என்பதற்கு அசை என்னும் பொருளும் தோன்றத் தொல்காப்பியர் பயன்படுத்தி யுள்ளாரா என்று ஆய்தல் நலம்"[128] என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் இளம்பூரணர் மெய்யையும் எழுத்தாகக் கொண்டுள்ளார் என்பது முன்னரே குறிப்பிடப்பட்டது. தொல்காப்பியத்தில் அசை பற்றிய கருத்து வெளிப்படையாக இல்லை என்றாலும் இலைமறை காயாக அமைந்துள்ளதை மெய்ம்மயக்கத்தைப் பற்றி விளக்கும் போது செ. வை. சண்முகம் எடுத்துக்காட்டியுள்ளார். இரண்டு மெய் களின் மயக்கத்தை நூன்மரபிலும், ஈரொற்று உடனிலையை மொழி மரபிலும் பேசுவது அசை பற்றிய தொல்காப்பியரின் கருத்தினையே காட்டுகிறது. மேலும் தொல்காப்பியர் எழுத்துத் தொடர்ச்சி (sequence restriction) பற்றியும் பேசுவதால் எழுத்துத் தொடர்ச்சியில் அசை ஒரு உறுப்பாகக் கருதப்படுவது பற்றிப் பேச வாய்ப்பு இருக் கிறது. ஆனால் அதை அவர் தனியாக, தெளிவாக விளக்க வில்லை[129]

நச்சினார்க்கினியரின் உரை மொழி மரபிலும் குற்றியலுகரப் புணரியலிலும் முன்னுக்குப் பின் முரண்படுவதால் அவரது கருத்தே மறுக்கப்பட்டது. ஆனால் அந்த உரைமுரண்பாடு ஏன் ஏற்பட்டது என்பதை அவரது கருத்தினை மறுத்த அறிஞர்கள் ஆராயவில்லை. நச்சினார்க்கினியரின் அசை பற்றிய கருத்தினை ஒருவகையில் உடன்படும் செ. வை. சண்முகம் அந்த முரண்பாடு ஏன் ஏற்பட்டது என்று ஆராய்ந்து தெளிவுபடுத்தியுள்ளார்.

நச்சினார்க்கினியர் உரையை இளம்பூரணர் உரையுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தால், நச்சினார்க்கினியர் புதிய உரையை எழுதாமல் இளம்பூரணர் உரையை அடிப்படையாகக் கொண்டு வேண்டிய இடங்களில் திருத்தியும் மாற்றியும் அமைத்துக் கொண் டுள்ளார் என்பது புலப்படும்.[130] நச்சினார்க்கினியரிடம் காணப்படும் மற்றொரு பண்பு, அவர் தன்னுடைய உரையை இரண்டாம் முறை திருத்தி அமைக்கும் பழக்கம் உள்ளவர் என்பது.[131] இந்த அடிப் படையில் பார்க்கும்போது அவரது உரையில் காணப்படும் முரண் பாடுகள் இரண்டு காரணங்களால் எழுந்திருக்கலாம்.

1. நச்சினார்க்கினியர் 45ஆம் நூற்பா உரையைத் திருத்தி விட்டு அதற்கேற்ப மற்ற சூத்திர உரையைத் திருத்தாது விட்டிருக்கலாம்.

2. குற்றியலுகரப் புணரியலில் தொல்காப்பியர் தெளிவாக வரிவடிவத்தையே எழுத்தாகக் குறிப்பதால் அங்கு எழுத்து, வரிவடிவம் என்ற பொருளில் பயன்படுத்தப் பட்டிருப்ப தாகக் கருதித் தானும் அதற்கேற்ப உதாரணத்தைக் காட்டியிருக்க வேண்டும். மொழிமரபில் மட்டும் எழுத் ததிகார ஆராய்ச்சிக்கு வேண்டிய ஒரு கூறைப் பொதுவாக விளக்க வேண்டியதால் இங்குக் கூறப்பட்ட எழுத்து என்பதை 'அசை என்ற பொருளில் கருதியிருக்க வேண்டும்.

தொல்காப்பியத்தில் இலைமறைகாயாக அசை பற்றிய கருத்து உள்ளதை எடுத்துக்காட்டி இலக்கண ஆராய்ச்சியை வளர்த்த தற்காக நச்சினார்க்கினியர் பாராட்டப்பட வேண்டியவர். ஆனால் அவர் குற்றியலுகரத்தை விடுத்தது தான் பொருத்தமானதாகத் தோன்றவில்லை.[132]

1. எழுத்து என்பதாக இளம்பூரணர் வரிவடிவினையே கொண்டுள்ளார்.

2. அசைபற்றிய கருத்து தொல்காப்பியத்தில் வெளிப்படை யாகத் தெரியாவிட்டாலும் மறைமுகமாக அமைந்துள்ளது:

3. அதை வெளிப்படுத்த நச்சினார்க்கினியர் முயன்றார்; ஆனால் அவரது உரையில் காணப்படும் முரண்பாடுகள் அவரது கருத்தையே மறுக்கச் செய்துவிட்டன.

4. நச்சினார்க்கினியரின் முரண்பாடுகளுக்கான காரணங்கள் ஊகித்து உணரப்பட்டுள்ளன.

இவை 'எழுத்து' பற்றிய ஆய்வில் விளைந்த பயன்களாகும்.

மூவகைப் பாகுபாடு

தொல்காப்பியர் மொழிகளை எழுத்து அடிப்படையில் ஓரெழுத் தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, தொடர்மொழி என்று மூன்று வகையாகப் பாகுபாடு செய்துள்ளார். எண் அடிப்படையில் ஒன்று, பல என்று பாகுபடுத்தவில்லை. ஏன் இத்தகைய பாகுபாடு என்று நச்சினார்க்கினியர் கேள்வியை எழுப்பி, அதற்கு விடையும் தந்துள்ளார். சில, பல என்னும் தமிழ் வழக்கினை நோக்கி அவ்வாறு தொல்காப்பியர் பகுத்தார் என்பது அவரது துணிபு (தொல். 45).

நச்சினார்க்கினியரின் துணிபு பொருந்தாது என்று கோ. விஜய வேணுகோபால் மறுத்துள்ளார். சில என்பது இருமையைக் குறிப்பதாக எவ்விடத்திலும் யாராலும் ஆளப்படவில்லை; சில என்பதற்குப் பன்மை என்ற பொருளையே நச்சினார்க்கினியரும்

(தொல். 174, 213, 214, 220) கொண்டுள்ளார். ஆகவே நச்சினார்க்கினியரின் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது அன்று என்று கூறியுள்ளார்.[133]

நச்சினார்க்கினியரின் கருத்துக்குச் செ. வை. சண்முகம் தரும் விளக்கம் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. 'சில' என்பதற்குப் பொருளாக நேரடியாக 'இருமை' என்று கொள்ள முடியாது. பன்மையிலும் பொருள் வேறுபாடு உடைய சொற்களாகச் 'சில' 'பல' என்னும் சொற்கள் ஆளப்படுகின்றன. ஆங்கிலத்திலும் (some, many), இந்தியிலும் (குச், அநேக்) இதுபோல் வேறுபாடு உடைய சொற்கள் உள்ளன. ஆகவே இது உறவு நிலையில் (relative) கொள்ளத்தக்கது. தனிநிலையில் (absolute) கொள்ளத்தக்கது அன்று என அவர் உரைத்துள்ளார்.[134]

இந்தப் பாகுபாடு (ஒருமை, இருமை, பன்மை) வடநூல் வழக்கினைப் பின்பற்றியது என்று சங்கரநமச்சிவாயர் குறிப்பிட்டுள்ளார்.

> ஒன்றல்லனவெல்லாம் பல என்பது தமிழ்நடையாகலின் வடநூல் வழக்குப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியர் ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந் திசைக்கும் தொடர்மொழி எனக் கூறினார் (நன். 129)

இக்கருத்தினைப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியும் க. வெள்ளை வாரணனும் மறுத்துள்ளனர்.

வடமொழியில் அவ்வாறு பகுக்கப்படுதல் இல்லை. அதனால் வடமொழியைப் பின்பற்றிக் கூறினார் எனல் சரியன்று எனக் கூறி அப்பாகுபாட்டின் காரணத்தினைப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி விளக்கியுள்ளார்.

> குற்றியலுகரம் குற்றெழுத்தைக் கொண்ட ஈரெழுத்தொரு மொழியில் தோன்றாது எனவும், நெட்டெழுத்துக் கொண்ட ஈரெழுத்தொருமொழியில் தோன்றும் எனவும், தொடர் மொழியில் எங்கும் வல்லெழுத்தைச் சார்ந்து ஈற்றில் தோன்றும் எனவும் கூறுவதற்காகவே மொழியை மூவகையாக வகுத்தனர்[135]

இதுபோன்ற விளக்கத்தினையே கோ. விஜய வேணுகோபாலும் கூறியுள்ளார்.[136]

இந்தப் பாகுபாடு இலக்கணத்தை விளக்குவதற்காக அமைத்துக் கொள்ளப்பட்ட பாகுபாடு. இலக்கணத்துக்குரிய இலக்கணம் அதாவது கருவிமொழி (Meta language) எனப்படும். எனவே இது தான் மொழியின் அமைப்பு என்று கொள்ளக்கூடாது என்று கூறி தமிழ்மொழி இலக்கணங்களில் கருவிமொழியின் இலக்கணமும் பேசப்படுகிறது என்பதைச் செ. வை. சண்முகம் எடுத்துக்காட்டியுள்ளார்.[137]

மெய்ம்மயக்கமும் மொழிமரபும்

இரண்டு மெய்களின் மயக்கம் நூன்மரபினும் ஈரொற்றுடனிலை மொழி மரபிலும் பேசப்படுகிறது. தொல்காப்பியர் இரண்டு மெய்களின் மயக்கத்தை உண்மையான மெய்ம்மயக்கமாகக் கொள்ளவில்லை என்பது முன்னரே கூறப்பட்டது. மொழி மரபில் எழுத்துக்களின் வரன் முறை (Distribution of phonemes) கூறப் படுவதால் மொழிக்கு முதலாவன, ஈறாவன கூறப்படுவதுடன் இடையில் வரும் எழுத்துக்கள் பற்றியும் பேசப்படுகின்றன.

மொழிமுதல் எழுத்துக்கள்

பன்னிரண்டு உயிர்களும் மொழிக்கு முதலில் வரும் (தொல். 61); உயிர்மெய் அல்லாதன மொழிமுதலில் வாரா (தனிமெய் மொழி முதலாக வருதல் இல்லை (தொல். 62); க, த, ந, ப, ம ஆகிய ஐந்து எழுத்துக்களும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடும் சேர்ந்து மொழிமுதலாகும் (தொல். 63) என்று தொல்காப்பியர் கூறிய கருத்துக்களில் மாறுபாட்டுக்கு இடமில்லை.

சகரம் எந்த உயிர்களோடு சேர்ந்து மொழிமுதலாகும் என்பதில் சிக்கல் எழுந்துள்ளது. சங்க இலக்கியத்திலேயே தொல்காப்பியர் மொழி முதலாகாது என்று கூறிய உயிரெழுத்துக்களோடு சேர்ந்து சகரம் மொழி முதலாக வந்துள்ளதாலும் பிற்காலத்தில் மொழி வளர்ச்சியால் ஏற்பட்ட மாற்றத்தாலும் இந்தச் சிக்கல் எழுந் துள்ளது.

> சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
> அஐஔ என்னும் மூன்றலங் கடையே (தொல். 62)

என்பது சகரம் மொழிமுதலாவதைக் குறிக்கும் நூற்பா. அ,ஐ,ஔ என்னும் மூன்றெழுத்துக்கள் அல்லாத எல்லா உயிரெழுத்துக் களோடும் சகரம் மொழி முதலாகும் என்பது இதன் பொருள். சட்டி. சகடம், சமழ்ப்பு ஆகிய அகரத்தோடு முதலான சொற்களைப் பிற் கால வரவு என்றாலும் 'கடிசொல் இல்லை' (தொல். எச்ச. 56) என்பதனாற் கொள்ளலாம். சையம், சௌரியம் ஆகிய ஐகார ஔகாரங்களோடு சேர்ந்து வருவனவும் உளவெனினும் அவை வட சொல் ஆதலால் மறுக்கப்பட வேண்டும் என்றும் இளம்பூரணர் எழுதியுள்ளார். நச்சினார்க்கினியரும் இதே கருத்தினைக் கூறி யுள்ளார்.

சை, சௌ என்று தொடங்கும் சொற்கள் சங்க இலக்கியத்திலும் பயின்று வரவில்லை. அகரத்தோடு கூடி முதலாகும் சொற்கள் பயின்று வந்துள்ளன. அதனால் இவை பயின்று வரும் சொற்களை உடைய பாடல்கள் எல்லாம் தொல்காப்பியருக்கு மிகவும் பிற் பட்டன; அந்தச் சகர முதற் சொற்கள் யாவும் வடமொழிச் சிதைவுகள்; தமிழிலுள்ள சகர முதற்சொற்கள் யாவும் வடசொல் லாகவோ அல்லது திசைச்சொல்லாகவோ இருக்க வேண்டும்

என்றும் கருதப்பட்டன.[138] இக்கருத்தினை மறுத்துத் தொல்காப்பியர் காலத்திலும் சகர முதற்சொற்கள் வழங்கின; அவை இலக்கியங்களில் பயின்று வராததால் தொல்காப்பியர் விலக்கியிருக்கலாம்; பிற்காலத்து எழுந்த சொற்கள் யாவும் திசைச்சொல் என்றும், தொல்காப்பியர் ஒதுக்கினார் என்ற ஒரே காரணத்துக்காக அவை பயின்று வரும் பாடல்கள் யாவும் பிற்காலத்கன என்று கொள்ளுதலும் தவறு என்று சுவாமி ஞானப்பிரகாசர் எழுதியுள்ளார்.[139] இதனைத் துடிசை கிழார் அ. சிதம்பரனாரும் குறிப்பிட்டுள்ளார்.[140]

சகர முதற்சொற்கள் தொல்காப்பிய நூற்பாப் பொருளுக்கு மாறுபாடாகப் பல பயின்று வருதல் கண்ட தேவநேயப் பாவாணர் இதற்கு வேறுவகையான விளக்கம் தந்துள்ளார். அந்த நூற்பாவுக்கு,

சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அவை ஔஎனும் ஒன்றலங் கடையே[141]

என்ற பாடமே இருந்திருக்க வேண்டும் என்பது அவர் கருத்து. இந்தக் கருத்தினை வே. வேங்கடராசுலு ரெட்டியார் வன்மையாக மறுத்துள்ளார். இத்தகைய பாட வேறுபாடு இன்னாரிடத்தில் உள்ள ஏட்டுப்படியில் உள்ளது என்று குறிப்பிட வேண்டும். கருத்து வேறுபாடு உள்ள இடத்தில் சான்றுடன் காட்டுதலே முறை; அப்படி இருப்பினும் அ, ஐ என்பதை ஏடெழுதுவோர் சந்தி சேர்த்து எழுதியதாகல் வேண்டும். மேலும் 'அவை' என்ற பன்மை இங்கு எப்படி சகரக்கிளவி என்னும் ஒருமையைச் சுட்ட முடியும் என்று கேட்டு, ஆகவே அங்ஙனம் பாடம் கொள்ளல் சரியன்று எனக் காட்டியுள்ளார்.[142] தி. முருகரத்தினம் அ,ஐ,ஔ என்ற பாடமே சரியானது என்று குறிப்பிட்டுள்ளார். ச, ஞ, ய ஆகிய மூன்று மெய்களும் நா வல்லண்ணத்தில் பட்டுப் பிறக்கும் எழுத்துக்கள். இக்காரணத்தால் ஓரினமாகக் கருதத்தக்கன. ஆகவே ஒத்த பண்புகளைக் கொண்டிருக்கின்றன. ஞகரமும் யகரமும் அகரத்தோடு கூடி மொழிமுதலில் வராதது போலவே சகரமும் அகரத்தோடு கூடி மொழிமுதலில் வராது. எனவே தொல்காப்பிய நூற்பாவும், உரையாசிரியர்கள் தந்த விளக்கமும் சரியே என்று ஒலியியல் முறையில் அவர் விளக்கியுள்ளார்.[143]

சகரம் முதலாகாது என்று தொல்காப்பியர் கூறியது அவர் காலத்து மொழிநிலையை ஒட்டியது எனலாம். பின்னர் சகர முதற்சொற்கள் திசைச்சொற்களிலிருந்தும். வடமொழியிலிருந்தும் கடனாண்டதாலும் வழக்கிலும் இலக்கியத்திலும் பயின்று வந்தன. அதற்குத் தொல்காப்பியத்தில் விதியில்லாதது கண்டு எழுந்த சிக்கலே இது என்று அமைதி கூறலாம். சகரம் முதலாகாது என்று தொல்காப்பியர் குறிப்பிட்டது தொல்காப்பியர் காலத்தினை அறியும் ஆய்வுக்கு ஒரு சான்றாகவும் ஆய்வாளர்களால் கொள்ளப்பட்டது.

மொழி இறுதி எழுத்துக்கள்

மொழி இறுதி எழுத்துக்களைக் கூறும் நூற்பாக்களுள் 'உ ஊகாரம் நவவொடு நவிலா' என்ற நூற்பா விவாதத்துக்கு உரியது. உகரமும் ஊகாரமும் ந, வ ஆகிய எழுத்துக்களோடு மொழிக்கு இறுதியில் வராது என்பது இதன் பொருள். ஆனால் உகரம் வகரத்தோடு மொழி இறுதியில் வந்த சொற்கள் தொல்காப்பியத்துள் (செலவு, வரவு, தரவு, களவு, அளவு) பல உள. ஆதலால் இந்நூற்பாவுக்கு உகரம் நகரத்தோடும், ஊகாரம் வகரத்தோடும் இறுதியில் வராது என்று நிரல்நிறையாகப் பொருள்கொள்ள வேண்டும் என அரசன் சண்முகனார் கூறியுள்ளார்.[144] ஆனால் உகரம் பொருநு என்ற சொல்லில் நகரத்தோடு இறுதியில் வந்துள்ளது. இதனை இயல்பான ஈறு அன்று எனக் கொள்ளல் வேண்டும்.

பிறப்பியல்

தொல்காப்பியர் பிறப்பியலில் தமிழ் எழுத்துக்களின் பிறப்பினை 21 நூற்பாக்களில் விளக்கியுள்ளார். பிறப்பியலின் முதல் நூற்பா எழுத்துப் பிறப்பினை விளக்குவதற்குத் தேவையான அடிப் படையை அமைக்கும் வகையில் பொது விளக்கத்தினைத் தருகிறது. பிறப்புக்குத் தேவையான மூச்சுக் காற்று பற்றியும் அந்த மூச்சுக் காற்றினை ஒலியாக மாற்றும் ஒலியுறுப்புகள் பற்றியும், ஒலியாக்கும் முயற்சி பற்றியும் பொதுவாக விளக்குகிறது. பிறப்பியலில் 2 முதல் 6 வரையுள்ள ஐந்து நூற்பாக்கள் உயிரொலி பற்றியும் 7 முதல் 16 வரையுள்ள பன்னிரண்டு நூற்பாக்கள் மெய்யொலிகள் பற்றியும் கூறுகின்றன. 19ஆம் நூற்பா சார்பெழுத்துக்களின் பிறப்புப் பற்றிக் கூறுகின்றது. 20, 21ஆம் நூற்பாக்கள் பிறப்பியலின் புறனடையாக அமைந்துள்ளன.

பிறப்பியலின் முதல் நூற்பா

எழுத்துக்களின் பொதுப் பிறப்பினைக் கூறும் இந்த நூற்பா பாணினிய சிக்சாவின் 7, 8, 9, 13 ஆகிய காரிகைகளின் மொழி பெயர்ப்பு என்று பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி கூறியுள்ளார்.[145] தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரும் இக்கருத்தினை உடன்பட்டுள்ளார். அவர் மொழி பெயர்ப்பு என்று கூறவில்லை. ஆனால் இந்த நூற்பா பாணினிய சிக்சாவை நினைவுபடுத்துவதுபோல் தோன்றுகிறது என்று எழுதியுள்ளார்.[146] இந்த நூற்பாவின் 2, 3, 4 வரிகள் இடைச் செருகல் என்பது சி. ஆர். சங்கரனின் கருத்து.[147]

சிக்சா கூறும் பிறப்பிடம், பிறப்பிறுப்பு, இவற்றுக்கும் தொல் **காப்பியம் கூறுவதற்கும் வேறுபாடு** உள்ளன என்று செ. வை. **சண்முகம் எடுத்துக் காட்டியுள்ளார்.**[148] 'தொல்காப்பியர் பாணினிய **சிக்சாவை** மொழி பெயர்த்தாரா?" (Did Tolkappiyar Translate **Panini's Siksa?) என்னும் கட்டுரையில் சிக்சாவுக்கும்** தொல்காப்பியத் **துக்கும் உள்ள** அடிப்படை **வேறுபாடுகளைக் காட்டி** இரண்டும் இரு

வேறுபட்ட கோட்பாட்டினை உடையன; தொல்காப்பியம் கூறும் பிறப்பு பற்றிய கருத்துக்கள் மிகுதியும் இக்கால ஒலியியல் ஆய்வுக் கருத்துக்களோடு ஒத்திருக்க, பாணினியின் சிக்சாவில் குறிப்பிடப் படும் ஒலிகள் பற்றிய விளக்கம் கற்பனையாக உள்ளது என்று தெளிவாக க. முருகையன் விளக்கியுள்ளார்.[148அ]

பேச்சுறுப்புகள்

பேச்சொலிகளை உண்டாக்கத் துணை புரிவானவாக எட்டு உறுப்புக்களைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். (தலை, மிடறு, நெஞ்சு, பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்பன அவை. இவற்றைத் தொல்காப்பியர் இரண்டு வகையாகப் பகுத்துள்ளார்). உந்தியின் செயலை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மூச்சுக் காற்று ஒலியெழுப்ப அடிப்படை (உந்தி முதலா முந்துவளி தோன்றி) என்பதைத் தொல்காப்பியர் (தொல். 83) குறிப்பிட்டுள்ளார். உந்தி என்பதற்குக் 'கொப்பூழ்' என்று உரையாசிரியர்கள் பொருள் கொண்டனர். அதனை உதரவிதானம் (Diaphragm) என்று கொள்ள வேண்டும்; வயிற்றறையின் மேற்பகுதியாக அமைந்து மேலும் கீழும் உந்துவதால் உந்தி என்பது காரணப் பெயர் என்று க. முருகையன் விளக்கியுள்ளார்.[149]

தொல்காப்பியர் பேச்சுறுப்புகளைக் காற்றறைகள் (air chambers) என்றும், ஒலியெழுப்பிகள் (resonators) என்றும் இரு பிரிவாகப் பகுத்துக் கொண்டுள்ளார். காற்றறைகள் மூச்சோட்ட இயக்கத்தை உண்டாக்குவதற்கோ தம்மிடமுள்ள ஒலியுறுப்புகளை இயக்கி ஒலிகளை உண்டாக்குவதற்கோ பயன்படுகின்றன. நெஞ்சறை, தொண்டையறை, வாயறை, மூக்கறை ஆகியவை காற்றறைகளாகும். நெஞ்சு, மிடறு, வாய், மூக்கு என இவற்றைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். உந்தியின் செயலால் எழும் காற்று நெஞ்சிலிருந்து புறப்பட்டு மிடற்றின் வழியாக, வாய் அல்லது மூக்கு வழியாக வெளியேறுகிறது. ஒலியெழுப்பிகளைத் தொல்காப்பியர் பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் என்ற வரிசையில் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள இந்த வரிசை முறையை நோக்கும்போது அவர் ஒரு சிறந்த ஒலியியல் வல்லுநராகவும், உடற்கூற்றியல் அறிஞராகவும் விளங்குவதை அறியலாம் என்று க. முருகையன் குறிப்பிட்டுள்ளார்.[150] மேலும் ஒலியெழுப்பிகள், ஒலி பிறக்கும் முறை ஆகியவற்றைப் பற்றித் தொல்காப்பியர் தரும் விளக்கம் தற்கால ஒலியியல் அறிஞர்கள் விளக்கத்தோடு முற்றிலும் ஒத்துள்ளதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.[151]

பேச்சுறுப்புகளில் தலையை ஓர் உறுப்பாகத் தொல்காப்பியர் கூறியுள்ளார். தலை என்று அவரால் குறிப்பிடப்படுவது வாயறையும் மூக்கறையும் சேர்ந்த பகுதி என்று க. முருகையன் விளக்கியுள்ளார்.[152]

உயிரொலிகள்

உயிரொலிகள் (பன்னீருயிரும்) 'தந்நிலை திரியா மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும்' (தொல். 84) என்பர் தொல்காப்பியர். இதனால்

எல்லா உயிர்களும் குரலொலியுடையன என்பதும், அவை வாயறையில் பலம் பெற்றுத் திரிபடைகின்றன என்பதும், திரிபுடை இவ்வுயிர்கள் இசை வேறுபாடற்றவை என்பதும் அறியப்படும்.

பன்னிரண்டு உயிர்களும் 'மிடற்றுப்பிறந்த வளியின் இசைக்கும்' என்று பொதுவாக உயிரொலிகளின் பிறப்பைக் கூறிப் பின் அவற்றை மூன்றாகப் பிரித்துத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார். அ, ஆ இரண்டும் வாயைத் திறத்தலால் பிறக்கும். இ, ஈ, எ, ஏ, ஐ எனும் ஐந்தும் வாயைத் திறத்தலோடு அண் பல்லை முதல் நாவின் விளிம்பு தொடுதலால் பிறக்கும். உ, ஊ, ஒ, ஓ, ஔ எனும் ஐந்தும் இதழ் குவித்தலால் பிறக்கும். இந்த மூவகையினுள்ளும் ஒவ்வோர் எழுத்துக்களும் பிறப்பில் சிறிது வேறுபாட்டினை உடையன என்பதை உணர்த்துதற்குத் 'தத்தம் திரிபே சிறிய என்ப' (தொல். 88) என்று கூறியுள்ளார். மெய்களுக்குக் கூறிய பிறப்பிலும் அத்தகைய வேறுபாடு காணப்படுவதால் இந்த நூற்பா பின்னர் கூறப்படும் மெய்யொலிகளின் பிறப்புக்கும் ஒக்கும் என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் எழுதியுள்ளனர். வே. வேங்கடராகசுலு ரெட்டியாரும்,[153] பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியும்[154] மெய்க்குத் தனித் தனியே சிறப்பாகப் பிறப்பு கூறப்படுவதால் இந்நூற்பா உயிருக்கு மட்டுமே பொருந்தும் என்பர். மெய்களில் ர, ள ஆகியவற்றுக்கு இத்தகைய வேறுபாடு கூறப்படாததால், உயிருக்கும் மெய்யுக்கும் பொதுவாகக் கொள்ளலே பொருத்தமானது என்று செ. வை. சண்முகம் விளக்கியுள்ளார்.[155]

உயிரொலிகளின் பாகுபாடு

உயிரொலிகளைப் பிறப்பிடத்தினை ஒட்டி முன்னுயிர், பின்னுயிர், நடுவுயிர் என்றும், பிறக்குங்கால் இதழின் நிலையினை ஒட்டி அங்காப்பு உயிர், இதழ் குவியுயிர் என்றும் மொழியியலார் பாகுபடுத்தியுள்ளனர். அ, ஆ ஆகிய இரண்டும் அங்காப்பு உயிர்கள் எனவும் (தொல். 85) இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்தும் முன்னுயிர் எனவும் (தொல். 86) உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் இதழ் குவியுயிர் என்றும் தொல்காப்பியர் அவற்றுக்குப் பிறப்பு கூறும் முறையால் பெறப்படுகிறது. அ இன உயிர்களை அங்காப்பு உயிர் என்றமையால் மற்றவை மூடுயிர் (Closed Vowel) என்பது பெறப் படுகிறது. இ இன உயிர்களை முன்னுயிர் என்றமையாலும், அ இன உயிர்களை அங்காப்பு உயிர் எனப் பிரித்துரைத்தமையாலும் உ இன உயிர்கள் பின்னுயிர் என்பதும், அ இன உயிர்கள் நடுவுயிர் என்பதும், உ இன உயிர்களை இதழ் குவியுயிர் என்றமையால் மற்றவை குவியிலுயிர் (Unrounded Vowel) என்பதும் பெறப் படுகின்றன என்று கூறி, இந்தப் பாகுபாடு இக்கால ஒலியியல் அறிஞர்களின் பாகுபாட்டுடன் ஒத்திருத்தல் குறிப்பிடத்தக்கது என்று க. முருகையன் எடுத்துக் காட்டியுள்ளார்.[156]

மெய்யொலிகள்

ககார ஙகாரம், சகார ஞகாரம், டகார ணகாரம் ஆகியன முறையே முதல் நா முதல் அண்ணமும், இடை நா இடை அண்ணமும், நுனி

நா நுனி அண்ணமும் உறுதலால் பிறக்கின்றன. இந்த ஆறு ஒலிகளும் மூவகையான பிறப்பினை உடையன. இங்கே க, ச, ட ஆகிய வல்லொலிகளுக்கு அவற்றின் இன ஒலிகளான ங, ஞ, ண ஆகியவற்றைச் சேர்த்தே தொல்காப்பியர் பிறப்பினைக் கூறியுள்ளார். ஒரு வல்லின மெய்யின் பிறப்பிடமும் முயற்சியுமே அதன் மெல்லொலிக்கும் பிறப்பிடமும் முயற்சியுமாக உள்ளன. பின்னரும் தந, றன, பம ஆகியவற்றுக்குச் சேர்த்தே பிறப்பிடம் கூறியுள்ளார். நுனிநா பரந்த நிலையில் அண்ணத்தோடு சேர்த்தே பல்லின் நுனியில் அழுந்த உறுதலால் த, ந இரண்டும் பிறக்கும். நுனிநா குவிந்து நுனி அண்ணத்தைத் தொடுதலால் ற, ன இரண்டும் பிறக்கும். இதழ்கள் ஒன்றோடு ஒன்று இயைதலால் ப, ம இரண்டும் பிறக்கும்.

இவ்வாறு வல்லின மெய்களையும் அதனோடு ஒத்த மெல்லின மெய்களையும் சேர்த்தே பிறப்பு கூறிவந்த தொல்காப்பியர் மெல்லின மெய்களை விதந்து எடுத்து அவற்றுக்குச் சிறப்பாக விதி கூறுகிறார். மெல்லின மெய்கள் ஆறும் மேற்கூறிய பிறப்பினை உடையன ஆயினும் மூக்கில் அக்காற்று வலிபெறுதலால் தோன்றும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நுனிநா வளைந்து மேலண்ணத்தினை வருட ர, ழ இரண்டும் பிறக்கும். நாவின் விளிம்பு தடித்து பல்லினது அண்மையில் உள்ள மேலண்ணத்தை ஒற்றுதலால் லகரமும் வருடுதலால் ளகரமும் பிறக்கும். மேல் பல்லும் கீழ் இதழும் இணைய வகாரம் பிறக்கும். அண்ணத்தினை நாவானது சேரும் நிலையில் மிடற்றெழு வளி யிசைத்தலால் யகாரம் பிறக்கும்.

மெய்யொலிகளின் பாகுபாடு

அடைப்பொலி (stop), உரசொலி (fricative), மூக்கொலி (nasal), மருங்கொலி (lateral), வருடொலி (flap), ஆடொலி (trill) ஆகியவை மெய்யொலிகளின் முக்கியமான வகைகளாகும். ஒலியியல் ஆய்வில் வேறுவகையான நுண்ணிய பாகுபாட்டினையும் கொள்வர்.

க, ச, ட, த, ப, ற ஆகிய வல்லின மெய்களைத் தடையொலிகள் எனக் கொள்ளலாம். க, ச, ட ஆகியவற்றின் பிறப்பு தொல்காப்பியத்தில் தெளிவாக விளக்கப்படவில்லை; த, ப, ல ஆகியவற்றிற்கு விளக்கம் தரப்பட்டுள்ள முறையிலிருந்து மெய்யொலிகள் யாவும் தடையொலிகளே எனக் கொள்ள வேண்டியுள்ளது என்று க. முருகையன் குறிப்பிட்டுள்ளார். தடையொலிகளை உண்டாக்குங்கால் ஒலியெழுப்பிகள் கொள்ளும் அமைப்பினைத் தெளிவாகவும் முழுமையாகவும் குறிப்பிடும் முறை, தற்கால அறிவியல் வளர்ச்சியையும் பல நுண்கருவிகளையும் கொண்டு ஆய்ந்து கூறும் எந்த ஒலியியல் அறிஞனின் விளக்கத்துக்கும் குறைந்தது இல்லை என்றும் அவர் விளக்கியுள்ளார்.[157] வ, ய, ர ஆகியன உரசொலி ஆகும். மெல்லின மெய்களான ங, ஞ ண, ந, ம, ன ஆறும் மூக்கொலிகள் ஆகும். ல, ள, ழ ஆகியன மருங்கொலிகள்.

சார்பொலிகள்

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் ஆகிய மூன்று சார்பெழுத்துக்களும் தத்தம் சார்பான முதலெழுத்துக்களோடு பொருந்தி அவற்றின் பிறப்பிடத்தும், முயற்சியிலும் பிறக்கும். ஆய்தத்துக்கு முதலெழுத்து இல்லையாதலால் இதற்குப் பிறப்புக் கூறவில்லை என்றே கொள்ள வேண்டும். எனினும் உரையாசிரியர்கள் அதற்குப் பிறப்புக் கூறியுள்ளனர்.

> ஆய்தத்திற்குக் குற்றெழுத்தும் சார்பே எனினும் தலைவளியால் பிறத்தலின் உயிரொடு புணர்ந்த வல்லெழுத்துச் சார்பாகவே பிறக்கும் என்பது கொள்க (தொல். 101)

என்பது இளம்பூரணர் உரை. இந்தக் கருத்து 'குறியதன் முன்னர், (தொல். 38) என்னும் நூற்பாப் பொருளை நோக்கி எழுந்ததாகும். நச்சினார்க்கினியர் சார்ந்து வரும் மூன்றும் தத்தமக்குச் சார்பாகிய மெய்களின் பிற சிறப்புப் பிறப்பிடத்தோடு பொருந்தி நடக்கும் என்று கூறியுள்ளார். மேலும் 'ஏனை' என்ற சொல்லை 'ஒத்த காட்சியின் தம்மியல்பு இயலும்' என்ற தொடரோடு சேர்த்து 'ஒழிந்த ஆய்தம் நெஞ்சுவளியாற் பிறக்கும்' என்கிறார். முதலில் மூன்றினையும் கூறிவிட்டு, பின்னர் 'ஏனை' என்பதால் ஆய்தத்தைக் கொள்வது பொருத்தம் அன்று. மேலும் அவர் பிறிதொரு சாரார் கருத்தையும் கூறுகிறார்.

> ஆய்தம் தலைவளியானும் மிடற்றுவளியானும் பிறக்கும் என்பாரும் உளர் (தொல். 101)

என்பது அவர் உரை. தலைவளியாற் பிறக்கும் என்பவர் இளம்பூரணர். மிடற்றுவளியாற் பிறக்கும் என்பார் யார் எனத் தெரியவில்லை. ஆய்தம் இரட்டித்த வல்லொலியின் உரசொலி என்னும் கருத்தோடு இது ஒப்புடையது போல் தோன்றுகிறது. இங்கு ஆய்தத்தின் தோற்றம் பற்றி எல். வி. இராமசாமி அய்யரின் பின்வரும் கருத்தும் ஒப்பு நோக்கத் தக்கது. ஆய்தத்தின் தோற்றம் அசையழுத்தத்தோடு தொடர்புடையது. சுட்டெழுத்தின் மேலும் அதனைத் தொடர்ந்து வரும் வல்லின மெய்யின் மேலும் அசையழுத்தம் தோன்ற உச்சரிக்கும்போது ஆய்தம் தோன்றுகிறது.[158]

பிறப்பியலைப் பொறுத்தவரை மிகுந்த கருத்து வேறுபாடுகள் இல்லை. பொதுப்பிறப்பினை விளக்கும் முதல் நூற்பா மொழி பெயர்ப்பு என்று ஒரு கருத்து எழுந்ததும் அதனை மறுத்துத் தோன்றிய கருத்துகளே முக்கியமான வேறுபாடு எனலாம். சில ஒலிகளை விளக்குவதில் இக்கால மொழியியலாய்வாளர்கள் கருத்து வேறுபடுகின்றனர். மொழியியல் ஆய்வினால் தொல்காப்பியரது கருத்துக்கள் பலவற்றுக்கு நல்ல தெளிவு ஏற்பட்டுள்ளது. பல அறிவியல் கருவிகளின் துணைகொண்டு சோதனைக்கூடத்தில் இருந்து ஆய்ந்து தேர்ந்த ஒலியியல் அறிஞனின் ஒலிக்கொள்கைக்கு

நிகரானதாகத் தொல்காப்பியரின் பிறப்பியல் கோட்பாடு போற்றப் படுகிறது.

ஓரொலியனுடைய கூறுகள் முழுவதையும் கூறாமல் அதற்கும் மற்ற ஒலியன்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டுக் கூறு (contrastive feature) களை மட்டும் கூறி அதனுடைய ஏனை ஒலிக் கூறுகளை உய்த்துணரும் வகையில் அமைப்பதுதான் (ஒலிக்கூறு களைச் சிக்கனமாக அமைத்துக்காட்டும்) சிறப்புக் கூற்றுப் பின்னல் (distinctive feature matrix) ஆகும். ஒரு மொழியில் வரும் ஓரொலி யனின் சிறப்புத்தன்மையை நிலைநிறுத்த இன்றியமையாது தேவைப் படாத ஒலிக்கூறுகளே மிகைக்கூறுகளாகும். சிறப்புக் கூறுகளையும் மிகைக்கூறுகளையும் சேர்த்தால் அனைத்து ஒலிக்கூறுகளும் வெளிப் படும். இந்த அடிப்படையில் நுண்ணிதின் ஆராய்ந்து சுருங்கக் கூறித் தெளிவுறுத்துவதில் தொல்காப்பியர் இக்கால ஆக்கவியல் எழுத்தியலார் (generative phonologist) களை விடச் சிறந்து விளங்கு வதாகப் பாராட்டப்படுகிறார்.

உடலுறுப்புகளின் துணையால் உருவாகும் பேச்சொலிகளில் பிறப்பு பற்றிய ஆய்வு ஒலிப்பியல் (Articulatory phonetics) எனப் படும். அவை காற்றில் பரவும்போது உண்டாகும் ஒலியலைகளைப் பற்றிய ஆய்வு ஒலியியக்கவியல் (Acoustic phonetics) எனப்படும். இவற்றைக் கேட்டறியும் முறை பற்றிய ஆய்வு ஒலியுணர்வியல் (Auditory phonetics) எனப்படும். இந்த மூன்று முறைகளில் ஒலி யியலை இக்கால மொழியியலார் விளக்குகின்றனர். தொல்காப்பியர் எழுத்துக்களின் பிறப்பினை விளக்கியுள்ள முறை பெரும்பாலும் ஒலிப்பியலை ஒட்டியும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்ற பாகுபாடுகள் ஒலியுணர்வியலை ஒட்டியும் அமைந்துள்ளதாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

தொல்காப்பியர் ஒலியன்களைப் பற்றியே பொதுவாகக் கூறி யுள்ள போதிலும் ஒலிகளைப் பற்றிய முழுவிளக்கத்தையும் உய்த் துணருமாறு நூற்பாக்களை அமைத்துள்ளார். இவ்வாறு தமிழொலி களைப் பற்றிய பேசும் வகையான் ஒலியியற் பொதுக்கொள்கை (general phonetic theory) யையும் அவர் விளக்கியுள்ளார் எனக் கொள்ளலாம்.

தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கைகளை ஆராய்ந்து க. முருகையன் இத்தகைய விளக்கங்களைத் தந்துள்ளார்.[150]

புணரியல்

புணர்ச்சி

புணர்ச்சி என்பது இரு பொருள்கள் இணைதலைக் குறிக்கும். இலக்கணத்தில் அது இரு சொற்கள் இணைதலைக் குறிக்கிறது. குறிப்பாக இரு எழுத்துக்களின் சேர்க்கையை இது உணர்த்துகிறது.

அவை நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் ஆகும்.

புணர்ச்சி உண்டா?

புணர்ச்சி என ஒன்று இல்லை என்ற கோட்பாடுடைய ஒருசாரார் இருந்தனர் என்று தெரிகிறது. நச்சினார்க்கினியர் அக்கொள்கையினை எடுத்துக் காட்டி அன்னார்க்கு விடை கூறுவதுபோல் தனது உரைவிளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். நிலைமொழியினது ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப்போக வருமொழியின் முதல் எழுத்து பின்னர்ப் பிறந்து கெட்டு விடுதலால், முறையே இரு எழுத்துகளும் பிறந்து கெடுவதால், அவ்வெழுத்துக்கள் நின்று புணருதல் இல்லை. ஆகவே புணர்ச்சி ஏது? என்பது புணர்ச்சி இல்லை என்பார் கொள்கை. நிலைமொழியின் ஈற்றெழுத்து உச்சரித்த உடன் அவ்வொலி மறைந்து விடுகிறது (கெடுகிறது). அது போன்றே வருமொழியின் முதல் எழுத்தும் உச்சரித்தவுடன் மறைகிறது. இவ்விரண்டுக்கும் கால இடையறவு உண்டென அவர்கள் நினைத்தனர் போலும். அந்த இடையறவு இல்லையென நச்சினார்க்கினியர் மறுக்கிறார்.

> அச்சொற்களைக் கூறுகின்றோரும் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவு படாமை உள்ளத்தின் கண்ணே உணர்வராதலின் அவ்வோசை கேடின்றி உள்ளத்தின் கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவேயாம். ஆகவே, பின்னர்க் கண் கூடாகப் புணர்க்கின்ற புணர்ச்சியும் முடிந்தனவேயாம் என்று உணர்க (தொல். 108)

இங்கு, பேசுவோரது பேச்சொலியிலும் அதனைக் கேட்போரது உணர்வு நிலையிலும் எழுத்தொலிகள் சேர்த்தே (புணர்ச்சியுடனேயே) ஒலிக்கவும் உணரவும் படுகின்றன என்பதை நுட்பமாக உணர்ந்து விளக்கியுள்ளார் என்பதை அறியலாம்.

புணர்ச்சியினை உவமையின் மூலம் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் தெளிவாகக் கூறியுள்ளார். நிலைமொழியின் இறுதி எழுத்தும் வருமொழியின் முதலெழுத்தும் இரண்டு நூலின் முனைகள் இணைவதைப்போன்றது. இரண்டு விரல்களின் நுனிகள் சேர்ந்தது போன்றது அன்று. நிலைமொழியின் இறுதியும் வருமொழியின் முதலும் மட்டுமே புணர்ச்சி என்னும் செயலில் பங்கு கொள்கின்றன. விரல்கள் அடியிலிருந்து நுனிவரை சேர்ந்துள்ளதுபோல இரு சொற்களின் முழுப் பகுதிகளும் புணர்ச்சியில் பங்கு பெறுதல் இல்லை.[160] புணர்ச்சியின் இன்றியமையாத கூறினை விளக்குவனவாக இவ்வுவமைகள் விளங்குகின்றன.

புணர்ச்சியும் மயக்கமும்

எழுத்துக்கள் சேர்வது புணர்ச்சி என்று பொதுவாகக் கூறலாம் எனினும் அது புணர்ச்சியின் முழுப்பொருளையும் விளக்குவதாக

அமையாது. மொழியில் எழுத்துக்கள் சேர்ந்து வருதல் குறித்து நூன் மரபிலும் மொழிமரபிலும் பேசப்படுகிறது. மொழியிடை வரும் எழுத்துக்களின் சேர்க்கை மயக்கம் எனப்படும். சொல்லொடு சொல் சேருங்கால் ஈற்றெழுத்தும் முதலெழுத்தும் சேர்வது புணர்ச்சி எனப் படும். இங்கு, மயக்கமும் புணர்ச்சியும் பற்றிய ச. தண்டபாணி தேசிகரின் கருத்து ஒப்புநோக்கத் தக்கது.

> குறிப்பாக மொழியுள் நிகழும் எழுத்துப் புணர்ச்சியை 'மயக்கம்' என்றும் சொற்புணர்ச்சியைப் 'புணர்ச்சி' என்றும் ஆண்டு, இரண்டிற்கும் வேறுபாடு விளங்க வைக்கிறார் எனலாம். இதனா லும் மயக்கம் தனிமொழியுள் விளைவனவே என்ற நச்சினார்க் கினியர் கருத்து வலியுறும்.[161]

தொல்காப்பியத்தின் இறுதி மூன்று இயல்கள் உயிரீறு, மெய்யீறு, குற்றியலுகர ஈறு ஆகிய மூவகை ஈறுகளின் புணர்ச்சி பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றன. ஆனால் உயிரீறு, மெய்யீறு பற்றிய புணர்ச்சி விளக்கங்களைக் கூறும் இரு இயல்களையும் உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல் என்னாது உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல் என்றே தொல்காப்பியர் பெயரிட்டுள்ளார். குற்றியலுகர ஈற்றுப் புணர்ச்சியைக் கூறும் இயலை மட்டும் குற்றிய லுகரப் புணரியல் என்று குறிப்பிட்டுள்ளார். உயிரீறு, மெய்யீறு இவற்றின் புணர்ச்சி குறித்த இயல்களைப் 'புணரியல் என்னாது தொல்காப்பியர் 'மயங்கியல்' என்றது எதனால்? இந்தச் சிக்கலை எழுப்பி இதற்கு விடை கண்டுள்ளார் ச. தண்டபாணி தேசிகர்.

"உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல் ஆகிய மயங்கியல்களில் கூறப்படும் விதிகள் மயக்க விதியின் உண்மையையும் இன்மையை யும் அடிப்படையாகக் கொண்டு அவ்வழி வேற்றுமைப் பொருள் நோக்கத்தால் விளைவன. ஆதலால் இந்த இரண்டு இயல்களுக்குமே 'மயங்கியல்' என்று பெயர் கொடுத்தார். குற்றியலுகரப் புணரியலுள் உகர உயிர் நின்று பொருள் நோக்கத்தால் புணர்ச்சி ஒன்றையே விளக்குவன. ஆதலால் புணரியல் என்று பெயரிட்டார், அன்றியும் புணர்ச்சி, மயக்கம் என்பன ஒருபொருட் கிளவிகள் ஆயினும் சிறிது வேறுபாடு உண்டு என உணர்த்தக் கருதிய ஆசிரியர் மயங் கியல் என்றும் புணரியல் என்றும் வேறு சொற்களைக் கையாண் டுள்ளார்".[162]

புணர்ச்சியும் சந்தியும்

புணரியலை மொழியியலின் உருபொலியனியலோடு (Morphe-phonemics) ஒப்புமை உடையதாகக் கருதலாம். இதனைச் 'சந்தி' எனவும் மொழியியலார் குறிப்பர். இலக்கண நூலார் கூறும் புணர்ச்சி யும் மொழியியலார் கூறும் சந்தியும் நுண்ணிய வேறுபாட்டினை உடையன. சந்தி, புணர்ச்சி, ஆகிய சொற்கள் வேறுபாடு இல்லாது ஒரே பொருளிலும் கையாளப்படுவதுண்டு.[163]

புணர்ச்சிக்கும் சந்திக்கும் உள்ள வேறுபாட்டினைச் செ. வை. சண்முகம் பின்வருமாறு எடுத்துக்காட்டியுள்ளார். இலக்கண

நூல்கள் சொற்களின் சேர்க்கை (புணர்ச்சி)யால் மாற்றம் ஏற்படுகிறது என்று கொள்ள, மொழியியல் தனிச்சொல்லின் எழுத்து மாற்றமே உருபொலியன் அல்லது சந்தி என்று கொள்கிறது. மொழியியலார் சந்தி என்று கூறினாலும் அதற்குச் சேர்க்கை என்ற இலக்கியப் பொருள் கொள்ளக்கூடாது. சொல்லின் மாற்று வடிவத்தை விளக்கு வதற்குச் செய்யும் வேறுபாடு சந்தி எனப்படும்.[164]

சொல்லின் மாற்று வடிவங்களை ஒலிக் கட்டுப்பாடுடைய மாற்றம், (Phonologically conpitioned alternant), சொல் கட்டுப் பாடுடைய மாற்றம் (Morphologically conditioned alternant) என்று இருவகையாக மொழியியலார் பகுப்பர். இவற்றில் ஒலிக்கட்டுப் பாடுடைய மாற்றத்தை மட்டுமே புணரியலில் விளக்குவர் வருணனை மொழியியலார். ஏனெனில் எழுத்திலக்கண ஆய்வில் பிற இலக்கணச் செய்திகளைக் கலத்தல் கூடாது என்பது அவர்தம் கொள்கை.

மாற்றிலக்கண மொழியியலார் புணர்ச்சிக்கு மட்டும் அன்றி எழுத்தமைப்புக்கும் மொழியின் எல்லா அமைப்புகளையும் பயன் படுத்திக் கொள்ளலாம் என்று எடுத்துக்காட்டுவர். தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் புணர்ச்சியை எழுத்து மாற்றமாக விளக்கினாலும் அம்மாற்றத்தை விளக்குவதற்கு நிலைமொழி. வருமொழிகளின் எழுத்து அமைப்புகள் மட்டும் அல்லாமல், அவைகளின் சொல் லிலக்கணம், அவைகளுக்கு இடையே அமைந்த தொடரியல் உறவு ஆகியவற்றின் அடிப்படையிலேயே விவரித்துள்ளார். இவ்வாறு மாற்றிலக்கண மொழியியலார் கூறும் கருத்தினைத் தொல்காப்பியர் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்து கூறியதற்கு முக்கிய காரணம் சொல்லின் மாற்றுருபுகள் சேர்க்கையினால் — அதாவது புணர்ச்சியினால் வேறுபடுகின்றன என்று கொண்டது தான்.[165]

புணரியலின் இன்றியமையாமை

எழுத்ததிகாரத்தின் பெரும்பகுதியைப் புணரியல்கள் கொண் டுள்ளன. எழுத்துக்களின் ஒலிநிலையையும் பண்புகளையும் ஆராய் வதன் நோக்கம், புணர்ச்சியில் எழுத்துக்கள் எவ்வாறு செயல்படு கின்றன என்பதை அறிதற்கும் புணரியல்களைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் ஆகும். புணரியல்களின் இன்றியமையாமை இடைக்காலத்திலிருந்து அண்மைக்காலம் வரை உணரப்படா மலிருந்தது. அதனால் பிற்கால இலக்கண நூல்கள் புணர்ச்சியைச் சுருக்கமாக உரைத்துச் சென்றன.[166] உரையாசிரியர்கள் எழுத்ததி காரத்தைக் கருவி இலக்கணம், செய்கை இலக்கணம் எனப் பாகு படுத்துவதும், மீண்டும் அவற்றை அகம், புறம் எனப் பிரிப்பதும் புணரியல்களின் முக்கியத்துவத்தினை அவர்கள் உணர்ந்திருந் ததைப் புலப்படுத்துகின்றன. இக்கால ஆய்வில் புணர்ச்சியின் முக் கியத்துவம் உணரப்பட்டு அது ஆராயப்பட்டும் வருகிறது. தொடர் களில் வரும் புணர்ச்சியை உணர்த்தவே எழுத்ததிகாரம் அமைக்கப் பட்டது என்றும் கூறப்படுகிறது.[167]

புணர்ச்சியும் பிற இலக்கணக் கூறுகளும்

புணர்ச்சி என்பது எழுத்துக்களின் சேர்க்கையில் நிகழும் மாற்றம் என்றாலும் அதில் வேறு பல இலக்கணக் கூறுகளும் விரவி நிற்கின்றன. சந்தி என்னும் இலக்கணப் பரப்பு ஒலியியல், உருபனியல், தொடரியல் கூறுகளால் சூழப்பட்டு உள்ளது. சந்தி பற்றிய ஆய்வு ஒலியியலோடு உருபனியல், தொடரியல் கூறுகளையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும்போதுதான் முழுமை பெறுகிறது என்பதைப் பொன். கோதண்டராமன் எடுத்துக்காட்டியுள்ளார். தொல்காப்பியர், புணர்ச்சி என்பது மேலே கூறப்பட்ட இலக்கணக் கூறுகளையும் உள்ளடக்கியது என்பதை அறிந்து அவற்றினைப் பயன்படுத்தியே ஆராய்ந்துள்ளார் என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[168]

தமிழ் ஒரு ஒட்டுநிலை மொழியாதலால் சில சொற்களைச் சொல் எது, உருபன் எது என்று பிரித்தறிய முடியாத நிலை இருந்திருக்கலாம். அதனால் தொல்காப்பியர் சந்தியை உருபனியலோடும் தொடர்புடையதாகக் கண்டனர் என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரன் குறிப்பிட்டுள்ளார்.[169] இங்கே புணர்ச்சிக்கும் உருபனியலுக்கும் ஏற்பட்ட தொடர்பு ஆராயப்படுகிறது. மேலும் மொழிப் பொருளியல் நிலையிலும் சந்திக்கு உள்ள தொடர்பினைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதனையும் தெ. பொ. மீ. சுட்டிக் காட்டியுள்ளார்.[170]

தொல்காப்பியர் புணர்ச்சியை விளக்கிய வகை

புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஆறு இயல்களில் தொல்காப்பியர் புணர்ச்சியைத் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளார்.

புணரியலில் புணர்ச்சி பற்றிய பொதுக் கருத்துக்கள், சாரியைகளின் எண்ணிக்கை. புணர்ச்சியில் அவை அடையும் மாற்றங்கள் ஆகியவற்றை விளக்கியுள்ளார். சொற்களைச் சில பொதுப்பண்புகளின் அடிப்படையில் தொகுத்து அவை புணரும் முறையினைத் தொகைமரபில் கூறியுள்ளார். உருபியலில் சாரியை வரும்இடங்களும், பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும் போது நிகழும் மாற்றங்களும் கூறப்படுகின்றன. ஈறு அடிப்படையில் உயிரீறு, மெய்யீறு, குற்றியலுகர ஈறு எனப் பகுத்து, அவைகள் வருமொழி முதலோடு புணரும் முறையினை முறையே உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்னும் இயல்களில் தொல்காப்பியம் விளக்கியுள்ளது.

புணரியல்

ஈறும் முதலும்

புணர்ச்சியில் இடம் பெறும் எழுத்துக்கள் முப்பத்து மூன்று; அவற்றுள் மொழிக்கு முதலில் வருவன இருபத்திரண்டு; மொழிக்கு

17

ஈறாக வருவன இருபத்து நான்கு. இவ்வெழுத்துக்களால் அமைகின்ற எல்லாச் சொற்களுக்கும் முதல், ஈறு என்று சொல்லப்படுவன உயிர், மெய் என்னும் இரண்டே (தொல். 103) என்பது புணரியல் முதல் நூற்பா. உயிர்மெய் முதல், உயிர்மெய் ஈறு என்று கொள்ளல் கூடாது என்பதை இது குறிப்பாகச் சுட்டுகிறது.

புணரியலில் புணர்ச்சி பற்றிய பொதுச் செய்திகளும் அகச்சந்தியும் பேசப்படுகின்றன. புணர்ச்சியில் இடம் பெறும் சொற்களின் ஈறும் முதலுமே பெரும்பாலும் மாற்றங்களை அடைவதால் அவ் வீறும் முதலும், உயிரீறு, மெய்யீறு, உயிர்முதல், மெய்முதல் என வகைப்படுத்தப்படுகின்றன. புணர்ச்சியில் இடம் பெறும் சொற்கள் புணரியலில் கையாளப்படும் பொருட்டு நிறுத்தசொல், குறித்துவரு கிளவி என்று குறியீடு பெறுகின்றன. புணரும் சொற்களாகிய பெயர், வினை என்ற இரண்டும் பெயரொடு பெயரும் பெயரொடு வினையும், வினையொடு பெயரும், வினையொடு வினையும் என்ற நால்வகை யாகப் புணரும். அப்படிப் புணருங்கால், மெய் பிறிதாதல், மிகுதல், குன்றல், இயல்பு என்னும் நான்கு நிலைகளில் புணர்ச்சி நிகழும். இப் புணர்ச்சி வேற்றுமை, அல்வழி என்ற இருவகையாகப் பாகுபடுத்தப் படுகிறது. வேற்றுமை உருபுகள் எவை என்பதும் அவை பெயரொடு புணரும் நிலைகளும் கூறப்படுகின்றன. சாரியை வருமிடம், அவற்றின் எண்ணிக்கை, சாரியை பெயரொடு புணரும் நிலைகள் ஆகியன அடுத்துக் கூறப்படுகின்றன. அடுத்து எழுத்துக்களின் சாரியைகள் கூறப்படுகின்றன. தொடர்ந்து உடம்படுமெய் வருமிடம் கூறப்படுகிறது. இவை புணரியலில் பேசப்படும் செய்திகள் ஆகும்.

முதல் நான்கு நூற்பாக்களில் (தொல். 104-107) ஈறும் முதலும் உணர்த்தப்படுகின்றன. ஈறும் முதலும் தனிமொழி இலக்கணம் கூறுவன ஆகையால் இந்நான்கு நூற்பாக்களையும் மொழிமரபின் ஒழிபு என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிட் டுள்ளனர். ஈறும் முதலும் தனிமொழியின் இலக்கணம் எனினும் புணர்ச்சியை நோக்கியே அவை இங்குக் கூறப்படுகின்றன என்பதே பொருத்தம்.

குறித்துவரு கிளவி

'குறித்துவரு கிளவி' என்பது நிறுத்த சொல்லின் பொருண்மை யைக் குறித்து வரும் சொல் என்பது இளம்பூரணரின் கொள்கை. நிறுத்த சொல்லின் பொருண்மையைக் குறித்துவரும் சொல் மட்டுமே எவ்வாறு குறித்து வருகிளவி ஆகும் என்பது சரியாக அவரால் விளக்கப்படவில்லை.

> விளவினைக் குறைத்தான் என்புழி அவ்வுருபு குறித்துவரு கிளவி அன்மையின் நிலைமொழியுள் அடங்கி இருமொழிப் புணர்ச்சி யாய் நின்றவாறு அறிக
> (தொல். 108)

என்ற உதாரணத்தினால் அவர் குறித்துவரு கிளவியை விளக்கு கிறார். இங்கு ஐ உருபு குறித்துவருகிளவி இல்லை ஆதலால் நிலை

மொழியில் அடங்கி இருமொழிப் புணர்ச்சியில் வருகிறது என்பர் அவர். குறைத்தான் என்பதைக் குறித்துவரு கிளவியாகக் கொள் கிறார். விளவினை என்பதற்குப் புணர்ச்சி விதி கூறினால் ஐ என்பதை என்ன என்று கொள்வது? இரண்டு சொற்கள் சேரும் புணர்ச்சியிலேயே 'குறித்து வருகிளவி' கொள்ள வேண்டும் என்பது இளம்பூரணரின் எண்ணம். ஒரு மொழியில் உருபு, சாரியை புணரும் புணர்ச்சியில் அந்த உருபு, சாரியை என்பன குறித்துவரு கிளவி எனக் கொள்ளப்படுதல் இல்லை.

நச்சினார்க்கினியர் குறித்துவரு கிளவியினை 'முடிக்குஞ்சொல்' என்று கூறுவர் (தொல். 180) பொருண்மையை அவர் அடுத்த நூற்பா உரையில் விளக்கியுள்ளார்.

> முயற்கோடு உண்டென்றால் அது குறித்துவரு கிளவி அன்மை யின் புணர்க்கப் படாது. இதுதான் இன்றென்றால் புணர்க்கப் படும் என்று உணர்க. (தொல். 108)

ஆகவே இவர் இளம்பூரணரின் கருத்தினை உடன்படுகிறார் என்பது தெளிவு.

நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்

புணரும் இரு சொற்களாகிய நிறுத்த சொல்லும், குறித்துவரு கிளவியும் அடையொடு வந்தாலும் புணர்ச்சிக்கு உரியன என்பது 110-வது நூற்பாவினால் அறியலாம். இங்கு அடை என்று கூறப் படுவன உம்மைத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகிய தொகைகளையும் குறிக்கிறது என்று இளம்பூரணரும் நச்சி னார்க்கினியரும் பொருள் கூறியுள்ளனர். இந்த இரு தொகைகளை மட்டுமே குறிக்கும் எந்தச் சொல்லும் இந்த நூற்பாவில் இல்லை. ஆகவே தொகையினை உணர்த்துவதாக இந்த நூற்பாவைக் கொண்டால் எல்லாத் தொகைகளையுமே கொள்ள வேண்டும். ஏனைய வினைத்தொகையும் பண்புத் தொகையும் பிளந்து முடியாமையின் ஒருசொல் எனக் கொள்ளப்படும். அன்மொழித் தொகையும் தனக்கு ஒரு முடிவு இல்லாமையால் ஒரு சொல் ஆகக் கருதப்படும். வேற்றுமைத்தொகையும் உவமத்தொகையும் கூட ஒரு சொல்லாகக் கருதப்படும் என்று இருவரும் தொகைகள் ஒரு சொல்லாகக் கருதப்படுவதற்குக் காரணங்களைக் கூறியுள்ளனர்.

இந்த விளக்கம் 'எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய' என்ற தொல்காப்பிய நூற்பாவோடு முரண்படுகிறது. மேலும் அடை என்ற சொல்லைத் 'தொகை'யினை உணர்த்த எங்கும் தொல் காப்பியர் பயன்படுத்தவில்லை. தொகைகளைக் குறிப்பிட வேண்டும் என்றால் 'எல்லாத் தொகையும் புணர்நிலைக்குரிய' என எளிதாகக் குறிப்பிட்டிருக்கலாம். ஆகவே இந்நூற்பா 'அடையொடு தோன்றினும்' என்பதற்குப் பதிலாக 'இடையொடு தோன்றினும்' என்று இருக்க வேண்டும். இது ஏடெழுதுவோரால் நிகழ்ந்த பிழை யாக இருக்கலாம். இதற்கு முன்னுள்ள நூற்பாக்களில் இடைச்

சொற்கள் எதுவும் கூறப்படவில்லை. மேலும் பின்னர் வரும் வேற்றுமை உருபு, சாரியை பற்றிய நூற்பாக்களோடும் இது பொருந்திச் செல்லும். ஆகவே 'அடை' என்பது இடையென இருத்தலே பொருத்தம் என்று ஆர். இராதாகிருட்டினன் இத்தகைய பாடவேறுபாட்டினைக் கூறி விளக்கம் தந்துள்ளார்.[171]

வேற்றுமை — அல்வழி

தொல்காப்பியர் புணர்ச்சியை வேற்றுமை, அல்வழி என இரு வகையாகப் பாகுபடுத்தியுள்ளார். வேற்றுமை அல்லாததை அல்வழி என்ற சொல் உணர்த்துகிறது. பிற்கால இலக்கணங்களில் வீர சோழியம், நேமிநாதம் ஆகியன இந்தப் பாகுபாட்டைக் குறிப்பிட வில்லை. அல்வழி எவை என்பதை விளக்குமிடத்தும் உரையாசிரியர் களிடத்து வேறுபாடு காணப்படுகிறது. 1. எழுவாய், 2. விளி, 3. உவமைத்தொகை, 4. இருபெயரொட்டு, 5. பண்புத்தொகை, 6. முற்று, 7. பெயரெச்சம், 8. வினையெச்சம், 9. இடை, 10. உரி ஆகியன அல்வழி என்பது இளம்பூரணரின் கருத்து. இந்தக் கருத் தினையே நச்சினார்க்கினியரும் விரித்துக் கூறியுள்ளார்.

> அல்வழியாவன அவ்வுருபுகள் தொக்கும் விரிந்தும் நில்லாது புணர்வன. அவை எழுவாய் வேற்றுமை ஆறுபயனிலை களோடும் புணர்ந்த புணர்ச்சியும், முற்று பெயரோடும் வினை யோடும் புணர்ந்த புணர்ச்சியும், பெயரெச்சமும் வினையெச்ச மும் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், உவமைத்தொகையும் உம்மைத்தொகையும், இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெய ரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், அன்மொழித் தொகை பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும், பண்புத்தொகை யும் வினைத் தொகையும் விரிந்து நின்றவழிப் புணர்ந்த புணர்ச்சி யும் என உணர்க.

இளம்பூரணர் கூறிய பத்துடன் வினைத்தொகை, அன்மொழித் தொகை ஆகிய இரண்டினை நச்சினார்க்கினியர் சேர்த்துக் கொண் டுள்ளார். மேலும் அல்வழி என்பது உருபு மறைந்து நில்லாமலும் விரிந்து நில்லாமலும் புணரும் புணர்ச்சி என்று அதனை விளக்க முயன்றுள்ளார். வேற்றுமை அல்வழிப் பாகுபாடு புணர்ச்சி இலக்கணத்தை விளக்குவதற்கு என்றே அமைத்துக்கொண்ட பாகுபாடு. தொடர் அடிப்படையில் புணர்ச்சியில் உண்டாகும் வேறுபாட்டினை விளக்கும்போது வேற்றுமை, அல்வழி என்ற பொதுக் குறியீடுகளைக் கொண்டு விளக்காமல் இருவேறு குறிப் பிட்ட தொடர்களுக்கு இடையே அமைந்த வேறுபாடு என்று தனியே பிரித்து விதந்து கூறலாம் என்று சுப. திண்ணப்பன் இப்பாகு பாட்டினைப் பற்றிக் கூறுவது சிந்தனைக்கு உரியது.[172]

சாரியை - சொல் விளக்கம்

இதனை ஆங்கிலத்தில் augment, increment, inflexional increment எனக் குறிப்பிடுவர். இதனுடைய சிக்கலான தன்மை காரணமாக இது

so called என்ற அடையுடன் சேர்த்தும் வழங்கப்படுகிறது.[178] இச் சொல்லுக்குப் பொருள் என்ன என்பதை இளம்பூரணர் கூறவில்லை. நச்சினார்க்கினியர் சார் + இயை எனப் பிரித்துக் காரணப்பெயராகப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> சாரியை என்றதன் பொருள் வேறாகி நின்ற இருமொழியும் தம்மில் சார்தல் பொருட்டு இயைந்து நின்றது என்றவாறு (தொல். 118)

நச்சினார்க்கினியரின் கருத்துப்படி 1. பெயரையும் உருபையும் புணர்த்தலைச் செய்வது, 2. பெயரையும் உருபையும் இயைந்து உடன் நிற்பது சாரியை ஆகும். சாரியை வரும் இடங்களை நோக்கினால் அதன் தன்மையைப் புரிந்து கொள்ளலாம்.

சாரியை வரும் இடங்கள்

உருபு புணர்ச்சியை விளக்குங்கால் தொல்காப்பியர் சாரியை வரும் இடம் பற்றிக் கூறுகிறார். பெயர்கள் வேற்றுமையோடு புணரும் (தொல். 117). அப்பெயர்கள் உயர்திணைப் பெயர்கள், அஃறிணைப் பெயர்கள் என இருவகைப்படும் (தொல். 118). அந்த உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் வேற்றுமை உருபோடு புணரும்போது அப்பெயர்களின் பின் சாரியை வரும் (தொல். 119) என்று குறிப்பிடும்போதும் பின்னர் ஒடு உருபு பெயரொடு புணரும்போது சாரியை வருவதும், வராதிருத்தலும் உண்டு எனக் குறிப்பிடும்போதும் தொல்காப்பியர் சாரியையின் இயல்பினைக் கூறியுள்ளார். மேலும் அங்கே சாரியை வரும் இடம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

> பெயரும் தொழிலும் பிரிந்து ஒருங்கு இசைப்ப
> வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்
> தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்
> ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணி
> சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது
> இடைநின்று இயலும் சாரியை இயற்கை
> உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும் (தொல். 133)

இந்த நூற்பா சாரியைகளுக்கு எல்லாம் பொதுவாகிய இலக்கணம் உணர்த்துகிறது என்று இளம்பூரணர் உரைத்துள்ளார். நச்சினர்க்கினியர் சாரியைகள்

1. புணர்மொழியுள்ளே வரும் என்பதையும்,
2. அந்தப் புணர்மொழி இன்ன என்பதையும்,
3. அந்தச் சாரியை வராத மொழிகளும் உள என்பதையும்

இந்த நூற்பா கூறுகிறது என்று கருதுகிறார். இலக்கணம் என்றால் ஒரு பொருளின் முழுத்தன்மையையும் விளக்க வேண்டும்; இந்த நூற்பா சாரியை பற்றி முழுமையாக விளக்கவில்லை என்ற எண்ணத்தில் நச்சினார்க்கினியர் இவ்வாறு கருதி இருக்கலாம்.

'சாரியை இயற்கை' என்று தொல்காப்பியரே குறிப்பிடுவதால் இது சாரியையின் இலக்கணத்தை முழுமையாக விளக்கவில்லை என்றாலும், சாரியையின் இயல்பினை விளக்குவதாகவே கொள்ள வேண்டும். சாரியை பற்றி முதன்முதலாகக் குறிப்பிடும் இடத்திலோ (தொல். 112). அடுத்து சாரியை வரும் இடம் பற்றிக் கூறும் நூற்பா விலோ (தொல். 119) சாரியையின் இயல்பினை விளக்காது இங்கே குறிப்பிடுவதன் காரணம் என்ன என்பது ஆராயத்தக்கது.

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெயரும் வினையுமாய்ப் பிரிந்து இசைத்தும், பெயரும் பெயருமாய்ச் சேர்ந்து இசைத்தும், வேற்றுமை உருபுகளோடு புணரும்போது வேற்றுமை உருபு வெளிப் பட்டும் நிற்கும்; தோன்றாது மறைந்தும் நிற்கும். அவை சேர்ந்து நின்ற முறையோடு பொருந்த, அவற்றைப் பிரித்துக் காணும்போது அச்சொற்களின் பின்னே நில்லாது, பெயருக்கும் உருபுக்கும் இடை யில் நிற்றல் சாரியையின் இயல்பு என்று தொல்காப்பியர் இந்த நூற்பாவில் குறித்துள்ளார்.

மேலே சொல்லிய இரண்டு நூற்பாக்களின் கருத்தினைத் தொகுத்துப் பார்த்தால் 1. உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் வேற்றுமை உருபோடு புணரும்போது சாரியை வரும், 2. அந்த வேற்றுமைப் புணர்ச்சியில் உருபு தோன்றியும் நிற்கும்; மறைந்தும் நிற்கும். அதாவது சாரியை உருபு புணர்ச்சியிலும் வரும்; பொருட் புணர்ச்சியிலும் வரும். 3. பெயருக்கும் உருபுக்கும் இடையில் வரும்; சொல்லின் இறுதியில் வராது என்று அறியலாம். சாரியை பற்றிய புணர்ச்சி விதிகளையும் தொகுத்து நோக்கினால் மேலும் சில கருத்துகள் பெறப்படுகின்றன. அவற்றை சோ. ந. கந்தசாமி எடுத்துக்காட்டியுள்ளார்.

> சாரியை பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ள புணர்ச்சி விதிகளை ஒப்புநோக்கின் அவை பெரும்பாலும் அஃறிணைப் பெயர் கட்கே வருவன என்பதும், சில சாரியைகள் உயர்திணைக்கு அறவே வராது என்பதும் (அத்து, வற்று, அக்கு, இக்கு முதலியன) அல்வழிப் புணர்ச்சிக்கு அருகியும் வேற்றுமைப் புணர்ச்சிக்குப் பெருகியும் சாரியைகள் வழங்கும் என்பதும் தெள்ளிதின் புலனாகும்[171]

என்று அவர் விளக்குகிறார். இங்கே அல்வழி குறிப்பிடப்படுவது தொல்காப்பியர் கருத்துக்கு மாறுபடுகிறதே என்ற ஐயம் எழலாம். ஆயிரம் என்ற சொல் அத்துச் சாரியை பெறும் (தொல். 317) என்ற புள்ளி மயங்கியல் நூற்பாவினை நோக்கி ஆயிரத்து ஒன்று போல்வன உம்மைத்தொகையாகக் கொண்டு அல்வழிப் புணர்ச்சியிலும் வருவ தனை உள்ளடக்கிக் கூறியது இந்த விளக்கம்.[172] அல்வழியிலும் சாரியை வரும் என்று தெய்வச்சிலையார் (தொல். 735) கூறியுள்ளதும் இங்குக் கருதத்தக்கது.

சாரியையும் எழுத்தும்

புணர்ச்சியில் தோன்றுவன எழுத்தும் சாரியையும். தனி எழுத்தினை 'எழுத்து' என்றும் எழுத்துத் தொடர்ச்சியைச் சாரியை என்றும் கொள்ளலாம். இதற்கு மாறாகவும் தொல்காப்பியத்தில் ஒரு நூற்பா காணப்படுகிறது. 'ஏ' என்பதைச் சாரியை எனத் தொல்காப்பியர் (தொல். 164) குறிப்பிட்டுள்ளார். இது விதிவிலக்காகக் கருதப்பட வேண்டும் என்று மோ. இசுரயேல் குறிப்பிட்டுள்ளார்.[176] சாரியையின் தொகை கூறும் நூற்பாவில் இது பற்றிக் குறிப்பிடப்பட வில்லை. இது ஏன் என்பது ஆராயப்பட வேண்டும். சாரியையின் தொகை கூறும் நூற்பாவில் கூறப்பட்டனவெல்லாம் ஈரெழுத்தொரு மொழி அல்லது தொடர்மொழி; 'ஏ' ஓரெழுத்தொருமொழி அதனால் விட்டுவிட்டார் என்று அமைதி கண்டாலும் அது பொருந்தாது. எழுத்து, சாரியை என இரு வகையாகத் தொல்காப்பியர் பகுத்திருக்க 'ஏ' என்பதை எழுத்து என்னாது சாரியை என விதந்து கூறுவதால், சாரியைகளின் தொகை கூறும் நூற்பாவில் சேர்க்காமல் தவறுதலாக விட்டுவிட்டாரா? அல்லது 'ஏ' என்பதைச் சாரியை எனக் கூறும் நூற்பா இடைச்செருகலாக இருக்கலாமோ என்று ஆராய்தல் தக்கது.[177]

எழுத்து — சாரியை: வேறுபாடு

எழுத்துக்கும் சாரியைக்கும் உள்ள வேறுபாடு என்ன என்று தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. உரையாசிரியர்களும் இதனை விளக்க முற்படவில்லை.

1. எழுத்து என்பது புணர்ச்சியில் தோன்றும் வல்லெழுத்து அல்லது மெல்லெழுத்து; சாரியை என்பது வெற்றுருபு என்று செ. வை. சண்முகம் விளக்கம் தந்துள்ளார்.[178]

2. எழுத்து என்பது தனி எழுத்து; எழுத்துத் தொடர்ச்சி சாரியை; 'ஏ' என்னும் சாரியை இதற்கு விதி விலக்கு என்று மோ. இசுரயேல் கூறியுள்ளார்.[179]

தொல்காப்பியர் வகர மெய்யையும் எழுத்துப் பேறாகக் கருதுவதால் முதல் விளக்கம் குறைபாடுடையது. ஏ என்பதைச் சாரியை என விதந்து ஓதுவதால் இரண்டாம் விளக்கம் நூலோடு முரண்படுகிறது; ஆகவே இரண்டும் பொருந்தா என்று எடுத்துக்காட்டிச் சாரியைக்குப் பின்வருமாறு செ. வை. சண்முகம் விளக்கம் தந்துள்ளார்.

> சாரியை என்பதை வேற்றுமை உருபு ஏற்பதற்காக பெயருக்கும் வேற்றுமை உருபுக்கும் இடையில் வரும் ஒன்றாகக் (Stem formative) கருதலாம். அப்படியானால் மாற்று வடிவமாக வரும் போது தோன்றல் புணர்ச்சியாக வருவது எல்லாம் எழுத்து என்றும், வேற்றுமை உருபு ஏற்பதற்காக பதப்புணர்ச்சியில் வரும் ஒரு எழுத்தையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்தையோ சாரியை என்றும் அழைக்கலாம். 'ஏ' என்பது

> அளவுப்பெயரில் நாழியே ஆழாக்கு (தொல். 164) தெற்கே வடக்கு (தொல். 461) என்று வரும்போது நாழியே என்பதை நாழி என்பதன் மாற்று வடிவமாகவோ, தெற்கே என்பதைத் தெற்கு என்பதன் மாற்று வடிவமாகவோ கொள்ள முடியாது. எனவே தனி எழுத்து ஆயினும் சாரியை எனக் கருதப்பட்டது. இதனால் மாற்றுருபு உருபாகக் கருதமுடியாத பகுப்பு உறுப்பாக இருந்தால் சாரியை என்றும் மாற்று வடிவமாகக் கருதப் படுவது ... எழுத்து மிகுந்து வந்தாலும் பகுப்பு உறுப்பாகக் கொள்ளாது 'எழுத்து' என்றும் கொள்ளலாம்.[180]

இவ்விளக்கம் சாரியைக்கு விளக்கம் தருவதோடு, தொல்காப்பியர் சாரியை எனக் கொண்ட முறைக்குக் காரணத்தையும் காட்ட முனைகிறது. மேலும் எழுத்துக்கும் சாரியைக்கும் உள்ள வேறு பாட்டினையும் தெளிவாகப் புலப்படுத்துகிறது.

சாரியைகளின் எண்ணிக்கை

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் ஆகிய ஒன்பது சாரியைகளைத் தொல்காப்பியர் (தொல். 119) கூறி யுள்ளார். 'பிறவும் உள' என்று அந் நூற்பாவில் உள்ள தொடரால் தம், நம், நும், உம், கெழு, ஏ, ஐ, ஞான்று ஆகிய எட்டு சாரியை களைக் கொள்க என்று இளம்பூரணர் குறித்துள்ளார். இந்த எட்டினை நச்சினார்க்கினியரும் கூறி அவற்றுள் 'ஞான்று' தவிரப் பிறவற்றைத் தொல்காப்பியரே எடுத்தோதியுள்ளார் என்று தொல் காப்பிய நூற்பாக்களிலேயே இந்தச் சாரியைகள் பயின்று வந்துள்ளதைக் கண்டு கூறியுள்ளார்.

உரையாசிரியர்கள் கூறும் சாரியைகள்

இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் கூறிய சாரியைகள் ஏற்றுக் கொள்ளத் தக்கனவா என்பது பற்றி மோ. இசுரயேல், சோ. ந. கந்தசாமி, செ. வை. சண்முகம் ஆகியோர் ஆராய்ந் துள்ளனர். தம், நம், நும் என்பன மூவிடப் பன்மைப் பெயர்களின் உருபேற்கத் திரிந்த வடிவங்கள் என்றும் உம், கெழு போன்றவை உருபாகக் கருதப்பட வேண்டும் என்றும் மோ. இசுரயேல் உரைத் துள்ளார்.[181] 'கெழு' பற்றி சோ. ந. கந்தசாமி இரண்டு கட்டுரைகளில் விவாதித்துள்ளார்.

> (1973) சாரியைகளின் வேற்றுமைப் பொருள் பயப்பனவுடன் கெழு வினைவேராகவும் கொள்ளத்தக்கது என ஒருபடி மேற்சென்றுரைத்த ஒட்பத்தினை என்னென்பேன்.[182]
>
> (1977) உம் கெழு இவ்விரண்டு சாரியைகளுக்கும் அதிகாரப் புறனடையில் தொல்காப்பியர் (தொல். 481) விதி அமைத்தார்.[183]

முதற்கட்டுரையில் 'கெழு' பொருளுடைய சாரியை என்பது அடுத்த கட்டுரையில் 'கெழு' சாரியை என மட்டும் குறிப்பிடப்படுகிறது.

இதனால் கெழு பொருளுடைய சாரியை என்ற தனது கருத்தினை அவர் மாற்றிக் கொண்டுள்ளார் என்பது தெரிகிறது. இதனைச் சுட்டிக்காட்டி, மோ. இசுரயேல் கூறுவது போல் 'கெழு'வை உருபன் என்றே கொள்ள வேண்டும் என்று செ. வை. சண்முகம் குறிப்பிடு கிறார். உம், கெழு ஆகியவற்றைக் கூறும் நூற்பா (தொல், 481) அவற்றைச் சாரியை எனக் குறிப்பிடவில்லை. உரையாசிரியர்களே அவற்றைச் சாரியை எனக் கூறியுள்ளனர். மெய்யீறுகளைப் பற்றிய புணர்ச்சி விதிகளைக் கூறும் இந்த நூற்பா குற்றியலுகரப் புணரியலுள் அமைந்துள்ளது. இது புள்ளி மயங்கியலில் இருக்க வேண்டும். ஒருவேளை இது இடைச்செருகலாக இருக்கலாமோ என்ற ஐயத்துக்கும் உரியது.[184] எப்படி இருப்பினும் உம், கெழு இரண்டினையும் சாரியைகளாகக் கருதுவது பொருந்தாது.[185]

ஞான்று

ஞான்று ஒழிந்த பிற சாரியைகள் தொல்காப்பியத்தில் பயின்று வருகின்றன. 'ஞான்று' என்பதை இளம்பூரணரே சாரியை எனக் குறிப்பிடுகிறார். நச்சினார்க்கினியரும் இதனை ஒப்புக் கொண் டுள்ளார்: 'ஞான்று' சாரியை அன்று; காலம் என்னும் பொரு ளுடைய சொல் (கட்டிலா வடிவம்) என மோ. இசுரயேல் எடுத்துக் காட்டியுள்ளது[186] பொருத்தமே.

தொல்காப்பியர் கூறும் சாரியைகள்

தொல்காப்பியர் கூறிய சாரியைகளுள் அம், ஒன் ஆகியவற்றைச் சாரியையாகக் கொள்ளலாமா என்பது ஆராயப்பட்டுள்ளது.

அம் — சாரியையா?

சாரியைகளின் தொகை கூறும் நூற்பாவில் (தொல். 119) அம் சாரியை பற்றித் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். புள்ளி மயங் கியலில் அம் சாரியை வருமிடம் பற்றியும் அதன் நிலை பற்றியும் கூறியுள்ளார்.

> அப்பெயர் மெய்யொழித்து அக்கெடு வழியும்
> நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை
> மக்கள் முறைதொகூஉ மருங்கின் ஆன (தொல். 350)

இதனுள் அப்பெயர் என்றது முந்தைய நூற்பாவில் (தொல். 349) கூறிய இயற்பெயரை. மக்கள் உறவுமுறைச் சொற்கள் நிலை மொழியில் வகர ஈறு உடையவனாக இருந்து வருமொழியில் வல்லெழுத்து வந்தால் நிலைமொழி ஈறாகிய 'அன்' கெட்டு அம் சாரியை தோன்றும் என்பது இந்த நூற்பாவின் பொருள்.

இந்த இடத்தில் அம் சாரியை தேவை இல்லை. நிலைமொழியாக வரும் வல்லெழுத்துக்கு ஏற்ப னகரம் இன மெல்லெழுத்தாக மாறும் என்று தொல்காப்பியர் கூறியிருக்கலாம் என்று மோ. இசுரயேல் குறிப்பிட்டுள்ளார்.[187] இந்தக் கருத்தினை ஆராய்ந்து செ. வை. சண்முகம் பின்வரும் நிலையில் விளக்கம் தந்துள்ளார்.[188]

னகரமெய் வல்லெழுத்தோடு புணர்ந்தால் றகரமாக மாறும்; அல்லது இயல்பாக இருக்கும். மகர ஈறுதான் வருமொழிக் கேற்ப இனமெல்லெழுத்தாகவோ அல்லது மகரம் கெட வரு மொழியில் வல்லெழுத்து இரட்டித்தோ வரும்.

(ன) பொன் + குடம் — பொற்குடம்
குயின் + குழாம் — குயின்குழாம்

(ம) மரம் + குறிது — மரங்குறிது
குளம் + கரை — குளக்கரை

ஆனால் னகர ஈற்றில் முடியும் இயற்பெயர் (சாத்தன்) மகன் பெயரையுடைய வல்லெழுத்தோடு புணரும்போது (கொற்றன்) நிலைமொழி னகர ஈறு வல்லெழ்த்தின் இனமெல்லெழுத்தாக மாறுகிறது. இப்படி வருமொழிக்கேற்ற இன மெல்லெழுத்தாக மாறுவது மகர ஈறு ஒன்றுதான் என்பது தமிழ் மொழி அமைப்பில் காணப்படும் பொதுமை. ஆகவே னகர ஈறு, மகர ஈறு ஆகிய இரண்டின் புணர்ச்சியில் காணப்படும் பொதுமையைப் பாது காக்கவே பெயரில் உள்ள அன் விகுதியைக் கெடுத்து அம் சாரியை வருவதாக விவரித்து விட்டார். மகர ஈறாக இங்கு வருவது இயல் பாகவே 'வரும் ஈறு அல்ல. புணர்ச்சிக்காக வரும் விதியீறு. மகர 'ஈறான பின்னர் வருமொழிக்கேற்ப இனமெல்லெழுத்தாகத் திரிந்து சாத்தங்கொற்றன்' என்று மாறிவிட்டது. இவ்வாறு விளக்கம் கூறி இலக்கண ஆசிரியனின் உத்திமுறையினைத் தொல்காப்பியர் இந்த நூற்பாவில் கையாண்டுள்ளார் என்பதையும் விளக்கியுள்ளார்.

> இலக்கணம் மொழியின் அமைப்பில் காணப்படும் ஒழுங்கைக் கண்டுபிடித்துக் கூறுவது மட்டுமல்ல; அந்த ஒழுங்கில் சில குறை இருந்தாலும் அதை நீக்கும் வழியில் உத்திகளைக் கையாண்டு ஒழுங்காக இருக்கிறது என்று காட்டுவது; அல்லது அந்த ஒழுங்கைப் பாதுகாக்கும்படி விதிவிலக்குகளைச் சற்று மாறு பட்ட முறையில் வருணிப்பது. தொல்காப்பியர் இந்தச் சூத்திரத்தில் தமிழ்மொழி அமைப்பில் காணப்படும் பொது மையை வற்புறுத்தி, விதிவிலக்காக வருவதைப் பொதுவிதிக்குள் அமைத்துக் காட்டும் முயற்சியை மேற்கொண்டிருக்கிறார் என்று நாம் நினைக்க வேண்டியிருக்கிறது.

இதனால் அம் என்பதைத் சரியாகத் தொல்காப்பியர் கொண்டது பொருத்தமே என்று நிறுவியுள்ளார்.[189]

'ஒன் சாரியையா?

தொல்காப்பியர் 'ஒன் என்பதைச் சாரியையாகக் கூறியுள்ளார் (தொல். 119). இதனைச் சாரியையாகக் கொள்ளுதல் பொருந்துமா என்ற கேள்வியை எழுப்பிப் பதிலுரைக்கிறார் செ. வை. சண்முகம். ஆ, மா, ஊ போன்ற சொற்கள் புணர்ச்சியின்போது னகரம் பெறு

கின்றன என்று கூறாமல் அவற்லை நிலைமொழிச் சொல்லின் மாற்றுவடிவங்களாக விளக்கிவிட்டு கோ என்பது ஒன் பெறுவதை மட்டும் ஏன் மாற்றுவடிவமாகக் கருதாமல் சாரியை என்று கொண்டார்?

பொதுவாக நெடில் ஈற்றுச் சொற்கள் குறிலை அடுத்து வந்தாலும், அதனுடைய இனக்குறிலைப் பெறுவதாக ஆகார ஈற்றிற் கும் (தொல். 229) ஊகார ஈற்றிற்கும் ஏகார ஈற்றிற்கும் (அங்கு ஓரெழுத்தொருமொழிக்கு மட்டுமே உரியது) கூறியுள்ளார். எனவே கோ என்ற சொல்லும் ஒகரம் பெறுதலையும் னகரம் பெறுதலையும் மாற்றுவடிமாக விளக்கியிருக்கலாம். அப்படியானால் ஒன் என்பதைத் தனிச் சாரியையாகக் கருதியிருக்க வேண்டாம்; புணர்ச்சி மாற்றம் மூலம் விளக்கியிருக்க முடியும். இதற்கு ஏதாவது சிறப்புக் காரணம் இருக்கிறதா என்று கண்டுபிடிக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் ஒன் என்பதைச் சாரியையாகக் கொண்டது பொருந்தாது என்ற முடிவுக்கு வர வேண்டும்.[190]

'ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை' (தொல். 180) என்ற நூற்பாப் பொருளுக்கு உதாரணமாக கோஒனை, கோஒனொடு என்பவற்றை இடம்பூரணர் காட்டியுள்ளார் தான், பேன், கோன் என்ற சொற்கள் இயற்பெயராகத் தொல்காப்பியர் காலத்தில் இருந்தன என்று (தொல். 351) தெரிகிறது. இவை நச்சினார்க்கினியர் காலத்து வழக்கிறந்து விட்டன. 'பேன் கோன் என்பன முற்காலத்து வழக்கு' என்று அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 'கோன்' என்ற இயற்பெயரி லிருந்து வேறுபடுத்தி அறியும் பொருட்டு ஒகார இறுதி ஒன் சாரியை பெறும் என்று தொல்காப்பியர் விளக்கியிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது.

சாரியை — இடைச்சொல்லா?

சேனாவரையரும், தெய்வச்சிலையாரும் சாரியை இடைச் சொல்லில் ஒரு வகை எனக் கூறியுள்ளனர். தொல்காப்பியர் இடைச் சொல்லின் வகைகளைத் தொகுத்துக் கூறும் நூற்பாவில்,

> புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதநவும் (தொல். 735)

என்னும் வகையினைக் குறிப்பிட்டுள்ளார். இதற்கு விளக்கம் தரும் போது சேனாவரையர்,

> பொருள்நிலைக்கு உதவுதலாவது எல்லாவற்றையும் என்புழி வற்றுச் சாரியை நிலைமொழிப் பொருள் அஃறிணைப் பொருள் என்பது பட வருதலும், எல்லா நம்மையும் என்புழி நம்முச் சாரியை அப்பொருள் தன்மைப் பன்மை என்பதுபட வருதலுமாம். அல்லனவும் தாம் சார்ந்துவரும் மொழிப்பொருட்கு உபகாரமுடையதாய் வருமாறு ஓர்ந்து கொள்ளப்படும். அல்லாக்கால் சாரியை மொழியாகா

என்று குறித்துள்ளார். இந்த விளக்கத்தால் சாரியையினை இடைச் சொல்லின் ஒரு வகையாகக் கொள்ளலாம் என்றும், அவை

உயர்திணை, அஃறிணை முதலிய பொருள் வேறுபாடு உணர்த்துவன என்பதும் சேனாவரையரின் கருத்துக்களாகப் பெறப்படுகின்றன.

தெய்வச்சிலையார் சாரியை இடைச்சொல் என்ற பெயரும் பெறும் என்றும் சாரியையினை அல்வழி, வேற்றுமை என இருவகையாகப் பகுக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

> பொருள் நிலைக்கு உதவலாவது அல்வழிப்பொருட்கு உரியன இவை, வேற்றுமைப் பொருட்கு உரியன இவை என வருதல். அவையாவன இன்னே, வற்றே என்பன முதலாயின. அவை சாரியை அன்றோ எனின், அவை இடைச்சொல் எனவும் ஒரு குறி பெறும் என்றவாறு (தொல். 735)

சாரியை பொருள் உடையன என்றும் தெய்வச்சிலையார் கருதுகிறார் என்பது இதனால் பெறப்படுகிறது. 'புணரியல் நிலையிடை' என்று கூறியதால் இவை சாரியை எனவும் இடைச் சொல்லோடு சேர்த்துக் கூறியதால் அவை இடைச்சொல் எனவும் 'பொருள்நிலைக்கு உதவுந' என்றதால், அச்சாரியைகள் பொருள் உடையன என்றும் கொள்ளப்பட்டன.

சாரியையும் பொருளும்

சாரியை உருபுப்பொருள் உடையது என்பது கால்டுவெல்லின் கருத்து. இக்கருத்தினைப் பின்வருமாறு அவர் விளக்கியுள்ளார்.

> சாரியை ஏற்கும் பெயர் ஏழாம் வேற்றுமையாகவும், சில சமயங்களில் ஆறாம் வேற்றுமை உடைமைப் பொருளில் வரும் பெயரடையாகவும் பயன்படும் ஆற்றல் பெற்றிருக்கிறது. தமிழ் இலக்கண நூல்கள் சாரியை வேற்றுமை உருபு அன்று என்னும் கருத்தினை உடையன; ஆயினும் ஏழாம் வேற்றுமை உருபும் ஆறாம் வேற்றுமை உருபும் பயன்படும் எல்லா இடங்களிலும் சாரியை மட்டும் ஏற்கும் சொற்களைப் பயன்படுத்தலாம். அவை பெயரடையாகக் கையாளப்படுவதைத் தமிழ் இலக்கண நூல்கள் ஒத்துக் கொள்கின்றன. ஆனால் அவை பெயரடையாக உபயோகப்படுவது எனக்கு இரண்டாம் நிலையாகவே தோன்றுகிறது. பெயடைக்குரிய வேறு விகுதிகள் பலமொழிகளில் ஆறாம் வேற்றுமை உருபாகவே அமைவதால் சாரியையும் ஏழாம் வேற்றுமை உருபாகவோ அல்லது ஆறாம் வேற்றுமை உருபாகவோ முதலில் இருந்திருக்க வேண்டும்.[231]

பின்னர் கால்டுவெல்லைப் பின்பற்றிச் சாரியைக்கு வேற்றுமை உருபுப்பொருள் உண்டு என்று வருணனை மொழியியல் நோக்கில் தெ. பொ. மீனாட்சிசுந்தரன், மோ. இசுரயேல், தி. முருகரத்தனம், சோ. ந. கந்தசாமி ஆகியோர் விளக்கம் தந்துள்ளனர்.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன் 'பொருள்நிலைக்கு உதவுதல்' என்பது தொல்காப்பியர் கருத்துப்படி வேற்றுமை உருபுகளின்

பொருளைப் புரிந்துகொள்ள உதவுதல் என்பதாகலாம் என்று எடுத்துக்காட்டியுள்ளார். சொற்களின் இறுதியில் வரும் ஒட்டுக்களாக இருந்திருக்கக் கூடிய சாரியைகள் தொகைகளில் மட்டும் நிலைத்திருக்க வேண்டும்; அல்லது கால்டுவெல் விளக்குவது போல் அவை பழைய வேற்றுமை உருபுகளாக இருந்திருக்க வேண்டும் என்று அவர் சாரியைகளின் தொன்மை நிலையினையும் விளக்கியுள்ளார்.[192]

சாரியை பற்றி ஆராய்ந்தவர்களுள் மோ. இசுரயேல் ஒவ்வொரு சாரியையும் என்ன பொருளில் வருகிறது என்பதையும், சாரியைகளின் வடிவங்களையும் விரிவாக ஆராய்ந்து விளக்கியுள்ளார்.

இன்–சாரியை

இன் சாரியை உருபு புணர்ச்சியிலும் பொருட்புணர்ச்சியிலும் வரும். இது வடிவத்தில் ஐந்தாம் வேற்றுமை உருபை ஒத்து இருக்கிறது. ஐந்தாம் வேற்றுமை உருபுக்கும் 'இன்–சாரியைக்கும் வேற்றுமை என்ன என்று நச்சினார்க்கினியர் எடுத்துக் காட்டியுள்ளளார்.

> சாரியையான இடத்து யாதானும் ஓர் உருபேற்று முடியும்; உருபாயின இடத்து வேறோர் உருபினை ஏலா என்று உணர்க (தொல். 119)

நச்சினார்க்கினியரின் இந்த விளக்கம் தொல்காப்பியரின் கருத்தைத் தழுவியதே. தொல்காப்பியர் இந்தக் கருத்தினை,

> இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு
> இன்னென் சாரியை இன்மை வேண்டும் (தொல். 131)

என்ற நூற்பாவில் கூறியுள்ளார்.

ஐந்து, ஆறு, ஏழாம் வேற்றுமைப் பொருள்களில் இன் சாரியை வருகின்றது என மோ. இசுரயேல் எடுத்துக் காட்டியுள்ளார்,[193] அவை வருமாறு

பனை — இன் — குறை — ஐந்தாம் வேற்றுமைப்பொருள்
மக — இன் — கை — ஆறாம் வேற்றுமைப்பொருள்
இருள் — இன் — கொண்டான் — ஏழாம் வேற்றுமைப்பொருள்.

வற்றுச் சாரியை

வற்றுச் சாரியை பெயர்ச்சொல் வேற்றுமை உருபை ஏற்கும் போதும், தொகைச் சொற்களிலும் வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இஃது அஃறிணையிலேயே வரும். நன்னூலார் இதே சாரியையை 'அற்று' என்று கூறியுள்ளார்.

வற்று என்னும் சாரியையில் உள்ள வகரம் அஃறிணைப் பன்மையைக் குறிப்பது என்று அ. சிதம்பரநாதன் செட்டியார்[194]

விளக்கியுள்ளார். எல். வி. இராமசாமி அய்யரும் இக்கருத்தினரே. வற்றுச் சாரியையின் உண்மையான வடிவம் 'அற்று' என எல். வி. இராமசாமி அய்யர்,[195] தெ. பொ. மீனாட்சிசுந்தரன்,[196] மோ. இசுரயேல்,[197] சோ. ந. கந்தசாமி[198] ஆகியோர் கூறியுள்ளார். வற்று என்னும் சாரியை தவறாகப் பிரித்ததனால் வந்த விளைவு என்று எல். வி. இராமசாமி அய்யரும் தெ. பொ. மீனாட்சிசுந்தரனும் கூறியுள்ளனர். இதனைப் பின்வருமாறு மோ. இசுரயேல் விளக்கியுள்ளார்.

பல + வற்று + ஐ = பலவற்றை பல + அற்று + ஐ
யா + வற்று + ஐ = யாவற்றை பல + அற்று + ஐ

இந்தப் பிறழ் பிரிப்பினால் (Meta analysis) விளைந்தது என்றனர். அவ், இவ், உவ் என்பனவற்றோடு உயிர்வரின் இரட்டாமையாகிய விதிமுறை அமைக்கப்படுமாயின் அற்று வடிவம் இணைத்தால் போதும். தொல்காப்பியர் அவ், இவ், உவ் என்பனவற்றின் இறுதி கெடும் (தொல். 133, 183) என்பதை ஒப்புக் கொண்டு அற்று என்னும் வடிவம் வரும் எனக் கூறின் மொழியின் பொது இயல்புப்படி

அ(வ்) + அற்று = அவற்று
இ(ய்) + அற்று = இயற்று

என்பன போன்ற சொற்கள் அமைதல் இயலும். 'இயற்று' போன்ற அமைப்பு மொழிவழக்கில் இல்லை. எனவே இங்கு மொழி வழக்கைப் பொருத்தமுறச் செய்ய 'வற்று, என்னும் வடிவம் தேவைப் பட்டது. அவ், இவ், உவ் ஆகிய சொற்களைத் தவிர பிறசொற்கள் 'வ்' என்ற அஃறிணைப் பன்மை தேவை இல்லை. 'பல' போன்ற சொற்களில் ஏற்கெனவே பன்மை உணர்த்துவதால் அவற்றில் வருப் வகரம் உடம்படு மெய் ஆகும் என்றும் மோ. இசுரயேல் வற்றுச் சாரியையைத் தொல்காப்பியர் கொண்டதற்கான காரணத்தினை விளக்கியுள்ளார்.[199]

செ. வை. சண்முகம் இதனை வேறு முறையில் விளக்கியுள்ளார். அற்று என்பது 'அத்தன்மைத்து' என்னும் பொருளில் வழங்குகிறது. அந்த அற்று என்னும் சொல்லினின்றும் வேறுபடுத்திக் காட்டுவதற்காகத் தொல்காப்பியர் 'வற்று என்னும் கற்பித வடிவ (Hypothetical form) த்தினை அமைத்துக் கொண்டார் (தொல்காப்பியர் கற்பித வடிவங்களை அமைத்துக் கொள்ளும் கோட்பாடு உடையவர் என்று செ. வை. சண்முகம் விளக்கியுள்ள முறை பின்னர் எடுத்துக்காட்டப் படும்) என்று காரணம் கூறியுள்ளார்.

வற்றுச் சாரியை ஆறாம் வேற்றுமைப் பொருள் உடையது என்று மோ. இசுரயேல் கூறியுள்ளார்.

பலவற்றுக்கோடு
அவையற்றுக்கோடு

ஆகிய சொற்களில் 'அற்று' இந்தப் பொருளில் வருவதாக அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.[200]

அத்துச் சாரியை

சாரியை 'அத்து' உருபு புணர்ச்சியிலும் பொருட்புணர்ச்சியிலும் வரும். இது பெரும்பாலும் அஃறிணை ஒருமைப்பெயரைத் தொடர்ந்தே வரும். தொல்காப்பியத்தில் காட்டப்பட்டுள்ள பெரும்பாலான இடங்களில் இது தன் முழு வடிவத்தோடு வரவில்லை. 'அத்து', 'த்து' ஆகிய இரண்டும் இந்தச் சாரியையின் மாற்று வடிவங்கள் (alternants) ஆகும். தொல்காப்பியர் 'அத்து' என்பதையே கொண்டதற்கு அது தமிழ்மொழி எழுத்திலக்கண அமைப்புக்கு மாறுபட்டு இருக்கக்கூடாது என்பதுதான் காரணம் என செ. வை. சண்முகம் கூறியுள்ளார்.[201] தொல்காப்பியர் உருபோ, சாரியையோ சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்திலக்கண அமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டினைக் கொண்டிருக்கிறார் என்று முதன்முதலில் ந. குமாரசாமி ராஜா எடுத்துக் காட்டியுள்ளார்.[202]

அத்துச் சாரியை ஆறாம் வேற்றுமைப் பொருளையும் (மக — அத்து — கை), ஏழாம் வேற்றுமைப் பொருளையும் (வெயில் — அத்து — கொண்டான்) உடையது என்று மோ. இசுரயேல் கூறி கூறியுள்ளார்.[203]

ஆன் சாரியை

ஆன் சாரியையின் வடிவம் மூன்றாம் வேற்றுமை உருபை ஒத்துள்ளது. இந்தச் சாரியை உருபு புணர்ச்சியிலும் பொருட்புணர்ச்சியிலும் வருகிறது. எண்ணுப்பெயர் முன்னும் நாட்பெயர் முன்னும் ஆன் சாரியை வழங்கும் (தொல். 199, 247, 286) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். எண்ணுப்பெயரில் தோன்றும் ஆன் சாரியை பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்.

ஒருபஃது + ஐ > ஒருப் + ஆன் + ஐ
ஒருப் + ஆன் + ஐ > ஒருபான் + ஐ ஒருபானை

என்று ஆகிறது. பஃது, பத்து, பான், என்பன ஒரு பொருள் உடையன. தொல்காப்பியரே பத்தின் மாற்றுருபாக பான் என்பதைப் பயன்படுத்தியுள்ளார். ஒன்பாற்கு (தொல் 475) ஒன்பான் (தொல். 463) என்பவற்றில் 'பான்' வந்துள்ளது. பான் என்னும் மாற்றுவடிவம் பிறழ்பிரிப்பினால் 'ஆன்' எனப் பிரிக்கப்பட்டுச் சாரியையாகக் கொள்ளப்பட்டது. ஆகவே எண்ணுப்பெயர் முன்வரும் சாரியை எனத் தொல்காப்பியர் கூறும் ஆன் என்பது பான் என்ற மாற்றுருபே: சாரியை அன்று. இகர, ஐகார, மகர, ஈற்று நாட்பெயர்களின் முன்னர் இந்தச் சாரியை வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பரணி + ஆன் + கொண்டான், கேட்டை + ஆன் + கொண்டான், மகம் + ஆன் + கொண்டான் என்ற உதாரணங்களை

உரையாசிரியர்கள் தந்துள்ளனர். ஆன் சாரியை வழங்கிய இடங்களில் இக்காலத்தில் 'இல்' என்ற ஏழாம் வேற்றுமை உருபு வழங்குகின்றது. இதனால் ஏழாம் வேற்றுமை உருபு காலப் பொருளில் வழங்கியது என்பதே பொருந்தும். ஆன் சாரியை தொடக்கத்தில் ஆன்உருபு போலவே இருந்தது. நாட்பெயர் முன்னர் வரும்போது அதனுடைய வேற்றுமைப்பொருள் மறைந்த நிலையில் இருந்ததால் அது தொல்காப்பியரால் சாரியை என்று கொள்ளப்பட்டது என எல். வி. இராமசாமி அய்யர் விளக்கியுள்ளார்.[204] தொல்காப்பியர் இவ்வாறு வேற்றுமை உருபுகள் மாறி வழங்குவதை விளக்க வேற்றுமை மயங்கியல்' எனத் தனி இயல் வகுத்திருந்தும் ஆன் உருபை ஏன் சாரியையாகக் கொண்டார் என்பதற்கு அமைதி கூறுதல் இயலாது என்று மோ. இசுரயேல் கூறியுள்ளார்.[205]

அக்குச் சாரியை

தொல்காப்பியர் அக்குச் சாரியை வருமிடங்களைக் குறிப்பிடுவதிலிருந்து அது பெயரைத் தொடர்ந்து பொருட்புணர்ச்சியில் மட்டுமே வரும் எனத் தெரிகிறது. தொல்காப்பியத்திலோ அல்லது வேறு இலக்கியங்களிலோ 'அக்கு'ச் சாரியை முழு வடிவத்துடன் இடம் பெறவில்லை.[206] 'அக்கு'வில் உள்ள உகரமும் ககர மெய்களும் வருமொழி வல்லினம் வரும்போது கெடும் என்று கூறியுள்ளார். ஆகவே அவரது கருத்துப்படியே அக்குச் சாரியையின் உண்மையான வடிவம் 'அ' என்பதே. அகரம் எழுத்துப் பேராக வருவதனை வேறு பல இடங்களிலும் (தொல். 162, 223, 226, 299, 346, 374) விளக்கியிருக்கிறார். ஆனால் சில இடங்களில் வருவதை மட்டும் அவர் ஏன் 'அக்கு' என்ற சாரியையாகக் கொள்கிறார் என்பது விளங்கவில்லை என்று மோ. இசுரயேல் குறிப்பிட்டுள்ளார்.[207] நன்னூலார் இந்தச் சாரியையை 'அ' எனவே கூறியுள்ளார்.

தொல்காப்பியர் 'அக்கு'ச் சாரியை கொண்டதற்கான காரணத்தினை குமாரசாமி ராஜா,

> தொல்காப்பியரின் 'அக்கு'வை அகரத்தைத் தொடர்ந்து வரும் விட்டிசைப்பு ஒலி என்று கொள்ளுதல் தக்கது. இந்த இடத்தில் விட்டிசைப்பு ஒலி தொடர்ந்து வரும் வல்லினத்துக்காக நிற்கிறது தொடர்ந்து வருவது (வருமொழியில்) வல்லினம் அல்லாத ஒலியாயின் அந்த விட்டிசைப்பு ஒலி இருப்பதாக உணரப்படுவது இல்லை

என்று விளக்கி விட்டு வேறுசில சொற்களில் 'அக்கு'ச் சாரியையை ஏன் அமைக்கவில்லை என்று வினா எழுப்பியுள்ளார்.[208] சாரியையாகத் தொல்காம்பியர் 'அக்கு' எனக் கொண்டதற்குக் காரணம் அடிநிலைக்கிளவி தனித்துவம் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது தான் என்று செ. வை. சண்முகம் எடுத்துக் காட்டியுள்ளார். அதற்காக அமைத்துக்கொண்ட கற்பித அடிநிலைக் கல்வி (Hypothetical base form) 'அக்கு' ஆகும். க்கு என்ற வடிவத்தை 'இக்கு' என்பதன்

மாற்று வடிவமாகவும் அக் என்ற வடிவத்தை அக்கு என்பதன் மாற்று வடிவமாகவும் கொண்டு புணர்ச்சி விதிகளைக் கூறுவது கற்பித வடிவங்களே என்று அவர் விளக்கியுள்ளார்.[209]

நன்னூலார் கூறிய அகரச் சாரியை தொல்காப்பியர் கூறிய அக்கு என்பதே; அது ஆறாம் வேற்றுமைப் பொருள் உடையது என்று வே. வேங்கடராசுலு ரெட்டியார் கூறியுள்ளார்.[210]

இக்குச் சாரியை

மாதங்களைக் குறிக்கும் இகர, ஐகார ஈற்றுப் பெயர்களுக்கு முன் 'இக்கு'ச் சாரியை வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். எந்த நூலிலும் 'இக்கு' அதன் முழு வடிவத்தோடு வரவில்லை.[211] இகர, ஐகார ஈற்றுப் பெயர்களின் முன்னர் 'இக்கு'வின் இகரம் இருப்பது இல்லை (தொல். 126, 127) என்று குறித்துள்ளார். ஆகவே தொல்காப்பியரின் கூற்றுப்படியே இதன் வடிவம் 'க்கு' என்பதே. இது வடிவில் நான்காம் வேற்றுமை உருபினை ஒத்தது.

'ஆடிக்குக் கொண்டான்' என்பதில் இகர ஈற்றின் முன்னர் இந்தச் சாரியை வருகிறது. சித்திரைக்குக் கொண்டான் என்பதிலும் ஐகார ஈற்றின் முன்னர் இந்தச் சாரியை வருகிறது. அகர இகரம் ஐகாரம் ஆகும் (தொல். 54) என்ற தொல்காப்பியரின் கருத்துப்படி ஐகாரத்தின் ஈற்று இகரத்தை 'க்கு' என்னும் சாரியையோடு சேர்த்துத் தவறாகப் பிரித்து இருக்கலாம் என்று மோ. இசுரயேல் கருத்துத் தெரிவித்துள்ளார்.[212]

இக்கு என்பது பிறழ்பிரித்தலால் விளைந்தது என்றால் தொல்காப்பியர் இகரம் கெடுவதற்கு விதி அமைத்திருக்க மாட்டார். ஆகவே அவர் இக்கு என்பதைக் கொண்டதற்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1. ஒவ்வொரு அடிநிலைக் கிளவியும் தனித்துவம் உடையதாக இருக்க வேண்டும்.

2. நான்காம் வேற்றுமை உருபாகக் கருதி மயங்கக் கூடாது என்ற இரண்டு காரணங்களால்தான் தொல்காப்பியர் கற்பித அடிநிலைக் கிளவி படைத்திருக்க வேண்டும்.[213]

நச்சினார்க்கினியர் இக்குச் சாரியை இடப்பொருளைத் தருவது என்று கூறியுள்ளார். இதனை மறுப்பதற்கில்லை. தொல்காப்பியர் 'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபு காலப் பொருள் உணர்த்தும் ஏழாம் வேற்றுமை உருபோடு மயங்கும் என்று விதி வகுத்துள்ளார் (தொல். சொல். 110). இங்கே அது போன்ற கு உருபு ஏழாம் வேற்றுமைக் காலப் பொருளொடு மயங்கியது என்று கூறலாம்.[214]

'அன்' சாரியை சுட்டுப்பெயர், மாற்றுப்பெயர், எண்ணுப்பெயர் ஆகியவைகளின் பின்னர் உருபு புணர்ச்சியிலும் பொருட் புணர்ச்சி

யிலும் வருகிறது. நான்காம் வேற்றுமை உருபோடு புணரும்போது 'அன்'னிலுள்ள னகரம் றகரமாகத் திரியும் (தொல். 123). இந்தச் சாரியை அஃறிணை ஒருமையில் மட்டுமே வருகிறது. ஆறாம் வேற்றுமைப் பொருளில் இந்தச் சாரியை வழங்குகிறது(அது + அன் + கோடு) என இசுரயேல் குறிப்பிட்டுள்ளார்.[216] சாரியை அன்னும் இடைநிலை இன்னும் ஒற்றுமை உடையன. ஒன்றன் திரிபே மற்றது என்று தி. முருகரத்தனம் கருதுவர்.[216]

சாரியை — இடைச்சொல் அன்று

'பொருள்நிலைக்குதந' (தொல்.735) என்பதைச் சாரியை எனவும், அது இடைச் சொல்லின் ஒருவகை என்றும் உரையாசிரியர்கள் கருதியுள்ளனர். ஆனால் தொல்காப்பியருக்கு இந்தக் கருத்து உடன்பாடாக இருக்க முடியாது. செ. வை. சண்முகம் இதனைப் பின் வரும் காரணங்களைக் காட்டி நிறுவியுள்ளார்.

1. எல்லாச் சாரியைகளும் வற்று, நம் (உரையாசிரியர்கள் காட்டுவன) போலப் பொருள் உடையன அல்ல. ...
2. வற்று, நம் ஆகிய இரண்டும் 'எல்லாம்' என்ற சொல்லை உயர்திணையா? அஃறிணையா? என்று வேறுபடுத்தி அறிய உதவுகிறது என்றால் அது கேட்போன் நோக்கில் மட்டுமே உண்மை. பேசுவோன் 'எல்லாம்' என்பதின் பொருளை முன்னரே தெரிந்து கொண்டுதான் அதற்கேற்பச் சாரியையைப் பயன்படுத்துவான். அப்படித் தெரியாமல் தவறான சாரியையைப் பயன்படுத்தினாலும் அந்தச் சொல் வரும் பிற சூழலால் அதனுடைய சரியான திணையைத் தெரிந்து கொள்வான். அப்போது (பேசுவோன் தவறாக உபயோகப் படுத்தியபோது) கேட்போன், பேசுவோனுடைய மொழி தவறுடையது என்றோ அல்லது அவன் மொழியைச் சரியாகக் கற்றுக் கொள்ளவில்லை என்றோ கருதுவானே தவிர, தவறான பொருள் கொள்ள மாட்டான்.
3. புணர்ச்சியில் சொல்லின் பொருளோ தொடரின் பொருளோ மாறாது. ...சரியான புணர்ச்சி மாற்றமே அந்தச் சொற்களின் பொருள் அடிப்படையிலோ அல்லது தொடர் நிலை உறவின் அடிப்படையிலோ ஏற்படுகிறது.

1. சாரியையைப் புணர்ச்சியில் வருவதாகக் கொண்டதும், 2. எழுத்ததிகாரத்தில் அதனைக் கூறியதும், 3. சில தொடர்களில் சாரியை உருபினுடைய பொருள் உடையது (ஆடிக்குக் கொண்டான்) போல அமைந்திருப்பதைக் கற்பித வடிவம் படைத்து உருபு இல்லை என்று கருதும்படி அமைத்திருப்பதும் சாரியைக்குப் பொருள் இல்லை என்று தொல்காப்பியர் கருதுகிறார் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன. ஆகவே 'புணரியல் நிலையிடைப் பொருணிலைக் குதந' (தொல். 735) என்பதற்கு உரையாசிரியர்கள் தரும் விளக்கம் பொருந்தாது; வேறு பொருள் காண முயல வேண்டும்.[217]

சாரியை — வெற்றுருபு

நன்னூலார் சாரியையைப் பதவியலில் கூறியுள்ளார். அது ஏற்கும் புணர்ச்சி மாற்றங்களை உருபு புணரியலில் விவரித்துள்ளார். பதவியல் சொல்லதிகாரத்தின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறது. தொன்னூல் விளக்கம் உரையாசிரியர்களின் கருத்தினை ஒட்டிச் சாரியையை பற்றிச் சொல்லியலில் விளக்கியது.

உருபு புணர்ச்சியில் வரும் சாரியை வருணனை மொழியியலின் வெற்றுருபு (empty morph) போன்றது என்று ஆர். இராதா கிருட்டிணன் முதன்முதலில் எடுத்துக்காட்டியுள்ளார்.[218] பின்னர் அது பற்றிய கோட்பாட்டினை குமாரசாமி ராஜா விளக்கியுள்ளார்.[219] அதனையொட்டிப் பின்னர் எழுதப் பட்ட விளக்கவியல் இலக்கணங்களிலும்,[220] இலக்கண ஆய்வு நூல்களிலும்[221] சாரியை பெயர்ச் சொல்லில் வரும் இலக்கணக் கூறாகக் கருதப்பட்டுச் சொல்லியலிலேயே வருணிக்கப்பட்டது.

சாரியை — வேற்றுமைப் பொருளுடையதா?

உருபு புணர்ச்சியில் வரும் சாரியை வெற்றுருபு என்றும் பொருட் புணர்ச்சியில் வரும் சாரியை வேற்றுமைப் பொருள் தருவது என்றும் கருதப்பட்டது.[222]

தொல்காப்பியர் சாரியை பொருளற்றது என்றே கருதி இருக்கிறார். பொருட்புணர்ச்சியில் வரும் சாரியைகளும் அவர் கருத்துப்படி பொருளில்லாதது என்றே கொள்ளப்பட வேண்டும் என்பதை செ. வை. சண்முகம் தெளிவாக விளக்கியுள்ளார்.

தமிழ்மொழி அமைப்பில்,

1. உருபு புணர்ச்சியில் சாரியை வரும். இங்கு எல்லா வேற்றுமை உருபோடும் சாரியை வரும் (உருபு புணர்ச்சியில் சாரியை பெற்றும் பெறாமலும் வரும் தன்மை ஒடு உருபுக்கு உண்டு)... சாரியை இயற்கை, உடைமையும் இன்மையும் ஒடு வயின் ஒக்கும் (தொல். 132) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்).
2. பொருட்புணர்ச்சியில் சாரியை இல்லாமல் உருபு மட்டும் வரும்.
3. சாரியையும் உருபும் இன்றி வேற்றுமைப் பொருள் தருதல்.
4. ஒன்றுக்கு மேற்பட்ட சாரியை உருபு புணர்ச்சியில் வருதல்.

ஆகிய தொடர்மொழி அமைப்புகள் காணப்படுகின்றன. சாரியை பொருள் உடையது என்று கொண்டால் தமிழ்மொழி அமைப்பில் பல நிலைகள் இருக்கின்றன என்பது புலப்படும். இவ்வாறு கொண்டால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொருட்புணர்ச்சியில் பொருள் உடையது; உருபு புணர்ச்சியில் பொருள் அற்றது என்ற நிலை ஏற்

படும். உருபுமயக்கம் என்றும் கூற வேண்டிய நிலை உருவாகிறது. இவ்வாறு இன்றி பொருட் புணர்ச்சியினும் வெற்றுருபு என்று கொண்டால் வேற்றுமைத் தொகையில் உருபு கெட்டு சூனிய மாற்று ருபாக (Zere morph) வருவது போல் இங்கும் அமைந்து எங்கும் ஒரே தன்மை உடையது ஆகும். இதனால் இலக்கணத்தில் எளிமை ஏற்படுவதாலும், குழப்பம் தவிர்க்கப் படுவதாலுமே தொல்காப்பியர் பொருட்புணர்ச்சியிலும் வெற்றுருபு எனக் கொண்டு சாரியை என்ற பொதுச் சொல்லைக் கையாண்டுள்ளார்.[223]

சாரியைக்கும் எழுத்துக்கும் வேறுபாட்டினைத்தொல்காப்பியரோ உரையாசிரியர்களோ எடுத்துரைக்கவில்லை. பின்னர் அது மொழியியலாரால் விளக்கப்பட்டது. சில சாரியைகள் வடிவத்தில் வேற்றுமை உருபினை ஒத்திருந்தாலும் அவற்றிடையே வேறுபாடு உண்டு என்பதை நச்சினார்க்கினியர் எடுத்துக்காட்டியுள்ளார். 'புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதந' (தொல். 735) என்று தொல்காப்பியர் இடையியலில் கூறியது சாரியை பொருளுடையது என்றும் இடைச்சொல்லில் ஒருவகை என்றும் உரையாசிரியர் களிடத்துக் கருத்துத் தோன்றக் காரணங்கள் ஆயின. அதனை யொட்டி, பின் வந்த இலக்கணங்களுள் சில, சாரியையைச் சொல்லின் உறுப்பாகக் கருதிச் சொல்லியலில் கூறின. பின்னர் வந்த வருணனை மொழியியல் நோக்கில் அதனை விளக்க முயன்றோரும் அதனைச் சொல்லியலிலேயே அடக்கிக் கூறினர். உருபு புணர்ச்சி யில் வெற்றுருபு எனவும் பொருட்புணர்ச்சியில் வேற்றுமைப் பொருளில் வழங்குகிறது எனவும் கூறினர். தொல்காப்பியருக்கு அது பொருட்புணர்ச்சியிலும் பொருள் இல்லாதது என்பதே கருத்து என்பதை விளக்கி அதனை நிறுவும் முறையில் தொல்காப்பியரின் சாரியை பற்றிய கோட்பாட்டினையும் சண்முகம் விளக்கியுள்ளார். இந்தக் கோட்பாட்டினை 'சாரியை பொதுக் கோட்பாடுகள்' என்னும் தலைப்பில் பின்வருமாறு கூறியுள்ளார்.

சாரியை பொதுக் கோட்பாடுகள்

1. சில பெயர்களில் பெயருக்கும் உருபுக்கும் இடையில் தனி எழுத்தோ தொடர் எழுத்துக்களோ வந்து அவற்றை நிலை மொழி, வருமொழி ஆகிய இரண்டின் மாற்று வடிவமாகக் கருத முடியாவிட்டால், அதைச் சாரியை எனக் கொள்வது.

2. உருபு புணர்ச்சியில் வரும் சாரியை வடிவம் பதப்புணர்ச்சி யில் உருபு இல்லாமல் உருபுப் பொருள் உடையது போலத் தோன்றினாலும் இலக்கண வருணனையை எளிமைப் படுத்துவதற்காக அந்த வடிவத்தையும் சாரியை (அதாவது வெற்றுருபு) என்றே கருதுவது. அது ஒரு வருணனை உத்தி என்று சொல்லலாம்.

3. பதப் புணர்ச்சியில் மட்டும் நிலைமொழிக்கும் வருமொழிக் கும் இடையே வரும் வடிவங்கள் பொருள் உடையது

போலத் தோன்றினாலும் அந்தப் பொருள் நிலைமொழிச் சொல்லால் பெறப்பட்டால் இடையே வரும் வடிவத்தைச் சாரியை என இரண்டு வழியில் மேற்கொள்ளுதல்

அ. இடையே வந்த வடிவம் வேற்றுமை உருபு வடிவத் தோடு ஒத்து வந்தால் இரண்டையும் வேறுபடுத்த கற் பித வடிவம் படைத்தல்

ஆ. இடையே உள்ள வடிவம் வேற்றுமை உருபாக அமையாவிட்டால் அதையே சாரியை என்று கூறி விடுதல்

4. புறநிலையில் நிலைமொழிக்கும் வருமொழிக்கும் இடையே மிகையான வடிவம் இல்லாவிட்டாலும், புணர்ச்சி மாற்றத் தில் விதிவிலக்கு காணப்பட்டால், இயல்பாக உள்ள விதிய்ன் பொதுமையைப் புதைநிலையில் மிகையான வடிவம் படைத்து அதையே சாரியையாகக் கருதுதல்.[224]

எழுத்தின் சாரியைகள்

தொல்காப்பியத்தில் மொழிகள் தொடரும்போது வரும் சாரியை மட்டும் அன்றி எழுத்துகளுக்கும் சாரியை கூறப்பட்டுள்ளது. அ,இ முதலிய எழுத்துக்களைச் சுட்டிக் குறிப்பிடுவதற்கு உடன் பயன் படுத்தப்படுவன கரம், காரம், கான் முதலிய சாரியைகள். குற்றெழுத்து களுக்கு இந்த மூன்று சாரியைகளும் உண்டு. நெட்டெழுத்துகளுக்கு காரம் சாரியை ஒன்றே; கரம், கான் ஆகிய சாரியைகள் இல்லை. ஆனால் ஐ, ஔ ஆகிய நெடில்களுக்கு மட்டும் கான் சாரியையும் வரும் (தொல். 134–137). இங்கே மொழி இலக்கணம் மட்டுமன்றிக் கருவி மொழி இலக்கணமும் தொல்காப்பியரால் உணர்த்தப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உடம்படுமெய்

நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்துக்கள் வரின் அவ்விடத்து விட்டிசைத்தலைத் தடுக்க யகரம், வகரம் ஆகிய மெய்கள் உடம்படு மெய்யாக வரும். இதனை

எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார் (தொல். 140)

என்ற நூற்பாவினால் தொல்காப்பியர் உணர்த்தியுள்ளார். 'வரையார்' என்றதனால் உடம்படு மெய் வருதல் கட்டாயம் இல்லை என உரை யாசிரியர்கள் குறித்துள்ளனர். ஈருயிர்கள் அடுத்தடுத்து உயிரிணை யாக (Vowel Cluster) வருதல் தொல்காப்பியர் காலத்துக்கு முந்திய நிலையாக இருத்தல் வேண்டும். மராஅடி, குளாஅம்பல் என்ற முறையில் அமைந்த தொடர்களும் தொல்காப்பியர் காலத்தில்

இருந்தன. இதனை

> அகர ஆகாரம் வரூஉங் காலை
> ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே (தொல். 311)

என்ற நூற்பாவினால் கூறியுள்ளார். இதனால் இத்தகைய உயிரிணைகள் அக்காலத்து மிகுதியாக இருக்கலாம் என்பர் கா. கோ. வேங்கடராமன்.[225]

உடம்படுமெய் பற்றிக் கூறும் நூற்பாவில் எந்த மெய்கள் உடம்படு மெய்யாக வரும் என்றோ எந்த உயிர்களுக்கு எந்த உடம்படு மெய் என்றோ தொல்காப்பியர் குறிப்பிட வில்லை. இளம்பூரணரே யகரமும் வகரமும் உடம்படு மெய்கள் என்றும், இகர, ஈகார, ஐகார ஈறுகளுக்கு யகரமும்' அல்லாதனவற்றுக்கு வகரமும் உடம்படு மெய்யாக வரும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனைப் பின்பற்றி நன்னூலார்

> இஈ ஐவழி யவ்வும்
> ஏனை உயிர்வழி வவ்வும்
> ஏமுன் இவ்விருமையும்
> உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும் (நன். 162)

என்று உரைத்துள்ளார்.

தொல்காப்பியர் வருமொழியில் வரும் உயிர் பற்றியே குறிப்பிட்டுள்ளார். நிலைமொழியை 'எல்லாமொழிக்கும்' என்றே கூறுகிறார். நிலைமொழியும் உயிரீறு என்று உரையாசிரியர்களே கொண்டுள்ளனர். எனினும் இது உயிரீறுக்கும், புள்ளியீறுக்கும் பொருந்துவதாக இளம்பூரணர் கொண்டுள்ளார்.

> உயிரீறும் புள்ளியீறும் உயிர்முதன்மொழியோடு
> புணரும்வழி நிகழ்வதோர் கருவிகூறுதல் நுதலிற்று
> மூவகைப்பட்ட மொழிக்கும் உயிர்முதன்மொழி வருமிடத்து
> உடம்படு மெய்யாகிய வடிவு கோடலை நீக்கார்
> (தொல். 140)

இத்தகைய பாடம் உடைய இளம்பூரணர் உரை தமக்குக் கிடைத்த இரண்டு ஏடுகளில் உள்ளதாக அடிகளாசிரியர் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் நச்சினார்க்கினியர் உரை சிறந்தது என்று எண்ணியோர் இளம்பூரணர் உரையில் காணப்பட்ட 'புள்ளியீறும்' என்பதைத் திருத்தி விட்டனர். அதற்கேற்ப உதாரணத்தில் கண்ட 'விண்வத்துக் கொட்கும்' என்பதையும் 'விளவத்துக் கொட்கும்' எனத்திருத்தி விட்டனர். ஆனால் மூவகைமொழி என்பதைத் திருத்த மறந்து விட்டனர். 'மூவகை மொழி' என்பது ஓரெழுத்தொருமொழி, ஈரெழுத்தொரு மொழி, தொடர்மொழி ஆகியன. இவை உயிரீறாகவும் ஒற்றீறாகவும் இருக்கும் என்பதை,

அறுநான்கு ஈற்றொடு நெறிநின்றியலும் எல்லா மொழிக்கும் மெய்யே உயிரென்று ஆயீரியல (தொல். 103) என்ற நூற்பாவில்

குறிப்பிட்டுள்ளார். ஆகவே இந்தப் பாடமே சிறந்தது. மெய்யீறும் உடம்படுமெய் பெறும் என்பதே தொல்காப்பியர் கருத்து

என்று அடிகளாசிரியர் கருதுவர்.[226]

தொகை மரபு

புணர்ச்சி விதிகளைக் கூறும்போது புணர்ச்சிக்கு அடிப் படையான செய்திகளைப் புணரியலில் தொகுத்துக் கூறிய தொல் காப்பியர் புணர்ச்சியில் சில பொதுக்கூறுகளுக்குப் பொருந்தக்கூடிய விதிகளைத் தொகுத்துத் 'தொகை மரபு' என்னும் இயலில் கூறி யுள்ளார். பின்னரே தனிச்சொற்களுக்குரிய புணர்ச்சியை ஈறு அடிப்படையில் பகுத்து உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய இயல்களில் விளக்கியுள்ளார். பொது விதிகளை முதலில் கூறிப் பின்னர் தனிச்சொல்லின் புணர்ச்சி மாற்றங்களை விவரிக்கும் முறையினை மொழியியலாரும் கடைப் பிடிக்கின்றனர்.[227]

'தொகை மர'பில் புணர்ச்சி விதிகள் எவ்வாறு தொகுத்துக் கூறப் பட்டுள்ளன என்று விளக்க உரையாசிரியர்கள் முயன்றுள்ளனர். ''ஞநமய'' எனத் தொடங்கும் (தொல். 145) நூற்பா உரையில் இளம்பூரணர்,

> இஃது இருபத்து நான்கு ஈற்றிற்கும் அல்வழியிலும் வேற்றுமை யிலும் அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரத்தான் முடிவதனை ஈண்டு ஒரு சூத்திரத்தான் தொகுத்து முடித்தது ஆயிற்று. மேலும் இவ்வாறே முடிகின்றவாறு அறிக (தொல். 145)

என்று கூறியுள்ளார்.

இந்த நூற்பாவில் வருமொழி முதல் எழுத்துக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. நிலைமொழியின் ஈறு பற்றிய குறிப்பு இல்லை. எல்லா ஈறுகளுக்கும் பொருந்துமாறே தொல்காப்பியரும் கூறியுள்ளார். இதனை இளம்பூரணர் மொழிக்கு ஈறாகும் இருபத்து நான்கு எழுத்துக்களுக்கும் உரிய விதிகள் தொகுக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார். இந்த நூற்பாவுக்குப் பின்னர் வரும் நூற்பாக் களிலும் இவ்வாறே தொல்காப்பியர் தொகுத்துக் கூறியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இளம்பூரணர் காட்டிய குறிப்பைக் கொண்டு நச்சினார்க்கினியர் 155, 156 ஆகிய நூற்பாக்களிலும் விதிகள் தொகுக்கப்பட்ட முறை யினைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

> ஆண்டு நாற்பத்தெட்டு சூத்திரங்களான் முடிவதனை
> ஈண்டுத் தொகுத்தார் (தொல். 155)
>
> இவை நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவனவற்றைத்
> தொகுத்தார் (தொல். 156)

இங்கே உரையாசிரியர்கள் இருவரும் எழுத்து அடிப்படையில் தொகை மரபில் விதிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளதை மட்டுமே எடுத்துக்காட்டியுள்ளனர்.

தொகை மரபில் வேறுசில அடிப்படைகளிலும் விதிகள் தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன என்று செ. வை. சண்முகம் எடுத்துக்காட்டியுள்ளார்.

> இலக்கணத்தோடு எந்தவிதத் தொடர்பும் இல்லாமல் சில எழுத்துக்களின் அடிப்படையில் அமைந்த புணர்ச்சி விதிகளும் காணப்படுகின்றன (உ-ம். தொல். 143, 144, 149 பிற) இவற்றுள் சில சொற்களின் அசை அடிப்படையில் அமைந் தவை. (குறிலடுத்த ஒற்றும், நெடில் ஓரெழுத்தொரு மொழியும் நூற்பா 160-இலும் பலவகைச் சொற்கள் நூற்பா 145 இலும்). சில விதிகள் சொற்களின் அகராதிக்கூறு அடிப்படையில் உணர்த்தப்பட்டுள்ளன (அளவுப்பெயர், நிறைப்பெயர், எண்ணுப்பெயர் நூற்பா 464-170) அல்லது இலக்கண வகை களின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன (உயர்திணைப் பெயர்கள் நூற்பா 153) முன்னிலைப் பெயர்கள் நூற்பா 151, 152 இன்னும் சில இதற்கும் மேலாக நுண்ணிய உறவைப் புலப் படுத்துவனவாக (இரண்டாம் வேற்றுமை தொடரியல் உறவுகள் நூற்பா 157) கருவிப்பொருள் உணர்த்தும் சொற்களாகவும் உள்ளன[228]

என்று கூறியுள்ளார். சொல்லிலக்கண முறையிலும் தொடரியல் உறவு முறையிலும் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன என்று இதனைச் சுருக்கமாகக் கூறலாம்.

தொல்காப்பியர் தொகை மரபு என்ற இயல் அமைத்திருந்தும் தொகுத்துக் கூறவேண்டிய எல்லா விதிகளையும் அந்த இயலில் முழுமையாகத் தொகுத்துக் கூறவில்லை. நன்னூலும் இலக்கண விளக்கமும் தொகுத்துக் கூறல் உத்தியை மிகுதியாகப் பயன்படுத்தி யுள்ளன.[229]

1. உடம்படு மெய் பற்றிய நூற்பா தொகை மரபில் இடம் பெற வேண்டும்.
2. 'ஏ' என்பது சொல்லதிகாரத்தில் சொல்லாகக் கருதப் படுகிறது. தொகை மரபில் (தொல். 165) சாரியை எனப் படுகிறது. இதனால் இந்த நூற்பா பழைய தொல் காப்பியருடையதாக இருக்காது.
3. அளவுப்பெயர் நிறைப்பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பற்றிக் கூறும் நூற்பா சிறப்பாக இருக்கிறது. ஆனால் இலக்கணத்தில் அதன் இடம் என்ன என்பது புரியவில்லை.
4. யாவர், யாது ஆகிய சொற்களின் புணர்ச்சி பற்றிக் கூறும் நூற்பா தொகை மரபு இயலின் புறனடை நூற்பாவின்

பின்னர் அமைந்துள்ளது. புறனடையில் பின்னர் அமைந்துள்ளதே இது பின்வந்தோரால் சேர்க்கப்பட்டது என்பதை உணர்த்தி நிற்கிறது.

தொகை மரபு பற்றிய இந்த நான்கு கருத்துகளையும் தெ. பொ. மீனாட்சி சுந்தரன் கூறியுள்ளார்.[230]

உருபியல்

இந்த இயலில் சாரியைகள் வரும் இடங்களும், சில பெயர்கள் வேற்றுமை உருபு ஏற்கும்போது அடையும் மாற்றங்களும் கூறப்படுகின்றன. இவ்வியலில் கூறப்படும் செய்திகளில் மிகுந்த கருத்து வேறுபாடு உடையன இல்லை.

உயிர் மயங்கியல்

உயிர் மயங்கியலில் உயிரீறுகள் பெறும் புணர்ச்சி மாற்றங்கள் அகர வரிசையில் கூறப்படுகின்றன. மாட்டேற்று முறையில் இவை தரப்படுகின்றன.

முதலில் அகர இறுதி வேற்றுமையிலும் அல்வழியிலும், வருமொழியுடன் புணரும்போது நிகழும் புணர்ச்சி மாற்றங்களை 18 நூற்பாக்களில் கூறியுள்ளார். பின்னர் ஆ, ஈ, உ, ஊ, ஏ, ஓ ஆகியன வற்றை மாட்டேற்று முறையில் பின்வருமாறு கூறுகிறார்.

அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை அல்வழி கசதப தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றுஇடை மிகுமே (தொல். 203)

ஆகார இறுதி அகர இயற்றே (தொல். 221)

ஈகார இறுதி ஆகார இயற்றே (தொல். 249)

உகர இறுதி அகர இயற்றே (தொல். 254)

ஊகார இறுதி ஆகார இயற்றே (தொல். 264)

ஏகார இறுதி ஊகார இயற்றே (தொல். 274)

ஓகார இறுதி ஏகார இயற்றே (தொல். 290)

இவற்றுள் எகர ஒகரங்கள் பெயர்ச்சொல்லில் ஈற்றில் வராதன; தேற்றப் பொருளில் எகரம் இடைச்சொல்லாக வரும்; சிறப்புப் பொருளில் ஒகரம் இடைச்சொல்லாக வரும். ஆதலின் இவற்றுக்குச் சிறப்பு விதி கூறப்படுகின்றது. இகரம் வேறுவிதமான புணர்ச்சி விதிகளைக் கொண்டுள்ளது. அதனால் இதனுள் மாட்டெறிந்து கூறப்படவில்லை.

இதே போன்று மரப்பெயர் பெறும் புணர்ச்சி மாற்றங்களைக் கூறுவதற்கும் மாட்டேற்று முறையினைப் பின்பற்றியுள்ளார். அவை வருமாறு

உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே (தொல். 243)

புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை (தொல். 244)

என இகர ஈற்று மரப்பெயர்கள் பெறும் புணர்ச்சி மாற்றங்களை முதலில் எடுத்துச் சொல்லி விட்டு,

ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே (தொல். 262)

சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே (தொல். 278)

விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்
அவைமுப் பெயரும் சேமர இயல (தொல். 282)

என்று ஒன்றோடு ஒன்று மாட்டெறிந்து கூறியுள்ளார். ஆனால் இவைகளைத் தொகுத்து ஒரே நூற்பாவில் கூறலாமே? ஏன் அவ்வாறு செய்யவில்லை என்ற கேள்வியை எழுப்பிப் பதில் சொல்லியுள்ளார் செ. வை. சண்முகம். அது வருமாறு:

> இப்படித் தனித்தனியே கூறியவிடத்து மரப்பெயர்களிடையே புணர்ச்சியில் ஒற்றுமை இருக்கிறதா?

என்பதை வலியுறுத்துவதற்கு மகர மெல்லெழுத்தில் முடியும் மரப்பெயரிலும் (இல்லம்) மெல்லெழுத்து மிகுந்து வரும் என்று,

இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே (தொல். 313)

எனச் சூத்திரித்துள்ளார். இல்லம் + கோடு→இல்லங்கோடு என்று விளக்கலாம். ஆனால் மரப்பெயர்க்குப் புணர்ச்சியில் பொதுமை வேண்டும் என எண்ணி மாட்டேற்றைப் பயன்படுத்தியுள்ளார்.[231]

பருவப் பெயர்களுக்கும் தொல்காப்பியர் மாட்டேற்று முறையினைப் பயன்படுத்திப் புணர்ச்சி கூறியுள்ளார்.

பனியென வரூஉம் கால வேற்றுமைக்கு
அத்தும் இன்னும் சாரியை ஆகும் (தொல். 241)

வளியென வரூஉம் பூதக் கிளவிக்கு
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப (தொல். 242)

மழையென் கிளவி வளியியல் நிலையும் (தொல். 287)

வெயிலென் கிளவி மழையியல் நிலையும் (தொல். 377)

இருளென் கிளவி வெயிலியல் நிலையும் (தொல். 402)

இந்த நூற்பாக்களை எடுத்துக்காட்டி தொல்காப்பியர் முரண் அழகு பட நூற்பாக்களை அமைத்துள்ளதை சோ. ந. கந்தசாமி பாராட்டியுள்ளார்.

> இருள் வெயிலாகும், வெயில் மழை போலாகும், மழை வளி போலாகும்; என ஆகாததை ஆகுமாறு அமைத்து முரண் அழகு (Oxymoron) விளங்க மொழிந்த திறம் வியக்கற் பாலது. இதனாற்றான் இலக்கணம் சுவை நலம் பயப்பதாய் அமைகிறது[232]

என்று மாட்டேறுகளில் உள்ள நயத்தைச் சிறப்பித்துக் கூறி அந்த மாட்டேற்று முறையின் பயனைப் பின்வருமாறு எடுத்துக்காட்டி யுள்ளார்.

> இலக்கணத்தைச் சுமையாகக் கூறாமல் சுவையாகச் சொல்லு வதற்குத் தொல்காப்பியர் கையாண்ட உத்திகள் பல. அவற்றுள் ஒன்றுதான் மாட்டேறு எனப்படும் நூற்பா அமைப்பு.[233]

மாட்டேற்று முறையின் பயன் சுவைபயத்தல் என்று சோ. ந. கந்தசாமி குறிப்பிட்டுள்ளார். ஆனால் இது வேறு முறையிலும் கருதப்படுகிறது. வடமொழி இலக்கண ஆசிரியர்கள் சுருக்கிக் கூறு தலுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பர். அரை மாத்திரை அளவு சுருக்கிக் கூற முடிந்தால் கூட ஆண்மகவு ஈன்றெடுத்தது போன்று மகிழ்வர். தொல்காப்பியர் உயிர் மயங்கியலிலும் புள்ளி மயங்கிய லிலும் அகர வரிசைப்படி புணர்ச்சி மாற்றத்தை விளக்க முற்பட்ட தால் திரும்பக் கூறல் என்ற குறை ஏற்பட்டது என்று ந. குமாரசாமி ராஜா எடுத்துக்காட்டியுள்ளார்[234] மாட்டேற்று முறையில் நூற்பாக் களை அமைத்து விதி கூறியது இலக்கியச்சுவை கருதியல்ல; நினைவில் வைத்துக் கொள்வதற்கு எளிமையாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினாலேயே என்று செ. வை. சண்முகம் குறிப்பர்.[235]

புள்ளி மயங்கியல்

மொழி மரபில் ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள ஆகிய மெய்கள் மொழிக்கு ஈறாகும் (தொல். 79) என்பது கூறப்படுகின்றது. புள்ளி மயங்கியலில் ஞ, ந, ண, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்ற வரிசையில் மெய்யீறுகளுக்குப் புணர்ச்சி விதிகள் கூறப்பட்டுள்ளன. இவ்வியலில் கூறப்படுவனவற்றுள் மிகுந்த கருத்து வேறுபாடுள்ள செய்திகள் இல்லை.

குற்றியலுகரப் புணரியல்

உகரம் குறுகும் இடங்களும் குற்றியலுகர ஈறு பெறும் புணர்ச்சி மாற்றங்களும் குற்றியலுகரப் புணரியலில் விளக்கப் பெறுகின்றன. அவற்றுள் எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியில் தொல்காப்பியர் கூறிய சில புணர்ச்சி விதிகள் ஆராய்ச்சிக்கு உள்ளாயின. அவை பற்றிய கருத்துகளை இங்கே காணலாம்.

எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி

தொல்காப்பியர் எண்ணுப்பெயர்களின் புணர்ச்சி மாற்றங் களைக் குற்றியலுகரப் புணரியலில் விளக்கியுள்ளார். அவ்விதிகளுள் ஒன்பது என்ற நிலைமொழியும் பஃது என்ற வருமொழியும் புணர்ந்து தொண்ணூறு என்று ஆகும் என்பதைப் பின்வரும் முறையில் விளக்கியுள்ளார்.

> ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒன்றும்
> முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்

பஃதென் கிளவி ஆய்த பகரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகார மாகும் (தொல். 445)

ஒன் என்னும் நிலைமொழியின் மாற்றம்

ஒகரம் தகரமெய் பெறும் — தொன்
னகரம் ணகர ஒற்றாக இரட்டிக்கும் — தொண்ண்

பஃது என்னும் வருமொழியின் மாற்றம்

ஆய்தம் கெடும்	—	பது
பகரம் கெடும்	—	து
ஊகாரம் வரும்	—	ஊது
தகர மெய் றகரமெய்யாக மாறும்	—	ஊறு

தொண்ண் + ஊறு என்பது ணகரம் இரட்டுவதால் தொண்ணூறு என்று ஆகும்.

ஒன்பது + நூறு என்பது தொள்ளாயிரம் என்று ஆகும் என்பதைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகும் இயற்கைத் தென்ப
ஆயிடை வருதல் இகார ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகார மொற்றும் (தொல். 463)

ஒன் என்ற நிலைமொழி

ஒகரம் தகர மெய் பெறும்	—	தொன்
னகர ஒற்று ளகர ஒற்றாக இரட்டிக்கும்	—	தொள்ள்

நூறு என்னும் வருமொழி

நகார மெய் கெடும்	—	ஊறு
ஊகாரம் ஆகாரம் ஆகும்	—	ஆறு
இகர ரகாரம் வரும்	—	ஆஇரறு
ஈற்று உகரமும் மெய்யும் கெடும்	—	ஆயிர
மகரம் வரும்	—	ஆயிரம்

தொள் + ஆயிரம் = தொள்ளாயிரம் என வரும் என்று தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய இவ்விரண்டும் பெறும் புணர்ச்சி மாற்றங்களைத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்ற சொற்கள், வடிவில் அவற்றோடொத்த எண்களினின்றும் வேறுபாடுடையன.

ஒன்பது

ஒன்று முதல் எட்டுவரை உள்ள சொற்களைப் போலத் தனிச் சொல்லாக இல்லாமல் ஒன்பது பிரிக்கக் கூடிய சொல்லாக அமைந்துள்ளது (ஒன்+பது). மேலும் அது பத்தோடு தொடர்பு படுத்திப் பிரிக்கக் கூடிய வகையில் அமைந்துள்ளது. பத்தில் ஒன்று குறைந்தது என்னும் பொருளில் இச்சொல் வழக்கு தோன்றி யிருக்கலாம்.

தொண்ணூறு

பத்துமுதல் எண்பது வரையுள்ள பத்தின் மடங்கான (10, 20, 30, 40, 50, 60, 70, 80) எண்கள் ஒன்று இரண்டு என்ற அடைகளைப் பெற்று வருவதுபோல் '90' ஒன்பது என்றோ தொன்பது என்றோ வராமல் தொண்ணூறு என்று அமைந்துள்ளது. இதுவும் நூறோடு தொடர்புபடுத்திப் பார்க்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

தொள்ளாயிரம்

நூறுமுதல் எண்ணூறு வரையுள்ள நூறின் மடங்கான எண்களின் பெயர்கள் போல் 900 என்பது ஒன்பது நூறு என்றோ அல்லது தொண்ணூறு என்றோ இல்லாமல் தொள்ளாயிரம் என்று அமைந்தது. இதுவும் 900ஐ ஆயிரத்தோடு தொடர்புபடுத்தி நோக்கும் வகையிலேயே அமைந்துள்ளது.

இதனால் 90, 900 இவற்றுக்குப் புணர்ச்சி விதி மேற்கூறிய முறையில் கூறப்பட்டது. இந்த விதிகள் புணர்ச்சி விதிகளுக்கு உட்படாது போனதாலும் இந்தச் சொற்களின் மேற்கூறப்பட்ட தன்மைகளாலும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. இவை குறித்து து. அ. கோபிநாத ராவ் கூறும் கருத்துக்களைத் தொகுத்துப் பார்த்தால் பின்வரும் கருத்துக்களைப் பெறலாம்.

1. அவர் காட்டிய அக்ஷரங்கள் ஒருங்காகப் பேதிக்கும் வழக்கம் தமிழிலும், மற்றைப் பாஷையிலுமில்லை. மேற் காட்டிய சூத்திரங்கள் பாஷாசாஸ்திரத்தின் (Philology) கொள்கைகளுக்கு முற்று முரணாயிருப்பது பற்றித் தொல் காப்பியர் காலத்திலேயே ஒன்பது முதலிய வெண்களைக் குறித்து ஒன்றும் தெரியாமற் போய்விட்டது என்பது வெட்டென விளங்குகிறது.

2. (கன்னட மொழியிலும் இதுபோன்ற சிக்கல் உள்ளது என்று எடுத்துக்காட்டி) இந்தக் கஷ்டம் தெலுங்கில் இல்லை. ஏனென்றால் இப்பாஷையில் முதற்பதத்தை ஆரம்பத்தி லேயே தொம்மிதி என்று வைத்துக் கொண்டு விட்ட படியால், அதனின்றுண்டாகும் தொம்மிதி பதி, தொம்மிதி நூறு, தொம்பந்நூறு என்பன தானே பெறப்படும். இவ்வாறு

வார்த்தைகளின் இயற்கையை ஒட்டித் தொல் என்பது தமிழ் ஒன்பது என்னும் பதத்தின் முதலிலும் இருந்திருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம். இந்த ரூபம் இன்னமும் தெலுங்கில் தொம்மிதி என்பதில் காணப்படுகிறது. இப் பழைய ரூபம் தமிழிலும் கன்னடத்திலும் தொல்காப்பியர் காலத்திலேயே மறைந்துவிட்டது போலும். இந்தப் பழக்கம் திரிந்து விட்டதினால் தொல்காப்பிய முதலிய திராவிட வியாகரணங்களில் மாறுபாடு ஏற்பட்டன என்பது விளங்குகிறது.

3. இவ்வெண்ணின் (ஒன்பது) முதலிலிருந்த தகரம் மறைந்த தற்குக் காரணம் அடியிற் கூறப்போவதாயிருக்கலாமோ வென்று சந்தேகிக்கின்றேன். அதாவது எண்டு, எட்டு எண்களுக்குப் பின் தொம்பத்து, தொன்பது என்று வருவதில் முதல் எண்களின் இறுதியில் இருக்கும் வல்லெழுத்தாகிய 'டு' உச்சரித்தவுடனே டகரத்தினும் மெல்லிய வல்லெழுத் தாகிய தகரம் உச்சரித்தால் கஷ்டப்படும். எண்டு தொம்பத்து என்னும் இவ்விரண்டு வார்த்தைகளை அடுத் தடுத்து ஐந்தாறு தடவை உச்சரித்தால் தொம்பத்து தொன்பது என்பனவற்றின் முதலிலிருக்கும் தகரத்தை உச்சரித்ததற்குக் கஷ்டப்படும் என்பது தோன்றும். ஒருக்கால் இந்தக் காரணம் பற்றித் தகரம் கெட்டதோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

4. தொல் தமிழில் போலவே பிற திராவிட மொழிகளிலும் பழைமை, பழைமையான பத்து, பழைமையான ஆயிரம், பத்துக்கு முற்பட்டது, நூற்றுக்கு முற்பட்டது, ஆயிரத்துக்கு முற்பட்டது என்ற வழக்குகள் உள்ளன.

5. இன்னும் தொள்நூறு, தொள் ஆயிரம் என்று ஒருவாறு கொள்வதும் உண்டு. அப்பொழுது தொளைக்கப் பெற்ற (ஊனமான, குறைபட்ட) நூறு, ஆயிரம் என்று அர்த்தம் கூறுகிறார்கள். இப்படியாயின் தொள்பத்து, தொன்பத்து என்றாகித் தொன்பது ஒன்பது, ஒன்பது என்று திரிந்திருக்க வேண்டும்[236]

கோபிநாத ராவின் கருத்துகள் தொல்காப்பியர் கூறிய புணர்ச்சி விதிகளில் உள்ள முரண்பாட்டினை எடுத்துக்காட்டியுள்ளன. கன்னடத்திலும் இந்தச் சிக்கல் உள்ளதை எடுத்துக்கூறித் தெலுங்கில் இதன் தொன்மை வடிவம் இருப்பதால் தமிழிலும் கன்னடத்திலும் இவ்வடிவம் மறைந்தது என்று கொண்டு தொல் என்ற வடிவம் இவற்றோடு சேர்ந்திருக்க வேண்டும் என்று அவர் ஊகித்துள்ளார். தொல் என்பதன் பொருளாகப் பழைமை அல்லது முன்னையது என்று அவர் பொருள் கொண்டுள்ளார். இதற்கு மாறாக உள்ள கருத்தினையும் எடுத்துக்காட்டியுள்ளார். தொள்

என்பதை நிலைமொழியாகக் கொண்டு தொளையுடைய, ஊனமுடைய என்று பொருள் கூறுவோரும் உளர் என்கிறார். அவர் சுட்டும் அக்கருத்தினையுடையோர் (அக்காலத்து) யார் என்பது அறிய முடியவில்லை.

சி. சோமசுந்தர முதலியார் ஒன்பது பற்றித் தொல்காப்பியத்தில் வரும் நூற்பாக்கள் இடைச்செருகல் என்றும் தமிழர்கள் தொல் காப்பியர் காலத்து எட்டுவரையே எண்ணக் கற்றிருந்தனர் என்றும் கருதுவர்.[287] எட்டொன்று, எட்டிரண்டு என்று எண்ணும் வழக்கம் இல்லாமையால் தமிழர் எட்டுவரையே எண்ணக் கற்றிருந்தனர் என்பது ஏற்புடையதன்று; ஒன்று முதல் ஒன்பது வரை கூறப் போவதாகத் தொல்காப்பியர் முன்மொழிந்து கோடலால் ஒன்பது தொடர்பாக வரும் நூற்பாக்கள் இடைச்செருகல் அல்ல என்று கூறி அவற்றின் காரணத்தை மு. கோவிந்தராய நாட்டார் தொண்டு, தொண்ணூறு, தொள்ளாயிரம் என்பன காரணம் விளக்கும் தொடர் மொழிகளாயின் அவற்றின் வேர் தொள் என்பதே என்று விளக்கு கிறார். இது து. அ. கோபிநாத ராவ் கூறும் ஒரு சாராரின் கூற்றினைப் பின்பற்றியதாகும். மேலும் இவர் இந்தச் சொற்களின் நிலை மொழி தொல் என்பதைவிட தொள் என்பதே பொருத்தம் என்றும் கூறுவர்.[288] ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம் பற்றி தொல் காப்பியரும் நன்னூலாரும் கூறிய புணர்ச்சி விதிகள் பொருந்தாதன என்று கூறி தொள் + நூறு, தொள் + ஆயிரம் என்பனவே சரி என்று தி. சங்குப் புலவரும் கூறியுள்ளார்.[289]

தெ. பொ. மீனாட்சிசுந்தரன் எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி கூறும் சூத்திரங்கள் யாவும் இடைச்செருகல்கள் எனக் கருதுவர். ஈறு கெடுதல், சாரியை தோன்றுதல், வல்லெழுத்து இரட்டுதல், இன மெல்லெழுத்து தோன்றுதல், உடம்படு மெய் தோன்றுதல், இடையில் ஓரெழுத்து தொக்கு வருவது போன்ற கெடுதல், பிற செய்யுள் விவகாரங்கள் இவையே தொல்காப்பியர் கூறும் புணர்ச்சி விகாரங்கள் ஆகும். இந்த முறையில் விளக்க முடியாத வேறு பாடுகள் வருமானால் அவற்றை மலாடு, சோணாடு போன்று மரூஉ வழக்காகக் கொள்வதே தொல்காப்பியர் கருத்து; இந்த நோக்கோடு பார்த்தால் எண்ணுப்பெயர் புணர்ச்சி கூறும் நூற்பாக்கள் அவர் நூலில் இடம் பெறல் இயலாது என்று விளக்கியுள்ளார்.

தொடர்ந்து எண்ணுப்பெயர்கள் பற்றிக் கூறும் நூற்பாக்களின் விதிகள் தொல்காப்பியர் கருதும் புணர்ச்சி விதிமுறைகளுக்குப் பொருந்தாவிட்டாலும் அவற்றிடையே வேறு நோக்கம் காணப் படுகிறது என்று தெ. பொ. மீனாட்சி சுந்தரன் விளக்கியுள்ளார்.

> அடிப்படை இலக்கணங்களை விளக்கும் வகையில் அவை அமையவில்லை. அவ்வாறு விளக்குவதும் அவற்றின் நோக்கம் அன்று. புதிதாகத் தமிழ் கற்பாரை நோக்கியே அவை எழுந்தன வாகத் தோன்றுகின்றன. ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்

> களின் தமிழ்ப் பெயர்களை அறிந்த வேற்றுமொழியாளனுக்கு அவன் அறிந்த பெயர்களைக் கொண்டே மேல் வரும் எண்ணுப் பெயர்களின் வடிவங்களை அமைக்க வழிகூறும் சூத்திரங் களாகும் அவைகள். பத்து என்பதையும் ஒன்று என்பதையும் அறிந்தவன் அந்த இரண்டும் கொண்டே பதினொன்று என்பதை அமைக்க வழிகூறுகின்றன அச்சூத்திரங்கள். அவ்வாறே பிறவும் விளக்கப் பெறும். ஒன்று முதலானவற்றை யும் பத்தையும் அறிந்தபின் இருபது முப்பது முதலியன அமைதலையும் அவை விளக்குகின்றன. எண்ணுப் பெயர், நிறை, அளவு முதலிய பெயர்களின் முன் அடையாக வரும் போது எவ்வாறு அமையும் என்பதையும் விளக்குகின்றன. இந்தக் கண்கொண்டு பார்ப்போமானால் ஒன்பது + பத்து = தொண்ணூறு, ஒன்பது + நூறு = தொள்ளாயிரம் என்று அமைவதனைக் கூறுவது பொருத்தமாகவே தோன்றும். அடிப் படை இலக்கணத்தின்படி அமைந்த இலக்கணங்கள் என்று கொள்ளும்போதே அவை பொருளற்றனவாகத் தோன்று கின்றன.[240]

தொல்காப்பியர் தொண்ணூறு, தொள்ளாயிரம் ஆகிய வடிவங்களை வருணித்த முறை அவரது அடிநிலைக் கிளவி பற்றிய கோட் பாட்டினைக் குறிப்பதாகச் செ. வை. சண்முகம் குறித்துள்ளார். இந்த வடிவங்களைத் தொள் என்ற நிலைமொழியின் அடிநிலைக் கிளவியாகக் கொண்டு எளிதாகக் கூறாமல் ஒன்பது என்ற வடிவத்திலிருந்து மிகவும் சிரமப்பட்டு விளக்கியுள்ளார்.

> அடிநிலைக்கிளவி என்பது அன்றைய மக்கள் சுயேச்சையாகப் பயன்படுத்தும் வடிவத்திலிருந்து அதன் பிற மாற்று வடிவங் களை விளக்க வேண்டும் என்ற கருத்தில்தான் தொல்காப்பியர் ஒன்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டிருக்க வேண்டும். இது மொழியின் அமைப்பை வருணிக்கும்போது வரலாற்று உணர்வுக்கு இடம் கொடுக்காமல் 'பொதுமக்கள் பெரும் பான்மையாக வழங்கும் வடிவத்தையே அடிநிலைக் கிளவி யாகக் கொள்ள வேண்டும்; மக்களுக்கு இலக்கணம் புதிராக இருக்கக் கூடாது' என்று தொல்காப்பியர் கருதியிருக்க வேண்டும் என்பதையே புலப்படுத்துகிறது[241]

என்று கூறித் தமது கருத்துக்குச் சான்றாகத் தொண்டு ஒன்பது பழந் தமிழ் வழக்கில் அரிதாக இருந்ததால் தொல்காப்பியர் ஒன்பது என்பதை அடிநிலைக் கிளவியாகக் கொண்டார் என்று ந. குமாரசாமி ராஜா கூறியுள்ளதையும்[242] மேற்கோள் காட்டியுள்ளார்.

புணரியலைப் பற்றிய ஆய்வில் புணர்ச்சி பற்றிய தெளிவான விளக்கங்கள் கிடைத்துள்ளன. புணர்ச்சி, ஒலியியலோடு மட்டுமன்றி உருபனியல், தொடரியல், மொழிப்பொருளியல் செய்திகளோடும் தொடர்புடையது என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சாரியை

என்பது இடைச்சொல் என்றும், அது உருபுப் பொருள் உடையது என்றும் உரையாசிரியர்கள் கருதினர். வருணனை மொழியியலில் சாரியை வெற்றுருபு என்றும் அது வேற்றுமை உருபுப்பொருள் உடையது என்றும் கருதப்பட்டது. பின்னர் சாரியை பற்றிய தொல்காப்பியரின் கோட்பாடு விளக்கப்பட்டு அவர் உருபினின்றும் சாரியையினை வேறுபடுத்தி அறியும் வண்ணம் கற்பித அடிநிலைக் கிளவிகளைப் படைத்துக் கொண்டார் என்று புலப்படுத்தப் பட்டுள்ளது. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியில் ஒன்பது, தொண்ணூறு தொள்ளாயிரம், இவற்றுக்குத் தொல்காப்பியர் கூறிய புணர்ச்சி விதிகள் பொதுவான புணர்ச்சி விதிகளுடன் முரண்பட்டுத் தோன்று வதை ஆராய்ந்தோர், எண்ணுப்பெயர்ப்புணர்ச்சி பற்றிய நூற் பாக்கள் இடைச்செருகல் எனவும், புதிதாகத் தமிழ் கற்பாரை நோக்கிக் கூறியன எனவும் கருதினர். மக்களிடத்து மிகுதியும் பயின்று வழங்கும் வடிவங்களை அடிநிலைக் கிளவியாகக் கொண்டு புணர்ச்சி விதி கூறியதால், அவை பொதுவான புணர்ச்சி விதிகளுக்கு முரண்பட்டுத் தோன்றின என்று விளக்கம் காணப்பட்டுள்ளது.

தொகுப்புரை

எழுத்ததிகாரப் பொருள் பற்றி இன்றுவரை நிகழ்ந்துள்ள ஆய்வுகளும், விளக்கப் பெற்ற கருத்துக்களும் இவ்வியலில் ஆராயப் பட்டுள்ளன. அதன் பலனாகப் பெறப்படும் முடிவுகள் வருமாறு.

1. நூன்மரபு இயலின் பெயருக்கும் அதனுள் கூறப்படும் செய்திகளுக்கும் பொருத்தம் இன்மையால் அதற்குக் காரணம் கூற முனைந்தோர் அனைவரது விளக்கங்களும் வலிந்து கூறப்படுவன வாகவும் ஊகங்களாகவும் உள்ளன. இவை அவ்வியலில் கூறப்படும் செய்திகளுக்கும் இயலின் பெயருக்கும் பொருத்தம் இல்லை என்பதையே உணர்த்துகின்றன.

2. சார்ந்துவரல் மரபினவாகத் தொல்காப்பியர் மூன்றினையே கொண்டுள்ளார். பிற்கால இலக்கண நூல்களில் கூறப்படும் சார்பெழுத்துக்களைத் தொல்காப்பியர் ஏன் சார்பெழுத்தாகக் கொள்ளவில்லை என்பதும், தொல்காப்பியரின் எழுத்து பற்றிய பாகுபாடும் ஆராய்ச்சியால் தெளிவு பெற்றுள்ளன என்பது நிறுவப் பட்டுள்ளது.

3. இரு மெய்களின் மயக்கத்தினை நூன்மரபிலும் ஈரொற்றுட னிலையை மொழிமரபிலும் கூறிய தன்மை கொண்டு தொல் காப்பியரின் மெய்ம்மயக்கம் பற்றிய கொள்கையும், மெய்ம்மயக்கம் தனிமொழிக்கே உரியது என்று நச்சினார்க்கினியர் உரைத்த கருத்து பின்வந்த பலராலும் கண்டனத்துக்கு உள்ளான போதிலும் அண்மைக்கால மொழியியல் ஆய்வினால் அவரது கருத்தின் பொருத்தம் புலப்படுத்தப்பட்டுள்ளமையும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன.

4. மொழியை எழுத்துவகையால் பாகுபாடு செய்யும் தொல்காப்பியரின் கருத்து இக்கால மொழியியல் அறிஞரின் கருத்தோடு ஒத்துள்ளதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் அசை (syllable) பற்றிய கருத்து இலைமறை காயாக உள்ளது என்பதும், அதனை எடுத்துக்காட்ட முனைந்த நச்சினார்க்கினியரின் முயற்சியும், இக்கால ஆய்வின் பயனால் கண்டறியப்பட்டுள்ளன. மொழியை மூவகையாகப் பாகுபடுத்தியமைக்கு நச்சினார்க்கினியர் கூறும் காரணம் ஏற்கத் தக்கதே என்பதும் விளக்கப்பட்டுள்ளது.

5. மொழிமுதல், மொழி இறுதி எழுத்துக்களில் தொல்காப்பியர் கூறியவற்றுக்கு மாறாகச் சங்க இலக்கிய வழக்குகள் பல காணப்படுவதால் பாட வேறுபாடு காணும் முயற்சி எழுந்தது என்றும் இம் முயற்சியால் விளைந்த விளக்கங்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

6. எழுத்துக்களின் பொதுப் பிறப்பு பற்றியும், உயிரொலி, மெய்யொலிகள் பற்றியும் தொல்காப்பியர் கூறிய கருத்துக்கள் இக்கால ஒலியியல் அறிஞர் பலவித நுட்பமான அறிவியல் கருவிகளின் துணைகொண்டு ஆராய்ந்து கூறும் கருத்துக்களோடு பொருந்துவனவாக உள்ளமையை நோக்கித் தொல்காப்பியரின் ஒலியியல் அறிவு பெரிதும் பாராட்டப் பெறுகிறது. தொல்காப்பியப் பிறப்பியல் நூற்பாக்கள் பாணினிய சிக்சாவின் மொழி பெயர்ப்பு அல்ல என்பதும் இரண்டுக்கும் வேறுபாடு பெரிது என்பதும் நிறுவப்பட்டுள்ளன. இவை பிறப்பியல் பற்றி நிகழ்ந்த ஆய்வின் பயன்களாகக் கொள்ளத்தக்கவை ஆகும்.

7. புணரியல் செய்திகள் பற்றிய ஆய்வில் தொல்காப்பியர் புணரியலை உருபனியல், தொடரியல், மொழிப் பொருளியல் ஆகியவற்றோடு தொடர்பு உடையதாகக் கருதியுள்ளதை, சாரியை பற்றிய தொல்காப்பியரின் கோட்பாடு ஆகியவை விளக்கம் பெற்றுள்ளன. மொழியியல் நோக்கில் ஆராய்ந்தோரும் சாரியை உருபுப்பொருள் உடையது என்று கருதினர். பின்னர் சாரியை இடைச்சொல் அன்று என்பதும், பொருளுடையது அன்று என்பதும் கண்டறியப்பட்டுள்ளன.

8. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியில் காணப்பட்ட முரண்பாடுகளைக் கொண்டு அவை பற்றிக் கூறும் நூற்பாக்கள் இடைச்செருகல் என்றும் புதிதாகத் தமிழ் கற்பாரை நோக்கிக் கூறியன என்றும் கருதப்பட்டன. பின் அம்முரண்பாட்டுக்குச் சரியான காரணம் தொல்காப்பியர் தேர்ந்தெடுத்த அடிநிலைக் கிளவி வடிவமே என்பதும் விளக்கப் பெற்றுள்ளது.

குறிப்புகள்

1. இந்த இயலில் 'மொழி' என்பது சொல் (word) என்ற பொருளிலும், மொழி (language) என்ற பொருளிலும் பயன் படுத்தப்படுகிறது.

2. இம்முவகையான பாகுபாட்டினை எழுத்திலக்கணக் கோட்பாடுகள் என்னும் நூலில் செ. வை. சண்முகம் அமைத்துள்ளார். எழுத்திலக்கணக் கோட்பாடு (அண்ணாமலை நகர், 1980), ப-ம். 29-30. இம்முறையிலன்றி, பிறப்பியலை எழுத்தியல், புணரியல் என்று இரு பகுதிகளாகக் கொள்வதும் உண்டு. காண்க ச. அகத்தியலிங்கம் & க. முருகையன், தொல்காப்பிய மொழியியல். (அண்ணாமலை நகர், 1972).

3. அ. கிருட்டிணமூர்த்தி, "எழுத்து — இதன் பெயர்க் காரணம்". செந்தமிழ்ச் செல்வி, 18, (1940), ப-ள், 471-478.

4. ஆ. சிவலிங்கனார், தொல்காப்பியம் : சிறப்புப் பாயிரம் (உரைவளம்), (சென்னை, 1930), ப-ம், 66.

5. ச. வே. சுப்பிரமணியன், இலக்கணத்தொகை: எழுத்து (சென்னை, 1967), ப-ம். 9.

6. Tamil grammarians designate vowels by a beautiful metaphor as Uyir or the life of a word; Consonants as Mey or the body; and the juncture of a vowel and consonant as Uyirmey or an animated body.
   — Robert Caldwell, Comparative Grammar of the Dravidian or the South Indian Family of Languages (Madras, 1976), pp. 134.

7. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் நன்னூல்: எழுத்ததிகாரம், (அண்ணாமலைநகர், 1962), ப-ம். 42.

8. மொ. அ. துரை அரங்கசாமி, தொல்காப்பிய நெறி, (மதுரை, 1963), ப-ம். 54.

9. வை. இரத்தினசபாபதி,' 'உயிரும் புள்ளியும்", தொல்காப்பிய மொழியியல், (பதி.) ச. அகத்தியலிங்கம் & க. முருகையன், (அண்ணாமலைநகர், 1972), ப-ம். 120.

10. எம். நாகலிங்கம் பிள்ளை, தமிழ்மறை (கோயம்புத்தூர், 1956) ப-ள். 19,24. வேலூர்க்காரழகன், "உயிர்", தமிழ்ப்பொழில் 26 (1956), ப-ள், 217-222.

11. P. V. Manicka Naicker, The Tamil Alphabet — It's mystic Aspect, (Madras, 1917).

12. சிவஞான முனிவர், தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, ஆறுமுகநாவலர் பதிப்பு, ப-ம். 33.

13. வே. வேங்கடராசுலு ரெட்டியார், எழுத்ததிகார ஆராய்ச்சி (சென்னை, 1944), ப-ம். 43.

14. G. Vijayavenugopal, **Modern Evaluation of Nannool**, (Annamalainagar, 1961), p. 331.

15. 'னகார ஈற்று என்ற பாடவேறுபாடும் பல பதிப்புகளில் காணப்படுகிறது. எஸ். ராஜம் பதிப்பில் 'னகார ஈற்று' என்ற பாடமே உள்ளது. 'னகார ஈற்று' என்பதே மிகச் சரியான பாடம்' ஆதலால் அதனையே கொள்ள வேண்டும் என்று ஏ. சுப்பையா குறிப்பிடுகிறார்.

16. A. Subbiah, "Is the Tamil Alphabet system an adaptation?", JOTS, (Sept. 1973), pp. 71-72.

17. க. ப. அறவாணன், "தமிழ் எழுத்து வைப்புமுறை சமஸ்கிருதத் தழுவலா?", ஆ. கோ. 4 (1963), ப-ள். 292-297.

18. இனி எழுத்துக்கட்குக் கிடக்கை முறை ஆயினவாறு கூறுதும். குற்றெழுத்துக்களை முன்னாகக் கூறி அவற்றிற்கு இனமொத்த நெட்டெழுத்துக்களை அவற்றின் பின்னாகக் கூறினார் ஒரு மாத்திரை கூறியே இரண்டு மாத்திரை கூற வேண்டுதலின். அன்றி இரண்டை முற்கூறினாலோ வெனின், ஆகாது; ஒன்று நின்று அதனோடு பின்னரும் ஒன்று கூடியே இரண்டாவதன்றி இரண்டென்ப தொன்று இன்றாதலின். இதனால் ஒன்றுதான் பல கூடியே எண் விரிந்ததென உணர்க.

இனி அகரத்தின் பின்னர் இகரம் பிறப்பும் பொருளும் ஒத்தலின் வைத்தார். இகரத்தின் பின்னர் உகரம் வைத்தார். பிறப்பு ஒவ்வாதேனும் அஇஉ அம்மூன்றுஞ் சுட்டு (தொல். 31) எனச் சுட்டுப்பொருட்டாய் நிற்கின்ற இனங் கருதி. அவை ஐம்பாற்கண்ணும் பெரும்பான்மை வருமாறு உணர்க. எகரம் அதன் பின் வைத்தார், அகர உகரங் களோடு பிறப்பு ஒப்புமைபற்றி. ஐகார ஔகாரங்கட்கு இன மாகிய குற்றெழுத்து இன்றேனும் பிறப்பு ஒப்புமை பற்றி ஏகார ஓகாரங்களின் பின்னர் ஐகார ஔகாரம் வைத்தார். ஒகரம் நொ என மெய்யோடு கூடி நின்றல்லது தானாக ஓரெழுத்தொருமொழியாகாத சிறப்பின்மை நோக்கி ஐகாரத் தின் பின் வைத்தார். அஇ உஎ என்னும் நான்கும் அக் கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், எக்கொற்றன் என மெய்யோடு கூடாமல் தாம் இடைச்சொல்லாய் நின்றாயினும் மேல் வரும் பெயர்களோடு கூடிச் சுட்டுப் பொருளும் வினாப் பொருளும் உணர்த்தும். ஒகரம் மெய் யோடு கூடியே தன் பொருளுணர்த்துவதல்லது தானாகப் பொருளுணர்த்தாதென்று உணர்க. இன்னும் அஆஉஊ எஏஒஓஔ என்பது தம்முள் வடிவு ஒக்கும். இஈஐ தம்முள் வடிவு ஒவ்வா. இன்னும் இவை அளபெடுக்குங்கால் நெட்டெழுத்தோடு குற்றெழுத்திற்கு ஓசை இயையு மாற்றானும் உணர்க. இனிச் சுட்டு நீண்டு ஆகார ஈகார ஊகாரங்களாதலாலும் பொருள் ஒக்கும். புணர்ச்சி ஒப்புமை உயிர் மயங்கியலுட் பெறுதும். இம்முறை வழுவாமல் மேல் ஆகுமாறு உணர்க.

இனிக் ககார ஙகாரமும் சகார ஞகாரமும், டகார ணகாரமும் தகார நகாரமும் பகார மகாரமும் தமக்குப் பிறப்பும் செய்கையும் ஒத்தலின் வல்லொற்றிடையே மெல்லொற்றுக் கலந்து வைத்தார். முதல் நாவும் முதல் அண்ணமும் இடை நாவும் இடை அண்ணமும் நுனி நாவும் நுனி அண்ணமும் நுனி நாவும் பல் முதலும் இதழியை தலுமாகிப் பிறக்கின்ற இடத்தின் முறைமை நோக்கி இம் முறையே வைத்தார். பிறப்பு ஒப்புமையானும் னகாரம் றகாரமாய்த் திரிதலானும் றகாரமும் னகாரமும் சேர வைத்தார். இவை தமிழெழுத்தென்பது அறிவித்தற்குப் பின்னர் வைத்தார். இனி இடையெழுத்துக்களில் யகாரம் முன்வைத்தார். அதுவும் உயிர்கள் போல மிடற்றுப் பிறந்த வளி அண்ணங் கண்ணுற்று அடையப் பிறத்தலின். ரகாரம் அதனோடு பிறப்பு ஒவ்வாதேனும் செய்கை ஒத்தலின் அதன்பின் வைத்தார். லகாரமும் வகாரமும் தம்மிற் பிறப்பும் செய்கையும் ஒவ்வாவேனும் கல்வலிது சொல்வலிது என்றாற்போலத் தம்மிற் சேர்ந்து வருஞ் சொற்கள் பெரும்பான்மை என்பது பற்றி லகாரமும் வகாரமும் சேரவைத்தார். ழகாரமும் ளகாரமும் இயைபில வேனும் "இடையெழுத்தென்ப யரல வழள (தொல். 21) என்றால் சந்தவின்பத்திற்கு இயைபுடைமை கருதிச் சேர வைத்தார் போலும் (தொல். 1 உரை).

19. சிவஞான முனிவர், மு. நூ. ப-ம். 32.

20. T. P. Meenaskshisundaran, "Is the Tamil Alphabet system an adaptation?", JOTS, 2, (Dec. 1972), pp. 10-12.

21. In arranging the Consonants the Tamil alphabet follows the Devanagari in respect of the vargas, or rows which Sanskrit Consonants are classified and arranged.
— Caldwell, Op. Cit., p. 33.

22. க. ப. அறவாணன், "தமிழ்நெடுங்கணக்கு முறை சமஸ்கிருதத் தழுவலா" ஆ. கோ. 4 (1972), ப-ள், 292-297.

23. எட்டுவகை: 1. இனைத்து, 2. பெயர், 3. முறை, 4. அளவு, 5. பிறப்பு, 6. புணர்ச்சி, 7. வடிவு, 8. தன்மை.

எட்டிறந்த பலவகை: 1. உண்மைத்தன்மை, 2. குறைவு, 3. கூட்டம், 4. பிரிவு, 5. மயக்கம், 6. மொழியாக்கம், 7. நிலை, 8. இனம், 9. ஒன்று பலவாதல், 10. திரிந்ததன் திரிபு அதுவென்றல், 11. பிறிதென்றல், 12. அதுவும் பிறிதுமென்றல், 13. நிலையிற்றென்றல், 14. நிலையாதென்றல், 15. நிலையிற்றும் நிலையாதுமென்றல்.

24. எண்பெயர் முறை பிறப்பு அளவியல் வடிவு
புணர்தலோடு ஏழும் பொருந்திய வழக்கே
அவிநயம், நேமிநாத உரைமேற்கோள்.

25. எண்பெயர் முறை பிறப்பு உருவம் மாத்திரை
முதல்ஈறு இடைநிலை போலி என்றா
பதம்புணர்பு எனப்பன் னிருபாற் றதுவே (நன். 57)

26. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of phonology, (Annamalainagar, 1967), p. 61.

27. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, (அண்ணாமலைநகர், 1980), ப-ம். 32.

28. சிவஞான முனிவர், மு. நூ., ப-ம். 19.

29. ஆயின் நூலென்றது ஈண்டு மூன்று அதிகாரத்தையும் அன்றே? இவ்வோத்து மூன்றதிகாரத்துக்கும் இலக்கணமாயவாறு என்னை? எனின் எழுத்துக்களது பெயரும் முறையும் இவ்வதிகாரத்துக்கும் செய்யுளியற்கும் ஒப்பக் கூறியது. ஈண்டுக் கூறிய முப்பத்து மூன்றனைப் பதினைந் தாக்கி ஆண்டுத்தொகை கோடலின் தொகை வேறாம். அளவு, செய்யுளியற்கும் இவ்வதிகாரத்திற்கும் ஒத்த அளவும் ஒவ்வா அளவும் உளவாகக் கூறியது. குறிற்கும் நெடிற்கும் கூறிய மாத்திரை இரண்டிடத்திற்கும் ஒத்த அளவு. ஆண்டுக் கூறுஞ் செய்யுட்கு அளவு கோடற்கு ஈண்டைக்குப் பயன்தராத அளபெடை கூறியது ஒவ்வா அளவு. அஃது அளபிறந்துயிர்த்தலும் (தொல். 33) என்னுஞ் சூத்திரத்தோடு ஆண்டு மாட்டெறியுமாற்றான் உணர்க. இன்னுங் குறிலும் நெடிலும் மூவகையினமும் ஆய்தமும் வண்ணத்திற்கும் இவ்வதிகாரத்திற்கும் ஒப்பக் கூறியன: குறைவும் கூட்டமும் பிரிவும் மயக்கமும் இவ்வதிகாரத் திற்கே உரியனவாகக் கூறியன. அம்மூவாறும் (தொல். 22) என்னுஞ் சூத்திரம் முதலியவற்றான் எழுத்துக்கள் கூடிச் சொல்லாமாறு கூறுகின்றமையின் சொல்லதிகாரத்திற்கும் இலக்கணம் ஈண்டுக் கூறினாராயிற்று. இங்ஙனம் மூன்றதி காரத்திற்கும் இலக்கணங்கூறுதலின் இவ்வோத்து நூலினது இலக்கணங் கூறியதாயிற்று.

30. மு. நூ., ப-ம். 20.

31. மு. நூ., ப-ம். 20.

32. வே. வேங்கடராசுலு ரெட்டியார், மு. நூ , ப-ம். 20.

33. S. V. Shanmugham, Naccinakkiniyar's conception of phonology, p. 39.

34. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil Grammar (Trivandrum, 1974), pp. 19-20.

35. காண்க: இணைப்பு: 2 சார்பெழுத்துக்கள் அட்டவணை.

36. இலக்கண விளக்கம் நன்னூலாருடைய பாகுபாட்டை ஒத்துக் கொண்டாலும் தொகை எண்ணிக்கையையும் விரி எண்ணிக்கையையும் ஒத்துக் கொள்ளவில்லை. சுவாமிநாதம் பாகுபாட்டையும் தொகையையும் ஏற்றுக் கொண்டு விரி எண்ணிக்கையை ஒப்பவில்லை. தொன்னூல் விளக்கம் பாகுபாட்டைமட்டும் ஏற்றுக் கொண்டு தொகை எண்ணிக்கை பற்றியோ விரி எண்ணிக்கை பற்றியோ பேசவில்லை.

37. சிவஞான முனிவர், மு. நூ., ப-ம். 29.

38. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் நன்னூல்: எழுத்ததிகாரம் (அண்ணாமலைநகர், 1962), ப-ம். 33.

39. சோ. ந. கந்தசாமி. தொல்காப்பியத் தெளிவு, (அண்ணா மலைநகர். 1977), ப-ம். 49.

40. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 117.

41. தி. முருகரத்தனம், தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும் (மதுரை, 1973), ப-ம். 267.

42. ஆ. சிவலிங்கனார், "சார்பு எழுத்துக்கள்", தொல்காப்பிய மொழியியல் (அண்ணாமலைநகர், 1972), ப-ம், 75,

43. சிவஞான முனிவர், மு. நூ., ப-ம். 44.

44. அ. சிவலிங்கனார், "சார்பு எழுத்துக்கள்", ப-ள், 94-95.

45. தா. ஏ. ஞானமூர்த்தி, "தொல்காப்பியரின் குற்றியலுகர விளக்கம்", தொல்காப்பிய மொழியியல், ப-ம். 84.

46. தி. முருகரத்தனம், மு. நூ., ப-ம். 315.

47. செ. வை. சண்முகம், மு. நூ., ப-ம். 84.

48. க. வெள்ளைவாரணன், "சார்பெழுத்துக் கொள்கை", இலக்கண ஆய்வுக் கட்டுரைகள் (பதி.), ச. அகத்திய லிங்கம் & க. பாலசுப்பிரமணியன், (அண்ணாமலைநகர், 1974), ப-ம். 5.

49, க. பாலசுப்பிரமணியன், "தொல்காப்பியரின் ஒலியனியல் கொள்கை", தொல்காப்பிய மொழியியல், ப-ம். 66, அடிக் குறிப்பு 16.

50. அதே கட்டுரை, ப-ம். 65.

51. செ. வை. சண்முகம், மு. நூ., ப-ள். 77-78.

52. தி. முருகரத்தனம், மு. நூ. ப-ள். 323-324.

53. செ. வை. சண்முகம், மு. நூ., ப-ம். 81.

54. தி. முருகரத்தனம், மு. நூ., ப-ம். 311.

55. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, (மொ. பெ.), ச. செயப்பிரகாசம் (மதுரை, 1977), பூ-ம். 97.

56. T. Burrow, Collected Papers of Dravidian Linguistics, Annamalai University, p. 119.

57. கி. வே. கோபாலையர் (பதி.), இலக்கண விளக்கம், (தஞ்சாவூர், 1971), ப-ம். 139.

58. அதே நூல், ப-ம். 357.

59. செ. வை. சண்முகம், மு.நூ., ப-ம். 79.

60. வே. வேங்கடராசுலு ரெட்டியார், மு.நூ., ப-ம். 36.

61. சோ. ந. கந்தசாமி, மு. நூ., ப-ம். 73.

62. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 83.

63. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி.

64. தி. முருகரத்தனம், மு. நூ., ப-ம். 315.

65. மு. இராகவையங்கார், "தொல்காப்பியனாரும் புள்ளி எழுத்துக்களும்", ஆராய்ச்சித் தொகுதி (சென்னை, 1964), ப-ள். 127-131.

66. க. வெள்ளைவாரணன், சார்பெழுத்துக்கொள்கை, இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப-ம். 7.

67. ... a letter, half vowel,half consonant, corresponding in some respects to the Sanskrit visarga and called aydam (that which is subtle and minute). It is pronounced like guttural h, but is only found in poets, and is generally considered a pedantic invention of the grammarians.

— Caldwell, Op. Cit., p. 132.

68. P. S. Subramanya Sastri, History of Grammatical theories in Tamil and their relation to grammatical literature in Sanskrit (Madras, 1934), p. 69.

69. Under certain conditions, the combination of h (i.e. aytam) plus a plossive may serve as a substitute for a germinate then this geminate may be the result of assimilation or of a compensatory lengthening.

— F.B.J, Kuiper, "Two problems in old Tamil Phonology" Indo Iranian Journal, Vol. 2, No. 3, p. 201.

70. T. P. Meenakshisundaran, A History of Tamil Language (Poona, 1965), p. 69.

71. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil Grammar, p. 314.

72. கு. கோதண்டபாணிப் பிள்ளை, 'ஆய்தப்புள்ளி', செந் தமிழ்ச்செல்வி 44 (1969), ப-ம். 138.

73. இரா. கோதண்டராமன், "ஆய்தத்தின் வரலாறு", தமிழ்ப் பொழில் 44, (1971), ப-ள். 342-344.

74. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, ப-ள். 99-100.

75. க. பாலசுப்பிரமணியன், "தொல்காப்பியரின் ஆய்தக் கொள்கை" இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், ப-ள், 381-385.

76. C. R. Sankaran & R. M· Sundaram, "A Historical study of carpezhuthu in Tamil grammars and their commentaries", Proceedings of the Second Conference Seminar of Tamil studies (Madras, 1968), pp. 338-339.

77. க. பாலசுப்பிரமணியன், "தொல்காப்பியரின் ஆய்தக் கொள்கை, ப-ம். 380.

78. சிவஞான முனிவர், மு. நூ., ப-ம். 39.

79. V. Sp. Manickam, "Phonological study of Tolkappiyar, "Preceedings of the First Seminar, International Conference Seminar of Tamil Studies, Vol. II (Madras, 1966), pp. 620-621.

80. க. வெள்ளைவாரணன், "சார்பெழுத்துக் கொள்கை" இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப-ம். 14.

81. மு. வரதராசன், மொழிநூல் (சென்னை, 1953), ப-ள், 68-70.

82. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil grammar, p. 314.

R. Radhakrishnan, Atyam, It's origin and Nature, Proceedings of the First Seminar, IATR., (Madras, 1966), p. 624.

83. இரா. கோதண்டராமன், "ஆய்தத்தின் வரலாறு", தமிழ்ப் பொழில் 44 (1971), ப-ம். 344.

84. கு. சுந்தரமூர்த்தி, தொல்காப்பியம்: எழுத்ததிகாரம்: நச்சினார்க்கினியம் (தஞ்சை, 1963), ப-ம். 31.

85. தி. முருகரத்தனம், தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும், ப-ம். 303.

86. S. V. Shanmugham, Naccinarkkiniar's conception of Phonology, pp. 24, 33.

87. T. P. Meenakshisundaran, Tamil sounds, unpublished thesis, p. 75.

88. சிவஞான முனிவர், மு. நூ., ப-ம். 26.

89. Sp. Thinnappan, "Alapetai in Tamil" Dravidian Linguistics, V (Eds.), S. Agesthialingom & P. S. Subramanyam (Annamalainagar, 1976), pp. 539-560.

90. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 104.

91. மு. நூ., ப-ம். 104.

92. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ் மொழி வரலாறு, ப-ம். 68.

93. T. P. Meenakshisundaran, A History of Tamil language, p. 88.

94. பொன். கோதண்டராமன், "தமிழில் ஐகார ஔகாரங்கள்", இலக்கண உலகில் புதிய பார்வை (சென்னை, 1969), ப-ள், 44-46.

95. செ. வை. சண்முகம், "பழந்தமிழில் ஐகார ஔகாரங்கள்", ஆ. கோ. 4, (அண்ணாமலைநகர், 1972), ப-ள். 268, 273.

96. S. V. Subramaniyam, Descriptive grammar of Cilappathikaram, (Madras, 1965), p. 30.

97. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ள். 91-95.

98. சிவஞானமுனிவர், மு. நூ., ப-ம். 33.

99. Caldwell, Op. Cit., p. 138.

100. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, ப-ம். 88.

101. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 97.

102. சிவஞானமுனிவர், தொல்காப்பியச் சூத்திர விருத்தி. ப-ம். 34.

103. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 69.

104. மு. நூ., ப-ம். 69-70.

105. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil grammar, pp. 20-21.

106. செ. வை. சண்முகம், "தொல்காப்பியரின் எழுத்து", ஆ. கோ. 7, (1975), ப-ள். 495-500.

செ. வை. சண்முகம், "தொல்காப்பியரின் எழுத்து", எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ள். 71-105.

107. S. Innasi, "Aspects of Eluttu in Tamil grammar", Heritage of the Tamils, Language and grammar, (Eds.) S. V. Subramaniyan & K. M. Irulappan, (Madras, 1980), p. 498.

108. சிவஞான முனிவர், தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தி, ப-ம். 61.

109. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 157.

110. K. Murugaiyan, "Clustering and abutting consonants in Tamil" A. K. 4, pp. 481-486.

111. வே. வேங்கடராசுலு ரெட்டியார், மு. நூ., ப-ம். 24.

112. அதேநூல்., ப-ம். 25.

113. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, தொல்காப்பிய எழுத்ததிகாரக் குறிப்பு, நூற்பா 23 உரை.

114. தி. முருகரத்தனம், தமிழ் எழுத்தியல் இன்றும் அன்றும், ப-ம். 361. அடிக்குறிப்பு.

115. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 89.

116. அதே நூல், ப-ள். 153-154.

117. அதே நூல், ப-ம். 166.

118. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil Grammar, p. 21.

119. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 186.

120. அதே நூல், ப-ம். 187.

121. அதே நூல், ப-ம். 162.

122. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, தொல்காப்பிய எழுத்ததிகாரக் குறிப்பு (திருச்சி, 1937), ப-ம். 53.

123. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 166.

124. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of Phonology, P. 64.

125. வே. வேங்கடராசுலு ரெட்டியார், மு. நூ., ப-ம். 47.

126. கோ. விஜய வேணுகோபால், "தொல்காப்பியரின் ஓரெழுத்தொரு மொழி முதலிய கோட்பாடுகள்" வையை 1 (1974), ப-ள். 19, 20.

127. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 172.

128. கோ. விஜய வேணுகோபா ல், மு கட்டுரை, ப-ள். 11-56

129. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 173.

130. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of phonology, p. vii.

131. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 174.

132. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம், 180.

133. கோ. விஜய வேணுகோபால், மு. கட்டுரை, ப-ம். 25.

134. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 178.

135. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, தொல்காப்பிய எழுத் ததிகாரக் குறிப்பு, ப-ம், 46.

136. கோ. விஜய வேணுகோபால், மு. கட்டுரை, ப-ம். 27.

137. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 182.

138. ஆர். நரசிம்மன், "சகர முதன்மொழி வரலாறு", செந்தமிழ், 33 (1936), ப-ள். 54-61.

139. சுவாமி ஞானப்பிரகாசர், "தமிழில் சகரமுதற்சொற்கள்", செந்தமிழ் 33 (1936), ப-ள். 75-80.

140. துடிசைகிழார், அ. சிதம்பரனார், "தமிழ்மொழியில் சகர முதன்மொழி", செந்தமிழ்ச்செல்வி 15 (1936), ப-ள், 65-70, 121-125.

141. தேவநேயப்பாவாணர், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், இளம்பூரணம் கழகப் பதிப்பு (சென்னை, 1955), ப-ம். 62.

142. வே. வேங்கடராசுலு ரெட்டியார், "சகரக்கிளவி", தமிழ்ப் பொழில் 32 (1952), ப-ள். 368-369.

143. தி. முருகரத்தனம், "மொழிமுதல் அகரச் சகரம்", செந்தமிழ்ச்செல்வி 36 (1962), ப-ள். 410-416.

144. அரசஞ்சண்முகனார், தொல்காப்பியச் சண்முகவிருத்தி ப-ம். 47.

145. P. S. Subramanya Sastri, History of Grammatical Theories in Tamil and their relation to Grammatical Literature in Sanskrit, p. 2.

146. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, ப-ம். 79.

147. C. R. Sankaran, "Tolkappiyar and the Science of phonemics" Tamil Culture IX (1961), p. 120.

148. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of Phonology, p. 88.

K. Murugaiyan, "Did Tolkappiyar Translate Panini's Siksa?" A. K. 5 (1973), pp. 599-606.

149. க. முருகையன், "தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை", ப-ம். 5.

150. க. முருகையன், "தமிழ் இலக்கண அறிஞர்கள் விளக்கும் ஒலிப்பிறப்பு முறை", இலக்கண ஆய்வுக்கட்டுரைகள், ப-ம். 213.

151. அதே கட்டுரை, ப-ள். 265, 266.

152. க. முருகையன், "தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை", ப-ம். 15.

153. வே. வேங்கடராசுலு ரெட்டியார், தொல்காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி, ப-ம். 76.

154. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, தொல்காப்பிய எழுத்ததிகாரக் குறிப்பு, ப-ம் 72.

155. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of Phonology, p. 95.

156. க. முருகையன், "தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை", ப-ம். 34.

157. க. முருகையன், "தமிழ் இலக்கண அறிஞர்கள் விளக்கும் ஒலிப்புறப்பு முறை", ப-ம். 271.

158. L. V. Ramasamy Ayyar, "Dravidic Problems", Collected Papers of L. V. R., Mimeo, Annamalai University.

159. காண்க: க. முருகையன், "தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை", ப-ள். 1-50.

160. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil Grammar, p. 125.

161. ச. தண்டபாணி தேசிகர், "மயக்கவிதியும் புணர்ச்சி இலக்கணமும்", தொல்காப்பிய மொழியியல், ப-ம். 128.

162. அதே கட்டுரை, ப-ம். 128.

163. காண்க. S. Subramaniyan, "Sandhi and Punarcci in Tamil", "Heritage of the Tamils: Language and Gram mar (Eds.) S. V. Subramaniyan & K. M. Irulappan (Madras, 1980), pp. 35-53.

164. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ள். 203-204.

165. அதே நூல். ப-ம். 211.

166. தொல்காப்பியம் புணர்ச்சியை ஆறு இயல்களில் விரிவாகவும் விளக்கமாகவும் கூறியுள்ளது. வீரசோழியமும் நேமிநாதமும் புணர்ச்சியை எழுத்தியலின் ஒரு உட்பகுதியாக்கித் தனி இயல் அமைக்காமல் பேசியுள்ளன. நன்னூல், இலக்கண விளக்கம் ஆகிய இரண்டும் மூன்று இயல்களில் புணர்ச்சியை விளக்கியுள்ளன. தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய மூன்றும் ஒரே இயலில் புணர்ச்சியைக் கூறியுள்ளன.

... no one today can assert seriously that all of our study of phonology is means to our correct understanding of morpho-phonemic alternations. It is because of this wrong perspective that the later day grammarians have not realised the importance of the other chapters of phonology. It is also because of this wrong perspective that these aspects have not studied in great detail in later ages to reveal more and more of these secrets.
— S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of Phonology, p. 16.

167. All the chapters of Eluttu before the chapters of Punarcci of the grammatical treatise (Tolkappiyam) classify Eluttu or primary phenemic units and carbu or dependant units, vowels short and long, consonants hard, soft and medials and deal with sequence of phonemes, initials and finals of forms, phonetics and others only for sandhi or Punarcci of forms. So Eluttu, the the chapter is set mainly for sandhi of forms in sentences.

— S. Subramaniyan, "Sandhi and Punarcci in Tamil", p. 36;

168. Pon. Kothandaraman, "On Sandhi", Studies in Tamil Linguistics, (Madras, 1972), pp. 60, 72.

169. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil grammar, p. 24.

170. Ibid, p. 23.

171. R. Radhakrishnan, "Sutra 110 in Tolkappiyam Eluttatikaram", Proceedings of the First Conference Seminar, International Association of Tamil Research, Vol. II, pp. 639-640.

172. சுப. திண்ணப்பன், "அல்வழி வேண்டுமா?", ஆ. கோ. 6 (1974), ப-ள், 795-800.

173. T. P. Meenakshisundaran, "The So-called inflexional increments in Tamil", Indian Linguistics, Vol. II (1959), p. 49.

174. சோ. ந. கந்தசாமி, தொல்காப்பியத் தெளிவு, ப-ம். 123.

175. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக்கோட்பாடு, ப-ம். 251.

176. M. Israel, The treatment of Morphology in Tolkappiyam, (Madurai, 1976), p. 114 footnote.

177. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ள் 252, 253.

178. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of phonology, p. 173.

179. குறிப்பு 176 காண்க.

180. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம், 250.

181. M. Israel, The Treatment of Morphology in Tolkappiaam, p. 130.

182. சோ. ந. கந்தசாமி, "எழுத்துப்பேறும் சாரியையும்". இலக்கணச் சிந்தனைகள் (பதி.), தமிழ்த்துறை ஆசிரியர்கள் (அண்ணாமலைநகர், 1979), ப-ம். 16.

183. சோ. ந. கந்தசாமி, தொல்காப்பியத் தெளிவு, ப-ம். 122.

184. S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of Phonology, p. 173.

185. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 253.

186. M. Isreal, The Treatment of Morphology in Tolkappiyam, p. 130.

187. Ibid., pp. 124-125.

188. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ள். 266-267.

189. அதே நூல், ப-ள். 266-167.

190. அதே நூல், ப;ம். 253.

191. Caldwell, Op. Cit., pp. 261, 262.

192. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, ப-ம். 109.

193. மோ, இசுரயேல், இலக்கண ஆய்வு: பெயர்ச்சொல்

194. A. Chidambaranathan Chettiyar, "The Dravidian Neuter Plural, "Journal of the Annamalai University, XIV (1949), pp. 1-4.

195. L. V. Ramaswamy Ayyar, "Dravidic Sandhi — augments", QJMS, pp. 96-110.

196. T. P. Meenakshisundaran, "The So-called inflexional increments", p. 128.
(மதுரை, 1976), ப-ம். 124.

197. மோ. இசுரயேல், "வற்றுச் சாரியை", இடையும் உரியும். (மதுரை, 1977), ப-ம். 37.

198. சோ. ந. கந்தசாமி, தொல்காப்பியத் தெளிவு, ப-ம். 37.

199. மோ. இசுரயேல், "வற்றுச்சாரியை", ப-ம். 39.

200. அதே கட்டுரை, ப-ள். 40, 41.

201. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 213.

202. It should be remembered here that Tolkappiyar never posit a case ending or an increment which goes against the laws of phonatatics.
— N. Kumarasamy Raja, "The increment akku"
ஆ. கோ. 4 (1971), ப-ம். 43.

203. மோ. இசுரயேல், "சாரியைகள்", இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், ப-ம். 143.

204. L. V. Ramasamy Ayyar, "Dravidic Sandhi-augments", pp. 100-101.

205. மோ. இசுரயேல், "ஆன் சாரியையாக வழங்குதல் உண்டா", இலக்கண ஆய்வு, இடையும் உரியும், ப-ள். 49-51.

206. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 127.

207. Ibid, p. 127.

208. N. Kumarasamy Raja, "The increment 'akku', p. 345.

209. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப--ம். 117.

210. வே. வேங்கடராசுலு ரெட்டியார், "சாரியை 'அன்' அக்கு' ", தமிழ்ப்பொழில் 32, (1956), ப-ம். 246.

211. M. Isreal, The Treatment of Morphology in Tolkappiyam, p. 128.

212. Ibid, p. 128.

213. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 244.

214. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, pp. 128-129.

215. மோ. இசுரயேல், "சாரியைகள்", இலக்கண ஆய்வு: பெயர்ச்சொல், ப-ம். 143.

216. தி. முருகரத்தனம், சாரியை அன்னும் இடைநிலை 'இன்னும்', ஆ. கோ. 2, (1970).

217. செ, வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 254.

218. R. Radhakrishnan, "Empty morph and cariyai", Journal of the Annamalai University 25-A (1964), pp. 115-120.

219. N. Kumarasamy Raja, "Tolkappiyar's morphophenemics, Journal of the Annamalai University, Humanities 27 (1970), pp. 169-177.

220. S. V. Subramaniam, Descriptive Grammar of Cilappatikaram, p. 63.

S. Agesthialingom & S. V. Shanmugham, The Language of Tamil Inscriptions 1257-1350 A.D. (Annamalainagar, 1970), pp. 117-127.

221. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, pp. 113-130.

மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், ப-ள். 38-150.

23

222. Thus it may be concluded that cariyai occuring in inflexions are empty morphs and those occuring in word combinations mostly have the force of case signification.

— M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 115.

223. தொல்காப்பியர் சாரியை பொருள் அற்றது என்னும் கருத்து உடையவர்; அந்தக் கொள்கையை மிகவும் வலியுறுத்தியும் கூறியுள்ளார் என்னும் கருத்தினைச் சாரியைகளை மறுவருணனை செய்வதன் மூலம் செ. வை. சண்முகம் விளக்கியுள்ளார்.

— செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ள். 256-257.

224. அதே நூல், ப-ள். 267, 268.

225. கா. கோ. வேங்கடராமன், "தொல்காப்பியத்தில் உயிரிணைகள், தமிழ்ப்பொழில் 43 (1967), ப-ம். 324.

226. அடிகளாசிரியர், "உடம்படுமெய்" கி. ஆ. பெ. விசுவநாதம் மணிவிழா மலர் (திருச்சி, 1958), ப-ள். 158-159.

227. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 231.

228. ...in tokaimarapu the method of treatment is different. It is not dealing with sounds seriatum. There are certain rules applicable to group of sounds without any reference to grammar (e. g. s. 143, 144, 149, etc.) Among these some are based on the syllabic pattern of words (The closed short and long mono syllabic words are referred to in S. 160 and polysyllabic words in S. 145). Some rules are formulated on the basis of lexical classes (words of measurements, weight and number S. 164 to 170) or grammatical categories (superior nouns S. 153). Second person verbs (s.151,s 152) etc. and there are some more which involve tactical relationship (words having second case-objective relations S. 157) words having instrumental relationship (s: 156)

— S. V. Shanmugham, Naccinarkkiniyar's conception of phonology, pp. 114-115.

229. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ள், 232, 242.

230. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil Grammar, pp. 26-27.

231. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 239.

232. சோ. ந. கந்தசாமி, தொல்காப்பியத் தெளிவு, ப-ம். 144.

233. அதேநூல், ப-ம். 144.

234. N. Kumarasamy Raja, "Tolkappiyar's morahophonemics", pp. 170-172.

235. செ. வை. சண்முகம். எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 239.

236. து. அ. கோபிநாதராவ், "ஒன்பது, தொண்ணூறு, தொள்ளாயிரம்", செந்தமிழ் 3 (1905), ப-ள். 363-369.

237. சி. சோமசுந்தர முதலியார், "வரலாற்று மொழிகள்", தமிழ்ப் பொழில் 2 (1926), ப-ள். 125-121, "வரலாற்று மொழியாராய்ச்சி" தமிழ்ப்பொழில் 2 (1926), ப-ள். 226-235

238. மு. கோவிந்தராய நாட்டார், "எட்டு, ஒன்பது முதலியவை", தமிழ்ப் பொழில் (1926), ப-ள். 122-126, "குற்றியலுகரப் புணரியல்", தமிழ்ப்பொழில் 2 (1927), ப-ள். 297-303.

239. தி. சங்குப்புலவர், "எண்ணுப்பெயர்ப் புணர்ச்சியாராய்ச்சி", செந்தமிழ்ச் செல்வி (36 1961), ப-ள், 85-89.

240. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், "தொண்ணூற்றுச் சூத்திரம் தொல்காப்பியரதா?, கி. ஆ. பெ. விசுவநாதம் வெள்ளி விழா மலர் (திருச்சி 1953), ப-ள். 41-44.

241. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப-ம். 220.

242. N. Kumarasamy Raja, "Tolkappiyar's Morphophonemics", p. 170.

இயல் மூன்று

சொல்லதிகார ஆய்வு

தொல்காப்பியம் சொல்லதிகாரம்

தொல்காப்பியர், கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் ஆகிய ஒன்பது இயல்களாகச் சொல்லதிகாரத்தினைப் பகுத்துச் சொல்லிலக்கணமும் தொடரிலக்கணமும் உணர்த்தியுள்ளார். ஆனால் சொல்லிலக்கணம், தொடர் இலக்கணம் எனப் பகுத்துத் தனித்தனியே கூறவில்லை. சொல்லதிகாரத்தின் முதல் நான்கு இயல்களாகிய கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகியவற்றில் தொடர் இலக்கணமும், பின் ஐந்து இயல்களாகிய பெயரியல், வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் ஆகியவற்றில் சொல்லிலக்கணமும் உணர்த்தப்படுகின்றன என்று பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி கூறியுள்ளார்.[1] பின் வந்தோர் சிலரும் இக்கருத்தினை உடன்பட்டு உரைத்துள்ளனர்.[2] ஆனால் நான்காவது இயலான விளிமரபில் விளிப்பெயர்களின் தொடரியல் பண்பு குறித்த ஒரு செய்தியும் இல்லாததால் இக்கருத்து முழுதும் பொருந்தக்கூடியது அன்று[3] என்பர். சொல்லதிகாரத்தின் இயல்களில் பேசப்படும் இலக்கணத்தினை இன்னின்ன இயல்கள் சொல்லியல் பற்றிப் பேசுகின்றன இன்னின்ன இயல்கள் தொடரியல் பற்றிப் பேசுகின்றன என்று வரையறுத்தல் முழுமையான வரையறையாக இருக்க முடியாது. சொல்லியல் பற்றிய செய்திகளும் தொடரியல் பற்றிய செய்திகளும் எல்லா இயல்களிலும் விரவியே காணப்படுகின்றன.

உரையாசிரியர்கள் பார்வையில் சொல்லதிகாரம்

சொல்லதிகாரத்தில் உணர்த்தப்படும் இலக்கணம் எவ்வகையில் கூறப்படுகிறது என்பது பற்றி உரையாசிரியர்கள் சொல்லதிகாரத்தின் தொடக்கத்தில் கருத்துத் தெரிவித்துள்ளனர். எட்டு வகையால் சொல்லிலக்கணம் உணர்த்தப்படுகிறது என்று இளம்பூரணர் கூறியுள்ளார். அந்த எட்டுவகை என்ன என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

> அச்சொல் எனைத்து வகையால் உணர்த்தினாரோவெனின் எட்டுவகைப்பட்ட இலக்கணத்தினான் உணர்த்தினார் என்க. அவையாவன இரண்டு திணை வகுத்து, அத்திணைக்கண் ஐந்து பால் வகுத்து, எழுவகை வழு வகுத்து, எட்டு வேற்றுமை வகுத்து, அறுவகை ஒட்டு வகுத்து, மூன்று இடம் வகுத்து, மூன்று காலம் வகுத்து, இரண்டு இடத்தான் ஆராய்தல்.

கல்லாடரும், பெயர் அறியப்படாத பழைய உரைகாரரும் இந்த எட்டுவகையினையும் குறிப்பிட்டுள்ளனர். நச்சினார்க்கினியர் இந்த எட்டு வகையினைக் குறிப்பிட்டு, எட்டிறந்த பலவகையானும் சொல்லதிகாரத்தில் இலக்கணம் உணர்த்தப்படுகிறது என்று கூறி யுள்ளார்.

> எட்டிறந்த பலவகையாவன; சொல் நான்குவகை என்றலும் அவற்றையே பலவாறாகப் பகுத்தலும், விகார வகையும், பொருள்கோள் வகையும், செய்யுட்குரிய சொல் நான்கு என்றலும் பிறவுமாம்

என்று எட்டிறந்த பலவகைக்கு இலக்கணம் தந்துள்ளார். இது போன்ற பகுப்பினை எழுத்ததிகாரத்திலும் இளம்பூரணரும் நச்சி னார்க்கினியரும் கூறியுள்ளதும் அது பற்றிய விளக்கமும் முன் இயலில் ஆராயப்பட்டன.

சொல்லதிகாரத்தில் தொடர் இலக்கணம் உணர்த்தப்படுவதைத் தெய்வச்சிலையார் எடுத்துக்காட்டியுள்ளது சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது.

> எழுத்தினான் இயன்று பொருளறிவிக்குஞ் சொற்களைப் பாகு படுத்துதலால் சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து. அஃது யாங்ஙனம் உணர்த்தினார் எனின் சொற்களைப் பொருள் நிலைமை நோக்கித் தொடர்மொழி தனிமொழி என இருவகைப் படுத்து. .. உணர்த்தினார் என்க. அவற்றுள் அவ்வழித்தொடர் கிளவியாக்கத்துள்ளும், வேற்றுமைத்தொடர் வேற்றுமையோத் துள்ளும் வேற்றுமை மயங்கியல் விளிமரபு என்பனவற்றுள்ளும் தனிமொழிப் பகுதியாகிய பெயரிலக்கணம் பெயரியலுள்ளும் வினையிலக்கணம் வினையியலுள்ளும் இடைச் சொல் லிலக்கணம் இடைச் சொல்லோத்தினுள்ளும், எஞ்சியவெல்லாம் எச்சவியலுள்ளும் உணர்த்தினார் என்று கொள்க.

என்று தொடர்மொழி இலக்கணமும் தனிமொழி இலக்கணமும் எந்த எந்த இயல்களில் விளக்கப்படுகின்றன என்று நுட்பமாகப் பகுத்து அவர் விளக்கியுள்ளார். சொல்லதிகாரத்துக்கு உரைகண்ட ஏனைய உரையாசிரியர்களும் சொல்லைத் தனிமொழி, தொடர்மொழி என்று பகுத்துக்கூறியுள்ள போதிலும் இதுபோன்ற விளக்கத்தினைத் தரவில்லை.

சொல்லிலக்கண ஆய்வின் தொடக்கம் எது என்பது பற்றியும், சொல்லிலக்கண ஆய்வின் பயன் பற்றியும் தெய்வச்சிலையார் உரைத்துள்ள கருத்துக்கள் சிந்திக்கத்தக்கன.

> தொடர்மொழி என வகுத்ததனாற் பயன் என்னை எனின் பொருள் உணர்த்துதற்குச் சிறப்புடையன தொடர்மொழி என்று கொள்க. என்னை சிறந்தவாறு எனின் சாத்தன் என்ற வழிப்

பொருண்மை உணர்த்துதல் அல்லாது கேட்டோர்க்கு ஒரு பயன் பட நில்லாமையின் சாத்தன் உண்டான் எனப் பயன்பட வருஉம் தொடர்மொழியே பொருள் இனிது விளக்குவது என்க. சொல்லிலக்கணம் அறிந்ததனாற் பயன் தொடர்மொழியாகிய வாக்கியத்தினைப் பிரித்துப் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் எனக் குறியிட வேண்டுதலின் அதன் பின் கூறப்பட்டது.

சொல்லிலக்கண ஆய்வின் தொடக்கம் தொடர்மொழி என்று தெய்வச்சிலையார் கருதுவது மாற்றிலக்கண மொழியியலாரின் கோட்பாட்டினை ஒத்துள்ளது. மேலும் அவர் தொடர்மொழி எனத் தொடரைக் குறிப்பிடாமல் வாக்கியத்தினையே குறிப்பிடுகிறார் என்பதும் கருதத்தக்கது.

பாகுபாடு

உருபன்களின் வடிவு, உருபன்கள் வரும் முறை உருபன்களால் சொற்கள் அமையும் முறை, உருபன்களின் பாகுபாடு முதலிய வற்றை விளக்குவது உருபனியல் (Morphology) என மொழியியலாரால் குறிக்கப்படும். இதனைச் சொல்லியல் எனவும் குறிக்கலாம். சொற்கள் ஒன்றினை ஒன்று தொடர்ந்து நிற்கும் நிலைமை, அவை தொடர்ந்து வாக்கியமாக நிற்கும் நிலைமை இவற்றை விளக்குவது தொடரியல் (Syntax) என்று மொழியியலார் கூறுவர். தொல்காப்பியர் தொடர் அதிகாரம் எனத் தனியே ஓர் அதிகாரம் வகுக்கவில்லை எனினும் தொடர் இலக்கணத்தினையும் சேர்த்தே சொல்லதிகாரத்தில் உணர்த்தியுள்ளார். இந்த இருவகை இலக்கணங்களையும் தொல்காப்பியர் விளக்கிய முறை, அவற்றை உரையாசிரியர்கள் முதல் இன்றைய மொழியியலார் வரை ஆராய்ந்து கூறியுள்ள விளக்கங்கள் ஆகிவயற்றை,

1. சொல்லியல்
2. தொடரியல்

என்ற இருவகையாகப் பகுத்து ஆராயலாம்.

சொல்லியல்

தொல்காப்பியர் கிளவி, சொல், மொழி என்ற குறியீடுகளால் சொல்லைக் குறிப்பிட்டுள்ளார். இம்மூன்று சொற்களுள் கிளவி என்பது எழுத்து, தொடர் ஆகியவற்றைக் குறிக்கவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. எல்லாச் சொற்களும் பொருள் உணர்த்துவன (தொல். 640); சொன்மை தெரிதலும், பொருண்மை தெரிதலும் சொல்லின் தன்மைகள் (தொல். 641); வெளிப்படையாகவும், குறிப்பாகவும் சொல் பொருளை உணர்த்தும் (தொல். 642) என்று சொல் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். "சொல்லினாற் குறிக்கப்பட்ட பொருளின் தன்மை ஆராய்தலும் சொல் தன்னானே ஆகும். நிலம் என்பது பொருளின் தன்மை ஆராய்வார்க்கு மண்ணினான் இயன்ற

தோர் பூதம் என்றாயிற்று. அதனால் இரு பகுதிய சொல்நிலைமை" என்று தெய்வச்சிலையார் விளக்கியுள்ளார். சொல்லுக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பு பற்றி மொழியியலறிஞர் கூறும் கருத்தும் இதனையொத்துக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.[4] இதனை வடிவம் (form), பயனிலை (function) என்று கூறி, வடிவம் என்பது சொல் நிலை என்றும், பயனிலை என்பது பொருள்நிலை என்றும் மொழியியலார் விளக்குவர். தொல்காப்பியத்தில் சொன்மை யும் பொருண்மையும் சேர்த்து விளக்கப்பட்ட இடங்களும் (ன— ஆண்பால்; இர், ஈர், மின் — முன்னிலை) சொன்மை மட்டும் உணர்த்தப்பட்ட இடங்களும் பொருண்மை மட்டும் உணர்த்தப் பட்ட இடங்களும் உண்டு என்று மொழியியல் நோக்கில் தொல் காப்பியரின் சொல்லியல் கோட்பாட்டினை ஆராய்ந்தோர் எடுத்துக் காட்டியுள்ளார்.[5]

இளம்பூரணர் சொல்லை "எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவிக்கும் ஓசை" (தொல். 484) என்று கூறியுள்ளார். இதனைச் சேனாவரையர் சற்று விளக்கமாக,

> சொல்லாவது எழுத்தொடு ஒருபுடையான் ஒற்றுமை உடைத் தாய்ப் பொருள்குறித்து வருவது. உரையாசிரியரும் எழுத்தாதல் தன்மையொடு புணர்ந்து என்பார் எழுத்தொடு புணர்ந்து என்றார் ஆதலின் ஒருபுடை ஒப்புமையே கூறினார். தன்மை யொடு புணர்ந்து என்னாக்கால் ஓரெழுத்து ஒரு மொழிக்கு எழுத் தொடு புணர்தல் இன்மையின் சொல்லாதல் எய்தாது என்க (தொல். 484)

என்று கூறியுள்ளார்.

நச்சினார்க்கினியர் பொருள் உணர்த்துவதற்காகச் சொற்கள் எழுத்துக்களைக் கொண்டு ஆக்கப்படுகின்றன என்ற முறையில் விளக்கம் தந்துள்ளார். ஆக்கப்படுதல் என்பதற்கு அவர் பின்வரும் விளக்கத்தினையும் தந்துள்ளார்.

> இங்கு 'ஆக்கப்படுதல்' என்றது ஒருசொற் கூறுமிடத்து ஓரெழுத்துப் போக ஓரெழுத்துக் கூறுவதல்லது ஒரு சொல்லாக முடியும் எழுத்தெல்லாம் சேரக் கூறல் ஆகாமையின், அவ் வெழுத்துக்கள் கூறிய அடைவே போயினவேனும் கேட்போர் கருத்தின்கண் ஒரு தொடராய் நிலைபெற்று நின்று பொருளை அறிவுறுத்தலை;
>
> ஆயின் ஓரெழுத்தொருமொழிக்கு ஆக்குதல் இன்றால் எனின், ஓரெழுத்தொரு மொழியைக் கூறியக்கால் அதுவும் செவிப் புலனாய்க் கருத்தின்கண் நிகழ்ந்து பின்னர்ப் பொருளை ஆக்கு தலின், அதுவும் ஆக்கும் தன்மை உடையதாயிற்று (தொல். 484)

என்று விளக்கும் நச்சினார்க்கினியர் சொல்லின் பொருள் உணர்த்தும் தன்மை குறித்துச் சேனாவரையர் கருத்தினின்றும் வேறுபட்டு உரைக்

கிறார். சொல் பொருள் குறித்து வருவது; அது சமய ஆற்றலால் பொருளை விளக்குவது என்பது சேனாவரையரின் கருத்து. சொல் பொருளை உணர்த்துவதற்குக் கருவியே அன்றித் தானே பொருளை உணர்த்துவது இல்லை என்னும் பொருள்பட நச்சினார்க்கினியர் உரைத்துள்ளார்.

> சேனாவரையர் சொல் பொருள் குறித்து வரும் என்றாரால் எனின், ஒருவன் பொருள் தன்மையை உணர்த்துவதற்குக் கருவி யாய் நிற்றல் அன்றித் தனக்கு ஓர் உணர்வு இன்மையின் தான் ஒரு பொருளைக் கருதி நிற்றல் இன்று என மறுக்க (தொல். 484)

என்று மறுத்துரைத்துள்ளார். சேனாவரையரின் கருத்து பேசுவோரின் நிலையினின்று தரும் விளக்கமாகவும் நச்சினார்க்கினியரின் கருத்து கேட்போரின் நிலையினின்று உரைப்பதாகவும் உள்ளது.[6] சொல், கருத்து இவற்றுக்கிடையே ஓர் இணக்கமான தொடர்பும் எதிர்மாறும் (reciprocal and reversible relationship) உண்டு. இத்தொடர்பே பொருள் எனப்படுவது என்று மொழியியலாரால் விளக்கம் தரப் படுகிறது.[7]

தொல்காப்பியரின் சொற்பாகுபாடு

சொல் பெயர்ச்சொல், வினைச்சொல் என இருவகைப்படும் (தொல். 643); இடைச்சொல்லும், உரிச்சொல்லும் அவற்றின் வழி மருங்கில் தோன்றுவன (தொல். 644) என்று சொல்லை நான்கு வகை யாகப் பாடுபாடு செய்துள்ளார் தொல்காப்பியர். நன்னூலாரும் சொல்லெனப்படுவது பெயர் வினை என இரண்டாகும்; இடை, உரி அடுத்து நான்கும் ஆம் (நன். 270) என்று சொல்லைப் பாகுபடுத்தி யுள்ளார். இவர்கள் சொல்லை நான்கு வகையாகப் பாகுபடுத்தி இருப்பினும் பெயர், வினை என்ற இருவகைச் சொற்களோடு ஒத்த நிலையினவாக இடை, உரி ஆகிய சொற்களைக் கருதவில்லை. அவற்றுக்கு அடுத்த நிலையினதாகவே கருதியுள்ளனர். தொல் காப்பியர் இவற்றைப் பெயர், வினை ஆகியவற்றின் வழிமருங்கில் தோன்றுவன என்றும், நன்னூலார் பெயர், வினையை அடுத்துத் தோன்றுவன என்றும் குறிப்பிடுவதனால் இதனை உணரலாம்.

தொல்காப்பியர் சொல்லை வேறொரு முறையிலும் பாகுபடுத்தி யுள்ளார். இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் ஆகிய நான்கும் செய்யுள் ஈட்டச்சொல் (தொல். 880) என்று கூறியுள்ளார். இந்த நால்வகைச் சொற்களையும் 'செய்யுள் ஈட்டச்சொல்' எனத் தொல்காப்பியர் கூறுவதால் பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைச் சொற்களையும் இயற்றமிழ்ச் சொல் எனக் கூறலாம் என்று ச. வே. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.[8] இத்தகைய பாகு பாட்டினால் இயற்றமிழ்ச் சொல் செய்யுள் ஈட்டச் சொல்லாக வராது என்று கொள்ள முடியாது. 'செய்யுள் ஈட்டச் சொற்களாக அமைந்த இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பன சொற் பிறப்பியல் அடிப்படையில் பெயர் கொடுக்கப்பட்டன என்று தோன்றுகிறது. இயற்சொல்லை அம்மொழியில் இயற்கையாகத்

தோன்றி வழங்குவன (native words) என்றும், திரிசொல்லை அம் மொழியின்கண் உறழ்ந்து வருவன (free variations) என்றும், திசைச் சொல்லை ஒருமொழி பேசப்படும் பகுதியில் இடத்துக்கு இடம் வேறு பட்டு வழங்குவன (regional dialects) என்றும், வடசொல்லை வட மொழிச் சொற்கள் என்றும் கொள்ளல் வேண்டும். திரிசொல்லைக் கிளைமொழிச் சொற்கள் என்றும் திசைச்சொல்லை ஏனைய திராவிட மொழிச்சொற்கள் என்றும் கொண்டால் பொருந்துமா என்ற வினாவும் எழுகின்றது" என்று இப்பாகுபாட்டினைப் பற்றிச் ச. வே. சுப்பிரமணியன் குறிப்பிட்டுள்ளார்.[9] இது தேவநேயப் பாவாணரின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த விளக்கமாகும். தேவ நேயப் பாவாணர் பெயர், வினை, இடை, உரி என்ற பாகுபாடு இலக்கண அடிப்படையிலும் இயற்சொல், திரிசொல், திசைச்சொல் வடசொல் என்ற பாகுபாடு சொற்பிறப்பியல் அடிப்படையிலும் அமைந்தது எனக் கருதுவர்.[10] தொல்காப்பியரின் இயற்சொல் வகைப் பாகுபாடு வேறு அடிப்படையில் அமைந்தது. இந்தப் பாகுபாடு மொழி உணர்வினை அடிப்படையாகக் கொண்டது. சிறப்பாக நிலை மொழியாக்க உணர்வே இந்தப் பாகுபாட்டின் அடிப்படைக் காரணம்.[11]

'செய்யுள் ஈட்டச் சொல்' என்று தொல்காப்பியர் கூறுவது இலக்கிய மொழிக்கு உரிய பாகுபாடு. அதாவது பேச்சு வழக்குக்குப் பொருந்தாத பாகுபாடு என்று கொள்ளலாம். தொல்காப்பியரின் செய்யுள் ஈட்டச் சொல்லின் நால்வகைப் பாகுபாட்டினை மொழி யியலார் சொல்லைப் பாகுபாடு செய்யும் முறையோடு கா. மீனாட்சி சுந்தரம் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இயற்சொல் என்பது மொழி யியலார் கூறும் பொதுமொழி (Standard or common language) யினை ஒத்தது. திரிசொல் என்பதைச் சிறப்புமொழி (special language), கற்ற அறிஞர்களால் ஆக்கிக் கொள்ளப்பட்ட சொற்கள் என்றும் திசைச் சொல் என்பது கிளைமொழி (Dialect)யை ஒத்தது என்றும் வடசொல் என்பது பிற மொழிச் சொற்கள் (சமஸ்கிருதத்தை மட்டும் குறிப்ப தாகக் கொள்ளலினும் இது சிறந்தது) என்றும் அவர் விளக்கம் தந்துள்ளார்.[12]

தொல்காப்பியத்தில் காணப்படும் சொல்வகைப் பாகுபாடுகள் மூன்று அடிப்படையில் அமைந்துள்ளன. அவை,

1. மொழி அமைப்பு அடிப்படை
2. மொழி உணர்வு — சிறப்பாக நிலைமொழியாக்க உணர்வு அடிப்படை
3. சமூகப் பண்பாட்டு அடிப்படை

என்று எடுத்துக்காட்டி செ. வை. சண்முகம் விளக்கியுள்ளார். பெயர் வினை, இடை, உரி என்ற பாகுபாடு மொழி அமைப்பு அடிப்படை யிலும், இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற பாகுபாடு நிலை மொழியாக்க உணர்வு அடிப்படையிலும் அமைந்தவ

கிளவி என்பது சமூகப் பண்பாட்டு அடிப்படையிலும் அமைந்தவை. 'அவையல் கிளவி' என்பது ஒரு சொல் பாகுபாடாகக் குறிப்பிடப் படாவிட்டாலும் ஒவ்வொரு மொழிச் சமூகத்திலும் இப்படிப்பட்ட சொற்கள் இருப்பதால் மொழிப்பயிற்சியில் அவையல் கிளவி எவை; அல்லாதன எவை என்ற பாகுபாட்டு உணர்வு இருந்திருக்க வேண்டும் என்று விளக்கியுள்ளது[13] பொருத்தமானதாகத் தெரிகிறது.

பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் என்பதற்குத் தொல்காப்பியர் தெளிவான விளக்கம் தந்துள்ளார். ஆனால் அது பற்றிய நூற்பாக்கள் யாவும் ஒரே இடத்தில் அமையவில்லை. அதனால் தொல்காப்பியர் பெயரின் இலக்கணத்தைச் சரியாக விளக்கவில்லை என்று கருதப்பட்டது.[14] ஆனால் பின்னர் பெயர் பற்றிய தொல்காப்பியரின் விளக்கம் சிறந்தது எனக் கொள்ளப்பட்டுள்ளது.[15]

பெயர்ச்சொல் — இலக்கணம்

பெயர்ச்சொல் காலங்காட்டாது (தொழில்நிலை ஒட்டு ஒன்றினைத் தவிர) (தொல், 554); வேற்றுமை உருபினை ஏற்கும் (தொல். 116, 553); புணர்ச்சியின்போது சாரியையினை ஏற்கும் (தொல். 112, 118) என்று பெயர் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். தொடர்நிலையில் அது எழுவாயாக வரும் (தொல். 549); பயனிலையை ஏற்கும் (தொல். 550); பெயரெச்சத்தால் தழுவப்படும் (தொல். 926) என்று அதனுடைய செயற்பாடுகளைத் தொடரியல் நிலையில் விளக்கியுள்ளார். தொல்காப்பியர் வினைச்சொல்லுக்கு எதிர்மறை முகத்தானும் உடன்பாட்டு முகத்தானும் இலக்கணம் கூறி யுள்ள முறையும் பெயர்ச்சொல்லுக்கு நேரடியாகவும் மறைமுக மாகவும் விளக்கம் தந்துள்ள முறையும், டயோனிசியேர்ஸ் திராக்சு என்ற மொழியியல் அறிஞர், பெயரையும் வினையையும் விளக்கும் முறையினை நினைவுறுத்துகிறது என்று ஒப்பிட்டுக் காட்டித் தொல்காப்பியரது நுண்ணுணர்வினை ச. அகத்தியலிங்கம் பாராட்டி யுள்ளார்.[16]

பெயர்ச்சொல் — பாகுபாடுகள்

தொல்காப்பியர் பெயர்ச்சொற்களை உயர்திணைக்கு உரியன, அஃறிணைக்கு உரியன, இருதிணைக்கு உரியன என்று மூன்றுவகை யாகத் திணை அடிப்படையில் (தொல். 645) பாடுபாடு செய் துள்ளார். அவர் திணைப்பாகுபாட்டின் அடிப்படையிலேயே பால் பாகுபாடும் செய்துள்ளார். ஒவ்வொரு திணைக்குமுரிய பெயர்ச் சொற்களைப் பாகுபாடு செய்து தொகுத்துக் கூறும்போது பாலறி வந்த உயர்திணை (தொல். 647); பாலறிவந்த அஃறிணைப் பெயர் (தொல். 652) விரவுத்திணையில் பால்தெரிதல் ஆகியவற்றைக் குறிப் பிடுவதிலிருந்து இதனை அறியலாம். ஒருமை, பன்மை ஆகிய இரு வகை எண் வேறுபாட்டினையும் அவர் தெளிவாகப் புலப்படுத்தி யுள்ளார். இரு திணைப் பொதுப்பெயர்களைத் தொல்காப்பியர்

நான்கு இயற்பெயர் (தொல். 661); நான்கு சினைப்பெயர் (தொல். 662): நான்கு சினைமுதற்பெயர் (தொல். 663); நான்கு முறைப்பெயர் (தொல். 664) எனத் தனித்தனி நூற்பாக்களில் தொகுத்துக் கூறி யுள்ளார்.

மேலும் பொருள் அடிப்படையிலும் தொல்காப்பியர் பெயர்ச் சொற்களை வகைப்படுத்தியுள்ளார். நிலப்பெயர், குடிப்பெயர், குழுப்பெயர், வினைப்பெயர், உடைப்பெயர் (தொல். 650); பண்புப் பெயர் (தொல். 598, 619, 625, 650); ஆடியல் பெயர் (தொல். 650) எண்ணியல் பெயர் (தொல். 650); சுட்டுப்பெயர் (தொல். 622, 627, 633); வினாப்பெயர் (தொல். 622, 633) முதலிய வகைப்பாடுகளையும் குறிப்பிட்டுள்ளார். புணர்ச்சி வேறுபாடுகளைக் குறிக்கும் பொருட்டு எழுத்ததிகாரத்தில் சில பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இடக் கர்ப்பெயர் (தொல். 250), படர்க்கைப் பெயர் (தொல். 320) முன்னிலைப் பெயர் (தொல். 320), மரப்பெயர் (தொல். 181, 217, 313, 386, 415, 416), பின்னிடப்பெயர் (தொல். 574), அளபெடைப் பெயர் (தொல். 260, 626, 634), கிளைப்பெயர் (தொல். 605, 618), திசைப் பெயர் (தொல். 201). உணவுப்பெயர் (தொல். 308), நாட்பெயர் (தொல். 331, 286), அளவுப்பெயர் (தொல். 168), நிறைப் பெயர் (தொல். 167), திங்கள் பெயர் (தொல். 250) போன்றவற்றையும் காண முடிகிறது.[17] இங்ஙனம் பலவகைப் பெயர்களைக் கூறியிருப்பினும் மூவகைப் பாகுபாடுகளையே (உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைப்பெயர்) முதன்மையாகக் கொண்டுள்ளார் என்று தோன்றுகிறது. இப்பெயர்களுள் பல அமைப்பிலும் (structure) பயன் வகையிலும் (function) சில சிறப்புத்தன்மைகளைப் பெற்று நடக் கின்றன. அவற்றின் இந்தத் தன்மைகளைக் கொண்டு இலக்கணத் தினை மொழியியல் நோக்கில் ஆராயும் ஆய்வாளர்கள் 1. மாற்றுப் பெயர் அல்லது பதிலி (Pronoun), 2. எண்ணுப்பெயர் (Numeral) 3. தொழிற்பெயர் (Verbal Noun), 4. வினையாலணையும் பெயர் (Participial Noun), 5. இடவேறுபாடு உணர்த்தும் ஆக்கப் பெயர் (Pronominalized Noun), 6. பிற ஆக்கப் பெயர் (Other Derivated Nouns) என்று வகைப்படுத்தி ஆராய்வர்.[18] தொல்காப்பியர் கூறியுள்ள பெயர் களில் மிகுதியும் ஆராயப்பட்டுள்ள மூவிடப் பெயர்கள், தொழிற் பெயர், வினையாலணையும் பெயர் ஆகியன பற்றி இன்று வரை நிகழ்ந்துள்ள ஆய்வினை இனிக் காணலாம்.

மாற்றுப் பெயர்கள் அல்லது பெயர்ப்பதிலிகள்

இப்பெயர்கள் விளி ஏற்பது இல்லை; பெரும்பாலும் பெயரெச்சம், பெயரடை ஆகியவற்றால் தழுவப்படுவது இல்லை. இவற்றுள் (1) மூவிடப்பெயர் (Personal Pronoun), (2) வினாப்பெயர் (Interrogative Pronoun), (3) சுட்டுப் பெயர் (Demonstrative Pronoun), (4) தற்சுட்டுப் பெயர் (Reflexive Pronoun) போல்வன அடங்கும்.

மூவிடப் பெயர்கள்

மாற்றுப்பெயர் வகையில் மூவிடப்பெயரும் ஒன்றாகும். மூவிடப் பெயர் பெயர்களைப் போன்று விளி ஏற்பது இல்லை; பெரும்பாலும்

பெயரெச்சம், பெயரடை ஆகியவற்றால் தழுவப்பட்டு நிற்பதில்லை; பால் வேறுபாடும் உணர்த்துவதில்லை; ஆனால் எண் வேறுபாட்டை உணர்த்தி நிற்கின்றன. வேற்றுமை உருபு ஏற்குங்கால் வடிவம் திரிந்து வழங்குகின்றன. எழுவாயாக நிற்கும்போது தனி வடிவமாகவும் (free from), உருபேற்கும்போது கட்டுண்ட வடிவமாகவும் (bound form) அமைகின்றன.

தன்மைப்பெயர்

தொல்காப்பியர் தன்மை இடப் பெயர்களை உயர்திணைக் குரியன (தொல். 647) என்று குறிப்பிட்டுள்ளார். இவற்றைப் பாலறி வந்த உயர்திணைப் பெயர் என்றே அவர் குறிப்பிட்டுள்ளார். யான், யாம், நாம் என்பனவற்றை ஒருவன், ஒருத்தி என ஆண் பால், அல்லது பெண்பால் எனப் பிரித்துணர முடியாதன எனினும் உயர்திணைக்குரியன என்று அறியப்படுதலால் இம்முறையில் கூறியுள்ளார் என்று உரையாசிரியர்கள் விளக்கம் அளித்துள்ளனர். நன்னூலார் தன்மை இடப்பெயர்களைப் பொதுப்பெயர் (இரு திணைப்பொது) (நன். 282, 285) என்று குறிப்பிட்டுள்ளார். 'நான்' என்பது தன்மை ஒருமை வடிவமாகப் பிற்கால இலக்கண நூல்களில் கூறப்பட்டுள்ளது. இது தொல்காப்பியரால் கூறப்படவில்லை.

நான்

நான் என்ற வடிவம் சங்க இலக்கியத்துள் பரிபாடலில் (பரி. 6,20 காணப்படுகிறது. நான் என்ற சொல்லின் தோற்றம் பற்றிப் பல கருத்துக்கள் நிலவுகின்றன.

நான் என்ற சொல்லின் மொழிமுதல் நகரம் முதலில் மொழி இறுதி மூக்கின மெய்யின் ஆற்றலால் மூக்கினச் சாயல் பெற்று காலப் போக்கில் மூக்கின மெய்யாக நிறைவு பெற்றிருக்கலாம் என்று கே.வி. சுப்பையா கூறியுள்ளார்.[19]

யான் என்ற சொல்லின் மொழிமுதல் யகரம் ஞகரமாகி அதுவே பின்னர் நகரமாகத் திரிந்து 'நான்' என்ற வடிவம் அமைந்திருக்க வேண்டும் என்றும் கருத்து உள்ளது.

யாங்கர்	ஞாங்கர்	
யாழ்	ஞாழ்	
யமன்	ஞமன்	நமன்
ஞாயிறு	நாயிறு	
ஞெமை	நெமை	

போன்ற சொற்களில் இத்தகைய மாற்றம் நிகழ்கிறது. மேலும் 'நாம்' என்ற சொல்லே ஞ் — யாம்>ஞாம்>நாம் என அமைந்திருக்கலாம் என்றும் மலையாள மொழியின் 'ஞான்' என்ற சொல்லே 'நான்' என்ற வடிவுக்கும் முந்தைய வடிவம் என்றும் மொழியியல் அறிஞர் கூறு

வதும் நினையத்தக்கது.[20] நாம் என்ற சொல்லின் ஒப்புமையாக்கத்தால் (analogy) நான் என்ற சொல் தோன்றி, பன்மையில் உள்ள யாம், நாம் என்ற இரு சொற்களைப்போல ஒருமையிலும் இரு சொற்கள் ஆட்சி பெற்றிருக்க வேண்டும் என்றல்[21] ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

தன்மைப் பன்மையில் யாம், நாம் என்னும் இரு வடிவங்களைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆனால் இவற்றுக்குள் பொருள் வேறுபாடு இருப்பதாக அவர் குறிப்பிடவில்லை. 'யாம்' என்பது படர்க்கையை உளப்படுத்தும் பெயர் என்றும், 'நாம்' என்பது முன்னிலையை உளப்படுத்தும் பெயர் என்றும் நச்சினார்க்கினியரும் கல்லாடனாரும் குறித்துள்ளனர்.

யாம் என்பது சங்க இலக்கியத்தில் உளப்படுத்தாத தன்மைப் பன்மையாகவும் உளப்படுத்தும் தன்மைப் பன்மையாகவும் வந்துள்ளது. எனினும் அது பெரும்பாலும் உளப்படுத்தாத தன்மைப் பன்மையாக வந்துள்ளது என்பதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.[22] 'நாம்' உளப்படுத்தும் பெயராகச் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது. யாம், நாம் ஆகிய இரு சொற்களும் உயர்வு ஒருமையிலும் (Honorific Singular) வந்துள்ளன.

தன்மைப் பன்மை விகுதிகள்

தன்மைப் பன்மை விகுதிகளைத் தொகுத்துக் கூறும் நூற்பாவின் (தொல். 687) உரையில், அம், ஆம் என்பன முன்னின்றாரை உளப்படுக்கும். தமராயவழிப் படர்க்கையாரையும் உளப்படுக்கும் என்று இளம்பூரணர் உரைத்துள்ளார். சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் இதே கருத்தினைக் கூறியுள்ளனர். தெய்வச்சிலையாரும் கல்லாடனாரும் இந்நூற்பா உளப்பாட்டுத் தன்மை உணர்த்துவது என்று கூறியுள்ளனர். "உளப்பாட்டுத் தன்மை முன் உணர்த்தத் தொடங்கினான்" என்று கூறுவதால் எம், ஏம் என்பன உளப்படுத்தாத தன்மைப் பன்மை விகுதிகள் ஆகும். ஆனால் உரையாசிரியர்கள் கூறும் இத்தகைய வரையறைகள் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை.[23] உரையாசிரியர்கள் தங்கள் காலத்திலோ அல்லது அதற்கு முன்போ இவ்வாறு வரையறையான வேறுபாட்டோடு வழங்காத விகுதிகளை ஏன் பாகுபடுத்திக் காட்டியுள்ளனர் என அறிய இயலவில்லை.[24]

உளப்பாட்டுப் பன்மை, உளப்படுத்தாப் பன்மை என்ற வேறுபாடு முற்காலத்தில் திராவிட மொழிகளில் இருந்திருக்காது என்றும் முண்டா மொழிக் குடும்பத்தின் தாக்கத்தால் பிற்காலத்தில்தான் இருவகைப் பன்மைகள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் கிரியர்சன் கூறியுள்ளார்.[25] ஆனால் பிற்காலத் திராவிட மொழியியல் அறிஞர் பலரும் தன்மைப் பன்மையில் காணும் இந்த இருவகை வேறுபாட்டினை

முந்தைய திராவிட மொழிக்குரியன என்று வற்புறுத்தி உள்ளனர். தென் திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் இவ் வேறுபாடு ஒரே வகையான வடிவங்களால் குறிக்கப்படுவதால் இது முந்தைய மொழியின் இயல்பாகக் கொள்ளுதல் ஏற்புடையது.

முன்னிலைப் பெயர்

நீ, நீயிர் என்ற இரு முன்னிலைப் பெயர்களைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவற்றை இருதிணைப் பொதுப் பெயர்களாக அவர் குறிப்பிட்டுள்ளார். நன்னூலாரும் இவற்றை இருதிணைப் பொதுப்பெயர்களுக்குள் அடக்கியே கூறியுள்ளார். நன்னூலார் நீவிர், நீர் என்று மேலும் இரு வடிவங்களையும் கூறியுள்ளார். சங்க இலக்கியத்தில் 'நீ' உயர்திணைக்கும் அஃறிணைக்கும் பொது வாகிய விரவுப்பெயராகவே வந்துள்ளது. ஆனால் நீயிர் என்ற பன்மை வடிவம் உயர்திணையில் மட்டுமே வந்துள்ளது; மேலும் அருகியே வழங்கியுள்ளது.[25] தொல்காப்பியர் குறிப்பிடாத 'நீர்' என்ற வடிவம் சங்க இலக்கியத்தில் (நீர் பாடினிர் செலினே' — புறம். 100) ஆட்சி பெற்றுள்ளது. இந்த வடிவம் ஏதேனும் கிளைமொழியில் (Dialect) வழக்கில் இருந்து பின்னர் இலக்கிய வழக்கிலும் ஆட்சி பெற்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது.[27] நீயிர், நீர் என்பன உயர் வொருமைப் பெயர்களாகவும் சங்க இலக்கியத்தில் ('நீயிர் இச்சுரம் அறிதலும்' — பதிற். 49; 'நல்லோர்க்கு ஒத்தனிர் நீயிர்' — அகம். 26) ஆட்சி பெற்றுள்ளன.

படர்க்கைப் பெயர்

தான், தாம் என்ற இரு பெயர்களைத் தொல்காப்பியர் கூறி யுள்ளார். இப்பெயர்களுக்கு உரையாசிரியர்கள் தரும் எடுத்துக் காட்டுகள் இவை படர்க்கை இடப் பெயர்களே என்பதை உணர்த்து கின்றன. கால்டுவெல் "திராவிட மொழிகள் வேறுபல தென்மொழி களைப் போலவே, படர்க்கை இடப்பெயர்களைப் பெற்றிருக்க வில்லை; அவற்றுக்கு மாறாகத் திணை, பால், எண்களை உணர்த்தும் விகுதிகள் இணைந்த சுட்டுப்பெயர்கள் படர்க்கையில் வழங்குகின்றன" என்று கூறியுள்ளார்.[28] பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியும் இவ்வாறே கருதுவர். சுட்டுப் பெயர்கள் படர்க்கை இடத்தில் வழங்குவதால் தமிழில் தனிப்பட்ட படர்க்கை இடப் பெயர்கள் இல்லை என்பர் அவர்.[29] தொல்காப்பியர் 'தான்' என்பது ஒருமையிலும் 'தாம்' என்பது பன்மையிலும் வழங்கும் என்று கூறுகிறாரே தவிர அவை படர்க்கையில் மட்டும் வழங்கும் என்று கூறவில்லை என்று பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி தனது கருத்துக்குச் சான்று காட்டுவர்.[30] ஆர். சாமிநாதஐயர்,[31] கமில் கவலபில்[32] ஆகியோர் 'தான்' 'தாம்' என்பவையே பண்டைக் காலத்தில் படர்க்கை இடப்பெயர்களாக வழங்கி வந்தன; பிற்காலத்தில்தான் சுட்டுப்பெயர்கள் அவற்றின் இடத்தில் ஆட்சி பெற்றிருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளனர். 'தான், தாம்' என்பவைதாம் பண்டைக் காலப் படர்க்கை இடப்பெயர்கள் என்பதைப் பல எடுத்துக்

காட்டுகள் தந்து மோ. இசுரயேல் விளக்கியுள்ளார்.[33] காலப் போக்கில் படர்க்கை இடப்பெயர்களான தான், தாம் என்பவை வழக்கில் பல மாற்றங்களை எய்தின. இடைச்சொல் போலவும், தற் சுட்டு இடப்பெயராகவும் வழங்கின. தொல்காப்பியர் தான் என்பது ஒருமையையும், தாம் என்பது பன்மையையும் குறிக்கும் என்று கூறி யுள்ளார். இக்காலத் தமிழில் இவை ஒருமை பன்மையாகிய வேறு பாட்டையும் இழந்து நிற்கின்றன.

அவன் தான் சென்றான்
நாங்கள் தான் வருவோம்
அவர் தான் கேட்டார்
நீங்கள் தான் கொடுத்தீர்கள்

என்பன போன்ற தொடர்கள் இந்த நிலையை உணர்த்துகின்றன. தாம் என்ற வழக்கு மறைந்து கொண்டிருக்கும் நிலையும் காணப் படுகிறது.

தொழிற்பெயர்

தொல்காப்பியர் பெயருக்கு இலக்கணம் கூறும்போது பெயரில் காலம் தோன்றாது (தொழில் நிலையொட்டு ஒன்றைத் தவிர) (தொல். 554) என்று கூறியுள்ளார். இதனால் பெயரில் காலங்காட்டுகிற வகை ஒன்று உண்டு என்பது பெறப்படுகிறது. இதனை அவர் தொழில் நிலையொட்டு (தொல். 554), தொழிற்பெயர் (தொல். 624), வினைப்பெயர் (தொல். 650, 653), தொழிலிற் கூறும் கிளவி (தொல். 618), வினை (தொல். 631) ஆகிய பெயர்களால் குறிப்பிட்டுள்ளார்.

பல சொற்களின் வேர்கள் பெயருக்கும் வினைக்கும் பொது உரிமையனவாகவும், சில பெயருக்கே உரியனவாகவும், சில வினைக்கே உரியனவாகவும் வழங்குகின்றன. அவற்றுள் தொழிற் பெயர் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவன அனைத்தும் வினைக்கே தனியுரிமை பெற்ற வேர்ச்சொற்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்த சொற்கள் எனலாம். இந்தத் தொழிற்பெயர்கள் வினையின் பண்புகள் சிலவற்றைப் பெற்றும் பயன்பாட்டு நிலையில் பெரும்பாலும் பெயரையே ஒத்தும் செயல்படுகின்றன. தொல் காப்பியர் கூறிய தொழிற்பெயர்களை அவற்றின் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு மூன்று வகையாகப் பகுத்து மோ. இசுரயேல் ஆராய்ந்துள்ளார். அவையாவன : 1. வினையடிச் சொல் (Verbal root) மட்டும் நின்று பெயராதல், 2. வினையடிச் சொல்லோடு சில விகுதிகள் சேர்ந்து நின்று (Verbal root and suffix) பெயராகச் செயல்படுவன, 3. வினைமுற்றே பெயராகச் செயல் படுவது.[34]

வினையடிச் சொல் — தொழிற்பெயர்

ஞ், ண், ந், ம், ல், ள் ஆகிய ஈற்று மெய்களை உடைய வினை யடிச் சொற்களைத் தொழிற்பெயர் என்று தொல்காப்பியர் குறிப்

பிட்டுள்ளார். (தொல். 296, 306, 327, 476, 401). அவை தொடர் மொழியில் வரும்போது உகரச் சாரியை பெறும் என்றும் அவர் கூறி யுள்ளார். இவ்வகைத் தொழிற்பெயர்கள் காலங்காட்டுவது இல்லை. வேற்றுமை உருபையும் பெயரெச்சத்தையும் ஏற்கின்றன. எழுவாயாக நின்று பயனிலையும் கொள்கின்றன. இன்று இவை முதனிலைத் தொழிற்பெயர் என அழைக்கப்படுகின்றன. முதனிலை என்பது பகுதி என்றும் அழைக்கப்படும். இக்காலத் தமிழில் இவ் வகையில் வினைக்கே தனியுரிமை பெற்ற வேர்ச்சொற்கள் பெயராய் அருகியே வழங்குகின்றன.

வினையடிச் சொல்+விகுதி=தொழிற்பெயர்

தொழில்நிலையொட்டில் காலம் தோன்றும் என்று தொல் காப்பியர் (தொல். 554) கூறியுள்ளார். இந்நூற்பாவின் உரையில் காலந்தோன்றும் தொழிற்பெயர், காலந்தோன்றாத் தொழிற்பெயர் என இரண்டு வகையினை இளம்பூரணர் காட்டியுள்ளார்.

> பெயர்ச்சொல் காலந்தோன்றா எனவே, தொழிற்பெயர் காலந் தோன்றுதலும், தோன்றாமையும் உடைய என்பதாம்.
>
> காலந்தோன்றாதன உண்டல், தின்றல் என்பன. இவை அத் தொழில்மேல் நின்ற பெயர். இனிக் காலம் ஒட்டும் தொழிற் பெயராவன உண்டான், தின்றான் என்பன. இவை அத்தொழில் செய்வான்மேல் நின்ற பெயர்.

சேனாவரையரும் இதுபோன்ற வகைப்பாட்டினைக் காட்டியுள்ளார். நச்சினார்க்கினியர் இவற்றையும் உள்ளடக்கி வேறுபல வகைகளை யும் கூறியுள்ளார். பெயரின் வகைகளை அவர் பின்வருமாறு தொகுத்துக் கூறியுள்ளார்.

> இடுகுறியாய்ச் 'சாத்தன்'. 'கொற்றன்' என வரும் பெயர்ப் பெயரும்,
>
> புடைபெயர்ச்சி மாத்திரம் உணர்த்தி நிற்கும் 'உண்டல்', 'தின்றல்' எனவரும் வினைப்பெயரும்,
>
> 'பூசல்' 'வேட்டை' என்றாற்போலப் புடைபெயர்ச்சி விளக்காது நிற்கும் வினைப்பெயரும்
>
> 'உண்டான்', 'தின்றான்'. என்றாற் போலக் காலந்தோன்றி வினைமுதல் மேல் நின்ற படுத்தல் ஓசையான் ஆம் தொழிற் பெயரும்,
>
> ஓசை வேறுபாட்டான் அன்றி 'உண்டவன்', 'உண்ணுமது' என்றாற் போலத் தானே பெயராய்க் காலந்தோன்றி வினை முதல் மேல் நிற்கும் தொழிற்பெயரும்,
>
> 'கொலைவர் கொடுமரம் தேய்த்தார்' (கலி. 12:1) 'அவன் ஏறிற்றுக் குதிரை' என்றாற்போலச் செயப்படு பொருட்கள் காலங்காட்டி நின்ற தொழிற்பெயரும்,

'யான் சொன்னவன்', 'உண்பது நாழி' (புறம். 119:5) என்றாற் போலச் செயப்படுபொருள்மேல் பெயராய்க் காலந்தோன்றி நிற்குந் தொழிற்பெயரும்,

பிறவாற்றான் வரும் பெயர் வேற்றுமையும் உணர்க.

நச்சினார்க்கினியரின் இந்தக் கருத்துப்படி பெயரானது பெயர்ப் பெயர், வினைப்பெயர் என்று இருவகைப்படும் என்று கொள்ளலாம். மேலும் வினைப்பெயரானது தொழிற்பெயர், வினைப்பெயர் என இருவகைப்படும். வினைப்பெயரைப் புடைபெயர்ச்சி உணர்த்தும் வினைப்பெயர், புடைபெயர்ச்சி உணர்த்தாத வினைப்பெயர் என்றும் அவர் பகுத்துள்ளார். இப்பாகுபாட்டின் பயன் என்ன என்பது விளங்கவில்லை. தொழிற்பெயரைக் காலந்தோன்றி, வினை முதல் மேல் நின்ற படுத்தல் ஓசையால் ஆன தொழிற்பெயர், ஓசை வேறுபாடு இன்றித் தானே பெயராய்க் காலந்தோன்றி நிற்குந் தொழிற்பெயர் என்ற இருவகைகளாக அவர் பகுத்துள்ளார். உண்டான், தின்றான் என்னும் வினைமுற்றுக்கள் படுத்தல் ஓசை யால் உண்ணல், தின்றல் என்னும் செயலைச் செய்தவனை உணர்த்தினவாதல் வேண்டும். அவ்வோசை வேறுபாடு இன்றியே உண்டவன், தின்றவன் என்பன வினை செய்தவனை உணர்த்தின. இவ்விரண்டு வகையும் காலந்தோன்றும் தொழிற்பெயர்கள். மேலும் இருவகைத் தொழிற்பெயர்களையும் அவர் கூறியுள்ளார். செய்தவன் மேல் காலத்தை உணர்த்தாது செயப்படுபொருள்மேல் உணர்த்து வன; அவை வினையாயும் பெயராயும் இருவகைப்படும். இவ்வாறு காலம் உணர்த்துதல் தொடர்நிலையில் அமைவதே தவிர, அச் சொல்லுக்கே உள்ளதாகக் கொள்ள முடியுமா என்பது நினையத் தக்கது. மேலும் இப்படிப்பட்ட பாகுபாட்டின் பயன் என்ன என்பதும் விளங்கவில்லை.

காலந்தோன்றாத் தொழிற்பெயர் என. உரையாசிரியர்கள் காட்டும் உண்டல், தின்றல் என்னும் தொழிற்பெயர்கள் வினை யடியும் விகுதியும் சேர்ந்து அமைந்த பெயர்கள் ஆகும். இவை உருபேற்கும்; எழுவாயாக நின்று பயனிலை கொள்ளும். இவை இந்த நிலையில் பெயரைப்போல் செயல்படினும் வினையெச்சத்தை ஏற்கின்றனவே தவிர, பெயரெச்சத்தை ஏற்பது இல்லை. பெயரின் இயல்பாகிய பெயரெச்சத்தை ஏற்கும் நிலை இவற்றுக்கு இல்லை. இவை தொழிற்பெயர் என்றே இக்காலத்தில் அழைக்கப்படுகின்றன. விளக்கத்துக்காக விகுதி பெற்ற தொழிற்பெயர் என அழைப்பதும் உண்டு. இதனையே தொழிற்பெயர் எனக் கமில் சுவலபில் கூறி யுள்ளார்.[35]

வினைமுற்று — தொழிற்பெயர் — (வினையாலணையும் பெயர்)

தொழில்நிலையொட்டுக் காலந்தோற்றும் (தொல். 554) என்ற தொல்காப்பியர் கருத்துக்குச் சேனாவரையர் தரும் உரை இப் பெயரினை விளக்குவதாக அமைந்துள்ளது.

உண்டான், தின்றான் என்னுந் தொடக்கத்துப் பகுத்துச் சொல்லப்படும் தொழிற்பெயர் வினைச்சொல் போலத் திணையும் பாலும் முதலாயினவற்றை விளக்கி, அன் ஆன் முதலாகிய ஈற்றவாய் வருதலின் 'தொழில் நிலையொட்டும்' என்றார் (தொல். 554)

இப்பெயர்கள் வடிவிலும் (form) அமைப்பிலும் (structure) பெரிதும் வினைச் சொல்லைப் போன்றே இருக்கின்றன. ஆனால் பயன்பாட்டு நிலையில் பெயரைப் போன்றே செயல்படுகின்றன. வினைச் சொல் போன்று வினையடியைப் பெற்றுக் காலங்காட்டி நிற்பது இவற்றின் வினைத்தன்மைகள். எழுவாயாக நின்று பயனிலை கோடலும், உருபேற்றலும் இவற்றின் பெயர்த்தன்மைகள். இப் பெயர்களைப் பின்னர் வந்த நன்னூலார் வினையாலணையும் பெயர் என்ற குறியீட்டால் குறிப்பிட்டுள்ளார்.

வினையாலணையும் பெயர்

தொழில்நிலையொட்டும் தொழிற்பெயர் காலம் காட்டும் என்று தொல்காப்பியர் கூறியதை இருவகையாக உரையாசிரியர்கள் பகுத்துக் காலங்காட்டுந் தொழிற்பெயர், காலங்காட்டாத் தொழிற் பெயர் என்று கூறினாலும் தொல்காப்பியர் அதனைக் காலங்காட்டும் என்றே கூறுவதால் அது காலங்காட்டுந் தொழிற்பெயரையே சிறப்பாகக் குறிக்கும் என்று கொள்ளலாம். அதுவே பிற்காலத்து இலக்கணங்களில் வினையாலணையும் பெயர் என்று அழைக்கப் படுகிறது. காலங்காட்டாத பெயர் தொழிற்பெயர் என்று கூறப் படுகிறது.

நன்னூலார் தொழிற்பெயர் படர்க்கையில் மட்டும் வரும் என்றும் வினையாலணையும் பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் வரும் என்றும் கூறியுள்ளார். தொழிற்பெயர் தொழிலை மட்டும் குறிக்கிறது. வினையாலணையும் பெயர் தொழிலையும் தொழில் செய்தவனையும் உணர்த்துகிறது.

வினையாலணையும் பெயரின் அமைப்பு

சுட்டுப்பெயர்கள், அல்லது அவற்றின் விகுதிகளை நிகழ்கால, இறந்தகாலப் பெயரெச்சங்களோடு சேர்ப்பதால் வினையாலணையும் பெயர்கள் உண்டாகின்றன என்று கால்டுவெல் கூறியுள்ளார்.[86]

செய்கிற — (வ்) அன் > செய்கிறவன்

செய்த — (வ்) அன் > செய்தவன்

இவ்வாறு செய்தல் படர்க்கையில் மட்டுமே முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். இங்குக் குறிப்பிடப்படும் செய்த + அவன் என்று அமையும் முறையில் "இடையில் வருகின்ற பெயரெச்சக் குறியீடாகிய (relative participle marker) அகரம் தேவையற்றது.

மேலும் "வருபவன்" போன்ற எதிர்கால வினையாலணையும் பெயர் களும் 'வந்தேன்', 'வந்தாய்' என்பன போன்ற முக்காலத் தன்மை, முன்னிலை வினையாலணையும் பெயர்களும் அங்ஙனம் விளக்கம் தருவதற்கு அமையாது போய்விடுகின்றன. ஏனெனில் 'செய்யும்' என்பது போன்ற எதிர்காலப் பெயரெச்சத்தோடு அன்/அவன் இணைவது அருமை. தன்மை முன்னிலை வினையாலணையும் பெயர் ஆக்கத்திற்குச் சுட்டுப்பெயர் துணைபுரிவது இல்லை; எனவே அவர் கூற்றுப் பொருத்தமற்றது ஆகும்" என்று மோ. இசுரயேல் மறுத்துள்ளார். தொடர்ந்து "வினையாலணையும் பெயர்கள் வினையெச்சத்தோடு இடப்பெயர் விகுதிகளை (personal terminations) இணைப்பதால் ஆக்கப்படுகின்றன',[37] என்று எல். வி. இராமசாமி அய்யரின் கூற்றினை எடுத்துக்கூறி, இதிலும் வினையெச்சக் குறியீடுகள் (Verbal participle marker) அமையும் வகை தெளிவாக்கப்படவில்லை; எதிர்கால வினையாலணையும் பெயருக்கும் விளக்கம் கூறப்படவில்லை; ஆதலால் இதுவும் பொருந்தவில்லை என்று விளக்கியுள்ளார். அவர் வினையாலணை யும் பெயரின் அமைப்பினைப் பின்வருமாறு விளக்குவர்.

> வினையாலணையும் பெயரில் வினைமுற்றில் அமைந்துள்ள பகுதி, காலமறி கிளவி, இடமறி கிளவி, பாலறி கிளவி ஆகிய அதே உருபன்கள் (Morphems) அமைந்துள்ளன என்பதுவே மிக எளிமையும் பொருத்தமும் ஆகும்.

அமைப்பு முறை (Structural types) வகைகள்

1. வருபவன் — — அவன் — — அவ —
2. வருவான் — — ஆன் — — ஆ —
3. வருவோன் — — ஓன் — — ஓ —

—அவ — — ஆ — — ஓ — இவை மூன்றும்,

> படர்க்கை இடமறி கிளவிகள் (third person markers) ஆகும். ஒரே பொருள் உடையவை. —ஆ—, —ஓ— வாதலைத் தொல்காப்பியமே (தொல். சொல். 211, 195) குறிப்பிடுகிறது[38]

என்று விளக்கம் தந்துள்ளார். வினையாலணையும் பெயர் அமைப்பில் வினைமுற்றைப் போலவே உள்ளதால் இவ்விளக்கம் பொருந்தக் கூடியது எனலாம்.

ஓசைவேறுபாடும் வினையாலணையும் பெயரும்

சேனாவரையர் "உண்டான், தின்றான் என்னுந் தொடக்கத்துப் படுத்துச் சொல்லப்படும் தொழிற்பெயர் வினைச்சொற் போலத் திணையும் பாலும் காலமும் முதலாயினவற்றை விளக்கி, அன், ஆன் முதலாகிய ஈற்றவாய் வருதலின் தொழில்நிலையொட்டும் என்றார்" என்று கூறுவதால் வினைமுற்றினின்றும் வினையாலணையும் பெயர் வேறுபடுவதற்கு அடிப்படை படுத்துச் சொல்லப்படுவது அல்லது ஓசை வேறுபடுவது என்று தெரிகிறது.

ஓடுவான் என்ற சொல் வினைமுற்றாயிருக்கும்போது முதலசை யில் எடுத்தல் ஓசையும், அதுவே வினையாலணையும் பெயராக நிற்கும் போது ஈற்றசை பாலுணர்த்தும் சிறப்பால் அதன்கண் எடுத்தல் ஓசையும் அமைந்திருத்தல் காண்க

என்று மு. வரதராசன் கூறியுள்ளார்.[39] அ. சதாசிவமும் இத்தகைய வேறுபாடு இவற்றிடை உண்டு என்று குறிப்பிட்டுள்ளார்.[40] வினை யாலணையும் பெயரில் எடுத்தல் ஓசை உண்டு என்றாலும், அவ் வேறுபாடே வினைமுற்றையும் வினையாலணையும் பெயரையும் வேறுப்படுத்திக் காட்டுவது ஆகாது. இந்த வேறுபாட்டினைத் தொடர் நிலையிலேயே (syntatical level) அறிய இயலும்[41] என்னும் கருத்து ஏற்புடையது.

வினையடைப் பெயர்

இந்த வகைப் பெயரினைத் தொல்காப்பியமோ, பிற்கால இலக்கண நூல்களோ எடுத்து விளக்கவில்லை. ஒன்பது வகை வாய்ப்பாடுகளில் வினையெச்சங்களைத் தொகுத்துக் கூறிய தொல் காப்பியர் (தொல். 713) அதனைத் தொடர்ந்து,

பின்முன் கால்கடை வழிஇடத்து என்னும்
அன்ன மரபின் காலங் கண்ணிய
என்ன கிளவியும் அவற்றியல் பினவே (தொல். 714)

என்னும் நூற்பாவினைக் கூறி இவையும் வினையெச்சத்தின் இயல் பினைப் பெற்று நடப்பன என்று உணர்த்தியுள்ளார். 'காலங் கண்ணிய' என்று தொல்காப்பியர் இவற்றைக் குறிப்பிடுவதால் இவற்றினை வினைத்தன்மை உடையனவாகவே அவர் கருதி யுள்ளார். ஆனால் இச்சொற்கள் வேற்றுமை உருபு ஏற்றல், சாரியை ஏற்றல், பெயரெச்சம், பெயரடை ஆகியவற்றால் தழுவப்படுதல் ஆகிய பெயர்த்தன்மைகளைக் கொண்டுள்ளன; அமைப்பில் இவை பெயர்களே. ஆனால் தொடர்நிலையில் இவை ஓரளவு பெயர் களாகக் காணப்படினும், பெருமளவில் வினையடைகளாகச் செயலாற்றுவதனால் இவற்றை வினையடைப் பெயர்கள் எனக் கொள்வர் மோ. இசுரயேல்.[42] தொல்காப்பியர் ஏழாம் வேற்றுமைக்குக் கொடுத்துள்ள சொல்லுருபன்களில் பெரும்பாலானவை வினை யடைப் பெயர்களே எனவும் அவர் கருதுகிறார்.[43]

பெயர்களைத் தொல்காப்பியர் உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர், இருதிணைக்கும் உரிய பெயர் என மூவகை யாகப் பாகுபடுத்தியுள்ளார். வேறு சிலவகைப் பெயர்களை அவர் கூறியுள்ள போதிலும் இந்த மூவகைப் பாகுபாடே அவரால் முதன்மை யானதாகக் கருதப்பட்டுள்ளது. தொல்காப்பியர் கூறிய பெயர்கள் மொழியியல் ஆய்வாளர்களால் அமைப்பு, பயன்பாடு ஆகிய வற்றைக் கொண்டு பலவகையாகப் பாகுபடுத்தி ஆராயப் பட்டுள்ளன. மூவிடப் பெயர்களுள் தன்மை ஒருமையில் நான் என்னும் வடிவம் புதிதாகத் தோன்றிய முறை ஆராயப்பட்டுள்ளது.

தன்மைப் பன்மை விகுதிகளாகத் தொல்காப்பியர் கூறியவற்றை உரையாசிரியர்கள் உளப்பாட்டுத் தன்மை, என்றும் உளப்படுத்தாத தன்மை என்றும் பாகுபடுத்தினர். உளப்பாட்டுத் தன்மைப் பொருண்மை மொழிவளர்ச்சியில் தோன்றிய மாற்றம் ஆகும்; வளர்ச்சி நிலையும் ஆகும். தொல்காப்பியர் கூறிய தொழில்நிலை யொட்டு என்பதனை ஒட்டி உரையாசிரியர்கள் காலம் காட்டும் தொழிற்பெயர், காலங்காட்டாத தொழிற்பெயர் எனப் பாகுபடுத்தி னர். காலங்காட்டுவது வினையாலணையும் பெயர் எனவும் காலங் காட்டாதது தொழிற்பெயர் எனவும் பிற்காலத்தாரால் கொள்ளப் பட்டன. வினையாலணையும் பெயரின் அமைப்பு, செயல்பாடுகள் பற்றிய விளக்கங்கள் கிடைத்துள்ளன. வினையெச்சப் பொருண்மை யுடையனவாகத் தொல்காப்பியர் கூறிய பின், முன், கால், கடை, வழி, இடத்து ஆகியனவும் ஏழாம் வேற்றுமைக்குத் தந்துள்ள சொல்லுருபன்களில் பலவும் வினையடைப் பெயர்கள் என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

வினைச்சொல்

வினைச்சொல் இலக்கணம்

வினை என்பது வேற்றுமை ஏற்காது; காலத்தை உணர்த்தி நிற்கும் (தொல். 683) என்று தொல்காப்பியர் வினைச்சொல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடனார் ஆகிய உரையாசிரியர்கள் இது வினைச்சொற்களுக்கு எல்லாம் பொது இலக்கணம் என்று உரைத்துள்ளனர்.

> வினை என்பது தொழிற்சொல் ஆதலின் அது வேற்றுமை கொண்டு நிற்பதும் ஒருநிலை உண்டு. அந்நிலை ஒழியக் காலத்தோடு பொருந்தி நிற்குமது நம்மால் வினைச்சொல் என வேண்டப் பட்டது (தொல். 683)

என்று தெய்வச்சிலையார் கூறியுள்ளார். வினைச்சொல் தொழிலை உணர்த்தி தொழிற்பெயராக வருங்காலத்து வேற்றுமை உருபு ஏற்பதால் அதனை நீக்கிக் காலத்தோடு பொருந்திய சொல்லையே வினைச்சொல் எனக் கொள்ள வேண்டும் என்று அவர் கருதியுள்ளது பொருத்தமே. இந்த நூற்பா வினைச்சொல்லின் இலக்கணம் கூறு கிறது என்று உரையாசிரியர்கள் கூறுவதைப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி மறுத்துள்ளார். பொருளின் புடைபெயர்ச்சியை உணர்த்துதல் வினைக்குச் சிறப்பிலக்கணமாக இருக்க, இந்த நூற்பாப் பொருளை வினையிலக்கணமாகத் தொல்காப்பியர் கூற மாட்டார்; வினை என்ற பெயரே அதன் பொருளை உணர்த்தி நிற்கிறது என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.[44] ஆ. வேலுப் பிள்ளை[45]யும் இதே கருதினர். நன்னூலார் சற்று விளக்கமாக,

> செய்பவன் கருவி நிலம்செயல் காலம்
> செய்பொருள் ஆறும் தருவது வினையே (நன். 320)

என்று உரைத்துள்ளார். நன்னூலார் இவ்வாறு வினைச்சொல் மேற் குறித்த ஆறுபொருள்களையும் உணர்த்த வேண்டும் என்று கொண்டதற்குக் காரணம் தெரியவில்லை என்பர் ஆ. வேலுப் பிள்ளை.[46] இதன் காரணம் தொல்காப்பியர் வேற்றுமை மயங் கியலில்,

> வினையே செய்வது செயப்படு பொருளே
> நிலனே காலம் கருவி என்றா
> இன்னதற்கு இதுபயன் ஆக வென்னும்
> அன்ன மரபின் இரண்டொடுந் தொகைஇ
> ஆயெட் டென்ப தொழில்முதல் நிலையே (தொல். 596)

எனத் தொழிலினது முதனிலைகள் எட்டு எனக் கூறுவதே நன் னூலாருக்கு வினை இலக்கணம் கூறும் செய்தியின் அடிப்படையாக அமைந்திருத்தல் வேண்டும். ஆனால் தொல்காப்பியர் வேற்றுமை மயக்கம் கூறும் பகுதியில் அதை வினையின் இலக்கணமாகக் கூறாமல் வினையடிப்படையில் அமையும் வேறுபட்ட வேற்றுமைப் பொருள் தோன்றுதற்குக் காரணங்களைச் சுட்டுதற் பொருட்டே கூறியுள்ளார் என்று மோ. இசுரயேல் விளக்குவது பொருத்தமாகத் தோன்றுகிறது:[47] தொல்காப்பியர் சொல்லின் புறநிலை அமைப்பில் இலக்கணம் கூறியுள்ளார். நன்னூலார் வினைச்சொல் எவற்றை எல்லாம் தரும் எனப் பொருள்நிலை நோக்கில் உரைத்துள்ளார்.[48] பெயர் எழுவாயாக வருவதைக் குறிப்பிட்டும் தொல்காப்பியர் (தொல். 550) வினை எழுவாயாக வரும் என்று குறிப்பிடவில்லை. எனவே வினை எழுவாயாக அன்றிப் பயனிலையாகவே வரும். இரண்டாம் வேற்றுமைப் பொருளைக் கூறுங்கால் வினையும் வினைக் குறிப்பும் செயப்படு பொருளை ஏற்று வருதலைச் (தொல். 555) சுட்டியுள்ளார். வினைச்சொல் வினையெச்சத்தால் தழுவப் படுவதை எச்சவியலில் (தொல். 915) குறித்துள்ளார். வினைச்சொல் வினையடைகளால் (adverbs) தழுவப்படுவதை மொழியின் வழக்கில் காண்கிறோம். இவற்றைக் கொண்டு வினைச்சொல்லின் இலக் கணத்தை வேற்றுமை ஏற்காது; காலங்காட்டும்; வினைமுற்று தொடர்நிலையில் பயனிலையாகவே வரும்; வினையெச்சத்தாலும் வினையடையாலும் தழுவப்படும்; செயப்படுபொருள் குன்றா வினைகள் செயப்படு பொருளைத் தாங்கி நிற்றல் இயலும்; பெரும் பாலான வினையடிகள் ஏவல் ஒருமையாகச் செயல் ஆற்றும் என்று கூறலாம்.

வினைச்சொல்லின் அமைப்பு

தொல்காப்பியர் வினை விகுதிகளையும் (தொல். 687-692, 701, 702) வினையில் தோன்றும் பாலறி கிளவிகளையும் (491) பகுத்துக் கூறியுள்ளார். நன்னூலாரோ வினையைப் பகுதி, விகுதி, இடை நிலை, சாரியை, சந்தி, விகாரம் எனப் பகுத்து ஆராய்ந்துள்ளார். தொல்காப்பியர் தொடரியலுக்கே பெரிதும் முக்கியத்துவம்

கொடுப்பதால் பெயர், வினை இவற்றின் அமைப்பு நிலைகளைப் போதிய அளவு விளக்கவில்லை.

வினையின் வகைகள்

தொல்காப்பியர் வினையை வினை, குறிப்பு என்று அமைப்பு அடிப்படையில் பாகுபாடு செய்துள்ளார். மேலும் உயர்திணைக் குரியன, அஃறிணைக்குரியன, இருதிணைக்கும் உரியன எனப் பொருள் அடிப்படையிலும் பாகுபடுத்தியுள்ளார்.

வினையும் குறிப்பும்

வினை என்றும் குறிப்பு என்றும் பாகுபாடு செய்த தொல் காப்பியர் குறிப்பினை வினைக்குறிப்பு (தொல். 555) என்றும் குறிப் பிட்டுள்ளார். வினைக்குறிப்பு என்று தொல்காப்பியர் கூறியதனை இளம்பூரணர் 'குறிப்பு வினை' என்பர். பிற்கால இலக்கண நூலார் தொல்காப்பியர் கூறிய வினை, வினைக்குறிப்பு என்பவற்றை முறையே தெரிநிலைவினை, குறிப்புவினை என்பர். ''வெளிப்படக் காலம் விளங்காதன குறிப்பு வினை'' (தொல். 685) என்று இளம் பூரணர் குறிப்பு வினைக்கு விளக்கம் தந்துள்ளார். காலம் வெளிப் படத் தெரியும் நிலையுடைய வினை தெரிநிலை வினை, காலம் குறிப்பாகத் தெரியும் வினை குறிப்பு வினை எனப் பிற்கால இலக்கண நூல்களில் கொள்ளப்பட்டன.

குறிப்பு வினை

குறிப்பு வினை அல்லது வினைக்குறிப்பு எனப் பிற்காலத்தில் வழங்கப்படுவதை தொல்காப்பியர் வினை என்ற சொல்லால் எங்கும் குறிக்கவில்லை என ஆ. வேலுப்பிள்ளை கூறியுள்ளார்.[43] 'வினைக் குறிப்பு' (தொல். 555) என்று அவர் கூறுவதாலும் பிற இடங்களிலும் வினையோடு சேர்த்து அதன்வகை போலவே ஆண்டுள்ளதாலும் அவர் குறிப்பு என்று கூறுவது வினையின் வகையாகக் கொள்ளப் படுவதில் ஐயப்பாடு இருக்க வழிஇல்லை.

குறிப்புவினையில் 'குறிப்பு' என்பதால் குறிப்பாக உணர்த்தப் படுவது காலமா அல்லது வினையா என்பதும், அது பெயரினின்று எவ்வகையில் வேறுபடுகின்றது என்பதும் பற்றி ஒருமித்த கருத்து ஆய்வாளர்களிடையே காணப்படவில்லை.

தொல்காப்பியர் குறிப்பு வினையையும் வினையைப் போன்று உயர்திணைக்குரியன, அஃறிணைக்குரியன, இருதிணைக்கும் உரியன (தொல். 686) என்று வகைப்படுத்தி உள்ளார். மேலும் உயர்திணை அஃறிணை இரண்டிலும் வழங்கும் குறிப்பு வினை களையும் தெளிவாகக் கூறியுள்ளார். உயர்திணையில் உடைமைப் பொருள், இடப்பொருள் ஒப்பு, பண்பு, ஆகிய பொருள்களோடு அன்மை, இன்மை, உண்மை, வன்மை ஆகிய சொல்லடிகளைக் கொண்டும் குறிப்பு வினை தோன்றும் (தொல். 698); அஃறிணையில்

இன்று, இல, உடைய, உடைத்து ஆகிய சொற்களும் பண்பினால் ஆகிய சினைமுதற்கிளவியும், ஒப்பொடு வரும் கிளவியும் குறிப்பு வினைகளாகத் தோன்றும் (தொல். 705) எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இருதிணைக்கும் உரிய வினைகளைத் தொகுத்துக் கூறும் நூற்பாவின்கண் இன்மை செப்பல், வேறு (தொல். 707) ஆகியவற்றை நச்சினார்க்கினியர் குறிப்பு வினைகள் எனக் கொண்டுள்ளார். இவற்றுள் வேறு என்பதனை மட்டும், குறிப்பு எனையாகச் சேனாவரையர் கருதுவதாகத் தோன்றுகிறது. பிற்காலத்தில் வேறு, இல்லை, உண்டு என்பன ஐம்பால் மூவிடங்களுக்கும் உரியனவாகக் கருதப்பட்டன. (நன். 338)

குறிப்பும் காலமும்

குறிப்பு என்று தொல்காப்பியர் சுட்டுவது காலக்குறிப்பா அல்லது வினைக்குறிப்பா என்பது பற்றி உரையாசிரியர்கள் காலத்திலிருந்து இன்றுவரை வேறுபட்ட கருத்துக்கள் உரைக்கப்பட்டுள்ளன.

"நினையுங்காலைக் காலமொடு தோன்றும்" (தொல். 683) என்று தொல்காப்பியர் கூறுவதற்குப் பொருளாக

> வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளக்காதனவும் உள; அவை ஆராயுங்கால் காலம் உடைய என்றற்கு 'நினையுங் காலை' என்றார் (தொல். 683)

என்று சேனாவரையர் வரையறுத்துள்ளார். நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் இதனை உடன்பட்டே உரை எழுதியுள்ளனர்.

காலம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைப்படும் எனக்கூறி அந்த மூன்று காலங்களும் குறிப்பொடும் கொள்ளும் (தொல். 685) என்று தொல்காப்பியர் கூறியதனால், "வெளிப்படக் காலம் விளக்காதன குறிப்புவினை" என்று இளம்பூரணரும், சேனாவரையரும் உரைத்துள்ளனர். தெய்வச்சிலையாரும்

> காலந் தோற்றாது எனவே குறித்துக் கொள்ளப்படும் வினைச் சொல்லும் உள என்றவாறாம்.
>
> எ-டு: உடையன் என்பது முன்பு உடையன், இப்போது உடையன், பின்பு உடையன் என மூன்று காலத்திற்கும் வடிவு வேற்றுமைப்பட நில்லாமையின், காலம் குறித்துக் கொள்ளப் பட்டது

என்று உரைத்துள்ளார். சொல்லில் காலம் உணர்த்தும் தன்மை இல்லாததால் அதன் காலம் குறிக்கப் பிற சொற்கள் தேவைப் படுகின்றன என்று அவர் கருதியுள்ளது பொருத்தமே. இவ்வாறு உரையாசிரியர்கள் குறிப்பு என்பது காலக்குறிப்பை எனக் கருதுவதற்குக் காலமும் குறிப்பும் சேர்த்துக் கூறப்படும் தொல்காப்பிய நூற்பாக்களும் துணையாக அமைந்தன. அவை வருமாறு:

1. அம்முக் காலமும் குறிப்பொடு கொள்ளும் (தொல். 682)
2. காலமும் குறிப்பொடு தோன்றும் (தொல். 698)
3. குறிப்பே காலம் (தொல். 699)
4. குறிப்பொடு வருஉங் காலக்கிளவி (தொல். 700)
5. குறிப்பொடு வருஉங் காலக் கிளவி (தொல். 706)

எனவே, குறிப்பாகக் காலங்காட்டுவது குறிப்புவினை என்று பிற்கால இலக்கணங்களால் கொள்ளப்பட்டது. இதன் இத்தன்மையால் இதற்கு இலக்கணமும் பெயரும் அமைந்தன.

தொல்காப்பியர் குறிப்பு வினையும் காலம் காட்டும் என்றே கூறியுள்ளார்.

> குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக் காலமொடு வருஉம் வினைச்சொல் எல்லாம்

என்ற அடிகள் (தொல். 684) இதனை மெய்ப்பிக்கின்றன. சேனா வரையரும் இதனை உணர்ந்து,

> 'மெய்ந்நிலையுடைய' என்றது, விளங்கித் தோன்றாவாயினும் காலம் வினைக்குறிப்போடு மெய்ம்மையென வலியுறுத்தியவாறு (தொல். 685)

என்று உரைத்துள்ளார். கல்லாடனாரும் இக்கருத்தினை வேறொரு நூற்பாவின்கண்

> வினைக்குறிப்பிற்கும் காலம் உண்டே என்பது வலியுறுத்தற்குப் பின்னும் ''காலமொடு தோன்றும்'' என்றார் (தொல். 686)

என்று உரைத்துள்ளார். ஆனால் அவர் 'மெய்ந்நிலை' என்பதற்கு வேறு வகையான விளக்கம் தந்துள்ளார்.

> 'மெய்ந்நிலை' என்பது வினைக்குறிப்புக் காலத்தைத் தெற்றென விளக்கிக் காட்டாமையின் வினையல்ல என்று கருதினும் கருதற்க. இதுவும் வினையது இலக்கணம் மெய்ம்மையாக உடையது (தொல். 685)

என்று கூறுவதால் குறிப்பு வினையை வினையாகக் கொள்வதனை ஏற்றுக் கொள்ளாதோரும் அவர் காலத்து இருந்திருப்பர் என்றும் அவர்களை மறுப்பதற்காகக் கூறப்படும் கருத்து இது என்றும் எண்ணத் தோன்றுகிறது. உரையாசிரியர்கள் இங்ஙனம் விதப்புக் கிளவிகளைத் தம் கருத்தினை நிறுவுவதற்குப் பயன்படுத்திக் கொள்ளும் வழக்கம் உடையவர்கள் என்பதும் ஈண்டு நினையத் தக்கது.

குறிப்பும் வினையும்

குறிப்பு என்னும் சொல்லைக் காலத்தோடு சேர்த்துத் தொல் காப்பியர் கூறுவது குறிப்பாகக் கொள்ளப்படுவது காலம் என்று

எண்ண வைத்தது போன்று, 'வினைக் குறிப்பு' எனத் தொல் காப்பியர் கூறியது குறிப்பால் கொள்ளப்படுவது வினை என்றும் உரைக்கத் தூண்டியது.

"குறிப்பினும் வினையினும்" என்ற தொடருக்கு (தொல். 686) குறிப்புப் பொருண்மைக்கண்ணும் தொழிற்பொருண்மைக் கண்ணும் என்று இளம்பூரணர் உரைசெய்துள்ளார். இந்தக் குறிப்புப் பொருண்மை என்ன என்று அவர் விளக்கவில்லை. சேனாவரையர் இதனை விளக்கியுள்ளார்.

> கரியன், செய்யன் என்புழித் தொழின்மை தெற்றென விளங்காது குறித்துக் கொள்ளப்படுதலின் குறிப்பென்றார்

என்று அவர் உரைப்பது குறிப்பால் விளங்குவது வினை என்பதை உணர வைக்கிறது.

நன்னூலார் வினைக்குறிப்பினை விளக்குவதும் குறிப்பு என்பது வினையை உணர்த்துவது என்று கொள்ளத் துணை செய்கிறது.

> பொருள் முதல்ஆறினும் தோற்றி முன்னாறனுள்
> வினைமுதல் மாத்திரை விளக்கல் வினைக்குறிப்பே
> (நன். 320)

வினைக்குறிப்பு வினைமுதலை மட்டும் விளக்குகிறது என்பது அவரது கருத்து. குறிப்பு வினையில் அடிச்சொல் அவ்வினைமுதலை உணர்த்துகிறது என்று கொள்ள வேண்டும். அவ்வாறு குறிப்பு வினையடிகள் பிறவினையடிகளைப் போன்று முன்னிலை ஒருமை ஏவலாக வழங்குவது இல்லை. இவற்றால் குறிப்பாகக் கொள்ளப் படுவது வினை (தொழின்மை) என்பதும் கொள்ளமுடிகிறது. இக் கருத்துக்கும் பின்வரும் சான்றுகள் தொல்காப்பியத்தில் காணப்படு கின்றன.

1. வினைக் குறிப்பு (தொல். 555)
2. குறிப்பினும் வினையினும் (தொல். 686)
3. வினையினும் குறிப்பினும் (தொல். 910)
4. வினையும் குறிப்பும் (தொல். 915)

இந்த இரண்டு அடிப்படையிலும் தொல்காப்பியத்தில் காணப்பட்ட தொடர்களும், உரையாசிரியர்கள் உரைத்தனவும், குறிப்பு என்பது காலக்குறிப்பு என்றும் வினைக் குறிப்பு எனவும் பிற்காலத்திலும் இரு சாரார் கொள்ளக் காரணமாயின. இவ்விரண்டோடன்றி குறிப்பால் கொள்ளப்படுவது பொருண்மை; அது தெற்றென விளங்காது நிற்கும் இடமும் உண்டு என்ற கருத்தினைத் தெய்வச்சிலையார் உரைத்துள்ளார்.

"குறிப்பொடு கொள்ளும் என்ன குளவியும்" என்று ஓதிய வதனால் காலம் குறித்தலே அன்றி, ஈண்டு ஓதப்பட்ட

பொருண்மை புலப்பட நில்லாது குறித்துக் கொள்ள நிற்கும் சொல்லும் வினைக் குறிப்பாம் என்றவாறு

அன்மை, இன்மை, உண்மை, வன்மை (தொல். 699) ஆகிய பொருண்மைகள் புலப்பட நில்லாது; குறிப்பாகக் கொள்ளப்படும் என்று தெய்வச்சிலையார் கூறுவது பொருந்துவதாகத் தோன்ற வில்லை.

காலக்குறிப்பும் வினைக்குறிப்பும்

குறிப்புவினை குறிப்பாகக் காலங்காட்டும் வினைச்சொல்லே என்று சிலரும்[50] வினை, குறிப்பு என்பவை பகுதியின் அமைப்பை ஒட்டியே பிரிக்கப்பட்டுள்ளன; அவை காலம் தெளிவாகக் காட்டு கின்றனவா, இல்லையா என்னும் அடிப்படையில் இப்பாகுபாடு அமையவில்லை என்று ஒரு சாராரும்[51] உரைத்துள்ளனர். எனினும் குறிப்பு என்பதில் காலமும், வினையும் அமைந்துள்ளன என்று கொள்ளுதல் பொருந்தும்.[52] இவ்வாறு கொள்ளுவது தொல்காப்பிய நூற்பாக் கருத்துக்களுக்கும் உரையாசிரியர்கள் கொள்கைக்கும் உடன்பாடாகிறது.

குறிப்பு வினையை உரையாசிரியர்கள் வேறுவகையிலும் விளக்கியுள்ளனர். பெயரினின்று வினைக்குறிப்பை வேறுபடுத்திக் காட்டும் வகையில் சேனாவரையர் விளக்கம் தந்துள்ளார்.

> "தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங்கடை" (தொல். 554) எனத் தொழிற்பெயர் அல்லன காலந்தோன்றா என்றமையால், கச்சினான், இல்லத்தான் என்பன காலம் விளக்காமையால், குறிப்பால் காலம் விளக்குவன வினைக் குறிப்பாதல் பெறுதும். அல்லதூஉம் வினைக்குறிப்பும் காலம் தோன்றுதலை இலக்கண மாக உடைய வினைச் சொல்லே ஆதலின் தெற்றென விளக்கா ஆயினும் காலமுடைய எனவே படும். பெயர்க்கு அன்னதோர் இலக்கணமின்மையின் காலந்தெற்றென விளக்குவன உளவேற் கொள்வதல்லது, காலம் விளக்காத பெயரும் காலம் உடையன என உய்த்துணருமாறில்லை. அதனாலும் குறிப்பால் கால முணர்த்துவன வினைக்குறிப்பே என்பது பெறப்படும் என்க

காலங்காட்டல் பெயர் இலக்கணம் அன்று; அது தெளிவாகவோ குறிப்பாகவோ காலங்காட்டுதல் இல்லை. குறிப்புவினை குறிப்பாகக் காலங்காட்டுகிறது. அதனால் அப்பெயரிலிருந்து குறிப்புவினை வேறுபடுவது குறிப்பாகக் காலங்காட்டுவதாலேயே என்றும், குறிப் பாகக் காலம் காட்டலே குறிப்புவினையின் இலக்கணம் என்றும் சேனாவரையர் கூறுவதாகத் தோன்றுகிறது.

செயப்படுபொருள் விளங்க நில்லாதது குறிப்புவினை என்பது கல்லாடரின் கருத்து. அவர் அதனை ஓர் எடுத்துக்காட்டின் மூலம் விளக்கியுள்ளார்.

> வினை என்னாது வினைக்குறிப்பு என்றது என்னையோ எனின் மரம் குறைத்தான் என்புழிக் குறைக்கப்படுதல் என்பது போலாகாது, குழையையுடையவன் என்புழிக் குழையி னுடைமைப்பாடு செயப்படு பொருளாய் விளங்கி நில்லாமையின் வேறு கூறினார் என்பது (தொல். 555)

இது தொடர்நிலை அமைப்பை ஒட்டித் தரும் விளக்கமாக அமைந் துள்ளது.

தெய்வச்சிலையார் வினைக்குறிப்பு என்பது தனிவகை என்று எண்ணுவதாகத் தோன்றுகிறது. அதுச்சொல் வேற்றுமை உடைமை யானும் (தொல். 698) என்று தொடங்கும் நூற்பா உரையில் இத்தகைய கருத்தினை அவர் தெரிவித்துள்ளார்.

> உடைமையாவது உடையானும் உடைப்பொருளும் தோன்ற வரும். சாத்தனது உடைமை குழை என்பது. இதனுள் உடைப் பொருளை முந்துறக் கிளக்குங்கால் குழையை உடைய சாத்தன் எனவரும். ஆண்டு உடையன் என்பது பெயருமின்றி வினையு மின்றி நின்றதாயினும், உருபேலாது வினைச்சொல் போல நிற்றலின் வினைக்குறிப்பெனக் குறிபெற்றது

என்று அவர் விளக்குவதால் இது பெறப்படுகிறது.

குறிப்பு வினையின் அமைப்பு

தொல்காப்பியர் குறிப்பு வினைகளுக்குக் கூறிய பொருள் அடிப்படையினைக் கொண்டு உரையாசிரியர்கள் குறிப்பு வினைக்குத் தரும் எடுத்துக் காட்டுகளின் அமைப்பினை ஆராய்ந்தால் அவற்றின் பகுதிகள் மூன்று அடியிலிருந்து தோன்றி யனவாகக் காணப்படுகின்றன. முதல்வகை பெயரடிகளாகவும் (கச்சு + இன் + அன் > கச்சினன்; கழல் + இன் + அன் > கழலினன்), இரண்டாம் வகை பெயரடை அடிகளாகவும் (அகம் + த் + அன் + அ > அகத்தன; களிறு + இன் + அர் > களிற்றினர்; கண் + ஏம் > கண்ணேம்), வேறு சில இவ்விரண்டிலும் அடங்காதனவாகவும், வினையடிகளிலும் அடங்காதனவாகவும் உள்ளன. இவற்றோடு சாரியைகளையும், திணை, பால் விகுதிகளையும் இணைப்பதால் குறிப்பு வினைகள் தோன்றுகின்றன. இந்த மூவகை அமைப்பினை எல். வி. ராமசாமி அய்யர் எடுத்துக்காட்டியுள்ளார்.[13] அ அதன் அடிப்படையில் இவற்றை,

1. பெயரடியாகத் தோன்றும் ஆக்கப் பெயர்கள்
   கச்சு + இன் + அன்
   கண் + ஏம்
2. பெயரடை அடியாகத் தோன்றும் பெயர்கள்
   கரியன், செய்யன் முதலியன
3. பிற அடியுடன் அமையும் குறைவினைகள்
   அல்லது, உளன், உள முதலியன

என்று மூன்று வகையாக மோ. இசுரயேல் பகுத்துக் காட்டியுள்ளார்.[14]

பழந்திராவிட மொழிகளின் எந்தப் பெயரையும், பெயரடையை யும் வினைவிகுதி வடிவங்களையும் இணைத்து வினையாக மாற்ற முடியும். இந்த வினை எண், இடம் ஏற்றுவந்தாலும் நிகழ்காலத்திற்கு உரியதாக அமையும்; ஏன் என்றால் அதில் காலக்குறிப்பு இருக்காது என்று கால்டுவெல் கூறியுள்ளார்.[54] பெயருடன் நேரடியாக விகுதிகள் இணைக்கப்படுவதால் குறிப்பு வினைகள் உண்டாகின்றன. அவற்றில் காலங்காட்டும் உருபுகள் இல்லை. அதனால் குறிப்பு வினைகள் தமிழ்இலக்கணத்தின் ஒரு சிறப்புக் கூறு ஆகும். தொடக்கத்தில் அவை வினையாலணையும் பெயராக இருந்திருக்க வேண்டும்: பின்னர் அவை பயனிலைகளாகச் செயல்படுகின்றன என்பது பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியின் கருத்து.[55] யூலி பிளாக் என்ற மொழியியல் அறிஞர் எல்லாத் திராவிட மொழிகளிலும் இந்த வகையான அமைப்பு காணப்படுகிறது எனவும் அடிப்படைப் பெயர்களோடு வினை விகுதிகள் இணைவதால் இவை தோன்று கின்றன என்றும் கூறியுள்ளார்.[56]

மேலே குறிப்பிட்ட மூவரின் கூற்றுக்களையும் ஆராய்ந்த மோ. இசுரயேல் கால்டுவெல், எல்.வி. ராமசாமி அய்யர், யூலி பிளாக் ஆகிய மூவரும் குறிப்பு வினையின் அமைப்பினை விளக்குவதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளார்கள். இருப்பினும் அவர்கள் குறிப்பு வினையின் சரியான செயல் பாட்டினை விளக்கவில்லை. குறிப்பு வினை பெயரடி, பெயரடை அடி, குறைவினை அடி ஆகியவற்றுடன் விகுதிகள் இணைக்கப்படுவதால் உண்டாகின்றன. குறிப்பு வினையின் மூலத்தை விளக்க முயலும் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியின் கருத்து பொருத்தமானதாகத் தோன்றவில்லை. ஏனெனில் வினையாலணையும் பெயர் வினையிலிருந்து தோன்றுவது; வினை பெயராகச் செயலாற்றுவது என்று மறுத் துள்ளது[57] ஏற்றுக் கொள்ளக் கூடியதே.

குறிப்பு வினையின் பயன்பாடு

பயனிலையாகச் செயலாற்றும் பெயர்களே குறிப்புவினை எனப் படுகின்றன. இவற்றைப் பெயர்ப்பயனிலைகள் என்று கூறலாம்[58] என்றும் குறிப்பு வினை என ஒன்று இல்லை; சில பெயர்ச்சொற்களே பயன்வகை நோக்கி அங்ஙனம் கொள்ளப்பட்டன[59] என்றும் மு. வரதராசன் எழுதியுள்ளார். இக்கருத்து குறிப்பு வினை பயனிலை யாகச் செயல்படும் பெயர் மட்டுமன்று; குறிப்பு வினை பெயரி லிருந்து பிறவகைகளிலும் வேறுபடுகின்றது என்று முடிவுகாணும் ஆராய்ச்சிக்கு வழிவகுத்தது. இதனால் குறிப்பு வினைக்கும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளை ஆராய்ந்து கூறியுள்ளனர்.

சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் குறிப்புவினை பெயரி லிருந்து வேறுபட்டது. பெயருக்கு இடவிகுதி இல்லை. குறிப்பு வினைக்கு உண்டு. பெயரிலிருந்து குறிப்புப் பெயரெச்சமும் குறிப்புப் பெயரெச்சத் தொகையும் தோற்றுவித்தல் இயலாது. கரியன் என்ற பண்படிக் குறிப்புவினையிலிருந்து கரிய, கார் என்ற குறிப்புப்

பெயரெச்சத்தையும் பெயரெச்சத் தொகையையும் தோற்றுவித்தல் இயலும் என்று குறிப்புவினையிலிருந்து பெயர் வேறுபடுவதனை வி ஐ. சுப்பிரமணியன் எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் அவர் குறிப்பு வினையினைப் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> குறிப்புவினை பெயரை ஒத்தும் ஒவ்வாமலும் வினையை ஒத்தும் ஒவ்வாமலும் இடையை ஒத்தும் ஒவ்வாமலும் பயன்படுகின்றது. தனிப்பிரிவாக இயங்கும் இதனை வினையியல்பு பெரிதும் கொண்டிருப்பதால் ஒருவகை வினையாகத் தொல்காப்பியர் கருதியிருக்கிறார்[60]

மோ. இசுரயேல் பெயரடி, பெயரடை அடி ஆகியவற்றிலிருந்து ஆக்கப்படும் குறிப்பு வினைகளைப் பொறுத்தவரை மு. வரதராசனின் கூற்று ஏற்கத்தக்கதே என்று கூறி அவைகளைப் பெயர் வகைகளில் ஒன்றான ஆக்கப் பெயர்களாகக் கொள்ளலாம் என்பர்.[61]

குறிப்பு வினையையும் தெரிநிலை வினையும் வேறுபடுத்திக் காட்டி குறிப்பு வினை உண்மையைப் பொன். கோதண்டராமன் நிறுவியுள்ளார். அவர் குறிப்பு வினைக்கும் தெரிநிலைவினைக்கும் உள்ள வேறுபாடுகளாகக் காட்டுவனவற்றைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

	தெரிநிலை வினை	குறிப்பு வினை
1.	இன்றியமையாத களங்கள் மூன்று. முதற் களத்தில் பகுதியும் இரண்டாங் களத்தில் காலம் அல்லது எதிர்மறை இடைநிலையும் மூன்றாங்களத்தில் பால் இட விகுதியும் நிற்கும்.	இன்றியமையா்த களங்கள் இரண்டு. முதற்களத்தில் பகுதியும் இரண்டாங்களத்தில் விகுதியும் நிற்கும் (காலமும் எதிர்மறையும் இல்லை).
2.	ஏவல் ஏற்கும்	ஏவல் ஏற்பதில்லை
3.	சாரியை பெறும்போதுஅன் சாரியை பெறும்; இன் சாரியை பெறாது.	சாரியை பெறும் போது இன் பெறும்; அன் சாரியை பெறாது

மேலும் பழந்தமிழில் உள்ள குறிப்பு வினைமுற்றே வினையாலணையும் பெயராகவும் வரலாம். ஆனால் இன்றைய தமிழில் குறிப்பு வினையாலணையும் பெயர் வழக்கில் உள்ளதே தவிர குறிப்பு வினை வழக்கில் இல்லை. இதனால் தானோ என்னவோ குறிப்பு வினை பல ஆய்வாளர்களுடைய ஆய்வுக்கு இலக்காகி நிற்கிறது என்று குறிப்புவினை ஆய்வின் காரணத்தையும் புலப்படுத்த முனைந்துள்ளார் அவர்.[62]

1. குறிப்பு வினையில் குறிப்பாக உணர்த்தப்படுவது காலமும் வினையும் என்று உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் கருது

வதற்குத் தொல்காப்பிய நூற்பாக்களும் துணைபுரிந்தன. இருவகை யாகவும் கொள்ளுதல் பொருத்தமானதும் தொல்காப்பியர் கருத்துக்கு உடன்பாடானதும் ஆகும்.

2. செயப்படுபொருள் தோன்ற நில்லாதது குறிப்புவினை என்ற கல்லாடரின் கருத்து சிந்தனைக்குரியது.

3. பெயரும் இன்றி வினையும் இன்றி நின்றதாயினும் உருபேலாது வினைச்சொல் போல நிற்றலின் வினைக் குறிப்பு எனப்பட்டது என்ற தெய்வச்சிலையாரின் விளக்கமும்,

"குறிப்பு வினை பெயரை ஒத்தும் ஒவ்வாமலும், வினையை ஒத்தும் ஒவ்வாமலும், இடையை ஒத்தும் ஒவ்வாமலும் பயன்படு கின்றது. தனிப்பிரிவாக இயங்கும் இதனை வினையியல்பு பெரிதும் கொண்டிருப்பதால் ஒருவகை வினையாகத் தொல்காப்பியர் கொண்டுள்ளார்" என வி. ஐ. சுப்பிரமணியம் தரும் விளக்கமும் ஒத்துக் காணப்படுகின்றன.

4. குறிப்பு வினையை வினை என்று உடன்படாத ஒரு சாரார் உரையாசிரியர்கள் காலத்தில் இருந்தனர். (இதனை 1. 'மெய்ந்நிலை' என்பதற்குக் கல்லாடர் தரும் விளக்கமும் 2. பெயரையும் குறிப்பு வினையையும் வேறுபடுத்திச் சேனாவரையர் தரும் விளக்கமும் உறுதி செய்கின்றன.

5. இக்கால ஆய்வில் குறிப்பு வினையின் அமைப்பு, பயன்பாடு ஆகியன விளக்கம் பெற்றுள்ளன. தெரிநிலை வினைக்கும் குறிப்பு வினைக்கும் உள்ள வேறுபாடுகள் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன.

முற்றும் எச்சமும்

வினைமுற்று பற்றியும், வினை ஏற்று முடியும் சொற்களாகிய பெயர், வினைகளைக் கொண்ட இலக்கணக் கூறுகளாகிய பெய ரெச்சம், வினையெச்சம் பற்றியும் வினையியலில் பேசப்படுகின்றன. தொல்காப்பியர் வினையை முற்று, எச்சம் என்று பாகுப்படுத்தி உரைக்கவில்லை. ஆனால் நன்னூலார் வினையை முற்று எனவும். எச்சம் எனவும் பாகுபாடு செய்துள்ளார். தொல்காப்பியத்திலேயே இத்தகைய பாகுபாடு உள்ளது என்றும் கருதுவர்.[63] ஆனால் தொல் காப்பியத்தில் வினையை இவ்விதம் பாகுபடுத்தும் குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்பதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டி யுள்ளனர்.[64] எச்ச வினைகள், பெயரெச்சம் வினையெச்சம் என இரு வகைப்படும். பெயரை அவாவி முடிவன பெயரெச்சம் என்றும், வினையை அவாவி முடிவன வினையெச்சம் என்றும் பெயர் பெறும், இவற்றைத் தொல்காப்பியர் பெயரெஞ்சு கிளவி, வினையெஞ்சு கிளவி என்று குறிப்பிட்டுள்ளார்; எச்சம் என்ற சொல்லையும் (தொல். 714, 724) அவர் கையாண்டுள்ளார்.

உரையாசிரியர்களும் வினைப்பாகுபாடுகளும்

சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் வினைச்சொல் முற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்று மூன்று வகைப்படும் என்று கருதுவர். தெய்வச்சிலையார் பெயரெச்சம், வினையெச்சம் என்பன எத்தன்மையன என்பது வினையியலில் கூறப்படுகின்றது: ஆனால் வினைமுற்றின் இலக்கணம் வினையியலில் கூறப்படவில்லையே என்ற கேள்வியை எழுப்பி அதற்குப் பதிலும் அளித்துள்ளார். பின் வரும் உரைப்பகுதி அவரது வகைப்பாட்டையும், ஐயத்தையும் அதற்கான விளக்கத்தையும் தெளிவுறுத்துகிறது.

> வினைச்சொற்கள் முற்றும், பெயரெச்சமும் வினையெச்சமும் என மூவகைப்படும். அவற்றுள் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத்தன்மைய என்று எடுத்தோதி, முற்றுச்சொல்லாவது இத்தன்மையது என்று ஓதிற்றிலர்; அதற்கு இலக்கணம் யாங்குப் பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனாற் பெற்றதென்னையெனின், அஃது எமக்குப் புலனாயிற்றன்று. அஃதேல் வினையிலக்கணம் அறிந்தேனாகுங் கால் முற்றிலக்கணமும் அறிதல் வேண்டும் அன்றே. அதனை ஆண்டுக் கூறியவாறு ஈண்டுரைத்தல் வேண்டும் எனின், உரைக்குமாறு

என்று கூறி ஏனைய உரையாசிரியர்கள் எச்சவியலுள் கொண்ட 'இறப்பின் நிகழ்வின் எதிர்வின்'' எனத் தொடங்கும் நூற்பாவினை (தொல். 910) இவர் வினையியலுள் தந்து உரை செய்துள்ளார்.

தொல்காப்பியர் வினை பற்றிக் கூறியுள்ள செய்திகளை அவற்றின் அமைப்பு, பயன் ஆகியவற்றின் அடிப்படையில் முற்று எனவும் எச்சம் எனவும் வகைப்படுத்தலாம். முற்றுக்கள் வாக்கியத்தில் பயனிலையாகச் செயல்படுகின்றன. எச்சங்கள் வினைக்கு அடையாகவும் வினையை வேறுபடுத்துவனவாகவும் செயல்படு கின்றன.

வினைமுற்றின் இலக்கணம்

இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனப்படும் மூன்று காலம் பற்றியும், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடத்தும் வினை, குறிப்பு ஆகிய முற்றுக்கள் ஆறுவகைப்படும் (தொல். 910) என்றும் வினைமுற்று பற்றித் தொல்காப்பியர் எச்சவியலில் குறிப்பிடுகின்றார். இந்நூற்பாவுக்கு உரை எழுதிய இளம்பூரணர் வினைமுற்று பற்றிய மூவகைக் கருத்துக்களை எடுத்துரைததுள்ளார்.

1. முற்றுச் சொல் என்றது, செய்கையும் பாலும் காலமும் தோன்றி நிற்றலின் முற்றுச் சொல் என்பாரும்,
2. மற்றோர் சொல் நோக்காது முடிந்து நிற்றலின் முற்றுச் சொல் என்பாரும்

3. எக்கால் அவை தம் எச்சம் பெற்று நின்றன அக்கால் பின் யாதும் நோக்காவாய்ச் செப்பு மூயிற்றுப்போல அமைந்து மாறுதலின் முற்றுச்சொல் என்பாரும்

என இப்பகுதியர் ஆசிரியர் என்பது.

இளம்பூரணர் காலத்து இவ்வாறு மூவகையாக நிலவிய கருத்துகள் பின்னும் தொடர்ந்தன. இக்கருத்துகளில் முதல் கருத்தினைத் தெய்வச்சிலையாரும் இரண்டாவது கருத்தினைச் சேனாவரையரும் மூன்றாவது கருத்தினை நச்சினார்க்கினியரும் உரைத்துள்ளனர். முற்றி நிற்றலே வினைமுற்றின் இலக்கணம் என்பதைச் சேனாவரையர் வலியுறுத்தியுள்ளார்.

> முற்றிநிற்றல் முற்றுச்சொற்கு இலக்கணமாதல் "முற்றியல் மொழியே" (தொல். 910) என்பதனாற் பெற்றாம். முற்றி நிற்றலாவது இதுவென்பது வினையியலுட் கூறினாம். திணையும் பாலும் இடமும் விளக்கல் எல்லா முற்றிற்கும் இன்மையான் இலக்கணம் அன்மை அறிக. (தொல். 910)

என்று எச்சவியலுள் கூறிய சேனாவரையர் வினையியலுள் வினைமுற்றின் இலக்கணத்தை,

> பிறிதொரு சொல்லோடு இயையாது தாமே தொடராதற்கேற்கும் வினைச் சொல் முற்றாம்

என்று உரைத்துள்ளார்.

வினைமுற்றின் வகைகள்

இடம், பால் உணர்த்தும் விகுதிகளின் இன்மையையும் உண்மையையும் கொண்டு வினைமுற்றுக்கள் இருவகையாகப் பகுத்து ஆராயப்படுகிறது. பால் இட விகுதிகளை ஏற்கும் வினைமுற்றுக்குள் இட வேறுபாடு உணர்த்தும் வினைமுற்றுக்கள் என்றும், அந்த விகுதிகளை ஏலாதன இட வேறுபாடு உணர்த்தாத வினைமுற்றுக்கள் என்றும் குறிக்கப்படும். குறிப்புவினை முற்றும் ஏவல் வினைமுற்றும் பால் இட விகுதிகளை ஏற்று நடக்கின்றன. ஆனால் இவை மூவகைக் காலத்தையும் தெளிவாகக் காட்டுவது இல்லையெனின் இவை குறிப்பிட்ட இடத்தினை உணர்த்துவதால் இவை இட வேறுபாடு உணர்த்தும் வினைகளிலேயே சேர்க்கப்படுகின்றன.[65]

இடவேறுபாடு உணர்த்தும் வினை முற்றுக்கள்

தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகையாக இவ்வகை வினை முற்றுக்கள் பாகுபடுத்தப்படுகின்றன. மேலும் இவை ஒவ்வொன்றும் ஒருமை, பன்மை, எனவும் இருவகைப்படும். படர்க்கை இடப்பெயர்கள் உயர்திணை, அஃறிணை இரண்டும் ஒருமை, பன்மை என இருவகையாகும். உயர்திணை ஒருமை ஆண்

பால், பெண்பால் என இருவகைப்படும். பன்மை ஆண், பெண் இருபாலுக்கும் ஒன்றே. அஃறிணை ஒருமை ஒன்றன்பால் எனவும் பன்மை பலவின்பால் எனவும் பெயர்பெறும். இவ்வாறு இட வேறுபாடு உணர்த்தும் வினைமுற்றுக்களைப் பின்வரும் அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது.

இட வேறுபாடு உணர்த்தும் வினைமுற்றுக்கள்

- தன்மை
  - ஒருமை
  - பன்மை
- முன்னிலை
  - ஒருமை
  - பன்மை
- படர்க்கை
  - உயர் திணை
    - ஒருமை
      - ஆண்பால்
      - பெண்பால்
    - பன்மை
  - அஃறிணை
    - ஒருமை ஒன்றன் பால்
    - பன்மை பலவின் பால்

தன்மை வினைமுற்று

தன்மை வினை உயர்திணைக்கு மட்டுமே உரியது என்று தொல்காப்பியர் கருதியுள்ளார். கு, டு, து, று என்பனவும் என், ஏன் அல் என்பனவும் தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் (தொல். 688). இவற்றுள் குற்றியலுகர விகுதிகள் நான்கும் எதிர்காலம் பற்றி வரும் என்று இளம்பூரணர், சேனாவரையர், கல்லாடர் ஆகிய உரையாசிரியர்கள் கருதுவர். ஆனால் நச்சினார்க்கினியர்,

> குற்றுகரம் நான்கும் பெரும்பான்மையும் எதிர்காலத்தும் சிறுபான்மை ஏனைக் காலத்தும் வரும் (தொல். 688)

என்று உரைத்துள்ளார். இந்த விகுதிகளை க்+உ, ட்+உ, த்+உ, ற்+உ எனப் பிரிக்கலாம் என்றும் இவற்றில் உள்ள உகரம் தன்மை இடம் உணர்த்தும் விகுதி என்றும் வி. ஐ. சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.[66] செய்கு என்பன போன்ற வினைகளில் இருந்த இறுதி னகர ஒற்று மறைந்து விட்டது என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரன்[67] கூறியுள்ளார். ஆகவே இவற்றில் எண் உணர்த்தும் விகுதி இல்லை (0) என்பது பெறப்படுகிறது.[68] இதுபோல் அமையும் இலக்கணக் கூற்றினை இருந்து மறைந்ததாகக் கொண்டு அதனை 0 என்னும் குறியிட்டால் மொழியியலார் குறிப்பர். செய்கு என்னும் வகையான வினைகளே சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றன. இவை எதிர்காலப் பொருண்மையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளன. சேனாவரையர் ட், த், ற் என்பன எதிர்காலக் குறியீடுகள் அல்ல என்று தெளிவாக உரைத்துள்ளார். ஆனால் கு, டு, து, று என்பன எதிர்காலம் உணர்த்தும் என்று பிற உரையாசிரியர்களைப் போன்றே அவர் உரைத்துள்ளார். ஆகவே இவ்விகுதிகளில் உள்ள க், ட், த்,

ற் என்பன இணைப்பு உருபன்கள் ஆகலாம்; காலக் குறியீடும் இங்கு இல்லை (0) என்றே கொள்ள வேண்டும் என்று மோ. இசுரேயல் குறிப்பிட்டுள்ளார்.

செய்கு என்னும் வடிவம் வினை கொண்டு முடிந்தாலும் அது தன் வினைமுற்றுத் தன்மையை இழப்பது இல்லை (தொல். 688) என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

அம், ஆம், எம், ஏம் என்பனவும் கும், டும், தும், றும் என்பனவும் ஆகிய எட்டும் தன்மைப் பன்மை விகுதிகள் (தொல். 687). அம், ஆம், எம், ஏம் என்னும் விகுதிகளை உளப்பாட்டுத்தன்மை என்று உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். ஆனால் இதுபற்றித் தொல்காப்பியர் ஒன்றும் கூறாததலால் அவர் காலத்து இத்தகைய தெளிவான வேறுபாடு இல்லை எனலாம். கும், டும், தும் றும் ஆகிய விகுதிகள் எதிர்காலம் உணர்த்தும் என்று இளம்பூரணர், சேனாவரையர், கல்லாடர் ஆகியோர் உரைத்துள்ளனர். "உண்கும், உண்டும், வருதும், சேறும் என்பன எதிர்காலம் குறித்துழி எதிர்காலத்திற்கு ஏற்கும்; நிகழ்காலம் குறித்துழி நிகழ்காலத்திற்கு ஏற்கும்" என்று தெய்வச்சிலையார் கூறியுள்ளார்; நன்னூலார் கு, கும் என்பன எதிர்காலத்தையும் டு, டும் என்பன இறந்த காலத்தையும், து, தும், று, றும் என்பன இறந்தகாலம், எதிர்காலம் ஆகிய இரண்டையும் உணர்த்தும் (நன். 145) என்று உரைத்துள்ளார்.

முன்னிலை வினைமுற்று

உயர்திணை, அஃறிணை இரண்டுக்கும் முன்னிலை வினைமுற்று உரியது என்பது தொல்காப்பியரின் கருத்து. இ, ஈ, ஏ, அய், ஆய் என்பன முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் (தொல். 708) எனவும், இர், ஈர், மின் என்பன முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் (தொல். 709) எனவும் தொல்காப்பியர் கூறியுள்ளார். ஈ, ஏ என்னும் விகுதிகள் முன்னிலைக்குரிய விகுதிகளைத் தொகுத்துக் கூறுங்கால் தொல்காப்பியர் குறிப்பிடவில்லை. ஆனால் எச்சவியலில் ஈயும், ஏயும் ஏற்ற மெய்யுடன் சேர்ந்து முன்னிலை வினையில் வரும் (தொல். 934) என்று குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் இ, ஈ, அய், ஆய் என்பன முன்னிலை ஒருமை வினைமுற்றுகள் என்று உரைத்திருப்பாரேயானால் ஈ என்பது முன்னிலை வினைமுற்று விகுதி என்பது தெளிவாகியிருக்கும் என்று கூறி, ஈ என்ற விகுதி இகரத்தின் நீட்சியே என்றும் மு. வரதராசன் கூறியுள்ளார்.[69] மின் என்பதை முன்னிலைப் பன்மை விகுதியாகத் (தொல். 709) தொல்காப்பியர் உரைத்துள்ளார். சங்க இலக்கியங்களில் இவ்விகுதி பன்மை ஏவலில் மட்டுமே பயின்று வருகிறது. நன்னூல் இதனைப் பன்மை ஏவலில் மட்டுமே அதுவும் எதிர்காலத்துக்கு மட்டுமே உரியதாய் வரும் என்று கூறியுள்ளது (நன். 145, 357); மின் என்பதில் உள்ளம் ஏவற் பன்மையை உணர்த்தும் குறியீடு. இன் என்னும் ஒட்டு கவனத்தை ஈர்க்க உதவும் உருபன்.

இன் என்பது என் என்ற வினாச்சொல்லின் திரிந்த வடிவம் என்பது மு. வரதராசனின் கருத்து.[70]

படர்க்கை வினைமுற்று

அன், ஆன், ஒன் என்பனவற்றை ஆண்பால் ஒருமை வினை முற்று விகுதிகளாகத் (தொல். 488, 690, 696) தொல்காப்பியர் குறிப் பிட்டுள்ளார். னகரம் ஆண்பால் ஒருமையினை உணர்த்துவது என்று தெளிவாகத் (தொல். 488) தொல்காப்பியர் கூறியுள்ளார். அள், ஆள், ஒள் என்பன பெண்பால் ஒருமை வினைமுற்று விகுதிகள். அர், ஆர், ஓர் என்பன பலர்பால் வினைமுற்று விகுதிகள். ஆண்பால், பெண்பால் இவற்றுக்குத் தனியே பன்மை விகுதிகள் இல்லை. ப, மார் என்னும் விகுதிகளும் படர்க்கைக்கு உரியன என்று தொல்காப்பிய நூற்பாக்களிலிருந்து (தொல். 1, 8, 692) அறிய முடிகின்றது.

மார் ஈற்று வினைச்சொல்

மார் ஈற்று வினைச்சொல் முற்றாக இருந்தாலும் அது பிறிதொரு முற்றால் தொடரப்படும் (தொல். 692) என்று தொல்காப்பியர் கூறி யுள்ளார். மார் விகுதி இன்னொரு வினைமுற்று தொடர இடங் கொடுக்கும் என்பதையும், அவ்வீறு வினைமுற்றினை மாற்றி யமைக்கும் இயல்புடையது என்பதையும் தொல்காப்பியர் உடன் படுகிறார் என்பது இதனால் பெறப்படுகிறது. இது வினையெச்ச மாகச் செயல்படுகிறது எனத் தெய்வச்சிலையார் சுட்டிக் காட்டி யுள்ளார்.

> அது பெயரோடு முடிதலேயன்றி வினையோடும் முடியும் என்று சொல்லுவார்.
>
> ஆ கொண்மார் வந்தார். இது வினையோடு முடிந்தது. பாடில் மன்னரைப் பாடன்மார் எமரே (புறம். 375) இது பெயரோடு முடிந்தது.

இதனை வினையெச்சம் என்று கூறினால் என்ன என்று வினவி வினையெச்சத்தின் கண் பால் தோன்றாது; இதன்கண் பால் தோன்று வதால் இது முற்றுஎனவே படும் என்றும் அவர் உரைத்துள்ளார் (தொல். 692).

மார் விகுதியை வினையெச்ச விகுதிகளுள் ஒன்றாகத் தொல் காப்பியர் குறிப்பிடவில்லை. அதனைப் படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதியாகவே அவர் குறிப்பிட்டுள்ளார். தெய்வச் சிலையார் மார் ஈறு வினையெச்ச விகுதியாகச் செயல்படுவதை ஒப்புக்கொண்டு, தொல்காப்பியரைப் போலவே இந்த ஈறு வினை முற்று என்றே கருதுவர். ஏனென்றால் அவர் கருத்துப்படி வினை யெச்ச விகுதி பால் காட்டாது. இது வினையெச்ச விகுதியாகச் செயல்படும்போது பலர்பாலை உணர்த்துவது இல்லை என்பதைத் தெய்வச்சிலையார் கவனிக்கத் தவறிவிட்டார் என்று தோன்றுகிறது.

1. நனி விருந்தயர்மார் தேர்வரும் (குறுந். 155)

என்பதில் மார் என்னும் வினையெச்ச விகுதி அஃறிணை ஒருமை வினைமுற்று விகுதியை மாற்றுகிறது.

2. ஈங்கு ஏகுமார் உளேன் (குறுந். 173)

என்பதில் மார் வினையெச்ச விகுதி தன்மை ஒருமை வினைமுற்று விகுதியை மாற்றுகிறது.[11]

மார் ஈற்று வினைச்சொற்களின் அமைப்பு

மார் விகுதியைத் தொல்காப்பியர் ம் — ஆ-ர் எனப் பிரிக்கவில்லை. இதன் காரணத்தினைச் சேனாவரையர் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

> மார் எதிர்காலம் பற்றிவந்த ஆரேயாம். ரஃகான் ஒற்றெனவே அடங்குமெனின் அற்றன்று; ஆரேயாயின் கொண்மார் என்புழி மகரம் காலம் பற்றி வந்ததோர் எழுத்தாகல் வேண்டும். உண்மார் வருமார் எனக் காலம் பற்றி வரும் எழுத்து முதனிலைக் கேற்றவாற்றான் வேறுபட்டு வருமன்றே; அவ்வாறு அன்றி உண்மார் வருவார் என எல்லா முதனிலை மேலும் மகரத்தோடு கூடி வருதலானும், வினை கொண்டு முடிதற்கேற்ப தொரு பொருள் வேறுபாடு உடைமையாலும் ஆர் ஈறு அன்று வேறு எனவே படும் என்பது (தொல். 490)

எதிர்காலம் உணர்த்தும் ப, வ போன்று அல்லாது மகரம் எல்லா வினையடிகளோடும் வருவதால் அது தனி விகுதி என்பது சேனாவரையரின் கருத்து. இக்கருத்து உண்மைநிலைக்கு மாறுபட்டு உள்ளது என்று பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு மோ. இசுரயேல் விளக்கியுள்ளார்.

ஆகுப (புறம். 7) — ஆகுவ (குறுந். 104)

உகுப (கலி. 48) — உகுவ (குறுந். 282)

கூறுப (கலி. 144) — கூறுவ (கலி. 46)

மேலும் மகரம் எதிர்காலக் குறியீடாகப் பயின்று வந்துள்ளமைக்குச் சங்க இலக்கியச் சான்றுகள் உள்ளன. தொல்காப்பிய உரையாசிரியர்கள் அனைவரும் மார் ஈறு எதிர்காலத்துக்கு மட்டுமே உரியது என்றே கருதி உள்ளனர். கால்டுவெல்லும் இதனை எதிர் காலத்துக்கு உரியது எனவே குறித்துள்ளார்.[12] மார் என்பதில் உள்ள 'ம்' எதிர்காலக் குறியீடு; ஆர் என்பது பலர்பால் விகுதி என்று மு. வரதராசனும் குறிப்பிட்டுள்ளார்.[13] இதிலிருந்து மார் என்பதில் உள்ள மகர ஒற்று எதிர்காலக் குறியீடு எனவும் அகரம் படர்க்கை இடத்தை உணர்த்துகிறது எனவும் ரகர ஒற்று பலர்பால் விகுதி எனவும் உணரலாம்.

மார் ஈற்று வினைச் சொற்களின் அமைப்பும் பயன்பாடும்

செய்யும் என்னும் வாய்பாட்டு முற்று படர்க்கைப் பலர்பாலில் வராது (தொல். 712) எனவும், நிகழ்காலத்தில் மட்டுமே வழங்கும்

(தொல். 724) எனவும் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவ்வகை வாய்பாட்டு முற்றுக்கள் தொடக்க நிலையில் திணை, பால், எண் காட்டும் விகுதிகளை ஏற்று வழங்கத் தொடங்கியிருக்கலாம். இவ்வாறு வழங்கத் தொடங்கிய சொற்களில் மார் ஈறும் ஒன்று எனக் கொள்ள வேண்டும். இது படர்க்கைப்பாலை ஏற்று வழங்கத் தொடங்கவே 'செய்யும்' பலர்பாலில் வழங்காது எனும் தடையையும் நீக்கிவிட்டது என மோ. இசுரயேல் இதன் வரலாற்றினைக் குறிப்பிடுகிறார். மேலும் அவற்றின் பயன்பாடு பற்றியும் அவர் பின்வரும் செய்திகளைக் கூறியுள்ளார்.[74] ஒருசில சொற்கள் மட்டுமே மார் விகுதியுடன் அமைந்து வினைமுற்றுக்களாக வழங்குகின்றன. அவற்றிலும் மிகுதியானவை எதிர்மறை வினைமுற்றுக்களாக வழங்குகின்றன; மிக அருகிய நிலையில் இவை வினையாலணையும் பெயர்களாகவும் வழங்குகின்றன. மிகுதியான சொற்கள் சங்க இலக்கியத்தில் வினையெச்சங்களாகவே வழங்குகின்றன.

தொடக்க நிலையில் மார் ஈற்று வினைகள் வினைமுற்றுக்களாகவே வழங்கி இருத்தல் வேண்டும். அவை பெரும்பாலும் பெயரோடு முடிவு பெற்றன. அதுவே மிகப் பழமையான நிலை. காலப் போக்கில் மாரீற்று வினைகள் வினையெச்சங்களாக வழங்கவே அந்த வளர்ச்சியையும் உட்படுத்தவே தொல்காப்பியர் "காலக்கிளவியொடு முடியும் என்ப" (தொல். 692) என்று குறிப்பிட்டுள்ளார். இத்தொடருக்கு ஏனைய உரையாசிரியர்கள் காலத்தை உணர்த்தும் வினைச்சொல்லொடு முடியும் என்று பொருள் கூற, தெய்வச்சிலையார் மட்டும் காலக்கிளவியொடும் முடியும் என உம் என்ற எச்சப் பொருள் தரும் இடைச் சொல்லை இடையில் உள்ளதாகக் கொண்டு, பெயரொடும் முடியும் என்று பொருள் உரைத்துள்ளார். பெயரொடு முடியும் வழக்கினைக் கண்டு அதற்கேற்ப உரை வகுத்த தெய்வச்சிலையாரின் உரை பொருத்தமானதும் பாராட்டத் தக்கதும் ஆகும் என்று மோ. இசுரயேல் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வினை முற்றுக்களின் வரலாறு பற்றிய அவர் கூற்று ஈண்டு நினையத் தக்கது.

> தொடக்க நிலையில் மாரீற்று வினைகள் வினைமுற்றுக்களாகவே வழங்கி இருத்தல் வேண்டும். அவை உடன்பாடு, எதிர்மறை ஆகிய இருநிலைகளிலும் அமைந்திருக்காலம். அவை வினைகளையே தழுவும் சொற்களாக நின்று முற்றெச்சங்களாகவும் எழுவாய்களாக நின்று வினையாலணையும் பெயர்களாகவும் கூட தொன்று தொட்டே இடம் பெற்றிருக்கலாம் எனத் தெரிகிறது. காலப் போக்கில் அவற்றின் முற்றெச்ச வழக்கே மிகுதியும் செல்வாக்குப் பெறவே, அவை அடிப்படையில் வினைமுற்றுக்கள் என்ற நிலையினை மறுக்க இயலாத இலக்கண ஆசிரியர் அவற்றைக் காலக்கிளவியொடு முடியும் வினைமுற்றுக்கள் எனக் கருதலாயினர்.[75]

மார் ஈற்று வினைச்சொற்கள் வினைமுற்றாகவும் வினையெச்சமாகவும் செயல்படுகின்றன. வினைமுற்றாகச் செயல்படும்போது

அதனை ம்–ஆ–ர் எனப் பிரிக்க வேண்டும். எச்சமாகச் செயல்படுங் கால் ம்–ஆர் எனப் பிரிக்க வேண்டும். எச்சத்தில் உள்ள மகர ஒற்று எதிர்காலத்தினை உணர்த்துகின்றது. ஆர் என்பது இடவிகுதியாக இல்லாமல் எச்ச விகுதியாகவே உள்ளது.

பழந்தமிழ் நூல்களில் பயின்று வந்துள்ள மார் ஈற்றுச் சொற் களைத் தொகுத்து ஆராய்ந்து அவை நோக்கப் பொருண்மையிலும், ஒட்டுக்களாகவும் தொழிற்பெயராகவும், பெயருடன் இணைந்து பன்மை விகுதியாகவும் எதிர்மறை வினைமுற்றாகவும் செயல் பட்டுள்ளன என எச். சித்திரபுத்திரன் கூறியுள்ளார். அதன் வழக்குப் பயிற்சி சங்க இலக்கியங்களைவிடப் பிற்கால இலக்கியங்களில் குறைந்து வந்துள்ளதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார்.[16]

அஃறிணை வினைமுற்று

து,டு,று என்பன அஃறிணை ஒருமை வினைமுற்று விகுதிகள். டு என்பது குறிப்பு வினையில் மட்டுமே வரும் என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார் (தொல். 702) அ, ஆ, வ என்பன அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதிகள். வகரம் எதிர்காலத்தில் மட்டுமே வரும் என்று உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். தொல்காப் பியரால் அஃறிணை பன்மைக்கு உரியதாகக் கருதப்பட்ட வகரம் எதிர்காலக் குறியீடு என்பது பெறப்படுகின்றது. ஆகாரம் எதிர் மறையில் மட்டுமே வரும் என்று இளம்பூரணரும் (தொல். 492) சேனாவரையரும் (தொல். 701) குறிப்பிட்டுள்ளனர்.

ஏவல் வினை

தொல்காப்பியர் ஏவல் வினை பற்றித் தனியே கூறவில்லை. புணர்ச்சி விதிகளைக் கூறுங்கால் ஏவல் வினை பற்றிய குறிப்பு (தொல். 210, 224) காணப்படுகிறது. செய்யாய் என்னும் முன்னிலை வினைச்சொல், செய் என்னும் சொல் போலவும் வரும் (தொல். 933) என்று கூறும் நூற்பாவின் உரையில் தெய்வச்சிலையார் ஏவல் வினை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். "செய்யாய் என்னும் ஆய் ஈற்று முற்றுச் சொல் செய் என்னும் ஏவல் குறித்த வினைச்சொல்லாகியும் வரும்" என்பது அவரது உரை. முன்னிலை வினையை அவர் இருவகைப் படுத்தி உரைத்துள்ளார். வினையியலில் இருதிணைப் பொது வினைகளைப் பற்றிக் கூறும் நூற்பாவின் (தொல். 708) உரையில்,

> முன்னிலை வினை என்னாது முன்னிலை எனப் பொதுப்பட ஓதினவதனால் அச்சொல் இருவகைப்படும்; முன் நின்றான் தொழில் உணர்த்துவனவும், அவனைத் தொழிற்படுத்தற்கு ஏவல் குறித்து வருவனமுனெ

என்று தெய்வச்சிலையார் கூறுவர். தொல்காப்பியர் ஏவல் வினையை முன்னிலை வினையிலிருந்து வேறுபடுத்தி உரைக்கவில்லை. தொல் காப்பியர் முன்னிலை வினையிலேயே ஏவல் வினையை அடக்கி யுள்ளார் என்று வே. வேங்கடராசுலு ரெட்டியார் கருதுவர்.[17] ஏவல்

வினை முன்னிலைக்கு மட்டுமே உரியது. மேலும் அது எதிர் காலத்தைக் குறிப்பது என்பது நினையத் தக்கது.

செய் வாய்பாட்டு வடிவங்கள், செய்யாய் என்னும் வாய்பாட்டு வடிவத்தின் குறைந்த வடிவங்களே எனச் சேனாவரையர் (தொல். 933) கருதுவர். தெய்வச்சிலையாரும் பிறிதொரு நூற்பா (தொல். 708) உரையில் இக்கருத்தினைக் கூறியுள்ளார். ஆனால் இது வரலாற்று நோக்கில் ஒப்புக் கொள்ளக் கூடிய கருத்து அல்ல. செய்யாய் என்னும் வாய்பாட்டுச் சொற்களை எடுத்தல் ஓசையால் கூறினால் அவை ஏவற்பொருண்மை உணர்த்தும் என நச்சினார்க்கினியர் (தொல். 708) உரைத்துள்ளார். முன்னிலை வினையின் வினையடிகளை எடுத்தலோசையால் கூறினால் அவை ஏவல் வினைகளாகும் என வே. வேங்கடராசுலு ரெட்டியாரும் கூறியுள்ளார். ஒலியழுத்த வேறுபாட்டால் பொருள் மாறுபாடு உண்டாகிறது என்று சிலர்[78] கருதினாலும் அத்தகைய வேறுபாடு தமிழில் உண்டு என்பதில் ஐயம் உடையோரும் சிலர் உள்ளனர்.[79]

1. செய்வகை வினைகள், 2. செய்யாய் வகை வினைகள், 3. வந்திசின், கண்டிசின் வகை வினைகள், 4. மொழிமோ, உரைமோ வகை வினைகள், 5. கேண்மின், சென்மின் வகை வினைகள், 6. கேண்மியா, சென்மியா வகை வினைகள், 7. செய்மே, உரைமே வகை வினைகள், 8. கொடுமதி, கொண்மதி வகை வினைகள், 9. செம்ம் செய்யும் என்னும் வினைகள் என ஏவல்வினைகளைப் பாகு படுத்தி அவற்றின் அமைப்பு, பயிற்சி ஆகியனவற்றை மோ. இசுரயேல் ஆராய்ந்துள்ளார்.[80]

இடவேறுபாடு உணர்த்தாத வினைமுற்றுக்கள்

இடம், பால், எண் ஆகியவற்றை உணர்த்தாது பயனிலையாய் வரக் கூடிய வினைகள் இடவேறுபாடு உணர்த்தாத வினைகள் என்று ஆய்வாளரால் குறிப்பிடப்படுகின்றன. இவ்வினைகளின் எண், பால், இடம் ஆகியன அவற்றுடன் வரும் பொருளைக் கொண்டு உணரப்படும். வியங்கோள் வினை, செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினை, எதிர்மறைவினை' செய்ம்மன என்னும் வினை, வேறு என்னும் சொல் ஆகியவைற்றை இடவேறுபாடு உணர்த்தாத வினைமுற்றுக்கள் எனக் கொண்டு ஆராயப்பட்டுள்ளன.

வியங்கோள் வினை

வியங்கோள் வினையானது வேண்டுகோள், விருப்பம், கட்டளை, ஆணை ஆகிய பொருள்களைத் தெரிவிப்பனவாக அமைந்துள்ளன. கட்டளை ஒன்று பெருந்தன்மையோடு விருப்பம் போல் கூறப்படுமானால் அது வியங்கோள் வினை எனப்படும். ''ஏவல் கண்ணிய வியங்கோள் கிளவி'' (தொல். 210) என்னும் தொடரால் தொல்காப்பியரால் சுட்டப்படுவது இதுதான்.[81]

எழுத்ததிகாரத்தில் அகர வீற்றுப் புணர்ச்சி விதி கூறுங்கால், தொல்காப்பியர் ''ஏவல் கண்ணிய கிளவி'' (தொல். 210) என்ற தொடரைக் கையாளுகின்றார். அடுத்து வரும் நூற்பாவில் வாழிய என்னும் அகரவீற்றுச் சொல்லின் அகரம் கெடுதலும் உண்டு (தொல். 212) என்று கூறியுள்ளார். 'வாழிய' என்பது வியங்கோள் வினை என்று தொல்காப்பியர் கூறாவிடினும் அது வியங்கோள் வினை என்றே உரையாசிரியர்கள் கருதி உள்ளனர்.

தொல்காப்பியர் வியங்கோளை இருதிணைப் பொதுவினைகளுடன் சேர்த்துக் கூறியுள்ளார். அவர் வியங்கோள் முன்னிலை, தன்மை ஆகிய இரு இடங்களிலும் வராது (தொல். 711) என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் வினைகள் ஏற்கும் அசைகளை இடையியலில் எடுத்துக் கூறும் போது வியங்கோள் வினைமுற்று முன்னிலை வினைச் சொல்லினின்று வேறுபட்ட அசைநிலையை ஏற்கும் என்பதை ''மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்'' (தொல். 758) என்ற நூற்பாவில் கூறியுள்ளார். ''ஏவல்கண்ணிய வியங்கோள்'' என்று தொல்காப்பியர் கூறிய தொடரைக் கொண்டு வியங்கோளை ஏவல் கண்ணிய வியங்கோள், ஏவல் கண்ணாத வியங்கோள் என்று இருவகையாகப் பகுத்து உரையாசிரியர்கள் உரைத்துள்ளனர். வியங்கோளைக் குறிப்பிடுங்கால் ஏவல் கண்ணிய வியங்கோள் என்பது வியங்கோளின் ஒருவகை என்று எண்ணும் வகையில் தொல்காப்பியர் கூறவில்லை. எனவே ''ஏவற்கண்ணிய'' என்று ஏவலை விழைந்து குறித்தல் என்று வியங்கோளின் விளக்கமாகவே தொல்காப்பியர் கூறியுள்ளார் என்று உரைத்தலே பொருந்தும்.[52] முன்னிலை, தன்மையில் மன்னாதாகும் என்ற தொல்காப்பியத் தொடருக்கு உரை கூறுங்கால் 'சிறுவரவின' என்று உரையாசிரியர்கள் விளக்கம் தருதலால் உரையாசிரியர்கள் காலத்து வியங்கோள் • இவ்விரு இடங்களிலும் வழங்கத் தலைப்பட்டிருக்கலாம். இவ்விளக்கத்தைக் கொண்டு தன்மை, முன்னிலையில் வியங்கோள் வழங்குவதற்குத் தொல்காப்பியரே ஓரளவு இடந் தருகின்றார் எனக் கருதலாம் என்று மோ. இசுரயேல் கூறியுள்ளார்.[53]

பழந்தமிழ் இலக்கியங்களில் வியங்கோள் பயின்றுவந்த நிலையினை ஆராய்ந்து தன்மையில் 15 இடங்களிலும் முன்னிலையில் 315 இடங்களிலும் படர்க்கையில் 476 இடங்களிலும் பயின்று வந்துள்ளதால் தொல்காப்பியர் காலத்தில் அது படர்க்கையிலேயே மிகப் பெரும்பான்மையாகப் பயின்று வந்திருக்க வேண்டும்; அதனாலேயே தொல்காப்பியர் தன்மை, முன்னிலைகளை விளக்கி உரைத்தார் என்று ச. அகத்தியலிங்கம் கூறுவது கருதத்தக்கது.[54]

வியங்கோள் வினை விகுதிகள்

தொல்காப்பியர் வியங்கோளின் விகுதிகளைத் தனியே உரைக்கவில்லை. அகர விகுதி வியங்கோளுக்குரியதாகத் தொல்காப்பியத்திலிருந்து கொள்ள முடிகிறது. மேலும் அவரது நூற்பாக்களில் [illegible] (தொல். 994) ஓம்பல் (தொல். 496) ஒரால் (தொல். [illegible]) ஆகியவ

(தொல். 1025) ஆகிய சொற்களை வியங்கோள் வினைகளாக ஆண்டுள்ளதால் தொல்காப்பியர் கால வியங்கோள் விகுதிகளாக அ, அல், ஆல், இயர் ஆகிய விகுதிகளைக் கொள்ளலாம்.

இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் வியங்கோள் ககர விகுதியுடன் மட்டும் அமையும் என்று கூறியுள்ளனர். சேனாவரையர் க, யா, அல், ஆல், அர், ஆர், மார், ஐ ஆகிய விகுதிகளையும் கல்லாடனார் க, யா, அல், ஆர், மா, ஐ ஆகிய விகுதிகளையும் வியங்கோள் விகுதிகளாகக் கூறியுள்ளனர்.

''வியங்கோள் வினை தொடக்க நிலையில் 'செய' என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சத்தினின்றே வளர்ச்சி பெற்ற வடிவமாக அமைந்திருக்கலாம். ... பழந்தமிழில் இய, இயர் ஆகிய விகுதிகளைப் பெற்ற வினை வடிவங்கள் வினையெச்சங்களாகவும் வியங்கோள் வினைமுற்றுக்களாகவும் ஆளப்பட்டுள்ளமை இதனை மேலும் உறுதி செய்கின்றது'' என்னும் கூற்றுப் பொருந்தக் கூடியதே.[85] செய்யிய, செய்யியர் ஆகிய எதிர்கால வினையெச்சங்கள் முதலில் வியங்கோள் வினைகளாக இருந்திருக்கலாம் என்று தெ. பொ. மீனாட்சி சுந்தரன் கூறுவதும் இங்கு நினையத்தக்கது.[86]

தொல்காப்பியர், மிகுதியும் பயின்று வந்துள்ளமை நோக்கி படர்க்கைக்கே உரியது வியங்கோள் என்று உரைத்துள்ளனர். ஆனால் சங்க இலக்கியத்துச் சிறுவரவினவாக இருந்ததால் ''மன்னாதாகும்'' (தொல். 711) என்ற தொல்காப்பியத் தொடருக்கு அதனை ஏற்கும் வண்ணம் பொருள் உரைத்துள்ளனர் உரையாசிரியர்கள். வியங்கோள் விகுதிகளைத் தொல்காப்பியர் தொகுத்துணர்த்தாமையால் அதனைத் தொகுத்துக் கூற முற்பட்ட உரையாசிரியர்களுள் ஒருவர் வியங்கோள் என்று கொண்டதைப் பிறிதொருவர் கொள்ளாததால் அவர்கள் கூறும் விகுதிகளும் வேறுபட்டன. மொழிவளர்ச்சியால் பல புது வியங்கோள் விகுதிகள் தோன்றியதும் வியங்கோள் பற்றிய கருத்து மாறுபாடுகளுக்கும் ஆய்வுக்கும் காரணம் எனலாம்.

'செய்ம்மன' என்னும் வாய்ப்பாட்டு வினை

செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டு வினையை இரு திணைக்கும் உரியது (தொல். 707) என்பர் தொல்காப்பியர். இதனைத் தொழிலிறு சொல் (தொல். 210) என எழுத்ததிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்ப்பாட்டினை உடைய 'இசைக்குமன' (தொல். 484) என்ற சொல்லையும் அவர் ஆண்டுள்ளார். இளம்பூரணர் காலத்திலேயே இச்சொல் வழக்கற்று விட்டது என்பது அவரது உரையிலிருந்து (தொல். 707) புலனாகிறது. உரையாசிரியர்கள் இசைக்குமன என்ற சொல்லை விளக்குவதலிருந்து செய்ம்மன என்னும் சொல்லின் அமைப்பை அறிந்து கொள்ளலாம். 'இசைக்குமன்' என்று பாடங் கொண்ட இளம்பூரணர் இது செய்யும் என்னும் பெயரெச்சம், மன்

என்பது இடைச்சொல் (தொல். 484) என்று உரைத்துள்ளார். அவர் செய்ம்மன என்பது இருதிணைப் பொது வினைகளாக வழங்குதற்கு எடுத்துக்காட்டுகளையும் (தொல். 707) தந்துள்ளார். சேனாவரையர் இதனை மன் ஈற்று எதிர்கால முற்றுச்சொல் (தொல். 707) என்று கூறியுள்ளார். தெய்வச்சிலையார் இசைக்குமன என்பது செய்ம்மன என்னும் தொழிற்பெயர்; அது செய்யுமன என விரிந்து நின்றது. அது சொல்லென்னும் பெயர்ப்பயனிலை கொண்டு முடிந்தது (தொல். 484) என்று உரைத்துள்ளார். நச்சினார்க்கினியர் இசைக்கும் என்பது செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று; மன் என்பது வினைபற்றிய அசைநிலை இடைச்சொல்லாய் நின்றது (தொல். 484) எனவும், 'மன ஈற்று எச்சமாய் எதிர்காலம் உணர்த்தும் செய்ம்மன என்னும் சொல், (தொல். 707) எனவும் உரைத்துள்ளார். கல்லாடனார் செய்ம்மன என்பது தெரிநிலை வினைமுற்றே (தொல். 484) என்று உரைத்துள்ளார்.

செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல்லுடன் இடம், பால், எண் குறியீடு இணைந்த அமைப்பே இது

செய்ம் — அன் — அ (தொல். 707)

இசைக்கும் — அன் — அ (தொல். 484)

இவற்றுள் 'அன்' சாரியை எனவும் 'அ' அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதி எனவும் கொள்ளலாம். செய்யும் என்னும் வாய்பாட்டுச் சொல் இறப்பு அல்லாக் காலத்தை (nonpast) உணர்த்தியது போல இதுவும் இறப்பு அல்லாக் காலத்தை உணர்த்தியது. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இது எதிர்காலத்தை உணர்த்துவது என்று கூறியதும் நோக்கத்தக்கது.

'மன' என்பதில் உள்ள அகரம் அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதியாக இருக்க அது இரு திணைக்குமுரிய விரவு வினையாதல் எங்கனம் என்று கேள்வியை எழுப்பி, சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் அதனைத் தொழிற்பெயர் என்று குறிப்பிட்டுள்ளனர். அவர்கள் வினையாலணையும் பெயரையும் அங்ஙனமே குறிப்பிடுவதால் செய்ம்மன என்பது வினையாலணையும் பெயராகவே இருதிணைப் பெயர்களுடன் தொடர்ந்து நின்று வழங்கி வந்ததனைக் கருதியே தொல்காப்பியர் அதனை வினையுள் அடக்கிக் கூறினர் என்று மோ. இசுரயேல் விளக்கியுள்ளார்.[37]

செய்யும் என்னும் வாய்பாடும் வினைமுற்று

செய்யும் என்னும் வாய்பாட்டு வினையானது திணை, பால், எண், இட விகுதிகளை ஏலாமையால் அது தொல்காப்பியரால் இருதிணைப் பொது வினைகளுள் அடக்கி உரைக்கப்பட்டுள்ளது. இவ்வினைமுற்று முன்னிலை, தன்மை, படர்க்கையில் பலர்பால் ஆகியவற்றுடன் வராது (தொல். 712); ஆகவே இந்தச் செய்யும் என்னும் முற்று ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய

வற்றுடன் தொல்காப்பியர் காலத்தில் வழங்கின என்பது தெளிவு. நன்னூலாரும் இவ்வினைமுற்று பற்றி இந்தக் கருத்தினைக் (நன். 348) கூறியுள்ளார். ஆனால் தொல்காப்பியர் இதனை "நிகழுங் காலத்துச் செய்யும் என்கிளவி" (தொல். 712) என்று கூற, நன்னூலாரோ "செய்யு நிகழ்பெதிர்வும்" (நன். 145) என இரு காலங் களைக் குறிக்கும் என்று கூறியுள்ளார். தொல்காப்பியர் காலத்தில் நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றுக்களே வழங்கி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. பெய ரெச்சங்களைக் கூறும்போதும் செய்த, செய்யும் என்ற இரு வாய்பாடு களையே தொல்காப்பியர் கூறியுள்ளார், இவற்றுள் செய்யும் என்னும் வாய்பாடே நிகழ்காலம், எதிர்காலம் இரண்டையும் குறிக் கிறது. சங்க இலக்கியத்திலும் இறந்த காலத்தைக் குறிக்க வேறு வடிவங்களும் எதிர்காலத்தைக் குறிக்க வேறு வடிவங்களும் வழங்க நிகழ்காலத்தைக் குறிக்க எத்தகைய வடிவங்கள் வழங்கின எனத் தெளிவாக அறிவதற்கில்லை என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.[88] சங்க காலத்துக்குப் பின் நிகழ்காலம் பற்றிய சொல் வடிவங்கள் தோன்றி வளர்ச்சி பெற்றன என்ற கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது. முக்காலத்துக்கும் உரிய இயல்பினையுடைய பொருள்களை நிகழ்காலத்துச் சொல்லால் சொல்ல வேண்டும் (தொல். 725) என்ற தொல்காப்பியர் கூற்றுக்கு, மலை நிற்கும், தீச்சுடும் போன்ற செய்யும் வாய்பாட்டு வினைகளையே உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். நன்னூலார் காலத்தில் நிகழ்காலத்துக்கெனத் தனி வினை வடிவங்கள் தோன்றவே செய்யும் வாய்பாட்டு வினைகள் எதிர்காலத்தைக் குறிக்கப் பெரும்பான்மையாகவும் நிகழ்காலத்தைக் குறிக்கச் சிறுபான்மையாகவும் பயன்படுத்தப்பட்டது. செய்யும் என்பதிலுள்ள உம்/ம் காலக் குறியீடு ஆகும். இக்காலத்தில் செய்யும் என்னும் முற்று அஃறிணையில் ஒன்றன்பால், பலவின்பால் எதிர் காலத்தில் மட்டுமே வழங்குகின்றது.

'செய்யும்' என்னும் வினைமுற்றுக்கு இடவரையறை உணர்த்தப் பட்டது போல, செய்யும் என்னும் பெயரெச்சத்துக்கு வரையறைகள் கூறப்படவில்லை. இதனையும் இருதிணைப் பொதுவினையாகவே தொல்காப்பியர் கூறியுள்ளார். இருதிணை, மூவிடம், ஐம்பால்களிலும் இது வழங்கும். உம் உந்தாகும் இடனுமார் உண்டே (தொல். 77) என்று தொல்காப்பியர் கூறும் உம் செய்யும் என்னும் பெயரெச்சத் தின் உம் என்று சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கருதுவர். ஆனால் சங்க இலக்கியத்தில் பெயரெச்சத்தின் உம் ஈறு உந்து ஈறாகத் திரிந்து வழங்குதற்குச் சான்றுகள் இல்லை. செய்யும் என்னும் முற்றுச் சொல்லின் இறுதியில் துவ் விகுதி சேர்வதால் மட்டுமே செய்யுந்து என்னும் வடிவம் தோன்றுகிறது என்று வே. வேங்கட ராசுலு ரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்.[89]

எதிர்மறை

எதிர்மறைப் பொருள் தமிழில் சொல்லமைப்புக்களாலும் தொடர் அமைப்பு முறையாலும் உணர்த்தப்படுகிறது. எதிர்மறைப் பொருள்

உணர்த்தும் வினைகளைத் தனிவகையாகத் தொல்காப்பியர் பகுத்துக் கூறவில்லை. சொற்களில் உள்ள எதிர்மறைப் பொருள் உணர்த்தும் உருபன்கள் எவை எனவும் விதந்து ஓதவில்லை.

இருதிணைக்கும் பொதுவான விரவு வினைகளைப் பற்றிக் கூறுங்கால் 'இன்மை செப்பல்' (தொல். 707) என ஒருவகையினைத் தொல்காப்பியர் கூறுகின்றார். 'இல்லை' 'இல்' என்ற எடுத்துக் காட்டுகளை உரையாசிரியர்கள் இதற்குத் தந்துள்ளனர். 'இல், என்ற குறைவினை அடியிலிருந்து 'இல்லை' என்ற வினைமுற்று ஆக்கப் படுகிறது. தொல்காப்பியர் குறுப்பிடும் 'இல' என்னும் குறிப்பு வினை முற்றும் (தொல். 705), 'இல்' என்னும் குறைவினையடியும் 'அ' என்னும் விகுதியும் சேர்ந்தமைந்த வடிவங்களே. 'இல்' என்னும் வினையடியாகத் தோன்றிய 'இன்றி' என்னும் வினையெச்சம் (தொல். 237) பற்றித் தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் கூறி யுள்ளார். எதிர்மறுத்துக் கூறும்போதும் வேற்றுமைகள் தத்தம் பொருளில் திரிவது இல்லை (தொல். 591) என வேற்றுமை மயங் கியலில் கூறியுள்ளார். அதே போன்று பெயரெச்சமும் வினை யெச்சமும் எதிர்மறையாகக் கூறப்படும்போதும் தமது எச்சத் தன்மையை இழப்பது இல்லை (தொல். 721) எனக் கூறியுள்ளார்.

ஆ, ஏ, ஓ என்னும் மூன்றும் வினா எழுத்துக்களாகத் தொல் காப்பியரால் (தொல். 32) கூறப்பட்டுள்ளன. வற்புறுத்திக் கூறப் படும் வினாச் சொற்கள் எதிர்மறையையும் உணர்த்தும் (தொல். 729) என அவர் கூறியுள்ளார்.

யான் வைதேனா (ஆ)

யான் வைதேனா (ஏ)

இங்கு யான் வையவில்லை என்னும் எதிர்மறைப் பொருள் உணர்த்தப்படுவதாக உரையாசிரியர்கள் உதாரணம் காட்டி யுள்ளனர்.

இடையியலில் தொல்காப்பியர் உம் (தொல். 740) ஓ (தொல். 74) ஆகிய இடைச்சொற்கள் எதிர்மறைப் பொருள் உணர்த்துவன எனக் கூறியுள்ளார்.

சொல்லமைப்பால் எதிர்மறைப் பொருள் உணர்த்தப்படும்போது அது எதிர்மறை வினையடியாகத் தோன்றிய வினைச் சொற்க ளாலும், உடன்பாட்டு வினைகளோடு எதிர்மறை உணர்த்தும் உருபன்கள் சேர்ந்தும் அப்பொருளைக் குறிக்கின்றன. எதிர்மறை தொடர் அமைப்பால் உணர்த்தப்படுங்கால் உடன்பாட்டு வினை யுடன் இல், அல் என்பன போன்ற குறிப்பு வினையின் அடியாகத் தோன்றிய வினைமுற்றுக்களோ சேர்ந்து அப்பொருளினைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

தமிழில் எதிர்மறைப் பொருள் உணர்த்தப்படும் முறையினை வரலாற்று நோக்கில் ஆய்ந்து தொடரமைப்பை விட்டுச் சொல்லமைப்

பால் எதிர்மறைப்பொருள் உணர்த்தலே மிகுதியாகக் காணப் படுகிறது என்று கூறும் செய்தியும் இங்கு நினையத்தக்கது.[90]

தொடரமைப்பால் எதிர்மறைப் பொருள் உணர்த்தப்படும் முறையில் பெரிய கருத்து வேறுபாடுகளுக்கு இடம் இல்லை. எதிர் மறை உணர்த்தும் சொல்லின் அமைப்பும் அதன்கண் காலக் குறியீடு உள்ளதா என்பது பற்றியும் ஆய்வாளர்கள் வேறுபட்ட கருத்துக் களைக் கூறியுள்ளனர்.

எதிர்மறையும் காலமும்

தொல்காப்பியம் கூறும் எதிர்மறை பற்றிய கருத்துக்களிலிருந்து எதிர்மறை உணர்த்தும் வினைகளில் காலக் குறியீடு இல்லை என்று அறியலாம். இதனை உரையாசிரியர்களும் உணர்ந்து எழுதி யுள்ளனர். அஃறிணைப் பன்மை வினைமுற்று விகுதி கூறும் நூற்பா (தொல். 701)வின் உரையில்,

> ஆகாரம் எதிர்மறை வினையாய் மூன்று காலத்திற்கும் உரித் தாயினும் எதிர்காலத்துப் பயின்று வரும். ... ... ஆகாரம் காலவெழுத்துப் பெறாது

எனச் சேனாவரையரும்,

> ஆகாரம் கால எழுத்துப் பெறாது எதிர்
> காலத்துப் பயின்று மறையாய் வரும்

என நச்சினார்க்கினியரும் உரைத்துள்ளனர். இவர்களது கூற்று களிலிருந்து ஆகாரம் எதிர்மறை உணர்த்தும் குறியீடு என்பதும் காலம் உணர்த்தும் எழுத்தினைப் பெறாவிடினும் எதிர்காலத்தைக் குறிக்கும் என்று அவர்கள் எண்ணுகின்றனர் என்பதும் புலனாகிறது கால எழுத்தினைப் பெறாது என்பதால் வினையடியுடன் எதிர் மறைக் குறியீடு நேரடியாகச் சேர்க்கப்படுகிறது என்று உணரலாம். இந்த வினையால் உணர்த்தப்படும் செயல் நிகழாத தன்மையை நோக்கிப் போலும் உரையாசிரியர்கள் இது எதிர்காலத்தைக் குறிக்கிறது என்று கூறியுள்ளனர்.

வினையெச்சங்களைப் போன்று எதிர்மறையும் அது பயன் படுத்தப்படுகின்ற சூழலை ஒட்டிக் காலம் உணர்த்துகின்றது என்று கருதப்படுகிறது.[91] திராவிட மொழிகளில் உள்ள எதிர்மறை இன்ன நேரம் என்று வரையறை கூற இயலாத அல்லது முக்காலத்துக்கும் உரிய காலத்தை உணர்த்துகின்றது என்று கால்டுவெல் கூறி யுள்ளார்.[92]

எதிர்மறையின் காலக் குறியீடு

காலக் குறியீடு இல்லாமையே எதிர்மறையாகும் என்றும் மொழி யியல் நோக்கு ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இட வேறுபாடு உணர்த்தும் வினைமுற்றுக்களில் விகுதியுடன் தொடர்புடைய 'அ'

மறைந்து விடுகிறது. அதன் பயனாக எதிர்மறை வினை என்பது உடன்பாட்டு வினையைக் கொண்டே, அதில் காலக் குறியீடு இல்லாமையைக் கொண்டே உணர்ந்து கொள்ளக் கூடியதாய் உள்ளது என்று யூலி பிளாக் கூறுவர்.[93] ஆல்பிரட் மாஸ்டர் என்ற மொழியியல் ஆய்வாளரும் இது போன்ற கருத்தினைக் கூறி யுள்ளார்.[94]

எதிர்மறை வினைகளில் வரும் இட விகுதிகள் அனைத்தும் நெடிலை விகுதியாக (ஆ) உடையன. ஆகவே காலக் குறியீடு இல்லாமையைக் கொண்டும் நெடில் விகுதியைக் கொண்டும் எதிர் மறையை உடன்பாட்டிலிருந்து பிரித்து அறியலாம். உடன் பாட்டிலும் இடம் உணர்த்தும் நெடில் விகுதியைக் கொண்ட வினைகள் உள்ளன. ஆனால் இடம் உணர்த்தும் விகுதிகள் நெடிலாக இருப்பினும் குறிலாக இருப்பினும் அது உடன்பாட்டி னின்றும் எதிர்மறையாய் வேறுபடுவது இல்லை என்பதும் உடன் பாட்டில் வந்த நெடில் விகுதி காலக்குறியீட்டுக்குப் பின்னரும், எதிர்மறையில் வினையடியுடன் நேரடியாகவும் இணைக்கப்படுகிறது என்பதும் நினைவில் கொள்ளத்தக்கன என்று மோ. இசுரயேல் விளக்கி உள்ளார்.[95]

இடம் உணர்த்தும் விகுதியாகிய உயிரைத் தொடர்ந்து தமிழிலும் கன்னடத்திலும் வழங்கிய எதிர்மறைக் குறியீடாகிய 'அ' படிப்படி யாக அதனுடன் சேர்ந்து விட்டதாகத் தோன்றுகிறது என்று இதன் வரலாறு பற்றிக் கால்டுவெல் கூறியுள்ளார்.[96] திராவிட மொழிகள் சொல்லமைப்பாலேயே பெரிதும் எதிர்மறையினை உணர்த்தும் திறம் உடையன; அது வினையடிக்கும் விகுதிக்கும் இடையில் 'அ' சேர்க்கப்படுவதால் உண்டாகிறது என்று யூலிபிளாக் எதிர்மறை வினை பற்றிக் குறிப்பிடுவதும் 'ஆ' எதிர்மறைக் குறியீடு என்பதை உறுதிப் படுத்துவதாகவே உள்ளது.[97] "வினையடிக்கும் இட விகுதிக்கும் இடையில் 'அ' என்ற எதிர்மறைக் குறியீடு அமைகிறது. அது எ, அ, இ ஆகிய மாற்றுருபன்களைக் கொண்டது; 'எ' வினை யடிக்கும் தன்மை இடவிகுதி (எ)க்கும் இடையிலும், 'அ' வினை யடிக்கும் படர்க்கை இட விகுதி (அ)க்கும் இடையிலும் 'இ' வினை யடிக்கும் முன்னிலை இட விகுதி (இ)க்கும் இடையிலும் வருகின்றன. சுருக்கமாகச் சொல்வதெனில் தொடர்ந்து வரும் இடக்குறியீடுகள் எதிர்மறைக் குறியீட்டின் வடிவத்தை மாற்றி அமைக்கின்றன" என்று எதிர்மறைக் குறியீடு பற்றியும் வினைச் சொல்லில் அது அமையும் முறை பற்றியும் வி.ஐ. சுப்பிரமணியம் தெளிவாக விளக்கியுள்ளார்.[98]

எதிர்மறை எச்சங்கள்

செய்யாது என்னும் வாய்பாட்டு எதிர்மறை வினையெச்சம் தொல்காப்பிய மொழிநடையில் காணப்படுகிறது. இதனைச் செய்-ஆத்-உ எனப் பகுத்து, ஆத் என்பது எதிர்மறை குறியீடு, உகரம் வினையெச்ச விகுதி என்று வி.ஐ. சுப்பிரமணியம் கூறியுள்ளார். 'ஆ' என்பதை எதிர்மறை விகுதியாகக் கொண்டால் 'த்' என்பது தனியே

நிற்பதால் 'ஆத்' என்பதையே எதிர்மறையாகக் கொள்ளல் தக்கது என்பது அவர் கருத்து." சொல்லைப் பகுத்து அறியுங்கால் எந்த ஒரு எழுத்தும் கணக்கில் கொள்ளப்படாமல் விடுபடல் கூடாது என்ற நோக்கில் அதனை அவர் அவ்வாறு விளக்கியுள்ளார் எனினும் செய்யாது என்பதை செய்-ஆ-து எனப் பிரித்தலே சரியான பகுப்பு என்று கூறி அதன் அமைப்பினைப் பின்வருமாறு மோ. இசுரயேல் விளக்கியுள்ளார். 'த்' என்பதை உகரத்தோடு சேர்த்து 'து' என்பதை வினையெச்ச விகுதியாகக் கொள்ள வேண்டும். இந்தத் 'து' விகுதி செய்து வாய்பாட்டு வினைகளின் ஒப்புமையாக்கத்தால் தோன்றி யிருத்தல் வேண்டும் என்று அவர் கருதுகிறார். மேலும் அதனைத் தொடர்ந்து 'அன்று' 'இன்று' என்னும் எச்ச வடிவங்களும் 'து' விகுதி கொண்டனவாகவே எண்ணி அல்-து இல்-து எனப் பகுக்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.[100]

செய்யா என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் தொல் காப்பியத்தில் காணப்படுகிறது செய்யாத என்னும் வாய்பாட்டு வினையெச்சம் செய்த என்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினை யெச்சத்தின் ஒப்புமையாக்கத்தால் தோன்றியிருக்க வேண்டும்; செய்யாத என்னும் வடிவம் தொல்காப்பியத்தில் காணப்படாததால் அது பிற்கால வளர்ச்சியாக இருக்கலாம்.

செய்யாமை என்னும் எதிர்மறைத் தொழிற்பெயர் தொல் காப்பியத்தில் காணப்படுகிறது. இது வினையெச்சமாகவும் பயின்று வந்துள்ளது.

எதிர்மறையின் காலக் குறியீடு ஆய்வுக்குரிய பொருளாக இருந்து வந்துள்ளது. உரையாசிரியர்கள் அதில் காலவெழுத்து இல்லை என்பதையும் அது எதிர்காலம் உணர்த்தும் என்றும் உரைத் துள்ளனர். 'ஆ' என்பது எதிர்மறைக் குறியீடு என அவர்களால் கண்டு கூறப்பட்டுள்ளது. எதிர்மறை வினையின் அமைப்பும் அதனுடன் எதிர்மறைக் குறியீடு அமையும் முறையும் தெளிவாக விளக்கப்பட்டு அதனுள் காலக் குறியீடு இன்மையும் மொழியியல் நோக்கு ஆய்வாளர்களால் உறுதி செய்யப்பட்டுள்ளது.

செயப்பாட்டு வினை

செய்வினையாக அமைந்த தொடரின் எழுவாய் கருவிப் பொருளாக வரும்போதும், செயப்படுபொருள் எழுவாயாக வரும் போதும் அது செயப்பாட்டு வினை எனப்படுகிறது. தொல்காப்பியர் செயப்பாட்டு வினை பற்றித் தனியே குறிப்பிடவில்லை. மூன்றாம் வேற்றுமையின் பொருளைக் கூறுங்கால் அது செயலைச் செய்த வனையும் உணர்த்தும் என்றும் கூறியுள்ளார். செயப்படு பொருண்மை உணரப்பட்டிருந்தாலேயே அத்தகைய வழக்கு இருத்தல் இயலும் என்று கருதப்படுகிறது.[101] ஆனால் இதற்கு உரையாசிரியர்கள் தரும் எடுத்துக்காட்டுகள் செய்வினை வடிவத்தில் அமைந்தனவாகவே காணப்படுகின்றன. செயப்படு பொருள்

செயலைச் செய்தவன் அல்லது செய்தது (கருத்தா) போல வழங்கப் படுதல் வழக்கியல் மரபு (தொல். 731) எனக் குறிப்பிட்டுள்ளார். 'இல்லம் மெழுகிற்று' என்பன போன்ற எடுத்துக்காட்டுகளை உரை யாசிரியர்கள் தந்துள்ளனர். மெழுகப்பட்டது இல்லம் என்ற பொருளே இங்கே பெறப்படுவது. ஆனால் இல்லம் மெழுகிய செயலைச்செய்தது போன்ற பொருள் தருமாறு தொடரமைப்பு காணப்படுகிறது. இதனால் செய்வினை கொண்டே செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தப்பட்டிருக்க வேண்டும் என்பது தெரிகிறது.

தொல்காப்பிய நூற்பாக்களில் 'எனப்படுப' 'சொல்லப்பட்ட' போன்ற வடிவங்களைக் காண முடிகிறது. இவை செயப்பாட்டு வினை வடிவங்கள் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தொல் காப்பியர் இத்தகைய வடிவங்களின் இலக்கணம் பற்றிக் குறிப்பிட வில்லை. வினைச்சொல்லுடன் 'படு' என்னும் துணைவினை சேர்ந்து அமையும் வடிவங்கள் இவை. சொல்லப்பட்டது என்பன போன்ற வடிவங்கள் தமிழுக்கு உரியன அல்ல என்று கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.[102] அ. சிதம்பரநாதன் செட்டியார் கால்டு வெல்லின் கருத்தினை மறுக்கும் முறையில் 'படு' என்பது செயப்படு பொருளை உணர்த்தப் பயன்படுத்தப்படும் முறை மிகப் பழமை யானது என்று விளக்கியுள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களில் செய்வினை வடிவங்களைக் கொண்டே செயப்பாட்டுப் பொருண்மை உணர்த்தப்பட்டது என்றும், பின்னர் படு, உண், பெறு போன்றவை அப்பொருண்மையை உணர்த்த மிகுதியும் வழங்கத் தொடங்கின என்றும் அவர் கருதுவர்.[103] செய்வினை வடிவமும் 'படு, போன்ற துணை வினைகளுடன் சேர்ந்த வடிவங்களும் தொல் காப்பியர் காலத்தில் செயப்பாட்டுப் பொருண்மை குறிக்கப் பயன் படுத்தப்பட்டிருக்க வேண்டும். தொல்காப்பியர் செய்வினை பயன் படுத்தப்பட்டமைக்கு விதி கூறியுள்ளார். படு போன்ற துணை வினைகளுடன் சேர்த்து அப்பொருண்மையைப் புலப்படுத்துவதற்கு தம் நூற்பா நடையில் பயன்படுத்தியுள்ளார் தொல்காப்பியர் காலத்தில் 'படு' என்னும் துணை வினைகளின் உதவியால் செயப் பாட்டுப் பொருண்மை உணர்த்துதல் வழக்கில் சிறுபான்மையே இருந்திருத்தல் வேண்டும். செய்வினை அமைப்பைக் கொண்டே செயப்பாட்டுப் பொருண்மை உணர்த்துதல் தமிழ் மொழியின் சிறப்புத் தன்மை என்று மோ. இசுரயேல் கூறியுள்ளார்.[104] செய் வினை, செயப்பாட்டு வினை பற்றி மாற்றிலக்கண முறையில் ஆராய்ந்து தமிழில் அமைந்த செய்வினை, செயப்பாட்டு வினை வடிவங்கள் தன்வினை, பிறவினை வடிவங்களே என்று ச. அகத்திய லிங்கம் கூறியுள்ளதும் கருதத்தக்கது.[105]

காலம்

காலம் ஏற்பது வினையின் சிறப்பு இலக்கணம். வேற்றுமை, ஏலாமையும் காலமொடு தோன்றலுமே தொல்காப்பியரால் வினையின்

இலக்கணமாகக் கூறப்படுகிறன. பெயரினின்றும் வினையை வேறு படுத்துவனவும் இத்தன்மைகளே. காலம் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைப்படும் (தொல். *684, 685*) எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். ஆனால் தொல்காப்பியரது மொழி நடையிலும் சங்க இலக்கியத்திலும் நிகழ்காலத்துக்கெனத் தனி வினைமுற்று வடிவங்கள் காணப்படவில்லை. பெயரெச்சத்திலும் செய்யும், செய்த என்னும் இரு வடிவங்களையே தொல்காப்பியர் கூறியுள்ளார். செய்யும் என்னும் வடிவமே நிகழ்கால வினைமுற்றாகச் சங்க இலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளது. முக்காலத்தும் தோன்றும் இயல்புப் பொருளுக்கும் ஆளப்படும் என்றும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். எனவே, 'செய்யும்' வடிவம் வினைமுற்றாகவோ, பெயரெச்சமாகவோ நிகழ்காலத்தைக் குறிப்பதற்காக மட்டும் வழங்கப்படவில்லை எனக் கொள்ளலாம். காலக் குறியீடுகளைப் பற்றிக் குறிப்பிடுங்கால் மிகவும் தெளிவாக உள்ளன இறப்பு, நிகழ்வு எனப்படும் இரு காலத்துக்குரியனவே என்று யூலி பிளாக் கூறுவதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[106] எனவே தொல்காப்பியர் காலத்தில் நிகழ்காலமும் சேர்த்து முக்காலமாக எண்ணப்படினும் நிகழ் காலத்துக்குரிய வினைவடிவங்கள் முழுவளர்ச்சி அடையவில்லை என்னும் கூற்று[107] ஏற்கத் தக்கது என்றே தோன்றுகிறது.

வினைமுற்றுக்களைக் கால அடிப்படையில் பகுக்கலாம் என்று எச்சவியலில் (தொல். 910) தொல்காப்பியர் கூறியுள்ளார். இந் நூற்பாவின் உரையில் உரையாசிரியர்கள் தரும் உண்ணாநின்றான், உண்ணாநின்றன போன்ற எடுத்துக்காட்டுகள் பிற்காலத்தன. நிகழ்காலம் பற்றிக் குறிப்பிடும் போது, தொல்காப்பியர் 'செய்யும்' என்னும் வடிவத்தினையே கூறியுள்ளார்.

தொல்காப்பியர் முக்காலங்களைப் பற்றிக் கூறியிருந்தும் வினைச்சொல்லில் உள்ள காலக்குறியீடுகள் எவை எனப் பகுத்துரைக்கவில்லை. சேனாவரையர் வினைச்சொல்லின் காலக் குறியீடுகளைக் கண்டு கூற முனைந்துள்ளார். அம்முயற்சியில் அவர் வினைச்சொல்லின் காலம் என்பது என்ன என்று விளக்கியுள்ளார்.

> இறப்பாவது தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை. தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சியாகலின், அஃது ஒரு கணம் நிற்பதல்லது இரண்டு கண நில்லாமையின், நிகழ்ச்சியென்பதொன்று அதற்கு இல்லையாயினும், உண்டல் தின்றல் எனப் பல்தொழில் தொகுதியை ஒரு தொழிலாகக் கோடலின் உண்ணாநின்றான், வாராநின்றான் என நிகழ்ச்சியுமுடைத்து ஆயிற்று (தொல். 685)

இதனுள் கூறப்படும் நிகழ்காலம் பற்றிய சேனாவரையரின் விளக்கம் மிகவும் நுட்பமானதாகவும் பொருத்தமானதாகவும் காணப்படுகிறது.

நிகழ்காலம் என ஒன்று இல்லை. இந்த நொடியை நோக்கக் கடந்த நொடி இறந்த காலமாகி விடுகிறது. எனினும் ஒரு குறிப்பிட்ட தொழில் குறிப்பிட்ட காலத்தில் நிகழும்போது அது முற்றுப் பெறாமல் தொடர்ந்து கொண்டிருக்கும் நிலைமை நிகழ்காலம் எனப் படுகிறது என்னும் பொருளமைந்த இவ்வுரை ஏற்கத்தக்கதே இது எஸ்பர்ஸன் என்ற மொழியியலறிஞரின் நிகழ்காலம் பற்றிய கருத்துடன் ஒப்புமையுடையது.[108]

காலக் குறியீடுகள் பற்றிய தமது கருத்தினை வெளிப்படுத்த "குறிப்பினும் வினையினும் நெறிப்படத் தோன்றிக் காலமொடு வருஉம் வினைச்சொல்" (தொல். 686) என்ற நூற்பாவின் நெறிப் படத் தோன்றி' என்னும் தொடரைச் சேனாவரையர் பயன்படுத்திக் கொண்டுள்ளார்.

> வினைச்சொல் காலமுணர்த்துங்கால் சில நெறிப்பாடுடைய என்பது விளக்கிய 'நெறிப்படத் தோன்றி' என்றார். நெறிப் பாடாவது அவ் ஈற்றுமிசை நிற்கும் எழுத்து வேறுபாடு. அவை முற்ற உணர்த்தலாகா ஆயினும் அவ் ஈறு உணர்த்தும் வழிச் சிறிய சொல்லுதும்
> (தொல். 686)

ஈற்று அசையில் காலம் உணர்த்தும் குறியீடுகள் வரும் என்று சேனா வரையர் குறிப்பிடுவதால் அவர் கால இடைநிலைகளைக் குறிக் கிறார் எனக் கொள்ளலாம். இந்தக் கால இடைநிலைகளை அவர் 'காலத்துக்கேற்ற எழுத்து' (தொல். 690) 'கால எழுத்து' (தொல். 692) என்ற தொடர்களால் குறிப்பிட்டுள்ளார். வினைச்சொற்களின் ஈறு களைத் தொல்காப்பியர் கூறும் நூற்பாக்களின் உரைகளில் எந்த எந்த ஈறுகள் எந்த எந்தக் காலம் பற்றி வரும் என்று சேனாவரையர் உரைத்துள்ளார். அங்ஙனம் கூறும்போது ஒவ்வொரு காலத்துக்கும் உரிய ஈறுகள் இன்னின்ன (கால எழுத்துக்களோடு) வற்றோடு வரும் என்றும் சுட்டியுள்ளார். நிகழ்காலம் பற்றி அவர் கூறுவன நில், கின்று என்பன; "நில்லென்பது லகாரம் னகாரமாய் றகாரம் பெற்று நிற்கும்" என்று உரைத்துள்ளார். நின்று, கின்று என்பனவற்றை நிகழ் கால இடைநிலைகளாக அவர் குறிப்பிடுகிறார் என்பது தெரிகிறது. பிற்கால இலக்கண நூல்களில் 'ஆநின்று' என்பது நிகழ்கால இடை நிலையாகக் கூறப்பட்டுள்ளது. சேனாவரையர் கூறும் நிகழ்கால இடைநிலைகளாகிய நின்று, கின்று என்பனவற்றைத் தேவநேயப் பாவாணர் ஏற்று விளக்கம் தந்துள்ளார். ஆநின்று எனப் பிரித்தல் கூடாது என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.

> உண்ணாகிடந்தனம், உண்ணாவிருந்தனம் எனக் கிட, இரு என்பனவும் சிறுபான்மை நிகழ்காலத்தும் வரும் என்று சேனா வரையரே கூறியிருப்பதால், செய்துநின்று எனப் பொருள்படும் செய்யாநின்று என்னும் தொடர்ச்சொல்லே ஒரு சொற்றன்மை பெற்று நிகழ்கால வினைச்சொல்லாயிற்று என்க. உண்ணா நின்று என்பதை உண்+ஆநின்று எனப் பிரித்தால் உண்ணா

> கிடந்தனம், உண்ணாவிருந்தனம் என்பனவற்றையும் உண் + ஆகிடந்து + அனம், உண் + ஆவிருந்து + அனம் எனப் பிரித்தல் வேண்டும். அங்ஙனம் பிரித்தல் கூடாமை அறிக. இரு, கிட என்னும் வினைகள் எங்ஙனம் நிகழ்காலத்தை அமைக்கப் பயன்பட்டனவோ அங்ஙனமே நில் என்னும் வினையும் பயன் பட்டதென்க.
>
> இனி செய்கின்றான் என்பதிலுள்ள கின்று என்னும் இடை நிலையும் நின்று என்பதுபோல ஒரு காலத்தில் இறந்தகால வினையெச்சமாய் இருந்ததே. கிற்றல் = ஆற்றுதல், கில் பகுதி. கிற்பன், கில்லேன் (திவ். திருவாய். 3, 2, 6) 'கிற்றல்' (சிலப். 16:188) கிற்பு = செய்கை

என்னும் உரைக் குறிப்புகளை நோக்க ஆநின்று என்னும் இடை நிலை தவறாகப் பிரித்தலால் வந்தது என்று தேவநேயப் பாவாணர் குறிப்பிட்டுள்ளார். செய்யாநின்று என்பதைச் செய்யா + நின்று என்று பிரிக்க வேண்டும். அது செய்து நின்று என்று பாவாணர் கூறுவது, செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் செய்து என்னும் பொருளிலும் வழங்கும் என்னும் உரையாசிரியர்கள் கருத்துப்படி ஏற்கத் தக்கதே. இரு, கிட என்ற வினைகள் போன்றே நில் என்பதும் நிகழ்காலத்தை உணர்த்திற்று என்பது அவரது விளக்கம். "தழுவப் படும் வினையில் உள்ள 'நில்' என்னும் அடி தொடக்க நிலையில் நிகழ்ச்சித் தொடர்ச்சியை உணர்த்திப் பின்னர் செயல்நிலையில் நிகழ்ச்சியைக் குறித்திருக்கலாம் எனக் கருத இடமுண்டு"[102] என மோ. இசுரயேல் இது பற்றிக் கூறும் விளக்கமும் கருதத்தக்கது.

"செய்யாநின்றான்' என்பதைக் கால்டுவெல், செய்ஆகி நின்றான், செய்ஆயிநின்றான், செய்யாய் நின்றான், செய்யா நின்றான் எனப் பிரித்துள்ளார். 'ஆகி' என்பதே செயல் நிகழ்ச்சியைக் குறிக்கிறது என்பர் அவர்.[113] செய்யா என்னும் வினை யெச்சமும் நில் என்னும் வினையடியாகப் பிறந்த நின்று என்ற எச்சமும் அமைந்தது இத்தொடர் எனல் பொருத்தம். கில் என்பது கின்று, கிறு என்று மாறும்போது அங்கு இறந்தகால இடைநிலை 'த்' இருப்பதாகக் கருதப்படுகிறது. இவற்றால் தமிழில் இறந்தகால வினைமுற்றுக்களிலிருந்தே நிகழ்கால வினைமுற்றுக்கள் வளர்ச்சி அடைந்திருக்கலாம் என்று கூறுவது[111] ஏற்புடையது.

சங்க இலக்கியத்தில் காணப்படும் ஆகின்று போன்ற வடிவங்கள் (நினைப்பாகின்று, புலம்பாகின்று, உவமையாகின்று, இலீதாகின்று, செய்தாகின்று, நகையாகின்று, இன்பமாகின்று, கௌவையாகின்று) பல இடங்களில் விகுதியாகவும் ஒரோவிடங் களில் இடைநிலையாகவும் நின்று நிகழ்காலம் உணர்த்துகின்றன. நாளடைவில் ஆகின்று என்பதே கின்று, கிறு என மருவி இடை நிலையாகியிருக்க வேண்டும் என்னும் கருத்தும் ஈண்டு நினையத் தக்கது.[112]

எச்சங்கள்

வினையியலில் பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய இருவகை எச்சங்கள் பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம் என்றும், வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம் என்றும் குறிக்கப்படும். எச்சவியலில் பத்துவகை எச்சங்களையும் அவை முடியும் தன்மையையும் தொல் காப்பியர் குறிப்பிட்டுள்ளார். பெயரெச்சம், வினையெச்சம் ஆகிய இரண்டுடன் பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை, உம்மை, என, சொல், குறிப்பு, இசை ஆகிய எட்டுவகை எச்சங்களும் சேர்த்துப் பத்து வகை எச்சங்கள் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். மேலும் செய்கு என்னும் தன்மை ஒருமை வினைமுற்று வினைகொண்டு முடியும்; அவ்வாறு முடிந்தாலும் அது தனது வினைமுற்று இயல்பி னின்றும் மாறுபடாது (தொல். 689) என்றும் தொல்காப்பியர் குறிப் பிட்டுள்ளார். இதனை முற்றெச்சம் எனக் கொள்வர்.

வினையெச்சம்

'வினையெஞ்சு கிளவி' (தொல். 707, 713, 717, 721, 940) என்ற தொடரால் வினையெச்சத்தைத் தொல்காப்பியர் குறிப்பர். வினை யெச்சம் பற்றிப் பல நூற்பாக்களில் தொல்காப்பியர் கூறியுள்ள போதிலும் அவர் வினையெச்சம் என்பது என்ன என்று விளக்க வில்லை என்று பல ஆய்வாளர்கள் கருதியுள்ளனர்.[113] வினை எஞ்சி நிற்கின்ற கிளவி அல்லது வினையைக் கொண்டு முடிகின்ற கிளவி என்ற பொருள் வினையெஞ்சு கிளவி என்ற குறியீட்டிலேயே அமைந்துள்ளது.[114] வினையெச்சங்கள் இடம், பால் முதலியவற்றை உணர்த்தாமையால் அவற்றை விரவுவினையுள் தொல்காப்பியர் அடக்கியுள்ளார். நன்னூலார் வினையெச்சத்தின் இலக்கணத்தை,

> தொழிலும் காலமும் தோன்றிப் பால்வினை
> ஒழிய நிற்பது வினையெச் சம்மே (நன். 343)

என்ற நூற்பாவில் கூறியுள்ளார், வினையெச்சத்தை வரையறை செய்யுங்கால் முக்கியமாகக் கருதப்பட வேண்டியது அதன் சொல்லமைப்பு. தொல்காப்பியர் மொழியியல் அடிப்படையில் வினையெச்சத்தினை வரையறுக்கவில்லை எனினும் வாய்ப்பாடு களாலேயே அந்த அமைப்பினை மிக நன்றாகத் தெளிவுபடுத்தி யுள்ளார். வரையறை செய்வதால் ஏற்படுகின்ற தெளிவைவிட வாய்பாடுகளால் ஏற்படுகின்ற தெளிவு எவ்வகையிலும் குறைவான தாகத் தோன்றவில்லை என்று ச. அகத்தியலிங்கம் கூறுவது குறிப்பிடத்தக்கது.[115]

செய்து, செய்யூ, செய்பு, செய்தென, செய்யியர், செய்யிய, செயின், செய, செயற்கு என ஒன்பது வினையெச்ச வாய்பாடு களைத் (தொல். 713) தொல்காப்பியர் கூறியுள்ளார். பின், முன், கால், கடை, வழி, இடத்து ஆகிய ஆறு கிளவிகளும் வினை யெச்சத்தின் இயல்பினை உடையன (தொல். 714); செய்யா என்பது

வினையெஞ்சு கிளவி (தொல். 222) என்று எழுத்ததிகாரத்தில் குறிப்பிடுவர். இவற்றுள் சில வாய்பாடுகளுக்கு முடிவுகள் (தொல். 715, 716, 717, 718) கூறப்பட்டுள்ளன.

வினையெச்சம் வினையைக் கொண்டும், குறிப்பைக் கொண்டும் முடியும் (தொல். 915) என்று அதன் முடிபு பற்றி எச்சவியலில் கூறியுள்ளார். வினையெச்ச வாய்பாடுகளுக்குத் தொல்காப்பியர் காலம் வரையறுத்து உணர்த்தவில்லை. செய்தென் எச்சம் இறந்த காலத்துக்குரியது; அது எதிர்காலத்துக்கும் வரும் (தொல். 724) என்று 'செய்து' என்ற ஒரு வாய்பாட்டுக்கே காலம் கூறியுள்ளார். உரையாசிரியர்கள் பிற வாய்பாடுகளுக்கும் காலம் கூற முனைந்தனர். பிற்கால இலக்கண நூல்களிலும் வினையெச்சங்களுக்குக் காலம் கூறும் முறை காணப்படுகிறது.

வினையெச்சங்களின் வகைப்பாடு

வினையெச்சங்களைக் கால்டுவெல் 1. வினைப் பொருண்மை வினையெச்சங்கள் (Verbal participles), 2. நிபந்தனைப் பொருண்மை வினையெச்சங்கள் (Conditional patriciples) 3. முற்றாப் பொருண்மை வினையெச்சங்கள் (Infinitive Participles) என்று மூன்று வகையாகப் பாகுபடுத்தி ஆராய்ந்துள்ளார்[116] எல். வி. இராமசாமி அய்யர் இவற்றை 1. வினைப் பொருண்மை வினையெச்சங்கள் (Verbal Participles) 2. முற்றாப் பொருண்மை வினையெச்சங்கள் (Infinitive Participles) 3. நோக்கப் பொருண்மை வினையெச்சங்கள் (Purpose Participles) 4. நிபந்தனை மற்றும் இசைவுப் பொருண்மை வினையெச்சங்கள் (Conditional and Concessives) என்று நான்கு வகையாகப் பாகுபாடு செய்துள்ளார்.[117] தொல்காப்பியத்தில் கூறப்படும் ஒன்பது வாய்பாட்டு எச்சங்களையும் ஆறு விகுதி வகை எச்சங்களையும் அவற்றின் பயன்பாடு நோக்கி 1. வினைப் பொருண்மை வினையெச்சங்கள் (Verbal participle patterns), 2. நோக்கப் பொருண்மை வினையெச்ச வாய்பாடு (Purpose participle patterns), 3. நிபந்தனைப் பொருண்மை வினையெச்ச வாய்பாடு (Conditional participle pattern), 4. முற்றாப் பொருண்மை வினையெச்ச வாய்பாடு (Infinitive participle pattern), 5. வினையடைப் பொருண்மை வாய்பாடு (Adverbials) என்று ஆறுவகையாகப் பகுத்து மோ. இசுரயேல் ஆராய்ந்துள்ளார்.[118] வினையெச்சங்கள் வழங்கும் பொருண்மையின் அடிப்படையில் இத்தகைய பாகுபாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் தொல்காப்பியர் வினையெச்சங்களை இங்ஙனம் பகுத்து உரைக்கவில்லை. எனினும் தொல்காப்பிய உரையாசிரியர்களுடைய உரையிலிருந்து இந்த முறையில் அமைந்த பாகுபாடுகளை ஊகித்து உணர முடிகிறது. இதனைச் ச. அகத்தியலிங்கமும் எடுத்துக்காட்டியுள்ளார்.[119] அவர்களது வினையெச்சங்களின் அமைப்பினைக் கொண்டு அவற்றைத் தனி வினையெச்சம் (Simple verbal participle), கூட்டு வினையெச்சம் (Compound verbal participle) என்று ச. அகத்தியலிங்கம் பாகுபடுத்தியுள்ளார்.[120]

வினைமுற்றும் வினையெச்சமும்

வினைமுற்றுக்கும் எச்சங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. பெயரெச்சமும், வினையெச்சமும் எழுவாய் ஏற்பதிலும் ஏனைய வினையெச்சங்களை ஏற்பதிலும் வேற்றுமைத் தொடர்களை ஏற்பதிலும் முற்றும் எச்சமும் ஒரு தன்மையாகவே செயல்படுகின்றன. இலக்கணக் கொத்தின் ஆகிரியர் சுவாமிநாத தேசிகர் இக்கருத்தினை உணர்ந்து தமது இலக்கணத்தில் இதனை விளக்கியுள்ளார்.

> எச்சமென் றொன்றிலை இவையடை யென்றும்
> வேரெச்ச மென்றிலை விகாரமுற் றென்றும்
> எச்சமொன் றென்றும் இரண்டே என்றும்
> ... ... (இ. கொ. 84)

இதன் உரையிலும் உண்டான், சாத்தன் உழுதான் வந்தான் என்பன விகாரப்பட்டு உண்ட சாத்தன் உழுது வந்தான் என நிற்றலால் 'எச்சமென்று வேறில்லை விகாரமுற்றே' என்பர். பெயரெச்ச, வினையெச்சங்களை முற்றுவினையிலிருந்தே வருவித்துக் காட்டலாம் என்று கூறிப் பின்வரும் எடுத்துக்காட்டுகளைத் தந்து ச. அகத்தியலிங்கம் விளக்கியுள்ளார்.[121]

1. சாத்தன் நேற்று வீட்டுக்கு வந்தான்
2. நேற்று வீட்டுக்கு வந்த சாத்தன் இன்று போனான்
3. சாத்தன் நேற்று வீட்டுக்கு வந்து இன்று போனான்

முதல் தொடரில் சாத்தன் என்பது எழுவாய். நேற்று என்பது வினையடை (adverb). வீட்டுக்கு என்பது நான்காம் வேற்றுமைத் தொடர். இவையாவும் வந்தான் என்ற வினைகொண்டே முடிந்துள்ளன. இவ்வாறே ஏனைய இரண்டு தொடர்களிலும் சாத்தன், நேற்று, வீட்டுக்குஎன்பன வந்த, வந்து என்ற வினைகளைக் கொண்டே முடிகின்றன. வந்த, வந்து என்பன வினையெச்சங்கள் என்பதால் உறவுநிலைகள் மாறிவிடவில்லை. நேற்று, வீட்டுக்கு என்பன போனான் என்ற முற்றோடு முடியாமல் வந்த, வந்து என்ற எச்சங்களோடு முடிகின்றன. இன்று என்ற வினையடை போனான் என்ற வினையுடன் முடிகிறது.

வந்தான், வந்த, வந்து என்பன தொடரியல் இலக்கண நெறியில் ஒரு தன்மையனவாய்த் திகழ்கின்றன என்பது தெளிவாகிறது. தொடர் 1. சாத்தன் என்ற பெயருக்கு அடையாக நிற்கும்போது வந்தான் என்ற வினை வந்த என்ற பெயரெச்சமாகவும் போனான் என்ற வினைக்கு அடையாக நிற்கும்போது வந்து என்ற வினையெச்சமாகவும் மாறுகிறது. மாற்றிலக்கண மொழியியலார் இந்த முறையில் விளக்கம் தருவர்.

வினையெச்சங்களும் காலமும்

வினையெச்சங்களில் மிகுதியும் ஆய்வுக்குள்ளான கூறு அவற்றின் காலம் உணர்த்தும் தன்மை பற்றியதே ஆகும். தொல்

காப்பியர் வினையெச்சங்களுக்குக் காலப்பகுப்பு உரைக்கவில்லை. செய்தென் எச்சம் இறந்தகாலத்துக்கு உரியது; இது எதிர் காலத்துக்கும் வரும் (தொல். 724) என்று தொல்காப்பியர் குறிப் பிட்டதைக் கொண்டு தொல்காப்பிய உரையாசிரியர்கள் ஏனைய எச்சங்களுக்கும் காலப் பகுப்பு உணர்த்த முனைந்துள்ளனர். பின்னர் வந்த இலக்கண நூல்களும் இவ்வாறு காலம் வரையறுக்க முற் பட்டன. வினையெச்சங்களின் இத்தகைய காலப் பகுப்புக்கு மேற் குறித்த "செய்தென் எச்சத்து இறந்த காலம்" என்னும் நூற்பாவே அடிப்படையாக அமைந்தது.[122] இதனால் வினையெச்ச வடிவங் களில் உள்ள காலக் குறியீடுகளைப் பகுத்துணர்த்தும்போது அப் பகுப்பு முறையிலும், இன்ன வினையெச்சம் இன்ன காலம் உணர்த்தும் என்பதிலும் உரையாசிரியர்கள், இக்கால மரபிலக்கண வழி ஆய்வாளர்கள், மொழியியல் நோக்கு ஆய்வாளர்கள் ஆகியோர் தம்முள் மாறுபட்ட கருத்து உடையவர்களாய்க் காணப்படு கிறார்கள். தொல்காப்பியர் கூறிய வினையெச்சங்கள், அவை உணர்த்துவதாக உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் கருதிய காலம், அவற்றைப் பகுத்து அவர்கள் உணர்த்திய முறை, அவற்றின் பொருண்மைகள், அவை கொண்டு முடியும் வினைகள் ஆகியவை ஒவ்வொரு வினையெச்ச வாய்பாடாக முறையே இனி ஆராயப் படுகிறது.

செய்து என்னும் வாய்பாட்டு எச்சம்

இதனை இறந்த காலத்துக்கு உரியது (தொல். 724) என்று தொல் காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாய்பாடு உகரத்தில் முடியும் ஏனைய ஈறுகளையும், இகர, யகர ஈறுகளையும் உள்ளடக்கியது என்று சேனாவரையர் கருதியுள்ளார்.

> உகரம் கடதற ஊர்ந்து இயல்பாயும், ஏனையெழுத்து ஊர்ந்து இகரமாய்த் திரிந்தும் நெடில் ஈற்று முதல்நிலை முன்னர் யகரம் வரத்தான் கெட்டும், இறந்த காலம் பற்றி வரும் (தொல். 713)
> (எ.டு) நக்கு, உண்டு, வந்து, சென்று எனவும், எஞ்சி, உரிஞி, ஓடி எனவும்; ஆய், போய் எனவும் வரும்.

என்ற சேனாவரையரின் உரைப்பகுதியால் இது புலனாகிறது. நச்சினார்க்கினியரது உரைப்பகுதியிலிருந்து அவர் இக்கருத்தினை உடன்படவில்லை என்று அறியலாம்.

> இவற்றுள் உகரம் இகரமாய்த் திரிந்தது எனின் உரிஞி என்பதனை "ஞகாரை ஒற்றிய" (தொல். 296) என்னும் சூத்திரத் தான் உரிஞ் என நிறுத்தி, நிலைமொழித் தொழிலாகிய உகரம் பெறும் என விதித்தலின், உரிஞி என்னும் முற்றுகரம் திரிந்து உரிஞி என நிற்றல் பொருந்தாமை உணர்க (தொல். 713)

உரையாசிரியர்களின் இகர ஈறு பற்றிய கருத்து எப்படியிருப்பினும் அவர்கள் உகர ஈற்று வடிவங்களின் உகரமும், இகர ஈற்று வடிவங்

களின் இகரமும் வினையெச்ச விகுதிகள் எனக் கருதியுள்ளனர் எனலாம். உகரம் விகுதி எனல் பொருந்தாது என்று தேவநேயப் பாவாணர் உரைத்துள்ளார். அவர் செய்து, செய்தென, செயற்கென என்னும் வாய்பாட்டின் ஈறுகளைப் பின்வருமாறு பகுத்துள்ளார்.

> செய்து, செய்தற்கு என்னும் எச்சங்களின் விகுதி உகரமும் குகரமும் எனக் கொள்வது பொருந்தாது. இவற்றைத் துகரமும் துவ்வோடு என எனவும், அல்லோடு குகரமும் எனக்கொள்வதே பொருந்தும்

எனத் தமது உரைவிளக்கக் குறிப்பில் கூறியுள்ளது ஏற்கத்தக்கது.

இலக்கணக்கொத்து, நேமிநாதம் ஆகிய பிற்கால இலக்கண நூல்கள் செய்+து எனப்பகுத்து 'து'வை வினையெச்ச விகுதியாகவே கொள்கின்றன. இதே போன்று பகுத்து இவ்வினையெச்சம் காட்டும் தொழில் தன்னைத் தொடரும் வினைகளின் தொழிலுக்கு முன்னால் நிகழும் என்று பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி,[123] உரைத்துள்ளார். ச. அகத்தியலிங்கம்,[124] மோ. இசுரயேல்[125] ஆகியோர் செய்+த்+உ எனப் பகுத்து த் — இறந்தகால இடைநிலை என்றே கொள்கின்றனர். செய்து வாய்பாட்டு எச்சம் இறந்த காலத்தில் அமைந்திருக்கிறது என்றால் அது அவ்வெச்சத்தால் குறிக்கப்படும் காலம் அவ் வாக்கியத்தில் உள்ள முற்றின் காலத்தை நோக்கவே இறந்தகாலம். இந்த எச்சம் நிகழ்கால அல்லது எதிர்கால முற்றால் தொடரப் படுமானால் முற்றால் உணர்த்தப்படும் செயலுக்கு முன்னர் எச்சத் தால் உணர்த்தப்படும் செயல் நிகழ்ந்துள்ளது என்பது பொருள் என்று, செய்து வினையெச்சத்தின் காலம் பற்றி மோ. இசுரயேல் தெரிவித்துள்ளார்.[126] இதே போன்ற கருத்தினை அ. சித்திரப் புத்திரனும் கூறியுள்ளார்.[127]

தகர ஒற்று இறந்த காலத்துக்கு உரியது என்றால் அது இறந்த கால முற்றுக்களை மட்டுமே ஏற்க வேண்டும். அவ்வாறு இன்றி செய்து வருகிறான், செய்து வருவான் என ஏனைக்கால முற்றுகளை யும் கொண்டு முடிதலால் இதனை இறந்தகாலக் குறியீடாகக் கொள்ளல் பொருத்தமன்று. உகரத்துடன் சேர்த்து து என்பதை வினையெச்ச விகுதியாகக் கொள்ளலே தக்கது.

செய்து வாய்பாட்டில் அமைந்த இகர ஈற்று எச்சங்களில் உள்ள இகர ஈற்றினை உரையாசிரியர்கள் வினையெச்ச விகுதி எனக் கருதி யுள்ளனர். இந்த இகரத்தைக் காலக் குறியீடாகக் கொள்ளலே தக்கது என்றும் வினையெச்ச விகுதி *0* ஆகக் கருதப்பட வேண்டும் என்றும் மோ. இசுரயேல் குறிப்பிட்டுள்ளார்.[128]

நசைஇ போன்ற அளபெடை வடிவங்களிலும் செய்து வாய் பாட்டு வினையெச்சங்கள் காணப்படுகின்றன. நசை என்ற பெயர்ச் சொல் அது வினையெச்சமாக மாறுதற்கு அளபெடுத்து நசைஇ என்று மாறுகின்றது என மரபிலக்கண வழி ஆய்வாளர்கள் கருதியுள்ளனர்.

நசை என்பது பெயர்ப் பொருண்மை உணர்த்தும்போது பெயராகவும் வினைப் பொருண்மை உணர்த்தும்போது வினையாகவும் செயற்பட வல்லது. நசை என்ற வினைச்சொல்லுடன் 'இ' வினையெச்ச விகுதி சேர்த்து நசைஇ என்ற வினையெச்சமாக மாறுகின்றது. எனவே இவை போன்ற அமைப்புள்ளன அளபெடை வடிவங்களல்ல என்னும் கருத்து[129] ஏற்கத் தக்கதே. இவ்வகையிலுள்ள செய்து வாய்பாட்டு எச்சங்கள் தன்வினையாகவும் பிறவினையாகவும் செயல்பட வல்லன[130] என்பதை ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டி யுள்ளனர்.

செய்யூ என்னும் வாய்பாட்டு எச்சம்

இது தன் வினைமுதல் வினையை ஏற்கும் என்பர் தொல் காப்பியர் (தொல். 715). செய்+ஊ என உரையாசிரியர்கள் இதனைப் பகுத்துள்ளனர். செய்யா வாய்பாட்டு வினையெச்சத் தினையும் இதனுள் அடக்கிச் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் உரைத்துள்ளனர்.

> ஊகாரம் உண்ணூ வந்தான், தின்னூ வந்தான் எனப் பின்வருந் தொழிற்கு இடையின்றி முன்வரும் தொழில்மேல் இறந்த காலம் பற்றி வரும். அஃது உண்ணாவென ஆகாரமாயும் வரும் (தொல். 713)

என்று சேனாவரையரும்,

> செய்யூ என்பதற்குச் செய்யா என்பதும் ஓர் வாய்பாடு. அதுவும் ஒன்றென முடித்தல் என்பதனாற் கொள்ளப்படும். இதனை இறந்தகால விரவுப் பொருட்டு என்பாரும் உளர் (தொல். 713)

என்று கல்லாடரும் கூறும் உரைப்பகுதிகள் இதனை உணர்த்தும். செய்யா வாய்பாட்டு எச்சத்தினைத் தொல்காப்பியர் (தொல். 222) கூறியுள்ளபோதிலும் அவர் வினையெச்ச வாய்பாடுகளின் தொகை கூறும் நூற்பாவில் சேர்க்கவில்லை. தெய்வச்சிலையார் இவ்வெச்சம் இறந்தகாலமும் நிகழ்காலமும் காட்டும் என்பர். நச்சினார்க்கினியர் இறந்த காலம் காட்டும் என்றே கூறியுள்ளார். இந்த எச்சம் தன் வினை, பிறவினை ஆகிய இரு பொருளிலும் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளமையும் சூழலுக்குத் தக செய்து என்றோ, செய என்றோ பொருள்படும் தன்மை வாய்ந்த செய்யூ என்னும் எச்சத் துடன் செய்து என்னும் எச்சப்பொருளிலும் செய்யாது என்னும் எதிர் மறைப் பொருளிலும் பயின்று வரும் செய்யா என்னும் எச்சத்தை அடக்குதல் பொருந்தாது என்பதும் வினையெச்சங்களை வரலாற்று நோக்கில் ஆராய்ந்தோரால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[131]

செய்பு என்னும் வாய்பாட்டு எச்சம்

செய்பு என்னும் வாய்பாட்டு எச்சத்தினை செய்+பு என உரை யாசிரியர்கள் பகுத்துள்ளார்கள் என அறிய முடிகின்றது. செய்து வாய்பாட்டு எச்சத்தினை செய்+த்+உ எனப் பிரித்தமை போன்று

இதனைச் செய்+ப்+உ எனப் பிரிக்காமையின் காரணம் ப்+உ என்றால் பகரம் எதிர்காலம் காட்டும் குறியீடு ஆதலால் எதிர்காலம் எனல் வேண்டும்; அவ்வாறு அன்றி இவ்வாய்பாட்டு எச்சங்கள் இறந்தகாலப் பொருளில் பயின்று வந்ததாக அவர்கள் கருதியதால் அங்ஙனம் பகுத்தனர். செய்து என்னும் எச்சத்தின் தகர ஒற்று போன்றே இவ்வெச்சத்தின் பகர ஒற்றும் காலக் குறியீடு அன்று. அதனால் பு — வினையெச்ச விகுதி எனலே பொருத்தம். வருணனை மொழியியல் நோக்கிலும் இவ்வாறே உரைக்கப் பட்டுள்ளது.[132]

செய்பு என்னும் எச்சம் பெரும்பான்மை இறந்த காலத்திலும், முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிலோடு உடன் நிகழ்ந்து நிகழ்காலத்திலும் சிறுபான்மை வரும் என நச்சினார்க்கினியர் (தொல். 713) உரைத்துள்ளார். தெய்வச்சிலையார், சூழலை ஒட்டி இது முக்காலத்தையும் குறிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார் (தொல். 713). காலம் உணர்த்தும் குறியீடுகள் இதனுள் எதுவும் தெளிவாக இல்லாததால் உரையாசிரியர்களின் கருத்துகள் வெறும் ஊகங்களே என்பர்.[133] இது சூழலை ஒட்டிக் காலம் உணர்த்தும் என்றும் கருதப் படுகிறது.

'செய்தென' வாய்பாட்டு எச்சம்

செய்தென என்பதை செய்து என்னும் எச்சமும் என என்ற சொல்லும் சேர்ந்ததாகவே உரையாசிரியர்கள் கொண்டுள்ளனர். மொழியியல் ஆய்வாளரும் இதனை அங்ஙனம் பகுத்து விளக்கி யுள்ளனர். என என்பதை இணைப்பி (connector) என்றும், ஆங்கிலத்தில் பெரும்பாலான இணைப்பிகள் வினையாக உள்ளன என்று ஹாக்கெட் குறிப்பிடுவது போன்று, இந்த 'என' என்பதும் வினையெச்ச வடிவமாக நின்று இணைக்கும் தொழிலைச் செய்கிறது என்று மோ. இசுரயேல் எடுத்துக்காட்டியுள்ளார்.[134]

செய்தென வாய்பாட்டில் உள்ள 'செய்து' என்பதை அவர் எச்சமாகக் கொள்கிறார். இதற்கு மாறாக 'செய்து' வினைமுற்று என்று கருதுவோரும் உள்ளனர்.

> உரையாசிரியர்கள் கொண்டது போன்று உண்டு, மாய்ந்து முதலிய உருவங்களை மலையாள மொழியிற்போல வினைமுற்று உருவங்களாகக் கொள்வதே இலக்கண விளக்கத்திற்கு ஏற்ற தாகும்[135]

என வி. ஐ. சுப்பிரமணியம் கூறியுள்ளார். இகர ஈற்றுச் செய்தென் வாய்பாட்டுச் சொற்கள் இங்ஙனம் எனவென் எச்சத்தொடு சேர்ந்து ஆடியென, ஓடியென, பாடியென என்று வராததால், உண்டு, மாய்ந்து என்ற உகர ஈற்றுச் சொற்களும் 'செய்து' என்னும் எச்சமும் என என்னும் விகுதியும் சேர்ந்து உண்டென, மாய்ந்தென என்று 'செய்தென' வாய்பாட்டுச் சொற்களாகின்றன[136] என்னும் விளக்கமே கொள்ளத்தக்கது. வரலாற்று நோக்கில் இது கொள்ளத்தக்கது

எனினும் வண்ணனை நோக்கில் இதனைப் பிரிக்காமல் செய்தென என்று ஒரு சொல் நீர்மையதாகக் கொள்வதே தக்கது. இச்சொல் ஒருசொல் நீர்மையதாகவே நின்று எச்சப்பொருண்மையில் வந்ததனாலேயே இலக்கண ஆசிரியர்கள் செய்தென என்ற ஒரு வாய்பாட்டெச்சத்தினைத் தனியே உரைத்தனர் என்னும் கருத்தும் இங்குக் குறிப்பிடத்தக்கது.[137]

உரையாசிரியர்கள் 'செய்தென' வாய்பாட்டு எச்சம் காரண காரியப் பொருண்மை குறித்தும், விரைவுப் பொருண்மை குறித்தும் வரும் என்று கூறியுள்ளனர். இதனை,

> ஆன்வந்து இயையும் வினைநிலையான் முடிவன வருமாறு; மழை பெய்தென உலகம் ஆர்த்தது; மரம் தழைத்தது எனவரும். பிறவும் அன்ன (தொல். 717)

என்ற இளம்பூரணர் உரையாலும்,

> என என்பது கடதற ஊர்ந்து இறந்த காலம் பற்றி முடிக்கும் சொல்லால் உணரப்படும் தொழிற்குத் தன் முதல்நிலைத் தொழில் காரணமாய விரைவுப்பொருள் உணர்த்தும்.
>
> எ-டு. சோலை புக்கென வெப்பு நீங்கிற்று; உண்டெனப் பசி கெட்டது; உரைத்தென உணர்ந்தான்; மருந்து தின்றெனப் பிணி நீங்கிற்று எனவரும்.

என்ற நச்சினார்க்கினியர் உரையாலும் உணரலாம்.

செய்யிய, செய்யியர் வாய்பாட்டு எச்சங்கள்

செய் என்னும் வினையடியடன் இய, இயர் என்னும் விகுதிகள் இணைவதால் முறையே செய்யிய, செய்யியர் வாய்பாட்டு எச்சங்கள் உண்டாகின்றன. இளம்பூரணரைத் தவிர பிற உரையாசிரியர்கள் யாவரும் இதற்கு எதிர்காலத்தைக் குறித்துள்ளனர். வருணனை நோக்கில் ஆய்வோர் இதன்கண் காலம் உணர்த்தும் குறியீடு இல்லாமையை எடுத்துக்காட்டுவர். எல். வி. இராமசாமி அய்யர்,[138] மோ. இசுரயேல்[139] ஆகியோர் இவற்றை நோக்கப் பொருண்மை உடையன என்பர். இவை வியங்கோள் வினை வடிவத்தோடு ஒத்துள்ளமையை மு. வரதராசன் எடுத்துக் காட்டியுள்ளார்.[140]

செயின் வாய்பாட்டு எச்சம்

'செயின்' என்பது 'செய்' என்னும் வினையடியும் 'இன்' என்ற விகுதியும் சேர்ந்து அமைந்த வடிவம் ஆகும். சேனாவரையர் இது முக்காலத்துக்கும் உரியது என்றும், நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் எதிர்காலத்துக்கு மட்டுமே உரியது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இவ்வெச்சம் நிபந்தனைப் பொருண்மை உடையது.

செய வாய்பாட்டு எச்சம்

'செய' என்னும் வினையடியும் 'அ' என்னும் வினையெச்ச விகுதியும் சேர்ந்து அமைந்த வடிவம் ஆகும். இதனை முற்றாப்

பொருண்மை வினையெச்சம் (Infinitive participle) என்று கால்டு வெல்லும்[141] எல். வி. ராமசாமி அய்யரும்[142] குறிப்பிட்டுள்ளனர். செயவென் எச்சத்தில் காலக் குறியீடு இன்மையால் அது சூழலைப் பொறுத்து முக்காலமும் காட்டும் என்று எண்ணப்பட்டது.

செயற்கு வாய்பாட்டு எச்சம்

செயற்கு வாய்பாட்டு எச்சத்தினை நோக்கப் பொருண்மை உடையதாகக் கருதலாம். இதன் அமைப்பை விளக்குவதில் இரு வகைக் கருத்துக்கள் நிலவுகின்றன. 'செயல்' என்னும் தொழிற் பெயரும் 'கு' என்ற நான்காம் வேற்றுமை உருபும் சேர்ந்த வடிவ மாகவும், செய் என்ற வினையடியும் அற்கு என்னும் விகுதியும் சேர்ந்த வடிவமாகவும் இது பகுத்துக் காணப்பட்டுள்ளது. வடிவால் இது உருபேற்ற தொழிற்பெயராயினும் இதனை வினையெச்சமாகக் கொள்ள வேண்டியதன் காரணத்தைச் சேனாவரையர் பின்வருமாறு உரைத்துள்ளார்.

> செயற்கு என்னும் வினையெச்சம் உருபேற்று நின்ற தொழிற் பெயரோடு ஒப்புமை உடைத்தாயினும் உருபும் பெயரும் ஒன்றாகாது பகுப்பப் பிளவுபட்டிசையாது ஒன்றுபட்டிசைத் தலான் அதனின் வேறு ஆயினாற் போல... (தொல். 523)

கல்லாடர் இதனைத் தொழிற்பெயர் உருபேற்று நிற்பதாகவும் வினையெச்சமாகவும் கருதியுள்ளார் என்பது பின்வரும் உரைப் பகுதி யிலிருந்து புலனாகிறது.

> செயற்கு என்பது உணற்கு வந்தான் என்பது. இஃது அதற் பொருட்டு என்னும் பொருள் பற்றி வரும். இது உணல் என்னும் தொழிற்பெயர் நான்காம் உருபு ஏற்றவாறு அன்றோ எனின், அதுவுமோர் வழக்கு உண்டு. பெயர்ப் பொருண்மை நோக்கிய வழி அதுவாகவும், காலம் நோக்கிய வழி வினையெச்சமாகவும் கொள்க (தொல். 713)

நச்சினார்க்கினியர் இதனை வினையெச்சமாகவே கொள்ள வேண்டும் என்று கருதியுள்ளார்; அவரது விளக்கம் வருமாறு:

> உண்டான், உண்டவன் என்னும் தொழிற்பெயர்கள் உண்டாற்கு, உண்டவற்கு என நான்கன் உருபை ஏற்றுழிச் செயற்கு என்னும் எச்சப்பொருள் தரும் மயக்கமின்மையும், உணல் என்னும் வினைப்பெயர் குகரம் அடுத்துழி உண்டலைச் செய்தற்கு என்னும் பொருள் தந்து எச்சப் பொருட்டாயே நிற்றலின், வினைப்பெயர் நான்கன் உருபு பெற்று நின்றது என்னும் மயக்கம் இதற்கு இன்மையும் உணர்க

மேற்கூறிய உரையாசிரியர்களின் கருத்தை ஆராய்ந்ததால் செயற்கு என்னும் வடிவம் நான்கன் உருபு ஏற்ற தொழிற்பெயராகவும் வினை யெச்சமாகவும் செயல்பட வல்லது என்பது விளங்குகிறது. தேவ நேயப் பாவாணர் நான்கன் உருபேற்ற தொழிற்பெயரே வினை யெச்சமாக வந்தது என்று கருதுவர்.

> செயற்கு என்னும் வினையெச்சம் நான்கன் உருபேற்ற தொழிற் பெயரின் வேறு என்று சேனாவரையர் கூறினார். அதை நான்காம் வேற்றுமைத் தொழிற்பெயரே எச்சப் பொருள்பட வந்ததாகக் கூறுவது பொருந்தும்

என்னும் அவரது உரைவிளக்கக் குறிப்பு (தொல். 713) இதனை உணர்த்துகிறது. இக்கருத்துக்கு மாறாக, செயற்கு என்பது நான்கன் உருபேற்ற ஏனைப்பெயர்களினின்றும் வேறுபடாமையால் அது உருபேற்ற தொழிற்பெயரே எனவும் கருதப்பட்டுள்ளது.[143] உண்பான், உண்மார் போன்ற சொற்கள் வினை முற்றாகவும் எச்சமாகவும் செயல்படல் போல இதுவும் தொழிற்பெயராகவும் வினையெச்சமாகவும் இருநிலைகளில் செயல்பட வல்லது[144] என்றல் ஏற்கத் தக்க கருத்து. நன்னூலார் 'செயற்கு' என்பதனை வினையெச்ச வாய்பாடுகளில் சேர்க்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

வினையெச்ச வாய்பாடுகளின் அமைப்பு

வினையெச்ச வாய்பாடுகளின் அமைப்பை உரையாசிரியர்கள் விளக்குவதில் மூன்று முறைகள் காணப்படுகின்றன. அவையாவன 1. செய்+இடைநிலை+வினையெச்ச விகுதி; 2. செய்+வினையெச்ச விகுதி; 3. செயல்+வினையெச்ச விகுதி என்பன. இத்தகைய பகுப்பினைத் தேவநேயப் பாவாணர் ஏற்றுக் கொள்ளவில்லை.

> செய்து, செய்தென, செயற்கு என்னும் வினையெச்சங்களின் விகுதி உகரமும், எனவும். குகரமும் எனக் கொள்வது பொருந்தாது. இவற்றைத் துகரமும், துவ்வோடென எனவும், அல்லொடு குகரமும் எனக் கொள்வதே பொருந்தும்

என்னும் உரை விளக்கக் குறிப்பிலிருந்து அவர், கால இடைநிலை உள்ளதாக வினையெச்சத்தினைப் பகுக்கும் முறையினை மறுத்துள்ளார் என அறியலாம். வருணனை மொழியியல் நோக்கில் வினையெச்சத்தினை ஆராய்வோரிடத்தும் கால இடைநிலை உள்ளதாகப் பகுக்கும் முறை காணப்படுகிறது. அவர்கள் வினையெச்சத்தின் அமைப்பினை 1. செய்+இடைநிலை+விகுதி; 2. செய்+விகுதி என்ற இருநிலைகளில் விளக்கியுள்ளனர். காலக் குறியீடு இல்லாத வடிவங்களில் '0' என்ற அமைப்பினால் விளக்குவர். (செய்+0 இடைநிலை+விகுதி; = செய்+விகுதி+0 இடைநிலை) வினையெச்சங்களை வினையடி+விகுதி என்ற அமைப்பில் விளக்குவதே சரியான முறை. இதன் மூலம் எல்லா வினையெச்ச வாய்பாடுகளையும் இயல்பாய் அடக்கலாம்.[145]

கூட்டுவினையெச்சங்கள்

பின், முன், கால், கடை, வழி, இடத்து ஆகிய காலங்கண்ணிய கிளவிகளும் வினையெச்சத்தின் இயல்புடையன (தொல். 714) என்பர் தொல்காப்பியர். பெயரெச்சச் சொற்களோடு பின், முன், கால்,

கடை, வழி, இடத்து ஆகிய சொற்கள் சேர்வதால் இவை வினையெச்சத் தன்மை பெறுகின்றன. இவை கூட்டுவினை எச்சங்கள் (Compound Verbal participles) எனப்படும். சேனாவரையர் இவை பெயரெச்சமும் பெயரும் சேர்த்து அமைந்தன அல்ல என்னும் கருத்து உடையவர் என்பது,

> கதிர் போயபின் வந்தான் எனவும், நின்றவிடத்து நின்றான் எனவும், பின் முதலாயின பெயரெச்சத்தோடும் வந்தவழி, இறப்பு முதலாகிய காலங்கண்ணாமையின், அவற்றை நீக்குதற்குக் காலங்கண்ணிய வென்றார் (தொல். 714)

என்னும் அவரது உரையால் புலனாகிறது. நச்சினார்க்கினியர் அவை பெயர்த்தன்மை உடையனவாய் நின்று முன்வந்த வினையின் காலத்தை உணர்த்துதாலேயே இவை தனியே கூறப்பட்டன என்பர் (தொல். 704). பெயரெச்சமும் பின், முன் போன்ற கிளவிகளும் சேர்ந்தே இவ்வகை வினையெச்சங்கள் அமைகின்றன (செய்த+பின்). செய்த என்பதோ, பின் என்பதோ தனித்தனியே வினையெச்சமாவது இல்லை. இவை இரண்டும் சேர்ந்த சேர்க்கையைத் தான் வினையெச்சம் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார் என்னும் ச. அகத்தியலிங்கத்தின் கருத்து குறிப்பிடத்தக்கது.[146]

பின், முன் முதலிய சொற்களை வினையடை என்று எல். வி. ராமசாமி அய்யர் உரைத்துள்ளார்.[147] இவை தம்மைத் தொடரும் வினையின் பொருளை மாற்றியமைப்பதால் வினையடை எனப்படுகின்றன.

வினையெச்சங்களும் காலமும்

வினையெச்சங்களுக்குக் காலப் பகுப்பினைத் தொல்காப்பியர் உரைக்கவில்லை என்பதும் செய்தென் எச்சத்து இறந்த காலம் எதிர் காலத்துக்கும் பொருந்தும் (தொல். 724) என்னும் கருத்துடைய தொல்காப்பிய நூற்பாவே உரையாசிரியர்கள், பிற்கால இலக்கண நூலார் ஆகியோர் வினையெச்சத்துக்குக் காலப் பகுப்பு உரைக்கக் காரணமாய் அமைந்தது என்பதும் முன்னர் விளக்கப்பட்டன.

'செய்பு' நிகழ்காலத்தையும், 'செய்யூ', 'செய்தென', 'செய்யா' ஆகியன இறந்த காலத்தையும், 'செய்யியர்', 'செய்யிய', 'செய்யின்', 'செயற்கு' ஆகியன எதிர்காலத்தையும், 'செய்து', இறந்த காலம், எதிர்காலம் ஆகிய இரண்டினையும், 'செய' மூன்று காலங்களையும் உணர்த்தும் என்று சேனாவரையர் கருதியுள்ளார். நச்சினார்க்கினியரும் இதே வகையில் காலப் பாகுபாடுகளை உரைத்து 'செய்பு' நிகழ்காலம் மட்டும் அல்லாது இறந்த காலத்தையும் குறிக்கும் என உரைத்துள்ளார். தெய்வச்சிலையார் கருத்துப்படி, 'செய்து' இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் உணர்த்தும்; 'செய்பு', 'செய' ஆகியன மூன்று காலங்களையும் உணர்த்தும்; 'செய்யூ', 'செய்யா' ஆகியன இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் உணர்த்தும்;

'செய்யியர்', 'செய்யிய', 'செயின்' 'செயற்கு' ஆகியன எதிர்காலத்தை உணர்த்தும். 'செய்து', 'செய' ஆகியன மூன்று காலங்களையும் உணர்த்தும் என்பது கல்லாடர் கருத்து. 'செய்யூ', 'செய்பு' 'செய்தென', 'செய்யா' ஆகியன இறந்த காலத்தையும் 'செய்யியர்', 'செய்யிய', 'செயின்', 'செயற்கு' ஆகியன எதிர்காலத்தையும் உணர்த்தும் எனவும் இவர் குறிப்பிட்டுள்ளார். உரையாசிரியர்கள் கூறும் வினையெச்சக் காலப்பகுப்பினைச் சேர்த்துப் பார்க்கும்போது வினையெச்சங்கள் பின்வரும் காலப் பகுப்பினை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

செய்து, செய்பு, செய — முக்காலம்

செய்யூ, செய்பு, செய்யா — இறந்தகாலம், நிகழ்காலம்

செய்தென — இறந்த காலம்

செய்யியர், செய்யிய, செயின், செய்வதற்கு — எதிர்காலம்

இறந்தகால வினையெச்சம்

இறந்த கால வினையெச்சம் என உரையாசிரியர்கள் கருதுவது, அவ்வினையெச்சத்தினைத் தொடர்ந்து வரும் முற்றினால் உணர்த்தப் படும் காலத்துக்கு, எச்சத்தினால் உணர்த்தப்படும் காலம் முந்தையது; அல்லது முற்றினால் உணர்த்தப்படும் செயலுக்கு எச்சத்தினால் உணர்த்தப்படும் செயல் முன்னிகழ்கிறது என்பதே யாகும். இதனைப் பின்வரும் உரைகள் தெளிவுபடுத்துகின்றன.

> ஈண்டுச் செய்தென் எச்சத்து இறந்தகாலம் என்றது வினைச் சொல்லால் உணர்த்தப்படும் தொழிற்கு அவ்வெச்சத்தால் உணர்த்தப்படும் தொழில் முன்னிகழ்தலை (தொல். 724)

என்று சேனாவரையரும்,

> நீ உண்டு வருவாய் என்பது நாளை உண்டு வருவாய் என்னும் பொருள் உணர்த்தவும், வருதல் தொழிலுக்கு உண்டல் தொழில் முன் நிகழ்ந்து, ஆண்டும் தன் இறந்தகாலமே உணர்த்திற்றாம் (தொல். 724)

என்று நச்சினார்க்கினியரும்,

> உழுது வருவான் சாத்தன் என்பது. இது வருவான் என்னும் எதிர்கால வினை கொண்டமையான் முன் உழுது என நின்ற இறந்த காலம் உழுவதுமேல் என எதிர்காலத்தது ஆயிற்று (தொல். 724)

என்று கல்லாடரும் உரைத்துள்ளனர். எச்சத்தைத் தழுவி நடக்கும் முற்று எக்காலத்தது எனினும், அது எச்சத்தின் காலத்தினை மாறு படுத்துவது இல்லை என்னும் நோக்கில் 'செய்து' என்னும் எச்சம் இறந்த காலத்துக்கு உரியதாகவும் அதிலுள்ள தகர ஒற்று இறந்த கால இடைநிலையாகவும் அவர்களால் கருதப்பட்டுள்ளது.

நிகழ்கால வினையெச்சம்

நிகழ்கால வினையெச்சம் என உரையாசிரியர்கள் கருதியது எச்சத்தால் உணர்த்தப்படும் செயலும் அதனைத் தொடரும் முற்றினால் உணரப்படும் செயலும் ஒரே காலத்தில் நிகழ்வதனை. இதனைப் பின்வரும் உரைப்பகுதிகள் உணர்த்துகின்றன.

> அப்புகரம் நகுபு வந்தான் என்புழி நகாநின்று வந்தான் என்று முடிக்குஞ் சொல்லால் உணரப்படும் தொழிலோடு உடனிகழ்ந்தது, நிகழ்காலத்தும் வரும் (தொல். 713)

என்று நச்சினார்க்கினியரும்,

> கொடியாடித் தோன்றும் என்பது அத்தோற்றமும் ஆட்டமும் உடனிகழ்தலான் நிகழ்காலமாயிற்று (தொல். 724)

என்று கல்லாடரும் உரைத்துள்ளனர். 'நகுபு வந்தான்' என்னும் தொடரில் முற்றுவினை இறந்த காலத்ததாயும், 'கொடியாடித் தோன்றும்' என்னும் தொடரில் முற்றுவினை எதிர்காலத்ததாயும் உள்ளன என்பது நோக்கத்தக்கது. உடனிகழ்ச்சியே இங்கு நிகழ் காலமாகக் கருதப்பட்டுள்ளது.

எதிர்கால வினையெச்சம்

எச்சங்கள் ஏற்கும் வினைகள் அவ்வெச்சங்களால் உணர்த்தப் படும் வினைக்குப் பின் நிகழின் அந்த எச்சங்கள் எதிர்காலம் உணர்த்தும் வினையெச்சங்களாக உரையாசிரியர்களால் கருதப் பட்டுள்ளன. இதனைப் பின்வரும் உரைப்பகுதி தெளிவாக்குகிறது.

> அகரம் மழைபெய்யக் குளம் நிறைந்தது; ஞாயிறு பட வந்தான், உண்ண வந்தான் என மூன்று காலமும் பற்றி வரும். ... குகரம் உணற்கு வந்தான்; தினற்கு வந்தான் என எதிர்காலம் பற்றி வரும்

என்பர் சேனாவரையர். இந்த உரைப்பகுதியில் உண்ண என்பது முக்காலம் குறிப்பதாகவும், 'உணற்கு' என்பது எதிர்காலம் குறிப்ப தாகவும் கொள்ளப்பட்டுள்ளது.

> இனி எதிர்காலத்துக் கண் உண்ண வந்தான் என்பது அதற் பொருட்டாய் வரும். உரைப்ப, உரைக்க என ஏற்புழிப் பகரமும் ககரமும் வரும்

என்ற நச்சினார்க்கினியரின் உரைப் பகுதியிலிருந்து, உண்ண, உரைப்ப, உரைக்க என்னும் 'செய' வாய்பாட்டு எச்சங்களையும் எதிர்காலத்துக்குரியதாக அவர் கருதியுள்ளார் என அறியலாம். இவற்றுள் எச்சங்கள் ஏற்கும் முற்று இறந்த காலத்தினை உணர்த்துவதாகவும், எச்சத்தால் உணர்த்தப்படும் செயலுக்குப் பின் நிகழ்வதாகவும் உள்ளமை கருதத்தக்கது. எனவே ஏற்கும் முற்றின் காலம் பற்றிக் கருதாது எச்சவினையின் செயல் அதற்கு முன் நிகழ்வதால் எதிர்காலம் எனக் கருதப்பட்டுள்ளது என்பது தெளிவு.

இவற்றைத் தொகுத்து நோக்கும்போது முன்னிகழ்வு இறந்த கால மாகவும், உடனிகழ்வு நிகழ்காலமாகவும், பின்னிகழ்வு எதிர்கால மாகவும் கருதப்பட்டுள்ளன என அறியலாம்.

வினையெச்சங்களின் காலவரையறை பற்றி மோ. இசுரயேல் குறிப்பிடுவது இங்குக் குறிப்பிடத்தக்கது.

> ஒரு வினையெச்சம் இறந்த காலத்தில் அமைந்துள்ளது என்று கூறப்படுவதன் பொருள் எச்சத்தால் உணர்த்தப்படும் செயல் அதனைத் தொடரும் முற்றால் உணர்த்தப்படும் செயலை நோக்க மட்டுமே அது இறந்த காலம் எனக் கருதப்படும். அது நிகழ்கால அல்லது எதிர்கால முற்றுக்களால் தொடரப்படு மானால் எச்சத்தின் செயல் முற்றின் செயலுக்கு முன் நிகழ்கிறது என்று பொருள்

இங்கு இறந்தகால எச்சம் பற்றி மட்டுமே கூறப்பட்டிருப்பினும் இதனை முக்கால வினையெச்சங்களுக்கும் பொதுமைப்படுத்திக் கூறிய கூற்றாகக் கொள்ளலாம். முன்னிகழ்வு, உடனிகழ்வு, பின்னிகழ்வு ஆகியவற்றை இறந்தகால, நிகழ்கால எதிர்காலங் களாகவே இவரும் கொள்கிறார் என்பது இதனால் பெறப்படுகிறது. மேற்குறித்த மூவகை நிகழ்வுகளும் முறையே மூவகைக் காலங்கள் அல்ல எனப் பெ. மாதையன் நிறுவியுள்ளார். இவரது கருத்துகள் வருமாறு:

1. முன்னிகழ்வு என்பது வேறு; இறந்தகாலம் என்பது வேறு. முன்னிகழ்வு என்பது இன்னும் நிகழா வினையாகவும் இருக்கலாம். ஆனால் இறந்த காலம் என்பது நிச்சயமாக இனி நிகழும் வினையாக இருக்க முடியாது. உண்டு வந்தான். உண்டு வருவான் என்னும் இரண்டிடத்திலும் 'செய்து' என்னும் எச்சம் முன்னிகழ்வே. இது 'வந்தான்' என்னும் முற்றினை ஏற்கும் நிலையில் இறந்தகால முன்னிகழ்வாகவும், வருவான் என்னும் முற்றினை ஏற்கும் நிலையில் எதிர்கால முன்னிகழ்வாகவும் இருப்பது, முன் னிகழ்வு இறந்தகாலம் அல்ல என்பதை உணர்த்துகிறது.

2. ஆடிப் பாடினான், ஆடிப் பாடுகிறான், ஆடிப் பாடுவான் ஆகியவற்றில் எச்சவினையுடன் முற்றுவினை உடன் நிகழ் கிறது. எச்சத்தின் நிகழ்வு இறந்தகால முற்றினை ஏற்கும் போது இறந்தகால உடனிகழ்வாகவும், நிகழ்கால முற்றினை ஏற்கும்போது நிகழ்கால உடனிகழ்வாகவும் எதிர்கால முற்றினை ஏற்கும்போது எதிர்கால உடனிகழ் வாகவும் உள்ளன. இவை உடனிகழ்வுப் பொருண்மைகள் நிகழ்காலம் அல்ல என்பதைத் தெளிவுறுத்துகின்றன.

3. பின்னிகழ்வுப் பொருண்மை என்பது எதிர்காலம் அன்று. உண்ண வந்தான், உண்ண வருவான் இவ்விரண்டிலும்

> செயவென் எச்சம் பின்னிகழ்வாக இருத்தல் காண்க. இவ்விரண்டு எச்சத் தொடரிலும் செயவென் எச்சவினை வினைமுற்றின் நிகழ்வுக்குப் பின்னரே நிகழ வல்லதா யுள்ளது. உண்ண வருவான் என்பதில் எச்சவினை பின் னிகழ்வாக இருப்பினும் அது இன்னும் நிகழாவினையாய் உள்ளது. பின்னிகழ்வுப் பொருண்மை என்பது எதிர்காலம் அன்று என்பது இதனால் புலனாகிறது.

ஒரு எச்சத்தின் முன்னிகழ்வு, உடனிகழ்வு, பின்னிகழ்வு ஆகியன நிகழ்வுப் பொருண்மைகளே; காலங்கள் அல்ல. எச்சம் ஏற்கின்ற வினைகளே எச்சத்தின் காலத்தினை வரையறுக்கின்றதேயன்றி எச்சம் தானே காலம் உணர்த்தவில்லை என்பதனை மேலே கூறிய முறையில் பெ. மாதையன் தெளிவுபடுத்தியுள்ளார்.[148] மேலும் பெயரெச்சங்களைத் தழுவி நடக்கும்போதும் பெயரெச்சங்களின் காலங்களையே வினையெச்சங்கள் பெறுகின்றன. செய்து என்னும் எச்சம் இறந்தகாலத்துக்குரியது என்பது உண்மையெனின் அது இறந்த காலப் பெயரெச்சத்தினை மட்டுமே ஏற்க வேண்டும். அங்ஙனமின்றி செய்துவந்த பையன், செய்து வருகின்ற பையன் செய்து வரும் பையன் என முக்காலப் பெயரெச்சத்தினை ஏற்கும் தன்மையும் வினையெச்சங்களில் காலம் இல்லாமையை வலியுறுத்து கின்றன என்பதையும் காட்டி, கூட்டு வினையெச்சங்களிலும் காலம் இல்லை என்பதையும் அவர் விளக்கியுள்ளார்.[147] இதன் அடிப்படையில் தொழில் தோன்றிப் பாலும் காலமும் எஞ்ச நிற்பது வினையெச்சம் என்று வினையெச்சத்தின் இலக்கணத்தினை வரையறை செய்துள்ளது[150] பொருந்தக் கூடியது எனத் துணியலாம்.

வினையெச்சம் குறித்து இதுகாறும் நிகழ்ந்த ஆய்வினைத் தொகுத்து நோக்கினால் பின்வரும் செய்திகள் பெறப்படுகின்றன :

வினையெத்தினை வாய்பாட்டு முறையால் வரையறுத்துள்ள முறை விளக்கமாக அமைந்துள்ளது எனப் போற்றப்படுகிறது. வினையெத்துக்குத் தொல்காப்பியர் காலப் பகுப்பு உரைக்கவில்லை என்பதும் "செய்தென் எச்சத்து இறந்தகாலம்" என்னும் நூற்பா உரையாசிரியர்கள் வினையெத்துக்குக் காலப் பகுப்புரைக்கக் காரண மாய் அமைந்தது; உரையாசிரியர்களும் மொழியியல் நோக்கில் ஆய்ந்தோரும் வினையெச்சங்களுக்குக் காலப் பகுப்புரைத்தனர். முன்னிகழ்வு, உடனிகழ்வு, ஆகியவற்றையே அவர்கள் காலங்கள் எனக் கொண்டனர். உரையாசிரியர்கள் மூன்று வகையாகவும், மொழியியல் ஆய்வாளர்கள் இரண்டு வகையாகவும் வினையெச்சத் தின் அமைப்பினை விளக்கினர். வினையெச்சங்களுக்குக் காலப் பகுப்புரைத்தல் பொருந்தாது என்பதும், வினையெத்தை வினையடி+ வினையெச்ச விகுதி எனப் பகுத்தலே சரியான பகுப்பு என்பதும் தொழில் தோன்றிப் பால்வினை எஞ்ச நிற்பது வினையெச்சம் என்றும் நிறுவப்பட்டுள்ளன. வினையெச்சம் பற்றிய ஆய்வில் இடைக்காலத்திலும். மொழியியல் ஆய்விலும் சில பொருந்தாத

முடிவுகள் விளைந்தன. அண்மையில் நிகழ்ந்த ஆய்வில் வினையெச்சம் பற்றிய சரியான விளக்கம் கிடைத்துள்ளது. வினையெச்சத்தின் தொடரியல் செயல்பாடுகள் பற்றிய ஆய்வு தேவைப்படுகிறது. மாற்றிலக்கண முறையில் வினையெச்சங்களின் தொடரியல் செயல்பாடுகளை ஆராய்ந்தால் மேலும் பல விளக்கங்களைப் பெறலாம்.

பெயரெச்சம்

'பெயரெஞ்சு கிளவி' என்ற தொடரால் பெயரெச்சத்தினைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். பெயரெச்சம் பற்றி வினையியலிலும் எச்சவியலும் தொல்காப்பியர் கூறியுள்ளார். இதனைப் பத்துவகை எச்சங்களுள் ஒன்றாக அவர் கருதியுள்ளார். பெயரெச்சம் இரு திணைக்கும் உரிய வினைகளுடன் சேர்த்துக் (தொல். 707) கூறப்பட்டுள்ளது. பெயரெச்சத்துக்கு செய்யும், செய்த இரு வாய்பாடுகளே கூறப்பட்டுள்ளன. செய்யும், செய்த என்னும் பெயரெச்சங்கள் நிலன், பொருள், காலம். கருவி, வினை முதல், வினை ஆகியவற்றைக் கொண்டு முடியும் (தொல். 719); செய்யும் என்னும் வாய்பாடு முற்றாக வரும்போது பலர்பால் படர்க்கைப் பெயரையும், தன்மை முன்னிலைப் பெயர்களையும் ஏற்காது (712); பெயரெச்சமாக வரும் போது மேல் குறிப்பிட்ட பெயர்களை எழுவாயாக ஏற்கும் (தொல். 720); எதிர்மறைப் பெயரெச்சத்துக்கும் மேலே குறிப்பிட்ட இலக்கணங்கள் பொருந்தும் (தொல். 721); பெயரெச்சத்துக்கும் அது ஏற்கும் பெயருக்கும் இடையில் பிற சொற்கள் வரலாம் (தொல். 722); செய்யும் என்னும் பெயரெச்சத்தில் உள்ள உகரம் அதனைச் சேர்ந்த மெய்யொடு கெடுதலும் உண்டு (தொல். 723) ஆகிய செய்திகள் தொல்காப்பியரால் பெயரெச்சம் பற்றிக் கூறப்பட்டுள்ளன.

''வினையே செய்வது'' எனத் தொடங்கும் நூற்பாவில் (தொல். 596) வினை அடிப்படையில் அமையும் வேறுபட்ட வேற்றுமைப் பொருள் தோன்றுதற்குக் காரணங்களைத் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். இதனைத் ''தொழில் முதல் நிலை'' என்ற தொடரால் அவர் குறிப்பிட்டுள்ளார். முதல் நிலை என்பதைத் தெய்வச் சிலையார் 'காரகம்' என்பர். காரகம் என்பது பெயர்க்கும் வினைக்கும் உள்ள உறவு நிலையைக் குறிப்பதாகும். இதன் அடிப்படையில் வினையே செய்வது' என்னும் நூற்பாவில் முற்றுவினைக்கும் அதன் 'முன்னர் நிற்கும் பெயர்களுக்கும் உள்ள உறவுநிலையே கூறப்பட்டுள்ளது என்று பொன். கோதண்டராமன் கூறியுள்ளார்.[151] இந்த நூற்பாவினுள் வினை, செய்வான், செயப்படுபொருள், இடம், காலம், கருவி, கொள்வான், பயன் ஆகிய எட்டுப் பொருள்கள் வினைக்கு முன் வருவன எனக் கூறப்பட்டுள்ளன. ''நிலனும் பொருளும்'' எனத் தொடங்கும் நூற்பாவில் (தொல். 719) நிலன், பொருள், காலம், கருவி, வினைமுதல், வினை ஆகிய ஆறு பொருள்களே பெயரெச்சத்துக்கு முடிப்புச் சொல்லாக வருவன என்று கூறப்பட்டுள்ளன. 'இன்னதற்கு', 'இதுபயன்' என்னும் தொடர்களால் (தொல். 596) குறிக்கப்படும் கொள்வான், பயன் என்னும் பொருள்களைப்

பெயரெச்சத்தின் முடிப்புச் சொற்களைக் கூறும் நூற்பாவில் (தொல். 714) தொல்காப்பியர் கூறவில்லை. வழக்குப் பயிற்சியும் தெளிவும் கருதித் தொல்காப்பியர் ஏனைய ஆறு பொருள்களை மட்டும் கூறி இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.[152] "இன்னதற்கு, இது பயனாக என்னும் இரண்டும் அருகியல்லது வாராமையின் அன்ன மரபின், இரண்டொடும் எனப் பிரித்துக் கூறினார்" என்று சேனாவரையர் கூறுவதும் இதனை உறுதிப்படுத்துகிறது.

முற்றுத்தொடரில் வினைமுற்றுக்கும் பெயருக்கும் உள்ள அதே தொடரியல் உறவுநிலைகள் பெயரெச்சத் தொடரில் பெயரெச்சத்திற்கும் பெயருக்கும் இடையே அமைந்துள்ளன. முற்றுத்தொடரில் பெயர்கள் வினைக்கு முன்னும், பெயரெச்சத்தொடரில் வினைக்குப் பின்னும் வருகின்றன. இரண்டு இடங்களிலும் பெயருக்கும் வினைக்கும் உள்ள தொடரியல் உறவு மாற்றம் பெறுவது இல்லை. 'பையன் வந்தான்' என்ற முற்றுத்தொடரில் பையன் என்ற பெயர் வந்தான் என்ற வினைக்கு எழுவாய் உறவில் அமைந்துள்ளது. இந்த முற்றுத் தொடரிலிருந்து கிடைக்கும் 'வந்த பையன்' என்ற பெயரெச்சத் தொடரிலும் பையன் என்பது எழுவாய் உறவிலேயே நிற்கிறது. எனவே 'வினையே செய்வது' என்ற நூற்பாவும் 'நிலனும் பொருளும்' என்ற நூற்பாவும் பெயருக்கும் வினைக்கும் உள்ள தொடரியல் உறவுகளை விளக்குகின்றன. இதனை உணர்ந்து தெய்வச்சிலையார் விளக்கியுள்ளதைப் பொன். கோதண்டராமன் எடுத்துக் காட்டியுள்ளார்.[153] தெய்வச்சிலையார் இக்கருத்தினைப் பின்வரும் முறையில் விளக்கியுள்ளார்.

> *நெய்தான் என்ற வழி, நெய்யப்பட்ட பொருளும் நெய்தலாகிய தொழிலும், நெய்தற்குக் கருவியும், நெய்தற்குக் காலமும் நெய்தற்கு இடமும், நெய்யுங் கருத்தாவும், அதனைக் கொள் வானும், அதனாற் பயனும் உள்ளவழி அல்லது நெய்தற் றொழிலாற் செய்யப்பட்ட பொருள் உளதாகாமையின் அவற்றை முதனிலை என்றார்*

என்னும் அவரது உரைப்பகுதி இதனைத் தெளிவுபடுத்துகிறது. சேனாவரையரும், பெயர் அறியப்படாத பழைய உரையாசிரியர் ஒருவரும் இத்தகைய கருத்தினை உணர்த்த முனைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னதற்கு, இதுபயன் ஆகிய உறவு நிலைகளையும் பெயரெச்சத் தொடர் கொண்டுள்ளதாகச் சேனாவரையர், நச்சினார்க்கினியர் போன்ற உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகள் தந்துள்ளனர்.

(அரசன்) ஆ கொடுத்த பார்ப்பான்
ஆடை ஒலித்த கூலி

ஆகியன அவர்மள் தரும் எடுத்துத்காட்டுகள். இவை சிறுபான்மை எனவும் அவர்கள் குறித்துள்ளனர்.

நோய் தீரும் மருந்து

என்னும் எடுத்துக்காட்டினைத் தந்து, அதனுள் வரும் ஏதுப் பொருண்மை கருவிக்கண் அடங்கும் என்று சேனாவரையர் கூறியுள்ளார். மேலும் இலையுதிர்ந்த மரம், நீர்வழியும் கண் ஆகிய தொடர்களில் இன்னதினின்று என்னும் வாய்பாட்டுச் சொல் பெயரெச்சத்தின் முடிப்புச் சொல்லாக வருகின்றது. இது தொல்காப்பியரால் கூறப்படாதது. இதனைத் தொல்காப்பியர் பெயரெச்சம்-இடம் என்ற உறவு நிலையில் அடக்கிக் கொண்டார்[154] போலும். பெயரெச்சத்துக்கும் பெயருக்கும் உள்ள தொடரியல் உறவுகளைத் தொல்காப்பியர் முற்ற முடிய எடுத்துக் கூறவில்லை எனினும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அவர் கண்டு கூறிய செய்திகள் மொழியியல் அறிவுக்குப் பொருத்தமானவையாகவும் போற்றத் தக்கனவாகவும் உள்ளன[155] என்னும் கருத்து நினைவில் கொள்ளத் தக்கது.

இடைச்சொல்

இடைச்சொல்லானது பெயர், வினை ஆகியவற்றின் வழி மருங்கில் தோன்றும் (தொல். 644) என்று பெயரியலிலும், பெயரொடும் வினையொடும் நடைபெற்று இயலும்; தனக்கெனத் தனி இயல்பு அதற்கு இல்லை (தொல். 734) என்று இடையியலிலும் தொல்காப்பியர் கூறியுள்ளார். பெயரியலில் கூறப்படுவது தோற்றுவாய்; இடையியலில் கூறப்படுவது இடைச்சொல்லின் இலக்கணம் என்று தெய்வச்சிலையார் (தொல். 734) இது பற்றிக் குறிப்பிடுவர்.

பெயர்க்காரணம்

இடைச்சொல்லின் பெயர்க்காரணம் பற்றி உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றின் முன்னரும் வரும் என்றாலும் பெரும்பாலும் இடையில் வருவதால் இடைச்சொல் எனப் பெயர் பெற்றது என்பது சேனாவரையர் கருத்து. நச்சினார்க்கினியரும் இதே கருத்தினர். பெயரும் வினையும் இடமாக நின்று பொருள் உணர்த்தலின் இடைச்சொல் எனப்பட்டது என்பர் சேனாவரையர். பெயர், வினைகள் உணர்த்தும் பொருட்டுத் தான் இடமாக நிற்றலின் இடைச்சொல் என்று கல்லாடார் குறிப்பிட்டுள்ளார். பெயர்ச்சொல்லும் ஆகாது, வினைச்சொல்லும் ஆகாது, அவற்றின் வேறும் ஆகாது இடைநிகரனவாய் நிற்றலின் இடைச்சொல் எனப்பட்டது என்பர் சங்கர நமச்சிவாயர். இதனைப் பின் வருமாறு அவர் விளக்கியுள்ளார்.

> முதல் நூலின் வழியாக நடக்கும் நூலை அங்ஙனம் கூறாது வழிநூல் என்றாற்போல (வழியாகக் கொண்டு நடக்கும் நூல்) பெயர் வினைகள் இடமாக நடக்கும் சொல்லை அங்ஙனம் கூறாது இடைச்சொல் (இடமாகக் கொண்டு நடக்கும் சொல்) எனப்பட்டது. அங்ஙனமாயின் இடமென இயற்சொல்லால் கூறாது திரிசொல்லால் கூறியது என்னையெனின் இயற்

> சொல்லால் கூறின் இடப்பொருளை உணர்த்தும் சொல்லெனப் பொருள்படுமாதலின் அதனோடு இதற்கு வேற்றுமை தோன்றற்கு என்க.[156]

இவ்வாறு இடைச்சொல்லின் பெயர்க்காரணத்தை விளக்குவதில் உரையாசிரியர்கள் வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டுள்ளனர்.

இடைச்சொல்லாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் ஏழுவகையுள் இடையில் வருவன மிகச் சிறுபான்மையினவே. (புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக் குதவுந மட்டுமே). இதனால் இந்தக் காரணம் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. தொல்காப்பியர் இடைச்சொல் 'முன்னும் பின்னும் மொழியடுத்து' வரும் (தொல். 736) என்றே கூறியுள்ளார். நன்னூலாரும் 'பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து' (நன். 420) என்றே கூறியுள்ளார். பெயர், வினை ஆகியவற்றைச் சார்ந்து அவற்றின் இடமாக நின்று பொருள் உணர்த்துதலால் இடச்சொல் எனப் பெயர் பெற்று அது போலியால் இடைச்சொல் என்று ஆயிற்று[157] என்றும், ஆய்வாளர்கள் விளக்கம் தந்துள்ளனர். பெயரும் வினையும் முழுத் தன்மை பெற்ற சொற்கள்; தமக்கெனத் தனி இயல்பு உடையவை. ஆனால் இடைச்சொற்கள் சொல்நிலை பெறுவதில் இடைப்பட்ட இயல்பு கொண்டவை. இந்த அடிப்படையில் இடைச்சொல் என்ற பெயர் அமைந்திருக்கலாம்[158] என்னும் கருத்து இடைச்சொல்லுக்குப் பொருத்தமான விளக்கமாக விளங்குகின்றது.

இடைச்சொல் தனித்தியலாது (தொல். 734); இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே (தொல். 938) என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதால் இடைச்சொற்கள் பொருள் வேறுபாடு செய்யும் ஆற்றல் உடையன என்பதை உணரலாம். சேனாவரையர் இதற்கு மாறான கருத்துடையவர்.

> பெயரொடும் வினையொடும் நடைபெற்றியலும் தமக்கியல்பில என்றது ஈண்டுப் பெயரும் வினையும் உணர்த்தும் பொருளைச் சார்ந்து நின்று அவற்றை வெளிப்படுப்பது அல்லது தமக்கெனப் பொருளுடையவல்ல. ... சார்ந்து வருதல் உரிச்சொற்கும் ஒத்தலின் தமக்கெனப் பொருளின்மை இடைச்சொற்குச் சிறப்பிலக்கணம் (தொல். 734)

என்னும் அவரது உரை இதனை வெளிப்படுத்துகிறது. "இடைச் சொல்லாவது பெயரும் வினையும் போலத் தனித்தனி பொருள் உணர உச்சரிக்கப்படாது" என்ற இடைச்சொல்லின் பொருண்மை பற்றிய தெய்வச்சிலையாரின் கருத்து நினைவில் கொள்ளத் தக்கது. ஆனால் அவரும் இடைச்சொல் தமக்கெனத் தனிப்பொருள் உடையது அன்று என்றே கருதியுள்ளார்.

> பொருள் உணர்த்தும்வழிப் பெயர்ப் பொருண்மை உணர்த்தியும் வினைப்பொருண்மை உணர்த்தியும் வருமல்லது வேறுபொருள் இலதென்றுமாம் (தொல். 734)

என்று அவர் உரைத்துள்ளார். ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' (தொல். 640) என்பது தொல்காப்பியர் கருத்து ஆகையால் இடைச்சொல்லும் பொருள் குறிப்பது எனக் கொள்ளலே தக்கது பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் பொருள் உணர்த்துகின்றன; இடைச்சொற்களாகக் கொள்ளப்படும் வேற்றுமை உருபுகள், விகுதிகள் முதலியன பொருள் உணர்த்தத் துணை புரிகின்றன என்று பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி கூறும் விளக்கமும்[159] இங்குக் குறிப்பிடத்தக்கது.

இடைச்சொல்லின் வகைகள்

தொல்காப்பியர் இடைச்சொல்லை ஏழுவகைகளாகப் பகுத்து விளக்கியுள்ளார். அவையாவன: 1. புணரியல் நிலையிடைப் பொருள்நிலைக்கு உதவுந; 2. வினைசெயல் மருங்கில் காலமொடு வருந; 3. வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந; 4. அசைநிலைக் கிளவியாகி வருந; 5. இசைநிறைக் கிளவியாக வருந; 6. தத்தம் குறிப்பில் பொருள்செய்குந; 7. ஒப்பில் வழியால் பொருள் செய்குந ஆகியவை. இவற்றுள் புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுநவற்றைப் புணரியலுள்ளும், வினைசெயல் மருங்கில் காலமொடு வருநவற்றை வினையியலுள்ளும் வேற்றுமைப் பொருள் வயின் உருபாகுநவற்றை வேற்றுமையியலுள்ளும், ஒப்பில் வழியால் பொருள் செய்வனவற்றை உவம இயலுள்ளும் தொல்காப்பியர் கூறி யுள்ளார் என்று சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் கூறியுள்ளனர். இவையொழிந்த அசைநிலைக் கிளவியாகி வருந, இசைநிறைக் கிளவியாகி வருந, தத்தம் குறிப்பில் பொருள் செய்வன ஆகிய மூன்றும் இடையியலில் கூறப்பட்டுள்ளன என்பது அவர்கள் கருத்து. தெய்வச்சிலையார் முதல் மூன்றும் முறையே புணரியல், வினையியல், வேற்றுமை இயல் ஆகிய இயல்களில் ஓதப் பட்டுள்ளன என்பதை உடன்பட்டுள்ளார். ஆனால் 'ஒப்பில் வழியால் பொருள் செய்குந' என்பதும் சேர்த்து இறுதி நான்கு வகை இடைச்சொற்களும் இடையியலில் கூறப்பட்டுள்ளன என்று அவர் உரைத்துள்ளார். அவர், தம் கருத்துக்குத் தகுந்தவாறு 'அச்சம் பயமிலி' எனத் தொடங்கும் நூற்பாவில் கொன் என்னும் இடைச் சொல் ஒப்பில் வழியால் பொருள் செய்வது என்று கூறி எடுத்துக் காட்டுக்களைத் தந்துள்ளார். இதிலிருந்து 'ஒப்பில்வழியால் பொருள் செய்குந' என்பதை உவம உருபின் வேறுபட்டதாகத் தெய்வச் சிலையார் கொள்கின்றார் எனத் தெரிகின்றது. மேலும் அவர் இடை யியலில் கூறப்படும் இடைச்சொற்களைப் பொருள்புணர் இடைச் சொல், பொருள் புணரா இடைச்சொல் என வகைப்படுத்தி உரைத் துள்ளார் (தொல். 737) என்பதும் குறிப்பிடத்தக்கது.

புணரியல் நிலையிடைப் பொருள் நிலைக்குதவுந

இதனை உரையாசிரியர்கள் சாரியை என்று கொண்டுள்ளனர். வற்று, நம் போன்றவை பொருளுடைய சாரியைகள் என உரை யாசிரியர்கள் காட்டியுள்ளனர். சாரியை இடைச்சொல் எனவும் ஒரு

பெயர் பெறும் என்பது தெய்வச்சிலையாரின் கருத்து (சாரியை பற்றிய தொல்காப்பியரின் கருத்துக்கள் முன் இயலில் விளக்கப்பட்டன). உரையாசிரியர்கள் எழுத்துச் சாரியையும் இதனுள் கொள்கின்றனர்.

'வினைசெயல் மருங்கின் காலமொடு வருந'

'வினைசெயல் மருங்கில் காலமொடு வருந' என்பது அன், ஆன், அம், ஆம் போன்ற விகுதிகளையே குறிக்கும் என்பது இளம்பூரணர் கருத்து. சேனாவரையர் காலம் உணர்த்துவனவற்றை மட்டுமே இது குறிக்கும் என்பர். நச்சினார்க்கினியர் காலம் உணர்த்துவனவற்றோடு, பால் இட விகுதிகளையும் இது குறிக்கும் என்று உரைத்துள்ளார். தெய்வச்சிலையாரும் கல்லாடரும் இதே கருத்தினர். இத்தொடரால் குறிக்கப்படுவன கால இடைநிலையும் விகுதியும் என்று கொள்ளலே பொருத்தம்.

'வேற்றுமைப் பொருள்வயின் உருபாகுந' என்பது வேற்றுமை உருபுகளைக் குறிப்பது. இவற்றைப் பற்றி வேற்றுமை இயலில் விளக்கப்பட்டுள்ளது; ஒப்பில் வழியால் பொருள் செய்வன பற்றி உவம இயலில் கூறப்பட்டுள்ளது. அசைநிலை, இசைநிறை, தத்தம் குறிப்பில் பொருள் செய்யும் இடைச்சொற்கள் ஆகியன இடையியலில் விளக்கப்பட்டுள்ளன.

அசைநிலைக் கிளவிகளும் இடைச்சொல்லில் அடங்குவன என்பது தொல்காப்பியர் கருத்து. பொதுவாக இவை பொருள் குறிப்பன அல்ல. ஆனால் எல்லாச் சொல்லும் பொருள் குறிப்பன என்பது தொல்காப்பியரின் கருத்து ஆகையால் பொருள் என்பதற்கு அவர் கருதும் பொருள்களுள் மொழிநடையும் ஒன்றாக இருக்கலாமோ?[160] எனக் கருதுவர் ந. குமாரசாமி ராஜா. அசைநிலை, இசைநிறை ஆகிய கிளவிகளை ஒரு ஆசிரியர் பயன்படுத்தும் முறையை ஆராய்தல் அவனது நடையைப் புரிந்துகொள்ளத் துணை புரியும். "இடைச்சொற்களை ஆராய்வது என்பது மொழியின் மிக நுட்பமாக உள்ள பகுதிகளை ஆராயும் செயலாக உள்ளது என்று கூறலாம். ஓர் ஆசிரியனின் இடைச்சொற்கள் இன்னும் ஆழ்ந்து நோக்க, அவனது உளப்பாங்கின் பல நிலைகளைக் காண இடம் உண்டு. ஆதலின் உளவியல் துறை அடிப்படையான இலக்கியப் பார்வைக்கும் கூட இந்த நோக்குடைய சிந்தனை துணை நிற்றல் தெளிவு"[161] என்று சொ. சிங்காரவேலன் கூறுவதும் இதனுடன் ஒப்பு நோக்கத் தக்கது.

சில இடைச்சொற்கள்

இடையியலில் கூறப்பட்ட சில இடைச்சொற்கள் ஆராய்ச்சிக்கு உள்ளாயின. அவை பற்றிய கருத்துக்களை இங்கே காணலாம்.

எல்

'எல்' என்ற இடைச்சொல் பற்றிய நூற்பாவுக்கு உரையாசிரியர்கள் கொள்ளும் பாடங்கள் வருமாறு:

எல்லே விளக்கம்	—	இளம்பூரணர்
எல்லே இலக்கம்	—	சேனாவரையர் நச்சினார்க்கினியர் தெய்வச்சிலையார்

எல்லே விளக்கம் எனப் பாடங்கொண்டு 'எல்வளை (புறம். 24) என்று இளம்பூரணர் எடுத்துக்காட்டு தந்துள்ளார். எல்லே இலக்கம் என்ற பாடங்கொண்டு சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச் சிலையார் ஆகியோரும் எல்வளை என்ற எடுத்துக்காட்டினையே தந்துள்ளனர். சேனாவரையருக்கு இது இடைச்சொல் அன்று என்பது கருத்து.

> எல் என்பது உரிச்சொல் நீர்மைத்து ஆயினும் ஆசிரியர் இடைச் சொல்லாக ஓதினமையால் இடைச்சொல்லென்று கோடும் (தொல். 754)

இதனுள் ஆசிரியர் கருத்துக்கு மாறாக உரைத்தல் கூடாது என்னும் மரபினைக் காக்கும் பொருட்டு இடைச்சொல் என்றே கொண் டாலும் அது உரிச்சொல் என்று தமக்குத் தோன்றுகின்ற எண்ணத் தினையும் சேனாவரையர் வெளிப்படுத்தியுள்ளார். நச்சினார்க் கினியருக்கு இது இடைச்சொல் என்பதில் ஐயம் இல்லை. தெய்வச் சிலையார் எல் என்பது இடைச்சொல்லே என்னும் தமது கருத்துக்குத் தரும் விளக்கம் வருமாறு:

> இது உரிச்சொல் அன்றோ எனின், அது குறைச் சொல்லாகி நிற்கும். இது குறையின்றி நிற்றலின் இடைச்சொல் ஆயிற்று (தொல். 754)

தேவநேயப் பாவாணர் எல்லே இரக்கம் எனப் பாடம் கொள்ளலாம் என்பர். சொல்லதிகாரத்தின் ஓர் ஏட்டில் இத்தகைய பாடம் கொள் வதற்குச் சான்று உள்ளமையால் இங்ஙனம் சிலர் கொள்வர் என எடுத்துக்காட்டியுள்ளார் (தொல். 754 சேனாவரையர் உரை விளக்கக் குறிப்பு). திவ்வியப்பிரபந்தத்தில் பாசுரங்கள் தோறும் எல்லே என்பது இரக்கம் என்னும் பொருளில் பயின்று வருவதால் எஸ். வேங்கடராமையாவும் 'எல்லே இரக்கம்' என்று கொள்ளலாம் என்பர்.[92] எல் என்பது பெயருக்கோ வினைக்கோ அடையாய் பயின்று வருதலால் அது உரிச்சொல் என்றும் கருதப்படுகிறது.

கொன்

கொன் என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தரப்படும் எடுத்துக் காட்டுகள் யாவும் பெயருக்கோ வினைக்கோ அடையாய் வருதலால் இதனை இடைச்சொல் எனல் பொருந்துமா என்ற ஐயமும் தோன்றி யுள்ளது.

எச்சப் பொருண்மைகள்

ஏ, ஓ ஆகிய இடைச்சொற்கள் பிரிநிலை எச்சப்பொருண் மையும், மன், தில், ஓ ஆகியன ஒழியிசை எச்சப் பொருண்மையும்'

உம், ஓ ஆகியன எதிர்மறை எச்சப் பொருண்மையும் குறித்து வருவன என்று இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் உரைத்துள்ளனர். அவர்கள் கருத்தின்படி பிரிநிலை எச்சம் ஏ, ஓ ஆகிய இடைச்சொற்களைக் கொண்ட எச்சம் ஆகும். ஒழியிசை எச்சம் மன், தில், ஓ ஆகிய இடைச்சொற்களைக் கொண்ட எச்சம் ஆகும். எதிர்மறை எச்சம் உம், ஓ ஆகியவற்றைக் கொண்ட எச்சம் ஊகும். பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை ஆகிய எச்சங்களுக்குத் தெய்வச்சிலையார் தரும் விளக்கம் பொருத்தமானதாக உள்ளது.[163] இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் கருத்துப்படி. எஞ்சி நிற்கும் ஒரு பொருளுடைய சொல் எச்சம் எனப்படும். "எஞ்சு பொருட்கிளவியாவது சொல்லாது ஒழிந்த பொருளை இனிது விளக்கும் சொல்" என்பது தெய்வச்சிலையார் உரை. வினையியலில் கூறப்பட்டுள்ள வினையெச்சம், பெயரெச்சங்கள் வேறு; எச்சவியலில் கூறப்படும் வினையெச்சம், பெயரெச்சங்கள் வேறு; என்பது தெய்வச்சிலையாரின் கருத்து. இக்கருத்து இக்காலத்தில் சிலரால் ஏற்கப்பட்டுள்ளது.[164] இதே போன்று பிரிநிலை, ஒழியிசை, எதிர்மறை ஆகிய எச்சங்களும் அதே பெயர்களுடைய பொருட்பாகுபாடுகள் கொண்ட இடைச்சொற்களுக்கும் தொடர்பு இல்லை என்றும் கருதப்படுகிறது.[165]

இடைச்சொல் தனிவகைச் சொல்லா?

இடைச்சொற்கள் பெயர் வினைகளின் வழிமருங்கில் தோன்றுவன; தனித்தியலும் ஆற்றல் இல்லாதன; பெயர் வினைகளைச் சார்ந்தே வழங்குவன என்று கூறியுள்ள போதிலும் இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே; எல்லாச் சொல்லும் பொருள் குறித்தன' எனவும் இடைச்சொல்லுக்குப் பொருள்வகைப் பாடுகளும் கூறப்படுவதால் தொல்காப்பியர் இடைச்சொற்களைத் தனிச்சொல் வகையாகவே கருதியுள்ளார் எனலாம். எனினும் அவற்றைப் பெயர், வினை ஆகிய சொற்களோடு ஒத்த தன்மையனவாகக் கருதாமல் அவற்றுக்கு அடுத்த நிலையினதாகவே கருதியுள்ளார் என்று துணியலாம்.

மொழியியல் நோக்கில் இடைச்சொற்கள் ஒரு தனிச்சொல் வகையாகக் கருதப்படலாமா என்பது பற்றி ஆராயப்பட்டுள்ளது. மொழியியலார் ஒரு மொழியின் அடிச்சொற்களை (Stems) மட்டும் உருபன் நிலையிலும், தொடரன் நிலையிலும் வடிவம், பயன்வகை ஆகியவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை ஒட்டிச் சொல்வகைகளாகப் பாகுபாடு செய்வர்.[166] தெ. பொ. மீனாட்சிசுந்தரன் இடைச்சொல்லை வேரல்லா உருபன்கள் (Non-root morphemes) என்பர்.[167] இடையியலில் கூறப்படும் இடைச்சொற்கள் யாவும் ஒருநிலைச் சொற்கள் (particles), ஒட்டுகள் (affixes) ஆகியவற்றின் தொகுப்பு ஆகும்.[168]

வினையோடு தொடர்புடைய இடைச்சொற்களை, அவற்றின் செயல்பாட்டின் அடிப்படையில் ஆறுவகையாகப் பகுத்து

மோ. இசுரயேல் விளக்கியுள்ளார்.[169] அவையாவன: 1. இணைப்புச் சொற்கள் (connectives), 2. ஒட்டிகள் (clitics), 3. துணை வினைகள் (auxiliary verbs) 4. அன்பேவல் சொற்கள் (mild imperatives), 5. வினைப்பொருள் இழந்த சில வினை வடிவங்கள்; 6. பகுத்தற்கரியன சில, ஆகியன. இவை யாவற்றையும் தொகுத்து ஒருநிலைச் சொற்கள் (particles) எனலாம். இந்த வகைகளில் அமையும் இடைச்சொற்கள் வருமாறு:

1. இணைப்புச் சொற்கள்
   என, என்று, எனா, என்றா போன்றவை.
2. ஒட்டிகள்
   தில், கொல், உம், மற்று, ஓ, மாது, அந்தில், ஆங்க, மாடு, ஒடு, யா, பிற, பிறக்கு போன்றவை.
3. துணை வினைகள்
   இக, இகும், சின் போன்றவை.
4. அன்பேவல் சொற்கள்
   மியா, மோ, மதி
5. வினைப்பொருள் இழந்த சில வினைவடிவங்கள் ஆக, ஆகல், என்பது, நன்றே, அன்றே, சென்றதே, போயிற்றே, கேட்டை, நின்றை, காத்தை, கண்டை, போல்வன.
6. பகுத்தற்கரியன
   உந்து, ஏற்று, மா, போ, கா முதலியன.

ஒருநிலைச் சொற்கள் மொழியியலாரால் தனிச்சொல் வகையாகக் கருதப்படுகின்றன. ஹாக்கெட் என்ற மொழியியல் அறிஞர் இவற்றை வேறுபாட்டை ஏற்காத அடிச்சொற்கள் (uninflected stems) என்பர்.[169அ] இடையியலில் பல ஒருநிலைச் சொற்கள் இடைச் சொற்களாகக் கூறப்பட்டுள்ளன. தமிழில் உள்ள ஒருநிலைச் சொற்கள் தனிச்சொல் வகையாகக் கொள்ளத்தக்கன என்பது கமில் சுவலபிலின் கருத்து.[170]

இடைச்சொல் பற்றி நிகழ்ந்துள்ள ஆய்வில் இடைச்சொல் லுக்குத் தெளிவான விளக்கம் கிடைத்துள்ளது.

> பெயர், வினை ஆகியவற்றின் வழியில் தோன்றுவதும் தமக் கெனத் தனி இயல்பின்றிச் சார்ந்து நிற்றலை உடையதுமான சொற்கள் இடைச்சொற்கள் எனப்படுகின்றன.
>
> சொல் நிலையிலும், தொடர்நிலையிலும் இவை பெயர், வினைகளைச் சார்ந்து நின்று பொருள் வேற்றுமை செய்கின்றன. இவை சொல் வேறுபாட்டு உருபன்களை ஏற்பது இல்லை. முழுத்தன்மையினின்று குறைநிலை எய்தியவையும் பிறசொல் வகைகளில் சேர்க்க இயலாதவையுமான பல்வேறுபட்ட சொல்

வகைகள் இடைச்சொற்கள் என இடையியலில் கூறப் பட்டுள்ளன. அவை ஒருநிலைச் சொற்கள், ஒட்டிகள் ஆகிய இரு பகுப்பினுள் அடங்கும். இவற்றின் தொகுப்பு இடையியலில் கூறப்படும் இடைச்சொற்கள் எனலாம்.

உரிச்சொல்

உரிச்சொல்லின் இயல்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவன வருமாறு: பெயர், வினைகளின் வழி மருங்கில் தோன்றும் (தொல். 644); இசையினும் குறிப்பினும் பண்பினும் தோன்றும் (தொல். 782), பெயரினும் வினையினும் மெய் தடுமாறும் (தொல். 782); நெறிப்பட வாராக் குறைச் சொற்கிளவி (தொல். 482) ஆகியன. எழுத்துப் பிரிந் திசைத்தல் இவண் இயல்பின்றே (தொல். 878) என்பதன் மூலம் பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியன போன்று உரிச்சொல்லானது முதனிலை, இடைநிலை இறுதிநிலைகளாகப் பகுக்கப்பட்டுத் தனித் தனிப் பொருள் உணர்த்துவது இல்லை என்றும் கூறியுள்ளார். "இடைச்சொல் எல்லாம் வேற்றுமைச் சொல்லே" (தொல். 938) "உரிச்சொல் மருங்கினும் உரியவை உரிய" (தொல். 939) என்று எச்சவியலில், தொல்காப்பியர் கூறுகின்றார். இடைச்சொல் எல்லாம் பொருள் வேறுபாடு செய்வன; உரிச்சொற்களிலுள்ளும் பொருள் வேறுபாடு செய்யும் சொற்கள் உள்ளன என்று உரையாசிரியர்களும் ஆய்வாளர்களும் இதற்குப் பொருள் கொள்வர். இடைச்சொற்கள் உரிச்சொல்லினை அடுத்து வந்து பொருள் வேற்றுமை செய்வதற்கும் உரியன என்பதே இந்நூற்பாவின் பொருள் என்பர் தெ. பொ. மீனாட்சி சுந்தரன். உரிச்சொற்களும் பொருள் வேற்றுமை செய் கின்றன என்று கொண்டமையாலேயே உரிச்சொல்லைப் பற்றிய மயக்கம் எல்லாம் என்பர் அவர்.[11]

உரிச்சொல் இலக்கணம்

உரியியலின் முதல் நூற்பா உரிச்சொல்லின் இலக்கணத்தினை உணர்த்துகிறது என்று உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். பெயர் பற்றியும் வினை பற்றியும் வருதல் (பெயரினும் வினையினும் மெய் தடுமாறுதல்) உரிச்சொல்லுக்கு இலக்கணம் என்பர் இளம்பூரணர். "மெய்தடுமாறுதல், ஒரு சொல் பல பொருட்கு உரிமை, பல சொல் ஒரு பொருட்குரிமை உரிச்சொற்கு உண்மையான் ஓதினாரேனும் உரிச்சொற்கு இலக்கணமாவது இசை, குறிப்புப் பண்பென்னும் பொருட்குரியவாய் வருதலேயாம்" என்பது சேனாவரையரின் கருத்து. நச்சினார்க்கினியரும் இதே கருத்தினர். "ஒரு வாய்பாட்டாற்சொல்லப் பட்ட பொருளுக்குத் தானும் உரித்தாகி வருவது உரிச்சொல்" என்பது தெய்வச்சிலையார் உரை. "பெரும்பான்மையும் செய்யுட்கு உரியனவாய் வருதலின் உரிச்சொல் என்பாரும் உளர்" என்று பிறிதொரு சாரார் கருத்தினையும் சேனாவரையர் குறித்துள்ளார். உரிச்சொல் ஒருசொல் பலபொருட்கு உரிமை தோன்றலும் பலசொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றலும் உண்டு (தொல். 783) என்றும், செய்யுள் ஈட்டச் சொல்வகையும் ஒன்றாகிய திரிசொல், ஒரு பொருள்

குறித்த வேறுசொல்லாகியும் வேறுபொருள் குறித்த ஒரு சொல்லாகியும் வரும் (தொல். 882) என்றும் கூறியதால் உரிச்சொல் செய்யுட்குரிய சொல் எனக் கருதப்பட்டது.

உரிச்சொல்லின் இலக்கணத்தைக் கூறுவதில் உரையாசிரியர்கள் கருத்து வேறுபட்டமை போன்று அதனை ஆராய்ந்தோரும் வேறுபட்ட கருத்துக்களைக் கூறியுள்ளனர். உரியியல் ஒரு சொல் பல பொருள் காட்டுவதையும், பல சொல் ஒரு பொருள் காட்டுவதையும் கூறுகின்றதே அன்றி, உரிச்சொல் இலக்கணத்தினைக் கூறவில்லை என்று தி. சங்குப்புலவர் கூறியுள்ளார். தொடர்ந்து அவர் உரிச்சொல்லைப் பற்றிக் கூறுவது வருமாறு:

> உரிச்சொல்லென்பது ஒரு சொல்லன்று என்பதும் பண்புப் பெயரும் தொழிற்பெயருமே உரிச்சொல் எனப்படுவது என்பதும் அவை செய்யுளில் வரும்போது பலவகைப் பெயர்ச் சொற்களாகவும், பலவகை வினைச் சொற்களாகவும் உருமாறி வரும் என்பதும், பெயர் வினைகளினின்றும் இடைச்சொல்லைப் பிரித்தறிதல் போல உரிச் சொல்லைப் பிரித்தறிய இயலாது என்பதும் தெளிவு[172]

என்பர்.

உரிச்சொல் — பெயர்க்காரணம்

உரிச்சொல்லின் பெயர்க்காரணத்தை விளக்கும் முறையில் உரிச்சொல்லின் இயல்புகள் பல உணர்த்தப்பட்டுள்ளன. பொருளுக்கு உரியது; செய்யுளுக்கு உரியது; இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றிற்கு உரியது ஆகியன உரிச்சொல்லின் பெயர்க் காரணங்களாக உரையாசிரியர்களால் கூறப்பட்டுள்ளன. பொருளுக்கு உரியது என்று இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் கருதியுள்ளனர். இசை, குறிப்பு, பண்பு ஆகியவற்றுக்கு உரியது என்று சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கூறியுள்ளனர். செய்யுட்கு உரியது என்னும் கருத்தினைப் பிறர் கருத்தாகச் சேனாவரையர் உரைத்துள்ளார். நன்னூலார் கூற்றின் (நன். 442) அடிப்படையில் பெயர், வினைக்கு உரியன என்றும் பண்புக்கு உரியன என்றும் கருதப்பட்டன.

உரிச்சொல் — அமைப்பு

உரிச்சொல் பெயரினும் வினையினும் மெய் தடுமாறும் (தொல். 782) என்பர் தொல்காப்பியர். "பெயர்க் கண்ணும், வினைக் கண்ணும் சென்று பொருள்களை விளக்கும். மெய் என்பது பொருள்; தடுமாறுதல் என்பது பெயர் பற்றியும் வினைபற்றியும் வரவினை நோக்கி,' என்று இத்தொடருக்கு இளம்பூரணர் உரை செய்துள்ளார். "பெயர்க்கண்ணும் வினைக்கண்ணும் தம்முருபு தடுமாறி" எனச் சேனாவரையரும், "பெயர்வினைகள் போன்றும் அவற்றிற்கு முதனிலையாயும் தம்முரு தடுமாறித் தத்தமக்கு உரிய முறைமையாற் சென்று நிற்கும் நிலைக்களங்களாலே" என்று நச்சினார்க்கினியரும்

பொருள் கொண்டுள்ளனர். உரிச்சொல்லாகிய உருபு பெயரின் கண்ணும் வினையின் கண்ணும் தடுமாறும்; அவை தடுமாறுங்கால் பெயர்வினைகளைச் சார்ந்தும் அவற்றிற்கு அங்கமாகியும் வரும் என்பது தெய்வச்சிலையாரின் கருத்து. தொல்காப்பியர் கூறிய தொடருக்கு உரையாசிரியர்கள் தந்துள்ள விளக்கத்தைத் தொகுத்து நோக்கினால் உரிச்சொற்கள் பெயரைப் போன்றும் பெயரைச் சார்ந்தும் பெயர்க்கு உறுப்பாகியும், வினையைப் போன்றும் வினையைச் சார்ந்தும், வினைக்கு உறுப்பாகியும் அமைந்துள்ளன என்று அறியலாம். எழுத்ததிகாரத்தல் உரிச்சொலை "நெறிப்படவாராக் குறைச் சொற் கிளவி" (தொல்: 482) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இதனால் உரிச்சொல் ஒரே தன்மைப்பட வருவதில்லை என்பதும் முழுச்சொல் அல்ல என்பதும் தெளிவு. "எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே" (தொல். 878) என்பதால் உரிச்சொல் உருபன்களாகப் பிரிந்து நின்று பொருள் தருவது இல்லை என்று உணரலாம். எனவே உரிச்சொல் உருபன்களாகப் பகுக்க இயலாதது என்பது துணிவு.

> சொல்லுறுப்புக்களைச் சொல்லின் கடையிலிருந்து ஒவ்வொன்றாக நீக்கிக் கொண்டே வரும்போது மேலும் பிரிக்க முடியாதபடி கருவாக நிற்பது அடிச்சொல்லாகிய உரிச்சொல்லாம்

என்று இதனைத் தெ. பொ. மீனாட்சிசுந்தரன் விளக்கியுள்ளார்.[178]

உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு பற்றித் தோன்றும் என்று தொல்காப்பியர் கூறியது உரிச்சொல்லின் தோற்றம் பற்றிய கருத்தாகக் கொள்ளப்பட்டுள்ளது. இசை, குறிப்பு, பண்பு ஆகியவை பற்றித் தோன்றும் உரிச்சொற்கள் எவை என உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர், பெயர், வினை ஆகிய சொற்களின் தோற்றம் பற்றித் தொல்காப்பியர் எதுவும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. உரிச்சொல்லின் பயன்பாடு பற்றியும் சிறப்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை.

உரியியலும் சொற்பொருளியலும்

சொற்கள் எல்லாம் பொருள் உணர்த்தும்; அவ்வாறு பொருள் உணர்த்தலில் 'தெரிபு வேறு நிலையல்', 'குறிப்பில் தோன்றல்' என்னும் இரு நிலைகள் உள்ளன எனப் பெயரியலிலும் சொற்கள் பொருள் உணர்த்தும் நிலை பற்றிய வேறு சில செய்திகளை உரியியலிலும் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

உரியியலில் நூற்றிருபது சொற்களுக்குப்பொருளும், சொற்களுக்குப் பொருள் அறியும் வகையும் கூறப்பட்டுள்ளன. உரிச்சொற்களுள் ஒரு சொல் பல பொருட்கு உரிமை தோன்றலும் (homonyms) பல சொல் ஒரு பொருட்கு உரிமை தோன்றலும் (synonyms) என இருவகை உள்ளன என்பர். இதற்குப் பொருள் உணர்தற்கு வழக்கில் பயிலாத சொற்களை வழக்குப் பயிற்சி உள்ள

சொற்களோடு சார்த்திப் பொருள் உணர்ந்து கொள்ள வேண்டும் (தொல். 782) என்பர். இதனைத் தெய்வச்சிலையார்,

> வழக்கின்கண் பயின்று நடவாத சொற்களைப் பயின்ற சொற்களோடு சேர்த்து, யாதானும் ஒரு சொல்லாயினும் பொருள் வேறுபடுத்திக் காட்டுக (தொல். 782)

என்று விளக்குவர். இதனுள் ஒரு பொருட் பல சொல் (synonym) மொழியில் உள்ளது என்றாலும் அச்சொற்களின் பொருளையும் சிறிதளவேனும் வேறுபடுத்திக் காணுதல் இயலும் என்ற குறிப்பு உள்ளது. இது இக்கால மொழியியலார் மொழியில் சரிமாற்றாக (equivalent) அமையும் ஒரு பொருட் பலசொல் இல்லை[174] என்று கூறுவதற்கு ஒத்த கருத்தாக உள்ளது என்று மோ. இசுரயேல் எடுத்துக்காட்டியுள்ளார்.[175] சொற்களின் பொருளை உணர்த்தும் போது "முன்னும் பின்னும் வருபவை நாடி ஒத்த மொழியாற் புணர்த்தனர் உணர்த்தல்" வேண்டும் (தொல். 872) என்பார். சூழலால் பொருள் உணர்தல் வேண்டும் என்னும் கருத்து இதனால் பெறப்படுகிறது. இக்கால மொழியியலார் பொருளியலை விளக்கு வதில் 1. உரைப்பொருளியல் (Interpretative semantics) 2. பிறப்புப் பொருளியல் (Generative Semantics) என்ற இருவகைகள் காணப்படு கின்றன. இவ்விருவகைக் கொள்கையினரும் அடிப்படையில் வேறு பாடுடையோர் எனினும் பொருளின் பொருளைப் புரிந்து கொள்ளப் பல இன்றியமையாக் கூறுகளை அறிதல் வேண்டும் என்பதில் கருத் தொற்றுமை உடையவர்கள். அக்கூறுகளில் சில இன்றியமையாத பொருளுறவுக் கூறுகள் (Semantic relations) தொடர்பாகத் தொல் காப்பியரின் கருத்தினைக் க. இராமசாமி ஆராய்ந்து வெளிப்படுத்தி யுள்ளார். அந்தக் கூறுகள் வருமாறு: 1. பொருள் ஒருமை (Semantic similarity or paraphrase), 2. பொருட்பன்மை அல்லது பொருள் மயக்கம் (Multiplicity of Meaning or Ambiguity (1. Phonetic ambiguity 2. Structural ambiguity 3. Lexical ambiguity) 3. சார்பும் பொருளும் (Semantic competence) 4. முதலும் சினையும் (Super-ordination and sub-ordination) 5. பொருள் உண்மையும், பொரு ளின்மையும் (Meaningfulness and meaniglessness) 6. எதிர்பொருள் (Antonymy); 7. பிணிவுறுபொருள் (Entailment) 8. முன்னுறு பொருள் (Presupposition) ஆகியன. இந்தப் பொருளுறவுக் கூறுகள் எந்த எந்த நூற்பாக்களில் வெளிப்படுகின்றன என்பதை அவர் தெளிவு படுத்தியுள்ளார்.[176] இங்ஙனம் சொற்களுக்குப் பொருளும், பொருள் உணரும் முறையும் உரியியலில் கூறப்பட்டமையால் அது பிற்கால நிகண்டுகளுக்குத் தோற்றுவாயாக அமைந்தது. உரிச்சொல்லின் பெயரே நிகண்டுக்குப் பெயராகவும் (உரிச்சொல் நிகண்டு) அமைந்தது.

உரிச்சொல் விளக்கங்கள்

இன்று வரை உரிச்சொல்லைப் பற்றி ஆராய்ந்து விளக்கிய உரை யாசிரியர்களும் ஆய்வாளர்களும் உரிச்சொல்லின் சொல் தன்மை

பற்றிக் கூறியவற்றைத் தொகுத்து நோக்கின் அந்த விளக்கங்கள் எட்டுவகைக் கொள்கையினவாகக் காணப்படுகின்றன என்பர்.[177] அவற்றைப் பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

1. தனிச்சொல் வகைக் கொள்கை
2. தனிச்சொல் வகை அன்மைக் கொள்கை
3. தாதுக் கொள்கை
4. வேர்ச்சொல் கொள்கை
5. செய்யுட்சொல் வகைகள்
6. அருகிய வழக்குச்சொல் கொள்கை
7. பெயரடை வினையடைக் கொள்கை
8. சொற்களஞ்சியச் சிறப்புக் கொள்கை

என்பன அவை.

தனிச்சொல் வகைக் கொள்கை

தொல்காப்பியர் இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றைப் பெயர் வினையோடு ஒத்ததாகக் கருதவில்லை. எனினும் பிற் காலத்தில் இவற்றையும் சேர்த்து சொற்கள் நால்வகைப்படும் எனக் கொள்ளும் மரபு தோன்றியது. உரியியலில் கூறப்படும் உரிச் சொற்கள் யாவும் உருபன் நிலையிலும், தொடரன் நிலையிலும் ஒரே தன்மையானவாக அமையாததால் தனிச்சொல் வகையாகக் கொள்ளப்படுதற்கு ஏற்றன அல்ல என்பர்.[178]

தனிச்சொல் வகை அன்மைக் கொள்கை

உரிச்சொல் என்பது தனிவகைச் சொல் அன்று என்பர் தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

> சொற்கள் நான்கு வகை என்ற கருத்து நேரே தொல்காப்பியத் திலிருந்து கிடைக்கவில்லை. பெயர் வினையோடு இடை, உரியை அவர் கூட்டவில்லை. உரியாசிரியர்கள் வழியாகவே சொற்கள் நான்கு வகை என்ற கொள்கை தோன்றியது[179]

என்று கூறுவது பொருந்தக் கூடியதே. இவ்வாறு உரிச்சொல் என்பது தனிவகைச் சொல்லன்று என்பதைத் தி. சங்குப் புலவர், "உரிச்சொல் என்பது பண்பு, தொழில் காட்டும் பெயர்ச் சொற்களே; அவை செய்யுட்கு உரியனவாக முற்காலத்தில் கொண்டனர். ஆதலால் உரிச்சொல் எனப் பெயரிட்டு வழங்கினர். பண்புப் பெயர், தொழிற் பெயர் எனப் பெயருடன் கூட்டின் உரிச்சொல் என்ற பெயரே அழிந்துவிடும்[180] என்று கூறியுள்ளார். தொல் காப்பியர் பெயர், வினை ஆகிய சொற்களுக்கு இலக்கணம் கூறுவது போன்று உரிச் சொல்லுக்கு அமைப்பு, செயல்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் இலக்கணம் கூறவில்லை. புணர்ச்சியிலும் பெயர்,

வினை ஆகிய இரு சொற்களுமே இடம் பெறும் என அவர் உரைத்துள்ளார். மேலும் உரிச்சொல்லை அவர் "நெறிப்பட வாராக் குறைச் சொற்கிளவி" (தொல். 382) என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் தொல்காப்பியர் உரிச்சொல்லைத் தனிச் சொல் வகை யாகக் கொள்ளவில்லை என்று கூறலாம்.

தாதுக் கொள்கை

தெய்வச்சிலையார் உரிச்சொல் என்பது 'தாது' என்னும் கொள்கையை உடையவர்.

> எழுத்ததிகாரத்தில் இதனைக் 'குறைச் சொற்கிளவி' என்று ஓதினமையால், வடநூலாசிரியர் தாது என்று குறிப்பிட்ட சொற்களே இவையென்று கொள்ளப்படும். அவையும் குறைச் சொல்லாதலான்

என்பது அவருடைய விளக்கம். தாது என்பது வினையடிச் சொற்களைக் குறிப்பது. தெய்வச்சிலையார் உரிச்சொற்கள் யாவற்றையும் வினையடியிலிருந்து தோன்றியனவாகவே கொள் கிறார். உரியியலில் கூறப்படும் அனைத்துச் சொற்களும் வினை யடிச் சொற்கள் எனல் பொருந்தாது. பெயரடிகளும் உள்ளன. "'கார்கி' முதலிய வடமொழிப் புலவர்களைப் போல் தொல் காப்பியரும் அடிச் சொற்கள் வினையடிச் சொற்களாகவும், பெயரடிச் சொற்களாகவும் இருக்கலாம் கொள்கிறார்" என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரன் கூறியுள்ளது[181] கருதத்தக்கது.

வேர்ச்சொல் கொள்கை

உரிச்சொல் பற்றி ஆராய்ந்தோருள் பெரும்பான்மையர் அது வேர்ச்சொல் என்னும் கொள்கையினராகவே உள்ளனர். உரிச்சொல் என்பது வேர்ச்சொல்லே என்னும் கருத்தினை முதன்முதலில் கே. எஸ். நவநீதகிருஷ்ண பாரதி என்பார்.

> பெயர் வினைச் சொற்களின் பகுதிகள் யாவும் உரிச்சொற் களாகும். பெயர் வினைச் சொற்களுக்குப் பொருள் பிறிதாகும். பகுதியளவாய் நிற்கும் உரிச் சொற்களுக்குப் பொருள் பிறி தின்மையின் தமக்குத் தாமே உரிமை பூண்ட சொல் என்பதுவே உரிச்சொல் ஆகும்.[182]

என்று குறிப்பிட்டுள்ளார். பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, தெ. பொ. மீனாட்சி சுந்தரன், சி. இலக்குவனார், க. வெள்ளைவாரணன் ஆகியோர் உரிச்சொல் என்பது வேர்ச்சொல் என்னும் கொள்கை யினை உடையவர்கள். உரியியல் தொல்காப்பியர் காலத்தில் வெளிப்படையாகப் பொருள் உணரப்படாத வேர்ச் சொற்களின் பொருள் கூறும் இயல் என்றும், அந்த வேர்ச்சொற்களைப் பெயர், வேர்களைக் குறிப்பன; வினை வேர்களைக் குறிப்பன; எனப் பாகு பாடு செய்யலாம் எனவும் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி கூறி

யுள்ளார்.[183] தெ. பொ. மீனாட்சிசுந்தரன் உரிச்சொல் என்பது வேர் உருபன்கள் (Root morphemes) என்பர்.[184] சி. இலக்குவனார் இவற்றைப் பொருளுருபன்கள் (Semantemes) என்பர்.[185] "உரிச் சொல்லென்பன வினையும் குறிப்புமாகிய சொற்களுக்கெல்லாம் பகுதியாகிய வேர்ச்சொற்களென்பதும் குறைச் சொற்களாகிய இவற்றை முதனிலையாகக் கொண்டே எவ்வகை வினைச் சொற் களும் தோன்றுவன என்பதும்" புலனாகிறது என்பது க. வெள்ளை வாரணனின் கருத்து.[186] உரியியலில் சொல்லப் படுகின்ற நனி, தவ, வய, ஏ, மழ, குழ, கய, மத போன்றவற்றைப் பெயர் வேர்கள் என்றோ வினைவேர்கள் என்றோ கொள்ளுதல் பெருந்தாது என்பர் மோ. இசுரயேல்.[187] ஆனால் உரியியலில் கூறப்படும் சொற்களுள் பெரும்பாலானவை பெயர் அல்லது வினை வேர்களே. எனவே உரியியலில் கூறப்படும் அனைத்துச் சொற்களையும் வேர்ச்சொற்கள் என்று குறிப்பிடுதல் பொருந்தாது.

செய்யுள் வழக்குக் கொள்கை

செய்யுட்குரியன உரிச்சொல் என்று தொல்காப்பியர் குறிப்பிட வில்லை. உரையாசிரியர்களுள் சேனாவரையர் இதனைப் பிறர் கருத்தாகக் குறிப்பிட்டுள்ளார். திரிசொல்லாகிய செய்யுள் ஈட்டச் சொல்லின் இயல்பும் உரிச்சொல்லின் இயல்பும் ஒன்றாகக்கொள்ளப் பட்டமையான் இந்தக் கருத்து தோன்றியது. "திரிசொல் எனத் தொல்காப்பியர் கூறுவது முழுச்சொற்களில் ஒரு வகையினைப் பற்றியே அன்றிக் குறைச்சொற்களாம் உரிச்சொற்களைப் பற்றி அல்ல"[188] என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரன் இவற்றை வேறு படுத்திக் காட்டுவது நினைவில் கொள்ளத்தக்கது. நன்னூலார் "செய் யுட்கு உரியன உரிச்சொல்" (நன். 442) என்று தெளிவாகக் கூறி யுள்ளார். தேவநேயப் பாவாணர் உரிச்சொல் என்பது செய்யுட் சொல் என்னும் கருத்தினர்.[189] செய்யுளுக்கு உரிய சொல் என்று கூறு வதால் இதன் அமைப்பு, பயன்பாடு எதுவும் விளக்கம் பெறவில்லை.

அருகிய வழக்குச் சொல் கொள்கை

உரியியலில் வழக்கில் மிகுதியும் பயிலப்படாத சொற்கள் கூறப் படுகின்றன என்று தெய்வச்சிலையார் குறிப்பிட்டுள்ளார். இக்கால ஆய்வாளர்களுள் சிலரும் இக்கருத்தினைக் கூறியுள்ளனர். பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி.[190] மு. வரதராசன்[191] ஆகியோர் இக்கருத் தினர். உரியியலில் கூறப்பட்டுள்ள சொற்களுள் பெரும் பான்மையன அருகிய வழக்குச் சொற்களே என்பது தவறாகாது. இக்கொள்கை உரியியலுள் உணர்த்தப்படும் உரிச்சொற்களின் ஒரு இயல்பினை உணர்த்துகிறதேயன்றி அச்சொற்களின் அமைப்பு, செயல்பாடு ஆகியவை பற்றி ஏதும் கூறவில்லை.

பெயரடை, வினையடைக் கொள்கை

உரிச்சொற்கள் என்பன பெயரடைகள் என்பது கால்டு வெல்லின் கருத்து.[192] வின்சுலோ உரிச்சொற்களுள் சில பெயரடை

களாகவும், சில வினையடைகளாகவும் உள்ளன என்று கருதியுள்ளார்.[193] எஸ். வையாபுரிப்பிள்ளை உரிச்சொற்கள் தழுவும் சொற்களாகும் என்பர். மேலும், சொல் வேறுபாட்டு நிலை ஏற்காத அச்சொற்களுள் ஒருசில பெயரடை, வினையடைகளின் ஆற்றல் உடையன என்பர்.[194] எமனோ, பரோ ஆகிய திராவிட மொழி அறிஞர்களும் இவற்றைப் பெயரடைகள் எனக் கருதியுள்ளனர்.[195] கமில் கவலபில், உரிச் சொற்கள் என்பது தழுவும் சொற்களைக் குறிப்பது என்று கூறியுள்ளார்.[196] ஆனால் பெயரடை, வினையடை என்ற இரு பிரிவுகளுக்குள் எல்லா உரிச்சொற்களையும் அடக்கிக் காட்ட இயலாது. இதனைத் தேவநேயப் பாவாணரின் கருத்தும் உறுதி செய்கிறது. அது வருமாறு:

> உரிச்சொல் என்பது பெயராகவும் வினையாகவும் அவற்றிற்கு அடையாகவும் வரும். பெயருக்கு அடையாங்கால் குறிப்புப் பெயரெச்சம் போன்றது. வினைக்கு அடையாங்கால் குறிப்பு வினையெச்சம் போன்றது. பெயருரிச்சொல், வினையுரிச் சொல் என இருவகையுள் எல்லா உரிச்சொல்லும் அடங்கா[197]

என்பர். பெயராகவும் வினையாகவும் அமைந்துள்ள சொற்களும் உரியியலில் உள்ளன.

சொற்களஞ்சியச் சார்புக் கொள்கை

உரிச்சொற்களுக்குப் பொருளும், பொருள் அறியும் முறையும் உரியியலில் கூறப்படுவதால் உரியியல் பிற்கால நிகண்டுகளுக்கு அடிப்படையாக அமைந்தது என்பர். நன்னூலாரும் உரிச்சொற்கள் சிலவற்றைக் கூறிப் பிறவற்றைப் பிங்கலம் முதலான நிகண்டுகளில் காண்க (நன். 460) எனக் கூறியுள்ளார். உரியியல் பெரும்பாலும் சொற்களஞ்சியம் தொடர்பான செய்திகளைக் கூறுகின்றது என்பது எஸ். வையாபுரிப் பிள்ளையின் கருத்து.[198] உரியியல் முதல் தமிழ் நிகண்டு[199] எனவும் கருதப்பட்டுள்ளது. இக்கருத்தினை மறுக்கும் வகையில்.

> உரியியல் நிகண்டானால் உருபியல், வினையியல், இடையியல், எச்சவியல், கிளவியாக்கம் முதலியனவும் நிகண்டாதல் வேண்டும். பொருள் அதிகாரத்தில் வரும் மரபியலும் நிகண்டாதல் வேண்டும். ... இவற்றையும் நிகண்டு என்று கொள்வதா? அப்படியானால் இலக்கணம் என்பதற்கும் நிகண்டு என்பதற்கும் வேற்றுமை இல்லாமலே போகும். இந்த நோக்கில் பார்க்கும்போது உரியியல் என்பதை வடமொழி இலக்கணம் கூறும் — அடிச்சொற்களின் பட்டியலாம் தாது பாடத்தோடு ஒப்பிடலாம்[200]

என்னும் கருத்தும் எழுந்துள்ளது. சொற்கள் பொருள் உணர்த்தும் முறையும், சொற்களுக்குப் பொருளும் உணர்த்தப்படுதலால் உரியியலில் அகராதிக் கூறுகள் அமைந்துள்ளன என்பதை மறுத்தல் இயலாது. இந்த அடிப்படையில் நோக்கும்போது "தொல்காப்பியம்,

அகராதியியலுக்கு அடிகோலிய நிகண்டுகளுக்கு வித்தூன்றிய ஆதி நூல் என்பதில் ஐயமில்லை" என்று வ. ஜெயதேவன் கூறியுள்ளது பொருத்தமே.[201]

இங்ஙனம் உரிச்சொல் பற்றிய ஆய்வில் எட்டுவகைக் கொள்கைகளைக் காண முடிகின்றது. இவற்றுள் எதனையும் உரிச்சொல் பற்றிய முழு இலக்கணம், அமைப்பு, பயன்வகை ஆகியவற்றை விளக்குவதாகக் கொள்ள முடியாது. இருப்பினும் இக்கொள்கைகள் எவற்றையும் முழுமையாக மறுப்பதற்கும் இல்லை. ஏனெனில் இவை ஒவ்வொன்றும் உரிச்சொல்லின் ஏதாவது ஒரு தன்மையினை விளக்குவனவாக உள்ளன. ஆதலின் உரிச்சொல்லைப் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ள இவை யாவும் துணை புரிகின்றன. உரிச்சொல் பற்றித் தொல்காப்பியர் கூறியன, அவற்றுக்கு உரையாசிரியர் எழுதிய உரைகள், தந்த எடுத்துக்காட்டுகள் ஆய்வாளர்களின் விளக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உரிச்சொல் பற்றியும் உரியியல் பற்றியும் கீழ்க்காணும் விளக்கங்கள் கிடைக்கின்றன.

1. உரியியலில் கூறப்பட்ட உரிச்சொற்கள் அனைத்தும் சேர்த்து ஒரு சொல்வகையாக எண்ணத்தக்கன அல்ல.
2. உரிச்சொல்லைத் தனிச் சொல் வகையாக எண்ணிச் சொற்கள் நான்கு வகைப்படும் என்றது உரையாசிரியர்களே. தொல்காப்பியம் சொல்வகை நான்கு எனக் குறிப்பிடவில்லை.
3. உரிச்சொற்களுள் பல, வேர்ச்சொற்கள் ஆகும். அவை சிலவகை வாய்பாடுகளில் தரப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் வேர்ச்சொற்கள் எனவோ தாதுக்கள் எனவோ கூற இயலாது.
4. உரிச்சொற்கள் பெயரடை, வினையடை அல்லது பெயருரி, வினையுரிச் சொற்கள் உள்ளன. உரிச்சொற்கள் அனைத்தையும் இவ்விரு பகுப்புகளுக்குள் அடக்க இயலாது.
5. உரியியல் வழக்கில் மிகுதியும் பயிலாத சொற்களும் பொருளும் தரப்படுவதால் அதனைச் சொற்களஞ்சியத்தின் பகுதியாகவும், அகராதிக்குத் தோற்றுவாயாகவும் கருதுதல் தக்கதே.

தொடரியல்

தொல்காப்பியச் சொல்லதிகாரம், பெயரால் சொல்லிலக்கணம் மட்டும் குறிப்பது போல் தோன்றினும் தொடரியல் செய்திகளும் அதனுள் உணர்த்தப் பட்டுள்ளன. இதனை உரையாசிரியர்களும், மரபிலக்கணவழி ஆய்வாளர்களும், மொழியியல் நோக்கில் தொல்காப்பியத்தை ஆராய்ந்தோரும் தத்தம் கால அறிவு வளர்ச்சி நிலைகளுக்கேற்ப விளக்கி வந்துள்ளனர். தொல்காப்பியம் கூறும்

தொடரிலக்கணம் குறித்து இதுகாறும் நிகழ்ந்துள்ள ஆய்வினை இனி முறைப் படுத்தி ஆராயலாம்.

சொல்லதிகாரமும் தொடரியலும்

சொல்லதிகாரத்தில் தனிமொழி இலக்கணமும், தொடர்மொழி இலக்கணமும் உணர்த்தப்பட்டுள்ளன என உரையாசிரியர்கள் அனைவரும் உணர்ந்து கூறியுள்ளனர். தெய்வச்சிலையார் தனிமொழி இலக்கணமும், தொடர்மொழி இலக்கணமும் எந்தெந்த இயல்களுல் கூறப்பட்டுள்ளன என்பதையும், சொல்லிலக்கணம் அறிதலின் பயன், தொடர்மொழியாகிய வாக்கியத்தினைப் பிரித்து, பெயர்ச்சொல், வினைச்சொல் முதலிய தனிமொழிப் பகுதிகளை அறிதல் குறித்தும் விளக்கியுள்ளர் என்பது முன்னர் கூறப்பட்டது. தொடரியலுக்குச் சிறப்பளித்து, தெய்வச்சிலையார் தந்துள்ள இந்த விளக்கம் மொழியின் இலக்கணக் கல்வி பெரிய அமைப்பிலிருந்து (வாக்கியம்) சிறிய அமைப்பு நோக்கிச் செல்லலாம் என்னும் கருத்து தொல்காப்பியருக்கு உண்டு என்பதனைப் புலப்படுத்துகிறது என இராம. சுந்தரம் எடுத்துக் காட்டியுள்ளார்.[202] தொடரியல் சார்புடைய இலக்கணக் கூறுகளைத் தொல்காப்பியர் கூறும்போதொல்லாம் தொடரியல் செய்திகள் உடன்கொண்டே தெய்வச்சிலையார் உணர்த்துகிறார். இங்ஙனம் அவர் தொடரியல் நோக்குடன் விளக்கும் இடங்கள் பல உள. அவற்றுள் இரண்டினை இங்கே காணலாம்.

(1) வினையெச்சம், பெயரெச்சம் ஆகியன தொடரியல் பற்றிய இலக்கணக் கூறுகளை உள்ளடக்கியன. அது சொல்விலக்கணம் கூறுவதாகக் கருதப்படும் வினையியலுள் கூறப்படுவதன் காரணத்தை அவர் விளக்கும்போது வினையெச்சம் ஆகியவற்றின் தொடரியல் நிலைகளைக் குறிப்பிட்டுள்ளார்.[203]

(2) பொருள்கோள் என்பது செய்யுளுக்குப் பொருள் காணும் முறைகளை விளக்குவது; யாப்பிலக்கணத்தை உணர்த்தும் செய்யுளியலில் (பொருளதிகாரத்தில்) கூறப்பட வேண்டியது. ஆனால் அது எச்சவியலில் (சொல்லதிகாரத்தில்) கூறப்படுகிறது. பொருள்கோள் தொடர்மொழி பற்றியது ஆதலால் சொல்லதிகாரத்தில் சொல்லப்படுகிறது என அவர் விளக்கியுள்ளார்.[204]

சொல்லதிகாரத்தின் முதல் நான்கு இயல்களில் தொடர் இலக்கணம் உணர்த்தப்பட்டுள்ளது என்பது தெய்வச்சிலையாரின் கருத்து. இதனைப் பின் வந்தோர் சிலர் உடன்பட்டுரைத்தனர் என்பதும், விளிமரபில் தொடர் இலக்கணம் கூறப்படவில்லை என்ற கருத்தும் முன்னர் விளக்கப்பட்டன. தமிழ்மொழியின் தொடரமைப்பினை மனதில் கொண்டு நோக்குவார்க்கு சொல்லதிகாரத்தில் எல்லா இயல்களும் ஏதாவது ஒரு வகையில் தொடரியல் கூறுகளைக் கொண்டுள்ளன என்பது புலனாகும் என்று ச. அகத்தியலிங்கம் கூறுவதும்[205] நினைவில் கொள்ளத்தக்கது.

தொடர் பகுப்பு

தொடரில் அமைந்துள்ள சொற்களின் எண்ணிக்கை அடிப் படையில் அதனை இருமொழித் தொடர், பன்மொழித் தொடர் எனப் பகுக்கும் முறை சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோ ரிடத்துக் காணப்படுகிறது. இப்பகுப்புமுறையின் பயன் ஆராயத் தக்கது.

சொற்கள் ஒன்றனை ஒன்று தொடருங்கால் அவற்றிடையே உள்ள தொடரியல் உறவுகளாக 1. தொகைநிலை வகை, 2. எண்ணு நிலை வகை, 3. பயனிலை வகை என மூன்றினை இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளனர். சேனாவரையர் "தொடர் மொழியாவது அவாய் நிலையானும், அண்மை நிலையானும் இயைந்து பொருள் விளக்கும் தனிமொழி ஈட்டம்" (தொல், 484) என்று உரைத் துள்ளார். நச்சினார்க்கினியர் இது வட நூலார் முறை என எடுத்துக் கூறி, இதனையும் உடன்பட்டுள்ளார். இம்மூன்றும் வடமொழியில் உள்ள இசைவுகளாகிய 'ஆகான்ஷா', 'சந்நிதி', 'யோக்யதா' ஆகிய மூன்றோடும், மொழியியலுள் கூறப்படும் இசைவுகளாகிய (agreement) உரிமை கோடல் (demand or government), எதிர்க்குறிப்பு (Cross reference) இயைபு (concord) ஆகியவற்றோடும் ஒத்துக் காணப்படு கின்றன.[206] தொகைநிலை, எண்ணுநிலை, பயனிலை ஆகிய மூவகையும் தொகை நிலை, தொகா நிலை என இருவகையுள் அடங்கும். "ஒருசொல் முன் ஒருசொல் வருங்கால், தொகைநிலை வகையான் வருதலும் தொகாநிலை வகையான் வருதலும் என இரண்டல்லது இல்லை" (தொல். 484) என்ற தெய்வச்சிலையாரின் உரையும் இக்கருத்துக்கு அரண் செய்கிறது.

தொகைநிலைத் தொடர்களை அறுவகையாகத் தொல்காப்பியர் (தொல். 895) பகுத்துள்ளார். அவையாவன (1) வேற்றுமைத்தொகை, (2) உவமத்தொகை, (3) வினைத்தொகை, (4) பண்புத்தொகை, (5) உம்மைத்தொகை, (6) அன்மொழித்தொகை என்பன. தொகை தாம் பல (தொல். 484) என்பர் தெய்வச்சிலையார். தொகைநிலைத் தொடர்கள் இத்தகைய என்று வரையறை செய்ய இயலாதென்பது அவரின் கருத்து.

தொகாநிலைத் தொடர்கள் ஒன்பது என்பது நன்னூலாரின் கருத்து: (1) வினைமுற்றுத் தொடர், (2) பெயரெச்சத் தொடர், (3) வினையெச்சத் தொடர், (4) எழுவாய்த் தொடர், (5) விளித் தொடர், (6) வேற்றுமைத்தொகாநிலைத் தொடர், (7) இடைச் சொற்றொடர், (8) உரிச்சொற்றொடர், (9) அடுக்குத் தொடர் என்பன அவை. இங்ஙனம் தொகைநிலைத் தொடர்களை ஒன்பது வகையினவாகப் பகுத்துரைக்கும் முறை தொல்காப்பியத்தை அடி யொற்றி அமைந்தது என்பதைக் க. வெள்ளைவாரணன் விளக்கி யுள்ளார்.[207] இந்த இருவகைத் தொடர்களையும் அவற்றின் பொருள் நிலைமை நோக்கி வேற்றுமைத் தொடர், அல்வழித்தொடர் என இரு வகையாகப் பாகுபடுத்தும் முறையும் தொல்காப்பியத்தில் காணப்

படுகிறது. வேற்றுமைத் தொடர் என்பது ஐ முதலிய ஆறு உருபு களும் தொக்கும் விரிந்தும் நின்று புணரும் தொடர்கள் ஆகும். இவை புணர்ச்சியை விளக்குவதற்கு உதவும் வண்ணம் அமைத்துக் கொள்ளப்பட்டன. அல்வழித்தொடர் என்பது வினைத்தொகை முதலான ஐந்து தொகை நிலைத் தொடர்களும், எழுவாய் முதலிய ஒன்பது தொகா நிலைத் தொடர்களும் சேர்ந்தவை ஆகும். அல்வழித் தொடர்கள் எவை என்று தொல்காப்பியர் விளக்கவில்லை. "வேற்றுமை அல்வழி ஆகிய தொடர்களை 'வேற்றுமை குறித்த புணர்மொழி நிலை', வேற்றுமை 'அல்வழிப் புணர்மொழி நிலை' (தொல். 112) எனத் தொல்காப்பியர் கூறியுள்ளார். க. வெள்ளை வாரணன் இப்பகுப்பு முறை தொல்காப்பியர் காலத்துக்கு முன்பிருந்தே வழங்கிவரும் ஒரு இலக்கண மரபு என்பர்.[208]

கிளவியாக்கமும் தொடரியலும்

கிளவியாக்கத்தில் சொற்களின் பாகுபாடு, வினைச்சொல்லில் தோன்றும் பாலறி கிளவிகள், பெயருக்கும் வினைக்கும் உள்ள இயைபு; செப்புவினா வாக்கிய அமைப்புகள், இயற்பெயர், சிறப்புப் பெயர், சுட்டுப் பெயர் ஆகியன தொடர்களில் அமையும் முறை; பெயர்த்தொடர் அடையுடன் அமையும் முறை; வினாச்சொற்களின் வழக்கு; பலபொருள் ஒருசொல்; வழக்கு வேறுபாடுகள் போன்ற செய்திகள் பேசப்படுகின்றன.

கிளவியாக்கம், தொடரிலக்கணம் பற்றிக் கூறுகின்றது என்பதில் இருவேறுபட்ட கருத்துகள் இல்லை. இவ்வியலில் பெயர்க் காரணத்தினை விளக்கும் வகையில் உரையாசிரியர்கள் சொல்லிய கருத்துக்களும் கிளவியாக்கம் தொடரியல் பற்றிய செய்திகளைக் கூறுகின்றது என்பதை வலியுறுத்துவனவாகவே உள்ளன.

> கிளவிகள் பொருள் மேல் ஆமாறு உணர்த்தினமையின் கிளவி யாக்கம் என்னும் பெயர்த்து

என இளம்பூரணரும்,

> வழுக்களைந்து சொற்களை ஆக்கிக் கொண்டமையான் கிளவி யாக்கம் ஆயிற்று. ... பொதுவகையாற் கிளவி என்றமையால் தனிமொழியும் தொடர்மொழியுங் கொள்ளப்படும்

எனச் சேனாவரையரும் உரைத்துள்ளனர். நச்சினார்க்கினியர் இவ் விருவரது கருத்தினையும் சேர்த்துக் கூறியுள்ளார். தெய்வச்சிலையார் 'கிளவியது ஆக்கம்' என விரித்து வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகப் பொருள் கொண்டு, பின்வருமாறு விளக்குவர்:

> அது கிளவியது ஆக்கம் என விரியும். அதற்குப் பொருள் சொல்லினது தொடர்ச்சி என்றவாறு. சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து பொருள் மேல் ஆகும் நிலைமையைக் கிளவி யாக்கம் என்றார்.

ஏனைய உரையாசிரியர்களினும் தெய்வச்சிலையார் உரைப்பது தெளிவாக உள்ளது.

அல்வழித்தொடர் கிளவியாக்கத்தினுள் கூறப்படுகின்றது என்பது தெய்வச்சிலையாரின் கருத்து (தொல், 484); இதனை ஆய்வாளர் சிலர் உடன்பட்டுள்ளனர்.[209] அல்வழித் தொடர்களுள் அடங்குவனவாகிய ஐவகைத் தொகைநிலைத் தொடர்களும், சில தொகாநிலைத் தொடர்களும் எச்சவியலிலேயே கூறப்பட்டுள்ளன. கிளவியாக்கத்தில் சில நூற்பாக்கள் (தொல் 504, 511, 525, 531) வேற்றுமைச் சொற்றொடர் பற்றியன என்றும், இவ்வியலைத் தொடர்ந்து வேற்றுமைச் சொற்றொடர் பற்றிய இயல்கள் அமைந்துள்ளதால் அதனையொட்டி இது அல்வழித் தொடர் என்று தெய்வச சிலையார் எண்ணியிருக்கலாம் என்றும் சி. சுப்பிரமணியன் எடுத்துக் காட்டியுள்ளார்.[210] ஆகவே கிளவியாக்கம் முழுதும் அல்வழித் தொடர் பற்றிப் பேசுவது என்னும் கருத்து ஏற்புடையது அன்று.

வழுவமைதி

கிளவியாக்கத்துள் பெரும்பான்மையான நூற்பாக்கள் தொடரில் ஏற்படும் வழு அல்லது மயக்கம் பற்றியும் அதனை மயங்காவண்ணம் அல்லது வழு ஏற்படா வண்ணம் காக்கும் முறை பற்றியும் பேசுகின்றன. இதன் அடிப்படையில் கிளவியாக்கம் வழுப்படா வகைக்கு வேண்டுவதைப் பேசுகின்றது என்றும் கருதப்படுகிறது.[211]

வழுவும் மயக்கமும்

மயக்கம், வழு என்ற இரு சொற்களும் ஒரே பொருளுடையன என உரையாசிரியர்கள் கருதியுள்ளனர். ''மயக்கம் எனினும் வழு எனினும் ஒக்கும்'' என இளம்பூரணரும் ''இவை மயக்கும் எனவே வழுவாதல் பெற்றாம்'' என நச்சினார்க்கினியரும் (தொல். 496) உரைத்துள்ளனர். தொல்காப்பியர் மயக்கம், வழு என்ற இரண்டு சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். இவ்விரண்டு சொற்களையும் தொல்காப்பியர் பொருள் வேறுபாடு இல்லாமல் பயன்படுத்தியுள்ளாரா என்று ஆராய்தல் தக்கது.

கிளவியாக்கத்தைப் பொறுத்தவரை பாலறி கிளவிகள் (தொல். 498, 506), வண்ணச்சினைச் சொல் (தொல். 509), பெயரினும் தொழிலினும் பிரிந்திசைக்கும் தொடர்கள் (தொல். 533) ஆகியவை பற்றிக் கூறும்போது 'மயக்கம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். செப்பு, வினா பற்றிக் கூறுங்கால் 'வழு' என்ற சொல்லைப் பயன் படுத்தியுள்ளார். மேலும் திணை பற்றிக் கூறுங்கால் விரவுதல் என்ற சொல்லை ஆண்டுள்ளார் என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது. ஆகவே மயக்கம், வழு என்ற இரு சொற்களையும் ஒரு பொருட் கிளவிகளாகக் கொள்வது எல்லா இடத்திலும் ஏற்கத் தக்கது அன்று எனக் கூறலாம். மயக்கம் என்பது கலத்தல், சேர்ந்து நிற்றல், புணர்தல் என்று பொருள்படும். இதனால் மயங்குதல் என்ற சொல்

தொல்காப்பியத்தில் பயன் படுத்தப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் வழுவுதல் என்ற சொல்லை வைத்துப் பார்த்தால் அது எவ்வளவு தவறான பொருள் தரக்கூடும் (உயிர் மயங்கியல் — உயிர் வழு வமைதி; புள்ளி மயங்கியல் — புள்ளி வழுவமைதி; குற்றியலுகரப் புணரியல் — குற்றியலுகர வழுவமைதி) என்று உணரலாம்.[212] எனவே தொல்காப்பியர் மயக்கம் என்பதையும் வழு என்பதையும் ஒரே பொருளில் கையாளவில்லை என்பது தெளிவு. கிளவியாக்கத்தில் செப்பு, வினா இவற்றைக் குறிப்பிடும் இடங்களில் மட்டும் வழு என்ற சொல்லைப் ('வழாஅல் ஓம்பல்' (தொல். 496) வழீஇயினும் தொல். 497) பயன்படுத்தியுள்ளமையும் இதனை உறுதி செய்கிறது. இருப்பினும் இவ்விரு சொற்களும் ஒரே பொருளுடையனவாகக் கொள்ளப்பட்டு வழு, வழுவமைதி என்ற சொற்கள் இலக்கண வரலாற்றில் நிலைபெற்று விட்டன.

தொடரில் (1) திணை மயக்கம், (2) பால் மயக்கம், (3) இட மயக்கம் (4) கால மயக்கம், (5) மரபு மயக்கம், (6) செப்பு மயக்கம், (7) வினா மயக்கம் ஆகிய ஏழுவகை மயக்கங்கள் ஏற்படக்கூடும் என உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். "மயங்கல் கூடா தம்மரபினவே (தொல். 497) என்ற நூற்பாவின் உரையில் மயக்கம் எழுவகைப்படும் என்று இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுவர். பின்னர் அவ் வெழுவகை மயக்கம் பற்றிக் கூறும் போதெல்லாம் மயக்கம் என்று கூறாமல் வழு என்றே குறிப்பிட்டுள்ளனர். இம்மயக்கங்கள் எழுவகை என்பது 'உரையிற்கோடல்' என்னும் உத்தியால் அவர்கள் கொள்கின்றனர். தொல்காப்பியம் மயக்கம் எழுவகை என்று குறிப் பிடவில்லை.

தொடரமைப்பில் ஏற்படும் வழு அல்லது மயக்கம் பற்றி பால் ராபர்ட்ஸ் என்னும் மொழியியல் அறிஞரின் கருத்து இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. "ஒரு மொழி தன் இலக்கணத்திலிருந்து குறைந்தது எழுவகைகளில் வழுப்படலாம்; வழுவுடைச் சொற்றொடர் யாவும் தகுதியற்றனவாகத் தள்ளத்தக்கன அல்ல; வழுவுடையன தீயன என்பது ஏற்புடையது அன்று; முற்றிலும் வழுப்படாத ஒரு சொற் றொடரே பலவகையில் தள்ளத் தகுந்ததாகவும் பொருளற்றதாகவும், பொய்ப் பொருள் உடையதாகவும் இருக்கலாம்; வழுவுடைத் தொடர் ஒன்று மிகவும் நல்ல தொடராக இருக்கலாம்; வழுப்பட்டதாலேயே உண்மையாக நற்சொற்றொடராகவும் இருக்கலாம்"[213] என்று பால் ராபர்ட்ஸ் கூறியுள்ளார். தொல்காப்பிய உரையாசிரியர்கள் கருத்தும் பால் ராபர்ட்ஸ் கருத்தும் பின்வரும் அடிப்படைகளில் ஒத்துள்ளன எனச் சி. சுப்பிரமணியன் எடுத்துக் காட்டியுள்ளார்.[214] அவையாவன: (1) வழுக்களின் எண்ணிக்கை, (2) வழு வகைப்பாட்டில் சில, (3) வழுவமைதி முறை.

தொடரில் ஏற்படும் வழுக்களைக் காத்தல் இரு வகைப்படும். இவற்றை உரையாசிரியர்கள் 'வழுவற்க', 'வழீஇயமைக' (தொல். 496) என்று குறிப்பிட்டுள்ளனர். இவை முறையே வழு ஏற்படாமல் காத்தல், வழு ஏற்படின் அதற்கு அமைதி கூறல் எனப் பொருள்

படும். நச்சினார்க்கினியரும் கல்லாடரும் எழுவகை வழுக்களுள் காலவழு வினையியலுள்ளும், மரபு வழு மரபியலுள்ளும் பேசப் பட்டுள்ளன என்று கூறியுள்ளனர். ஏனைய ஐவகை வழுக்கள் கிளவியாக்கத்துள் கூறப்பட்டுள்ளன. திணை, இடம் பற்றிய வழுக் களும் பால் வழுவினுள் அடங்கும். திணை, பால், இடம் ஆகிய மூன்றும் தொடர்புடையன. ஆகவே கிளவியாக்கத்தினுள் பால், செப்பு, வினா ஆகியன பற்றிய வழுக்களும் அவற்றைக் காக்கும் முறைகளும் பேசப்பட்டுள்ளன எனக் கொள்ளலாம். செப்பு, வினா என்னும் இருவகையுள்ளே இவை மூன்றும் அடங்கும் என்பது தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோர் கருத்து.

> உலகத்துப் பொருளுணர்த்துஞ் சொல்லெல்லாம் வினாவும்
> செப்பும் ஆகிய பொருள்மேல் நிகழ்தலின் (தொல். 496)

என்று தெய்வச்சிலையார் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எழுவாய் — பயனிலை இயைபுகள்

எழுவாயில் தோன்றும் பாலறி கிளவிகளும், பயனிலையில் தோன்றும் பாலறி கிளவிகளும் மயங்குதல் கூடாது (தொல். 494). இதனால் எழுவாய்க்கும் பயனிலைக்கும் உள்ள இயல்பு வற்புறுத்தப் படுகின்றது என மொழியியல் ஆய்வாளர்கள் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

பெயருக்கும் வினைக்கும் உள்ள பிறிதொரு வகை இயைபும் தொல்காப்பியரால் கூறப்பட்டுள்ளது. அது செல், வா, தா, கொடு ஆகிய சொற்கள் தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூலப் பெயர்களோடு கொள்ளும் இசைவு பற்றியது (தொல். 511). தா, வா ஆகிய இரு சொற்களும் தன்மை, முன்னிலை இரண்டு இடங்களுக்கும் வரும் (தொல். 512). கொடு, போ ஆகிய இரு சொற்களும் படர்க்கை இடத்தில் வரும் (தொல். 513). இவ்வினைகள் தமக்கு முன் நிற்கும் இடப்பெயர்களை அவாவி நிற்குமே அல்லாது இடப்பெயர்கள் இவற்றை அவாவி நிற்பதில்லை. ஆகவே இந்த இசைவு ஒருமுகச் சார்பானது (unilateral dependence) என்று கூறி, இவ்வகை வினைகள் தொடரியல் உறவு பற்றியே வினையியலில் கூறப்படாமல் கிளவி யாக்கத்துள் கூறப்பட்டுள்ளன என்பர் இராம. சுந்தரம்.[115]

இதே போன்று "வேறுவினைப் பொதுச்சொல் ஒருவினை கிளவார்" (தொல். 529) என்னும் நூற்பாவில் இருமுகச் சார்பான இசைவு (bilateral dependence) கூறப்பட்டுள்ளது என்றும் அவர் கூறி யுள்ளார். சில பெயர்கள் சில வினைகளைத் தான் ஏற்கும்; அது போல இவ்வகை வினைகள் சில பெயர்களைத் தான் ஏற்கும். இவை முறையே பொதுப்பெயர்கள் (அடிசில், படை, இயம்), பொது வினைகள் (அயின்றார், தொட்டார், இயம்பினார்) எனப்படும். இந்தப் பெயர்களும் வினைகளும் இவற்றிற்குரிய சிறப்புப் பெயர் களின்றும், சிறப்பு வினைகளினின்றும் வேறுபட்டவை. அடிசில் என்பது அயின்றார் என்ற வினையோடும் அயின்றார் என்பது

அடிசிலோடும் இயைபுடையன. எனவே அடிசில் என்ற பொதுப் பெயரோடு தின்றார் என்ற சிறப்பு வினையுடன் சேர்த்து அடிசில் தின்றார் எனல் தவறான வழக்கு. இந்தவகை இசைவு இருமுகச் சார்பானது என விளக்கியுள்ளார் அவர்.[214]

செப்பும் வினாவும்

செப்பையும் வினாவையும் வழுவாது கூறல் வேண்டும் (தொல். 496); வினாவுக்கு வினாவே செப்பாக வருதலும் உண்டு (தொல். 497); செப்பு வழுவாக வந்தாலும், வினாவிய பொருளை அறிவுறுத்துமாயின் நீக்க வேண்டியது இல்லை; செப்பின் கண்ணும் வினாவின் கண்ணும் உறழ்ந்து கூறப்படும் பொருள் சினைக் கிளவிக்கு சினைக் கிளவியும், முதற்கிளவிக்கு முதற்கிளவியும் ஆகும் (தொல். 499) ஆகிய செய்திகள் செப்பு, வினா பற்றித் தொல் காப்பியரால் கூறப்பட்டுள்ளன.

செப்பு அறுவகைப்படும் என்பது இளம்பூரணர் கருத்து; நால் வகைப்படும் என்பது தெய்வச்சிலையார் கருத்து. இருவகைப்படும் என்பது சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் கருத்து.

(1) வினாவெதிர் வினாவல், (2) ஏவுதல், (3) மறுத்தல், (4) உற்றது உரைத்தல், (5) உறுவது கூறல், (6) உடம்படுதல் என்னும் அறுவகையினை இளம்பூரணர் கூறியுள்ளார். "உடம் படுதலும், மறுத்தலுமே இங்குச் செப்புக்கு இலக்கணமாகக் கூறப் பட்டுள்ளன" என்றும் விளக்கியுள்ளார். செப்பு இருவகைப்படும் என்னும் கல்லாடரும் இதே கருத்தினர்.

தெய்வச்சிலையார் கூறும் நால்வகைச் செப்புகள் (1) துணிந்து கூறல், (2) கூறிட்டு மொழிதல், (3) வினாவி விடுத்தல், (4) வாய் வாளாமை என்பன. இந்நால்வகையையும் இவற்றுக்கு அவர் தரும் எடுத்துக்காட்டுகளையும் நோக்கும்போது இந்தப் பகுப்பு முறை தருக்கநூல் அடிப்படையில் அமைந்தனவாகத் தோன்று கின்றன.

சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் கருத்துப்படி (1) செவ்வன் இறை, (2) இறை பயப்பது என்று செப்பு இருவகைப் படும். செவ்வன் இறை என்பது நேர்விடை; இறை பயப்பது என்பது நேரடியாக அல்லாமல் குறிப்பாக விடை தருவது அல்லது சுற்று வழியாக விடை தருவது என்று பொருள்படும்.

செவ்வன் இறை, இறை பயப்பது என்னும் இருவகைப் பாகு பாடுகள் இலக்கண அமைப்பினை விளக்கத் துணைபுரிவன. இறை பயப்பது என்பது வினாவுக்கு நேர் விடையாக இல்லாவிடினும் அதனைக் கொள்ள வேண்டும் என்று கூறி அதனை வழுவமைதி என்பர். வினாவே செப்பாக வருதல் (தொல். 497), செப்பு வழுவி

வருதல் (தொல். 498) என்று தொல்காப்பியர் குறிப்பிடும் இரண்டினையும் 'இறை பயப்பது' என்பதில் அடக்கலாம்.

சாத்தா உண்டாயா? என்ற வினாவுக்கு, உண்டேன் என்பது நேர்விடை (செவ்வன் இறை). உண்ணேனோ? என வினாவாக விடையளித்தலும், "வயிறு குத்திற்று" எனப் பிறிதொரு வகையில் விடையளித்தலும் உண்டு. இவை இரண்டும் வினாவிய பொருளினை ஒருவகையில் அறிவுறுத்துவனவே. இவற்றை இறை பயப்பது எனப் பொருள் வழியாக உரையாசிரியர்கள் விளக்கியுள்ளனர். மாற்றிலக்கண மொழியியலார் இதனை வாக்கியத்தின் புறவடிவம் (Surface structure) புதை வடிவம் (deep structure) என்பதன் மூலம் விளக்குவர்.

சாத்தா உண்டாயா? என்பதற்கு உண்ணேனோ? என்பது (புற வடிவில்) விடையாக வரினும், அது புதை வடிவில் நான் உண்பேன் என்னும் பொருளைத் தருவதாக மாற்றிலக்கண விதிகளின்படி விளக்க முடியும். 'வயிறு குத்திற்று' என்னும் விடையும் இதே போன்று புதைவடிவில் 'நான் உண்டேன், அதனால் வயிறு குத்திற்று' என்றோ, வயிறு குத்திற்று, அதனால் உண்ணேன்; என்றோ பொருள்படும். "இலக்கண வழியிலான விளக்கம் பெற முடியாத காரணத்தால் பொருள்வழி நின்று (உரையாசிரியர்கள்) விளக்க முற்பட்டனர். ஆனால் தற்கால மொழிமாற்றிலக்கண அறிவோடு இதனை விளக்கி அறிந்து கொள்ளும் போது தொல்காப்பியச் சூத்திரத்தின் நுணுக்கமும் நமக்குப் பிடிபடுகிறது"[217] என்று இராம. சுந்தரம் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. "எல்லா வாக்கியங்களும் பேச்சு நிலையில் வரும்போது பேசுவோன் — கேட்போன் உறவுக் கேற்பவும், மனநிலைக்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு இயையவும் வேண்டும் சில விதிகளைப் பயன்படுத்திப் பேசப்படுபவையே. ஆகவே அவற்றை எல்லாம் நடை வேறுபாடாகக் (Stylistic variation) கருத வேண்டுமே தவிர சில வழுவற்றவை, சில வழுவானவை என்று எண்ணுவது கூடாது" என்று செ. வை. சண்முகம் வழுவமைதி பற்றிக் கூறியுள்ளதும் இவண் சிந்திக்கத் தக்கது.[218]

செய்யுள் தொடரும் வழக்குத் தொடரும்

கிளவியாக்கத்தினுள் சில தொடரமைப்புக்களை (1) செய்யுளுக் குரியன, (2) வழக்கிற்குரியன எனத் தொல்காப்பியர் விதந்து குறிப் பிட்டுள்ளார். அவற்றுள் செய்யுளுக்குரியன;

1. இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர் (தொல். 501)
2. இயற்பெயரும் சுட்டுப்பெயரும் சேர்ந்து வினையேற்குங் கால் சுட்டுப்பெயரை முதலில் கூறல் (தொல். 521, 522).
3. எண்ணுத் திணை விரவுப்பெயர் அஃறிணை முடிபு கொள்ளல் (தொல். 534)

வழக்கிற்குரியன;

1. ஆக்கக் கிளவியைக் காரணம் கூறாது கூறுதல் (தொல். 505)
2. ஒருவரைக் கூறும் பன்மைக்கிளவி, ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவி (தொல். 510)

இனச்சுட்டில்லாப் பண்பு கொள்பெயர் செய்யுளுக்கு மட்டுமே உரியது; வழக்காறு அல்ல (தொல். 501) என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். வழக்கிலும் இத்தகைய இனச்சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்கள் உள என்பதை ஒரு சாரார் கருத்தாக இளம்பூரணர் எடுத்துக்காட்டியுள்ளார். அது வருமாறு;

'வழக்காறல்ல' என்ற விதப்பினான் "வடவேங்கடம் தென் குமரி" என்பன கொள்க. இதுவும் ஒருசார் ஆசிரியன் உரை.

இனி, ஒருவன் சொல்லுவது; "வழக்காறு அல்ல" என்பதனை, 'வழக்காற்றின் அல்ல' என ஐந்தாம் உருபு விரித்து, அல்ல என்பதனைப் பெயர்ப்படுத்துக் கூறும்; கூறவே, வழக்கிற்கும் இனமில் பண்புகொள் பெயர்கள் உள என்பது போந்ததாம்.

ஏனைய உரையாசியர்கள் வழக்கின்கண் வரும் சுட்டில்லாப் பண்பு கொள் பெயர்களை எடுத்துக்கூறி, அவையும் செய்யுள் வழக்கு என்றோ, பண்பினைச் சிறப்பிக்க வந்தன என்றோ காரணம் காட்டி அமைதி கூறுகின்றனர். வழக்கிலும் இப்பெயர்கள் வழங்குகின்றன என்பதை மொழியிலாரும் உடன்படுகின்றனர். பெயரெச்சத்தினைப் பிரிநிலையுடைய பெயரெச்சம், பிரிநிலையில்லாப் பெயரெச்சம் என மொழியியலார் பகுத்துரைப்பர். பெயரடைகளிலும் இதுபோன்ற பகுப்பினைக் கொள்ளலாம். "இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்" என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் பிரிநிலையில்லாப் பெயரெச்சத்தொடர் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் என்பதைச் ச. அகத்தியலிங்கம் தெளிவாக விளக்கியுள்ளார்.[219]

கிளவியாக்கம் குறித்து நிகழ்ந்த ஆய்வின் பயன்களாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. கிளவியாக்கம் என்ற தொடருக்குத் தெய்வச்சிலையார் அளித்த விளக்கம் சிறப்பாகக் கருதப்படுகிறது. எனினும் கிளவியாக்கத்தில் அல்வழித்தொடர் பேசப்படுகிறது என்ற அவரது கருத்து பொருந்துவது அன்று என்பது விளக்கப் பட்டுள்ளது.

2. உரையாசிரியர்கள் வழு, மயக்கம் என்பனவற்றை ஒரு பொருட்கிளவிகளாகக் கொள்வது தவறு என்பதும் அவற்றைப் பொருள் வேறுபாட்டுடன் தொல்காப்பியர் பயன்படுத்தியுள்ளார் என்பதும் நினைவில் கொள்ளத் தக்கன.

3. கிளவியாக்கத்தில் சில வகை தொடரமைப்புகளும் தொட ரமைப்பில் ஏற்படும் சில மயக்கங்களும் அதனைக் காக்கும்

முறையும் கூறப்பட்டுள்ளன என்று தெளிவாக்கப் பட்டுள்ளது.

4. கிளவியாக்கத்தின் தொடரியல் செய்திகள் மொழியியல் ஆய்வினால் நன்கு விளக்கம் பெற்றுள்ளன.

வேற்றுமை

வேற்றுமை இலக்கணம் சொல்லியல் கூறுகளையும், தொடரியல் கூறுகளையும் உள்ளடக்கியது ஆகும். வேற்றுமையின் உருபுகள், அந்த உருபுகளின் வடிவம், அவற்றின் மாற்று வடிவங்கள் ஆகியன வேற்றுமையின் சொல்லியல் கூறுகள் ஆகும். வேற்றுமைகளின் முடிப்புச் சொற்கள், முடிப்புச் சொற்களுக்கும் இவ்வேற்றுமைகளுக் கும் உள்ள இலக்கண உறவு, வேற்றுமை வாக்கியங்களில் பயன் படுத்தப்படும்போது ஏற்படும் சில மாற்றங்கள் ஆகியன வேற்றுமை யின் தொடரியல் கூறுகள் ஆகும்.

தொல்காப்பியர் எழுத்ததிகாரத்தில் புணரியல், தொகை மரபு, உருபியல் ஆகிய மூன்று இயல்களிலும் சொல்லதிகாரத்தில் வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு ஆகிய மூன்று இயல்களிலும் வேற்றுமை இலக்கணம் பற்றிப் பேசியுள்ளார். வேற்றுமை உருபுகள், அவற்றின் மாற்று வடிவங்கள் ஆகிய சொல் லியல் கூறுகள் புணரியலிலும், வேற்றுமை மயங்கியலிலும் கூறப் பட்டுள்ளன. வேற்றுமை உருபுகளின் மாற்று வடிவங்களை விளக்கும்போது ஒலிக்கட்டுப்பாடுடைய (Phonologically conditioned) மாற்றங்களைப் புணரியலிலும் சொல் கட்டுப்பாடுடைய (morphologically conditioned) மாற்றங்களை வேற்றுமை மயங்கியலி லும் தொல்காப்பியம் கூறியுள்ளது. இம்முறை மொழியியலாரது முறையினை ஒத்துள்ளது என்பர்.[220] வேற்றுமையின் முடிப்புச் சொற்கள், வேற்றுமைக்கும் முடிப்புச் சொற்களுக்கும் இடையே உள்ள இலக்கண உறவு ஆகியன வேற்றுமையியலில் சொல்லப் பட்டுள்ளன. வேற்றுமை, வாக்கியங்களில் பயன்படும்போது ஏற் படும் சில மாற்றங்கள் வேற்றுமை மயங்கியலில் பேசப்பட்டுள்ளன. விளிவேற்றுமை ஏனைய வேற்றுமைகளின்றும் மாறுபட்ட சில பண்பு களைக் கொண்டுள்ளதால் அது விளிமரபு என்னும் தனி இயலில் உணர்த்தப் பட்டுள்ளது.

வேற்றுமை இலக்கணம்

தொல்காப்பியர் வேற்றுமை என்பது என்ன என்று கூறவில்லை. "பொருள்களை வேற்றுமை செய்வன வேற்றுமை" தொல். 546) என்று இளம்பூரணர் கூறியுள்ளார். இதனையே வேற்றுமையின் இலக்கணமாகக் கொண்டு,

ஏற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈராய்ப் **பொருள் வேற்றுமை**
செய்வன எட்டே வேற்றுமை **(நன். 291)**

என்று நன்னூலார் நூற்பா செய்துள்ளார். இளம்பூரணரின் கூற்றினைச் சற்று விளக்கமாகச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் உரைத்துள்ளார். "செயப் படுபொருள் முதலியனவாகப் பெயர்ப்பொருளை வேறுபடுத்துதலின் வேற்றுமை" என்பது அவர்களின் விளக்கம். தெய்வச்சிலையார் வேற்றுமைக்குத் தரும் விளக்கம் இதைவிடத் தெளிவாகவும் அதன் தொடரியல் பண்புகளைச் சுட்டுவதாகவும் உள்ளது. அது வருமாறு:

> பொருள்களை வேறுபடுத்தினமையாற் பெற்ற பெயர் (வேற்றுமையியல்). என்னை வேறுபடுத்தியவாறு எனின் ஒரு பொருளை ஒருகால் வினை முதலாக்கியும், ஒருகால் செயப்படு பொருளாக்கியும், ஒருகால் கருவியாக்கியும், ஒருகால் ஏற்பது ஆக்கியும், ஒருகால் நீங்க நிற்பது ஆக்கியும், ஒருகால் உடையது ஆக்கியும், ஒருகால் இடம் ஆக்கியும் இவ்வாறு வேறுபடுத்தது என்க. மேல் அல்வழித்தொடர் கூறி இனி வேற்றுமைத்தொடர் கூறுகின்றார் ..."
>
> (தொல். 546, 547)

வேற்றுமைகளை ஏற்பதால், தொடரில் பெயரின் இலக்கண நிலை செயப்படுபொருள், கருவி முதலியனவாக மாறுகின்றன என்னும் பொருள்படுமாறு உள்ளது இவ்விளக்கம். இம்மாறுபாடுகளே வேற்றுமை எனப்படுகின்றன. ஏனைய உரையாசிரியர்கள் வேற்றுமையியல் பெயரிலக்கணம் கூறுகின்றது என்றும், நான்கு சொற்களுக்கும் பொதுவிலக்கணம் கூறுகின்றது என்றும் உரைக்க, தெய்வச்சிலையார் அவர்களினின்றும் வேறுபட்டு இவ்வியல் தொடரிலக்கணம் (வேற்றுமைத்தொடர்) கூறுகின்றது எனக் கூறியுள்ளது நோக்கத்தக்கது. வேற்றுமை என்பது வாக்கியத்தில் அல்லது தொடரில் பெயருக்கும் வினைக்கும் உள்ள உறவு நிலைகள் என்று மொழியியலார் விளக்குவர். தெய்வச்சிலையாரின் கருத்து இதனோடு ஒப்பு நோக்கத்தக்கது.

வேற்றுமைகளின் எண்ணிக்கையும் பெயரும்

"வேற்றுமை தாமே ஏழெனமொழிப" (தொல். 546) விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே" (தொல். 547) என்று தொல்காப்பியர் வேற்றுமைகளின் எண்ணிக்கை பற்றிக் கூறியுள்ளார். "ஏழென மொழிப" என்று பிறரது கருத்தாகக் கூறுவதாலும் "விளியோடு எட்டு' என்று விளியை விதந்து கூறி அதனைத் தனியோர் இயலில் விரிவாக விளக்கி உள்ளதாலும் தொல்காப்பியருக்கு முந்தைய இலக்கண நூலார் விளிவேற்றுமைக்கு ஏனைய வேற்றுமைகளோடு ஒத்த நிலையினை அளிக்கவில்லை எனக் கருதப்படுகிறது.[221]

வேற்றுமைகளை எட்டு என்று கொண்டதும், அவற்றுக்கு எண் அடிப்படையில் பெயரிட்டதும் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றியது என்பது கால்டுவெல் கருத்து.[222] வேற்றுமைகளின் வரிசை முறையும், எண்முறையில் அமைந்த பெயர்களும், வேற்றுமைகளின் பொருள்களைத் தொல்காப்பியர் விளக்கும் முறையும்

பாணினி போன்ற வடமொழி இலக்கண ஆசிரியர்களைத் தொல்காப்பியர் பின்பற்றியிருக்கக் கூடும் என்று பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அவர் வேற்றுமைகளின் பெயர்களைப் பொறுத்தவரை தொல்காப்பியருக்கு முந்திய இலக்கண ஆசிரியர்கள் ஐ வேற்றுமை, ஒடு வேற்றுமை எனப் பெயரிட்டு அழைத்திருக்க வேண்டும் என்று கருதுகிறார்.[223] தொல்காப்பியர் "ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (தொல். 555) "ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி" (தொல். 557) என்று உருபுகளோடு சார்த்தி வேற்றுமையின் பெயர்களை வழங்கியுள்ளார் ஆதலின் அவர் வேற்றுமைகளை உருபுகளின் பெயரால் அழைக்கிறார் என்று கொள்ளலே தக்கது. வேற்றுமைகளின் வரிசை முறைக்கும் அவற்றின் பெயருக்கும் தொல்காப்பியர் வடமொழி முறையினைப் பின்பற்றியுள்ளாரா அல்லது தமக்கு முந்திய தமிழ் இலக்கண நூல்களைப் பின்பற்றியுள்ளாரா என்பது ஆராயத்தக்கது. மொழி அமைப்பில் வேற்றுமைகள் தோன்றி வளர்ந்ததன் அடிப்படையில் அவை வரிசைப்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் இலத்தீன் மொழியில் இதுபோல் வேற்றுமைப் பொருள் தோன்றி வளர்ந்ததன் அடிப்படையில் வரிசைப்படுத்தப்பட்டு எண்களால் அழைக்கப்படுகிறது என்றும் அ. காமாட்சிநாதன் கூறியுள்ளதும் இங்கே குறிப்பிடத் தக்கது. இதன் அடிப்படையில் விளி வேற்றுமையும் ஆறாம் வேற்றுமையும் பிற்காலத்தில் தோன்றியனவாகலாம் என்பர் அவர்.[224]

"திராவிட மொழி இலக்கண ஆசிரியர்கள் தங்கள் மொழி வேற்றுமைகளை வடமொழி வரிசையைப் பின்பற்றி அமைத்ததன் மூலம் தங்கள் மொழி இலக்கண அமைப்பிற்கு ஊறு விளைவித்துவிட்டனர்" என்று கால்டுவெல் கூறியுள்ளார்.[225] இந்தக் கருத்தினை வன்மையாக மறுத்துத் தமிழைப் பொறுத்தவரையில் தொல்காப்பியர் வேற்றுமை அமைப்பினை விளக்கியுள்ளது பொருத்தமானது என்று பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி தெளிவுறுத்தியுள்ளார்.[226]

வேற்றுமைக் கொள்கை

கருவிப் பொருள் கூறும் வேற்றுமையும், உடனிகழ்ச்சிப் பொருள் உணர்த்தும் வேற்றுமையும் சேர்த்து ஒரு வேற்றுமையாகக் (மூன்றாம்வேற்றுமை) கருதப்படுகிறது. வேற்றுமைப் பாகுபாட்டுக்குப் பொருள் அடிப்படையானால் இவ்விரண்டு பொருள் கூறும் வேற்றுமைகளையும் ஒரு வேற்றுமையாகக் கருதுதல் கூடாது. இதற்கு மாறாக அமைப்பு, பயன்பாடு ஆகியவை வேற்றுமைப் பாகுபாட்டுக்கு அடிப்படை எனில் கருவிப்பொருள் உணர்த்தும் ஆன்' என்ற உருபுடன், உடனிகழ்ச்சிப் பொருள் உணர்த்தும், ஒடு' உருபும் அடங்குவதாகக் கொள்ள வேண்டுவதில்லை. ஏனைய வேற்றுமைகள் கொண்டுள்ள தொடரியல் பண்புகள் இல்லாத விளியை வேற்றுமையாகக் கொண்டுள்ளதையும் நியாயப்படுத்த முடியாது. இக்காரணங்களால் வேற்றுமை பற்றிய கொள்கை

தெளிவாகக் காணப்படவில்லை என்று அ. காமாட்சிநாதன் கூறும் கருத்து ஆராயத்தக்கது. இதேபோன்று வேற்றுமைகளுக்குப் பெயரிடும் முறையிலும் ஒரே மாதிரியான முறை காணப்படவில்லை என்ற அவரது பின்வரும் கூற்றும் சிந்திக்கத் தக்கது. எழுவாய் வேற்றுமை என்னும் பெயர் (எழுவாய் — செயல் தோன்றும் இடம்) மொழிப் பொருளியல் (semantics) அடிப்படையிலும் பெயர் வேற்றுமை என்னும் பெயர் அமைப்புவகை அடிப்படையிலும் அமைந்துள்ளன. விளி வேற்றுமை அவ்வேற்றுமையின் பொருள் அடிப்படையில் அமைந்துள்ளது.[227]

வேற்றுமையின் பொருள்கள்

வேற்றுமையை உருபுகளின் பெயரால் தொல்காப்பியர் அழைக்கிறார். இருப்பினும் உருபுகளை விட வேற்றுமையின் பொருள்களுக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளார். சில வேற்றுமைகளில் (3, 6, 7ஆம் வேற்றுமை) அப்பொருள்களைப் பாகுபாடு செய்தும் கூறியுள்ளார். பிற்கால இலக்கண நூல்களில் பொருள் நிலையில் பார்க்கும் எண்ணம் குன்றிப் புறநிலையில் (structure) பார்க்கும் தன்மை வளர்ந்தது. அதனால் உருபுகள் ஒன்றுக்கும் மேல் வளர்ந்தோடு பொருள் நிலையும் சுருங்கியுள்ளது என்னும் கூற்றும் ஆராயத்தக்கது.[229]

எழுவாய் வேற்றுமை

இதனைப் பெயர் வேற்றுமை (தொல். 548), எழுவாய் வேற்றுமை (தொல். 549) என்னும் பெயர்களால் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். ஏனைய வேற்றுமைகளை இரண்டாகுவது, மூன்றாகுவது என அழைப்பதால் இதனை முதல் வேற்றுமை என்று கூறலும் அவர்க்கு உடன்பாடு எனலாம். எழுவாய் வேற்றுமைக்கு உருபு இல்லை. இதனை "எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே" (தொல். 549) என்பதால் குறிப்பிட்டுள்ளார். "பெயர் தோன்றிய துணையாய் நிற்கும் நிலைமையாவது உருபும் விளியும் ஏலாது பிறிதொன்றனோடு தொகாது நிற்கும் நிலைமை" என்று சேனாவரையர் விளக்கம் தந்துள்ளார். தெய்வச்சிலையார் இதனைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

> ஆயன் சாத்தன் வந்தான் என்றவழி ஆயன் என்பது சாத்தற்கு அடையாகி நிற்றலானும், வருதல் தொழில் சாத்தனோடு முடிதலானும், இருபெயரும் ஒரு பொருட்கண் வருதலின் இரண்டினையும் வேற்றுமை எனப்படாது ஆதலானும் இறுதி நின்றதே வேற்றுமை எனப்படுவது

பெயர் நின்று பயனிலை கொள்ளும்போதே அது வேற்றுமை எனப்படும் என்பது தெய்வச்சிலையாரின் விளக்கம். சேனாவரையரின் கருத்து இதற்கு மாறானது. பயனிலை கொள்ளாவிட்டாலும் அது வேற்றுமையே என்பது தெ. பொ. மீனாட்சி

சுந்தரன் கருத்து. பெயர் வேற்றுமை பிற வேற்றுமைகளினின்றும் அதன் பொருளால் வேறுபடுகிறது என்பர் அவர்.[228] பொருண்மை சுட்டல், பயனிலை கோடல், உருபேற்றல் காலந் தோன்றாமை ஆகியன பெயரின் இயல்பு. ஆதலால் எழுவாயைப் பெயரின் வேறு பட்டதொரு வேற்றுமையாகக் கருதுதல் பொருந்தாது என்பது ச. சோமசுந்தர பாரதியார் கருத்து.[230] வேற்றுமை என்பது பெயருக்கும் வினைக்கும் உள்ள தொடரியல் உறவுகளைக் குறிப்பது. பெயர் + பயனிலை என்ற தொடரியல் உறவு எழுவாய் வேற்றுமையில் காணப்படுவதால் அதனை வேற்றுமை அன்று எனல் பொருந்தாது.

"பொருண்மை சுட்டல்" முதலிய அறுவகைப்பட்ட பொருள்கள் (தொல். 550) எழுவாய் வேற்றுமையின் பயனிலைகளாக வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். தமிழ் வாக்கிய அமைப்பு 1. பெயர் + பெயர், 2. பெயர் + வினை ஆகிய இருவகை அடிப்படையிலானது என்பர்.[231] பெயர் + பெயர் என்னும் அமைப்பு 'பெயர்கொளவருதல்' என்பதாலும், பெயர் + வினை என்னும் அமைப்பு ஏனைய ஐந்து பொருள்களாலும் கூறப்பட்டுள்ளன. இவ்வைந்தும் வினையிய லுள்ளும் கூறப்பட்டுள்ளன இங்கே வினை எனப் பொதுவாகக் கூறாது ஐந்தாக விரித்துக் கூறிய காரணம் ஆராயத்தக்கது என்பர் செ. வை. சண்முகம்.[232]

இரண்டாம் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமையின் முடிப்புச் சொற்களைப் பொதுமைப் படுத்தி வினை, வினைக்குறிப்பு ஆகிய இரண்டின் அடிப்படையாக வரும் (தொல். 555) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அடுத்த நூற்பாவில் (தொல். 559) அதன் பொருள்களைக் கூறியுள்ளார். இவ் வேற்றுமை செயப்படு பொருளைக் கொண்டு முடியும் என்பது உரை யாசிரியர்கள் கருத்து. வினைக் குறிப்புக்குக் 'குழையை உடையன்' என்று தெய்வச்சிலையார் தவிர ஏனைய உரையாசிரியர்கள் எடுத்துக் காட்டு தந்துள்ளனர். ஆனால் இவ்வேற்றுமையின் முடிப்புச் சொற் களாகத் தொல்காப்பியர் கொடுத்துள்ளனவற்றில் குறிப்புவினை ஒன்றுகூட இல்லை.[233] இதன் காரணத்தைத் தெய்வச்சிலையார் விளக்கியுள்ளார்.

> குழையை உடையன், வலியை உடையன், கல்வியை உடையன், காவலை உடையன் எனவும் ஆறாம் வேற்றுமைப் பொருள் மொழிமாற்றாகி வருவனவும் கொள்க (தொல். 556)

உடைமைப் பொருள் ஆறாம் வேற்றுமைக்கு உரியது. அது இரண்டாம் வேற்றுமையில் மொழிமாற்றாகவே வந்துள்ளது. அதனால் வினைக்குறிப்புப் பொருண்மையை விதந்து ஓதவில்லை என்பது அவரது விளக்கம். இவ்விளக்கம் பற்றிச் செ. வை, சண்முகத்தின் கூற்று இங்கே குறிப்பிடத்தக்கது. "இன்று பரக்கப் பேசப்படும் மொழி மாற்றிலக்கணத்தின் அடிப்படையில் தெய்வச் சிலையார் நினைத்துப் பார்த்திருப்பதும் அதனைக் குறிக்க 'மொழி

மாற்று' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதும் அவரின் தனிச் சிறப்பாகும். அண்மைக்கால மொழியியல் வளர்ச்சியான மொழி மாற்றிலக்கணத்தின் அடிப்படையில் தெய்வச்சிலையார் சிந்தித் துள்ளதும் அதனைக் குறிக்க 'மொழிமாற்று' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதும் அவரின் தனிச்சிறப்பாகும்.[334]

மூன்றாம் வேற்றுமை

மூன்றாம் வேற்றுமைக்கு 'ஒடு' உருபினைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். 'ஆன்' உருபை மூன்றாம் வேற்றுமைக்குரியது என்று அவர் கூறவில்லை என்றாலும் வேற்றுமை மயங்கியலில் வரிசை முறையில் மயக்கம் கூறப்படுவதால் அவ்வுருபை மூன்றாம் வேற்றுமைக்குரியதாகக் கொள்ளல் தொல்காப்பியருக்கு உடன்பாடு என்பர்.[335] 'ஆன்' உருபு 'ஆல்' ஆகத் திரிந்தது என்பது நச்சினார்க் கினியர் கருத்து. 'ஆல்' பிறழ் பிரிப்பினால் வந்தது என்றும் கருதப் படுகிறது.

தொல்காப்பியர் கருத்துப்படி வினைமுதல், கருவி ஆகிய பொருள்கள் மூன்றாம் வேற்றுமைக்கு உரியன. பிற்கால இலக்கணங் களில் உடனிகழ்வும் மூன்றாம் வேற்றுமையின் பொருளாகக் கொள்ளப்பட்டது. அதனோடு இயைந்த ஒரு வினைக் கிளவி (தொல். 558) என்னும் தொடருக்கு உடனிகழ்ச்சிப் பொருளையே எடுத்துக்காட்டுகளாக உரையாசிரியர்கள் தந்துள்ளனர். எனவே 'ஒடு' உருபு வினை முதல், கருவி, உடனிகழ்வு ஆகிய பொருள்களை மூன்றாம் வேற்றுமைக்குரிய பொருள்களில் வழங்கியுள்ளது என்பது தெளிவு. கருவி வேற்றுமை நான்கு வேற்றுமைகளாகப் பிரிக்கக் கூடிய அளவுக்குப் பொருள் வளர்ச்சி பெற்றுவிட்டது.[336] பிற் காலத்தில் 'ஆன்' உருபும் அதன் மாற்று வடிவாகிய 'ஆல்' உருபும் வினைமுதல், கருவி ஆகிய பொருள்களில் மட்டும் வழங்க, 'ஒடு' உருபு உடனிகழ்வுப் பொருளில் வழங்கத் தொடங்கியது. மொழி வளர்ச்சியின் காரணமாக 'ஒடு' உருபு இன்று வேறுபல பொருள் களையும் பெற்று சிக்கல் நிறைந்ததாகவும் ஆய்வுக்குரியதாகவும் அமைந்து விட்டதைச் ச. அகத்தியலிங்கம் எடுத்துக்காட்டி விளக்கி யுள்ளார்.[337] உரையாசிரியர்கள் தரும் எடுத்துக்காட்டுகளிலும் உடனிகழ்வுப் பொருண்மையில் அடக்க இயலாத பொருள்கள் காணப்படுகின்றன.

தொல்காப்பியர் உடனிகழ்வு வினையைக் குறிக்கும்போது 'ஒடு' உருபு உயர்வான பெயரின்கண் சேர்ந்து வரும் (தொல். 575) என்பர். 'ஒடு' உருபு இழிந்த பொருளோடு வந்தது எனின் "அந்நிலைக்கண் அது சிறப்புடைத்து" என இளம்பூரணரும், "யாதானும் ஓராற்றின் அதற்கு உயர்வு உண்டாயின் அல்லது அவ்வாறு கூறார்" என்று சேனாவரையரும் ஒடு உருபு சிறப்பின்கண் வரும் என உரைத் துள்ளனர். சிறப்பில்லாத பெயர் மேல் 'ஒடு' உருபு சேரும் என்பது தெய்வச்சிலையார் கருத்து. குறிப்பிட்ட செயலைப் பொறுத்தவரை

சிறப்பானவர் யாரோ அவரையே உயர்வு என்ற சொல் குறிப்பதாகக் கருதலாம்[238] என்று ச. அகத்தியலிங்கம் கூறுவது 'அந்நிலைக்கண் அது சிறப்புடைத்து' என்று இளம்பூரணர் கூறுவதோடு ஒத்துக் காணப்படுகிறது.

தொல்காப்பியர் மூன்றாம் வேற்றுமைப் பொருண்மைக்குக் கூறும் வாய்பாடுகள் 'இன்னான் ஏது' (தொல். 558) என்னும் தொடரும் ஒன்று. இன்னான் என்பது இன்ன இயல்பினன் என்றும் 'ஏது, என்பது காரணப் பொருண்மை என்றும் இளம்பூரணர் கூறியுள்ளார். எனவே மூன்றாம் வேற்றுமைக்குக் காரணப் பொருண்மையும் உண்டு என்று கொள்ளலாம்.

நான்காம் வேற்றுமை

நான்காவது ஆகிய கு வேற்றுமை எப்பொருளாயினும் கொள்ளும் (தொல். 559) என்பர் தொல்காப்பியர். இதற்கு "ஈவதோர் பொருளை ஏற்க நிற்கும்" என்று இளம்பூரணர் பொருள் கொண்டுள்ளார். "யாதானும் ஒரு பொருளாயினும் அதனை ஏற்று நிற்கும் என்பது சேனாவரையர் கருத்து. இது கொடைப்பொருளை உணர்த்துவதாக எண்ணி அதன் அடிப்படையில் உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகளைத் தந்துள்ளனர்.

நான்காம் வேற்றுமையின் முடிப்புச் சொற்களைப் பற்றிய அடுத்த நூற்பாவில் (தொல். 560) கொடைப்பொருள் தரும் சொற்கள் கூறப்படவில்லை. "அதற்கு வினையுடைமை முதலாகக் கூறப் பட்டன எல்லாம் முன் கூறிய கொடைப் பொருளின் பாகுபாடு அல்ல" என்று கல்லாடர் கூறுவது பொருத்தமே. வேற்றுமைகளுள் நான்காம் வேற்றுமையே மிகுதியும் பயின்று வருகிறது. ஏனைய வேற்றுமைகளின் பொருள்களில் அதிகமாகப் பயின்று வரும் (தொல். 594) வேற்றுமையும் இதுவே. "எப்பொருளாயினும் கொள்ளும் அதுவே" (தொல். 559) என்னும் வரி இந்தத் தன்மையைக் குறிப்ப தாகக் கொள்ளலாமா என்னும் கருத்து[239] ஆராயத் தக்கது. சேனா வரையர் "யாதானும் ஒரு பொருளாயினும்" என்று உரைப்பது இவ் வேற்றுமை பல பொருள்களில் வரும் என்று உணர்ந்து உரைத்துள்ள தாகக் கருதப்படுகிறது.[240]

'அதற்கு வினையுடைமை' (தொல். 560) என்பதற்கு 'உபகாரம் உடைமை' என்று சேனாவரையரும், ஒன்றற்கு ஒன்று உடம்படுதல் என்று நச்சினார்க்கினியரும் பொருள் கொண்டுள்ளனர். இருவரும் 'கரும்பிற்கு வேலி' என்ற எடுத்துக்காட்டைக் கொடுத்துள்ளனர். இதனைப் 'பொருட்டு' என்னும் பொருளில் செ. வை. சண்முகமும், 'எல்லை' என்னும் பொருளில் மோ. இசுரயேலும் அடக்குகின்றனர். கரும்பிற்கு வேலி என்பது 'எல்லைப் பொருள் உணர்த்துகிறது என்பதைவிட 'பொருட்டு' என்னும் பொருண்மையே பொருத்த மானதாகத் தோன்றுகிறது 'பொருட்டு' என்பதைத் தனி வேற்றுமை யாகக் கொள்ள வேண்டும் என்று மொழியியல் ஆய்வாளர்கள் கருது

கின்றனர். நான்காம் வேற்றுமை நோக்கம் (purpose) திசை (direction). எல்லை (limit), உறவு (relation) ஆகிய பொருள்களில் வழங்குவதாகத் தொல்காப்பியத்திலிருந்து அறிய முடிகின்றது என்பது மோ. இசுரயேல் கருத்து.[241] நான்காம் வேற்றுமையின் பொருள்களாகத் தொல்காப்பியர் கூறுவன பற்றி மேலும் ஆராய்ச்சி தேவைப் படுகிறது.

ஐந்தாம் வேற்றுமை

'இன்' என்னும் உருபினைக் கொண்ட ஐந்தாம் வேற்றுமை, இப்பொருளின் இத்தன்மைத்து இப்பொருள் (தொல். 561) என்னும் பொருளில் வரும் என்று அதன் பொதுத்தன்மையைத் தொல்காப்பியர் கூறியுள்ளார்.

பொரூஉப்பொருள், நீக்கம், எல்லை, ஏது ஆகிய நான்கு பொருள்கள் ஐந்தாம் வேற்றுமைக்கு உண்டு என்று தெய்வச் சிலையார் தவிர ஏனைய உரையாசிரியர்கள் கூறியுள்ளனர். தெய்வச் சிலையார் நீக்கம், பொரு, ஏது ஆகிய மூன்று பொருள்களையே கூறி யுள்ளார்.

ஐந்தாம் வேற்றுமையின் உருபும் பொதுப்பொருளும் கூறும் நூற்பாவில் (தொல். 561) ஏதுப்பொருள் (ஏதுப் பொருள் ஞாபகம், காரகம் என இரண்டு வகைப்படும். அவற்றுள் ஞாபக ஏது மட்டும்) கூறப்பட்டுள்ளது என்று சேனாவரையரும் உரைத்துள்ளனர். பொரூஉப் பொருள் கூறப்பட்டுள்ளது என்பது இளம்பூரணர், கல்லாடர் ஆகியோர் கருத்து. நீக்கப்பொருளே அந்நூற்பாவில் கூறப்பட்டுள்ளது என்பது தெய்வச்சிலையார் கருத்து. 'இதனின் இற்று இப்பொருள்' என்று தொல்காப்பியர் கூறுவது பொருப் பொருளைக் குறிப்பதாகக் கொள்ளுதல் பொருத்தம். அடுத்த நூற்பாவில் இவ்வேற்றுமையின் பொருள்களைப் பாகுபடுத்தி உரைத்துள்ளார். அப்பொருள்களுள் நீக்கம், அச்சம் ஆகியனவும் உள்ளன.

ஆறாம் வேற்றுமை

ஆறாம் வேற்றுமையின் உருபு 'அது' ஆகும். 'அது' கிழமைப் பொருள் உடையது. அது தற்கிழமை, பிறிதின் கிழமை என இரு வகைப்படும் (தொல். 563) எனத் தொல்காப்பியர், கூறியுள்ளார். இவ்வேற்றுமைக்கு 'அ' உருபும் உண்டு என உரையாசிரியர்கள் கூறியுள்ளனர், ஒருமைக்கு 'அது'வும் பன்மைக்கு 'அ'வும் உருபுகள் என்பது அவர்களின் கருத்து. ஒருமைக்கு 'ஆது' என்றும் உருபும் உண்டு என்பர் நச்சினார்க்கினியர். 'உடைய' என்னும் சொல்லும் இக்காலத்தில் ஆறாம் வேற்றுமைப் பொருளில் பயன்படுகின்றது.[242]

வேற்றுமைகள் பெயருக்கும் வினைக்கும் உள்ள தொடரியல் உறவினைக் குறிப்பன. ஆறாம் வேற்றுமை தவிர ஏனைய வேற்றுமைகள் வினையைக் கொண்டு முடிவன. ஆறாம் வேற்றுமை

மட்டும் பெயரைக் கொண்டு முடிகிறது. ஆறாம் வேற்றுமைத் தொடர் ஒரு வாக்கியத்தின் பெயரெச்சத் தொடராக இருக்கலாம் என்பர் செ. வை. சண்முகம். இதற்குச் சான்றாக உடைமை என்னும் குறிப்பு வினையை ஆறாம் வேற்றுமைப் பொருளில் பயன்படுத்துவதைக் ['பரியுடை வயங்குதாள் ...' (நற். 249); 'நின்னுடைய வாழ்க்கை' (பதிற். 37)] காட்டியுள்ளார்.[243] ஆறாம் வேற்றுமையின் உருபுகளாகக் கருதப்படுபவை அனைத்தும் வேறு சில வேற்றுமை உறவு நிலையில் வரும் தொடர்களின் பயனிலைகளது எச்சங்கள். ஆறாம் வேற்றுமைத் தொடர்கள் பெயரெச்சத் தொடர்கள். அதனால் தமிழில் ஆறாம் வேற்றுமை ஒன்று இல்லை'' என்னும் கூற்றும் இங்கு நினையத்தக்கது.[244]

ஏழாம் வேற்றுமை

'கண்' என்னும் பெயரையுடைய ஏழாம் வேற்றுமை வினை செய்யும் இடம், நிலம், காலம் ஆகிய பொருள்களில் வரும் (தொல். 565) என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். அடுத்த நூற்பாவில் (தொல். 566) பத்தொன்பது சொற்களைக் கூறி அவையும் ஏழாம் வேற்றுமைப் பொருளுடையன என்று குறிப்பிட்டுள்ளார். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் இவையும் உருபுகளே என்பர். சேனாவரையர் இவை அனைத்தும் ஏழாம் வேற்றுமையின் பொருள்களே என்னும் கருத்தினர். இந்தச் சொற்கள் பெயராகவும் உருபாகவும் செயல்படுகின்றன.

> இவையெல்லாம் பெயரைச் சார்ந்து தனித்தனி வரில் பெயராகி உருபேற்கும். பெயரைச் சாராது இடமும் காலமும் ஆகிய பொதுமை உணர வரின் உருபு மாத்திரமாகி நிற்கும். இடம் வேறுபாடு உணர வரின் உருபு புலப்படாது பொருள் உணர வரும் (தொல். 566)

என்று தெய்வச்சிலையார் இதனை விளக்கியுள்ளார். இந்தச் சொற்களுள் பல தனித்தியங்கும் சொற்கள்; இவை ஏழாம் வேற்றுமைப் பொருளில் வருகின்றன. அங்ஙனம் வேற்றுமைப் பொருளில் வரும் போது அவை உருபுகளாகவும் செயல்படுகின்றன[245] என்று மோ. இசுரயேல் விளக்கியுள்ளார்.

வினைசெய் இடம், நிலம், காலம் ஆகிய மூன்று பொருள்களில் வினைசெய் இடம் எனத் தனிவகை தேவை இல்லை என்பது தெய்வச்சிலையார் கருத்து. ஆனால் அவ்விருவகைப் பெயரி லிருந்தும் வினைசெய் இடம் சில சிறப்புப் பண்புகளைக் கொண்டுள்ளதால் தனி வகையாகக் கொள்ளலே சிறப்பு என்பர்.

> காலத்தைக் குறிக்கும் சொற்களை, இடப்பெயர் ஏற்காமலிருக்க வினைசெய் இடப்பெயர் ஏற்பதைக் காணலாம். விழவின் போது வந்தான், திங்களின்போது வந்தான் என்பன 'போது' என்பதை ஏற்றுக் கொள்ளப் பல்கலைக்கழகத்தின் போது

> வந்தான் என்பது ஏற்றுக்கொள்ளாது. எனவே, வினை செய்யிடப் பெயர்கள் கால, இடப் பெயர்களினின்றும் மாறுபடுவதால் தனிவகையாகக் கொள்ள வேண்டும்[246]

என்று செ. வை. சண்முகம் விளக்குவது ஏற்கத்தக்கது.

வேற்றுமை மயங்கியல்

வேற்றுமை உருபுகள், வேற்றுமைப் பொருள்கள் ஆகியன மயங்கி வருவது பற்றியும், வேற்றுமை இலக்கணத்தோடு தொடர்புடைய வேறுசில (வேற்றுமை இலக்கணத்திற் பிறழ்ந்து வருவன) இலக்கணக் கூறுகளும் வேற்றுமை மயங்கியலுள் பேசப்பட்டுள்ளன.

வேற்றுமை மயக்கத்தினை உருபு மயக்கம், பொருள் மயக்கம் என இருவகையாக உரையாசிரியர்கள் பகுத்து உரைப்பர். வேற்றுமையியலில் ஒவ்வொரு வேற்றுமைக்கும் கூறப்பட்ட பொருள்கள் தத்தமக்குரிய வேற்றுமைப் பொருளைவிட்டு நீங்காது பிறிதொரு வேற்றுமையின் பொருளினிடத்துச் சென்று மயங்குதல் பொருள் மயக்கம் எனப்படும். ஒரு வேற்றுமைக்குரிய உருபு தனக்குரிய வேற்றுமைப் பொருளை விட்டுப் பிறிதொரு பொருளில் சென்று மயங்குதல் உருபு மயக்கம் எனப்படும். இதனைச் சேனாவரையர் ''பொருள் மயக்கமாவது தன் பொருளில் தீராது பிறிதொன்றன் பொருட்கண் சேரல்; உருபு மயக்கமாவது தன்பொருளில் தீர்ந்து சேரல்'' (தொல். 568) என்று கூறுவர்.

வேற்றுமை மயங்கியலில் யாதனுருபிற் கூறிற்று ஆயினும்'' என்னும் நூற்பாவில் (தொல். 590) உருபு மயக்கமும் ஏனைய நூற்பாக்களில் பொருள் மயக்கமும் கூறப்பட்டுள்ளன என்பது சேனாவரையர் கருத்து. 'யாதன் உருபு' என்ற தொடருக்கு 'யாதானும் ஓர் வேற்றுமை உருபு என்று சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பொருள் கொண்டுள்ளனர். 'யாதானும் ஓர் உருபு' என்று இளம்பூரணர், கல்லாடர் ஆகியோர் கூறியுள்ளனர். அவர்கள் தரும் எடுத்துக்காட்டுகளிலிருந்து அவர்களும் வேற்றுமை உருபினையே கொள்கின்றனர் எனத் தெரிகிறது. ''யாதனுருபு என்பது வேற்றுமையல்லாத உருபு'' என்பது தெய்வச்சிலையார் கருத்து. எந்த ஒரு உருபாயினும் (வேற்றுமை உருபு, பின்னொட்டு, வேற்றுமை அல்லாத உருபு) இருக்கலாம் என்பது ஓர் ஆய்வாளரின்[247] கருத்து. யாதனுருபு என்பதன் சரியான பொருள் ஆராயத்தக்கது.

வேற்றுமையியலில் வேற்றுமைகளின் புதைநிலை வடிவம் அல்லது அடிப்படை வடிவமும் (deep structure), வேற்றுமை மயங்கியலில் வேற்றுமை புறநிலையில் திரிந்தும் மாறியும் (அதாவது மயங்கி) வருகிற புறநிலை வடிவமும் (surface structure) பேசப்படுகின்றன என்பர் செ. வை. சண்முகம். வேற்றுமையியலில் கூறப்படும் வேற்றுமை மயக்கங்கள் உறழ்ச்சி (free variation), சமனாதல் (neutralisation) பிளவுபடல் (diversification) என மூன்று வகைப்படும் என்று மொழியியல் அடிப்படையில் அவர் விளக்கியுள்ளார்.[248]

தடுமாறு தொழிற்பெயர்

வேற்றுமைத் தொடர்கள் உருபில்லாமலும் வரும். அங்ஙனம் வரும்போது சில தொடர்களில் பொருள்மயக்கம் ஏற்படும் என்பதைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்று தடுமாறு தொழிற் பெயர் (தொல். 579) ஆகும். இது வேற்றுமைத் தொடரின் புதை நிலை அமைப்பு அடிப்படையில் உண்டாவது[249] எனத் தொடரியல் முறையிலும், அமைப்பு அடிப்படையிலான பொருள்மயக்கம் (Structural ambiguity) என்று மொழிப் பொருளியல் நோக்கிலும்[250] விளக்குவர்.

'புலிகொல் யானை' என்ற தொடரைத் தடுமாறு தொழிற் பெயர்க்கு உதாரணமாக உரையாசிரியர்கள் காட்டியுள்ளனர். கொல்லுதலாகிய தொழில் புலி, யானை இரண்டுக்குமுரியதாகையால் இத்தொடரில் 'கொல்' என்பது தடுமாறு தொழிற்பெயராகும். புலியைக் கொன்ற யானை என்றும் புலியால் கொல்லப்பட்ட யானை என்றும் இத்தொடருக்குப் பொருள் கொள்ளலாம். மாற்றிலக்கண முறையில் இதனை மொழியியலார் விளக்குவர். புலியால் கொன்ற என்பதும் புலியால் கொல்லப்பட்ட என்பதும் பெயரெச்சத் தொடர்கள் ஆகும். கொல் என்னும் வினையால் தடுமாற்றம் நிகழ் கிறது. 'கொல்லப்பட்ட' என்று இருந்தால் பொருள்மயக்கம் ஏற்படாது. கொல் என்பது செய்வினையாகவும் செயப்பாட்டு வினையாகவும் பொருள்கொள்ள இடம் தருவதால் இது வரும் இடத் திற்கு ஏற்ப தடுமாறு தொழிற்பெயர் எனப்பட்டது. இத்தொடர் ஒரு வாக்கியத்தின் உறுப்பாக வருவதால் வாக்கியத்தின் அடுத்த உறுப்பைக் கொண்டு இதன் பொருளை அறியலாம். அடுத்துவரும் நூற்பாக்களில் (தொல். 579, 580) தொல்காப்பியர் இதனைக் கூறி யுள்ளார்.

புலிகொல் யானை	ஓடுகின்றது
1	2

இங்கே முதல் உறுப்பு யானை என்னும் பெயர்ச்சொல்லோடு சேர்ந்து எழுவாயாக வருதலின் யானை புலியைக் கொன்றது என்பது தெளிவு.

புலிகொல் யானைக்கோடு	வந்தது
1	2

என்ற தொடரில் கோடு என்னும் பெயர் எழுவாயாக அமைகின்றது. ஆகவே கொல்லப்பட்டது யானை என்னும் பொருள் விளங்கு கிறது.[251]

தொழில் முதல் நிலைகள்

வேற்றுமை மயங்கியலில் 'வினையே செய்வது' எனத் தொடங்கும் நூற்பா (தொல். 596)வில் வினை, வினைமுதல், செயப்

படு பொருள், நிலம், காலம், கருவி, இன்னதற்கு, இதுபயன் ஆகிய எட்டுப் பொருள்கள் தொழில் முதல் நிலைகள் எனக் கூறப் பட்டுள்ளன. இந்த நூற்பா வினைச்சொல் இலக்கணம் கூறுவது என்பர் இளம்பூரணர். சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் இது தொழில் முதனிலை அல்லது தொழிலது காரணம் கூறுகின்றது என்பர். இதனைக் 'காரகம்' என்றும் அவர்கள் கூறியுள்ளனர். காரகம் என்ற சொல் பெயர்க்கும் வினைக்கும் உள்ள உறவு நிலையைக் குறிக்கும். இந்த நூற்பாவில் கூறப்படுவன வேற்றுமைப் பொருள் தோன்றும் இடங்கள் என நச்சினார்க்கினியரும் வினைச் சொல் பிறக்கும் இடங்கள் எனக் கல்லாடரும் குறிப்பர்.

"வினையே செய்வது" (தொல். 596) என்னும் நூற்பாவில் தொல் காப்பியர் முற்றுவினைக்கும் அதற்கு முன் நிற்கும் பெயர்க்கும் உள்ள உறவு நிலைகளைப் பற்றித்தான் பேசுகிறாரே தவிர வினை நிகழ்ச்சிக்குரிய காரணங்களைப் பற்றிப் பேசவில்லை என்று பொன். கோதண்டராமன் தெளிவுறுத்தியுள்ளார்.[252] இந்த எட்டுப் பொருள்களும் வடமொழி இலக்கணத்தின் காரகத்தோடும், வேற்றுமை இலக்கணிகளின் (case grammarians) புதைநிலை வேற்றுமைகளோடும் (deep cases) ஒப்புமை உடையன என்பதைக் க. பாலசுப்பிரமணியன் விளக்கியுள்ளார்.[253]

ஆகுபெயர்

வேற்றுமை மயங்கியலில் "முதலிற் கூறும்" எனத் தொடங்கும் நூற்பா (தொல். 598) விலும் அதனைத் தொடர்ந்து வரும் மூன்று நூற்பாக்களிலும் (தொல். 599, 600, 601) ஆகுபெயர் பற்றித் தொல் காப்பியர் கூறியுள்ளார்.

ஆகுபெயர் பற்றிக் கூறும் நூற்பா (தொல். 598) எழுவாய் வேற்றுமை மயக்கம் பற்றியது என இளம்பூரணர் கருதுவதாகச் சேனாவரையர் உரை வாயிலாகத் தெரிகிறது (தொல். 598). ஆனால் சேனாவரையர் குறிப்பிடும் அந்த உரைப்பகுதி இளம்பூரணர் உரையில் காணப்படவில்லை. சேனாவரையர் ஆகுபெயர் என்பது வேற்றுமை மயக்கமன்று என்னும் கருத்தினர். பின்வரும் அவரது உரைப்பகுதி இதனை விளக்கும்.

> ஆகுபெயர் எழுவாய் வேற்றுமை மயக்கமாதலான் ஈண்டுக் கூறினார் என்றாரால் உரையாசிரியர் எனின்; — ஆகுபெயர் ஏனை வேற்றுமையும் ஏற்று நிற்றலானும் எழுவாய் வேற்றுமை யாய் நின்றவழியும் அது பிறிதோர் வேற்றுமைப் பொருட்கண் சென்று மயங்காமையின் வேற்றுமை மயக்கமெனப் படாமை யாலும் அது போலியுரை என்க
> (தொல். 598)

தெய்வச்சிலையார் ஆகுபெயர் வேற்றுமை மயக்கம் பற்றியது எனக் குறிப்பிட்டுள்ளார். வேற்றுமை மயங்கியலில் கூறப்படுவ தாலும், பெயர்ப் பொருளின் வேறுபட்ட பொருளைக் குறிப்பதாலும்

இதனை வேற்றுமை மயக்கம் என அவர்கள் கருதியுள்ளார்கள் எனலாம்.

'ஒன்றன் பெயர் ஒன்றற் காதல்' ஆகுபெயரின் இலக்கணம் என்று இளம்பூரணரும், சேனாவரையரும் கூறியுள்ளனர் தெய்வச் சிலையார், "யாதானும் ஓர் பொருத்தத்தினால் ஒன்றன் பெயர் ஒன்றதாகி வருவது" ஆகுபெயர் என்று உரைத்துள்ளார். தெய்வச் சிலையாரின் உரை இயற் பெயருக்கும் ஆகுபெயருக்கும் உள்ள தொடர்பினைக் குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

இயற்பெயருக்கும் ஆகுபெயருக்கும் உள்ள தொடர்புகளாக 1. முதல் — சினை, 2. சினை — முதல், 3. பொருள் — பொருள் பிறந்த இடம், 4. பொருள் — பொருளின் பண்பு, 5. பொருள் — பொருளை ஆக்கிய பொருள், 6. பொருள் — பொருளை ஆக்கி அமைத்த வினைமுதல் ஆகிய ஆறுவகைகளைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். இவற்றோடு இருபெயர்கள் சேர்ந்து வரும் இரு பெயரொட்டும் ஆகுபெயராக வரும் என்று குறிப்பிட்டுள்ளார். இரு பெயரொட்டு அல்லாத ஏனையவை ஒரு பெயரே ஆகுபெயராகும் தன்மையுடையன.

மேற்கூறிய தொடர்புகளால் ஆகுபெயர்கள் அமைதலோடு அன்றி, இயற்பெயருக்கும் ஆகுபெயர்க்கும் உள்ள தொடர்பு அறியப்படாத முறையிலும் ஆகுபெயர்கள் அமைதல் உண்டு. அவற்றை "ஒப்பில் வழியால் பிறிதுபொருள் சுட்டல்" என்ற தொடரால் (தொல். 599) தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகுபெயருள் ஒருவகையாகத் தொல்காப்பியர் கூறிய இரு பெயரொட்டும், தொகைகளுள் ஒன்றாகிய அன்மொழித்தொகையும் சில ஒத்த பண்புகளைக் கொண்டுள்ளன. அதனால் இரு பெயரொட்டு ஆகுபெயரையும் அன்மொழித்தொகையையும் விளக்கு வதிலும், வேறுபடுத்தி அறிந்து கொள்வதிலும் கருத்து வேறுபாடுகள் தோன்றின. நன்னூலார் இருபெயரொட்டு என்பதை ஆகுபெயருள் ஒருவகையாகச் சேர்க்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இந்தக் கருத்து வேறுபாடுகள் இலக்கண உலகில் ஆகுபெயர் அன்மொழித்தொகை பற்றிய நீண்டதோர் ஆராய்ச்சிக்கு வித்திட்டன.

இருபெயரொட்டு

இளம்பூரணர் இரண்டு பொருள் ஒட்டிநின்று பிறிதுபொருள் விளங்குவது இருபெயரொட்டு என்று கூறி, 'பொற்றொடி' என்னும் எடுத்துக்காட்டினைத் தந்துள்ளார். "அது சொல்லப் பொற்றொடி தொட்டாளை விளக்கும்" (தொல். 598) என்றும் தொடர்ந்து கூறி யுள்ளார். சேனாவரையரும் இருபெயரொட்டுக்கு, இளம்பூரணர் கூறிய எடுத்துக் காட்டினையே கூறியுள்ளார். இளம்பூரணர் அது பிறிதொருபொருள் விளக்கும் என்றார். சேனாவரையரோ அன்மொழிப்பொருள்மேல் வரும் என்று கூறியுள்ளார். மேலும்

இருபெயரொட்டாய் வரும் ஆகுபெயரும் அன்மொழித்தொகையும் ஒன்றே; அது தொகையிலக்கணமாதல் பற்றி எச்சவியலிலும், ஆகு பெயராதல் பற்றி வேற்றுமை மயங்கியலிலும் கூறப்பட்டுள்ளது (தொல். 598) என்று கூறியுள்ளார்.

"பொற்றொடி என்பது அன்மொழி. ஆகுபெயர் அன்மை உணர்க" என்பது நச்சினார்க்கினியர் உரை. இதனால் ஆகுபெயர் என்பதும் அன்மொழித்தொகை என்பதும் வேறு என்பது நச்சினார்க் கினியரின் கருத்து என அறியலாம். மேலும் இருபெயரொட்டு என்பதற்கு உரையாக "அன்மொழிப் பொருள் மேல் நில்லாத இரு பெயரொட்டும்" என்றும் அவர் உரைத்துள்ளார்.

தெய்வச்சிலையார் இருபெயரொட்டும் ஆகுபெயரும் வேறு என்று கூறி அவற்றின் வேறுபாட்டினை எடுத்துக்காட்ட முனைந் துள்ளார்.

> இருபெயரொட்டு என்பது இரண்டு பெயர் தொக்கு ஒரு சொல் நீர்மைப்பட்டு மற்றொரு பொருட்குப் பெயராகி வருவது. அது துடியிடை என்பது. துடிபோன்ற இடையினை உடையாளைத் துடியிடை என்பவாகலின் ஆகுபெயராயிற்று. இஃது உவமத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை அன்றோ எனின் ஆகுபெயராவது ஒட்டுப்பட்ட பொருளோடு ஒன்றுபட்டு வரும். அன்மொழித்தொகையாவது அப்பொருளின் வேறுபட்டு வரும். அன்னதாதல் அன்மொழி என்றதனாலும் விளங்கும் (தொல். 598)

என்பது தெய்வச்சிலையார் தரும் விளக்கம். இங்ஙனம் ஒட்டுப் பட்ட பொருளோடு ஒன்றுபட்டு வருதல், வேறுபட்டு வருதல் ஆகியன பற்றி அவர் எடுத்துக்காட்டு தந்து விளக்கவில்லை.

கல்லாடர் இருபெயரொட்டும் அன்மொழித்தொகையும் ஓசை யால் வேறுபடுகின்றன என்னும் கருத்தினர். இருபெயரொட்டுக்குப் பொற்றொடி என்னும் எடுத்துக்காட்டினைத் தந்து, "இஃது அன் மொழித்தொகை அன்றோ எனின் படுத்தலோசைப்பட்ட வழி அன் மொழித்தொகையாம்; எடுத்தலோசைப்பட்ட வழி ஆகுபெயராகும்" என்று கூறியுள்ளார்.

சிவஞான முனிவர் இருபெயரொட்டாகு பெயருக்கும் அன் மொழித் தொகைக்கும் உள்ள வேறுபாட்டினைப் புலப்படுத்தியுள்ள முறை வருமாறு,

> இருபெயரொட்டாகுபெயர் இருமொழிக்கண் வந்ததன்றோ எனின்: அன்று என்னை? அகரக் கிளவி, அதுவாகு கிளவி, மக்கட்சுட்டு என்னும் இருபெயரொட்டாகு பெயருள் வகரமும் அதுவாதலும் மக்களுமாகிய அடைமொழிகள் கிளவி, சுட்டு என்னும் இயற்பெயர்ப் பொருளை விசேடித்து நில்லாது

> எழுத்தும் சொற்பொருளும் பொருளுமாகிய ஆகுபெயர்ப் பொருளை விசேடித்து நிற்ப, கிளவி சுட்டு, என்பனவே ஆகு பெயராய் அப்பொருளை உணர்த்த, இருபெயரும் ஒட்டி நிற்கும் ஆகலின். இனிப் பொற்றொடி என்னும் அன்மொழித் தொகையில் பொன் என்பது அவ்வாறு அன்மொழித் தொகைப் பொருளை விசேடித்து நில்லாது தொடியினையே விசேடித்து நிற்ப அவ்விரண்டன் தொகையாற்றலால் அன்மொழிப் பொருளை உணர்த்துமாறும் அறிக.

எனனும் பகுதியில் 1. வகரக்கிளவி, 2. அதுவாகு கிளவி, 3. மக்கட் சுட்டு ஆகியவற்றில் ஆகுபெயர்கள் கிளவி, சுட்டு என்பனவே. வகரம், அதுவாதல், மக்கள் என்னும் அடைகள் முறையே 1. 'கிளவி'யாற் குறிக்கப்படும் ஆகுபெயர்ப் பொருளாகிய எழுத்து 2. 'கிளவி'யாற் குறிக்கப்படும் ஆகுபெயர்ப் பொருளாகிய சொற் பொருள் 3. 'சுட்'டாற் குறிக்கப்படும் ஆகுபெயர்ப் பொருளாகிய மக்கட்பொருள் இவற்றைச் சிறப்பிக்க வருகின்றன. இந்த அடைகள் இயற்பெயரைச் சிறப்பிக்க வரவில்லை.

பொற்றொடி என்னும் அன்மொழித்தொகையில் பொன் என்னும் அடை தொடியினைச் சிறப்பித்து நிற்கிறது. இந்த அடை பொற்றொடி என்பதால் குறிக்கப்படும் அன்மொழிப் பொருளாகிய பொற்றொடி அணிந்தாளைச் சிறப்பிக்கவில்லை. பொன் என்பதும் தொடி என்பதும் சேர்ந்து தொகையாற்றலால் அன்மொழிப் பொருளை உணர்த்துகின்றன என்று அறியலாம்.

சிவஞான முனிவர் தரும் இந்த விளக்கத்திலிருந்து இருபெய ரொட்டு ஆகுபெயர் என்பதில் இரண்டு பெயர்கள் ஒட்டி நின்றாலும் அவற்றுள் ஒன்றே ஆகுபெயர்ப் பொருளை உணர்த்த அதன் முன் வரும் பெயர் ஆகுபெயர்ப் பொருளைச் சிறப்பிக்கவே வருகிறது. ஆனால் அன்மொழித்தொகையில் இரண்டு பெயர்களும் சேர்ந்து தொகையாற்றலால் அன்மொழிப் பொருளை உணர்த்துகின்றன என்று விளங்கிக் கொள்ளலாம். மேலும் தொடி என்னும் பெயர் மட்டும் தனியே நிற்பின் அன்மொழியாகாது என்றும் அறியலாம். ஒரு தொகையை நிலைக்களனாகக் கொண்டே அன்மொழிப் பொருள் தோன்றும் (தொல். 901) என்று தொல்காப்பியர் கூறியுள்ளதும் இதனை உணர்த்தும்.

ஆகுபெயர் அன்மொழித்தொகை பற்றி ஆராய்ந்தோருள் சிலர் வேறுவகையான விளக்கங்களையும் அளித்துள்ளனர். அன்மொழித் தொகை மேலும் ஆகுபெயர் வரும் என்பது சி. கணேசையர் கருத்து.[34] "மக்கட் சுட்டு என ஆகுபெயராய் வரும் இருபெயரொட்டும் தம்முள் வேறெனவே உணர்தல் வேண்டும். இரண்டும் இருபெயரொட் டென்றே கொள்ளத் தடையில்லை"[35] என்பது நெல்லை க. சுப்பிர மணியன் கருத்து. அன்மொழித்தொகையும் இரண்டு பெயர் ஒட்டி நிற்கிறது என்ற அளவில் இருபெயரொட்டே. அது ஆகுபெயராய்

வரின் இருபெயரொட்டாகு பெயர். அன்மொழிப் பொருள் மேல் வரின் அன்மொழித்தொகை என்று இவர் கருதுகிறார். "அன்மொழித் தொகை நிலைத் தொடர் மொழிகள் எல்லாம் சொல்லிலக்கண வகையால் ஆகுபெயர்களே" என்று ஆபிரகாம் அருளப்பன்[256] கூறியுள்ளார்.

இருபெயரொட்டாகு பெயரும் அன்மொழித் தொகையும் அமைப்பு அடிப்படையில் ஒன்று போலக் காணப்படுகின்றன. எனினும் அவற்றுக்கிடையே நுண்ணிய பொருள் வேறுபாடு உண்டு. இதனைச் சிவஞான முனிவர் எடுத்துக் காட்டியுள்ளார். தொடரிலக்கண முறையில் பொன். கோதண்டராமன்[257] அளித்துள்ள விளக்கம் இதனைத் தெளிவுபடுத்தும் வகையில் அமைந்துள்ளது. அவர் இரண்டினையும் வேறுபடுத்திக் காட்டுவதைப் பின்வருமாறு அட்டவணைப் படுத்தலாம்.

	ஆகுபெயர்	அன்மொழித்தொகை
1.	முதல்-சினை, சினை-முதல், பொருள்–பொருள் பிறந்த இடம் முதலிய தொடர்புகளின் அடிப்படையில் தோன்றும்.	நிலைத்தொடராக நின்று தனக்குப்பின் பிறிதொரு சொல் தொக்கு நிற்க, தொக்கு நின்ற சொல்லின் பொருளே தன்பொருள் போலக் காட்டி நிற்கும்.
2.	ஒருமொழிக் கண்ணும் சிலகால் இருமொழிக்கண்ணும் வரும்.	ஒருமொழிக்கண் வாராது; இருமொழிக்கண் மட்டுமே வரும்.
3.	பிறிதொரு சொல் தொக்கு நிற்பதுமில்லை. வெளிப்படுவதும் இல்லை. பெயரின் பொருளே விரிவு பெறுகிறது.	அல்லாத மொழி தொக்கு நின்றே வரும்.

தொகைகள்

தொகைச் சொற்கள் பற்றி எச்சவியலில் தொல்காப்பியர் கூறியுள்ளார். அவை 1. வேற்றுமைத்தொகை, 2. உவமத்தொகை, 3. வினைத்தொகை, 4. பண்புத்தொகை, 5. உம்மைத்தொகை, 6. அன்மொழித்தொகை என ஆறுவகைப்படும் (தொல். 895).

தொகை என்பது என்ன என்று தொல்காப்பியர் விளக்கவில்லை. தொகை என்னும் சொல் தொகு என்பதன் அடியாகப் பிறந்தது. இது கூடுதல், ஒன்றாதல், மொத்தமாதல், நெருங்குதல், மறைதல், சுருங்குதல், ஒடுங்குதல் ஆகிய பொருள்களில் வரும்.

தொகைச் சொல்லின் இலக்கணத்தினை விளக்குவதில் உரையாசிரியர்கள் இருவகைக் கருத்து உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். இவ்விருவகைக் கருத்து இளம்பூரணர் காலத்திலும் நிலவியது. "அத்தொகுதிக்கண் உருபுகள் பலவகையும் புலப்

படாதே நின்றன என்ப ஒரு சாரார், ஒரு சாரார் இல்லை என்ப'' (தொல். 896) என்று இளம்பூரணர் கூறியுள்ளார். உருபு முதலியன தொகுதலே (மறைந்து நிற்றல்) தொகை என்பது இளம்பூரணர் கருத்து.

சேனாவரையரும் இவ்விரு சாரார் கருத்தினையும் எடுத்துக் காட்டியுள்ளார். உருபு முதலியன தொகுதலே தொகை என்று கொண்டால் 'செய்தான் பொருள், 'இருந்தான் மாடத்து' என்று உருபு தொக்கு ஒரு சொல் நீர்மைப் படாதனவும் தொகை என்றாகும். அவற்றை நீக்குதற்கும், வேழக்கரும்பு, கேழற்பன்றி முதலியன வற்றில் உருபு தொகவில்லையாயினும் தொகை எனப்படுதலால் இவற்றையும் தழுவிக்கொள்வதற்கும் 'ஒட்டி ஒரு சொல்லாதல் தொகை எனலே பொருந்தும் என்பது சேனாவரையர் கருத்து. தொகைச் சொற்களில் உருபு முதலியன தொகுதலைச் சேனா வரையர் மறுக்கவில்லை. உருபு முதலியன தொகுதல் எல்லாத் தொகைகட்கும் பொருந்தாது. ஆதலின் ஒட்டி ஒரு சொல்லாதலே தொகை இலக்கணம் என்பர்.

இளம்பூரணரின் கருத்தினையே நச்சினார்க்கினியரும் உடன் பட்டு உரைத்துள்ளார். வேழக்கரும்பு, கேழற்பன்றி ஆகிய தொகை களிலும் 'ஆகிய' என்னும் சொல் தொக்கு நிற்கிறது என்பது நச்சினார்க்கினியர் கருத்து (தொல். 995). ஒட்டி ஒரு சொல் ஆதல் தொகை இலக்கணம் என்பது பொருந்தாது என்றும் இவர் கருது கிறார்.

தெய்வச்சிலையார் தொகைச்சொல் பற்றி வேற்றுமை மயங் கியல், எச்சவியல் ஆகிய இரு இடங்களில் விளக்கியுள்ளார்.

> தொகைச் சொல்லாவது இறுதிப் பெயரோடு தொக்கு ஒட்டி ஒரு சொல் நீர்மைப்பட்டு நிற்பது (தொல். 588)

> தொகைச் சொல்லாவது: பொருளுணர்த்துஞ் சொல்லாயினும், தொழிலுணர்த்துஞ் சொல்லாயினும் இரண்டு சொல் விட் டிசைத்து நில்லாது ஒட்டி நிற்பது. இஃது ஒட்டுப்பெயர் என்னும் குறியும் பெறும் (தொல். 895)

என்பன தெய்வச்சிலையார் தொகைக்குக் கூறும் இலக்கணங்கள் ஆகும். அவர் தொகைகளை 1. தொகைச்சொல், 2. உருபு தொகைச்சொல் என இரு வகைப்படுத்தியுள்ளார். இவ்விரண்டும் ஓசையால் வேறுபடுகின்றன என்று வேற்றுமை மயங்கியலில் (தொல். 588) கூறியுள்ளார். எச்சவியலில் வேற்றுமைத்தொகைச் சொல்லையும் வேற்றுமை உருபு தொகைச் சொல்லையும் பின் வருமாறு வேறுபடுத்திக் காட்டியுள்ளார்.

> இவ்வாறு வருவன (படையைப் பிடித்த கை — படைக்கை, குழையையுடைய காது — குழைக்காது, குதிரையால் பூட்டப்

> பட்ட தேர் — குதிரைத்தேர்) உருபு தொகை என அடங்காவோ வெனின், ஆண்டு அவ்வேற்றுமைகட்கு ஓதிய வாய்பாட்டால் தொழிலோடும் பெயரோடும் முடிவுழி, உருபு மாத்திரம் தொக்கு இரண்டு சொல்லாகி நிற்கும். ஈண்டு ஒரு சொல்லாகி வரும். ஆறாவதன் கண் வரும் உருபு தொகையும் பொருட்டொகையும் என வேறுபாடின்றால் எனின், ஆண்டும் வேறுபாடு உள. மரக்கோடு என்றவழி ஒட்டுப்பட்டுப் பொருட்டொகையாகி நின்றது. மரத்தின் கோடு என்ற வழி, உருபு தொகையாகி இரண்டு சொல்லாகி நின்றது. இவை சொல்நோக்கான் உணர்க (தொல். 895)

என வேறுபடுத்திக் காட்டியுள்ளார். தெய்வச்சிலையார் தொகைச் சொல்லுக்குக் கூறும் இலக்கணத்தின் மூலமும், உருபு தொகையினின்றும் அதனை வேறுபடுத்திக் காட்டுவதன் மூலமும் ஒட்டி ஒரு சொல்லாதலே தொகை இலக்கணம் என்பதை வலியுறுத்தியுள்ளார். 'ஒட்டுப்பெயர்' என்னும் அவரது சொல்லாட்சியும் இதற்குச் சான்றாகும்.

தொகையின் இலக்கணமாக அமைவதற்கு ஏற்ற பண்புகளாக 1. பிளவுபடாது ஒட்டி நிற்றல், 2. தொக்கு (சுருங்கி) ஒன்றாய் நிற்றல், 3. கட்புலனாகாது அறிவிற்குப் புலனாகி எஞ்சி நிற்றல் ஆகியவற்றைக் க. ஆறுமுகன் எடுத்துக் கூறியுள்ளார்.[258] தொகை பற்றிய உரையாசிரியர்களின் இருவகைக் கொள்கைகளையும் ஆராய்ந்து இளம்பூரணர், நச்சினார்க்கினியர் போன்றோர் கருத்து பொருத்தமற்றது என்றும் சேனாவரையர், தெய்வச்சிலையார் போன்றோர் கொள்கை ஏற்புடையது என்றும் பொன். கோதண்டராமன் விளக்கியுள்ளார்.[259]

வினைத்தொகை

வினைத்தொகையில் அமைந்துள்ள இரண்டு உறுப்புகளில் முதல் உறுப்பு கருத்து வேறுபாடுகளுக்குரியதாக அமைந்துள்ளது. வினைத்தொகையின் முதல் உறுப்பு பெயரெச்சம் என்பது இளம்பூரணர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார் ஆகியோர் கருத்து.

> கொல்யானை என்புழிக் கொல்லும் என்னும் வினைச்சொல் ஒரு கூறு நிற்ப, ஒரு கூறு தொக்கமையின் வினைத்தொகை ஆயிற்று (தொல். 898)

என இளம்பூரணரும்

> வினை என்றது 'உண்' 'தின்' முதலிய முதனிலைகளை அவை ஈண்டும் ஆகுபெயராய்த் தம்மாற் பிறந்த பெயரெச்சத்தை உணர்த்தின (தொல். 898)

என நச்சினார்க்கினியரும்

> வினைச்சொல்லாவது தொழிலுங்காலமும். பாலும் உணர்த்தலின், பாலுணர்த்துஞ் சொல்முற்றுச் சொல்லாகி நின்று தொகை

> நிலை ஆகாமையானும், பால்காட்டாத வினையெச்சம், பெயரெச்சம் என்னும் இரண்டினுள்ளும் வினையெச்சம் முற்றுவினைச் சொல்லோடு அல்லது முடியாமையானும், ஈண்டுத் தொகுவதும் விரிவதும் பெயரெச்சம் என்று கொள்க (தொல். 898)

எனத் தெய்வச்சிலையாரும் கூறியுள்ளார். சேனாவரையர் வினைத்தொகையின் முதனிலை வடமொழியில் தாது என்று அழைக்கப்படும் வினைவேர் (Verbal root) என்று (தொல். 898) கருதியுள்ளார்.

> வினைத்தொகைக்கு முதனிலை பெயராம் அன்றோவெனின் — உரிஞ் என்பது முதலாயினவற்றைத் தொழிற்பெயர் என்றாராகலின் தொழில் மாத்திரம் உணர்த்துவன எல்லாம் தொழிற்பெயர் என்பது ஆசிரியர் கருத்தென்ப

என்னும் அவரது உரைப்பகுதி வினைத்தொகையின் முதனிலையைத் தொழிற்பெயர் என்று கூறுதலும் அவருக்கு உடன்பாடு என்பதை உணர்த்துகிறது பிற தொகைகளின் முன்மொழி போன்று வினைத்தொகையின் முன்மொழியும் பெயரே என்பது ஆ. சிவலிங்கனார் கருத்து.[260] பொன். கோதண்டராமன் ஒருவகை வினைப்பெயரே (தொழிற்பெயர்) வினைத்தொகையின் முதன்மொழி என்ற சேனாவரையரின் கருத்தே ஏற்கத்தக்கது என்று ஆராய்ந்து கூறியுள்ளார்.[261]

தொகுப்புரை

சொல்லதிகாரத்தில் பேசப்படும் இலக்கணக் கூறுகள் குறித்து இன்றுவரை நிகழ்ந்துள்ள ஆய்வுகள் 1. சொல்லியல் 2. தொடரியல் என்று இருவகையாகப் பகுத்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளன. இதன் பலனாகப் பெறப்படும் முடிவுகள் வருமாறு:

1. சொல்லதிகாரத்தில் சொல்லிலக்கணம் மட்டும் அன்றித் தொடரிலக்கணமும் கூறப்பட்டுள்ளது. இன்னின்ன இயல்கள் சொல்லிலக்கணம் கூறுவன, இன்னின்ன இயல்கள் தொடரிலக்கணம் கூறுவன என வரையறுக்க இயலாவண்ணம் எல்லா இயல்களிலும் சொல் இலக்கணம் பற்றிய செய்திகளும் தொடரிலக்கணம் பற்றிய செய்திகளும் விரவியே காணப்படுகின்றன. தெய்வச்சிலையார் இதனை ஓரளவு வரையறுக்க முனைந்துள்ளார். மேலும் தொடரியல் தொடர்பான இலக்கணக் கூறுகளை விதந்து கூறி விளக்கமும் தந்துள்ளார்.

2. தொல்காப்பியரின் சொற்பாகுபாடு இலக்கண அமைப்பு, சொற்பிறப்பியல் ஆகிய அடிப்படைகளில் அமைந்துள்ளது என மரபிலக்கணவழி ஆய்வாளர்கள் விளக்கம் தந்துள்ளனர். செய்யுள் ஈட்டச் சொல்லின் நான்கு வகைகளும் மொழியியலார் சொல்லைப் பாகுபடுத்தும் முறையோடு ஒத்துள்ளது என்றும் தொல்காப்பியரின் சொற்பாகுபாடு 1. மொழி அமைப்பு, 2. மொழி உணர்வு, 3. சமூகப் பண்பாடு ஆகிய மூன்று அடிப்படைகளில் அமைந்துள்ளது எனவும் மொழியியல் நோக்கில் ஆராய்ந்தோர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

3. பெயர்ச்சொல், வினைச்சொல் ஆகியவற்றுக்குத் தொல்காப்பியர் கூறியுள்ள இலக்கணம் இக்கால மொழியியல் அறிஞர் அவற்றுக்குத் தரும் விளக்கத்தோடு ஒத்துள்ளது. பெயர்ச்சொல்லைத் தொல்காப்பியர் கூறியுள்ள முறை ஆராய்ந்து விளக்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியர் கூறிய பெயர்கள் இக்கால இலக்கண மொழியியல் வளர்ச்சிக்கேற்ப பல வகையாகப் பகுத்து அவற்றின் அமைப்பு, பயன்பாடு ஆகியவை விளக்கப் பட்டுள்ளன.

4. வினைச்சொல்லின் அமைப்பு, பயன்பாடு ஆகியன வருணனை மொழியியல் நோக்கில் விளக்கப்பட்டுள்ளன.

5. குறிப்பு வினையில் குறிப்பாக உணர்த்தப்படுவது வினையும், காலமும் எனக் கொள்ளலே பொருத்தம் என்று கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பு வினையின் அமைப்பு, பயன்பாடு, அது பெயர், தெரிநிலை வினைகளிலிருந்து வேறுபடும் முறைகள் ஆகியன விளக்கம் பெற்றுள்ளன.

6. தொல்காப்பியர் வினைமுற்றுகளைப் பகுத்து ஆராய்ந்துள்ள முறை விளக்கப்பட்டுள்ளது. சில சிறப்புத் தன்மையுடைய வினைகளின் (மார் ஈற்று வினை, செய்யும் என்னும் வாய்பாட்டு வினை, வியங்கோள் வினை) அமைப்பு பயன்பாடு, வரலாறு ஆகியன தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

7. தொல்காப்பியர் வினையெச்சங்களுக்குக் காலப் பகுப்பு உரைக்கவில்லை; உரையாசிரியர்களும் பிற்கால இலக்கண ஆசிரியர்களும் முக்காலங்களுக்கும் உரியன இன்னின்ன வினையெச்சங்கள் எனப் பகுத்துரைத்தனர். இதனைத் தொடர்ந்து அண்மைக்காலம் வரை வினையெச்சங்களுக்குக் காலம் கூறும் முறை தொடர்ந்து வந்தது. அண்மைக்காலத்தில் வினையெச்சங்களுக்குக் காலம் கூறும் முறை பொருந்தாது என்பதும் முன்னிகழ்வு, உடனிகழ்வு, பின்னிகழ்வு ஆகிய பொருண்மைகளே காலங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளன. தொழில் தோன்றிப் பாலும் காலமும் எஞ்சி நிற்பது வினையெச்சம் என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.

8. பெயரெச்சம் பற்றிய ஆய்வின் பயனாக தொல்காப்பியர் பெயருக்கும் வினைக்கும் இடையே உள்ள தொடரியல் உறவுகளை நன்கு விளக்கியுள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

9. இடைச்சொல், உரிச்சொல் ஆகியன மொழியியல் நோக்கில் விளக்கப்பட்டுள்ளன.

10. கிளவியாக்கத்தில் தொடரியல் செய்திகள் பேசப் பட்டுள்ளன எனத் தெய்வச்சிலையார் எடுத்துக்காட்டியுள்ளார். எனினும் அவர் அவ்வழித் தொடர் கிளவியாக்கத்துள் கூறப் பட்டுள்ளது என்று உரைத்தது முழுவதும் பொருந்தக் கூடியது அன்று என்பது உணர்த்தப்பட்டுள்ளது.

வழு, மயக்கம் என்பனவற்றை ஒரு பொருட்கிளவிகளாக உரையாசிரியர்கள் கொண்டது பொருந்தாது என்பதும் தொல்காப்பியர் அவற்றைப் பொருள் வேறுபாடு உடைய சொற்களாகவே ஆண்டுள்ளார் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

கிளவியாக்கத்தில் கூறப்படும் தொடரியல் செய்திகள் மொழியியல் ஆய்வினால் நன்கு விளக்கம் பெற்றுள்ளன.

11. தொல்காப்பியர் வேற்றுமைகளை விளக்குவதில் ஒரே மாதிரியான முறை காணப்படவில்லை. வேற்றுமை பற்றிய அவரது கொள்கையைத் தெளிவாகப் புரிந்து கொள்ள விரிவான ஆராய்ச்சி தேவைப்படுகிறது.

12. ஆகுபெயரையும் அன்மொழித் தொடரையும் பற்றிய ஆராய்ச்சியில் இரண்டுக்கும் உள்ள நுண்மையான வேறுபாடு கண்டறியப்பட்டுள்ளது.

13. தொகைநிலைத் தொடர்கள் விளக்கப்பட்டுள்ளன.

14. வினைத்தொகையின் முன்மொழி ஒருவகை வினைப் பெயரே என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

குறிப்புகள்

1. P. S. Subramanya Sastri, Tolkappiyam Collatikaram with English Commentary (Annamalainagar, 1945), p. xviii.

2. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் வரலாற்றிலக்கணம் (சென்னை 1979), ப-ள். 262-293.

3. செ. வை. சண்முகம், "வேற்றுமை பற்றித் தொல்காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப. 268.

4. Ullman's view is strikingly similar to this (Teyvaccilaiyar's) interpretation. According to him their (words) semantic make up has two components; one their lexical meaning proper, the other syntatic their membership is one of the parts of speech categories.

   — E. Annamalai, 'Tamil theory of Meaning', Typescript p. 3.

5. செ. வை. சண்முகம், "தொல்காப்பியரின் சொல்லியல் கோட்பாடு" மொழியியல் 2: 1 (1978), ப-ள். 80-81.

6. வ. ஜெயதேவன், தமிழ் அகராதியியல் வளர்ச்சி வரலாறு, டாக்டர் பட்ட ஆய்வேடு, (சென்னை 1986), ப. 46.

7. S. Ullman, The Principles of Semantics (Oxford University: 1957) p. 70.

8. ச. வே. சுப்பிரமணியன், "தொல்காப்பியரின் சொற் பாகுபாடு", தொல்காப்பிய மொழியியல், ப. 135.

9. அதே கட்டுரை, ப. 140.

10. தொல்காப்பியர் காலத்தில் தமிழ்ச் சொற்கள் இலக்கண முறையில் போன்றே சொற்பிறப்பியல் முறையிலும் நான்காக வகுக்கப்பட்டன. ஆதலால் தன் சொல், அயற் சொல் என்கிற முறையில் தென்சொல், வடசொல் என்ற பாகுபாடும் பின்பு தன் சொற்களுள் செந்தமிழ், கொடுந் தமிழ் என்கிற முறையில் நாட்டுச்சொல், திசைச்சொல் என்ற பாகுபாடும் பின்பு நாட்டுச்சொற்கள் இயல்பும் திரிபும் பற்றி இயற்சொல், திரிசொல் என்ற பாகுபாடும் தோன்ற இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கமைந்தன.

— தேவநேயப் பாவாணர் (பதி.), தொல்காப்பியம் சொல்லதிகாரம், சேனாவரையருரை (சென்னை, 1970), ப. 203.

11. செ. வை. சண்முகம், "சொல்லின் வகைகள்", ஆ. கோ 12. 2 (1980), ப. 144.

12. கா. மீனாட்சிசுந்தரன், "சொற்பகுப்பு அன்றும் இன்றும்", ஆ. கோ. 5 (1973), பக். 753-758.

13. செ. வை. சண்முகம், "சொல்லின் வகைகள்", ப. 146.

14. Tolkappiyar has not clearly defined what Peyar is. But from the list of peyar given by him in Peyariyal, the fifth section of the second chapter of Tolkappiyam, it seems to me that peyar is a word denoting a person or an object.

— P. S. Subramanya Sastri, History of Grammatical theories in Tamil and their relation to grammatical literature in Sanskrit, p. 108.

15. His (Tolkappiyar's) formal definition of noun, verb etc. shows his insight and penetrating linguistic acumen

— S. Agesthialingom, "Tolkappiyar's concept of syntax", Studies in Early Dravidian Grammars (Eds. S. Agesthialingom & N. Kumarasamy Raja (Annamalainagar, 1978), p. 2.

தமிழ் இலக்கண நூலார் பெயர்ச்சொல்லுக்குத் தெளிவான இலக்கணம் கூறியுள்ளனர். தொல்காப்பியனார்,

பெயர்நிலைக் கிளவி காலம் தோன்றா
தொழில்நிலை ஒட்டும் ஒன்றலங் கடையே
(தொல். சொல். 70)

என்று கூறி தொழில்நிலையொட்டு ஒன்றல்லாத ஏனைய பெயர்ச்சொற்கள் எல்லாம் காலங்காட்டா என்று வரையறுத்துக் கூறியுள்ளார்.

— மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு: பெயர்ச்சொல், ப. 16.

16. The negative and positive definition of verbs and direct and indirect definition of nouns given by Tolkappiyar remind me of Dionysios Thrax's definition of the same.

— S. Agesthialingom, "Tolkappiyar's Concept of Syntax, p. 2.

Dionysios Thrax laid down what is still the conventional definition of a noun: A noun is a part of speech with cases denoting a thing or an act.

— H. Leuis Gray, Foundations of languages (New york, 1939), p. 167.

The Verb is defined by Dionisios Tharax as a word without cases, indicative of tenses and persons and numbers denoting an act or state.

— Ibid, pp. 177-178.

17. ச. வே. சுப்பிரமணியன், "தொல்காப்பியரின் சொற்பாகுபாடு, ப-ள், 131-142.

18. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், ப-ள். 22–24.

19. K. V. Subbiah, Dravidic Studies (Madras, 1923), pp. 12-24.

20. Bh. Krishnamoorthy, Dravidian personal pronouns, Studies in Linguistics, pp. 18-21.

21. தி. நடராசன், "பழந்தமிழில் மூவிடப் பெயர்கள்", புலமை 3. 1 (மார்ச்சு, 1977), ப. 20.

22. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு: பெயர்ச்சொல், ப. 26.

23. ச. அகத்தியலிங்கம், "உளப்பாட்டுத்தன்மைப் பன்மையும் வேறுபாட்டுத் தன்மைப் பன்மையும்", ஆ. கோ. 8. 2 (1976), ப-ள். 497–501.

24. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு: பெயர்சொல், ப-ள். 42–43.

25. G. A. Grierson, Linguistics Survey of India, Vol. IV. (Calcutta, 1906), pp. 293-294.

26. தி. நடராசன் மு. கட்டுரை, ப-23.

27. அதே கட்டுரை, ப. 23.

28. Caldwell, Op. cit., p. 74

29. P. S. Subramanya Sastri, History of Grammatical theories in Tamil and their relation to grammatical literature in Sanskrit, p. 124.

30. Ibid, p. 137.

31. R. Swaminatha Aiyar, The Aryan Affinities of Dravidian Pronouns, Proceedings of the Transactions of the Oriental Conference 3 (1952), p. 186.

32. Kamil Zvelebil, "Personal Pronouns in Tamil and Dravidian", Indo Iranian Journal VI (1962), p. 67.

33. மோ. இசுரயேல் இலக்கண ஆய்வு பெயர்ச்சொல் ப-ள். 42-43.

34. அதே நூல், ப. 73.

35. It seems ... we have forms formed by morphemes — ku, tai, — al, kai, — mai, etc. and their allomorphs which are not capable to express the tense categories, these terms may be called true verbal nouns.

— Kamil Zvelebil, "Participal and verbal nouns as predicates in early old Tamil' Tamil Culture, VIII (1959), p. 183.

36. The greater number of nouns of this class (participal nouns) are formed by suffixing the demonstrative pronouns or their terminatinns, to the present and preterite relative parrticiples.

— Caldwell, Op. Cit., p. 542.

37. L. V. Ramasamy Ayyar, Collected Papers, Vol. II, p. 9.

38, மோ. இசுரயேல். இலக்கண ஆய்வு: பெயர்ச்சொல், ப. 30.

39. மு. வரதராசன், மொழிநூல், ப. 71.

40. A. Sathasivam, "Accentual system of old Tamil", தெ. பொ. மீ. மணிவிழா மலர் (கோவை, 1961), ப-ள். 401-420.

41. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், ப. 81.

42. அதே நூல், ப. 92.

43. M. Israel, The treatment of Morphology in Tolkappiyam, pp. 102-105, 219, 220.

44. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு, ப. 134.

45. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் வரலாற்றிலக்கணம் (சென்னை, 1979), ப. 122.

46. அதே நூல், ப. 123.

47. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல். ப. 2.

48. ச. வே. சுப்பிரமணியன், இலக்கணத்தொகை; சொல் (நாகர் கோவில், 1971), ப. 201.

49. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் வரலாற்றிலக்கணம், ப. 167.

50. சு. குமாரசாமி, ''குறிப்புவினை குறிப்பாகக் காலங்காட்டும் வினைச்சொல்லே''. தமிழ்ப்பொழில், 38 (1962), ப-ள். 10-23.

51. ரா. சீனிவாசன், ''வினை பற்றித் தொல்காப்பியர்'', தொல் காப்பிய மொழியியல், ப. 191.

52. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப. 84.

52-அ. L. V. Ramasamy Ayyar, "The Morphology of old Tamil verbs, p. 776.

53. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், ப-ள், 85-86.

54. Any Dravidian noun and any adjective may be converted into a verb in the more ancient dialects of each of the Dravidian Languages and in some connections even in the dialects, by simply sufflxing to the usual pronominal fragments, ... Tamil grammarians call the verbs here described as viney (k) Kurippu, literally verbal sings ... I think the best name is that which has given by Beschi viz. apellative verbs ar conjugated apellatives. Apellative verbs are conjugated through every number and person, but they are restricted to the present tense; or rather they are of no tense is excluded from them.

— Caldwell, Op. Cit., pp. 479-480.

55. P. S. Subramanya Sastri, History of Grammatical theories in Tamil and their relation to Grammatical literature in Sanskrit, p. 145.

56. A type of derivation unequally distributed in Dravidian family but characteristic of it, is the attaching to the primary nouns (eventually under the oblique form) of terminations borrowed from the personal or demonstrative pronouns.

— Jules Bloch, The Grammatical structure of the Dravidian Languages (Poona, 1954), p. 37.

57. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 167.

58. M. Varadarajan, The origin and Development of Verbs in Tamil, Unpublished M.O.L. Thesis (Madras, 1944), p. 52.

59. ——————— "குறிப்பு வினை" Tamil Cultural VII (1259), p. 29

60. வி. ஐ. சுப்பிரமணியம், "குறிப்புவினை", செந்தமிழ் 56 (1960), பக். 20-30.

61. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, pp. 37, 109.

62. பொன். கோதண்டராமன், "குறிப்புவினை", இலக்கண உலகில் புதிய பார்வை (சென்னை, 1978), பக். 60-67.

63. P. Arunachalam, A History of Tamil syntax, Unpublished Ph.D. thesis (Annamalai University, 1968), p. 48.

64. ச. அகத்தியலிங்கம், "வினையெச்சம் பற்றித் தொல்காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப. 208.

65. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 135.

66. V. I. Subramonyam, "Negatives", Tamil Culture VIII (1959), p. 37.

67. T. P. Meenakshisundaran, "Papers on Linguistics and Literature" Sixty first birth day commemoration volume (Annamalainagar, 1965), p. 4.

68. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 152.

69. மு. வரதராசன், மொழியியற் கட்டுரைகள் (சென்னை, 1954), பக். 236-242.

70. அதே நூல், ப. 249.

71. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 152.
72. Caldwell, Op. Cit., pp. 239-244.
73. மு. வரதராசன், மொழியியற் கட்டுரைகள், ப. 209.
74. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப-ம். 67.
75. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப-ள். 60-71.
76. H. Chittiraputhiran, "mar in old Tamil", A. K. 8.2 (1976) pp. 909-614.
77. வே. வேங்கடராசுலு ரெட்டியார், "ஏவல் வினையமைப்பு", டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளிவிழா மலர் சென்னை, 1961), ப. 323.
78. A. Sathasivam, "Accentual system of old Tamil", தெ. பொ. மீ. மணிவிழா மலர் (கோவை, 1961), ப-ள். 401-402.
79. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு பெயர்ச்சொல், ப. 81.
80. M. Isreal, The Treatment of Morphology in Tolkappiyam, pp. 176-185.
81. Ibid, p. 187.
82. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப. 50.
83. அதே நூல், ப. 53.
84. S. Agesthialingom, "Optative in Old Tamil" Pulamai (1977), p. 353.
85. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப-ள். 58-59.
86. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, ப. 118,
87. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப. 77.
88. அதே நூல், ப. 24.
89. வே. வேங்கடராசுலு ரெட்டியார், பரணர் (சென்னைப் பல்கலைக்கழகம், 1933), ப-ள். 195-197.
90. H. Chittiraputhiran, "Negative suffixes — A Historical outlook", A. K. 12. 2 (1980), pp. 154-159.
91. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 204.
92. Caldwell, Op. Cit., p. 468.

93. Jules Bloch, The Grammatical Structure of Dravidian Languages, p. 66.

94. The Zero negative is a morpheme of a verb finite, with no tense infix, a zero tense morpheme. No tense infix is mentioned but the termination of the 3rd pl. n. are said to be a, ā and ba of which ā is understood to denote the negative (Col.216)

— Alfred Master, "The Zero Negative in Dravidian", Transactions of Philogical society (London, 1946), pp. 142, 150.

95. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 245.

96. Caldwell, Op. Cit., p. 47.

97. Jules Bloch, Op. Cit., p. 66.

98. V. I. Subramonyam, "Negatives", Tamil Culture VIII (1959 , p. 34.

99. Ib d, p. 40.

100. M. Israel, The Treatment of Morpoology in Tolkappiyam, p. 248.

101. M. Israel, The Treatment of Morphology in Tolkapaiyam, p. 250.

102. Caldwell, Op. Cit., pp. 465- 466.

103. A. Chidambaranatha Chettiyar, The Passive Voice in Tamil, Journal of the Annamalai University, VII (1937), p. 128.

104. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 252.

105. எஸ். அகத்தியலிங்கம், "செயப்பாட்டு வினை", தமிழ்ப் பொழில் 43 (1963), ப-ள். 35-42, 97-103, 129-134.

106. Jules Bloch, The grammatical Structure of the Dravidian Languages, p. 68.

107. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 221.

108. Otto Jesperson, The philosophy of Grammar (London, 1955), p. 258.

109. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப. *116.*

110. Caldwell, Op. Cit., p. 492.

111. மோ. இசுரயேல், இலக்கண ஆய்வு வினைச்சொல், ப. *119.*

112. எல். ஆர். ஜான், "காலம்", இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப. 75.

113. C. Ilakkuvanar, Tolkappiyam with Critical Studies, (Madurai, (1963), p. 336

114. ச. அகத்தியலிங்கம், "வினையெச்சம் பற்றித் தொல் காப்பியர்", ப. 210.

115. அதே கட்டுரை, ப. 210.

116. Caldwell, Op. Cit.. pp. 487-539.

117. L. V. Ramaswamy Ayyar, "The Morphology of Old Tamil Verbs', pp. 769-773.

118. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 211.

119. ச. அகத்தியலிங்கம், "வினையெச்சம் பற்றித் தொல் காப்பியர்", ப. 214.

120. அதே கட்டுரை, ப. 211.

121. அதே கட்டுரை, ப-ள். 223-224.

122. பெ. மாதையன், "வினையெச்சங்களில் காலம்", ஆ. கோ. 10, 2 (1978), ப-ள். 277-282.

123. P. S. Subramaniya Sastri, History of Grammatical theories in Tamil and their relation to Grammatical literature in Sanskrit, p. 187.

124. S. Agesthialingom, Grammar of old Tamil with special reference to Patiruppattu (Annamalainagar, 1978), p. 42.

125. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 211.

126. Ibid, p. 212.

127. இவ்வாய்பாட்டு வினையெச்சங்கள் உருபனியல் அமைப்பில் த் — இறந்தகால இடைநிலையைக் கொண்டிருந்தாலும் சூழல்சால் காலத்தைக் (Contextual text) கொண்டே செயல்படுகின்றன எனக் கொள்வது நலம். சூழல்சால் காலம் என்று இங்குக் குறிப்பிடப்படுவது கால இடைநிலைகளால் காலம் காட்டப்படாமல், விகுதிகளால்

தன்னைத் தொடரும் வினைக்கு ஏற்பக் காலம் காட்டுவது என்பது தான்.

128. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 213.

129. பெ. மாதையன். வினையெச்சங்கள், ப. 54.

130. V. Sp. Manickam, A Study of Tamil verbs (Annamalai nagar, 1973), p. 84.

131. பெ. மாதையன், மு. ஆய்வேடு, ப-ள். 152, 154.

132. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 214.

133. Ibid, p. 215.

134. Ibid, p. 216.

135. வி. ஐ. சுப்பிரமணியம், "செய்து என்னும் வாய்பாட்டு வினைமுற்று", தெ. பொ. மீ. மணிவிழா மலர் (கோவை 1961), ப-ள், 318, 319.

136. பெ. மாதையன், மு. ஆய்வேடு, ப. 179.

137. அதே ஆய்வேடு, ப. 179.

138. L. V. Ramasamy Ayyar, "Morphology of old Tamil Verbs", p. 770.

139. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 217.

140. M. Varadarajan, Origin and Development of Verbs in Tamil, p. 54.

141. Caldwell, Op. Cit., pp. 487-539.

142. As particles the instances in Cankam texts signify simultaneous action or 'effect' the idea of 'purpose' appears but rarely:

ef. tēr tara vanta (P. 63) yan uraikka vantatu (P. 28) which appear to be boroter loise instances to which either the signification or effect or derived idea of purpose could be ascribed. Such instances are but rare in Cankam texts the usual rule being that purpose is denoted by other formations. — L. V. Ramasamy Ayyar, "The Morphology of old Tamil Verbs", p. 769.

143. மா. இளைய பெருமாள், "வேற்றுமையா வினையெச்சமா", செந்தமிழ் 55 (1959), ப-ள், 63-76.

144. பெ. மாதையன், மு. ஆய்வேடு, ப. 102.

145. அதே ஆய்வேடு, ப. 308.

146. ச. அகத்தியலிங்கம், "வினையெச்சம் பற்றித் தொல் காப்பியர்", ப. 213.

147. பெ. மாதையன், மு. ஆய்வேடு ப-ள். 312-315.

148. L. V. Ramasamy Ayyar, "The Morphology of old Tamil verbs", pp. 773, 774.

149. அதே ஆய்வேடு, ப-ள். 314-315.

150. அதே ஆய்வேடு, ப. 378.

151. பொன். கோதண்டராமன், "பெயரெச்சம் பற்றித் தொல் காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப. 205.

152. அதே கட்டுரை, ப. 200.

153. அதே கட்டுரை, ப-ள். 205-206.

154. அதே கட்டுரை. ப. 203.

155. அதே கட்டுரை, ப. 206.

156. சங்கர நமச்சிவாயர், நன்னூல் உரை (சென்னை, 1958), ப-ள். 396-397.

157. மோ. இசுரயேல், இடையும் உரியும், (மதுரை, 1977) ப. 3.

158. அதே நூல், ப. 3.

159. P. S. Subramanya Sastri, Tolkappiyam Collatikaram with an English Commentary (Annamalainagar, 1945), p. 157.

160. ந. குமாரசாமி ராஜா, 'இடைச்சொல் பற்றித் தொல் காப்பியர்', தொல்காப்பிய மொழியியல், ப-ள். 236-237.

161. சொ. சிங்காரவேலன், "இடைச்சொல்லின் இயல்பு", தமிழ்ப்பொழில் 45 (1972), ப. 146.

162. எஸ். வேங்கடராமையர், "எல்லே எனுஞ்சொல்", செந் தமிழ் 15 (1971), ப. 533.

163. பிரிநிலை எச்சமாவது பொருளில் ஒன்று பிரிந்தவழிப் பிரிக்கப்பட்ட பொருண்மையும் தோன்ற நிற்பது.

ஒழியிசை எச்சமாவது சொல்லப்பட்ட பொருளை ஒழியச் சொல்லாதொழிந்த பொருளும் ஒன்று தோன்றி நிற்பது.

எதிர்மறை எச்சமாவது ஒரு பொருளைக் கூறியவழி அதனின் மாறுபட்ட பொருண்மையும் அதனாலே உரை நிற்பது.

— தொல். 913, தெய்வச்சிலையார் உரை.

164. கு. தாமோதரன், "எச்சங்கள்", இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப. 93. ந. குமாரசாமி ராஜா, "இடைச்சொல் பற்றித் தொல்காப்பியர்", ப. 244.

165. ந. குமாரசாமி ராஜா, மு. கட்டுரை, ப. 245.

166. C F. Hockett, A Course in Modern Linguistics (New York, 1958), pp. 221-222.

167. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, ப. 105.

168. மோ. இசுரயேல், இடையும் உரியும், ப. 16.

169. அதே நூல், ப-ம். 9.

169-அ. C. F. Hockett, A Course in Modern Linguistics (New York, 1958), p. 221.

170. Kamil Zvelebil, Lectures on Historical Grammar of Tamil (Madras, 1963), pp. 20, 21.

171. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், "உரிச்சொல்", இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப. 135.

172. தி. சங்குப்புலவர், "உரிச்சொல்லாராய்ச்சி", செந்தமிழ்ச் செல்வி 36 (1962), ப. 329.

173. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், "உரிச்சொல்", ப-ள். 127-128.

174. Ladislav Zgusta Manual of Lexicography, pp. 89-118.

175. Treatment of Morphology என்னும் நூலில் தனிச்சொல் வகையின்மை சொற்களஞ்சியச் சார்பு ஆகிய இரண்டும் தனிக் கொள்கைகளாகக் கூறப்படவில்லை.
மோ. இசுரயேல், இடையும் உரியும், ப. 147.

176. க. இராமசாமி, 'தொல்காப்பியரின் மொழிப்பொருட் சிந்தனைகள்' புலமை 4:1 (1978), ப-ள். 50-63.

177. மோ. இசுரயேல், இடையும் உரியும், ப-ள் 151-160.

178. அதே நூல், ப. 152.

179. தெ. பொ. மீனாட்சிசிந்தரன், "உரிச்சொல்", ப. 124.

180. தி. சங்குப்புலவர், "உரிச்சொல்லாராய்ச்சி", ப. 331.

181. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், "உரிச்சொல்", ப. 133.

182. கே. எஸ். நவநீத கிருஷ்ண பாரதி, "தமிழ்ச் சொல் லமைப்பு", செந்தமிழ் 24 (1926), ப. 501.

183. P.S. Subramanya Sastri, Tolkappiyam Ellutatikaram with an English Commentary, pp. 500, 202.

184. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், தமிழ்மொழி வரலாறு, ப. 104.

185. C. Ilakkuvanar, Semantemes and Morphemes in Tamil Language (Nagerkoil, 1957), p. 35.

186. க. வெள்ளைவாரணன், தொல்காப்பியம் (அண்ணாமலை நகர், 1970), ப. 66.

187. மோ. இசுரயேல், இடையும் உரியும், ப. 154.

188. தெ. பொ. மீனாட்சிசுந்தரன், "உரிச்சொல்", ப. 136.

189. ஞா. தேவநேயப் பாவாணர், "உரிச்சொல் விளக்கம்", செந்தமிழ்ச் செல்வி 13 (1835), ப. 556.

190 P. S. Subramanya Sastri, Tolkappiyam Collatikaram with an English Commentary, p. 297.

191. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 294.

192. The Dravidian adjectives properly so-called ... acquire the signification of adjectives merely by being prefixed to substantives without declensional change; and in virtue of that acquired significatian. They are so called by Tamil grammarians 'Uriccol', qualitative words.
— Caldwell, Op. Cit., pp. 338, 339.

193. M. Winslow, A Comprehensive Tamil and English Dictionary High and Low Tamil (Madras, 1862), Vol. I — III.

194. S. Vaiyapuri Pillai, Tamil Lexicon, Vol. I (Madras, 1936).

195. T. Burrow & M. B. Emeneau, A Dravidian Etymological Dictionary

196. Kamil Zvelebil, "The Existence of Adverbs in Tamil" Tamil Culture VIII (1959), pp. 44-50.

197. ஞா. தேவநேயப் பாவாணர், "உரிச்சொல் விளக்கம்" ப. 563.

198. S. Vaiyapuri Pillai, Tamii Lexicon, Vol. I (Madras, 1960), p. 441.

199. ச. சாம்பசிவன், "உரிச்சொல்", இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப. 119.

200. தெ. மீ. காமேஸ்வரி, "தொல்காப்பியரும் அகராதியும்" மொழியியல் 2:4 (1979), ப. 100.

201. வ. ஜெயதேவன், தமிழ் அகராதியியல், (சென்னை, 1977), ப. 25.

202. இராம. சுந்தரம், "கிளவியாக்கம் பற்றித் தொல்காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப. 144.

203. "... வினையெச்சம், பெயரெச்சம் என்பன தனிமொழி ஆதலின்றி, வினையொடும் பெயரொடும் முடிதலான், அவற்றைத் தொடர்மொழி கூறுகின்றுழிக் கூறல் வேண்டும் எனின், ஈண்டுச் செய்து, செய்யூ எனவும், செய்யும் செய்த எனவும் தனிமொழி இலக்கணமே கூறிற் றென்க. அன்றியும் முடிக்குஞ் சொல்லும் ஈண்டு ஓதப் பட்ட தாயினும், உண்டு வந்தான் என்றவழிச் சாத்தன் என்ற ஒரு பெயரோடல்லது முற்றுப் பெறாமையாலும், உண்ட சாத்தன் என்றவழி வந்தான் என ஒரு வினையோ டல்லது முற்றுப் பெறாமையாலும் இவையும் தனிமொழிப் பகுதி எனின் அல்லது வாக்கியமாகி முற்றி நிற்குந் தொடர் மொழியாம் என்க"

—தொல். 720 தெய்வச்சிலையார் உரை.

204. "... இதனை (பொருள்கோளை) யாப்பிலக்கணத்துள் ஆராய்தல் வேண்டும், சொல் நிலை திரியாமையா லெனின் இது தொடர் மொழித் திரிபாகலான் ஈண்டுக் கூறப்பட்ட தென்க"

— தொல். 890, தெய்வச்சிலையார் உரை.

205. ... if one goes through the various chapters of Collatikaram of course with Tamil syntax in his mind he will venture to say that almost all of them deal with syntax in one way or another.

— S. Agesthialingom, Tolkappiyar's Concept of syntax' p. 4.

206. சி. சுப்பிரமணியம், "கிளவியாக்கம் பற்றித் தொல் காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப. 162.

207. பின்வரும் தொல்காப்பிய நூற்பாக்களில் ஒன்பது வகைத் தொகாநிலைத் தொடர்கள் கூறப்படுவதாகக் க. வெள்ளை வாரணன் கூறியுள்ளார்.

1. எத்திறத்தானும் பெயர்முடி பினவே (தொல். 912)
வினைமுற்றுத் தொடர் பற்றியது.

2. பெயரெஞ்சு கிளவி பெயரொடு முடிமே (தொல். 916)
பெயரெச்சத்தொடர் பற்றியது.

3. வினை யெஞ்சு கிளவிக்கு வினையுங் குறிப்பும்
நினையத் தோன்றிய முடிபாகும்மே (தொல். 915)
வினையெச்சத்தொடர் பற்றியது.

4. எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே
(தொல், 549)

பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்
வினை நிலை யுரைத்தல் வினாவிற்கு ஏற்றல்
பண்புகொள வருதல் பெயர்கொள வருதல்
அன்றி அனைத்தும் பெயர்ப்பய னிலையே
(தொல். 550)

எழுவாய்த்தொடர் பற்றியது.

5. ... ...
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்
(தொல். 210)

விளித்தொடர் பற்றியது.

.. விளிப்பெயர்க்கிளவியும் (தொல். 224)

6. ஐ முதலிய வேற்றுமையுருபுகள் ஆறும் விரிந்து நின்று புணரும் வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்களைப் பற்றிய விதிகள் எழுத்ததிகாரத்தில் உருபியலிலும் சொல்லதிகாரத்தில் வேற்றுமையியலிலும் வேற்றுமை மயங்கியலிலும் கூறப்படுகின்றன.

7. அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும் (தொல் 210)
தேற்ற ஏகாரமும் சிறப்பின் ஒவ்வும் (தொல். 273)
மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்
(தொல். 275)

மாறுகொள் எச்சமும் வினாவும் ... (தொல். 290)

இடைச்சொற்றொடர் பற்றியது.

8. "மெய்பெறக் கிளந்த உரிச்சொல் எல்லாம்"
(தொல். 872)

உரிச்சொற்றொடர் பற்றியது.

9. அசைநிலை (தொல். 894); இசைபடு பொருளே தொல். 906); விரைசொல் அடுக்கே (தொல். 907); கண்டீர் என்றா (தொல். 907) கேட்டை என்றா (தொல். 909) எனத் தொடங்கும் நூற்பாக்கள் அடுக்குத்தொடர் பற்றியன

க. வெள்ளைவாரணன், "தொல்காப்பியர் கூறும் தொடர்மொழி அமைப்பு", தொல்காப்பிய மொழியியல், ப-ள். 352-355.

208. மு. கட்டுரை, ப. 355.

209. ரா. சீனிவாசன், மொழியியல், (சென்னை, 1972), ப. 250.

210. சி. சுப்பிரமணியன், "கிளவியாக்கம் பற்றித் தொல் காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப. 156.

211. அதே கட்டுரை, ப. 159.

212. வ. சுப. மாணிக்கம், "வழுவமைதியா? மயக்கமா?" சிந்தனைக் களங்கள் (சிதம்பரம், 1975) ப. 66.

213. Pal Roberts, Modern Grammar, (Newyork, 1968), p. 8.

214. சி. சுப்பிரமணியன், மு. கட்டுரை, ப-ள், 159-160.

215. இராம. சுந்தரம், "கிளவியாக்கம் பற்றித் தொல்காப்பியர்", தொல்காப்பிய மொழியியல், ப. 149.

216. அதே கட்டுரை, ப. 120.

217. அதே கட்டுரை, ப-ள். 148-149.

218. செ. வை. சண்முகம், "வழுவமைதி", ஆ. கோ. 10. 2 (1980) ப. 131.

219. S. Agesthialingom, Tolkappiyar's Concept of Syntax' pp. 9-11 மொழியியலும் தமிழும், மொழியியல் 1&2 (1977), ப. 14.

220. "நான்காம் வேற்றுமைக்கு கு, க்கு, க, க்க ஆகிய நான்கு வடிவங்கள் உள்ளன. அவற்றின் குகரத்தை அடிப்படை வடிவமாகக் கொண்டு வல்லினம் மிகுவதைப் புணரியலிலும் (114) அகரம் ஏற்பதை வேற்றுமை மயங்கியலிலும் (592, 593) கூறியுள்ளார். ஏனெனில் வல்லெழுத்து மிகுவது ஒலிக் கட்டுப்பாடு உடைய (Phonologically conditioned) மாற்றம் (உயிரீற்றுச் சொல் முன்னும் இடையின ஈற்றுச் சொல் முன்னும் குகரம் வரும்போது இரட்டிக்கும். மணி-க்கு, வாய்-க்கு முதலியன) ஆதலால் புணரியலிலும் அகரம் பெற்று வரும் சொல் கட்டுப்பாடு உடைய (morphologically conditioned) மாற்றமாதலால் (உயர் திணையில் செய்யுளில் மட்டும் அகரம் வரும்) அவற்றை வேற்றுமை மயங்கியலிலும் கூறினார்.

— செ. வை. சண்முகம், "வேற்றுமை பற்றித் தொல் காப்பியர்", ப. 270.

221. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 85.

222. Caldwell, Op. Cit., pp. 256-257.

223. P. S. Subramanya Sastri, History of Grammatical theories in Tamil and their relation to Grammatical Literature in Sanskrit, pp. 108-109.

224. A. Kamatchinathan, 'Reflections on Tamil Cases, Dravidian Case System (Annamalainagar, 1976), p. 89.

225. Caldwell, Op. Cit., pp. 277-278.

226. P. S. Subramanya Sastri, Op. cit., pp. 222-223.

227. A. Kamatchinathan, Op. Cit., p. 78.

228. இரா. பாலகிருஷ்ணன், "வேற்றுமையில் வேற்றுமை" ஆ. கோ. 5 (1973), ப. 571.

229. T. P. Meenakshisundaran, Foreign Models in Tamil Grammar, p. 64.

230. ச. சோமசுந்தர பாரதியார், "தமிழ் வேற்றுமை மரபு", தமிழ்ப் பொழில் 18 (1943), ப. 365.

231. S. Agesthialingom, A Generative Grammar of Tamil, (Annamalainagar, 1967), p. 2.

232. பொருண்மை சுட்டல் உண்மை, உள (தொல். 700) என்பதாலும் வியங்கொள வருதல் 'முன்னிலை' (இங்கு ஏவல் மட்டுமே கொள்ள வேண்டும்) 'வியங்கோள' (தொல். 707) என்பதனாலும் வினாவிற்கு ஏற்றல் 695, 704 ஆகிய நூற்பாக்களாலும் பண்புகொள வருதல் 'பண்பினானும்' (தொல. 698) பண்பு கொள்கிளவி (தொல். 705) என்பதனாலும் வினை நிலையுரைத்தல் வினையியலில் ஏனைய நூற்பாக்களாலும் விளக்கப் பட்டுள்ளன.

— செ. வை. சண்முகம், வேற்றுமை பற்றித் தொல் காப்பியர், ப. 287.

233. அதே கட்டுரை, ப. 289.

234. அதே கட்டுரை, ப. 290.

235. மோ. இசுரயேல், "ஆன் உருபு" தமிழ்ப்பொழில், 39 (1962) ப. 149.

236. P. Sam Daniel, 'Instrumental case in Tamil', Dravidian case System, pp. 59-63.

237. ச. அகத்தியலிங்கம், "உடனிகழ்ச்சி வேற்றுமை" ஆ. கோ. 12. 2 (1980), ப–ள். 1–5.

238. S. Agesthialingom, "The So-called Sociative case in Tamil", Dravidian case System, p. 31.

239. செ. வை. சண்முகம், "வேற்றுமை பற்றித் தொல் காப்பியர்",, ப. 298.

240. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, p. 98.

241. A careful study of the different shades of meanings of the fourth case enumerated by Tolkappiyanar will reveal the fact that the fourth case is of varied significations such as purpose, direction, limit, relation, etc. Ibid, p. 98.

242. காண்க: பொன். கோதண்டராமன், ''ஆறாம் வேற்றுமை அதுவும் உடையவும்'', இலக்கண உலகில் புதிய பார்வை, ப-ள். 101-106.

243. செ. வை. சண்முகம், வேற்றுமை பற்றித் தொல்காப்பியர், ப. 304.

244. ஏ. ஆதித்தன், ''தமிழில் ஆறாம் வேற்றுமையா'', ஆ. கோ. 12: 2 (1980), ப. 45.

245. M. Israel, The Treatment of Morphology in Tolkappiyam, pp. 103-104.

246. செ. வை. சண்முகம், ''வேற்றுமை பற்றித் தொல்காப்பியர்'', ப. 307.

247. வே. சா. அருள்ராஜ், ''வேற்றுமையுருபா — வேற்றுருபா?'', ஆ. கோ. 10:2 (1978), ப-ள். 19-24.

248. சில வினைச்சொற்கள் ஒன்றுக்கு மேற்பட்ட வேற்றுமையை அடிப்படை நிலையில் கொள்வதாகக் கொண்டு, அவை புறநிலையில் இரு வேற்றுமையிலும் வரும்போது பொருள்வேறுபாடு இல்லை என்று கருதினால் அதுவே உறழ்ச்சியாகும். தொல்காப்பியர் அஞ்சு என்னும் வினைச்சொல் இரண்டாம் வேற்றுமையையும் (556) ஐந்தாம் வேற்றுமையையும் (562) ஏற்கும் என்று வேற்றுமையியலில் கூறிவிட்டு அவ்விரு வேற்றுமையும் (கள்ளரை அஞ்சும், கள்ளரின் அஞ்சும்) ஒரு பொருளையே குறிக்கின்றன; அதாவது ''எச்சம் இலவே பொருள்வயி னான'' (584, இரண்டும் குறிக்கும் பொருளில் ஏற்றத்தாழ்வு இல்லை) என்று குறிப்பிட்டுள்ளதை உறழ்ச்சி என்று நாம் கூறலாம்.

இவ்வாறன்றிச் சில வினைச் சொற்களை வேற்றுமை யியலில் ஒரு வேற்றுமைக்கே உரியதாகக் கூறி வேற்றுமை மயங்கியலில் அவை மற்றொரு வேற்றுமையையும் ஏற்கும் என்று கூறுவதை (இரண்டு வேற்றுமையின் பொருளும் புறநிலையில் சமனாதல்) வேற்றுமைச் சமனாதல் என்று நாம் கூறலாம். உரையாசிரியர்கள் பொருள் மயக்கம் என்று கூறுவதைச் சமனாதல் என்றே கொள்ள வேண்டும்.

சார் என்ற வினைச்சொல்லை இரண்டாம் வேற்றுமைக்கு உரியதாகக் கூறிவிட்டுப் (556) பின்னர் அது கரும மல்லாச் சார்பைக் குறிக்கும்போது மட்டும் ஏழாம் வேற்றுமையும் ஏற்று வரலாம் என்று கூறப்பட்டுள்ளது (உரிமையும் உடைத்தே கண்ணென் வேற்றுமை 568) அரசரைச் சார்ந்தான், அரசர்கண் சார்ந்தான் என்ற இரு வாக்கியமும் ஒரே பொருளைத் (இரண்டாம் வேற்றுமை

யின் பொருள்) தருவதால் இரு வேற்றுமையும் பொருளாகி சமனாகி வருகின்றன. இதுவும் ஒருவகையில் உறழ்ச்சி யாயினும் உறழ்ச்சிக்கும் சமனாதற்கும் ஒரு வேறுபாடு உண்டு. உறழ்ச்சியில் புறநிலையில் வெளிப்படும் இரு வேற்றுமையும் புதைநிலைக்கும் உரியதாகக் கருதப்பட சமனாதலில் புறநிலையில் வெளிப்படும் இரு வேற்றுமை களில் ஒன்றே புதைநிலைக்கு உரியதாகக் கருதப்படும். 570, 577, 581, 582, 588 ஆகியவை சமனாதல் வகையைச் சார்ந்தவை,

சில வேற்றுமை தன்னுடைய உருபையே புறநிலையில் ஏற்காமல் வேறொரு வேற்றுமைக்குரிய உருபையே ஏற்று வரும். ஒரு வேற்றுமை தனக்குரிய உருபைச் சில இடத் திலும் பிறிதொரு வேற்றுமைக்குரிய உருபை வேறுசில இடத்திலும் ஏற்பதால் வேற்றுமை பிளவுபட்டுள்ளதாகக் கருதலாம். எனவே, இதை வேற்றுமை பிளவுபடல் என நாம் அழைக்கலாம். ...

ஆறாம் வேற்றுமை உயர்திணைத் தொகையாக இருக்கும் போது ஆறாம் வேற்றுமைக்குரிய 'அது' என்ற உருபை ஏற்காது நான்காம் வேற்றுமைக்குரிய குகரத்தை மட்டுமே ஏற்கும் என்று கூறியுள்ளது (583) வேற்றுமை பிளவுபடலேயாகும்.

— செ. வை. சண்முகம். "வேற்றுமை பற்றித் தொல் காப்பியர். ப-ள். 279–282.

249. S. Agesthialingom, "Tolkappiyar's concept of Syntax", p. 13.

250. K. Ramasamy, "Tolkappiyar's Treatment of Semantics", p. 48.

251. ச. அகத்தியலிங்கம் மாற்றிலக்கண முறையில் விளக்கி யுள்ளதாக சுப. அண்ணாமலை மேற்கோள் காட்டி யுள்ளார்.

— சுப. அண்ணாமலை, "தொல்காப்பியரின் தொடரியற் கொள்கை", தொல்காப்பிய மொழியியல், ப-ள். 331–332.

252. காண்க குறிப்பு 151.

253. K. Balasubramaniyan, "Concept of Sentence Structure in Tolkappiyam", Studies in Early Dravidian Grammars, pp. 31-37.

254. சி. கணேசையர், "அன்மொழித்தொகைப் பொருண் மேல் வரும் ஆகுபெயர்", செந்தமிழ் (1903), ப-ள். 462–464.

255. நெல்லை. க. சுப்பிரமணியன், "இருபெயரொட்டாகு பெயர்", செந்தமிழ்ச்செல்வி 41 (1966), ப, 120.

256. ஆபிரகாம் அருளப்பன், ''தொகைநிலைக் கொள்கை'', இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப. 147.

256. பொன். கோதண்டராமன், "ஆகுபெயர் அன்மொழித் தொகை'' இலக்கண உலகில் புதிய பார்வை, ப-ள். 4-25.

258. க ஆறுமுகம், ''தொகை பற்றித் தொல்காப்பியர்'!, தொல் காப்பிய மொழியியல், ப. 320.

259. பொன். கோதண்டராமன், ''வினைத்தொகை", இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், ப-ள், 150-152.

260. ஆ. சிவலிங்கனார், ''வினைத்தொகையின் முன்மொழி பெயரா? வினையா?", ஆ. கோ. 9:2 (1977), ப. 126.

261. பொன். கோதண்டராமன், ''வினைத்தொகை'', ப-ள். 154-161.

முடிவுரை

'தொல்காப்பிய ஆய்வின் வரலாறு' என்னும் இந்த ஆய்வு இன்று வரை தொல்காப்பியத்துக்கு வெளிவந்துள்ள பதிப்புகள் பற்றியும், தொல்காப்பிய எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் ஆகியன கூறும் இலக்கணப் பொருள்கள் குறித்து இதுகாறும் நடைபெற்றுள்ள ஆய்வுகள் பற்றியும் வரலாற்று நோக்கில் ஆராய்கிறது. 1. தொல்காப்பியப் பதிப்புகள், 2. எழுத்ததிகார ஆய்வு, 3. சொல்லதிகார ஆய்வு ஆகிய மூன்று இயல்களின் இறுதியிலும் அந்தந்த இயல்களில் ஆராயப்பட்ட பொருள்களின் முடிபுகள் தொகுத்துரைக்கப் பட்டுள்ளன. அவற்றை மீண்டும் இங்கே கூறுவது கூறியது கூறலாகும் என அஞ்சி விடப்பட்டன.[1]

இந்த முடிபுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது தொல்காப்பிய ஆய்வு இனி செல்ல வேண்டிய நெறிகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

தொல்காப்பிய மூலத்துக்கும் அதன் உரைகளுக்கும் கிடைக்கும் ஓலைச்சுவடிகள். கையெழுத்துப்படிகள் ஆகியன திரட்டப்பட்டு, பழைய பதிப்புகளின் துணையுடன் மூலபாடத் திறனாய்வு நோக்கில் திருத்தப்பதிப்பு ஒன்று வெளிவர வேண்டும்.

கிடைக்கும் தொல்காப்பியப் பதிப்புகள் அனைத்தும் தொகுக்கப் பட்டு பழைய உரைகள், பதிப்பாசிரியரின் உரைவிளக்கக் குறிப்புகள் போன்றவற்றின் துணையுடன் தொல்காப்பியப் பதிப்புகள் பற்றிய ஆய்வு விரிவாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொல்காப்பியர் எழுத்தியலையும் பிறப்பியலையும் விளக்கி யுள்ள முறை இதுவரை நடைபெற்ற ஆய்வுகளில் விரிவாக ஆராயப் பட்டுள்ளது. அவருடைய சாரியைக் கோட்பாடும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. புணர்ச்சி பற்றிய தொல்காப்பியரின் கோட்பாடும் இனிமேல் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

தொல்காப்பியர் சொல்லியலை விளக்கியுள்ள முறை வருணனை மொழியியல் நோக்கில் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது. அவருடைய சொல்லியல் கோட்பாடு மொழியியல் நோக்கில் நுணுக்கமாக ஆராய்ந்து தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தொடரிலக்கணம் பற்றியும் தொல்காப்பியச் சொல்லதிகாரம் கூறியுள்ளது. தொடரியல் இலக்கணக் கூறுகளைத் தொல்காப்பியர் கூறியுள்ள முறை மாற்றிலக்கணக் கோட்பாடுகளுடன் ஒத்துள்ளதாகக் கருதப்படுகிறது. இதனைத் தெளிவுபடுத்தும் நோக்கில் தொல்காப்பியரின் தொடரியல் கோட்பாடு, மாற்றிலக்கணக் கோட்பாடுகளுடன் ஒப்புநோக்கி ஆராயப்பட வேண்டும். வேற்றுமை, பெயரெச்சம், வினையெச்சம் போன்ற கூறுகள் இதனுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

பொருளதிகாரத்தில் கூறப்படும் அகப்பொருள், புறப்பொருள், யாப்பு, உவமை ஆகியன குறித்தும் குறிப்பிடத்தக்க அளவு ஆராய்ச்சிகள் நடைபெற்றுள்ளன. மேலும் இவ்விலக்கணங்களைப் பற்றி விரிவாகக் கூறும் தனித்தனி இலக்கண நூல்களும் தோன்றியுள்ளன. பொருளதிகார ஆய்வின் வரலாறு, பின்னர் வந்த பொருளிலக்கண நூல்களுக்கும் தொல்காப்பியப் பொருளதிகாரத்துக்கும் உள்ள தொடர்பு ஆகியன ஆராயப்பட வேண்டும்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் இலக்கணக் கூறுகளை விளக்கும் முறையில் பல இடங்களில் கொள்கை அளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் தொல்காப்பிய உரையாசிரியர்களின் இலக்கணக் கொள்கைகள் பற்றிய ஆய்வு விரிவாகவும் ஆழமாகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட நோக்குகளில் தொல்காப்பியம் பற்றி மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தொல்காப்பியத்தை நுண்மையாகவும், முழுமையாகவும் புரிந்து கொள்ளவும் தொல்காப்பியரது இலக்கிய, இலக்கண, வாழ்வியல் கோட்பாடுகளை உணரவும் பயன்படும். அன்றியும் தொல்காப்பிய ஆய்வு வரலாறு முழுமையாக அறியப்பட்டு அதன் அடிப்படையில் ஏனைய இலக்கிய இலக்கணங்களின் ஆய்வு வரலாறு ஆராயப்பட வாய்ப்பு உள்ளது. இத்தகைய ஆய்வு தமிழியல் ஆய்வு வரலாற்றை முழுமையாக அறியத் துணை செய்யும்.

பாணினியின் கொள்கைகள் மொழியியல் கோட்பாடுகளோடு ஒப்புநோக்கப்பட்டது பற்றிப் பி.பி. பண்டிட்[2] என்பவர் பின்வருமாறு கூறுவர். பாணினியை அமெரிக்க மொழியியல் அறிஞர்களான விட்னி வரலாற்று மொழியியலாளர் எனவும், புளூம்பீல்டு வருணனை மொழியியலாளர் எனவும் கூறினர். இப்போது பாணினி மாற்றிலக்கண மொழியியல் கொள்கைகளோடு ஒப்புநோக்கப்படுகிறார். பாணினியைப் பற்றிய இக்கூற்று தொல்காப்பியருக்கும் பொருந்தும். இது போன்றே வருணனை மொழியியலின் வளர்ச்சிக் காலத்தில் தொல்காப்பியர் சிறந்த வருணனை மொழியியலாளர் என்று குறிப்பிடப்பட்டார். பின் மாற்றிலக்கண மொழியியல் தோன்றி வளர்ந்தபோது அதனுடன் தொல்காப்பியருடைய இலக்கணக் கொள்கைகள் ஒத்துள்ளன என்று எடுத்துக்காட்டப்பட்டது. அண்மைக் காலத்தில்

அது வேற்றுமை இலக்கணிகளின் (Case Grammarians) கொள்கையோடு ஒத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.[3] மொழியியலின் எதிர்கால வளர்ச்சியால் புதிய கொள்கை ஒன்று தோன்றுமெனில் அதனுடன் தொல்காப்பியக் கருத்துகள் ஒப்புநோக்கப்பட்டு ஒற்றுமை வேற்றுமைகள் கண்டறியப்படலாம். இதனால் தொல்காப்பிய ஆராய்ச்சிக்கு முடிவு இல்லை. அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்க வேண்டிய ஒன்று என்னும் உண்மையை இது வலியுறுத்துகிறது.

குறிப்புகள்

1. காண்க, ப-ள், 90-96, 234-236, 413-416.
2. P. B. Pandit, Review of Selected Papers of J. R. Firth 1952-59 (Ed; F. R. Palmer), Journal of Linguistics-6, pp. 280-284.
3. K. Balasubramaniyam, "The Concept of Sentence Structure in Tolkappiyam" Studies in Early Dravidian Grammars, pp. 23-38.

ஆய்வுத்துணை நூல்கள் / கட்டுரைகள்

நூல்கள்

Agesthialingom, S., — A Generative Grammar of Tamil, Annamalai University, Annamalainagar, 1968.

அகத்தியலிங்கம், ச. & க. முருகையன், (பதி.) — தொல்காப்பிய மொழியியல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர், 1972.

Agesthialingom, S. & S V. Shanmugham, (Eds.) — Third Seminar on Dravidian Linguistics Annamalai University, Annamalainagar, 1972.

அகத்தியலிங்கம், ச. & க. பாலசுப்பிரமணியன், (பதி.) — இலக்கண ஆய்வுக் கட்டுரைகள், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைநகர், 1971.

Agesthialingom, S. & K. Kushalappa Gowda (Eds.) — Dravidian Case System, Annamalai University, Annamalainagar, 1976.

Agesthialingom S. & P. S. Subramaniyam, (Eds.) — Dravidian Linguistics — V, Annamalai University, Annamalainagar, 1976.

Agesthialingom, S. & N. Kumarasami Raja (Eds.) — Studies in Early Dravidian Grammars, Annamalai University, Annamalainagar.

அடிகளாசிரியர், — எழுத்ததிகாரம்: இளம்பூரணம், காவேரி கலர் அச்சகம், கும்பகோணம், 1969.

அரசஞ்சண்முகனார், — தொல்காப்பியச் சண்முக விருத்தி, வித்தியா விநோதினி முத்திராசாலை, தஞ்சாவூர், 1905.

அரவிந்தன், மு. வை., — மொழியியல் சிந்தனைகள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977.

அரவிந்தன், மு. வை., உரையாசிரியர்கள் மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1977, இரண்டாம் பதிப்பு.,

அருணாசலம், ப., தொல்காப்பியர், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை 1975.

அறவாணன், க. ப., & தொல்காப்பியக் களஞ்சியம், பாரி நிலையம், சென்னை, 1975

